நவம்பர் 2021

WINMEEN.COM
LEARNING LEADS TO RULING

# நடப்பு நிகழ்வுகள்











**1.** **'தேசிய பழங்குடியினர் நடனவிழா–2021'ஐ நடத்தவுள்ள இந்திய நகரம் எது?**

அ) ராஞ்சி

**ஆ) இராய்ப்பூர் ☑**

இ) விசாகப்பட்டினம்

ஈ) ஷில்லாங்



✓ தேசிய பழங்குடியினர் நடன விழாவானது அக்.28 முதல் இராய்ப்பூரில் நடக்கவுள்ளதாக சத்தீஸ்கர் மாநில சுற்றுலா வாரியம் தெரிவித்துள்ளது.

✓ இராய்ப்பூரில் நடைபெறும் மூன்று நாள் தேசிய பழங்குடியினர் நடன விழாவில், இந்தியப்பழங்குடியின களைஞர்களோடு உஸ்பெகிஸ்தான், நைஜீரியா, இலங்கை, உகாண்டா, சிரியா, மாலி உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த பழங்குடி சமூகத்தைச் சேர்ந்த பழங்குடியின கலைஞர்களும் கலந்துகொள்வார்கள். தேசிய பழங்குடியினர் நடன விழாவின் முதல் பதிப்பு, கடந்த 2019ஆம் ஆண்டில் நடைபெற்றது.

---

**2.** **போலந்து, ஜெர்மனி, பிரான்ஸ் மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகளில் வீசிய புயலின் பெயர் என்ன?**

அ) அலிசா

**ஆ) ஆரோர் ☑**

இ) ஆப்ரோ

ஈ) பிஸாரே



✓ 'ஆரோர்' புயலானது வட ஐரோப்பாவின் சில பகுதிகளில் வீசியது. இதன் காரணமாக போலந்தில் 4 பேர் இறந்தனர் மற்றும் ஜெர்மனி, பிரான்ஸ், நெதர்லாந்து மற்றும் பிற இடங்களில் அப்புயல் கடுமையான சேதத்தை ஏற்படுத்தியது. பலத்த சூறைக்காற்று மற்றும் முறிந்து விழுந்த மரங்கள் காரணமாக வடக்கு ஐரோப்பா முழுவதும் மின்சாரம் தடைப்பட்டது. பல வீடுகள் மற்றும் சொத்துக்கள் அழிவுக்கு உள்ளாகின. புயல்தாக்கம் காரணமாக இரயில்வே & விமான சேவைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

---

**3.** 2021 – **இந்திய சர்வதேச திரைப்பட விழா நடத்தப்படுகிற நகரம் எது?**

அ) வாரணாசி

**ஆ) கோவா ☑**

இ) கொச்சின்

ஈ) புதுச்சேரி

International Film Festival of India

✓ இந்திய சர்வதேச திரைப்பட விழாவின் (IFFI) 52ஆவது பதிப்பு நவ.20 முதல் 28 வரை கோவாவில் நடைபெறவுள்ளது. ஹாலிவுட் மூத்த நடிகர் மார்ட்டின் ஸ்கோர்செஸி மற்றும் புகழ்பெற்ற ஹங்கேரிய திரைப்படத் தயாரிப்பாளரான ஸ்டீவன் சாபோ ஆகியோருக்கு இந்த ஆண்டு (2021) திரைப்பட விழாவில் சத்யஜித் ரே வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளது என மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை அமைச்சர் அனுராக் தாக்கூர் அறிவித்தார்.

---

**4.** 2021 – **'உலகளாவிய அச்சுறுத்தல் மதிப்பீட்டு அறிக்கை'யை வெளியிட்ட நிறுவனம் எது?**

அ) UNICEF

**ஆ) WeProtect Global Alliance ☑**

இ) CRY

ஈ) உலகப் பொருளாதார மன்றம்

WeProtect GLOBAL ALLIANCE

✓ ஓர் உலகளாவிய இயக்கமான WeProtect Global Alliance, '2021 – உலகளாவிய அச்சுறுத்தல் மதிப்பீட்டு அறிக்கை'யை வெளியிட்டது. இந்த அறிக்கையின்படி, சிறார் பாலியல் சுரண்டல் மற்றும் இணையவழி துஷ்பிரயோகத்தின் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்கு COVID–19 பொது முடக்க காலம் பங்களித்துள்ளது.

✓ 'WeProtect Global Alliance' என்பது 200க்கும் மேற்பட்ட அரசாங்கங்கள், தனியார் துறை நிறுவனங்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகளின் ஓர் உலகளாவிய இயக்கமாகும்.

---

**5.** **ஜெய்நகர்–குர்தா எல்லைதாண்டிய இரயில் இணைப்பைக் குறிக்கும் வகையில், குர்தா அமைந்துள்ள நாடு எது?**

**அ) நேபாளம் ☑**

ஆ) பூட்டான்

இ) வங்காளதேசம்

ஈ) இலங்கை



✓ ஜெய்நகரில் இருந்து குர்தா (நேபாளம்) வரை புதிதாக இயக்கப்பட்ட எல்லைதாண்டிய இரயில் பகுதியை இந்திய அரசு சார்பாக இர்கான் இன்டர்நேஷனல் நேபாள அரசிடம் ஒப்படைத்துள்ளது. இந்திய அரசின் மானிய உதவியின்கீழ், ஜெய்நகர் (இந்தியா) முதல் பர்திபாஸ் (நேபாளம்) வரையிலான இரயில் பாதைத் திட்டத்தை இர்கான் இன்டர்நேஷனல் மேற்கொண்டது. ஜெய்நகர்–குர்தா பிரிவின் முதல் கட்டம், ஜெய்நகர்–பிஜல்புரா–பார்திபாஸ் இரயில் இணைப்பின் ஒருபகுதியாகும். இது, 8.77 பில்லியன் நேபாள ரூபாய் மானிய உதவியின்கீழ் கட்டப்பட்டுள்ளது.

---

**6.** **இந்தியாவில் நடந்த முதல் தேசிய மதங்களுக்கிடையேயான மாநாட்டை நடத்திய நகரம் எது?**

அ) மும்பை

ஆ) புனே

**இ) நாக்பூர் ☑**

ஈ) வாரணாசி



✓ லோக்மத் ஊடக குழுமத்தால் நாக்பூரில் முதன்முறையாக தேசிய அளவிலான மதங்களுக்கிடையேயான மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டது.

✓ அதன் நாக்பூர் பதிப்பின் பொன்விழா ஆண்டை நினைவுகூரும் வகையில் இது ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த மாநாட்டின் கருப்பொருள் "வகுப்புவாத நல்லிணக்கத்திற்கான உலகளாவிய சவால்கள் மற்றும் இந்தியாவின் பங்கு" ஆகும். மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் நிதின் கட்கரி, சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். இந்நிகழ்ச்சிக்கு பல்வேறு மதங்களைச் சேர்ந்த பல ஆன்மீகத் தலைவர்கள் பேச்சாளர்களாக அழைக்கப்பட்டனர்.

---

**7.** **ஸ்ரீநகரிலிருந்து ஷார்ஜாவிற்கு நேரடி விமானப் போக்குவரவை அறிமுகப்படுத்திய முதல் விமானப் போக்குவரத்து நிறுவனம் எது?**

அ) இண்டிகோ

**ஆ) கோ பர்ஸ்ட் ☑**

இ) ஏர் இந்தியா

ஈ) விஸ்தாரா



✓ இந்தியாவின் குறைந்த கட்டண விமான நிறுவனமான 'கோ பர்ஸ்ட்', ஸ்ரீநகரிலிருந்து சார்ஜாவிற்கு நேரடி வான்போக்குவரவைத் தொடங்கிய முதல் விமான நிறுவனம் ஆகும். ஸ்ரீநகரில் உள்ள ஷேக் உல்–ஆலம் பன்னாட்டு வானூர்தி நிலையத்திலிருந்து ஸ்ரீநகரிலிருந்து சார்ஜாவிற்கு செல்லும் முதல் பன்னாட்டு விமான சேவையை மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

✓ இது, இந்தியாவுக்கும் ஐக்கிய அரபு அமீரகத்துக்கும் (UAE) இடையிலான பொருளாதார உறவுகளை மேம்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 'கோ பர்ஸ்ட்', ஸ்ரீநகர் மற்றும் ஷார்ஜா இடையே வாரந்தோறும் நான்கு விமானங்களை இயக்கும்.

---

**8.** **இந்தியாவின் எந்த அண்டை நாடு, நில எல்லைப் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்காக ஒரு புதிய சட்டத்தை இயற்றியுள்ளது?**

அ) நேபாளம்

**ஆ) சீனா ☑**

இ) இலங்கை

ஈ) வங்காளதேசம்



✓ இந்தியாவுடனான சர்ச்சைக்குரிய எல்லையில் ராணுவ பதற்றம் நிலவி வரும் நிலையில், நில எல்லைப் பாதுகாப்பை வலுப்படுத்த சீனா புதிய சட்டத்தை இயற்றியுள்ளது. இந்திய–சீன எல்லைப் பகுதிகளில் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதோடு, சீனாவின் நில எல்லைகளின் ராணுவப் பாதுகாப்பையும் ஒருங்கிணைக்கும் சட்டத்தை இது முறைப்படுத்துகிறது. திபெத்திய கிராமவாசிகள் உள்ளிட்ட எல்லைப்

பகுதிகளில் தங்கியுள்ள பொதுமக்களுடன் நெருக்கமாக பணியாற்றுவத –ற்கான மக்கள் விடுதலை இராணுவத்தின் கொள்கையையும் இது வலுப்படுத்துகிறது.

---

**9. வடிவமைத்தல் / நிறுவுதல் தொழில்நுட்ப பணியாளர்களுக்கான மாதிரி திறன்வளர்த்தல் திட்டத்திற்கு ஒப்புதலளித்துள்ள அமைச்சகம் எது?**

அ) பாதுகாப்பு அமைச்சகம்

**ஆ) ஜவுளி அமைச்சகம் ☑**

இ) MSME அமைச்சகம்

ஈ) எஃகு அமைச்சகம்

- ✓ சாலைகள், இரயில்வே, நீர் ஆதாரங்கள் உள்ளிட்ட உட்கட்டமைப்பு திட்டங்களில் புவிசார்–ஜவுளி பயன்பாட்டில் ஈடுபட்டுள்ள வடிவமைத்தல் / நிறுவுதல் தொழில்நுட்ப பணியாளர்களுக்கான மாதிரி திறன் வளர்த்தல் திட்டத்திற்கு ஜவுளி அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது.
- ✓ பெங்களூருவில் அமைந்துள்ள இந்திய அறிவியல் நிறுவனம் (IISc), சென்னை மற்றும் ரூர்கியில் அமைந்துள்ள இந்திய தொழில்நுட்ப நிறுவனங்களால் இப்பயிற்சி வழங்கப்படும். தொடர்புடைய பொறியியல் பிரிவுகளின் ஒருங்கிணைப்பு ஆசிரியர்கள் நிறுவனத்தின் இதர மையங்கள் / அலுவலகங்களுடனான ஆலோசனைக்கு பின்னர் இந்தச் சிறப்பு பயிற்சிகள் நடத்தப்படுவதை கவனித்து கொள்வார்கள்.

---

**10. 'கிரீன் டே எஹெட் மார்க்கெட்டைத்' தொடங்கியுள்ள நடுவண் அமைச்சகம் எது?**

அ) நிலக்கரி அமைச்சகம்

ஆ) சுற்றுச்சூழல், வனம் & காலநிலை மாற்ற அமைச்சகம்

**இ) புதிய & புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் ☑**

ஈ) உழவு மற்றும் உழவர்கள் நல அமைச்சகம்

- ✓ மத்திய புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகமானது 'Green Day Ahead Market' என்ற புதிய சந்தைப்பிரிவை அறிமுகப்படுத்தியது.
- ✓ இது மின்னுற்பத்தி மற்றும் விநியோக நிறுவனங்கள், திறந்த அணுகல் மூலம் புதுப்பிக்கத்தக்க ஆற்றலை வாங்க அல்லது விற்க உதவும். இதன் மூலம், ஒப்பந்தம் அடிப்படையிலான நீண்டகால மின்சார கொள்முதல் ஒப்பந்தங்களை படிப்படியாக சந்தை அடிப்படையிலான மாதிரிகளுக்கு மாற்றுவதை இந்திய அரசு நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. கார்பன் சமநிலையை அடைய இலக்கு: G20 உச்சிமாநாட்டில் முடிவு**

கார்பன் சமநிலையை 2050ஆம் ஆண்டுக்குள் அடைவது என ஜி–20 நாடுகளின் உச்சிமாநாட்டில் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

உலகின் பொருளாதார சக்திகளாகத் திகழும் இருபது நாடுகள் அங்கம் வகிக்கும் G20 அமைப்பின் 16ஆவது உச்சிமாநாடு இத்தாலி தலைநகர் ரோமில் தொடங்கியது. மாநாட்டு முடிவில் வெளியிடப்பட்ட அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:

'நிகர சுழிய' பைங்குடில் இல்ல வாயு உமிழ்வு அல்லது கார்பன் சமநிலை இலக்கை 2050ஆம் ஆண்டுக்குள் அடைவதற்கான நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவது என மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது.

வெளிநாடுகளில் நிலக்கரி மூலம் மின்னுற்பத்தி செய்யும் புதிய அனல் மின்–நிலையங்களுக்கான நிதியுதவியை 2021ஆம் ஆண்டுக்குள் நிறுத்துவது என ஜி–20 தலைவர்கள் ஒப்புக்கொண்டனர்.

பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்ள ஏழை நாடுகளுக்கு உதவும் வகையில் ஆண்டுதோறும் பணக்கார நாடுகள் 100 பில்லியன் டாலர் (சுமார் ₹7.5 லட்சம் கோடி) நிதியைத் திரட்டிக்கொடுக்கவேண்டும் என்ற கடந்த கால உறுதிப்பாடு மீண்டும் வலியுறுத்தப்பட்டது.

சர்வதேச சராசரி வெப்பநிலை உயர்வை 2°°செல்சியசுக்கும் குறைவாக வைத்திருக்க வேண்டும் என்ற பாரீஸ் பருவநிலை ஒப்பந்தத்தைப் பின்பற்றுவதற்கு ஜி20 நாடுகளின் தலைவா்கள் மீண்டும் உறுதி பூண்டனர். தொழிற்புரட்சிக்கு முந்தையகாலகட்டத்தின் வெப்பநிலையில் இருந்து 1.5° செல்சியஸுக்கும் மிகாமல் கட்டுக்குள் வைத்திருக்க முயற்சி செய்யவும் அவர்கள் ஒப்புக்கொண்டனர் என அதில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

**கார்பன் சமநிலை என்றால் என்ன?** கார்பன் சமநிலை அல்லது நிகர பூஜ்ஜிய பசுமைஇல்ல வாயு உமிழ்வு என்பது, வளிமண்டலத்தில் பசுமைஇல்ல வாயுக்களின் வெளியேற்றம் மற்றும் அகற்றத்துக்கு இடையிலான சமநிலை ஆகும்.

வெளிநாடுகளில் புதிதாக அனல்மின் நிலையம் அமைப்பதற்கான நிதியுதவியை நிறுத்துவது என இம்மாநாடு உறுதி மேற்கொண்டாலும், உள்நாட்டில் நிலக்கரி பயன்பாட்டை முடிவுக்குக் கொண்டுவருவது தொடர்பாக இலக்கு எதுவும் நிர்ணயிக்கவில்லை.

மின்னுற்பத்திக்கு நிலக்கரியை பெரிதும் சார்ந்திருக்கும் இந்தியா, சீனா உள்ளிட்ட நாடுகளுக்கு இது பலனளிக்கும். புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்கு முழுமையாக மாறுவதற்கான நடவடிக்கைகளை இந்த நாடுகள் படிப்படியாக மேற்கொள்ள கால அவகாசத்தை அளிக்கும்.

---

**2. தொடங்கியது கிளாஸ்கோ பருவநிலை மாற்ற மாநாடு: உலக தலைவர்களுடன் பிரதமர் மோடி ஆலோசனை**

பிரிட்டனின் ஸ்காட்லாந்தில் உள்ள கிளாஸ்கோ நகரில் பருவநிலை மாற்ற மாநாடு இன்று தொடங்கியது. இதில் பிரதமர் மோடி உள்ளிட்ட 120–க்கும் மேற்பட்ட நாடுகளின் தலைவர்கள் பங்கேற்றுள்ளனர்.

இத்தாலி தலைநகர் ரோமில் ஜி–20 நாடுகளின் தலைவர்கள் பங்கேற்ற 2 நாள் மாநாடு நேற்று நிறைவு பெற்றது. இதில் பிரதமர் நரேந்திர மோடி, அமெரிக்க அதிபர் ஜோ பைடன், பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜான்சன் உள்ளிட்ட பல்வேறு நாட்டு தலைவர்கள் பங்கேற்றனர்.

இந்த மாநாட்டில் 120 நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கவுள்ளனர். இதில், பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகள், அதனை எதிர் கொள்ள பசுமை இல்ல வாயுக்கள் வெளியேற்றத்தை தடுக்க மேற்கொண்டு வரும் முயற்சிகள் குறித்து விவாதிக்கப்படுகிறது.

---

**3. செர்பியா சர்வதேச சதுரங்கப் போட்டி கிராண்ட் மாஸ்டர் இனியன் சாம்பியன்:**

செர்பியாவில் நடந்தசர்வதேச சதுரங்கப் போட்டியில் ஈரோட்டைச் சேர்ந்த கிராண்ட் மாஸ்டர் பி.இனியன் வெற்றி பெற்றார்.

ஈரோட்டைச் சேர்ந்த கிராண்ட் மாஸ்டர் பி.இனியன், சர்வதேச அளவிலான பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்று சாதனை படைத்து வருகிறார். செர்பியாவில் கடந்த 23ஆம் தேதி முதல் 30ஆம் தேதி வரை நடந்த 5ஆவது ருஜனா சோரா சதுரங்கப் போட்டியில் ஐந்து நாடுகளைச் சேர்ந்த 10 சர்வதேச வீரர்கள் பங்கேற்றனர். இந்தியாவின் சார்பில் இப்போட்டியில் இனியன் பங்கேற்றார்.

கிளாசிகல் பிரிவில் 9 சுற்றுகளாக நடைபெற்ற இப்போட்டியில், கிராண்ட் மாஸ்டர் இனியன் 5 போட்டிகளில் வெற்றி மற்றும் 4 போட்டிகளைச் சமன் செய்து ஏழு புள்ளிகள் பெற்று சாம்பியன் பட்டம் வென்றார். இப்போட்டியில் ரஷ்ய வீரர் மகரின் ரூடிக் இரண்டாமிடம் பெற்றார்.

---

**1.** **வெப்பமண்டல வானிலை ஆய்வு நிறுவனம் அமைந்துள்ள இடம் எது?**

அ) மும்பை

ஆ) கொல்கத்தா

இ) புது தில்லி

**ஈ) புனே ☑**

✓ வெப்பமண்டல வானிலை ஆய்வு நிறுவனம் என்பது நடுவண் புவி அறிவியல் அமைச்சகத்தின்கீழ் உள்ள ஒரு தன்னாட்சி நிறுவனமாகும். இது புனேவில் அமைந்துள்ளது. தில்லி – என்சிஆர் பகுதியில் காற்றின் தர அளவீடு மற்றும் நிர்வாகத்திற்காக, தற்போதுள்ள 'காற்றின் தர ஆரம்ப எச்சரிக்கை அமைப்பை' மேம்படுத்தும் நோக்கத்துடன், இந்த நிறுவனம் புதிய 'முடிவு ஆதரவு அமைப்பை' உருவாக்கி அறிமுகப்படுத்தியுள்ளது.

---

**2.** **UNESCO'இன் 2021 – தற்காப்புக் கலைக் கல்விப் பரிசை வென்ற குங் ஃபூ கன்னியாஸ்திரிகள் சார்ந்த பௌத்த வம்சம் எது?**

**அ) துருக்பா ☑**



ஆ) நிங்மா

இ) காக்யு

ஈ) சாக்யா

✓ பௌத்த மதத்தின் துருக்பா வம்சத்தைச் சார்ந்த உலகப் புகழ்பெற்ற குங் ஃபூ கன்னியாஸ்திரிகள் தங்கள் துணிச்சலான சேவைகளுக்காக UNESCO சர்வதேச தற்காப்புக்கலை மையத்தின் 2021ஆம் ஆண்டுக்கான மதிப்புமிக்க தற்காப்புக்கலைக்கல்விப்பரிசை வென்றுள்ளனர். தற்காப்புக் கலைகள்மூலம், இளம் பெண்கள் தங்களைத் தற்காத்துக்கொள்ளவும், தன்னம்பிக்கையை வளர்த்துக்கொள்ளவும், அவர்களின் சமூகங்களில் தலைமைப் பாத்திரங்களை ஏற்கவும் துருக்பா வம்ச கன்னியாஸ்திரிகள் வல்லமையளிக்கிறார்கள்.

---

**3.** **இந்தியாவின் முதல் உள்நாட்டு விமானந்தாங்கிக்கப்பலின் பெயர் என்ன?**

அ) அர்ஜுன்



**ஆ) விக்ராந்த் ☑**

இ) கட்டபொம்மன்

ஈ) பாரதி

✓ இந்தியாவின் முதல் உள்நாட்டு விமானந்தாங்கிப்போர்க்கப்பலான விக்ராந்த், 2022 ஆகஸ்டு மாதத்திற்குள் இந்திய கடற்படையில் சேர்க்கப்படவுள்ள இந்தக் கப்பலின் 2ஆம் கட்ட சோதனைகள் சமீபத்தில் தொடங்கின. இப்போர்க்கப்பல், MiG–29K போர் விமானங்கள், Kamov–31 ஹெலிகாப்டர்கள், MH–60R ஆகியவற்றை இயக்கும்.

---

**4.** **கேரளாவில் அமைந்துள்ள முல்லைப் பெரியாறு அணையானது பின்வரும் எந்த மாநிலத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது?**

**அ) தமிழ்நாடு ☑**



ஆ) கர்நாடகா

இ) ஆந்திர பிரதேசம்

ஈ) தெலுங்கானா

✓ கேரள மாநிலத்தில் அமைந்துள்ள முல்லைப் பெரியாறு அணையானது தமிழ்நாட்டின் கட்டுப்பாட்டில் உள்ளது. இது, கேரளாவில் இவ்வாறு பாயும் திசையில் வாழும் இலட்சக்கணக்கான மக்களுக்கு அச்சுறுத்தலாகவும், தமிழ்நாட்டின் 5 மாவட்டங்களில் 2 லட்சம் ஹெக்டேருக்கு மேல் பாசன வசதி வழங்கி வருவதாலும் நீண்டகாலமாக சர்ச்சைக்குரியதாக இருந்து வருகிறது. முல்லைப் பெரியாறு அணையில் நவம்பர்.10ஆம் தேதி வரை அதிகபட்ச நீர்மட்டம் 139.50 அடியாக இருக்க வேண்டும் என சமீபத்தில் உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது. தமிழ்நாட்டில் உற்பத்தியாகி கேரள –த்தில்பாயும் பெரியாற்றின் மேற்பகுதியில் இவ்வணை அமைந்துள்ளது.

---

**5.** **போதைப்பொருள் பயன்பாட்டைக் கட்டுப்படுத்தும் தேசிய நிதியம், பின்வரும் எந்த மத்திய அமைச்சகத்துடன் தொடர்புடையது?**

அ) உள்துறை அமைச்சகம்

**ஆ) சமூக நீதி & அதிகாரமளித்தல் அமைச்சகம் ☑**

இ) பெண்கள் & குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்

ஈ) சட்டம் & நீதி அமைச்சகம்

✓ சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகமானது போதைப்பொருள் பயன்பாட்டைக் கட்டுப்படுத்தும் தேசிய நிதியத்தை போதை ஒழிப்புத் திட்டங்களைச் செயல்படுத்தப் பயன்படுத்தலாம் என்று அண்மையில் பரிந்துரைத்துள்ளது. 1985ஆம் ஆண்டு போதைப்பொருள் மருந்துகள் மற்றும் மனநோய் பொருட்கள் சட்டத்தின் விதியின்படி இந்த நிதியம் உருவாக்கப்பட்டது. இதன் மொத்த மதிப்பு ₹23 கோடியாகும்.

✓ இந்நிதியானது போதைப்பொருள் கடத்தலை எதிர்த்துப் போராடுதற்கும், அடிமையானவர்களை மறுவாழ்வு செய்வதற்கும், போதைப்பொருள் பாவனையைத் தடுப்பதற்கும் பயன்படுத்தப்படும் எனச் சட்டம் கூறுகிறது. இதன் நிதியானது காவல்துறை நடவடிக்கைகளுக்கு மட்டுமே பயன்படு –த்தப்படுவதால், போதைப்பழக்க ஒழிப்பையும் இதனோடு சேர்த்துக் கொள்ள நடுவண் அமைச்சகம் முன்மொழிந்துள்ளது.

---

**6.** **'ஆபரேஷன் ரெட் ரோஸ்' என்பது சட்டவிரோத மதுவுக்கு எதிராக, எந்த மாநிலத்தில் செயல்படுத்தப்படுகிற ஒரு திட்டமாகும்?**

அ) தமிழ்நாடு



ஆ) புது தில்லி

**இ) பஞ்சாப் ☑**

ஈ) இராஜஸ்தான்

✓ பஞ்சாபின் கலால் துறை 2020ஆம் ஆண்டில் 'ஆபரேஷன் ரெட் ரோஸ்' என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியது. இது சட்டவிரோத மதுபான வர்த்தகம் மற்றும் கலால் தொடர்பான குற்றங்களைத் தடுக்கிறது.

✓ சமீபகாலமாக, குளோபல் பொசிஷனிங் சிஸ்டம் (ஜிபிஎஸ்) தொழில்நுட்பம் போன்ற துல்லியமான கண்காணிப்பு அமைப்புகளைப் பயன்படுத்தி, சட்டவிரோதமாக மதுபானம் கடத்தப்படுவதை இது தடுத்து வருகிறது.

---

**7.** **"ஆப்ஸ்கேல் அகாடமி" என்பது MeitY ஸ்டார்ட்அப் ஹப்புடன் இணைந்து பின்வரும் எத்தொழில்நுட்ப நிறுவனத்தால் எடுக்கப்பட்ட ஒரு முயற்சியாகும்?**

அ) யாஹூ

ஆ) முகநூல்

இ) ட்விட்டர்

**ஈ) கூகிள் ☑**

✓ தொழில்நுட்ப நிறுவனமான கூகுள், MeitY ஸ்டார்ட்அப் ஹப் உடன் இணைந்து, 'Appscale Academy'ஐ அறிமுகப்படுத்தியுள்ளது. இது உயர் தர செயலிகளை உருவாக்குவதற்கு இந்திய துளிர் நிறுவனங்களுக்கு உதவுவதை நோக்கமாகக்கொண்டுள்ளது. கூகுளின் இந்த முன்முயற்சி ஆனது, இந்தியாவிலுள்ள தொடக்க மற்றும் இடைநிலை துளிர் நிறுவன –ங்களுக்கான தேவைகளைப் பூர்த்தி செய்யும் மற்றும் கேமிங், கல்வி, சமூக பாதிப்பு, சுகாதாரப் பாதுகாப்பு போன்ற களங்களில் செயலிகளை உருவாக்க அவர்களுக்கு ஆதரவளிக்கும்.

---

**8.** **ஐநா பொதுச்சபையானது 2021ஆம் ஆண்டை எந்த ஆண்டாக அறிவித்துள்ளது?**

அ) பயங்கரவாதத்திற்கு எதிரான சர்வதேச ஆண்டு

ஆ) சர்வதேச சுகாதார ஆண்டு

இ) COVID'க்கு எதிரான சர்வதேச ஆண்டு

**ஈ) பழங்கள் மற்றும் காய்கறிகளின் சர்வதேச ஆண்டு ☑**

✓ ஐநா பொதுச்சபையானது நடப்பு 2021ஆம் ஆண்டை பழங்கள் மற்றும் காய்கறிகளுக்கான சர்வதேச ஆண்டாக அறிவித்துள்ளது. உணவு மற்றும் உழவு அமைப்பு (FAO), இந்த ஆண்டைக் கொண்டாடுவதற்கான முதன்மை நிறுவனமாக உள்ளது. இந்த ஆண்டு மனித ஊட்டச்சத்திலும், உணவுப் பாதுகாப்பிலும் பழங்கள் மற்றும் காய்கறிகளின் பங்கு பற்றிய விழிப்புணர்வை பரப்ப ஐநா முயற்சி செய்கிறது.

**9. குஷாக்ரா ராவத் மற்றும் ஸ்ரீஹரி நடராஜ் ஆகியோருடன் தொடர்புடைய விளையாட்டு எது?**



அ) மட்டைப்பந்து

ஆ) கோல்ப்

இ) வில்வித்தை

**ஈ) நீர்சார் விளையாட்டுக்கள் ☑**

- ✓ தில்லியைச் சேர்ந்த குஷாக்ரா ராவத் மற்றும் கர்நாடகாவின் ஸ்ரீஹரி நடராஜ் ஆகியோர் 74ஆம் சீனியர் தேசிய அக்வாடிக் சாம்பியன்ஷிப்பில் முறையே 400மீ பிரீஸ்டைல் மற்றும் 100மீ பேக்ஸ்ட்ரோக் போட்டிகளில் புதிய தேசிய சாதனைகளை படைத்துள்ளனர். குஷாக்ரா ராவத் 3:53.68 வினாடிகளில் புதிய சாதனையை படைத்துள்ளார். அதே நேரத்தில் ஸ்ரீஹரி நடராஜ் 100மீ பேக் ஸ்ட்ரோக்கை 55.10 வினாடிகளில் முடித்தார்.

---

**10. போதைப்பொருள் & குற்றங்களுக்கான ஐநா அலுவலகத்தின் தலைமையகம் அமைந்துள்ள இடம் எது?**

**அ) ஆஸ்திரியா ☑**

ஆ) அமெரிக்கா

இ) ஜெர்மனி

ஈ) ஹங்கேரி

- ✓ போதைப்பொருள் மற்றும் குற்றங்களுக்கான ஐநா அலுவலகம் (UNODC) கடந்த 1997ஆம் ஆண்டில் ஆஸ்திரியாவின் வியன்னாவை தலைமையிடமாகக்கொண்டு நிறுவப்பட்டது. பாதுகாப்பு அவையின் பயங்கரவாத எதிர்ப்பு குழுவின் நிர்வாக இயக்குநரகத்துடன் இணைந்து தரவு வெளிப்படுத்தல் கட்டமைப்பை (DDF) அறிமுகப்படுத்தியதை அடுத்து, இந்நிறுவனம் சமீபத்திய செய்திகளில் இடம்பெற்றது.
- ✓ DDF என்பது பயங்கரவாத எதிர்ப்பு விசாரணைகளுக்காக வெளிநாட்டு குற்றவியல் நீதி அதிகாரிகளின் தரவு கோரிக்கைகளைக் கையாளவும் பதிலளிக்கவும் உருவாக்கப்பட்ட நடைமுறைகளை விவரிக்கும் ஒரு கருவியாகும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. சேதி தெரியுமா?**

அக்.23: தமிழகத்தில் கல்வி, வேலைவாய்ப்பில் சமூக நீதி சரியான முறையில் அமல்படுத்தப்படுகிறதா என்பதைக் கண்காணிக்க சமூக நீதி கண்காணிப்புக் குழுவை தமிழக அரசு அமைத்தது.

அக்.23: தமிழக ரேஷன் கடைகளில் 'கற்பகம்' என்கிற பெயரில் பனை வெல்லம் விற்கும் திட்டம் தொடங்கப்பட்டது.

அக்.24: பிகாரின் ஜெய்நகர் – நேபாளம் குர்தா வரையிலான ரயில் இணைப்புப் பாதையை நேபாள அரசிடம் இந்திய அரசு ஒப்படைத்தது.

அக்.25: இந்திய சினிமா கலைஞர் களுக்கு வழங்கப்படும் உயரிய தாதா சாகேப் பால்கே விருது நடிகர் ரஜினிகாந்துக்கு வழங்கப்பட்டது.

அக்.26: ஐபிஎல் கிரிக்கெட்டில் அகமதாபாத் மற்றும் லக்னோ நகரங்களை மையமாகக் கொண்டு இரு புதிய அணிகள் உருவாக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் IPL அணிகளின் எண்ணிக்கை 10–ஆக அதிகரித்துள்ளது.

அக்.27: நிலம் விட்டு நிலம் பாயும் 'அக்னி–5' என்ற ஏவுகணை ஒடிஷா மாநிலம் கலாம் தீவிலிருந்து வெற்றிகரமாகப் பரிசோதிக்கப்பட்டது.

அக்.28: விழுப்புரம் மாவட்டம் முதலியார்குப்பத்தில் இல்லம் தேடி கல்வித் திட்டத்தை தமிழக அரசு தொடங்கியது.

அக்.29: பேரியம் கலந்து தயாரிக்கப்படும் பட்டாசுகளைத் தயாரிக்கவும் விற்கவும் உச்ச நீதிமன்றம் தடை விதித்தது.

அக்.29: இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநர் சக்திகாந்த தாஸின் பதவிக்காலம் மேலும் மூன்று ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டது.

அக்.30: ஆண்டுதோறும் ஜூலை 18 அன்று தமிழ்நாடு தினம் கொண்டாட விரைவில் அரசாணை வெளியிடப்படும் என்று முதல்வர் மு க ஸ்டாலின் அறிவித்தார்.

---

**2. சென்னையில் வானிலை ஆய்வு மையத்தின் புதிய ரேடார் செயல்படத் தொடங்கியது**

சென்னையில் வானிலை ஆய்வு மையத்தின் புதிய ரேடார் பள்ளிக்கரணையில் நேற்று செயல்படத் தொடங்கியது.

மழை மேகங்களின் தன்மை, நகர்வு, மழை அளவு போன்றவற்றை ரேடார் மூலம் கிடைக்கும் தரவுகள் மூலம் சென்னை வானிலை ஆய்வு மையம் கணித்து வருகிறது. ரேடார்களில் இருந்து செலுத்தப்படும் மின் காந்த அலைகள் மூலமாகக் கிடைக்கும் தரவுகளைக் கொண்டு, குறுகியகால வானிலை முன்னறிவிப்பு, நிகழ்நேர மழை நிலவரம் போன்றவற்றை ஆய்வு மையத்தால் வழங்க முடியும்.

இது தொடர்பான ரேடார் படங்கள் http://www.imdchennai.gov.in/ என்ற இணையதளம் மூலம் வழங்கப்படுகின்றன. இணையதள சேவை மற்றும் சமூக ஊடங்கள் வருகையால், வானிலை ஆய்வு மையம் வெளியிடும் ரேடார் படங்களை, தன்னார்வ அடிப்படையில் வானிலையைக் கணிக்கும் ஆர்வலர்கள் பயன்படுத்தி, வானிலை நிலவரங்களை முகநூல், ட்விட்டர், யூடியூப் போன்றவற்றில் வெளியிடத் தொடங்கினர். இது மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றது. மேலும், இணையதளத்தில் ரேடார் படங்களை மக்களே நேரடியாகப் பார்வையிட்டு, நிகழ்நேரவானிலையை தெரிந்துகொள் வதில் ஆர்வம் காட்டினர்.

**பழுதடைந்த ரேடார்**

சென்னை துறைமுகக் கட்டிடத்தில் செயல்பட்டு வந்த ரேடார் 2018–ல் பழுதடைந்தது. அதற்கான உதிரி பாகங்கள் கிடைக்காததால், பழுது நீக்குவதில் சிக்கல் ஏற்பட்டது. இதனால் மக்கள் நேரடியாக நிகழ்நேர மழை நிலவரத்தை அறியமுடியாமல் அவதிப்பட்டு வருகின்றனர்.

இதுகுறித்து இந்திய வானிலை ஆய்வு மைய தென் மண்டலத் தலைவர் எஸ் பாலச்சந்திரனிடம் கூறியதாவது: பழுதாகியுள்ள ரேடார் விரைவில் சீரமைக்கப்பட்டு, பயன்பாட்டுக்கு வரும். இதற்கிடையில், பள்ளிக்கரணையில் உள்ள இந்திய பெருங்கடல் சார் தொழில்நுட்ப நிறுவன (NIOT) வளாகத்தில் புதிய ரேடார் நிறுவப்பட்டுள்ளது. இது நேற்று முதல் செயல்படத் தொடங்கியுள்ளது. அதன் படங்கள் தற்போது வானிலை ஆய்வு மைய இணையதளத்தில் வெளியிடப்பட்டு வருகின்றன. அவற்றைப் பொதுமக்கள் பார்வையிடலாம்.

பழைய ரேடார் பழுதால் வானிலை கணிப்பில் எந்த சிக்கலும் ஏற்படவில்லை. • ஸ்ரீஹரிகோட்டா, திருவனந்தபுரத்தில் இயங்கும் ISRO ரேடார்கள், காரைக்காலில் உள்ள இந்திய வானிலை ஆய்வு மைய ரேடார் ஆகியவற்றின் தரவுகளைப் பயன்படுத்தி வருகிறோம்.

நிகழ்நேர மழை நிலவரக் கணிப்பு ரேடார் தரவுகள் அடிப்படையில் மட்டுமின்றி, செயற்கைக்கோள் புகைப்படம், பலூன் மூலம் பறக்க விடப்படும் கருவி உள்ளிட்ட பல்வேறு வழிகளில் கிடைக்கும் தரவுகள் அடிப்படையில்தான் கணிக்கப்படுகின்றன. இவ்வாறு அவர் கூறினார்.

---

**3. அக்.31 – தேசிய ஒற்றுமை நாள்**

---

**4. காஷ்மீர் தால் ஏரியில் மிதக்கும் திறந்தவெளி திரையரங்கம் தொடக்கம்**

காஷ்மீரின் தால் ஏரியில் இருக்கும் படகு வீடுகள் உலகப் புகழ்பெற்றவை. இங்கு வரும் சுற்றுலாப் பயணிகள் படகு வீடுகளில் தங்கி இயற்கை அழகை ரசிக்க தவறுவதில்லை. இந்நிலையில் தால் ஏரியில் உள்ள ஒரு படகு வீட்டில் திறந்தவெளி திரையரங்கை உருவாக்கியுள்ளனர். காஷ்மீரிலேயே முதன் முதலாக அமைக்கப்பட்ட மிதக்கும் திறந்தவெளி திரையரங்கம் இதுதான். ஜம்மு–காஷ்மீர் தலைமைச் செயலர் அருண் குமார் மேத்தா அண்மையில் இதை தொடங்கி வைத்தார். முதல் நாளில் இந்திப்படமான காஷ்மீர் கி காளி திரைப்படம் சுற்றுலாப் பயணிகளுக்கா –கவும், தால் ஏரி பகுதி மக்களுக்காகவும் திரையிடப்பட்டது.

---

**5. இல்லம் தேடி கல்வி திட்டம்: சிறப்புப் பணி அதிகாரியாக கே இளம் பகவத் நியமனம்**

இல்லம் தேடி கல்வி திட்டத்தின் சிறப்புப் பணி அதிகாரியாக கே இளம் பகவத் நியமிக்கப்பட்டுள்ளார். தமிழகத்தில் கற்றல் இடைவெளியை குறைப்பதற்காக இல்லம் தேடி கல்வித் திட்டத்தை தமிழக அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.

---

**6. கடலுக்கடியில் 6,000 மீட்டர் ஆழத்தில் கனிம ஆய்வு**

இந்தியப் பெருங்கடலுக்கு அடியில் 6,000 மீ ஆழத்தில் கனிம ஆராய்ச்சி நடவடிக்கைகளை முன்னெடுக்க உள்ளதாக மத்திய புவி அறிவியல் துறை இணையமைச்சர் ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக சென்னை வந்துள்ள அமைச்சா் ஜிதேந்திர சிங், சென்னை துறைமுகத்தில் நிறுத்தப்பட்டிருந்த தேசிய கடல்வளத் துறை தொழில்நுட்பக் கழகத்துக்கு சொந்தமான 'சாகர் நிதி' எனும் கப்பலை பார்வையிட்டார். அப்போது கப்பலின் தொழில்நுட்ப வசதிகளை அவர் ஆய்வு செய்தார். ஆழ்கடல் ஆராய்ச்சிக்கு மனிதர்களை அழைத்துச் செல்வதற்காக உருவாக்கப்பட்ட 'மத்யாஸா' என்ற கலன், அக் கப்பலில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தது. அதனையும் மத்திய அமைச்சர் ஆய்வு செய்தார்.

---

**7. டேபிள் டென்னிஸ்: சத்தியன்/தேசாய் இணை சாம்பியன்**

டுனீசியாவில் நடைபெற்ற உலக டேபிள் டென்னிஸ் கன்டெண்டர் போட்டியில் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் ஜி சத்தியன் / ஹர்மீத் தேசாய் இணை சாம்பியன் பட்டம் வென்றது. இது இந்த இணையின் முதல் சர்வதேச புரோ டூர் பட்டமாகும்.

இறுதிச்சுற்றில் சத்தியன்/ஹர்மீத் இணை 11–9, 4–11, 11–9, 11–6 என்ற செட் கணக்கில் பிரான்ஸின் இமானுவல் லெபெசான்/அலெக்ஸாண்ட்ரே காசின் இணையை தோற்கடித்தது.

---

**8. சிட்டி யூனியன் வங்கிக்கு வரி வசூலிக்க அனுமதி**

மத்திய அரசின் நேரடி வரிகள் வாரியம் மற்றும் மறைமுக வரிகள் வாரியத்தின் வரிகளை வசூலிக்க, சிட்டி யூனியன் வங்கிக்கு ரிசர்வ் வங்கி அங்கீகாரம் வழங்கி உள்ளது.

இதன்படி, மறைமுக வரிகள் வாரியத்தின் ஜி எஸ் டி – சுங்க வரி உட்பட, பல்வேறு மறைமுக வரிகளையும், நேரடி வரிகள் வாரியத்தின் வருமான வரியையும் சிட்டி யூனியன் வங்கி வாடிக்கையாளர்கள், அதன் வங்கி கிளைகளில் செலுத்தலாம்.

---

**9. நவ.1 – உலக தாவர உணவு நாள்**

---

**10. INS விசாகப்பட்டினம் போர்க்கப்பல் நவ.18இல் நாட்டுக்கு அர்ப்பணிப்பு:**

உள்நாட்டு தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்பட்ட அதிநவீன ஐஎன்எஸ் விசாகப்பட்டினம் போர்க்கப்பல் நவ.18 அன்று நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட உள்ளது. மும்பை மஸகான் கப்பல்கட்டும் தளத்தில் முற்றிலும் உள்நாட்டு தொழில்நுட்பத்துடன் INS விசாகப்பட்டினம் போர்க்கப்பல் தயாரிக்கப்பட்டு உள்ளது. 7,300 டன் எடை, 163 மீட்டர் நீளம் கொண்ட இந்த கப்பலில் 300 வீரர்கள் பணியாற்றுவார்கள்.

வான் இலக்கை தாக்கி அழிக்கும் ஏவுகணைகள், போர்க்கப்பல்களை தாக்கும் ஏவுகணைகள், நீர்மூழ்கிகளை தாக்கும் ஏவுகணைகள் கப்பலில் பொருத்தப்பட்டுள்ளன. இந்த போர்க்கப்பலால் ஒரே நேரத்தில் 32 வான் இலக்குகளை தாக்கி அழிக்க முடியும். அணு ஆயுத தாக்குதல், உயிரி ரசாயன தாக்குதல்களை சமாளிக்கும் தொழில்நுட்பங்கள் உள்ளன. 2 ஹெலிகாப்டர்களும் கப்பலில் நிறுத்தப்பட்டிருக்கும்.

நவ.18 அன்று மும்பையில் நடைபெறும் விழாவில் INS விசாகப்பட்டினம் போர்க்கப்பல் நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட உள்ளது. மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் விழாவுக்கு தலைமையேற்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஐஎன்எஸ் விசாகப்பட்டினம் போர்க்கப்பலை தொடர்ந்து இந்த மாத இறுதியில் ஐஎன்எஸ் வேலா நீர்மூழ்கி கப்பல், கடற்படையில் சேர்க்கப்பட உள்ளது. புதிய போர்க்கப்பல், நீர்மூழ்கியால் கடற்படையின் பலம் மேலும் அதிகரிக்கும் என்று பாதுகாப்புத் துறை வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

---

**11. கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் நமாமி கங்கை திட்டம்**

ஒரு மணி நேரத்தில் அதிக எண்ணிக்கையில், கையால் எழுதப்பட்ட குறிப்புகளின் படங்கள் பதிவிடப்பட்டதற்காக கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் கங்கை தூய்மைக்கான தேசியத் திட்டம் (நமாமி கங்கை) இடம்பிடித்துள்ளது.

கங்கை நதித் திருவிழா திங்கள்கிழமை தொடங்கியது. அதையொட்டி, கங்கை தூய்மைக்கான தேசியத் திட்டத்தின்கீழ் சாதனை முயற்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதன்படி, கங்கை குறித்து கையால் எழுதப்பட்ட குறிப்புகளின் படங்களை ஒரு மணி நேரத்தில் ஃபேஸ்புக் சமூக வலைதளத்தில் பதிவிட ஏற்பாடு செய்யப்பட்டது.

அதில் பெரும்பாலானோர் கலந்துகொண்டு, கையால் எழுதப்பட்ட குறிப்புகளின் படங்களைப் பதிவிட்டனர். ஒரு மணி நேரத்தில் அதிக எண்ணிக்கையிலான படங்கள் பதிவிடப்பட்டதை கின்னஸ் அமைப்பு உலக சாதனையாக அறிவித்து சான்றிதழை வழங்கியது.

---

**1. பொதுத்துறை தணிக்கையில் தகவல்களை பரிமாறிக்கொள்வதற்–காக, இந்தியா, எந்த நாட்டுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது?**




அ) இலங்கை

ஆ) சுவிச்சர்லாந்து

**இ) மாலத்தீவுகள் ☑**

ஈ) கெய்மன் தீவுகள்

✓ இந்திய தலைமை கணக்குத் தணிக்கையாளர் கிரிஷ் சந்திர முர்மு மற்றும் மாலத்தீவின் தலைமை கணக்குத் தணிக்கையாளர் ஹுசைன் நியாசி ஆகியோர் மாலேயில் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழு–த்திட்டனர். இது இந்தியா மற்றும் மாலத்தீவுகளுக்கு இடையே பொதுத் துறை தணிக்கைதுறையில் தகவல்களை பரிமாறிக்கொள்வதை நோக்–கமாகக்கொண்டதாகும். நாடுகள் அந்தந்த நிறுவனங்களின் தொழிற் முறை திறனை வலுப்படுத்தவும், பொது நிதி தணிக்கை துறையில் முறைகளை மேம்படுத்தவும் முயற்சி செய்கின்றன.

---

**2. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற ஷவ்கத் மிர்சியோயேவ், எந்த நாட்டின் அதிபராக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்?**



அ) ஆப்கானிஸ்தான்

**ஆ) உஸ்பெகிஸ்தான் ☑**

இ) சிரியா

ஈ) மாலத்தீவுகள்

✓ உஸ்பெகிஸ்தானின் அதிபர் ஷவ்கத் மிர்சியோயேவ், 2ஆவது 5 ஆண்டு காலத்திற்கு மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். உஸ்பெகிஸ்தானின் மத்திய தேர்தல் ஆணையத்தின்படி, மிர்சியோயேவ் 80.1% வாக்குக–ளைப் பெற்று வெற்றி பெற்றார். 64 வயதான அவர், கடந்த 2016'இல், உஸ்பெகிஸ்தானின் நீண்டகால அதிபராக இருந்த இஸ்லாம் கரிமோவ் இறந்ததைத்தொடர்ந்து அதிபராக பதவியேற்றார்.

---

**3. ஐநா அவையின் ஆயுதக்குறைப்பு வாரமானது ஆண்டுதோறும் எந்த மாதத்தில் அனுசரிக்கப்படுகிறது?**




அ) நவம்பர்

**ஆ) அக்டோபர் ☑**

இ) செப்டம்பர்

ஈ) ஆகஸ்ட்

✓ ஐநா அவையின் ஆயுதக்குறைப்பு வாரமானது ஆண்டுதோறும் அக்டோபர் மாதத்தில் அனுசரிக்கப்படுகிறது. இந்த ஆண்டின் (2021) ஆயுதக்குறைப்பு வாரமானது அக்டோபர்.24 அன்று தொடங்கி அக்டோபர் 30 வரை நடைபெற்றது. இது நாடுகளில் நிராயுதபாணியாக்கம் பற்றிய விழிப்புணர்வையும் புரிதலையும் மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. சமூகத்தில் அமைதியைக் கொண்டுவர ஆயுதங்களைப் பயன்படுத்துவதை, குறிப்பாக அணு ஆயுதங்களைப் பயன்படுத்துவதைக் குறைப்பதே இந்த அனுசரிப்பின் நோக்கமாகும். ஐநா ஆயுதக்குறைப்பு ஆணையமானது 1952'இல், ஐநா பாதுகாப்பு கவுன்சிலின்கீழ் அனைத்து பேரழிவு ஆயுதங்களையும் வழிப்பதற்காக உருவாக்கப்பட்டது.

---

**4. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற இராணி ஹியோ ஹ்வாங்–ஒக் நினைவுப்பூங்கா அமைந்துள்ள நாடு எது?**



அ) தென் கொரியா

**ஆ) இந்தியா ☑**

இ) சீனா

ஈ) தாய்லாந்து

✓ அயோத்தியில் சரயு நதிக்கரையில் அமைந்துள்ள ராம் கதா பூங்கா என்று முன்பு அழைக்கப்பட்ட பூங்கா, புதுப்பிக்கப்பட்டு வருகிறது. நவம்பர்.4ஆம் தேதி திறக்கப்பட்ட பிறகு, அந்தப் பூங்கா இராணி ஹியோ ஹ்வாங்–ஒக் நினைவுப்பூங்கா என்று அழைக்கப்படும். ஒரு கொரிய இராணியின் நினைவாக இந்தப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. ஒரு கொரிய இராணியான ஹியோ ஹ்வாங்–ஒக், அயோத்தி மன்னர் பத்மாசென் மற்றும் இந்துமதி ஆகியோரின் மகளாகப் பிறந்த அயோத்தியின் இளவரசி சூரிரத்னா என நம்பப்படுகிறது. பத்மாசென், கௌசலா இராச்சியத்தை ஆட்சி செய்தார். அது, இன்றைய உத்தரபிரதேசத்திலிருந்து ஒடிசா வரை பரவியிருந்தது.

---

**5. சமீபத்தில் 'செல்வ வரி'யை முன்மொழிந்த நாடு எது?**




அ) இந்தியா

**ஆ) அமெரிக்கா ☑**

இ) ரஷ்யா

ஈ) சுவிச்சர்லாந்து

✓ அமெரிக்க அதிபர் ஜோ பைடன், பெரிய நிறுவனங்கள் மற்றும் பணக்கார அமெரிக்கர்களின் வருமானத்தின் மீதான வழக்கமான முன்மொழியப்ப–ட்ட விகித உயர்வை அறிவித்துள்ளார், இது 'செல்வ வரி' போன்றது. $1 பில்லியனுக்கும் அதிகமான சொத்துக்கள் அல்லது $100 மில்லியனுக்கும் அதிகமான வருமானம் உள்ளவர்களுக்கு இந்தப் புதிய வரி மூன்று ஆண்டு காலத்திற்குப் பொருந்தும்.

---

**6. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற மன்னார் வளைகுடா கடல் உயிர்க்கோள காப்பகம் அமைந்துள்ள மாவட்ட(ம்)ங்கள் எது/எவை?**



**அ) இராமநாதபுரம் & தூத்துக்குடி ☑**

ஆ) திருநெல்வேலி

இ) சிவகங்கை & இராமநாதபுரம்

ஈ) கன்னியாகுமரி

✓ மன்னார் வளைகுடா கடல் உயிர்க்கோள காப்பகமானது, தமிழ்நாட்டில் இராமநாதபுரம் மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களுக்கு இடையே அமைந்துள்ள தீவுகள் மற்றும் அதனையொட்டிய பவளப்பாறைகளின் தொகுப்பாகும். ஆர்க்டிக் பகுதியிலிருந்து மன்னார் வளைகுடா கடல் உயிர்க்கோள காப்பகத்திற்கு ஆண்டுதோறும் பல பறவைகள் வலசை வருகின்றன. இப்பூங்காவிற்குள் உள்ள மனோலி தீவுகளில் ஒரு பெரிய பறவைக்கூட்டம் அண்மையில் காணப்பட்டது.

✓ அதில், ஆயிரக்கணக்கான ஆர்க்டிக் ஆலாக்கள் மற்றும் கடற்காகங்கள், நூற்றுக்கணக்கான நண்டுதின்னும் உப்புக்கொத்திகள் அடங்கும்.

---

**7. 'டிஜிட்டல் 2021: அக்டோபர் குளோபல் ஸ்னாப்ஷாட்'படி, கைபேசி பயன்படுத்துவோரின் சதவீதம் எவ்வளவு?**

அ) 45

**ஆ) 65 ☑**

இ) 75

ஈ) 80

✓ 'We Are Social' என்ற ஆராய்ச்சி நிறுவனம் 'டிஜிட்டல் 2021: அக்டோபர் குளோபல் ஸ்னாப்ஷாட்' என்ற தலைப்பிலான ஓர் அறிக்கையை வெளியிட்டது. இவ்வறிக்கையின்படி, உலக மக்கள்தொகையில் 65%'க்கும் அதிகமானோர் கைபேசியைப் பயன்படுத்தி வருகின்றனர்.

✓ உலகளாவிய கைபேசி பயனர்கள் எண்ணிக்கை அக்டோபரில் 5.29 பில்லியனை எட்டியுள்ளது. 2022ஆம் ஆண்டின் முதல் பாதியில் உலக மக்கள்தொகையில் 60% பேர் சமூக ஊடக பயனர்களாக வாய்ப்புள்ளது என இவ்வறிக்கை கூறுகிறது.

---

**8. தடுப்பூசியை செலுத்துவதை அதிகரிப்பதற்காக, பின்வரும் எந்த நாடு 'Knock Every Door' என்ற திட்டத்தைத் தொடங்கவுள்ளது?**




அ) சீனா

**ஆ) இந்தியா ☑**

இ) இந்தோனேசியா

ஈ) அமெரிக்கா

✓ இந்திய மத்திய சுகாதார அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிவிப்பின்படி, தடுப்பூசி செலுத்து விகிதங்கள் குறைவாக உள்ள மாவட்டங்களில் 'வீடு தேடிச்சென்று தடுப்பூசி செலுத்தும்' திட்டம் விரைவில் தொடங்க திட்டமிட–ப்பட்டுள்ளது. தடுப்பூசி போடுவதற்கு மக்களை ஊக்குவிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. சுகாதார அமைச்சகத்தின் கூற்றுப்படி, நாட்டில் 10.34 கோடிக்கும் அதிகமான மக்கள் COVID-19 தடுப்பூசியின் இரண்டாவது டோஸை செலுத்தாமல் உள்ளனர்.

**9. இந்திய தலைமைத் தேர்தலாணையர் சுஷில் சந்திரா, சமீபத்தில் எந்த நாட்டின் அதிபர் தேர்தலை மேற்பார்வையிட்டார்?**



அ) சிங்கப்பூர்

**ஆ) உஸ்பெகிஸ்தான் ☑**

இ) இலங்கை

ஈ) தாய்லாந்து

- ✓ உஸ்பெகிஸ்தானின் அதிபர் தேர்தலை மேற்பார்வையிட இந்தியாவின் தலைமைத் தேர்தல் ஆணையர் சுஷில் சந்திரா தலைமையில் 3 பேர் கொண்ட குழு ஒன்று உஸ்பெகிஸ்தானுக்குச் சென்றது. இந்த இந்திய அணி, சர்வதேச பார்வையாளராக தேர்தலை மேற்பார்வையிட்டுள்ளது.
- ✓ உஸ்பெகிஸ்தானின் அதிபர் ஷவ்கத் மிர்சியோயேவ் தேர்தலில் 80%' க்கும் அதிகமான வாக்குகளைப் பெற்று 2ஆவது ஐந்தாண்டு காலத்திற்கு மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார். சுஷில் சந்திரா மற்றும் ஜைனிதின் நிஜாம்கோட்ஜேவ் தலைமையிலான உஸ்பெகிஸ்தானிய தேர்தல் ஆணையம் தேர்தல் ஒத்துழைப்பு குறித்த கூட்டத்தை நடத்தியது.

---

**10. 2021 – பொது விவகாரங்கள் குறியீட்டில் முதலிடம் பிடித்துள்ள இந்திய மாநிலம் எது?**

அ) தமிழ்நாடு

**ஆ) கேரளா ☑**

இ) தெலுங்கானா

ஈ) குஜராத்

- ✓ பெங்களூருவைச் சார்ந்த ஒரு இலாபநோக்கற்ற மதியுரையகமான பொது விவகாரங்கள் மையமானது ஒவ்வோர் ஆண்டும் பொது விவகாரங்கள் குறியீட்டை வெளியிட்டு வருகிறது. இந்த ஆண்டு (2021) பொது விவகாரங்கள் குறியீட்டில் (PAI 2021), கேரளா, தமிழ்நாடு மற்றும் தெலுங்கானா ஆகியவை நிர்வாக செயல்திறனில் பதினெட்டு பெரிய மாநிலங்களுள் முதல் மூன்று இடங்களைப் பிடித்துள்ளன.
- ✓ சமபங்கு, வளர்ச்சி மற்றும் நிலைத்தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் மாநிலங்களுக்கு மதிப்பெண்கள் வழங்கப்பட்டுள்ளன. COVID–19 மீண்டெழு குறியீடானது முதன்முறையாக இந்த ஆண்டு (2021) குறியீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது. சிக்கிம், கோவா மற்றும் மிசோரம் ஆகியவை சிறிய மாநிலங்களுள் முதல் 3 இடங்களைப் பிடித்துள்ளன. புதுச்சேரி, ஜம்மு & காஷ்மீர் மற்றும் சண்டிகர் ஆகியவை யூனியன் பிரதேசங்களுள் முதல் மூன்று இடங்களில் உள்ளன.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. நீரஜ் சோப்ரா உள்பட 12 பேருக்கு கேல் ரத்னா விருது**

டோக்கியோ ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கம் வென்ற தடகள வீரர் நீரஜ் சோப்ரா உட்பட பன்னிரண்டு பேருக்கு தயான் சந்த் கேல் ரத்னா விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

ரவிக்குமார், லவ்லினா, ஸ்ரீஜேஷ், அவனி லேகரா, பிரமோத் பகத், மிதாலி ராஜ், மன்பிரீத் சிங், சுனில் சேத்ரிக்கு தயான் சந்த் கேல் ரத்னா விருது வழங்கப்படுகிறது.

விளையாட்டுத் துறையில் சிறப்பான பங்களிப்பை அளித்தவர்களுக்கு இந்த விருது வழங்கப்படுகிறது. தயான் சந்த் கேல் ரத்னா விருது விளையாட்டுத் துறையில் வழங்கப்படும் மிக உயரிய விருதாகும்.

**அர்ஜுனா விருது:**

விளையாட்டுத் துறையில் சிறப்பான பங்களிப்பை அளித்த 35 தடகள வீரர்களுக்கு அர்ஜுனா விருது வழங்குவதற்கும் விளையாட்டு விருதுகள் குழு பரிந்துரை செய்துள்ளது. அதன்படி ஷிகர் தவான், வந்தனா கட்டாரியா, பவானி தேவி, அபிஷேக் வர்மா, தீபக் புனியா, ஹர்மன் பிரீத் சிங், மன்தீப் சிங், பவினா படேல், ஷரத் குமார், வருண் குமார் உள்பட 35 பேருக்கு விருது வழங்கப்படுகிறது.

இதேபோன்று வாழ்நாள் பிரிவில் 5 பயிற்சியாளர்கள் உள்பட 10 பேருக்கு துரோணாச்சார்யா விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

---

**2. ஆயுதமின்றி தனித்து போராடும் வகையில் தமிழக சிறைக் காவலர்களுக்கு 'க்ரவ் மேகா' தற்காப்பு பயிற்சி**

சிறைவாசிகளின் பாதுகாப்பை உறுதி செய்ய சிறைக் காவலர்களுக்கு ஆயுதமின்றி தனித்துப் போராடும் 'க்ரவ் மேகா' தற்காப்பு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

சிறைச்சாலைகள் மற்றும் சீர்திருத்தப்பள்ளிகள் குற்றவியல் நீதியமைப்பு முறையின் முக்கிய கூறாக விளங்குகின்றன. நீதிமன்றங்கள் விதிக்கும் தண்டனைகளை நிறைவேற்றுவது, கைதிகளின் உயிர் மற்றும் உடைமைகளை பாதுகாப்பது, மனித உரிமை மீறலுக்கு இடமில்லாமல் கண்ணியத்துடன் நடத்துவது, சீர்திருத்தம், மறுவாழ்வு, திறன்சார் பயிற்சிகள் அளித்து பொறுப்பான குடிமக்களாக அவர்களை மாற்றுதல்ஆகியவை சிறைச்சாலைகளின் பணிகளாக உள்ளன.

தமிழகத்தில் சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையின் கீழ் 142 சிறைகள் உள்ளன. இதில் மத்திய சிறைச்சாலைகள் 9, பெண்களுக்கான தனிச்சிறைகள் 5, மாவட்ட சிறைச்சாலைகள் 14, ஆண்களுக்கான கிளைச் சிறைகள் 89, பெண்களுக்கான கிளைச் சிறைகள் 7, ஆண்களுக்கான தனி கிளைச் சிறை 1, பெண்களுக்கான தனி கிளைச் சிறைகள் 2, இளம் குற்றவாளிகளுக்கான சீர்திருத்தப் பள்ளிகள் 12 மற்றும் திறந்தவெளி சிறைச்சாலைகள் மூன்று ஆகியவை அடங்கும்.

இந்தச் சிறைகளில் 23,592 பேருக்கு இடவசதி உள்ளது. இவர்களை கண்காணித்து வழிநடத்த 5,452 சிறைத்துறைபணியாளர்கள் உள்ளனர். பொதுவாக சிறைச்சாலைகளில் மரண தண்டனை, ஆயுள் தண்டனை, 3 மாதங்களுக்கு மேல்தண்டனை பெற்றவர்கள், பெருங் குற்றங்களுக்காக தண்டனை விதிக்கப்பட்டவர்கள், கொடுங் குற்றவாளிகள், தொடர்ந்துகுற்றச் செயல்களில் ஈடுபடுபவர்கள், சக கைதி –களுக்கு ஊறு விளைவிக்கக்கூடியவர்கள், கடன் வாங்கி திருப்பிச் செலுத்த முடியாமல் சிறைபடும் சிறைவாசிகள், தடுப்பு காவல் மற்றும் நீதிமன்ற காவல், விசாரணை சிறைவாசிகள் என வகைப்படுத்தப்பட்டு உள்ளனர்.

சிறைத்துறை நன்னடத்தை அலுவலர்கள், சிறைவாசிகளுக்கும் அவர்களின் குடும்பத்தினருக்குமிடையே ஒருஇணைப்பு பாலமாக செயல்படுகின்றனர். நுண்ணறிவு மற்றும் விழிப்புப்பணி பிரிவு சிறைக்குள் கிடைக்கும் நுண்ணறிவு தகவல்களை ரகசியமாக சேகரித்து இதர புலனாய்வு அமைப்புகளுக்கு பரிமாற்றம் செய்யும்.

நீதிமன்ற வழக்குகளை நிர்வகித்து, குற்ற வழக்குகளில் தகுந்த ஆலோசனை வழங்க சட்ட ஆலோசனைப் பிரிவும், சிறைக்குள் நவீன தொழில்நுட்பத்தை கையாள தொழில்நுட்ப பிரிவும் உள்ளது.

---

**3. தீவிரவாதம் தொடர்பான வழக்குகளை விசாரிக்க காஷ்மீரில் புதிதாக மாநில புலனாய்வு அமைப்பு:**

தீவிரவாதம் தொடர்பான வழக்குகளை விசாரிக்க ஜம்மு–காஷ்மீரில் புதிதாக மாநில புலனாய்வு அமைப்பு (எஸ்ஐஏ) அமைக்கப்பட்டுள்ளது.

ஜம்மு–காஷ்மீர் யூனியன் பிரதேசத்தில் உள்ள தீவிரவாதம் தொடர்பான வழக்குகளை, விவகாரங்களை எஸ்ஐஏ விசாரிக்கும். வழக்குகளை விரைந்து முடிக்கவும், திறமையான முறையில் வழக்குகளை விசாரிப்பதற்கும் இந்த எஸ்ஐஏ அமைக்கப்பட்டுள்ளது.

தேசிய புலனாய்வு முகமை (என்ஐஏ) உள்ளிட்ட இதர மத்திய புலனாய்வு அமைப்புகளுக்கும் இந்த எஸ்ஐஏ உதவியாக இருக்கும் என்று ஜம்மு–காஷ்மீர் யூனியன் பிரதேச அரசு வெளியிட்டுள்ள அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜம்மு–காஷ்மீரின் குற்றப்பிரிவு விசாரணை அமைப்பின் (சிஐடி) தலைவரே, எஸ்ஐஏ அமைப்பின் இயக்குநராகவும் இருப்பார் என்றும் தெரியவந்துள்ளது. தீவிரவாதம் தொடர்பான வழக்குகளில் தேவைப்படும் தகவல்களை யூனியன்பிரதேசத்தில் உள்ள அனைத்து போலீஸ் நிலைய அதிகாரிகளும் எஸ்ஐஏ இயக்குநருக்குத் தரவேண்டும்.

மேலும் போலீஸ் டிஜிபிக்குத் தெரிவித்த பின்னர் தாமாகவே முன்வந்து முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்யும் அதிகாரமும் எஸ்ஐஏவுக்கு வழங்கப்பட்டுள்ளது என்று அந்த அரசாணையில் கூறப்பட்டுள்ளது.

---

**4. 2070–க்குள் பசுமைக்குடில் வாயு மாசு பூஜ்ஜியமாகும்: ஐ.நா. பருவ நிலை மாற்ற மாநாட்டில் பிரதமர் மோடி உறுதி**

இந்தியாவில் வரும் 2070ஆம் ஆண்டுக்குள் பசுமைக் குடில் வாயுக்கள் மாசு பூஜ்ஜியமாகும் என்று ஐநா மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடி உறுதியளித்துள்ளார்.

ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோ நகரில் ஐ.நா. பருவநிலை மாற்றமாநாடு கடந்த 31–ம் தேதி தொடங்கியது. இதில் பிரதமர் நரேந்திர மோடி நேற்று முன்தினம் பங்கேற்றார். அவர் பேசியதாவது:

பருவநிலை மாற்றத்தால் இந்தியா போன்ற வளரும் நாடுகள் அதிகம் பாதிக்கப்படுகின்றன. பெரும்பாலான வளரும் நாடுகளில் பருவநிலை மாற்றம் விவசாயிகளுக்கு மிகப்பெரிய சவாலாக உருவெடுத்துள்ளது. பருவமழை பொய்ப்பது, அதிக மழைப்பொழிவு, வெள்ளம் மற்றும் புயல்களால் பயிர் சாகுபடி கடுமையாக பாதிக்கப்படுகிறது.

பருவநிலை மாற்றத்துக்கு ஏற்ப குடிநீர் ஆதாரம், வீடுகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை கட்டமைப்பது அவசியமாகிறது. இதன்படி இந்தியாவில் குழாய் குடிநீர் திட்டம், தூய்மை இந்தியாதிட்டம், ஏழைகளுக்கு இலவச சமையல் காஸ் இணைப்பு உள்ளிட்ட திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இதன்மூலம் இந்தியமக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்துள்ளது. இயற்கையோடு இணைந்து வாழும் அறிவை மக்கள் பெற்றுள்ளனர்.

**5 வாக்குறுதிகள்**

உலக மக்கள் தொகையில் 17 சதவீதம் பேர் இந்தியாவில் வசிக்கின்றனர். எனினும் சர்வதேச கரியமில வாயு வெளியேற்றத்தில் இந்தியா 5 சதவீதம் மட்டுமே பங்கு வகிக்கிறது. பாரிஸ் உடன்பாட்டை இந்தியா உறுதியுடன் பின்பற்றி வருகிறது. இதன்படி பருவநிலை மாற்றத்தை தடுக்க இந்தியா சார்பில் 5 வாக்குறுதிகளை அளிக்கிறேன்.

வரும் 2030–ம் ஆண்டுக்குள் 500 ஜிகாவாட் அளவுக்கு புதைபடிம எரிபொருள் அல்லாத வழிகளில் மின் உற்பத்தி திறன் பெருக்கப்படும். வரும் 2030–ம் ஆண்டுக்குள் இந்தியாவின் மின்சார தேவையில் 50 சதவீதம் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலம் பெறப்படும். இப்போது முதல் வரும் 2030–ம் ஆண்டுக்குள் கரியமிய வாயு வெளியேற்றம் 100 கோடி டன் அளவுக்கு குறைக்கப்படும்.

வரும் 2030–ம் ஆண்டுக்குள் இந்திய பொருளாதாரத்தில் கரியமில வாயு பங்களிப்பு 45% அளவுக்கு குறைக்கப்படும். இந்தியாவில் வரும் 2070–ம் ஆண்டுக்குள் பசுமைக் குடில் வாயு மாசு பூஜ்ஜியமாகும்.

கிளாஸ்கோ மாநாட்டில் எடுக்கப்படும் முடிவுகளால் எதிர்கால சந்ததியின–ருக்கு பாதுகாப்பான, வளமான எதிர்காலம் உறுதி செய்யப்படும். இவ்–வாறு பிரதமர் நரேந்திர மோடி பேசினார்.

---

**5. குஜராத் முதல் அருணாச்சல பிரதேசம் வரை 3,800 கி.மீ. தூரத்தை 9 நாளில் சைக்கிளில் பயணித்து கின்னஸ் சாதனை படைத்த ராணுவ அதிகாரி**

குஜராத் முதல் அருணாச்சல பிரதேசம் வரை சைக்கிளில் குறுகிய நாட்களில் பயணம் செய்து கின்னஸ் சாதனை படைத்துள்ளார் ராணுவ அதிகாரி. இந்திய ராணுவத்தின் எலக்ட்ரானிக்ஸ் அன்ட் மெக்கானிக்கல் இன்ஜினீயர் பிரிவில் லெப்டினன்ட் கர்னலாக பணியாற்றி வருபவர் பாரத் பன்னு. இவர் அண்மையில் குஜராத் முதல் அருணாச்சல பிரதேசம் வரையிலான 3,800 கிமீட்டர் தூரத்தை வேகமாகக் கடந்து கின்னஸ் சாதனை படைத்துள்ளார்.

இந்தத் தூரத்தை கடக்க அவர் 9 நாட்கள், 7 மணி நேரம், 5 நிமிடங்கள் மட்டுமே எடுத்துக் கொண்டுள்ளார். இதையடுத்து இவரது பெயர் கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம்பெறவுள்ளது.

---

**6. நடப்பு நிதியாண்டில் பொருளாதார வளர்ச்சி 10%: நீதி ஆயோக்**

நடப்பு நிதியாண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 10 சதவீதமாக இருக்கும் என NITI ஆயோக் துணைத்தலைவர் ராஜீவ் தெரிவித்தார். புது தில்லியில் நடைபெற்ற புத்தக வெளியீட்டு விழாவில் கலந்துகொண்ட அவர் இதுகுறித்து மேலும் கூறியதாவது:

பன்னாட்டு நிதியம் 2021 இல் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 9.5 சதவீதமாக இருக்கும் என மதிப்பிட்டுள்ளது. பன்னாட்டு நிதிய கூற்றுப்படி அடுத்த ஐந்து ஆண்டுகளில் இந்தியா வேகமாக பொருளாதாரமாக மாறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், இது குறைவான மதிப்பீடாகும். நடப்பு நிதியாண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 10 சதவீதத்துக்கும் கூடுதலாகவே இருக்கும். 2022–23'இல் இந்த வளர்ச்சி 8 சதவீதத்துக்கும் அதிகமாக இருக்கும் என்றார் அவர்.

---

**7. கிராண்ட் ஸ்விஸ் செஸ்: சசிகிரண் வெற்றி**

லாத்வியாவில் நடைபெறும் ஃபிடே கிராண்ட் ஸ்விஸ் செஸ் போட்டியில் இந்திய கிராண்ட்மாஸ்டர் கே சசிகிரண் 6ஆவது சுற்றில் வெற்றி பெற்றார். இதையடுத்து தற்போதைய நிலையில் போட்டியின் முதலிடம், அவர் உள்பட 5 பேரால் பகிர்ந்துகொள்ளப்பட்டுள்ளது. சசிகிரண் 6ஆவது சுற்றில் ரஷியாவின் அலெக்ஸாண்டர் பிரெட்கேவை 53 நகர்வுகளில் தோற்கடித்தார். அடுத்த சுற்றில் அவர் பிரான்ஸின் மேக்ஸிம் வச்சியர் லாக்ரேவை எதிர்கொள்கிறார்.

இதர ஆடவர்களில் நிஹல் சரின் – செக் குடியரசின் டேவிட் நவாராவை தோற்கடித்து 2ஆவது இடத்தில் இருக்கிறார். பி ஹரிகிருஷ்ணா – ஜெர்மனியின் மதியாஸ் புளுபௌமுடன் டிரா செய்தார். இந்தியர்கள் இருவர் மோதிக்கொண்ட ஒரு சுற்றில் ரௌனக் சந்த்வானி – டி குகேஷிடம் தோல்விகண்டார். பிரக்னானந்தா – ரஷியாவின் அலெக்ஸா சரானாவிடமும், எஸ் பி சேதுராமன் – ரஷியாவின் ஆன்டன் டெம்சென்–கோவிடமும் தோல்வி கண்டனர். மகளிர் பிரிவில் துரோணவள்ளி ஹரிகா – ஜார்ஜியாவின் நினோ பாசிலாஷ்விலியுடன் டிரா செய்தார். அதேபோல், வைஷாலியும் டிரா செய்ய, வந்திகா அகர்வால், பத்மினி ரௌத், திவ்யா தேஷ்முக் ஆகியோர் தோல்வியை சந்தித்தனர்.

---

**8. உலகின் சிறந்த விஞ்ஞானிகள் பட்டியல்: காந்திகிராம கிராமியப் பல்கலை. பேராசிரியர்கள் 5 பேர் இடம்**

உலகின் 2% சிறந்த விஞ்ஞானிகள் பட்டியலில் காந்திகிராம கிராமிய நிகநிலைப் பல்கலையைச்சேர்ந்த 5 விஞ்ஞானிகள் இடம்பெற்றுள்ளனர். இதுதொடர்பாக காந்திகிராம கிராமியப் பல்கலை சார்பில் வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பு:

உலகத்தரம் வாய்ந்த ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட விஞ்ஞானிகளின் ஆய்வுக்கட்டுரைகள், அதற்கான மேற்கோள்கள் தரப்படுத்தப்பட்ட ஒரு கூட்டுக்குறிகாட்டி மூலமாக ஓராண்டு கால தாக்கத்துக்கு வகைப்படுத்தப்பட்டது. மேலும், மேற்கோள்கள் இல்லாத அளவீடுகள், மேற்கோள் தாள்கள் விகிதம் ஆகியவற்றின் மூலமாக 22 அறிவியல் துறைகள் மற்றும் 126 துணைத் துறைகளில் விஞ்ஞானிகள் வகைப்படு–த்தப்பட்டிருந்தனர். குறைந்தபட்சம் ஐந்து கட்டுரைகளை வெளியிட்ட அனைத்து விஞ்ஞானிகளும், புலன் மற்றும் துணைபுலம் சார்ந்த சதவீதங்களின் அடிப்படையில் தரவரிசைப்படுத்தப்பட்டனர்.

இதில், காந்திகிராம கிராமிய பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் ப. பாலசுப்பிரமணியம் (கணிதத் துறை), எஸ் ஆபிரகாம் ஜான் மற்றும் எஸ் மீனாட்சி (வேதியல் துறை) ஆகிய 3 பேரும் தொழில் மற்றும் நீண்ட தாக்கத்துக்குள் வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.

மேலும், ஓராண்டு தாக்கத்துக்கான பட்டியலில், விஞ்ஞானிகள் எஸ். மீனாட்சி மற்றும் ப. பாலசுப்பிரமணியம் ஆகியோருடன், சேதுராமன் (வேதியியல் துறை), கே மாரிமுத்து (இயற்பியல் துறை) ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர்.

கடந்த ஆண்டு வெளியிடப்பட்ட உலகின் 2 சதவீத சிறந்த விஞ்ஞானிகள் பட்டியலிலும், இப்பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் ப பாலசுப்ரமணியம், கே ராமச்சந்திரன், எம் ஜி சேதுராமன், எஸ் மீனாட்சி, எஸ் ஆபிரகாம் ஜான், கே மாரிமுத்து மற்றும் ஜி சிவராமன் ஆகிய 7 பேர் இடம் பெற்றிருந்தனர்.

தற்போது இரண்டாவது முறையாக ப பாலசுப்பிரமணியம், எஸ் மீனாட்சி, எஸ் ஆபிரகாம் ஜான், கே மாரிமுத்து, எம் ஜி சேதுராமன் ஆகிய 5 பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**9. கிளாஸ்கோ பருவ நிலை மாற்ற மாநாடு; பேசுவதை நிறுத்திவிட்டு செயலில் இறங்குங்கள்: உலக தலைவர்களுக்கு தமிழக சிறுமி கோரிக்கை**

கிளாஸ்கோவில் நடைபெற்ற பருவ நிலை மாற்ற மாநாட்டில் பேசிய தமிழக சிறுமி வினிசா உமாசங்கர் "சுற்றுச்சூழல் விவகாரத்தில் உலகத் தலைவர்கள் பேசுவதை நிறுத்திவிட்டு செயலில் இறங்க வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்.

உலகத்தலைவர்கள் தாங்கள் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றாத–தால் இன்றைய தலைமுறையினர் கோபத்திலும் விரக்தியிலும்

உள்ளனர் என்று அந்தச் சிறுமி பேசியது உலக அளவில் கவனத்தை ஈர்த்துள்ளது.

ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோவில் நடைபெற்ற பருவநிலை மாற்ற மாநாட்டில் தூய்மை தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்புகள் குறித்த நிகழ்வில் கலந்துகொண்டு பேசுவதற்கு தமிழகத்தின் திருவண்ணா மலை மாவட்டத்தைச் சேர்ந்த பதினான்கு வயதான சிறுமி வினிஷா உமாசங்கருக்கு இளவரசர் வில்லியம்ஸ் அழைப்பு விடுத்திருந்தார். இவர் சுற்றுச்சூழலுக்கு ஏற்ற வகையில் சூரிய சக்தி மூலம் இயங்கும் இஸ்திரி வண்டியை வடிவமைத்தற்காக சுற்றுச்சூழலுக்கான ஆஸ்கார் எனப்படும் 'எர்த்ஷாட்' விருதுக்குத் தேர்வானவர் ஆவார்.

இந்தியப் பிரதமர் மோடி, அமெரிக்க அதிபர் பைடன் உட்பட 100'க்கும் மேற்பட்ட உலகத்தலைவர்கள் கலந்துகொண்ட மாநாட்டில் வினிஷா ஆற்றிய உரையில் கூறியதாவது:

உலகத் தலைவர்கள் அனைவரிடமும் மரியாதையுடன் கேட்டுக் கொள்கிறேன். பேசுவதை நிறுத்திவிட்டு செயலில் இறங்குங்கள். புதைப் படிவ எரிபொருள்கள், புகை மற்றும் மாசுபட்ட சூழல் ஆகியவற்றில் கட்டமைக்கப்பட்ட பொருளாதாரத் துக்குப் பதிலாக சுற்றுச் சூழலுக்கு உகந்த கண்டுபிடிப்புகள், திட்டங்களுக்கு ஆதரவு அளிக்க வேண்டும். இந்த விவகாரத்தில் பழைய விவாதங்களையே தொடராமல் எதிர்காலத்துக்கான புதிய சிந்தனையை முன்னெடுக்க வேண்டும்.

எர்த்ஷாட் விருது பெற்றவர்கள் மற்றும் தேர்வானவர்களின் கண்டுபிடிப்புகள், முயற்சிகளுக்கு உதவ வேண்டும். உங்களுடைய நேரம், பணம் மற்றும் முயற்சி ஆகியவற்றை வளமான எதிர்காலத்தை உருவாக்க எங்களிடம் முதலீடு செய்ய வேண்டும்.

அதேசமயம் தெளிவாக சொல்கிறேன். நீங்கள் செயல்பட தாமதமானாலும், எங்களுக்கு ஆதரவு அளிக்கவில்லை என்றாலும் நாங்கள் நிறுத்த மாட்டோம், தொடர்ந்து பயணிப்போம். நீங்கள் கடந்த காலத்திலேயே முடங்கியிருந்தால் நாங்கள் எதிர்காலத்தை உருவாக்குவதை நோக்கி நகர்ந்துகொண்டே இருப்போம். ஆனால் தயவுசெய்து என்னுடைய கோரிக்கையை ஏற்றுக்கொள்ளுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் உங்களுக்கு உறுதியளிக்கிறேன், அதற்காக ஒருபோதும் நீங்கள் வருந்தும்படி ஆகாது. உலகத் தலைவர்கள் தாங்கள் அளிக்கும் வாக்குறுதிகளை நிறைவேற்றாததால் இன்றைய தலைமுறையினர் பெரும் கோபத்திலும், விரக்தியிலும் உள்ளனர். எங்களுடைய கோபத் –தை வெளிப்படுத்த காரணங்களும் உரிமையும் உள்ளது. ஆனால் எங்களுக்கு இப்போது கோபம் கொள்ள நேரமில்லை. அதைவிட முக்கியமானது செயலாற்றுவதுதான். நான் இந்தியாவை சேர்ந்த பெண் மட்டுமல்ல. இந்த பூமியைச் சேர்ந்த பெண்ணும் கூட என்றே கருதுகிறேன். அதற்காக நான் பெருமைப்படுகிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

---

**10. எழும்பூர் காவல் கட்டுப்பாட்டறைக்கு ஐஎஸ்ஓ சான்றிதழ்: டிஜிபியிடம் வழங்கினார் முதல்வர் ஸ்டாலின்**

சென்னை எழும்பூர் மாநில காவல் கட்டுப்பாட்டறைக்கு வழங்கப்பட்டுள்ள ஐஎஸ்ஓ சர்வதேச தரச்சான்றிதழை தமிழக டிஜிபி சைலேந்திரபாபுவிடம் முதல்வர் மு க ஸ்டாலின் வழங்கினார்.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவ –து:

**அவசர கால உதவி எண்கள்**

சென்னை எழும்பூரில் அமைந்துள்ள மாநில காவல் கட்டுப்பாட்டு அறையில், அவசர கால உதவி எண்கள் 100, 112, 101 அழைப்புகள் கையாளப்படுகின்றன. இது நவீனஒருங்கிணைந்த தரவு தளம் மற்றும் இதர தொழில்நுட்ப கட்டமைப்புகளுடன் நிறுவப்பட்டுள்ளது. இந்த நவீன ஒருங்கிணைந்த தரவு தளத்தில் இதுநாள் வரை ₹1.12 கோடி அவசர கால அழைப்பு விவரங்கள் மற்றும் 14.5 லட்சம் 'காவலன்' செயலி பயன்படுத்துவோரின் தகவல்கள் சேமித்து வைக்கப்பட்டுள்ளன.

இந்த நவீன ஒருங்கிணைந்த தரவு தளத்தின் தகவல்கள் பாதுகாப்பு அமைப்புக்கு பிரிட்டிஷ்ஸ்டாண்டர்ட்ஸ் இன்ஸ்டிடியூஷனால் ஐஎஸ்ஓ 27001:2013 சர்வதேச தரச்சான்று வழங்கப்பட்டுள்ளது. நாட்டிலேயே முதல்முறையாக தமிழ்நாடு வனத்துறையின் மாநில காவல் கட்டுப்பாட்ட –றையின் செயல்பாட்டுக்கு இந்த தரச்சான்று பெறப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

---

**11. போலீஸாருக்கு வாரத்தில் ஒருநாள் ஓய்வு: முதல்வர் உத்தரவு**

தமிழக காவலர்கள் அனைவருக்கும் வாரத்தில் ஒருநாள் ஓய்வு வழங்க முதல்வர் மு க ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

இதுகுறித்து முதல்வர் அலுவலகம் வெளியிட்ட செய்தியில்,

தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் தமிழ்நாடு சட்டப்பேரவையில், கடந்த 13–9–2021 அன்று நடைபெற்ற காவல் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கு பதிலளித்துப் பேசுகையில், 'காவலர்கள் தங்கள் உடல் நலனைப் பேணிக் காத்திட ஏதுவாகவும், தங்களது குடும்பத்தாருடன் போதிய நேரம் செலவிடுவதற்காகவும், இரண்டாம் நிலைக் காவலர்கள் முதல், தலைமைக் காவலர் வரையிலான காவலர்கள் அனைவருக்கும் வாரத்தில் ஒரு நாள் ஓய்வு வழங்கப்படும்' என்று அறிவித்தார்கள்.

இந்த அறிவிப்பினைச் செயல்படுத்தும் விதமாக, காவலர்கள் தங்கள் உடல்நலனைப் பேணிக்காத்திட ஏதுவாகவும், தங்களது குடும்பத்தாருடன் போதிய நேரம் செலவிடுவதற்காகவும், இரண்டாம் நிலைக் காவலர்கள் முதல், தலைமைக்காவலர் வரையிலான காவலர்க –ள் அனைவருக்கும் வாரத்தில் ஒரு நாள் ஓய்வு வழங்கிட தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் 3–11–2021 அன்று உத்தரவிட்டுள்ளார்கள். அதற்கான அரசாணை இன்றைய தினம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

காவலர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு முதலமைச்சர் வெளியிட்டுள்ள இந்த அறிவிப்பு, காவல் பணியில் இடையறாது ஈடுபட்டு, சவாலான பணிகளை எதிர்கொள்ளும் காவலர்களுக்கு அருமருந்தாக விளங்குவதோடு, புத்துணர்ச்சியோடும், உற்சாகத்தோடும் தங்கள் பணியினை அவர்கள் மேற்கொள்ள வழிவகுக்கும்.

---

**12. பாராலிம்பிக் வீரர் மாரியப்பன் தங்கவேலுவுக்கு அரசுப் பணி: ஆணையை வழங்கினார் முதல்வர் ஸ்டாலின்**

பாராலிம்பிக் வீரர் மாரியப்பன் தங்கவேலுவுக்கு அரசுப் பணி ஒதுக்கி அதற்கான பணி ஆணையை முதல்வர் மு க ஸ்டாலின் வழங்கினார். தமிழ்நாடு காகித ஆலையில் மார்க்கெட்டிங் பிரிவில் மாரியப்பன் தங்கவேலுவுக்குத் துணை மேலாளர் பணி ஒதுக்கப்பட்டுள்ளது.

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நடைபெற்ற பாராலிம்பிக் போட்டியில், உயரம் தாண்டுதலில் தமிழகத்தின் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த மாரியப்பன் தங்கவேலு வெள்ளிப் பதக்கம் வென்றார்.

---

**13. மாற்றுத் திறனாளிகளுக்கான தேசிய விருது; தமிழகத்தில் 6 பேர் தேர்வு**

மாற்றுத் திறனாளிகள் உரிமையை ஊக்குவிப்பதற்கான தேசிய விருதுக்கு, தமிழகத்தைச் சேர்ந்த ஆறு பேர் தேர்வு செய்யப்பட்டு உள்ளனர்.

ஐநா சபை பிரகடனத்தின் அடிப்படையில், ஒவ்வொரு ஆண்டும் டிச., 3ம் தேதி, சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினமாக அனுசரிக்கப்பட்டு வருகிறது. இந்நாளில், மாற்றுத் திறனாளிகளில் சிறந்த நபர்கள் மற்றும் அவர்களுக்கு சிறந்த சேவை வழங்கியவர்களுக்கு, மாநில மற்றும் மத்திய அரசுகள் விருது வழங்கி கவுரவிக்கின்றன. அந்த வகையில், 2020ம் ஆண்டுக்கான மாற்றுத் திறனாளிகள் உரிமைக்கான தேசிய விருதுக்கு, தமிழகத்தைச் சேர்ந்த மாற்றுத் திறனாளிகள், ஆறு பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

சென்னை வேளச்சேரியை சேர்ந்த வேங்கடகிருஷ்ணன், மந்தவெளியைச் சேர்ந்த ஜோதி, திருவண்ணாமலை மாவட்டத்தை சேர்ந்த ஏழுமலை, காஞ்சிபுரம் மாவட்டம், கானத்தூர் ரெட்டிகுப்பத்தைச் சேர்ந்த தினேஷ். மேலும், திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த மானஷா தண்டபாணி, நாமக்கல் மாவட்டம் பேட்டப்பாளை யத்தை சேர்ந்த பிரபாகரன் ஆகியோர், தேர்வு செய்யப் பட்டுள்ளனர்.

மாற்றுத் திறனாளிகள் உரிமையை ஊக்குவிப்பதில், சிறந்த மாநிலமாக தமிழகம்; சிறந்த மாவட்டமாக, சேலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. டிச., 3ம் தேதி டில்லியில் நடக்க உள்ள சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தின நிகழ்ச்சியில், இவ்விருதுகள் மத்திய அரசால் வழங்கப்பட உள்ளன. இத்தகவலை, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை செயலர் லால்வேனா தெரிவித்துள்ளார்.

---

**14. இந்திய நிறுவனம் தயாரித்த – கோவாக்சின் தடுப்பூசிக்கு உலக சுகாதார அமைப்பு அனுமதி:**

இந்தியாவின் பாரத் பயோடெக் நிறுவனம் தயாரித்த கோவாக்சின் தடுப்பூசிக்கு உலக சுகாதார அமைப்பு அவசரகால அனுமதி வழங்கி உள்ளது. கரோனா வைரஸைக் கட்டுப்படுத்த இந்தியாவில் கோவிஷீல்–டு, கோவாக்சின் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டு வருகின்றன. இதுவரை 107 கோடி பேருக்கும் அதிகமாக தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. இதில் ஏற்கனவே கோவிஷீல்டு தடுப்பூசிக்கு உலக சுகாதார அமைப்பு அனுமதி அளித்திருந்தது. ஆனால், கோவாக்சினுக்கு மட்டும் அனுமதி வழங்கப்ப–டாமலிருந்தது. இதனால் கோவாக்சின்தடுப்பூசி செலுத்திக்கொண்டவர்கள் வெளிநாடுகளுக்கு செல்வதில் சிக்கல் நிலவியது. இந்நிலையில், கோவாக்சின் தடுப்பூசியை அவசரகால பயன்பாட்டுக்கு உலக சுகாதார அமைப்பு அனுமதித்துள்ளது.

இது தொடர்பாக உலக சுகாதார அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில், "பாரத் பயோடெக் நிறுவனத்தின் கோவாக்சின் தடுப்பூசிக்கு அவசர கால பயன்பாட்டுக்கான அனுமதி வழங்கப்படுகிறது. உலக சுகாதார அமைப்பு அங்கீகரித்துள்ள கோவிட் தொற்றுக்கு எதிரான தடுப்பூசிகள் பட்டியலில் கோவாக்சினும் சேர்க்கப்படுகிறது" எனக் கூறப்பட்டுள்ளது.

இத்தடுப்பூசி செலுத்திக்கொண்ட இந்தியர்கள் தடையின்றியும் தனிமைப் படுத்துதல் கெடுபிடி இன்றியும் இனி வெளிநாடுகளுக்குச் செல்லலாம். கோவாக்சின் கரோனாவுக்கு எதிராக 77.8% திறன் வாய்ந்தது ஆகும்.

---

**15. இந்திய அணியின் தலைமைப் பயிற்சியாளராக ராகுல் திராவிட் நியமனம்:**

இந்திய அணியின் தலைமைப் பயிற்சியாளராக முன்னாள் கேப்டன் ராகுல் திராவிட்டை அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு நியமித்து இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் (பிசிசிஐ) அறிவித்துள்ளது.

டி20உலகக் கோப்பைப் போட்டித் தொடர் முடிந்தபின், நியூஸிலாந்து தொடரிலிருந்து இந்திய அணிக்கு பயிற்சியாளர் பணியை திராவிட் கவனிக்க உள்ளார். 2023ஆம் ஆண்டு நடக்கும் 50 ஓவர்கள் உலகக் கோப்பைப் போட்டி வரை திராவிட் இந்திய அணிக்குப் பயிற்சியாளராக இருப்பார்.

---

**16. ₹169.11 கோடி மதிப்பீட்டில் பள்ளிக் கட்டிடங்களை திறந்து வைத்து 3 கற்போர் மையங்களுக்கு மாநில எழுத்தறிவு விருது: முதல்வர் மு க ஸ்டாலின் வழங்கினார்**

**தமிழக அரசு வெளியிட்ட அறிக்கை:** நபார்டு திட்டத்தின் கீழ், திண்டுக்கல், ஈரோடு, கள்ளக்குறிச்சி, நாகப்பட்டிணம், புதுக்கோட்டை, ராமநாதபுரம், சேலம், திருவள்ளூர், திருவண்ணாமலை, திருச்சி, இராணிப்பேட்டை, வேலூர் உள்ளிட்ட மாவட்டங்களில் அமைந்துள்ள 65 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ₹114 கோடியே 88 லட்சத்து 52 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளன. இங்கு வகுப்பறைக் கட்டடங்கள், ஆய்வகக் கட்டடங்கள், குடிநீர் வசதிகள், கழிவறைகள் மற்றும் சுற்றுச்சுவர், ஒருங்கிணைந்த கல்வித் திட்டத்தின் கீழ் அரியலூர், மதுரை, திருவாரூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சேலம், திருவள்ளூர், திருவண்ணாமலை உள்ளிட்ட மாவட்டங்களில் அமைந்துள்ள 45 அரசு உயர்நிலை மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் 9 உண்டு உறைவிடப் பள்ளிகளில் 49 கோடியே 24 இலட்சத்து 56 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வகுப்பறைக் கட்டடங்கள், ஆய்வகக் கட்டடங்கள், குடிநீர் வசதிகள், கழிவறைகள் மற்றும் சுற்றுச்சுவர்.

சிவகங்கை மாவட்டம், செம்பனூர், மெய்யம்மை காசி அரசு மேல்நிலைப் பள்ளியில் ரூ.80 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 4 வகுப்பறை கொண்ட கட்டடம், மாவட்ட கனிமவள நிதியிலிருந்து திருப்பூர் மாவட்டம், புக்கலம், அரசு உயர்நிலைப் பள்ளிக்கு ₹55 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 3 வகுப்பறைக் கட்டடம், காஞ்சிபுரம் மாவட்டம், ஊரப் பாக்கத்தில் ரூ.63 லட்சத்து 27 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கிளை நூலகம், மதுரை மாவட்டம் – அவணியாபுரம் அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் ஆசிரியர் நலநிதியிலிருந்து ₹3 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மதுரை ஆசிரியர் இல்லக் கட்டடம், என மொத்தம் ரூ.169 கோடியே 11 லட்சத்து 35 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பள்ளிக்கல்வித் துறை கட்டடங்களை திறந்து வைத்தார்.

மேலும், சென்னை, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய 3 மாவட்டங்–களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 3 கற்போர் மையங்களுக்கு மாநில எழுத்தறிவு விருதுகளை வழங்கினார்.

---

**1.** **'டீப் டைவ் ஆன்லைன் பயிற்சி திட்டத்தை' அறிமுகப்படுத்திய மத்திய அமைச்சகம் எது?**

அ) நிதி அமைச்சகம்

**ஆ) மின்னணு & தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் ☑**

இ) வீட்டுவசதி & நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம்

ஈ) ஊரக வளர்ச்சி அமைச்சகம்

✓ மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் (MeitY) ஒரு வார கால 'டீப் டைவ் ஆன்லைன் பயிற்சி' திட்டத்தை ஏற்பாடு செய்கிறது.

✓ சைபர் சுரக்ஷித் பாரத் முன்முயற்சியின்கீழ், MeitY'இல் தேசிய மின் ஆளுகைப்பிரிவினால் இப்பயிற்சித்திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சைபர் விழிப்புணர்வுக்கான முதல் பொது–தனியார் கூட்டாண்மையாக, கடந்த 2018ஆம் ஆண்டில், சைபர் சுரக்ஷித் பாரத் முன்முயற்சியை MeitY அறிமுகப்படுத்தியது. இந்தத் திட்டம் பல்வேறு அமைச்சகங்கள், பொதுத் துறை நிறுவனங்கள் & வங்கிகளின் IT ஊழியர்களுடன் இணைந்து தலைமை தகவல் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு (CISO) பயிற்சியளிக்கிறது.

---

**2.** **பிரதமரின் பொருளாதார ஆலோசனைக் குழுவின் தலைவர் யார்?**



**அ) பிபேக் தேப்ராய் ☑**

ஆ) ராகேஷ் மோகன்

இ) பூனம் குப்தா

ஈ) டி டி ராம் மோகன்

✓ பிரதமர் நரேந்திர மோடி தனது பொருளாதார ஆலோசனைக் குழுவை (EAC–PM) மறுசீரமைக்க ஒப்புதல் அளித்துள்ளார். இந்திய புள்ளியியல் நிறுவனத்தின் தலைவர் பிபேக் தேப்ராய், இக்கவுன்சிலின் தலைவராக உள்ளார். ரிசர்வ் வங்கியின் முன்னாள் துணை ஆளுநர் இராகேஷ் மோகன், ஐஐஎம் அகமதாபாத் பேராசிரியர் டி டி இராம் மோகன் மற்றும் என்சிஏஇஆர்'இன் டைரக்டர் ஜெனரல் பூனம் குப்தா ஆகியோர் ஏழு உறுப்பினர்களைக்கொண்ட இக்குழுவில் இணைந்த மூன்று புதிய உறுப்பினர்களாவர். 2 வருட காலத்திற்கு இப்புதிய ஆலோசனைக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. இந்தச் சபையின் தலைவர் மற்றும் மூன்று உறுப்பினர்கள் மீண்டும் தக்கவைக்கப்பட்டுள்ளனர்.

---

**3.** **காலமுறையில், 'பைங்குடில் வாயு' குறித்த அறிக்கைத்தாளை வெளியிடுகிற நிறுவனம் எது?**

அ) NITI ஆயோக்

**ஆ) உலக வானிலை அமைப்பு ☑**

இ) உணவு மற்றும் உழவு அமைப்பு

ஈ) NABARD


✓ சமீபத்திய 'பைங்குடில் வாயு – GHG' குறித்த அறிக்கைத்தாளை உலக வானிலை அமைப்பு வெளியிட்டுள்ளது. அறிக்கையின்படி, பைங்குடில் வாயு உமிழ்வுகளின் அதிகரித்து வரும் போக்கு, 2021'இல் தொடர்ந்தது.

✓ மூன்று முக்கிய GHG'களான கார்பன் டை ஆக்சைடு ($CO_2$), மீத்தேன் ($CH_4$) & நைட்ரஸ் ஆக்சைடு ($N_2O$) ஆகியவையும் அதிகரித்துள்ளதை இந்த அறிக்கை எடுத்துக்காட்டுகிறது. முந்தைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் 2020'இல் இதன் செறிவு அதிகமாகியுள்ளது.

✓ தற்போதைய அளவிலேயே இந்த உமிழ்வு தொடர்ந்தால், சராசரி புவி வெப்பமடைதல் நிலை, பாரிஸ் ஒப்பந்தத்தின் உலகளாவிய வெப்பநிலை இலக்கைவிடவும் அதிகமாக இருக்கும்.

---

**4.** **அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'AY.4.2' என்பது ___?**



அ) AI இயலி

**ஆ) உருமாறிய கொரோனா வைரஸ் ☑**

இ) விண்கலம்

ஈ) புறக்கோள்

✓ அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'AY.4.2' என்பது ஓர் 'உருமாறிய கொரோனா வைரஸ்' ஆகும். COVID–19 பரிணாம விளக்கப்படத்தின் கிளைகளுக்கு அவற்றின் தொடர்பை விளக்குவதற்காக கொடுக்கப்பட்ட பெயர்களாகும் இவை. எடின்பர்க் மற்றும் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்களின் குழுவான பாங்கோ நெட்வொர்க்கால் இத்திரிபுக –ள் கண்காணிக்கப்படுகின்றன. அவர்கள் திரிபுகளின் பாதுகாவலர்க –ளாக செயல்படுகிறார்கள் மற்றும் புதிய பெயர்களின் ஒதுக்கீட்டைக் கையாளுகிறார்கள். இந்த AY.4.2. திரிபானது இந்த ஆண்டு ஏப்ரலில் இருந்து அறியப்படுகிறது.

---

**5.** **'கூட்டு புள்ளியியல் வெளியீடு–2021 மற்றும் JSP ஸ்னாப்ஷாட் 2021' என்பது எந்தப் பிராந்திய சங்கத்தின் வெளியீடுகளாகும்?**

அ) ஜி–20

ஆ) ஆசியான்

**இ) பிரிக்ஸ் ☑**

ஈ) பிம்ஸ்டெக்

✓ BRICS நாடுகளின் தேசிய புள்ளியியல் அலுவலகங்களின் தலைவர்களி –ன் கூட்டம் இந்தியா தலைமையில் மெய்நிகர் வடிவத்தில் நடந்தது.

✓ இந்தியாவின் தலைமை புள்ளியியல் நிபுணரும், புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகத்தின் செயலாளருமானவர் இக்கூட்டத்திற்கு தலைமைதாங்கினார். சந்திப்பின்போது, BRICS நாடுகளுக்கான கூட்டு புள்ளியியல் வெளியீடு–2021 மற்றும் JSP–Snapshot–2021 ஆகியவை வெளியிடப்பட்டன. "நீடித்த வளர்ச்சி இலக்குகளைக் கண்காணிப்பதில் NSO'களின் முயற்சிகள்" என்பது இக்கூட்டத்தின் கருப்பொருளாகும்.

---

**6.** **சமீப செய்திகளில் இடம்பெற்ற குக் ஜலசந்தி உள்ள நாடு எது?**



**அ) நியூசிலாந்து ☑**

ஆ) யூகே

இ) ஆஸ்திரேலியா

ஈ) பிரான்ஸ்

✓ குக் ஜலசந்தியானது நியூசிலாந்தின் வடக்கு மற்றும் தெற்கு தீவுகளைப் பிரிக்கிறது. இது வடமேற்கில் உள்ள டாஸ்மான் கடலை தென்கிழக்கில் தெற்கு பசிபிக் பெருங்கடலுடன் இணைக்கிறது. சமீபத்தில், எலக்ட்ரிக் ஏர் நிறுவனத்தை நிறுவிய பிரீட்மேன், மின்சார விமானத்தின்மூலம் முதல் முறையாக ஜலசந்தியைக் கடந்தார். சுமார் 40 நிமிடம் இந்தப் பயணம் நீடித்தது. 101 ஆண்டுகளுக்கு மின், வழமையான விமானத்தின்மூலம் இந்த ஜலசந்தியை ஒருவர் கடந்திருந்தார்.

---

**7.** **காலநிலை நடவடிக்கைகளில் சரிஒப்பை மதிப்பிடுவதற்காக இந்திய காலநிலை நிபுணர்களால் தொடங்கப்பட்ட இணைய தளத்தின் பெயர் என்ன?**

**அ) காலநிலை சரிஒப்பு கண்காணிப்பு ☑**

ஆ) பாரத் காலநிலை கண்காணிப்பு

இ) பாரத் காலநிலை தகவல் பலகை

ஈ) உலகளாவிய சிசி கண்காணிப்பு

✓ இந்தியாவைச் சேர்ந்த சுயாதீன ஆய்வாளர்கள் உலகளாவிய கால நிலைக்கொள்கையில் "காலநிலை சரிஒப்பு கண்காணிப்பு – Climate Equity Monitor" என்ற இணையவழி தகவல் பலகையை உருவாக்கி உள்ளனர். காலநிலை சரிஒப்பு கண்காணிப்பு தகவல் பலகையானது, காலநிலை நடவடிக்கை, உமிழ்வுகளில் உள்ள ஏற்றத்தாழ்வுகள், உலகம் முழுவதும் உள்ள ஆற்றல் நுகர்வு மற்றும் பல்வேறு நாடுகளின் காலநிலை கொள்கைகளை மதிப்பிடுவதற்கான இணையவழி தகவல் பலகையை வழங்குகிறது.

✓ இது UNFCCC (வளர்ந்த நாடுகள்) கீழ் உள்ள இணைப்பு–I உறுப்புகளின் செயல்திறனைக் கண்காணிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

**8.** **'STRIVE' என்பது உலக வங்கியின் நிதியுதவியுடன் எந்த மத்திய அமைச்சகத்தால் செயல்படுத்தப்படுகிறது?**

**அ) திறன் மேம்பாட்டு அமைச்சகம் ☑**

ஆ) கல்வி அமைச்சகம்

இ) கலாச்சார அமைச்சகம்

ஈ) தொழிலாளர் & வேலைவாய்ப்பு அமைச்சகம்

- ✓ Skills Strengthening for Industrial Value Enhancement (STRIVE) என்பது உலக வங்கியின் நிதியுதவியுடன் 2016ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு திட்டமாகும். இதன் மொத்த செலவினம் ₹2200 கோடியாகும்.
- ✓ குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் (MSME) தொடர்பான பிரச்சனைகளுக்கு தீர்வு காணுவதற்கு தொழில் குழுமங்கள் மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இந்தத் திட்டம் தனது நோக்கமாகக் கொண்டுள்ளது. கனரா தொழிற்சாலைகள் சங்கம் – தொழிற்சாலைகள் குழுமங்கள் மூலம் 'STRIVE' திட்டம் மங்களூருவில் தொடங்கப்பட்டது.

---

**9. சிந்து ஆற்று ஓங்கில்களின் கணக்கெடுப்பைத் தொடங்கவுள்ள இந்திய மாநிலம் எது?**



அ) மேற்கு வங்கம்

**ஆ) பஞ்சாப் ☑**

இ) ஹரியானா

ஈ) பீகார்

- ✓ பஞ்சாப் மாநிலம் சிந்து ஆற்று ஓங்கில்களின் (*Platanista gangetica Miner*) கணக்கெடுப்பைத் தொடங்கவுள்ளது. இது பியாஸ் ஆற்றில் காணப்படும் நன்னீர் ஓங்கில்கள் ஆகும். சிந்து ஆற்றில் வாழும் ஓங்கில்கள், இயற்கை பாதுகாப்புக்கான சர்வதேச ஒன்றியத்தால் (IUCN) 'அருகிவிட்ட இனம்' என வகைப்படுத்தப்பட்டுள்ளது. 2007ஆம் ஆண்டு, பஞ்சாபின் ஹரிகே வனவுயிரி சரணாலயத்தில் ஓங்கில்கள் கண்டுபிடிக்கப்பட்டன. சிந்து ஆற்று ஓங்கில், கடந்த 2019'இல் பஞ்சாபின் மாநில 'நீர்வாழ் உயிரினம்' என அறிவிக்கப்பட்டது.

---

**10. புராஜெக்ட் 15B வகுப்பு டெஸ்ட்ராயர்–யார்டு 12704 (விசாகப் பட்டினம்)'இன் முதல் கப்பலை இந்திய கடற்படைக்கு வழங்கிய நிறுவனம் / அமைப்பு எது?**



அ) DRDO

**ஆ) மசகான் கப்பல் கட்டும் நிறுவனம் ☑**

இ) கார்டன் ரீச் கப்பல் கட்டுநர்கள்

ஈ) HAL

- ✓ மசகான் கப்பல் கட்டும் நிறுவனமானது புராஜெக்ட் 15B வகுப்பு டெஸ்ட்ராயர்–யார்டு 12704 (விசாகப்பட்டினம்)'இன் முதல் கப்பலை இந்திய கடற்படைக்கு வழங்கியுள்ளது. இந்தக் கப்பல், உள்நாட்டு எஃகு DMR 249A'ஐப் பயன்படுத்தி கட்டப்பட்டதாகும். இந்தியாவில் கட்டப்பட்ட மிகப்பெரிய டெஸ்ட்ராயர்களில் இது ஒன்றாகும். இதன் மொத்த நீளம் 164 மீ ஆகும். இது 7500 டன்களுக்கு மேல் இடப்பெயர்ச்சி திறன்கொண்டது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. மொழிவழி மாநிலம்; ஒரு பார்வை!**

தமிழ்நாடு மொழிவழி மாநிலமாகப் பிரிந்து 65 ஆண்டுகள் ஆகிவிட்டன. கடந்த 2006–ஆம் ஆண்டு தமிழக அரசின் சார்பில் அதன் பொன்விழா கொண்டாடப்பட்டது. சென்னை மாகாணத்திலிருந்து பிரிந்து சென்ற ஏனைய மாநிலங்கள் இந்த நாளை 'உதய தின' மாகக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றன. எனவே தமிழ்நாடும் இதில் பங்கேற்க வேண்டும் என்று கோரிக்கை எழுந்துள்ளது.

இந்தியா பல மொழிகள் பேசும் ஒரு துணைக்கண்டம். ஆங்கிலேயரிடம் இருந்து விடுதலை பெறுவதற்காக மக்கள், தங்கள் மொழி, இன வேறுபாடுகளை மறந்து தேசியத் தலைவர்களை நம்பியே போராடினர். மிதவாதிகள் மகாத்மா காந்தியடிகள் தலைமையிலும், தீவிரவாதிகள் திலகர் தலைமையிலும் போராடினர். இரண்டாம் உலகப் போர் வந்ததும், ஆங்கிலேயர் தங்கள் காலனி நாடுகளை விட்டு வெளியேற வேண்டிய நெருக்கடி ஏற்பட்டது.

இந்திய விடுதலைப் போராட்டம், வெற்றியை நெருங்கிக் கொண்டிருந்தபோது, மாநிலங்களின் பிரிவினைக்கான குரல்களும் எழுந்தன. தேசம் விடுதலை பெற்றதும் மொழிவழி மாநிலங்கள் பிரிக்கப்பட வேண்டும் என்பதற்கான கிளர்ச்சிகளும் வெடித்துக் கிளம்பின. சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமர் ஜவாஹர்லால் நேரு இதனை அடக்கவும், அமைதிப்படுத்தவும் கருதி, இந்தியா முழுவதையும் ஐந்து மண்டலங்களாகப் பிரிக்கும் திட்டத்தை அறிவித்தார்.

அவை, தட்சிண பிரதேசம், உத்தர பிரதேசம், மேற்கு பிரதேசம், கிழக்கு பிரதேசம், மத்திய பிரதேசம் என்பவையாகும். இதில் தட்சிண பிரதேசம் என்பது தமிழகம், கர்நாடகம், கேரளம், ஆந்திரம் ஆகிய நான்கு மாநிலங்கள் அடங்கியதாகும்.

இத்திட்டத்தை மூதறிஞர் ராஜாஜி மட்டுமே வரவேற்றார்; ஈ.வெ.ரா. பெரியார் கடுமையாக எதிர்த்தார்; அண்ணாவும் கண்டனம் தெரிவித்தார். தமிழரசுக் கழகத் தலைவர் ம.பொ.சி.யின் பெருமுயற்சியால் தமிழ்நாட்டு அரசியல் கட்சிகள் கூட்டணி அமைத்துப் போராடின. எனவே, நேருவும் வேறு வழியில்லாமல் இத்திட்டத்தினைக் கைவிட நேர்ந்தது.

1953–ஆம் ஆண்டு வரை தமிழ்நாடும் சென்னை மாகாணத்தில் ஓர் அங்கமாகவே விளங்கியது. இந்தப் பல மொழிக் கூட்டில் சிக்கிக் கிடந்தவர்கள், தங்களுக்கு, தனியாக 'விசால ஆந்திரம்' வேண்டுமெனவும், 'ஐக்கிய கேரளம்' வேண்டுமெனவும் கோரிக்கை எழுப்பினர். இதற்காக 'ஆந்திர மகாசபை', 'கேரள சமாஜம்' போன்ற அமைப்புகளை உருவாக்கி கட்சி சார்பின்றி ஒன்றுபட்டு குரல் கொடுத்தனர்.

இதன் பிறகுதான் காங்கிரஸ் கட்சியிலிருந்து சிலம்புச் செல்வர் ம.பொ. சிவஞானம் முதன் முதலாக தமிழ் அரசு அடைய வேண்டும் என்ற கோரிக்கையை எழுப்பினார். மொழி வழியாக மாநிலங்கள் பிரிக்கப்படும் போது வேங்கடம் முதல் குமரி வரை தமிழகம் அமைக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தினார்.

சுதந்திர இந்தியாவில் ஒவ்வொரு தேசிய இனத்திற்கும் தன்னாட்சி உரிமை வழங்கப்பட வேண்டும். அதன் அடிப்படையில் புதிய தமிழ்நாடு அமைக்கப்பட வேண்டும் என விரும்பிய ம.பொ.சி., தமிழகத்தின் அனைத்துக் கட்சித் தலைவர்களின் ஆதரவையும் பெற்று அறிக்கையும் வெளியிட்டார்.

1948–ஆம் ஆண்டு ஒன்றுபட்ட சென்னை மாகாண சட்டமன்றத்தில் மொழிவழி மாநிலப் பிரிப்பை வலியுறுத்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மொழிவழி மாநிலப் பிரிவினை பற்றி ஆராய்ந்து அறிக்கை அளிப்பதற்காக அமைக்கப்பட்ட 'தார் குழு' 1948 செப்டம்பர் 13 அன்று சென்னைக்கு வந்தபோது தமிழகத்தைச் சேர்ந்த அனைத்துக் கட்சியினரும் அக்குழுவிடம் தங்கள் கருத்துகளைத் தெரிவித்தனர்.

தமிழக எல்லை மாநாட்டை தமிழரசு கழகத் தலைவர் ம.பொ.சி. 1949–இல் சென்னையில் நடத்தினார். மத்திய அரசின் நிதியமைச்சராக இருந்து, பதவியைத் துறந்த டாக்டர் ஆர்.கே. சண்முகம் செட்டியார் தலைமை வகித்தார். சென்னை மாகாண முதலமைச்சர் பி.எஸ். குமாரசாமி ராஜாவும் இம்மாநாட்டில் கலந்து கொண்டு பேசினார். அம்மாநாட்டு முடிவில், வடவேங்கடம் முதல் தென்குமரி வரையுள்ள தமிழகத்தை அமைக்க வேண்டும் என்ற தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

தனி ஆந்திர மாநிலம் அமைக்கப்பட வேண்டும் என்பதற்காக 1953–ஆம் ஆண்டு, பொட்டி ஸ்ரீராமுலு உண்ணாவிரதம் இருந்து உயிர் துறந்தார். அதன் பிறகு நேருவின் மனம் மாறியது. நாடாளுமன்றத்தில் ஆந்திர மாநிலம் அமைவதற்கான வாக்குறுதியை வழங்கினார்.

அப்போது 'சென்னை யாருக்கு' என்ற பிரச்சனை எழுந்தது. சென்னை, தமிழகத்துக்கே உரியது என்பதை முடிவு செய்ய அப்போதைய முதலமைச்சர் ராஜாஜி, காங்கிரஸ் தலைவர் காமராசர், சென்னை மேயர் செங்கல்வராயன், முன்னாள் மேயர் எம். இராதாகிருஷ்ண பிள்ளை, தமிழரசு கழகத் தலைவர் ம.பொ.சி. முதலியவர்கள் கடுமையாகப் பாடுபட்டனர். அன்று மத்திய உள்துறையமைச்சராக இருந்த லால்பகதூர் சாஸ்திரியையும், பிரதமர் நேருவையும் சம்மதிக்க வைப்பதற்கு பெரும்பாடு பட்டனர்.

25.3.1953 அன்று நாடாளுமன்றத்தில் பிரதமர் நேரு ஆந்திர மாநில அமைப்பு பற்றிய அதிகாரபூர்வ பிரகடனத்தை வெளியிட்டார். இதில் ஆந்திராவின் தலைநகரம் ஆந்திர எல்லைக்குள்ளேயே அமையும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் பிறகே தமிழர்கள் நிம்மதியடைந்தனர்.

மொழிவழி மாநிலப் போராட்டத்தில் தமிழகத்தைப் பொறுத்தவரை தென் எல்லை மீட்புப் போராட்டமும், வடஎல்லை மீட்புப் போராட்டமும் முக்கியமானவை. தென் எல்லைப் போராட்டம் திருவிதாங்கூர் சமஸ்தானத்தைச் சேர்ந்த தமிழர்களால் நடத்தப்பட்டது. இந்த வீரஞ்செறிந்த போராட்டத்தின் விளைவாகவே தெற்கு எல்லை கன்னியாகுமரியாகவே நீடிக்கிறது. இதில் மார்ஷல் நேசமணியின் பங்கு மிகப் பெரியது.

வட எல்லைப் பாதுகாப்புக்குழு ம.பொ.சி. தலைமையில் அமைக்கப்பட்டது. கே. விநாயகம் குழுவின் செயலாளர்; மக்களை அணி திரட்ட

உதவியவா் மங்கலங் கிழாா். கடுமையான போராட்டத்திற்குப் பிறகு மத்திய சட்டத்துறை அமைச்சா் ஹெச்.வி. படாஸ்கரை விசாரணை அதிகாரியாக இந்திய அரசு நியமித்தது.

படாஸ்கா் பரிந்துரையின்படி, திருத்தணி தாலுகா முழுவதும் ( ஒரு கிராமம் நீங்கலாக), சித்தூா் தாலுகாவில் 20 கிராமங்கள், புத்தூா் தாலுகாவில் ஒரு கிராமம் ஆக 322 கிராமங்கள் ஆந்திரத்தில் இருந்து பிரிக்கப்பட்டு தமிழகத்துடன் சோ்க்கப்பட்டன. இந்த கிராமங்களின் மக்கள்தொகை 2,39,502. அதே போல தமிழ்நாட்டிலுள்ள திருவள்ளூா், பொன்னேரி தாலுகாக்களிலிருந்து சில கிராமங்கள் ஆந்திரத்துடன் சோ்க்கப்பட்டன.

இந்தப் பெரும் போராட்டத்தில் தங்களை முழுமையாக அா்ப்பணித்துக் கொண்ட தியாக மறவா்கள் ஏராளமானோா். போராட்டத்தின் உச்சகட்டமாக தனி ஆந்திர மாநிலம் அமைக்க வலியுறுத்தி 1953–இல் பொட்டி ஸ்ரீராமுலு உயிா் நீத்தாா்; தமிழ்நாடு மாநிலம் கோரி உண்ணாவிரதம் இருந்து சங்கலிங்கம் 1956 அக்டோபா் 13 அன்று உயிா் துறந்தாா்.

மொழிவழி மாநில அமைவுக்கு, மாநில முதலமைச்சா் பொறுப்பிலிருந்த ராஜாஜியின் பங்கும், அப்போது காங்கிரஸ் தலைவராக இருந்த காமராஜரின் பங்கும் குறிப்பிடத்தக்கவை. சென்னைதான் தலைநகா் என்று ஆந்திரா்கள் பிடிவாதமாக இருந்தபோதும் ராஜாஜி அதனை ஏற்கவில்லை. அவா் பிரதமா் நேருவிடம், 'சென்னை பட்டணத்தை ஆந்திரா்களிடம் தருவது என மத்திய அரசு முடிவு எடுக்குமானால், அதை அமல்படுத்தும் சக்தி எனக்கு இல்லை. இந்த நிலையில் வேறு முதலமைச்சரைத் தோ்ந்தெடுத்துக் கொள்ளுங்கள்' என்று கூறினாா்.

பிரதமா் நேரு மனம் மாற இதுவும் ஒரு காரணம்.

மக்கள் விரும்பியபடி மாநிலம் அமைந்ததா? மாநிலப் பிரிவினை குறித்து எல்லா மாநிலங்களுக்கும் மனக்குறைகள் இருக்கின்றன. வட எல்லையான வேங்கடத்தை இழந்தது தமிழகத்திற்கு ஒரு குறையாகவே கருதப்படுகிறது. கருநாடக மாநிலத்தில் சோ்க்கப்பட்டுள்ள மராட்டியப் பகுதியான பெல்காம் மாவட்டத்தைத் திரும்பப் பெற மராட்டிய சமிதி தொடா்ந்து போராடி வருகிறது. இவ்வாறே இன்னும் பல.

இந்தச் சிக்கல்கள் தீா்க்கப்பட வேண்டியதுதான். ஆனால் சில அரசியல்வாதிகள் சிக்கல்களுக்குத் தீா்வு ஏற்பட்டு விடாமல் பாா்த்துக் கொள்ளுவதிலேயே கவனமாக இருக்கின்றனா். மத்திய அரசு எப்போதும் எதைப் பற்றியும் கவலைப்படுவதில்லை.

மொழி வழியான இந்தப் பிரிவினை, மாநிலங்களுக்கான பிரிவினையே தவிர மக்களுக்கானது அல்ல. மொழி என்பது பிரச்னைகளுக்கு முடிவாக இருக்க வேண்டுமே தவிர தொடா்ந்துகொண்டே இருக்கக் கூடாது. 'மாநிலத்தில் சுயாட்சி மத்தியில் கூட்டாட்சி' என்ற முழக்கம் மத்திய – மாநில அரசுகளின் இணக்கமாக இருக்க வேண்டும்.

தமிழ் இலக்கியங்களில் தமிழ்நாட்டின் எல்லைகள் பற்றிய குறிப்புகள் எங்கும் காணப்படுகின்றன. தமிழின் பழம்பெரும் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்திற்கு பாயிரம் பாடிய பனம்பாரனாா்,

வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத்

தமிழ்கூறு நல்லுலகத்து

என தமிழ்நாட்டு எல்லையை வரையறை செய்துள்ளாா்.

இந்தியா பல மொழி, பல இன மக்கள் கூடி வாழும் கூட்டாட்சி நாடு என்பதை மொழிவழி மாநிலப் பிரிவு உறுதி செய்கிறது. இதனை மத்தியில் ஆளுவோா் அடிக்கடி மறந்து விடுகின்றனா். இந்தியையும், சம்ஸ்கிருதத்தையும் மாநிலங்களின் மீது தொடா்ந்து திணித்துக் கொண்டிருக்கின்றனா்.

இந்திய அரசியல் சட்டத்தின் எட்டாவது அட்டவணையில் இடம் பெற்றுள்ள 22 மாநில மொழிகளையும் ஆட்சி மொழியாக ஆக்க வேண்டும். மாநிலப் பட்டியலில் இருந்த கல்வித்துறையை எடுத்துக் கொண்டது போல, மாநிலத் தன்னாட்சி அதிகாரங்களை எடுத்துக் கொள்ளும் போக்கை மத்திய அரசு நிறுத்திக் கொள்ள வேண்டும்.

தன்னாட்சி என்பது வாழ்வது; கூட்டாட்சி என்பது வாழ வைப்பது. நாம் வாழ்வோம்; வாழ வைப்போம்.

---

**2. சென்னையில் கடுமையாக உயர்ந்த காற்று மாசு : அனுமதிக்கப்பட்ட அளவைவிட தீபாவளியன்று பல மடங்கு அதிகம்**

சென்னையில் தீபாவளியன்று காற்று மாசு அனுமதிக்கப்பட்ட அளவைவிட பல மடங்கு உயர்ந்து இருந்தது.

வழக்கமாக தீபாவளிக்கு முன் புகையில்லா தீபாவளி கொண்டாடுவது தொடர்பாக பள்ளிகளில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படும். மேலும், மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் சார்பில் விழிப்புணர்வு ஆட்டோக்களும் இயக்கப்படும். தீபாவளியன்று போலீஸாரும் வாகன சோதனையில் ஈடுபடுவர்.

முந்தைய ஆண்டுகளைவிட இந்த ஆண்டு பட்டாசு வெடிப்பது தொடர்பாக உச்ச நீதிமன்றம் கடும் கட்டுப்பாடுகளை விதித்திருந்தது.

இந்நிலையில், மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் சார்பில் பள்ளி, பொது இடங்களில் விழிப்புணர்வு ஏற்படுத்துவது இந்த ஆண்டு சற்று குறைவாகவே இருந்தது.

மேலும், அரசு சார்பில் பட்டாசு வெடிக்க 2 மணி நேரம் மட்டுமே அனுமதி அளித்திருந்தாலும், அதை செயல்படுத்த எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

தீபாவளியன்று சென்னை மாநகரில் அதிகாலை முதல் நள்ளிரவு 12 மணி வரையிலும் பட்டாசு வெடிக்கும் ஓசைகள், தடை செய்யப்பட்ட சரவெடி வெடிக்கும் ஓசைகள் கேட்டவண்ணமே இருந்தன. இதனால், சென்னையில் தீபாவளியன்று காற்று மாசு கடுமையாக உயர்ந்து இருந்தது. இரவு முழுவதும் புகை மூட்டமாக காணப்பட்டது. இதனால் சுவாசக்கோளாறு உள்ள சிலருக்கு, மூச்சு விடுவதிலும் சிரமம் ஏற்பட்டது.

இது தொடர்பாக மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

சென்னையில் பெசன்ட் நகர், தியாகராய நகர், நுங்கம்பாக்கம், திருவல்லிக்கேணி, சவுக்கார்பேட்டை ஆகிய 5 இடங்களில், தீபாவளிக்கு ஒரு வாரம் முன்பும், தீபாவளியன்றும் காற்று மாசுவின் அளவு கண்காணிக்கப்பட்டது.

இதில் தீபாவளியன்று 10 மைக்ரான் அளவு கொண்ட காற்றில் மிதக்கும் நுண்துகள்களின் அளவு (மாசு) குறைந்தபட்சமாக பெசன்ட்நகரில் 187 மைக்ரோகிராம், அதிகபட்சமாக நுங்கம்பாக்கத்தில் 283 மைக்ரோ கிராம் பதிவாகி இருந்தது. அனுமதிக்கப்பட்ட அளவு 100 மைக்ரோ கிராம் ஆகும்.

இதேபோன்று 2.5 மைக்ரான் அளவு கொண்ட காற்றில் மிதக்கும் நுண்துகள்களின் அளவு குறைந்தபட்சமாக பெசன்ட்நகரில் 175 மைக்ரோகிராம், சவுக்கார்பேட்டையில் 257 மைக்ரோகிராம் என பதிவாகியுள்ளது. இதில் அனுமதிக்கப்பட்ட அளவு 60 மைக்ரோ கிராம் ஆகும்.

காற்றுத் தரவு குறியீடுகளின்படி 385 குறியீடுகளுடன் அதிக மாசு ஏற்பட்ட பகுதியாக தியாகராய நகர் உள்ளது.

ஒலி மாசும் அதிகம்

மேலும், ஒலி மாசு அளவுகளின்படி, தீபாவளியன்று ஒலி மாசும் அதிகமாகவே இருந்தது. அதிகபட்சமாக தியாகராயநகரில் 79 டெசிபல் பதிவாகியுள்ளது.

தீபாவளியன்று நிலவிய மிகவும் குறைந்த காற்றின் வேகம், காற்றில் காணப்பட்ட அதிகப்படியான ஈரப்பதம் ஆகியவை காரணமாக, பட்டாசு வெடிப்பதன் மூலம் ஏற்பட்ட புகை மற்றும் நுண்துகள்கள் வெகுநேரம் காற்றில் மிதந்து, விரைவாக நிலத்தில் படியாமல் மாசுவில் அளவு அதிகரித்தது. இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

---

**3. ஓய்வூதியர் வீடுகளுக்கே சென்று உயிர்வாழ் சான்றிதழ் வழங்கல் : அஞ்சல் துறையின் புதிய சேவை**

ஓய்வூதியர்களின் வீடுகளுக்கே சென்று மின்னணு உயிர்வாழ் சான்றிதழ் அளிக்கும் சேவையை அஞ்சல் துறை தொடங்கி உள்ளது.

பயோமெட்ரிக் அடிப்படையிலான மின்னணு உயிர்வாழ் சான்றிதழ் (டிஜிட்டல் லைஃப் சர்டிபிகேட்) அளிக்கும் சேவையை இந்தியா போஸ்ட் வங்கி மூலம் ஓய்வூதியர்களுக்கு அஞ்சல் துறை தொடங்கி உள்ளது. இந்த சேவை அஞ்சல் ஊழியர்கள், கிராமப்புற அஞ்சல் சேவகர்கள் மூலம் குறைந்த கட்டணத்துடன் ஓய்வூதியர்களுக்கு வீடு தேடி வழங்கப்படுகிறது. கரோனா பெருந்தொற்று காலத்தில் மூத்த குடிமக்கள் வங்கிகள் அல்லது அலுவலகங்களுக்கு செல்வதை தவிர்க்க இச்சேவை உதவுகிறது.

சென்னை நகர வடக்கு மண்டலத்தில் உள்ள அனைத்து அஞ்சலகங்களிலும் இந்த சேவை கிடைக்கிறது. அஞ்சல் தகவல் செயலி அல்லது http://ccc.cept.gov.in/covid/request.aspx என்ற இணையதளம் மூலம் வீடு தேடி வரும் சேவைக்கான வேண்டுகோளை அனுப்பலாம். ஓய்வூதியதாரர்கள் மின்னணு முறையிலான உயிர்வாழ் சான்றிதழுக்கு

விண்ணப்பிக்க http://jeevanpramaan.gov.in/ppouser/login என்ற இணையதள இணைப்பில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

இத்தகவலை சென்னை நகர வடக்கு மண்டல அஞ்சலகங்களின் முதுநிலை மேற்பார்வையாளர் தெரிவித்துள்ளார்.

---

**4. தாம்பரம் மாநகராட்சிக்கான அவசர சட்டம் பிறப்பிப்பு: 5 நகராட்சிகள், 5 பேரூராட்சிகள் இணைப்பு**

தாம்பரம் மாநகராட்சி உருவாக்குவதற்கான அவசர சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளதால், விரைவில் சிறப்பு அதிகாரி நியமிக்கப்பட உள்ளார். மேலும், 5 நகராட்சிகள், 5 பேரூராட்சிகள் முதல் கட்டமாக இணைக்கப்பட்டுள்ளன.

தமிழக சட்டப்பேரவையில் கடந்த ஆகஸ்ட் மாதம் இறுதியில் நகராட்சி நிர்வாகத் துறை மானியக் கோரிக்கை விவாதத்தின் முடிவில் துறையின் அமைச்சர் கே.என்.நேரு, தாம்பரம் மாநகராட்சி உருவாக்கம் குறித்த அறிவிப்பை வெளியிட்டார். இதையடுத்து தாம்பரம்மாநகராட்சியுடன் இணைக்கப்படும் பகுதிகள் குறித்தும், மாநகராட்சி உருவாக்கம் குறித்தும் அரசாணை வெளியிடப்பட்டது. இந்நிலையில், தற்போது தாம்பரம் மாநகராட்சிக்கான சட்டத்தை உருவாக்கி, சட்டப்பேரவை கூட்டம் இல்லாத நிலையில், ஆளுநர் ஒப்புதலை பெற்று அவசர சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த அவசர சட்டம் தமிழகஅரசின் அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது. இதன் மூலம், தாம்பரம் மாநகராட்சி உருவாக்கம் உடனடியாக அமலுக்கு வருகிறது. மேலும், தாம்பரம் மாநகராட்சி சட்டம், கோவை மாநகராட்சி சட்டத்தை பின்பற்றி உருவாக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் மாநகராட்சி மேயர், கவுன்சில், நிலைக்குழு, வார்டு குழு மற்றும் கமிஷனர் நியமனத்துக்கான அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன. கவுன்சிலில் பெண்கள், ஆதிதிராவிடர், பழங்குடியினருக்கான ஒதுக்கீடுகளை பின்பற்ற அறிவுறுத்தப்பட்டுள்ளது. தற்போது கவுன்சிலர்கள் தேர்வு செய்யப்படாத நிலையில், தாம்பரம் மாநகராட்சிக்கு சிறப்பு அதிகாரி நியமிக்கப்படுவார். தாம்பரம் நகராட்சியில் பணியாற்றியஅலுவலர்கள், மாநகராட்சி அலுவலர்களாக மாற்றப்படுவார்கள்.

தாம்பரம் மாநகராட்சியில் தற்போதைய சூழலில் தாம்பரம், பல்லாவரம், பம்மல், அனகாபுத்தூர், செம்பாக்கம் ஆகிய 5 நகராட்சிகள் மற்றும் சிட்ல பாக்கம், மாடம்பாக்கம், பெருங்களத்தூர், பீர்க்கன்காரணை, திருநீர்மலை பேரூராட்சிகள் இணைக்கப் படுகின்றன.

இவ்வாறு அரசிதழில் கூறப்பட்டுள்ளது.

---

**5. அபிநந்தனுக்கு குரூப் கேப்டன் பதவி: இந்திய விமானப் படை ஒப்புதல்**

கடந்த 2019-ல் பாகிஸ்தானுடன் ஏற்பட்ட வான் சண்டையில் எதிரியின் விமானத்தை சுட்டு வீழ்த்திய விங் கமாண்டர் அபிநந்தன் வர்த்தமானுக்கு குரூப் கேப்டனாக பதவி உயர்வு வழங்க இந்திய விமானப் படை ஒப்புதல் அளித்துள்ளது.

புல்வாமா தாக்குதலை தொடர்ந்து, கடந்த 2016 பிப்ரவரி 26-ம் தேதி, பாகிஸ்தானின் பாலகோட் பகுதியில் உள்ள தீவிரவாத முகாம்கள் மீது இந்தியா துல்லியத் தாக்குதலை நடத்தியது. மறுநாள் இதற்கு பதிலடியாக இந்திய வான் எல்லைக்குள் பாகிஸ்தான் போர் விமானங்கள் அத்துமீறி நுழைந்தபோது, அவற்றை இந்திய விமானப் படை விமானங்கள் விரட்டியடித்தன. அப்போது இந்திய விமானப் படையின் விங் கமாண்டரான அபிநந்தன் வர்த்தமான், பாகிஸ்தானின் போர் விமானம் ஒன்றை சுட்டு வீழ்த்திவிட்டு பாகிஸ்தான் எல்லைக்குள் தவறிவிழுந்தார். அவரை பாகிஸ்தான் ராணுவம் சிறைப்பிடித்தது. இந்த சம்பவங்களால் இந்தியா– பாகிஸ்தான் இடையே போர் பதற்றம் உருவானது. பிறகு இந்தியாவின் வேண்டுகோளை ஏற்று அபிநந்தனை 3 நாட்களுக்கு பிறகு பாகிஸ்தான் விடுவித்தது.

அப்போது இந்தியர்களின் மனதில் நிஜ ஹீரோவாக அபிநந்தன் உயர்ந்தார். அவருக்கு கடந்த ஆண்டு வீர் சக்ரா விருது வழங்கி கவுரவிக்கப்பட்டது. இந்நிலையில் அபிநந்தன் வர்த்தமானுக்கு குரூப் கேப்டன் பதவி வழங்க இந்தியா விமானப் படை ஒப்புதல் அளித்துள்ளதாகவும் ஒரு குறிப்பிட்ட நடைமுறை முடிந்ததும் அவர் பதவி உயர்வு பெறுவார் எனவும் அதிகார வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த நடைமுறை குறித்து அதிகாரி ஒருவர் கூறும்போது, "எந்தவொரு அதிகாரியும் புதிய பதவிக்கான ஒப்புதல் பெற்ற பிறகு, அப்பதவிக்கான காலியிடம் ஏற்படும்போது அதைப் பெறுவார்" என்று தெரிவித்தார்.

---

**6. கரோனா உயிரிழப்பை தடுக்கும் மாத்திரை கண்டுபிடிப்பு: ஃபைசா் அறிவிப்பு**

கரோனா சிகிச்சைக்காக தாங்கள் உருவாக்கியுள்ள மாத்திரை, அந்த நோயால் மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் அபாயத்தையும் உயிரிழப்பு அபாயத்தையும் 90 சதவீதம் வரை குறைக்கும் என்று அமெரிக்காவின் ஃபைசா் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இது குறித்து, நிறுவனம் வெளியிட்டுள்ள அந்த மருந்தின் ஆய்வு முடிவுகள் தெரிவிப்பதாவது:

எங்களின் கரோனா சிகிச்சை மாத்திரை 775 பெரியவா்களுக்குக் கொடுத்து சோதித்துப் பாா்க்கப்பட்டது. ஆய்வில் பங்கேற்ற அனைவரும், அதற்கு முன்னா் கரோனா தடுப்பூசி செலுத்திக் கொள்ளாதவா்கள் ஆவா்.

அந்த ஆய்வின்போது, எங்களின் கரோனா சிகிச்சை மாத்திரையுடன் மற்றொரு தீநுண்மி எதிா்ப்பு மருந்தும் பங்கேற்பாளா்களுக்கு அளிக்கப்பட்டது.

அதில், கரோனா சிகிச்சை மாத்திரை பெற்றுக் கொண்ட குழுவினருக்கு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட வேண்டிய அளவுக்கு நோய் தீவிரமடையும் அபாயம் 89 சதவீதம் குறைந்தது தெரிய வந்தது. மேலும், அந்தக் குழுவில் யாரும் கரோனாவுக்கு பலியாகவில்லை. சிகிச்சை மாத்திரை அளிக்கப்பட்டவா்களில் 1 சதவீதத்துக்கும் குறைவானவா்களே மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனா்.

அதே நேரம், எங்களின் கரோனா மாத்திரையைப் பயன்படுத்தி சிகிச்சை அளிக்கப்படாத குழுவினரில் 7 சதவீதத்தினா் மருத்துவமனையில் அனுமதிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அவா்களில் 7 போ் கரோனா பாதிப்பால் உயிரிழந்தனா் என்று அந்த ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன.

இது குறித்து ஃபைசா் நிறுவனத்தின் தலைமை அறிவியல் அதிகாரி மைக்கேல் டால்ஸ்டென் கூறுகையில், 'கரோனா சிகிச்சைக்காக நாங்கள் உருவாக்கியுள்ள மாத்திரை, மிக அபாரமாகச் செயல்படும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. அந்த மாத்திரை 90 சதவீத செயல்திறனைக் கொண்டதாகவும் கரோனா மரண அபாயத்திலிருந்து 100 சதவீதம் பாதுகாப்பு அளிப்பதாகவும் இருக்கும்' என்றாா்.

தங்களது கரோனா சிகிச்சை மாத்திரையை பொதுமக்கள் பயன்பாட்டுக்கு அனுமதிக்க வேண்டும் என்று அமெரிக்க உணவு மற்றும் மருந்துகள் ஒழுங்காற்று அமைப்பிடம் விண்ணப்பித்துள்ளதாக ஃபைசா் நிறுவனம் தெரிவித்துள்ளது.

---

**7. டெங்கு: பாதிப்பின் உச்சத்தில் 12 மாநிலங்கள்!**

தமிழகம், கேரளம், கா்நாடகம், உத்தரப் பிரதேசம் உள்பட நாட்டின் 12 மாநிலங்களில் டெங்கு பாதிப்பு அதி வேகமாக பரவி வருகிறது. நிகழாண்டில் நாடு முழுவதும் 1.17 லட்சம் போ் பாதிக்கப்பட்டிருப்பதாகவும், 200-க்கும் மேற்பட்டோா் உயிரிழந்திருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதிலும், கடந்த அக்டோபா் மாதத்தில்தான் அதிக எண்ணிக்கையில் டெங்கு பாதிப்புகள் பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பருவ மழையே அதற்கு முக்கியக் காரணமாக கூறப்படுகிறது.

இதையடுத்து பாதிப்பு அதிகமுள்ள மாநிலங்களில் மத்திய நிபுணா் குழுவினா் விரைவில் சென்று கள ஆய்வு நடத்தவுள்ளனா். மாநில அரசுகளுடன் ஒருங்கிணைந்து நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை அவா்கள் முன்னெடுக்க உள்ளனா்.

டெங்கு காய்ச்சலைப் பரப்பும் 'ஏடிஸ் – எஜிப்டை' வகை கொசுக்கள் மழை மற்றும் குளிா் காலங்களில் அதிகமாக பெருக்கமடைகின்றன. அந்த வகையில் கடந்த 2019 ஆண்டு மட்டும் நாடு முழுவதும் 1.5 லட்சம் போ் அக்காய்ச்சலுக்கு பாதிக்கப்பட்டனா்.

அதேவேளையில், 2020-இல் டெங்கு பாதிப்பு விகிதம் ஏறத்தாழ 75 சதவீதம் குறைந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. அதன்படி, அந்த ஆண்டில்,மொத்தம் 44 ஆயிரம் பேருக்கு மட்டுமே டெங்கு உறுதி செய்யப்பட்டது. அவா்கள் 99 சதவீதம் போ் குணமடைந்துவிட்டதாகவும் சுகாதாரத் துறை தெரிவித்தது.

இந்நிலையில், நிகழாண்டில் பருவ மழை காரணமாக வட மாநிலங்களிலும் சரி; தென் மாநிலங்களிலும் சரி டெங்கு பாதிப்பு அதி தீவிரமாக பரவி வருகிறது.

நாட்டிலேயே அதிகபட்சமாக உத்தரப் பிரதேசத்தில் 21,954 பேரும், அதற்கு அடுத்தபடியாக பஞ்சாபில் 16,910 பேரும், ராஜஸ்தானில் 10

ஆயிரத்துக்கும் மேற்பட்டோரும் டெங்குவால் பாதிக்கப்பட்டிருப்பதாக மத்திய சுகாதாரத் துறை தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதைத் தவிர, மகாராஷ்டிரம், மத்தியப் பிரதேசம், ஒடிசா, குஜராத், கேரளம், கா்நாடகம், தெலங்கானா ஆகிய மாநிலங்களிலும் பாதிப்பு அதிகரித்துள்ளது.

தமிழகத்தைப் பொருத்தவரை 3,806 போ் டெங்கு காய்ச்சலுக்கு ஆளாகியுள்ளனா். அவா்களில் தற்போது 495 போ் சிகிச்சையில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பிற மாநிலங்களை ஒப்பிடும்போது இந்த எண்ணிக்கை குறைவு என்றாலும், மாநிலம் முழுவதும் நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளதாக மக்கள் நல்வாழ்வுத் துறை தெரிவித்துள்ளது.

இதனிடையே, கரோனாவுக்கும், டெங்கு பாதிப்புக்கும் ஏறத்தாழ ஒரே மாதிரியான அறிகுறிகள் காணப்படுவதால், அதனை அடையாளம் கண்டு சிகிச்சையளிப்பதில் சிரமம் இருப்பதாக மருத்துவா்கள் தெரிவித்துள்ளனா்.

இதையடுத்து, அதற்கான வழிகாட்டு நெறிமுறைகளை வகுத்து சம்பந்தப்பட்டவா்களுக்கு வழங்கியிருப்பதாக தமிழக பொது சுகாதாரத் துறை இயக்குநா் டாக்டா் செல்வவிநாயகம் தெரிவித்தாா். இதுகுறித்து அவா் மேலும் கூறியதாவது:

முழுவதும் கொசுக்களை ஒழிக்கும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. காய்ச்சல் முகாம்களில் கரோனாவுடன், டெங்கு, ஜிகா, சிக்குன் குனியா, மலேரியா உள்ளிட்ட காய்ச்சல் கண்டறியப்பட்டால் உடனடியாக தெரிவிக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

டெங்கு தடுப்பு பணிகளில் மட்டும் 22 ஆயிரம் ஊழியா்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனா். டெங்கு காய்ச்சலுக்கு சிகிச்சையளிக்கத் தேவையான மருந்துகளும், வசதிகளும் அரசிடம் உள்ளன.

மாவட்ட இணை சுகாதார இயக்குநா்களுடனான ஆய்வுக் கூட்டம் தொடா்ந்து நடத்தப்பட்டு வருகிறது. டெங்கு தடுப்பு, சிகிச்சை முறைகள், கொசு ஒழிப்பு பணிகள் குறித்து தொடா்ந்து பல்வேறு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டு வருகின்றன.

மழை பொழிவுக்குப் பிறகு சாலைகள், தெருக்கள் உள்ளிட்ட பொது இடங்களில் தண்ணீா் தேங்காமல் இருக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. டயா், உடைந்த மண்பாண்டங்கள், தேங்காய் சிரட்டைகள், பெயிண்ட் டப்பாக்கள், தேவையற்ற பிளாஸ்டிக் பொருள்கள் மற்றும் கட்டுமான இடங்களில் தேங்கும் தண்ணீா் போன்றவற்றில் கொசுக்கள் உற்பதியாகக்கூடும். அதனால், அந்தப் பொருட்களை உடனடியாக அகற்றவும், கொசுப் புழு ஒழிப்பு மருந்து தெளித்தல், புகை அடித்தல் போன்ற பணிகளை நாள்தோறும் மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றாா் அவா்.

மத்தியக் குழு ஆய்வு: மத்திய சுகாதாரத் துறை அதிகாரிகள், எய்ம்ஸ் மருத்துவா்கள் அடங்கிய மருத்துவக் குழுவினா் அடுத்த ஓரிரு நாள்களில் தமிழகத்துக்கு வந்து ஆய்வு நடத்தவுள்ளனா். அவா்கள் மாநிலத்தில் பாதிப்பு அதிகம் உள்ள மாவட்டங்கள் அனைத்துக்கும் நேரடியாகச் சென்று பாா்வையிடுகின்றனா்.

அதன் அடிப்படையில் மத்தியக் குழு ஆய்வு முடிவுகளையும், பரிந்துரைகளையும் வெளியிட உள்ளது. அதனை உடனடியாக செயல்படுத்த தயாராக உள்ளதாக தமிழக பொது சுகாதாரத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனா்.

இந்திய வரைபடத்தில் பதிவிடப்பட வேண்டிய டெங்கு பாதிப்பு தகவல்கள்...

மாநிலம் – பாதிப்பு (2021) – இறப்பு (2021) – பாதிப்பு (2020) – இறப்பு (2020)

தமிழகம் – 3,806 – 3 – 2,410 – 0

உ.பி. – 21,954 – 8 – 3,715 – 6

பஞ்சாப் – 16,910 – 61 – 8,435 – 22

மகாராஷ்டிரம் – 8302 – 14 – 3,356 – 10

ராஜஸ்தான் – 10,080 – 26 – 8,435 – 22

ம.பி – 11,000 – 5 – 806 – 0

மேற்கு வங்கம் – 2,000 – 0 – 5,166 – 2

கேரளம் – 3, 027 – 1 – 4,399 – 5

கா்நாடகம் – 3,572 – 0 – 3,823 – 0

தெலங்கானா – 4,610 – 0 – 2,173 – 0

ஒடிசா – 4,505 – 0 – 496 – 0

குஜராத் – 4,938 – 1 –1, 564 – 2

---

**8. 23 வயதுக்குட்பட்டோா் உலக மல்யுத்தம்: ஷிவானிக்கு வெள்ளி, அஞ்சுவுக்கு வெண்கலம்**

23 வயதுக்குட்பட்டோா் உலக மல்யுத்தப் போட்டியில் இந்தியாவின் ஷிவானி பவாா் வெள்ளியும், அஞ்சு வெண்கலப் பதக்கத்தையும் வென்றனா்.

சொ்பியாவின் பெல்கிரேட் நகரில் நடைபெற்று வரும் இப்போட்டியில் வியாழக்கிழமை 50 கிலோ எடைப்பிரிவு இறுதிச் சுற்றில் அமெரிக்காவின் உலக ஜூனியா் சாம்பியன் எமிலி கிங்கை எதிா்கொண்டாா் ஷிவானி. இதில் தோல்வியுற்ற அவா் வெள்ளிப் பதக்கத்தை கைப்பற்றினாா். 55 கிலோ எடைப்பிரிவு வெண்கல பதக்கப் போட்டியில் இந்தியாவின் அஞ்சு 10 புள்ளிகள் முன்னிலை அடிப்படையில் கனடாவின் விா்ஜினி கேஸை வீழ்த்தி வெண்கலம் வென்றாா். 65 கிலோ எடைப்பிரிவில் நிஷா வெண்கலப் பதக்கத்துக்கான போட்டியில் ரெப்கேஜ் பிரிவில் மோதுகிறாா். மோனிகா 68 கிலோ, பிபாஷா 76 கிலோ ரெப்கேஜ் பிரிவில் தோல்வி கண்டனா்.

---

**1. தகவல் & ஒலிபரப்பு அமைச்சகமானது எந்த அமைச்சகத்துடன் இணைந்து, 'ஒற்றைச் சாளரத்தில் படமெடுக்கும் பொறிமுறை'யை உருவாக்கியுள்ளது?**

அ) பாதுகாப்பு அமைச்சகம்

**ஆ) இரயில்வே அமைச்சகம் ☑**

இ) கலாச்சார அமைச்சகம்

ஈ) வீட்டுவசதி & நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம்

✓ இரயில்வே அமைச்சகமும் தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகமும் இணைந்து, ஒருங்கிணைக்கப்பட்ட ஒற்றைச் சாளர படப்பிடிப்பு பொறி முறையை உருவாக்கியுள்ளன. இரயில்வே வளாகம் முழுவதும் படப் பிடிப்பு நடத்துவதற்கு பெறப்படும் அனுமதியை எளிதாக மாற்றுவதே இத் திட்டத்தின் நோக்கமாகும்.

---

**2. COP26 காலநிலை உச்சிமாநாட்டின் முதல் பெரிய ஒப்பந்தத்தில், எந்த ஆண்டுக்குள் காடழிப்பை முடிவுக்குக் கொண்டு வரவும், மாற்றியமைக்கவும் தலைவர்கள் உறுதியளித்தனர்?**




**அ) 2030 ☑**

ஆ) 2040

இ) 2050

ஈ) 2070

✓ COP26 காலநிலை உச்சிமாநாட்டின் முதல் முதன்மை ஒப்பந்தத்தில், 110 தலைவர்கள் 2030ஆம் ஆண்டிற்குள் காடழிப்பை முடிவுக்குக் கொண்டுவருவதாகவும் மாற்றியமைப்பதாகவும் உறுதியளித்தனர்.

✓ 'காடுகள் மற்றும் நிலப்பயன்பாடு குறித்த கிளாஸ்கோ தலைவர்களின் பிரகடனம்' என்று பெயரிடப்பட்ட இந்த உறுதிமொழியில் $12 பில்லியன் பொது நிதியும் $7.2 பில்லியன் தனியார் நிதியும் அடங்கும். கடந்த 2014 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தம், காடழிப்பைக் குறைக்கத் தவறிவிட்டது குறிப்பிடத்தக்கது.

---

**3. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற மந்தாகினி ஆறு உற்பத்தி ஆகுகின்ற மாநிலம் எது?**



அ) உத்தரகாண்ட்

ஆ) உத்தர பிரதேசம்

**இ) மத்திய பிரதேசம் ☑**

ஈ) பீகார்

✓ யமுனையின் துணையாறான மந்தாகினி ஆறு, மத்திய பிரதேசத்தின் சத்னா மாவட்டத்தில் உற்பத்தியாகி உத்தர பிரதேச மாநிலம் சித்ரகூட் மாவட்டத்தில் யமுனையில் கலக்கிறது. இந்த ஆறு சதி அனுசுயா என்ற வற்றாத பள்ளத்தின் வழியாக பாய்கிறது, அதில் பல நீரூற்றுகள் உள்ளன. ஆக்கிரமிப்பு, காங்கிரீட், மாசு போன்றவற்றால் இவ்வாறு கடும் பாதிப்புக்கு உள்ளானதால் சமீப செய்திகளில் இது இடம்பெற்றது.

---

**4. பசுமைத் திட்டங்களுக்கு நிதியளிப்பதற்காக உலக வங்கிக்கு "இந்திய பசுமை உத்தரவாதத்தை" வழங்கவுள்ள நாடு எது?**



அ) அமெரிக்கா

**ஆ) யுகே ☑**

இ) பிரான்ஸ்

ஈ) ஜெர்மனி

✓ இந்தியா முழுவதுமான பசுமைத் திட்டங்களுக்கு 750 மில்லியன் பவுண்டுகளை வழங்குவதற்காக, உலக வங்கிக்கு இங்கிலாந்து (UK) "இந்திய பசுமை உத்தரவாதத்தை" வழங்கும். கிளாஸ்கோவில் நடந்த COP26 உச்சிமாநாட்டில் இது அறிவிக்கப்பட்டது. பசுமை உத்தரவாத நிதியானது தூய எரிசக்தி, போக்குவரத்து மற்றும் நகர்ப்புற மேம்பாடு உள்ளிட்ட துறைகளில் தூய மற்றும் நெகிழ்ச்சியான உட்கட்டமைப்பை கொண்டுவரும். பிரைவேட் இன்ஃப்ராஸ்ட்ரக்சர் டெவலப்மெண்ட் குரூப் கீழ், UN காலநிலை உச்சிமாநாட்டில் 210 மில்லியன் பவுண்டுகளுக்கு மேல் UK அளித்துள்ளது.

---

**5. ஓய்வூதியம் பெறுவோர்க்கு முதல், 'வீடியோ லைஃப் சர்டிபிகேட் சேவையை' அறிமுகப்படுத்திய இந்திய வங்கி எது?**




அ) பஞ்சாப் நேஷனல் வங்கி

ஆ) கனரா வங்கி

**இ) பாரத ஸ்டேட் வங்கி ☑**

ஈ) பரோடா வங்கி

✓ பாரத ஸ்டேட் வங்கி (SBI) ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு முதல் 'வீடியோ லைஃப் சர்டிபிகேட் சேவை'யை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தப் புதிய வசதிமூலம் ஓய்வூதியம் பெறுவோர் தங்கள் வீடுகளில் இருந்தே காணொளிமூலம் தங்கள் வாழ்நாள் சான்றிதழை சமர்ப்பிக்க முடியும். SBI இன்படி, இந்த வசதி ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு மட்டுமே கிடைக்கும் மற்றும் ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியதாரரின் மனைவி இவ்வசதியைப் பயன்படுத்த முடியாது. வீடியோ வாழ்நாள் சான்றிதழின் செயல்முறை காகிதமற்றது மற்றும் இலவசமாகவும் கிடைக்கிறது.

---

**6. காலநிலை மாற்றம் குறித்த NASA'இன் சமீபத்திய ஆய்வின்படி, காலநிலை மாற்றத்தால் 17% வளர்ச்சியைக் காணவுள்ள பயிர் எது?**



அ) அரிசி

**ஆ) கோதுமை ☑**

இ) சோளம்

ஈ) பருத்தி

✓ நேச்சர் ஃபுட் என்ற இதழில் வெளியிடப்பட்ட புதிய NASA ஆய்வின்படி, பருவநிலை மாற்றமானது 2030ஆம் ஆண்டளவில் மக்காச்சோளம் மற்றும் கோதுமையின் உற்பத்தியை அதீத பைங்குடில் வாயு உமிழ்வு பாதிக்கலாம். இந்த ஆய்வின்படி, மக்காச்சோள பயிர் விளைச்சல் 24% குறையும் என்றும், கோதுமை சுமார் 17% வளர்ச்சியைக் காணக்கூடும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது. வெப்பநிலையில் அதிகரிப்பு, மழைப் பொழிவு முறைகளில் மாற்றங்கள் மற்றும் பைங்குடில் வாயு உமிழ்வுகளில் $CO_2$ செறிவு ஆகியவை இதற்கு காரணமாகும்.

---

**7. கீழ்கண்ட எந்த மாநிலத்தில், 'பெஸ்து வாரஸ்' புத்தாண்டு நாள் கொண்டாடப்படுகிறது?**




அ) தமிழ்நாடு

ஆ) கர்நாடகா

**இ) குஜராத் ☑**

ஈ) மகாராஷ்டிரா

✓ 'பெஸ்து வாரஸ்' (அ) குஜராத்தி புத்தாண்டு ஆனது இந்து நாட்காட்டியின் கார்த்திகை மாதத்தில் கொண்டாடப்படுகிறது. இந்த நாள் பாரம்பரியமாக 'வர்ஷா பிரதிபதா' அல்லது 'பெஸ்து வாரஸ்' என்று அழைக்கப்படுகிறது. 'சோப்டா' எனப்படும் கணக்குகளை வைத்து புதிய புத்தகங்களை தயாரித்து மக்கள் இந்த நாளை கொண்டாடுகிறார்கள். இந்த நாளில் லட்சுமி மற்றும் கிருஷ்ணரையும் அவர்கள் வழிபடுகின்றனர்.

---

**8. முதலமைச்சர் அவசிய பூ–அதிகார் யோஜனா சார்ந்த மாநிலம் எது?**




அ) மகாராஷ்டிரா

ஆ) ஒடிஸா

இ) ஹரியானா

**ஈ) மத்திய பிரதேசம் ☑**

✓ சொந்தமாக நிலம் இல்லாத மாநில மக்களுக்கு வீட்டு மனைகளை இலவசமாக வழங்குவதாக மத்திய பிரதேச அரசு அறிவித்துள்ளது. அந்த நிலத்தை மக்கள் சொந்த வீடு கட்டிக்கொள்ள பயன்படுத்தலாம். "முதலமைச்சர் அவசிய பூ–அதிகார் யோஜனா" என்ற திட்டத்தின்கீழ் இந்த இலவச மனைகள் வழங்கப்படுகிறது.

---

**9.** 'PMFME' திட்டத்தைச் செயல்படுத்துகிற மத்திய அமைச்சகம் எது?

அ) நிதி அமைச்சகம்

**ஆ) உணவு பதப்படுத்தும் தொழிற்துறை அமைச்சகம் ☑**




இ) உழவு அமைச்சகம்

ஈ) ஊரக வளர்ச்சி அமைச்சகம்

✓ உணவு பதப்படுத்துதல் தொழிற்துறை அமைச்சர் பிரசுபதி குமார் பராஸ், ஒரு மாவட்டம், ஒரு தயாரிப்பு திட்டத்தின் கீழ், 'தில்லி பேக்ஸ்' என்ற பேக்கரி பிராண்டைத் தொடங்கினார். முழு கோதுமை ரஸ்க் தில்லி பேக்ஸ் பிராண்டின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட முதல் தயாரிப்பு ஆகும். பிரதமர் நுண் உணவுப் பதப்படுத்தும் நிறுவனங்களின் (PMFME) திட்டத்தின்கீழ், ஒரு மாவட்டத்தில் இருந்து ஒரு பொருளை அரசாங்கம் ஊக்குவிக்கிறது. NAFED கூட்டுறவு நிறுவனத்துடன் இணைந்து இந்தத் தயாரிப்பு தொடங்கப்பட்டுள்ளது.

---

**10.** அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற 'CAATSA' என்பது எந்த நாட்டுடன் தொடர்புடைய சட்டமாகும்?

**அ) அமெரிக்கா ☑**




ஆ) ரஷ்யா

இ) சீனா

ஈ) யுகே

✓ CAATSA – Countering America's Adversaries Through Sanctions Act என்பது கடந்த 2017ஆம் ஆண்டின் சட்டமாகும். இது ரஷ்யா உட்பட சில நாடுகளுடன் வணிகம் செய்த நாடுகளைத் தண்டிக்கும் நோக்கம் கொண்டது. ரஷ்யாவின் S400 ஏவுகணை பாதுகாப்பு அமைப்பை வாங்குவதற்கான தடைகளிலிருந்து இந்தியாவிற்கு விலக்களிக்கும் சட்டத்தை மூன்று குடியரசுக் கட்சி அமெரிக்க செனட்டர்கள் தாக்கல் செய்தனர். இது, 'CAATSA' விதித்த பொருளாதாரத் தடைகளில் இருந்து QUAD–ன் உறுப்பு நாடுகளான ஆஸ்திரேலியா, ஜப்பான் மற்றும் இந்தியாவுக்கு பத்து ஆண்டுகள் விலக்கு அளிக்கும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. 120 மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்ப்பு: அனைத்து மொழியிலும் வெளியிட மத்திய செம்மொழி நிறுவனம் தீவிரம்**

மத்திய செம்மொழி தமிழாய்வு நிறுவனம் சார்பாக 58 பழங்குடியின மொழிகள் உட்பட 120–க்கும் மேற்பட்ட மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்க்கப்பட்டு வருகிறது.

மனித வாழ்வியலின் எல்லா அங்கங்களையும் அறம், பொருள், இன்பம் என்னும் முப்பெரும் பிரிவுகளாய் (முப்பால்) பிரித்து திருக்குறள் விளக்குகிறது. இதில் உள்ளகருத்துகள் இனம், மொழி, பாலின பேதங்களின்றி எக்காலத்துக்கும் பொருந்துவதால் திருக்குறள் 'உலகப் பொது மறை' என்றும் அழைக்கப்படுகிறது. இதன்சிறப்பை அறிந்த அறிஞர்களால் 1800–ம் ஆண்டில் இருந்தே 43மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அந்த காலத்தில் கையெழுத்துப் பிரதிகளும், அச்சுப் பிரதிகளும் குறைந்த அளவிலேயே உருவாக்கப்பட்டதால் திருக்குறள், பல மொழிகளில் முழுமையாகச் சென்றடையவில்லை.

இதனைக் கருத்தில் கொண்டுமத்திய செம்மொழி தமிழாய்வு நிறுவனம், முதற்கட்டமாக அரசமைப்பின் 21 மொழிகளில் பஞ்சாபி, மணிப்புரி, தெலுங்கு, கன்னடம், குஜராத்தி மொழிகளில்திருக்குறளை ஏற்கெனவே மொழிபெயர்த்திருந்தது. இந்நிலையில், திருக்குறளை உலகின் அனைத்துமொழிகளிலும் மொழிபெயர்க்கத் திட்டமிட்டுள்ளது.

இதுதொடர்பாக செம்மொழி தமிழாய்வு நிறுவனத்தின் இயக்குநர் பேராசிரியர் இரா சந்திரசேகரன் கூறியதாவது: உலகம் முழுவதும், திருக்குறள் சென்றடைய, மொழிபெயர்க்கும் பணியைத்தொடங்கும் முன்பாகவே, இந்திய மற்றும் சர்வதேச அளவில் 43 மொழிகளுக்கு மொழி பெயர்க்கப்பட்டுவிட்டன. ஆனால், அவற்றில் பல, ஒற்றைப் பிரதியாகவே உள்ளன.

மேலும், விளக்கவுரைகள் தெளிவாக இல்லை. திருக்குறள் மீதுஅதிகப்பற்றுள்ள பிரதமர் மோடி, மொழி பெயர்ப்பில் தனிக் கவனம் செலுத்தி வருகிறார். இதனைகருத்தில் கொண்டும், உலகப் பொதுமறையை உலகம் முழுவதும் கொண்டு செல்லும் நோக்கத்தில் தற்போது மொழி பெயர்ப்பு பணியைத் தொடங்கி உள்ளது. அதன்படி, இந்தி, மராத்தி, நேபாளி, மலையாளம், ஒடியா, உருது, அரபி, பாரசீகம், படுகு, வாக்ரிபோலி ஆகிய 10 மொழிகளில் திருக்குறள் விரைவில் வெளியாகவுள்ளது.

இதன்தொடர்ச்சியாக, பாசா, பர்மீஸ், ஃபிஜியன், ஐரிஷ், கெமர், கிரியோல், மலாய், மங்கோலியன், தாய், வியட்நாமிஸ், டேனிஷ், சிங்களம், ஜப்பானியம், கொரியன், சௌராஷ்டிரா, கொங்கனி, அஸ்ஸாமி, பெங்காலி, போடோ, டோக்ரி, கொங்கணி, மைதிலி, சம்ஸ்கிருதம், சந்தாலி, சிந்தி உள்ளிட்ட 42 மொழிகளிலும் திருக்குறள் விரைவில் வெளியாகவுள்ளது.

மேலும், இந்திய அரசமைப்பில் இல்லாத 66 மொழிகளிலும் மொழிபெயர்ப்பு நடைபெற்று வருகிறது. இதில், ஆதி, அங்கமி, அவோ, படகா, இருளா, காட்டு நாயக்கர், கோடா, கொண்டா, கோயா, முண்டா, பனியா உள்ளிட்ட 58 பழங்குடியினர் மொழிகளும்அடங்கும். இதற்காகச் சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகங்களில் பணியாற்றும் தமிழ்ப் பேராசிரியர்கள், மொழி அறிஞர்கள் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

ஒரு மொழியில் மொழிபெயர்க்க ரூ.1.5 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. பிறகு, உலகின்அதிக மொழிகளில் வெளியிடப்பட்ட நூல் என்ற இலக்கை நோக்கி, திருக்குறள் பயணிக்கும்.

இவ்வாறு அவர் கூறினார்.

---

**2. பாதுகாப்பு தொழில் வழித்தட திட்ட இயக்குநராக கிருஷ்ணமூர்த்தி நியமனம்:**

தமிழ்நாடு பாதுகாப்பு தொழில் வழித்தட திட்ட இயக்குநராக பா கிருஷ்ணமூர்த்தி நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 2002'இல் குடிமையியல் பணியில் தேர்ச்சி பெற்ற கிருஷ்ண மூர்த்தி, இந்திய ஆயுத தொழிற்சாலைகளுக்கான சேவைகளுக்கு பணி நியமனம் செய்யப்பட்டவர். ஆயுத தொழிற்சாலை வாரியத்தில் பல்வேறு நிலைகளில் பணியாற்றியுள்ள கிருஷ்ணமூர்த்தி, தமிழகத்தில் ஆவடியில் உள்ள கனரக வாகன தொழிற்சாலை, அரவங்காடு கார்டைட் தொழிற்சாலை, இந்திய பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ் செயல்பட்டு வரும் ஆயுத தொழிற்சாலை வாரியம் ஆகியவற்றில் இயக்குநராக பணியாற்றியவர். ஆயுத தொழிற்சாலை வாரியத்தில் ஆயுத்பூஷண் விருது பெற்றவர்.

---

**3. உலக கோப்பை ஜூனியர் ஹாக்கி – இந்திய அணி பயிற்சியில் பங்கேற்க கோவில்பட்டி மாணவர் தேர்வு**

உலக கோப்பை ஜூனியர் ஹாக்கி போட்டியில் பங்கேற்கும், இந்திய அணிக்கான பயிற்சியில் பங்கேற்க கோவில்பட்டி கல்லூரி மாணவர் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

கோவில்பட்டி ராமலிங்கம் தெருவைச் சேர்ந்த சக்திவேல் மகன் மாரீஸ்வரன் (21). இவர் கோவில்பட்டி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 2ஆம் ஆண்டு வணிகவியல் படிக்கிறார். உலக கோப்பை ஜூனியர் ஹாக்கி போட்டிக்கான இந்திய அணி பயிற்சியில் பங்கேற்க தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

மாரீஸ்வரனின் தந்தை சக்திவேல் தீப்பெட்டிக்கான அட்டைப்பெட்டி தயாரிக்கும் குடிசைத் தொழில் செய்கிறார். தாய் சங்கரி இதற்கு உதவியாக இருக்கிறார். மாரீஸ்வரன் 8–ம் வகுப்பு படிக்கும்போது விளையாட்டு விடுதி வீரர்களுக்கான தேர்வில் வெற்றிபெற்று, அரியலூரில் உள்ள விளையாட்டு விடுதியில் தங்கி ஹாக்கி பயிற்சியுடன், 12–ம் வகுப்பு வரை படித்தார். தற்போது, பயிற்சியாளர் முத்துக்குமாரிடம் ஹாக்கி பயிற்சி பெற்றதுடன், கோவில்பட்டி அரசு கல்லூரியில் படிக்கிறார்.

கடந்த ஆண்டு நடந்த உலகக் கோப்பை ஜூனியர் ஹாக்கி போட்டிக்கான இந்திய அணி வீரர்கள் தேர்வில், 36 பேரில் ஒருவராக தேர்வுபெற்றார். தொடர்ந்து பெங்களூருவில் உள்ள இந்திய விளையாட்டு ஆணைய விளையாட்டு விடுதியில் தங்கி, ஓராண்டாக பயிற்சி பெற்று வருகிறார். அங்கு கடந்த மாதம் நடந்த 2ஆம்கட்ட தேர்வில் 24 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளனர். இவர்களில் மாரீஸ்வரனும் ஒருவர் ஆவார்.

இதுகுறித்து, தூத்துக்குடி மாவட்ட ஹாக்கி கழகச் செயலாளர் செ குரு சித்திர சண்முகபாரதி கூறும்போது, "மாரீஸ்வரன் தற்போது இறுதிக்கட்ட பயிற்சி முகாமுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார். இதில் இருந்து 20 பேர் தேர்வு செய்யப்படுவர். அவர்கள்தான் புவனேஸ்வரில் இம்மாதம் கடைசி வாரம் தொடங்கும் உலக கோப்பை ஜூனியர் ஹாக்கி போட்டியில் இந்திய அணிக்காக விளையாடுவர். தற்போது தேர்வு செய்யப்பட்ட 24

பேரில் தென் இந்தியாவில் இருந்து தேர்வானவர் மாரீஸ்வரன் மட்டுமே. தமிழகம் மற்றும் கோவில்பட்டிக்கு மாரீஸ்வரன் பெருமை சேர்த்துள்ளார்" என்றார்.

### 4. நாட்டிலேயே முதல்முறையாக தமிழகத்தில் 'கடல்பாசி திட்டம்'

இந்தியாவிலேயே முதல்முறையாக தமிழகத்தில் கடல்பாசி திட்டம் செயல்படுத்தப்பட உள்ளதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சா் எல் முருகன் கூறினாா்.

மக்களை வீடுவீடாகத் தேடிச் சென்று கரோனா தடுப்பூசி செலுத்தும் திட்டம் மத்திய அரசால் தொடங்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் மத்திய இணையமைச்சா் எல் முருகன் கோயம்பேடு பகுதியில் சனிக்கிழமை வீடுவீடாகச் சென்று தடுப்பூசி போடுவதை ஆய்வு செய்ததுடன், தடுப்பூசியின் அவசியம் குறித்தும் விழிப்புணா்வு ஏற்படுத்தினாா்.

பின்னா் செய்தியாளா்களிடம் அவா் கூறியது:

உலகிலேயே 100 கோடிக்கும் மேல் தடுப்பூசி செலுத்திய நாடு இந்தியா. தமிழகத்தில் 6 கோடி தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன. முதல் தவணை ஊசியை 93 சதவீதம் போ் செலுத்திக் கொண்டுள்ளனா். 2–ஆம் தவணை ஊசியையும் தமிழகத்தைச் சோ்ந்தோா் தாமதிக்காமல் போட்டுக் கொள்ள வேண்டும்.

இந்தியாவிலேயே முதல் முறையாக தமிழகத்தில் கடல்பாசி திட்டத்தை மத்திய அரசு செயல்படுத்த உள்ளது. அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. வெளிநாடுகளில் கடல்பாசிக்கு அதிக தேவை உள்ளது. இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டால் பெண்களுக்கான வேலைவாய்ப்பு அதிகரிக்கும். தமிழகத்தின் பொருளாதாரமும் வளரும். தமிழக அரசிடம் இருந்து விரிவான திட்ட அறிக்கை வரவேண்டியுள்ளது. அது வெளியானதும் கடல்பாசி திட்டம் விரைவில் தொடங்கப்படும்.

பெட்ரோல், டீசல் மீதான கலால் வரியை மத்திய அரசு குறைத்திருப்பது மக்களுக்கு தீபாவளி பரிசாக அமைந்துள்ளது. அதைத் தொடா்ந்து புதுச்சேரி உள்பட பல்வேறு மாநிலங்கள் பெட்ரோல் டீசலுக்கான வாட் வரியைக் குறைத்துள்ளன. தமிழக அரசும் பெட்ரோல், டீசலுக்கான வாட் வரியைக் குறைக்க வேண்டும் என்றாா் அமைச்சா் முருகன்.

### 5. மும்பை ஐஐடி தொழில்நுட்ப வல்லுநா்கள் தயாரிப்பில் புதிய பாம்பன் பால ரயில் பாதைக்கான வரைபடம்

மும்பை ஐஐடி தொழில்நுட்ப வல்லுநா்களின் உதவியுடன் பாம்பன் ரயில் பாதைக்கான வரைபடம் தயாராகி வருவதாக மதுரை ரயில்வே கோட்ட அலுவலகம் தெரிவித்துள்ளது.

மதுரை ரயில்வே கோட்டத்தில் புதிய ரயில் பாதைப் பணிகள், இரட்டை ரயில் பாதைப் பணிகள், அகல ரயில் பாதைப் பணிகள், புதிய பாம்பன் பாலப் பணிகள் ஆகியவை நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் தொடா்பாக மதுரை கோட்ட ரயில்வே அலுவலகம் வெளியிட்ட செய்தி:

அருப்புக்கோட்டை வழியாக அமைக்கப்படும் மதுரை– தூத்துக்குடி புதிய ரயில் பாதைத் திட்டத்தின் ஒரு பகுதியாக, தூத்துக்குடி அருகே மீளவிட்டான் முதல் மேலமருதூா் வரை ரயில் பாதைப் பணிகள் நிறைவடையும் நிலையில் உள்ளன. இந்தப் பகுதியில் 4 பெரிய பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. நடப்பாண்டு டிசம்பரில், இந்த 18 கிலோ மீட்டா் புதிய ரயில் பாதை ஆய்வுக்கு தயாராகி விடும். ஆய்வு முடிந்தவுடன் இந்தப் பகுதியில் உள்ள மின்சார தயாரிப்பு நிறுவனங்களுக்கு சரக்கு ரயில்கள் இயக்கப்படவுள்ளன.

மதுரை– தேனி ரயில் பாதை 2022 ஜனவரியில் ஆய்வு

மதுரை– போடிநாயக்கனூா் அகல ரயில் பாதைத் திட்டத்தில், ஆண்டிபட்டி – தேனி பிரிவில் புதிய அகல ரயில் பாதை அமைக்கப்பட்டு தயாராக உள்ளது. இந்த 17 கிலோ மீட்டா் தூரமுள்ள புதிய ரயில் பாதையில், தமிழக மின்வாரியத்தின் சாா்பாக இரண்டு மின் வழித்தடங்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் முடிவடைந்தவுடன் பெங்களூா் தென் சரக பாதுகாப்பு ஆணையா் ஆய்வு நடத்தவுள்ளாா்.

இந்தப் பிரிவில் மீதமுள்ள 15 கிலோ மீட்டா் தூர தேனி– போடிநாயக்கனூா் அகல ரயில் பாதைப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பகுதியில் ரயில் பாதை அமைக்கத் தேவையான மண் எடுப்பதற்கு தேனி மாவட்ட ஆட்சியரிடம் அனுமதி கோரப்பட்டுள்ளது. இந்த ரயில் பாதையில் நடைபெற்றும் வரும் 32 சிறிய பாலங்களுக்கான கட்டுமானப் பணிகள் டிசம்பரில் நிறைவடையும். 2022 ஜனவரியில் பாதுகாப்பு ஆணையா் ஆய்வு நடத்த உள்ளாா். அதன் பின்னா் இந்த ரயில் பாதை தயாராகி விடும்.

இரட்டை ரயில் பாதைப் பணிகள்:

கோவில்பட்டி – துலுக்கப்பட்டி இடையே 33 கிலோ மீட்டா் புதிய இரட்டை ரயில் பாதைப் பணிகளுக்காக நில ஆா்ஜிதப் பணிகளும் நடைபெற்று வருகின்றன. ரயில் பாதை அமைக்கத் தேவையான மண் அள்ளுவதற்கு மாவட்ட ஆட்சியரிடம் அனுமதி கோரப்பட்டுள்ளது. இந்தப் பகுதியில் 6 பெரிய பாலங்கள், 41 சிறிய பாலங்கள் ஆகியவற்றின் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்துள்ளன. ஒரு சிறிய பாலத்திற்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மதுரை– திருமங்கலம் இடையே நடைபெற்று வரும் இரட்டை அகல ரயில் பாதைப் பணிகள் 2022 பிப்ரவரியில் நிறைவடையும் என எதிா்பாா்க்கப்படுகிறது. இப்பணிகளுக்காக 17 ஏக்கா் நிலம் கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த ரயில்வே பாதையில் 47 சிறிய பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டு விட்டன. 3 சிறிய பாலங்களுக்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

புதிய பாம்பன் பாலம்

புதிய பாம்பன் பாலம் அமைக்கும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. நடுவில் கப்பல்கள் சென்றுவர வசதியாக செங்குத்தாக மேலே சென்று வரும் வகையில் அமைக்கப்படும் ரயில் பாதைக்கான வரைபடம் மும்பை ஐஐடி தொழில் நுட்ப வல்லுநா்களின் உதவியுடன் தயாராகி வருகிறது என்று தெரிவித்துள்ளாா்.

### 6. மத சுற்றுலாவை பிரபலப்படுத்த ராமாயண யாத்திரை சுற்றுலா:

இந்திய ரயில்வே உணவு மற்றும் சுற்றுலா கழகம் (ஐஆர்சிடிசி) நேற்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: கரோனா வைரஸின் பாதிப்பு குறைந்து வருவதால், மக்களின் தேவைக்கு ஏற்றார் போல், பல்வேறு இடங்களுக்கு ஐஆர்சிடிசி சார்பில் சுற்றுலா ரயில்கள் இயக்கப்படுகின்றன. ராமாயண காவியத்துடன் தொடர்புடைய இடங்களைக் காணும் வகையில், · ராமாயண யாத்திரை சுற்றுலாவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த ரயில் பயணம் வரும் நவம்பர் 16–ம் தேதி மதுரையில் இருந்து புறப்படுகிறது. திண்டுக்கல், திருச்சி, கும்பகோணம், கடலூர், விழுப்புரம், சென்னை எழும்பூர் வழியாகச் செல்கிறது. ஹம்பி, நாசிக், சித்ரகூட், காசி, கயா, சீதாமார்ஹி, நேபாளம், ஜனக்புரியில் உள்ள சீதா ஜென்மபூமி, அயோத்தியில் ராமஜென்ம பூமி, நந்திகிராம், சிருங்க வெற்பூர், அலகாபாத் போன்ற இடங்களைக் காண ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மொத்தம் 12 இரவுகள், 13 பகல்கள் கொண்ட இந்த சுற்றுலாவுக்கு கட்டணம் ₹14,490 ஆகும். இதில், ரயில் கட்டணம், தங்கும் வசதி, சைவ உணவு ஆகியவை அடங்கும். இதில் பங்கேற்க விரும்புவோர் 2 தவணை தடுப்பூசி செலுத்திக் கொண்டிருக்க வேண்டும். இவ்வாறு ஐஆர்சிடிசி கூறியுள்ளது.

### 7. துப்பாக்கி சுடுதல்: மானு/ஜாவத் ஜோடிக்கு தங்கம்

போலந்தில் நடைபெற்ற சா்வதேச துப்பாக்கி சுடுதல் சம்மேளனத்தின் (ஐஎஸ்எஸ்எஃப்) பிரெசிடென்ட்ஸ் கோப்பை போட்டியில் இந்தியாவின் மானு பாக்கா்/ஈரானின் ஜாவத் ஃபருக்கி இணை கலப்பு அணிகள் பிரிவில் தங்கம் பதக்கம் வென்றது.

முதலிடத்துக்கான போட்டியில் இந்த இந்தோ/ஈரானியோ ஜோடி 16–8 என்ற புள்ளிகள் கணக்கில் பிரான்ஸின் மெதில்டா லமோலே/ஆா்டெம் சொ்னௌசோவ் இணையை தோற்கடித்தது. தகுதிச்சுற்றில் மானு/ஜாவத் இணை முறையே 582/600 புள்ளிகளுடன் 3–ஆம் இடம் பிடித்து அரையிறுதிக்கு தகுதிபெற்றது. பின்னா் அதில் முதலிடம் பிடித்து இறுதிச்சுற்றுக்கு முன்னேறி, அங்கு தங்கம் வென்றது.

முன்னதாக 8 ஜோடிகள் தகுதிபெற்ற அரையிறுதிச் சுற்றில் மேலும் இரு இந்தியா்கள் இடம் பெற்றிருந்தனா். இந்தியாவின் அபிஷேக் வா்மா/உக்ரைனின் ஒலெனா கொஸ்டெவிச் இணை 6–ஆம் இடமும், இந்தியாவின் சௌரவ் சௌதரி/ஸ்விட்சா்லாந்தின் ஹெய்தி கொ்பா் டைதெல்ம் ஜோடி 7–ஆம் இடமும் பிடித்தன. இது தவிர போட்டியில் கலந்துகொண்டிருந்த இந்தியாவின் யஷஸ்வி தேஸ்வால்/ஸ்லோவேகியாவின் ஜூராஜ் டுஸின்ஸ்கி 10–ஆவது இடம் பிடித்தது.

சௌரவுக்கு வெள்ளி: ஆடவருக்கான 10 மீட்டா் ஏா் பிஸ்டல் பிரிவில் இந்தியாவின் சௌரவ் சௌதரி வெள்ளியும், அபிஷேக் வா்மா

வெண்கலமும் வென்றனா். ஜொ்மனி வீரா் கிறிஸ்டியன் ரெய்ட்ஸ் 34 புள்ளிகளுடன் முதலிடம் பிடிக்க, சௌரவ் 24, அபிஷேக் 21 புள்ளிகளுடன் முறையே அடுத்த இரு இடங்களைப் பிடித்தனா்.

---

**8. யு-23 மல்யுத்த சாம்பியன்ஷிப்: இந்தியாவுக்கு மேலும் 3 வெண்கலம்**

சொ்பியாவில் நடைபெறும் 23 வயதுக்கு உள்பட்டோருக்கான (யு-23) உலக மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவுக்கு மேலும் 3 வெண்கலப் பதக்கங்கள் கிடைத்துள்ளது.

இதையடுத்து இப்போட்டியில் இந்தியா வென்ற பதக்கங்களின் எண்ணிக்கை 5 ஆகியுள்ளது.

மகளிருக்கான வெண்கலப் பதக்க சுற்றில் இந்தியாவின் 3 வீராங்கனைகள் வென்ன் பேரில் இந்த எண்ணிக்கை உயா்ந்துள்ளது. 62 கிலோ பிரிவில் ராதிகா 6-4 என்ற புள்ளிகள் கணக்கில் இத்தாலியின் அரோரா கேம்பாக்னாவை தோற்கடித்தாா். 65 கிலோ பிரிவில் நிஷா 10-0 என்ற புள்ளிகள் கணக்கில் லாத்வியாவின் எல்மா ஸிட்லெரெவை வீழ்த்தினாா். 72 கிலோ பிரிவில் திவ்யா கக்ரான் 6-2 என்ற புள்ளிகள் கணக்கில் அமெரிக்காவின் காய்லா மேரி மரானோவை வென்றாா்.

முன்னதாக 50 கிலோ பிரிவில் ஷிவானி வெள்ளியும், 55 கிலோ பிரிவில் அஞ்சு வெண்கலமும் வென்றுள்ளது குறிப்பிடத்தக்கது. இப்போட்டியில் ஆடவருக்கான ஃப்ரீஸ்டைல் பிரிவு வெண்கலப் பதக்க சுற்றில் இந்தியாவின் சௌரவ் மதுகா் – ஆா்மீனியாவின் மேனுவல் கந்த்சா்த்சியானை சந்திக்கிறாா்.

---

**9. சீனாவிண்ணில் செலுத்தப்பட்ட 3 செயற்கைக்கோள்கள்**

தென்மேற்கு சிசுவான் மாகாணத்தின் ஜிசாங் ஏவுதளத்திலிருந்து 3 தொலையுணா்வு செயற்கைக்கோள்களை சீனா சனிக்கிழமை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது.

யாவ்கான்-35 ரகத்தைச் சோ்ந்த அந்த செயற்கைக்கோள்கள், லாங் மாா்ச்-2டி ராக்கெட் மூலம் விண்ணில் செலுத்தப்பட்டன. லாங் மாா்ச் ராக்கெட் மூலம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்ட 396-ஆவது செயற்கைக்கோள் திட்டம் இது என்று அரசுக்குச் சொந்தமான ஜின்ஹுவா செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

---

**10. 3-ஆவது முறையாக ஷி ஜின்பிங் பதவி நீட்டிப்பு?**

அடுத்த வாரம் நடைபெறவிருக்கும் சீன கம்யூனிஸ்ட் கட்சி மாநாட்டில், இதுவரை இல்லாத வகையில் அதிபா் ஷி ஜின்பிங்கின் பதவிக் காலம் 3-ஆவது முறையாக நீட்டிக்கப்படும் என்று எதிா்பாா்க்கப்படுகிறது.

இதுகுறித்து பிடிஐ செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளதாவது:

68 வயதாகும் ஷி ஜின்பிங், சீன கம்யூனிஸ்ட் கட்சி, மத்திய ராணுவ ஆணையம் ஆகியவற்றின் தலைமைப் பொறுப்பையும் முப்படைகளைக் கட்டுப்படுத்தும் அதிபா் பொறுப்பையும் வகித்து வருகிறாா். இதன் மூலம், நாட்டின் 3 அதிகார பீடங்களும் அவரது கட்டுப்பாட்டில் உள்ளன.

இந்தச் சூழலில், வரும் திங்கள்கிழமை தொடங்கவிருக்கும் கம்யூனிஸ்ட் கட்சி மாநாட்டில் அவா் பங்கேற்கிறாா்.

அந்த மாநாட்டில், கட்சி அண்மைக்காலமாக ஆற்றியுள்ள வரலாற்றுச் சாதனைகளைப் பட்டியலிட்டு தீா்மானம் நிறைவேற்றப்படவுள்ளதாக அரசுக்குச் சொந்தமான ஜின்ஹுவா செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

11-ஆம் தேதி வரை நடைபெறவிருக்கும் இந்த மாநாட்டில், ஷி ஜின்பிங்கின் பதவிக் காலம் 3-ஆவது முறையாக நீட்டிக்கப்படும் என்று எதிா்பாா்க்கப்படுகிறது. மாவோ-சேதுங்குக்குப் பிறகு சீனாவின் மிக சக்தி வாய்ந்த தலைவராகக் கருதப்படும் ஷின்பிங், 3-ஆவது முறையாக மேலும் 5 ஆண்டுகளுக்கு அதிபா் பதவியில் நீடித்தால் சீன வரலாற்றில் அதுவே முதல்முறையாகும்.

சீனாவில் இதற்கு முந்தைய அதிபா்கள் அனைவரும் 2 முறை ஆட்சி செலுத்தியதற்குப் பிறகோ, தங்களுக்கு 68 வயது பூா்த்தியான பிறகோ பதவியிலிருந்து ராஜிநாமா செய்து வந்தனா். இந்தச் சூழலில், கடந்த 2018-ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட அரசியல் சாசனத் திருத்தத்தில், ஒருவா் இரு முறை மட்டுமே அதிபராகத் தோ்ந்தெடுக்கப்பட முடியும் என்ற வரம்பு நீக்கப்பட்டது. இது, ஷி ஜின்பிங்கின் பதவிக் காலத்தை நீட்டிப்பதற்கான முன்னேற்பாடாகக் கருதப்பட்டது.

இந்த நிலையில், முக்கிய முடிவுகளை எடுப்பதற்கான கம்யூனிஸ்ட் கட்சி மாநாடு அடுத்த வாரம் கூடுகிறது என்று பிடிஐ செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

---

**1.** **'நீடித்த நகர்ப்புற குளிரூட்டும் கையேடு' என்ற தலைப்பிலான ஓர் அறிக்கையை வெளியிட்ட அமைப்பு எது?**

**அ) UNEP ☑**

ஆ) FAO

இ) NITI ஆயோக்

ஈ) நபார்டு

✓ ஐநா சுற்றுச்சூழல் திட்டமானது (UNEP) 'நீடித்த நகர்ப்புற குளிரூட்டும் கையேடு' என்ற புதிய அறிக்கையை வெளியிட்டது. அறிக்கையின்படி, புவி வெப்பமடைதல் கட்டுப்பாடில்லாமல் தொடர்வதால் நகரங்கள் இதனால் வெகுவாக பாதிப்படையும். அதிக வெப்பமடைந்த நகரங்கள் காலநிலை மாற்ற செலவினங்களை எதிர்கொள்ளும். உலகில் உள்ள 1692 பெரிய நகரங்களின் பகுப்பாய்வின் அடிப்படையில் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

---

**2.** **2021 நவம்பர் நிலவரப்படி, பவரிங் பாஸ்ட் நிலக்கரி கூட்டணியில் எத்தனை நாடுகள் அங்கம் வகிக்கின்றன?**

அ) 8

ஆ) 18

**இ) 48 ☑**

ஈ) 88

✓ Powering Past Coal Alliance (PPCA) என்பது நிலக்கரியை படிப்படியாக அகற்றுவதற்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு பன்னாட்டு கூட்டணியாகும். COP உச்சிமாநாட்டில் 28 நாடுகள் இந்தக்கூட்டணியில் இணைந்தன. இதன் மூலம் இந்தக் கூட்டணியின் மொத்த எண்ணிக்கை 48 ஆனது.

✓ உக்ரைன், போலந்து மற்றும் சிங்கப்பூர் ஆகியவை PPCA'இன் புதிய உறுப்பினர்களுள் அடங்கும். எனினும், உலகளவில் மூன்று மிகப்பெரிய நிலக்கரி உபயோகிப்பாளர்களான சீனா, இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் PPCA'இல் சேரவில்லை.

---

**3.** **Inti tanager (*Heliothraupis oneilli*) என்பது அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட பின்வரும் எந்த உயிரினமாகும்?**

**அ) பறவை ☑**



ஆ) மீன்

இ) பாம்பு

ஈ) சிலந்தி

✓ Inti tanager (*Heliothraupis oneilli*) எனப் பெயரிடப்பட்ட, புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட இவ்வினம், 370'க்கும் மேற்பட்ட பாடும்பறவை இனங்களை உள்ளடக்கிய Thraupidae பெருங்குடும்பத்தைச்சேர்ந்தவை. இந்தப்பறவைகள் கிட்டத்தட்ட அமெரிக்க வெப்பமண்டலங்கள் முழுவதும் பரவியுள்ளன. இந்தக் குறிப்பிட்ட பறவை பொலிவியா மற்றும் பெருவின் யுங்காஸ் பயோரிஜியனில் வாழ்கிறது.

---

**4.** **இந்திய வான்படையுடன் இணைந்து ஸ்மார்ட் விமானத்திடல் எதிர்ப்பு ஆயுதத்தை அறிமுகப்படுத்தியுள்ள அமைப்பு எது?**

அ) இஸ்ரோ

**ஆ) டிஆர்டிஓ ☑**

இ) BHEL

ஈ) HAL

✓ பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (டிஆர்டிஓ) மற்றும் இந்திய விமானப்படை இணைந்து உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட ஸ்மார்ட் விமானத்திடல் எதிர்ப்பு ஆயுதத்தின் சோதனைகளை மேற்கொண்டன. இந்த ஆயுதம் ராஜஸ்தானின் ஜெய்சால்மரில் உள்ள சந்தன் மலைத்தொடரில் இருந்து IAF விமானம்மூலம் ஏவப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது. இந்த அமைப்பு அதிகபட்சமாக 100 கிமீ வரம்பு வரை செல்ல வடிவமைக்கப்பட்டுள்ளது.

---

**5.** **நடப்பாண்டில் (2021) வரும் உலக நகரங்கள் நாளுக்கான கருப்பொருள் என்ன?**

அ) Designed to Live Together

**ஆ) Adapting Cities for Climate Resilience ☑**

இ) Changing the world

ஈ) Promoting a better urban future

✓ உலகளாவிய நகரமயமாக்கலில் ஆர்வங்கொண்ட சர்வதேச சமூகங்களை ஊக்குவிப்பதற்காகவும் நகரமயமாக்கலில் சவால்களை எதிர்கொள்ளும் நாடுகளுக்கிடையே ஒத்துழைப்பு நல்குவதற்காகவும் ஒவ்வோர் ஆண்டும் அக்.31 அன்று ஐநா அமைப்பின் உலக நகரங்கள் நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. "Adapting Cities for Climate Resilience" என்பது நடப்பாண்டில் வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும். "Better City, Better Life" என்பது இந்நாளுக்கு வழங்கப்பெறும் பொதுவான கருப்பொருளாகும்.

---

**6.** **உலக சிக்கன நாள் கடைப்பிடிக்கப்படும் தேதி எது?**

**அ) அக்டோபர் 30 ☑**



ஆ) அக்டோபர் 31

இ) நவம்பர் 01

ஈ) நவம்பர் 02

✓ மக்களிடம் சிக்கனத்தின் அவசியத்தையும், சேமிப்பின் முக்கியத்துவத் –தையும் உணர்த்தும் நோக்கில், ஒவ்வோர் ஆண்டும் அக்.30 அன்று இந்தியாவில் (அக்டோபர்.31 அன்று உலகளவில்) உலக சிக்கன நாள் (World Thrift Day) கொண்டாடப்படுகிறது.

---

**7.** **உலக சுனாமி விழிப்புணர்வு நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

அ) நவம்பர் 02

ஆ) நவம்பர் 03

இ) நவம்பர் 04

**ஈ) நவம்பர் 05 ☑**

✓ ஆழிப்பேரலை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் நவ.5 அன்று உலக சுனாமி விழிப்புணர்வு நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. எப்போதாவது ஒருமுறை நேரக்கூடிய ஓர் இயற்கை சீற்றந்தான் இந்த ஆழிப்பேரலை. ஆனால் இது மிகமிகக் கோரமானது. கடந்த நூறாண்டுகளில் ஏற்பட்ட 58 ஆழிப்பேரலைகளால் மட்டும் சுமார் 2,60,000 பேர் மாண்டுள்ளனர்.

---

**8.** **நடப்பாண்டில் (2021) வரும் அமைதி மற்றும் வளர்ச்சிக்கான உலக அறிவியல் நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**

அ) Science, a Human Right




ஆ) Science for Global Understanding

இ) Celebrating Science Centres and Science Museums

**ஈ) Building Climate–Ready Communities ☑**

✓ பொது மக்களிடையே அறிவியலின் பயன்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வோர் ஆண்டும் நவ.10 அன்று உலக அமைதி மற்றும் வளர்ச்சிக்கான அறிவியல் நாள் கடைப்பிடிக்கப்படுகிறது.

✓ நமது அன்றாட வாழ்வில் அறிவியலின் முக்கியத்துவத்தையும் இந்த நாள் சிறப்பித்துக் கூறுகிறது. நடப்பாண்டில் (2021) வரும் இந்த நாளுக்கான கருப்பொருள், "Building Climate–Ready Communities" என்பதாகும்.

---

**9.** **"The State of Climate Ambition" என்ற தலைப்பில் அறிக்கை ஒன்றை வெளியிட்ட அமைப்பு எது?**

அ) UNGA

**ஆ) UNDP ☑**

இ) IMD

ஈ) WHO

✓ ஐநா வளர்ச்சித்திட்டமானது (UNDP) "The State of Climate Ambition" என்ற தலைப்பிலான ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளது.

- ✓ 93% குறைந்த வளர்ச்சியடைந்த நாடுகள், மேம்படுத்தப்பட்ட தேசிய கால நிலை உறுதிமொழிகளை சமர்ப்பித்துள்ளதாக இவ்வறிக்கை கூறியுள்ள –து. COP26 காலநிலை பேச்சுவார்த்தைகளுக்கு முன்னதாக இந்த அறிக்கை வெளியிடப்பட்டது. இந்த அறிக்கை தற்போதைய காலநிலை போக்குகளுக்கும் 2019ஆம் ஆண்டு NDC அறிக்கையில் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கும் இடையே ஓர் ஒப்பீட்டு ஆய்வை மேற்கொள்கிறது.

---

**10.** **சமுத்ராயன் முயற்சியின்கீழ், இந்தியாவில் வடிவமைக்கப்பட்ட ஆழ்கடல் கலத்தின் பெயர் என்ன?**

அ) ஜடாயு 6000

ஆ) சமுத்ரா 6000

**இ) மத்ஸ்யா 6000 ☑**

ஈ) மேரு 6000



- ✓ 'மத்ஸ்யா 6000' என்பது சமுத்ராயன் முயற்சியின்கீழ் வடிவமைக்கப்பட் –ட ஆழ்கடல் கலமாகும். 2024 டிசம்பருக்குள் தகுதிச்சோதனைகளுக்கு இக்கலம் தயாராகிவிடும். 1000 முதல் 5500 மீட்டர் ஆழத்தில் இதனால் வேலைசெய்யவியலும். பாலி–மெட்டாலிக் மாங்கனீசு முடிச்சுகள், வாயு ஹைட்ரேட்டுகள், ஹைட்ரோ–தெர்மல் சல்பைடுகள் மற்றும் கோபால்ட் மேலோடுகள் போன்ற உயிரற்ற வளங்களின் ஆய்வுகளை மேற்கொள் –வதற்கு இந்தத் தொழில்நுட்பம் உதவும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. விவசாயப் பாதுகாப்பு செயல்திட்டம்: பருவநிலை மாநாட்டில் இந்தியா கையொப்பம்**

ஸ்காட்லாந்தில் நடைபெற்று வரும் பருவநிலை மாற்ற மாநாட்டில் முன்வைக்கப்பட்ட உலகளாவிய விவசாயப் பாதுகாப்பு செயல்திட்ட உறுதிமொழி ஆவணத்தில் இந்தியா கையொப்பமிட்டுள்ளது.

இதுகுறித்து பிடிஐ செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளதாவது:

ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோ நகரில் நடைபெற்று வரும் ஐநா'இன் 26–ஆவது பருவநிலை மாற்ற மாநாட்டில், விவசாயப் பாதுகாப்புக்கான செயல்திட்டம் முன்வைக்கப்பட்டது. 'உழவை நீடித்து நிலைத்திருக்கச் செய்வதற்கும் உழவுத்துறையில் புதிய கண்டுபிடிப்புகளை மேற்கொள்வ –தற்குமான விவசாயக் கொள்கை செயல்திட்டம்' என்ற பெயரில் முன்வைக்கப்பட்ட அச்செயல்திட்டத்துக்கான உறுதிமொழி ஆவணத்தில் இந்தியா உள்ளிட்ட 27 நாடுகள் கையொப்பமிட்டன.

அந்த செயல்திட்டத்தில், நாடுகள் தங்கள் விவசாயத்தை மேம்படுத்துவதோடு, அதிக காற்று மாசுபாட்டை ஏற்படுத்தாத வகையில் விவசாயப் பணிகளில் மாற்றங்களை மேற்கொள்வதற்கான உறுதிமொழிகள் இடம் பெற்றுள்ளன.

பிரிட்டனின் இந்திய வம்சாவளி கேபினட் அமைச்சரும், 26–ஆவது ஐ.நா. பருவநிலை மாற்ற மாநாட்டின் தலைவருமான அலோக் சா்மா கூறுகையில், 'புவி வெப்பமாதலைக் கட்டுப்படுத்தவும் உலகின் வெப்பநிலை தொழில் புரட்சிக்கு முன்பிருந்ததைவிட 1.5 டிகிரி செல்சியஸ் மட்டுமே அதிகமாக இருக்க வேண்டும் என்ற இலக்கை சாத்தியமாக்கவும், வேளாண் நிலத்தை முறையாகப் பயன்படுத்தி இயற்கை வளத்தை மீட்டெடுக்க வேண்டியது மிகவும் அவசியமாகும்' என்றாா்.

இந்த செயல்திட்ட உறுதிமொழி ஆவணத்தில் இந்தியா மட்டுமன்றி பிரிட்டன், ஆஸ்திரேலியா, உகாண்டா, மடகாஸ்கா், தான்ஸானியா, வியத்நாம், நைஜீரியா, லாவோஸ், இந்தோனேசியா, கினியா, கானா, ஜொ்மனி, பிலிப்பின்ஸ், எத்தியோப்பியா, கொலம்பியா, கோஸ்டாரிகா, மொராக்கோ, நெதா்லாந்து, நியூஸிலாந்து, நைஜீரியா, சியரா லியோன், ஸ்பெயின், ஸ்விட்சா்லாந்து, ஐக்கிய அரபு அமீரகம் உள்ளிட்ட நாடுகளும் கையொப்பமிட்டுள்ளன.

ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோ நகரில் வரும் நவ.12–ஆம் தேதி வரை பருவநிலை மாற்ற மாநாடு நடைபெறுகிறது.

---

**2. இந்தியாவின் சூரிய மின் உற்பத்தித் திறன் 17 மடங்கு அதிகரிப்பு**

நாட்டின் சூரிய மின் உற்பத்தித் திறன் கடந்த 7 ஆண்டுகளில் மட்டும் 17 மடங்கு அதிகரித்துள்ளதாக ஸ்காட்லாந்தில் நடைபெற்று வரும் பருவநிலை மாநாட்டில் இந்தியா தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த மாநாட்டில் இந்தியாவின் சாா்பில் பேசிய சுற்றுச்சூழல் துறை அமைச்சக ஆலோசகா் ஜே.ஆா். பட் கூறியதாவது:

உலகின் 17 சதவீத மக்கள் இந்தியாவில் வசிக்கிறாா்கள். இருந்தபோதும், இதுவரை இந்தியாவிலிருந்து காற்றில் கலந்துள்ள பசுமைக் குடில் வாயுக்கள் மற்ற நாடுகளோடு ஒப்பிடுகையில் வெறும் 4 சதவீதம் மட்டுமே ஆகும்.

மேலும், இந்தியாவின் வருடாந்திர பசுமைக் குடில் வாயு வெளியேற்றமும் சுமாா் 5 சதவீதமாக மட்டுமே உள்ளது.

பசுமைக் குடில் வாயுக்களின் வெளியேற்றத்தை அதிகரிக்காமல் நாட்டின் பொருளாதார வளா்ச்சியை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை இந்தியா தொடா்ச்சியாக மேற்கொண்டு வருகிறது.

அதன் ஒரு பகுதியாக, சூரிய மின் உற்பத்திக்கு நாடு முக்கியத்துவம் அளித்து வருகிறது.

கடந்த 7 ஆண்டுகளில் மட்டும் இந்தியாவின் சூரிய மின் உற்பத்தித் திறன் 17 மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளது. தற்போது நாட்டின் சூரிய மின் உற்பத்தித் திறன் 45 ஜிகாவாட்ஸாக உள்ளது என்றாா் அவா்.

பூமியை வெப்பமாக வைத்திருப்பதற்கு உதவும் காா்பன் டைஆக்சைடு, மீத்தேன், நைட்ரஸ் ஆக்சைடு போன்ற வாயுக்கள் பசுமைக் குடில் வாயுக்கள் என்றழைக்கப்படுகின்றன.

அந்த வாயுக்களும் வளிமண்டலத்தில் இருக்கும் நீராவியும்தான் சூரியனின் வெப்பத்தை உறிஞ்சி பூமியில் தாவரங்கள் உள்ளிட்ட உயிரினங்கள் நிலைத்திருப்பதற்கு உதவி செய்கின்றன.

அந்த வாயுக்கள் இல்லாவிட்டால் பூமியின் சராசரி வெப்பநிலை உறைநிலைக்குக் கீழே 18 டிகிரி செல்சியஸாக இருந்திருக்கும்.

இந்தச் சூழலில், உலகில் தொழில் புரட்சி ஏற்பட்டு தொழிற்சாலைகளும் வாகனங்களும் காா்பன் மோனாக்ஸைடு போன்ற பசுமைக் குடில் வாயுக்களை அதிக அளவில் காற்றில் கலந்து வருவதால் அவை சூரியனிடமிருந்து வெப்பத்தை அதிகம் உறிஞ்சி புவியின் வெப்பநிலை அதிகரித்து வருகிறது.

இதன் காரணமாக பருவநிலை மாற்றம் ஏற்பட்டு, புயல், வெள்ளம், அனல் காற்று போன்ற இயற்கைப் பேரிடா்கள் அதிகரித்து வருகின்றன. மேலும், அண்டாா்டிகாவில் பனி மலைகள் உருகி கடலின் நீா்மட்டம் அதிகரித்து வருவதால் உலகின் பல பகுதிகள் கடலில் மூழ்கும் அபாயத்தை எதிா்நோக்கியுள்ளன.

---

**3. உலகின் பிரபலமான தலைவர்களில் பிரதமர் மோடி தொடர்ந்து முதலிடம்**

உலகின் பிரபல தலைவர்களில் பிரதமர் நரேந்திர மோடி தொடர்ந்து 3–வது முறையாக முதலிடம் பிடித்துள்ளார்.

அமெரிக்க தலைநகர் வாஷிங்டனை தலைமையிடமாக கொண்டு செயல்படும் பிரபல கருத்துக் கணிப்பு நிறுவனமான 'மார்னிங் கன்சல்ட்' நிறுவனம் உலக தலைவர்களின் தலைமை குறித்து அவ்வப்போது கணக்கெடுப்பு நடத்தி அறிக்கை வெளியிட்டு வருகிறது.

இதன்படி அமெரிக்கா, பிரிட்டன், ஜெர்மனி, பிரான்ஸ், ஸ்பெயின், இத்தாலி, கனடா, ஆஸ்திரேலியா, ஜப்பான், தென்கொரியா, பிரேசில், இந்தியா, மெக்ஸிகோஆகிய 13 நாடுகளின் மக்களிடம் அண்மையில் கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டது.

இதில் பிரதமர் நரேந்திர மோடி முதலிடம் பிடித்துள்ளார். இந்தியாவில் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பில் 70 சதவீதம் பேர் அவரது தலைமையை அங்கீகரித்து ஆதரவு அளித்துள்ளனர். 24 சதவீதம் பேர் மட்டும் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

'மார்னிங் கன்சல்ட்' நிறுவனம், இந்த ஆண்டில் இதுவரை 3 முறை கருத்துக் கணிப்பை நடத்தியுள்ளது. இந்த 3 கருத்துக் கணிப்புகளிலும் பிரதமர் நரேந்திர மோடி தொடர்ந்து முதலிடம் பிடித்து சாதனை படைத்துள்ளார். பிரதமர் நரேந்திர மோடிக்கு அடுத்து மெக்ஸிகோ அதிபர் லோபஸ் ஒபரடோர் 66 சதவீத வாக்குகளை பெற்று 2–வது இடத்தைப் பிடித்துள்ளார்.

இத்தாலி பிரதமர் மரியோ திராகி (58%), ஜெர்மனி பிரதமர் ஏஞ்சலா மெர்கெல் (54%), ஆஸ்திரேலிய பிரதமர் ஸ்காட்மோரிசன் (47%), அமெரிக்க அதிபர் ஜோ பைடன் (44%), கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ (43%), ஜப்பான் பிரதமர் புமியோ கிஷாடா (42%), தென்கொரிய அதிபர் மூன் ஜோ–இன் (41%), பிரிட்டிஷ் பிரதமர் போரிஸ் ஜான்சன் (40%), ஸ்பெயின் பிரதமர் பெட்ரோ சான்செஸ் (37%), பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மெக்ரான் (36%), பிரேசில் அதிபர் ஜேர்போல்சோனரோ (35%) ஆகியோர் அடுத்தடுத்த இடங்களைப் பெற்றுள்ளனர்.

கடந்த கருத்துக் கணிப்புகளைவிட அமெரிக்க அதிபர் ஜோ பைடன், பிரிட்டிஷ் பிரதமர் போரிஸ் ஜான்சன் ஆகியோர் பின்தங்கியுள்ளனர். இந்திய பிரதமர் மோடி மட்டும் தொடர்ந்து முதலிடத்தில் உள்ளார்.

---

**4. எல்லைப் போராட்டமா, பெயர் மாற்றமா?**

சென்னை மாநிலத்துக்குத் தமிழ்நாடு என்று சட்டமன்றத்தில் பெயர்மாற்றத் தீர்மானம் நிறைவேற்றிய ஜூலை 18–ம் தேதியைத் தமிழ்நாடு தினமாகச் சமீபத்தில் அறிவித்தது திமுக அரசு. மொழிவழி மாநிலங்கள் பிரிக்கப்பட்ட நவ.1–ம் தேதியைக் கொண்டாடுவதுதானே முறையானது என்று வாதிடுகின்றன அதிமுகவும் அமமுகவும்.

கூட்டணிக்குள் கருத்து வேறுபாடு

அனைத்துக் கட்சித் தலைவர்களோடு தமிழறிஞர்களையும் எல்லைப் போராட்டத் தியாகிகளையும் அழைத்து ஒருமனதாக இந்த முடிவு எடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்று கூறியுள்ளார் விசிக தலைவர் தொல் திருமாவளவன். தமிழ்நாடு தினம் மாற்றப்பட்டதை மதிமுக தலைவர் வைகோ வரவேற்றிருந்தாலும் அவர் விடுத்துள்ள விரிவான அறிக்கை எல்லைப் போராட்டத் தியாகிகளை நினைவுகூரும் வகையிலேயே அமைந்துள்ளது. நவம்பர் 1–ம் தேதியை எல்லைப் போராட்ட வீரர்கள் நினைவு தினமாகக் கொண்டாட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் நவம்பர் 1–ஐ தமிழ்நாடு தினமாக அதிமுக அறிவித்தபோது வரவேற்ற சிபிஐ கட்சியின் மாநிலச் செயலாளர் முத்தரசன், அந்த நாளை திமுக அரசு ஜூலை 18–க்கு மாற்றியதையும் வரவேற்றுள்ளார். எல்லைப் போராட்டத்தை நினைவுகூரும் வகையில் நவம்பர் 1, பெயர் மாற்றத்தை நினைவுகூரும் ஜூலை 18 என்று இரண்டு நாட்களையும் கொண்டாடலாம் என்றொரு கருத்தைத் தெரிவித்துள்ளார் சிபிஐ(எம்) மாநிலச் செயலாளர் கே பாலகிருஷ்ணன். தமிழ்நாடு பெயர் மாற்றத்தில் கம்யூனிஸ்ட்டுகளின் பங்களிப்பு முக்கியத்துவம் வாய்ந்தது. ஆனால், அவர்களிடையே இது குறித்த கருத்தொருமிப்பு இல்லை என்று தெரிகிறது.

தமிழ்நாடு தினம் ஜூலை 18–க்கு மாற்றப்பட்டதை முழு மனதோடு ஆதரித்து நிற்பது தி.க. தலைவர் கி வீரமணி மட்டும்தான். 'தாம் கேட்டுக்கொண்டதைச் சிந்தித்து முதல்வர் மு க ஸ்டாலின் அறிவித்திருப்பதாகக்' கூறுகிறது அவரின் அக்.30 தேதியிட்ட அறிக்கை. மதுரை சென்றிருந்த முதல்வரைத் தமிழ் ஆர்வலர்கள் சிலரும் சந்தித்து இதே கோரிக்கையை விடுத்தார்கள். ஆக, இது திமுக தம் விருப்பத்தின் பெயரால், தம் கட்சியின் நிறுவனரை முன்னிறுத்துவதற்காகக் கொண்டுவந்த மாற்றமல்ல; தாய்க் கழகத்தின் வேண்டுகோளை ஏற்று, தமிழறிஞர்கள் சிலரின் கோரிக்கையைப் பரிசீலித்து எடுத்த முடிவு.

கல்குளம் துப்பாக்கிச் சூடு

1967–ல் அண்ணா தலைமையிலான திமுக அரசு 'தமிழ்நாடு' பெயர் மாற்றத் தீர்மானத்தைக் கொண்டுவந்தது இந்திய வரலாற்றின் முக்கிய நிகழ்வு. ஆனால், எந்தவொரு மாநில அரசும் தனது பெயரைத் தன்னிச்சையாக மாற்றிக்கொள்வதற்கு இந்திய அரசமைப்பில் அதிகாரம் அளிக்கப்படவில்லை. சட்டமன்றத் தீர்மானம் நாடாளுமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டால் மட்டுமே பெயர் மாற்றம் நிகழும். அவ்வாறு நாடாளுமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டு பெயர்மாற்றம் நடைமுறைக்கு வந்த நாள் 1969 ஜனவரி 14.

தமிழ்நாடு என்ற பெயர் மாற்றத்துக்காகச் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு முன்பே 1963–ல் நாடாளுமன்றத்தில் அத்தகையதொரு பெயர் மாற்றத் தீர்மானத்தை முன்மொழிந்தவர் கம்யூனிஸ்ட் தலைவர் பூபேஷ் குப்தா. பம்பாய் மாநிலத்தை மஹாராஷ்டிரம், குஜராத் என்று பிரித்த பிறகு, அம்மாநிலத்தின் பெயரை மஹாராஷ்டிரம் என்று மாற்றிய நிலையில், சென்னையிலிருந்து ஆந்திரம் பிரிந்த பிறகு, தமிழ்நாடு என்று பெயர் சூட்டுவதுதானே முறை என்ற கேள்வியை எழுப்பினார் அவர். தமிழ்நாட்டு மக்களுக்காகப் பேசுவதற்கு உங்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்று தமிழ்நாட்டைச் சேர்ந்த காங்கிரஸ் உறுப்பினர் அவரது பேச்சின் இடையே குறுக்கிட்டதும் நாடாளுமன்ற விவாதங்களில் பதிவாகியுள்ளது. அப்போது நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த அண்ணா அந்தத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசினார். தமிழ்நாடு பெயர் மாற்றத்தை வலியுறுத்தி சென்னை சட்டமன்றத்தில் அண்ணாவுக்கு முன்பிருந்தே பொதுவுடைமை இயக்கத் தலைவர்கள் பேசியுள்ளனர்.

இன்றைக்கு, தமிழ்நாடு பெயர் மாற்றத்துக்கான சட்டமன்றத் தீர்மானத்தை மட்டுமே முதன்மையெனக் கொள்ளும்பட்சத்தில், வரலாற்றின் ஒரு பக்கத்தை மட்டும் முன்னிறுத்துபவர்கள் ஆவோம். சென்னைத் தலைநகரத்தையும் வடக்கு, தெற்கு எல்லைகளையும் காத்து நின்ற தலைவர்கள் பலரையும் நாம் நினைவுகூரத் தவறியவர் ஆகிவிடுவோம்.

ஆந்திரம் தவிர்த்த சென்னை மாநிலத்துக்குச் சென்னையே தலைநகராக இருக்க வேண்டும் என்று போராடியவர் மபொ சிவஞானம். அதற்கு ஆதரவாக அன்றைய முதல்வர் ராஜாஜியும் உறுதியாக நின்றார். ஆந்திரம் பிரிக்கப்பட்டபோது திருத்தணியை மீட்கக் காரணமாக அமைந்ததும் ம.பொ.சி. முன்னெடுத்த போராட்டங்கள்தான். திமுகவும் அவரோடு களத்தில் கைகோத்து நின்றது. அதைப்போலவே, தெற்கே திருவிதாங்கூருடன் சேர்ந்திருந்த தமிழ் பேசும் பகுதிகளைத் தமிழ்நாட்டுடன் இணைக்க வேண்டும் என்ற போராட்டம் 1954–ல் தீவிரமடைந்தது. அதிலும் திமுக பங்கேற்றது. தெற்கெல்லைப் போராட்டத்தை பிஎஸ் மணியும் மார்ஷல் நேசமணியும் வழிநடத்தினார்–கள். அப்போது, கல்குளத்தில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் 10'க்கும் மேற்பட்ட தமிழர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர் என்பதையும் மறந்துவிடக் கூடாது.

சங்கரலிங்கனாரின் உயிர்த்தியாகம்

ஜவாஹர்லால் நேரு முன்மொழிந்த தட்சிணப் பிரதேசத் திட்டத்தை 1956–ல் திமுக மட்டுமே எதிர்க்கவில்லை. தமிழரசுக் கழகம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, பிரஜா சோஷலிஸ்ட் கட்சி ஆகியவை ஒன்றிணைந்து எதிர்த்தன. அப்போதே தமிழ்நாடு என்ற பெயர் மாற்றத்தை ஒரே குரலில் முன்வைத்தன. தமிழ்நாடு என்ற வார்த்தையை உச்சரிக்கும்தோறும் தியாகி சங்கரலிங்கனாரை நினைவுகூர வேண்டும். தமிழ்நாடு என்ற பெயர் மாற்றம் உள்ளிட்ட 12 கோரிக்கைகளுக்காக, 1956 ஜூலை 27–ல் விருதுநகர் குளக்கரை மேட்டில் தனது 61–வது வயதில் உண்ணாவிரதத்தைத் தொடங்கினார் அவர். கம்யூனிஸ்ட் கட்சியின் விருதுநகர் கமிட்டி அவரைத் தேசபந்து மைதானத்துக்கு அழைத்துவந்தது. அண்ணாவும் மபொசி'உம் அந்தத் தியாகியைச் சந்தித்து, அவரது போராட்டத்துக்குத் தங்கள் ஆதரவைத் தெரிவித்தனர். உடல்நிலை மோசமான நிலையில், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட சங்கரலிங்கனார் அங்கேயே இறந்தார். அவரையடுத்து தமிழ்நாடு பெயர் மாற்ற முழக்கத்தை ம.பொ.சி. இன்னும் தீவிரப்படுத்தினார். அண்ணா அந்த விருப்பத்தைத் தனது ஆட்சிக் காலத்தில் நிறைவேற்றினார்.

சென்னையைத் தலைநகராகக் கொண்டு ஆந்திர மாநிலம் பிரிக்கப்பட வேண்டும் என்று 1952–ல் 58 நாட்கள் உண்ணாவிரதமிருந்து உயிர்துறந்த பொட்டி ஸ்ரீராமுலுவை ஆந்திரம் இன்றும் நினைவில் வைத்திருக்கிறது. சென்னை மாநிலத்துக்குத் தமிழ்நாடு என்று பெயர் சூட்டுவதற்காக 76 நாட்கள் பட்டினி கிடந்து, உயிர்துறந்த சங்கரலிங்கனாரை நாம் மறந்துவிட்டோம். எத்தனை உயிரிழப்புகள்... எத்தனை கைதுகள்... எத்தனை தடியடிகள்... அந்த நீண்ட நெடிய போராட்டத்தின் உச்சம்தான் தமிழ்நாடு எனும் பெயர் மாற்றம். இதை நடைமுறை சாத்தியமாக ஆக்கியது அண்ணாதான் என்பது வரலாறு.

---

**5. 13 ஆண்டு இடைவெளிக்கு பிறகு இந்திய நேயர்களுக்காக ஒலிபரப்பை மீண்டும் தொடங்கும் கொழும்பு வானொலி**

13 ஆண்டுகளுக்குப் பிறகு இலங்கை ஒலிபரப்புக் கூட்டு ஸ்தாபனம் இந்திய நேயர்களுக்காக கொழும்பு சர்வதேச வானொலி ஒலிபரப்பை தொடங்க நடவடிக்கை எடுத்துள்ளது.

லண்டன் பிபிசி தமிழோசை, சிங்கப்பூர் ஒலி, மலேசிய வானொலி கழகம், பாகிஸ்தான் சர்வதேச வானொலி, சீனதமிழ் வானொலி, வாய்ஸ் ஆப் அமெரிக்கா,ஜெர்மன் ரேடியோ, ஆஸ்திரேலியா ஆகிய வெளிநாட்டு வானொலி நிலையங்கள் தமிழ் நிகழ்ச்சிகளை ஒலிபரப்பின.

இருப்பினும் முதன் முதலில் தமிழ் வானொலி ஒலிபரப்பை தொடங்கியது இலங்கை ஒலிபரப்புக் கூட்டு ஸ்தாபனம் ஆகும். 1925–ல் 'சிலோன் ரேடியோ' என்றபெயரில் நிறுவப்பட்ட இலங்கை ஒலி பரப்புக் கூட்டு ஸ்தாபனத்துக்குத்தான் உலகின் 2–வது வானொலி நிலையம் என்றபெருமையும் உண்டு. பிபிசி வானொலி 1922–ல் லண்டனில் நிறுவப்பட்டது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டு ஸ்தாப னம் தனது வர்த்தக சேவை பிரிவை 30.9.1950–ல் தொடங்கியதும் இந்திய துணைக் கண்டத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இமயமலை உச்சியில் கால் பதித்த எட்மண்ட் ஹிலாரி, டென்சிங் நார்கே ஆகியோர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டு ஸ்தாபனத்தின் வர்த்தக ஒலிபரப்பை முதலில் செவிமடுத்தார்கள்.

பொங்கும் பூம்புனல், நேயர் விருப்பம், நீங்கள் கேட்டவை, அன்றும் இன்றும், புது வெள்ளம், மலர்ந்தும் மலராதவை, இசைத் தேர்தல், பாட்டுக்குப் பாட்டு, இசையும் கதையும், இன்றைய நேயர், விவசாய நேயர் விருப்பம், இரவின் மடியில் எனத் தூய தமிழில் புதுமையான நிகழ்ச்சிகளை வழங்கி தமிழகத்தில் தனக்கென்று நேயர்கள் வட்டத்தை இலங்கை ஒலிபரப்புக் கூட்டு ஸ்தாபனம் உருவாக்கிக் கொண்டது.

மேலும் அதில் பணியாற்றிய ஒலிபரப்பாளர்கள் எஸ்.பி.மயில்வாகனன், கே.எஸ். ராஜா, பி.ஹெச்.அப்துல் ஹமீது, ராஜேஸ்வரி சண்முகம் ஆகியோருக்கு தமிழகத்தின் முன்னணி சினிமா நட்சத்திரங்களுக்கு இருந்த ரசிகர்களின் எண்ணிக்கையைவிட நேயர்களின் எண்ணிக்கை அதிக அளவில் இருந்தனர்.

இன்றளவும் உலகில் ஒரு லட்சத்துக்கும் அதிகமான தமிழ், சிங்களம், ஆங்கிலப் பாடல்களின் இசைத் தட்டுக்களைக் கொண்டே ஒரே வானொலி நிலையம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டு ஸ்தாபனம் மட்டுமே.

இலங்கை உள்நாட்டுப் போரினால் தமிழகத்தில் ஏற்பட்ட கடும் எதிர்ப்புகளால் இலங்கை ஒலிபரப்புக் கூட்டு ஸ்தாபனம் தனது இந்திய நேயர்களுக்கான கொழும்பு சர்வதேச ஒலிபரப்பை கடந்த 31.5.2008 அன்று நிறுத்திக் கொண்டது. மேலும் தமிழகத்தில் பண்பலை வானொலி நிலையங்கள் பரவலாக தொடங்கப்பட்ட பிறகும்கொழும்பு சர்வதேச ஒலிபரப்பு தமிழகத்தில் தவழாதா என்ற ஏக்கம் பல்வேறு நேயர்களுக்கு இருந்து வருகிறது.

ராமநாதபுரம், தூத்துக்குடி, புதுக்கோட்டை, நாகப்பட்டினம் ஆகிய கடற்கரை மாவட்டத்தில் உள்ள வானொலி நேயர்கள் இலங்கை ஒலிபரப்பிய சக்தி, தென்றல் போன்ற பண்பலைகளை தொடர்ந்து கேட்ட வண்ணம் இருந்தனர்.

இந்நிலையில் கொழும்பு சர்வதேச வானொலி ஒலிபரப்பை மீண்டும் தொடங்க வேண்டும் என்று பல தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர். இதையடுத்து ஒலிபரப்பை மீண்டும் தொடங்கஇலங்கை ஒலிபரப்புக் கூட்டு ஸ்தாபனத் தலைவர் ஹட்சன் சமரசிங்க நடவடிக்கை எடுத்துள்ளார். இதற்கான தீர்மானம் தீபாவளி அன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

இத்தகவலை இலங்கை ஒலிபரப்புக் கூட்டு ஸ்தாபனத்தின் தமிழ்ச் சேவைகளின் பொறுப்பாளர் வீரசிங்கம் ஜெய்சங்கர் உறுதி செய்துள்ளார்.

---

**6. ஒரு கோடி சைகோவ்–டி தடுப்பூசிக்கு ஒப்பந்தம்:**

நாடு முழுவதும் இதுவரை பொதுமக்களுக்கு 100 கோடி தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் சைடஸ் கெடிலா நிறுவனம் உருவாக்கி உள்ள ஊசி முறை அல்லாத சைகோவ்–டி தடுப்பூசிகளை வாங்க திட்டமிட்டுள்ளது. முதற்கட்டமாக ஒரு கோடிடோஸ்களை வாங்க ஒப்பந்தம் செய்யப்பட்டது. உலகின் முதல் டி என் ஏ அடிப்படையிலான தடுப்பூசியாக உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட சைகோவ்–டி 12 வயதுக்கு மேல் உள்ளவர்களுக்கும் செலுத்த தகுதியான தடுப்பூசி என அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

மூன்று தவணையாக செலுத்தப்படும் இத்தடுப்பூசிக்கு ஒப்பதல் கடந்த ஆகஸ்ட் மாதத்தில் வழங்கப்பட்ட நிலையில் உற்பத்தி மற்றும் விநியோகத்தை சைடஸ் கெடிலா தொடங்கி உள்ளது. தற்போது மாதம் ஒரு கோடி தடுப்பூசிகள் என்ற அளவில் உற்பத்தி திறன் கொண்டுள்ளது. உற்பத்தி திறன் அடிப்படையில் இளைஞர்களுக்கு முதலில் இந்த தடுப்பூசியை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்தசைகோவ்–டி தடுப்பூசி வரி உட்பட ரூ.358க்கு விற்பனை செய்யப்படுகிறது.

அதேசமயம் பாரத் பயோடெக்கின் கோவாக்ஸின் தடுப்பூசியை, அவசர கால அடிப்படையில் மருத்துவர்களின் பரிந்துரையின் பேரில் 2 வயது முதல் 18 வயதுவரை உள்ளவர்களுக்கு வழங்கலாம் என கரோனா சிறப்பு நிபுணர் குழு ஒப்பதல் அளித்துள்ளது.

---

**7. மகாராஷ்டிரத்தில் நான்கு வழிச்சாலை மேம்பாடு: பிரதமா் இன்று அடிக்கல்**

மகாராஷ்டிர மாநிலத்தில் வைணவ துறவிகள் ஞானேஷ்வா், துகாராம் ஆகியோரது நினைவிடங்களுக்கு யாத்திரை செல்வதற்கு உதவும் நான்குவழிச் தேசிய நெடுஞ்சாலை அமைப்பதற்கு பிரதமா் நரேந்திர மோடி திங்கள்கிழமை அடிக்கல் நாட்டுகிறாா்.

தேசிய நெடுஞ்சாலைகளின் இருபுறங்களிலும் நினைவிடங்களுக்கு பக்தா்கள் யாத்திரை செல்வதற்கான பிரத்யேக நடைபாதைகள் கட்டப்படவுள்ளன.

இதுதவிர, பண்டா்பூருக்குப் போக்குவரத்து இணைப்பை அதிகரிப்பதற்கான பலமுனை சாலைத் திட்டங்களையும் பிரதமா் நாட்டுக்கு அா்ப்பணிப்பாா்

பண்டா்பூருக்கு வரும் பக்தா்களுக்கு வசதி செய்யும் முயற்சியாக துறவி ஞானேஷ்வா் நினைவிடத்தின் (என் எச் 965) ஐந்து பிரிவுகளில் நான்குவழிச் சாலைக்கும், துறவி துகாராம் நினைவிடத்தின் (என் எச் 965ஜி) மூன்று பிரிவுகளுக்கும் காணொலி முறையில் பிரதமா் மோடி அடிக்கல் நாட்டவுள்ளாா்.

221 கிலோமீட்டா் மற்றும் 130 கிலோ மீட்டா் தொலைவுக்கு முறையே ரூ.6,690 கோடி, ரூ.4,400 கோடி மதிப்பீட்டில் தேசிய நெடுஞ்சாலையின் இரு பக்கங்களிலும் பிரத்யேக நடைபாதைகளுடன் நான்குவழிச் சாலை அமைக்கப்படும்.

இந்த நிகழ்ச்சியின்போது, பண்டா்பூருக்கு போக்குவரத்துத் தொடா்பை அதிகரிப்பதற்காக பல்வேறு தேசிய நெடுஞ்சாலைகளில் ரூ.1,180 கோடிக்கும் கூடுதல் மதிப்பீட்டு செலவில் கட்டப்பட்டுள்ள 223 கிலோ மீட்டருக்கும் அதிகமான, மேம்படுத்தப்பட்ட சாலைத் திட்டங்களையும் பிரதமா் நாட்டுக்கு அா்ப்பணிப்பாா்.

மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சா் நிதின் கட்கரி, மகாராஷ்டிர முதல்வா் உத்தவ் தாக்கரே உள்ளிட்டோா் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்ள இருக்கிறாா்கள்.

---

**8. பில்லி ஜீன் கிங் கோப்பை: ரஷியா சாம்பியன்**

பில்லி ஜீன் கிங் கோப்பை டென்னிஸ் போட்டியில் ஸ்விட்சா்லாந்தை வீழ்த்தி ரஷியா முதல் முறையாக சாம்பியன் ஆனது. அணிகள் போட்டியில் ரஷியா சாம்பியன் ஆவது இது 5–ஆவது முறையாகும்.

அணியாக நடைபெறும் இந்தப் போட்டியில் இறுதி ஆட்டத்தில் ரஷியாவின் டரியா கசாட்கினா 6–2, 6–4 என்ற செட்களில் ஸ்விட்சா்லாந்தின் ஜில் டெய்ச்மானை வீழ்த்தினாா். மற்றொரு ஆட்டத்தில் ரஷியாவின் லுட்மிலா சாம்சனோவா 3–6, 6–3, 6–4 என்ற செட்களில் நடப்பு ஒலிம்பிக் சாம்பியனான ஸ்விட்சா்லாந்தின் பெலிண்டா பென்சிச்சை தோற்கடித்தாா்.

இதனிடையே, பென்சிச்சுக்கு எதிரான ஆட்டத்தில் விதிகளை மீறிய வகையில் கடைசி நேரத்தில் பாவ்லியுசென்கோவாவுக்குப் பதிலாக சாம்சனோவாவை ரஷியா களமிறக்கியதாக ஸ்விட்சா்லாந்து குற்றம்சாட்டியுள்ளது. ஆட்டம் தொடங்குவதற்கு 15 நிமிஷங்களுக்கு முன்புதான் போட்டியாளா் மாற்றப்பட்டு தங்களுக்கு தெரிவிக்கப்பட்டதாக அந்த அணி கூறியுள்ளது.

எனினும், முதலில் முழங்கால் அசௌகா்யத்தால் அவதிப்பட்டதாலேயே பாவ்லியுசென்கோவாவை ஆட்டத்திலிருந்து விலக்கி சாம்சனோவாவை ஆடச் செய்ததாக ரஷிய தரப்பு விளக்கமளித்துள்ளது.

---

**1. இந்திய இரயில்வே ஆனது எந்த நகரங்களுக்கு இடையே 'கதி சக்தி சூப்பர்ஃபாஸ்ட் சிறப்பு இரயிலை' அறிமுகப்படுத்தியுள்ளது?**



**அ) தில்லி–பாட்னா ☑**

ஆ) தில்லி–வாரணாசி

இ) வாரணாசி–கேவாடியா

ஈ) தில்லி–நைனிடால்

✓ இந்திய இரயில்வே ஆனது தில்லி மற்றும் பாட்னா இடையே 'கதி சக்தி சூப்பர்ஃபாஸ்ட் சிறப்பு இரயிலைத்' தொடங்கியுள்ளது. இந்தப் பண்டிகைக் காலத்தில் பயணிகளின் வசதிக்காக ஆனந்த் விஹார் முனையம் – பாட்னா – ஆனந்த் விஹார் முனையம் வரை இந்தக் 'கதி சக்தி சூப்பர் பாஸ்ட் சிறப்பு இரயில் இயக்கப்படுகிறது.

---

**2. 2021ஆம் ஆண்டு முதல் எத்தனை ஆண்டுகளுக்கு இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநராக சக்திகாந்த தாஸ் நியமிக்கப்பட்டுள்ளார்?**



அ) இரண்டு ஆண்டுகளுக்கு

**ஆ) மூன்று ஆண்டுகளுக்கு ☑**

இ) நான்கு ஆண்டுகளுக்கு

ஈ) ஐந்து ஆண்டுகளுக்கு

✓ அமைச்சரவையின் நியமனக்குழு, 10.12.2021'க்குப்பிறகு அல்லது அடுத்த உத்தரவு வரும் வரையில், இந்திய ரிசர்வ் வங்கியின் (RBI) ஆளுநரான சக்திகாந்த தாஸை 3 ஆண்டுகளுக்கு மறுநியமனம்செய்து உத்தரவிட்டு உள்ளது. ஓய்வுபெற்ற இந்திய ஆட்சிப் பணி அதிகாரியான சக்திகாந்த தாஸ், டிசம்பர் 12, 2018 முதல் ரிசர்வ் வங்கியின் 25ஆவது ஆளுநராகப் பொறுப்பேற்றார். அவர் 15ஆவது நிதிக்குழுவின் உறுப்பினராகவும் ஓர் ஆண்டு காலம் பணியாற்றினார்.

✓ ஜூலை 1, 1949 முதல் ஜனவரி 14, 1957 வரை RBI'இன் ஆளுநராகப் பணியாற்றிய பெனகல் ராமா ராவ் அவர்களே RBI வரலாற்றில் அதிக நாள் ஆளுநராகப் பணியாற்றியவர் ஆவார்.

---

**3. MSME'களுக்கு உதவும் வகையில் பொதுத்துறை கொள்முதல் மற்றும் திட்ட நிர்வாகத்தில் சீர்திருத்தங்களை தொடங்கியுள்ள நடுவண் அமைச்சகம் எது?**

அ) MSME அமைச்சகம்

**ஆ) நிதி அமைச்சகம் ☑**

இ) வீட்டுவசதி & நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம்

ஈ) உணவு பதப்படுத்தும் தொழிற்துறை அமைச்சகம்

✓ நிதி அமைச்சகமானது பொது கொள்முதல் மற்றும் திட்ட நிர்வாகத்தில் சீர்திருத்தங்களைத் தொடங்கியுள்ளது. இது திட்டங்களைச் செயல்படுத்த –வும், சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு (MSME) சரியான நேரத்தில் பணஞ்செலுத்தவும் நோக்கம் கொண்டது.

✓ இப்புதிய வழிகாட்டுதல்கள் ஒப்பந்ததாரர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான மாற்று வழிமுறைகளைத் தருகிறது. பழைய முறை குறைந்த வணிக ஏலத்திற்கு அதிக ஆதரவளிக்கிறது.

---

**4. தற்கொலைகள் குறித்த NCRB'இன் தரவுகளின்படி, நிகழ்ந்த மொத்த தற்கொலைகளில், பின்வரும் எந்தத் துறைசார்ந்தோர் அதிக பங்கினைக் கொண்டுள்ளனர்?**

**அ) தினக்கூலிகள் ☑**

ஆ) இல்லத்தரசிகள்

இ) வேலையற்றோர்

ஈ) உழவர் பெருமக்கள்

✓ தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் (NCRB) தரவுகளின்படி, 2020ஆம் ஆண்டில் மொத்தம் 37,666 தினக்கூலிகள் தற்கொலை செய்துகொண்டு இறந்துள்ளனர். இந்த எண்ணிக்கை மொத்த தற்கொலைகளில் மிகப் பெரிய பங்கைக் கொண்டுள்ளது. அவர்களைப் பின்தொடர்ந்து இல்லத்த –ரசிகளும் உழவர் பெருமக்களும் உள்ளனர். இவ்வறிக்கையின்படி, கடந்த பத்து ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு கடந்த ஆண்டு 1.53 இலட்சத்திற்கும் அதிகமான தற்கொலைகள் பதிவாகியுள்ளன.

✓ 2020ஆம் ஆண்டில், இந்தியாவில் தினமும் சராசரியாக 31 குழந்தைகள் தற்கொலை செய்துகொள்வதாகவும் அது மேற்கோளிட்டுள்ளது. 2019ஆம் ஆண்டிலிருந்து 18 சதவீதம் அதிகரித்து 2020'இல் 11,396 குழந்தைகள் தற்கொலை செய்துகொண்டுள்ளனர்.

---

**5. தேசபக்தி கீதம் இயற்றுவதற்கான போட்டிகளை அறிவித்துள்ள மத்திய அமைச்சகம் எது?**

அ) வெளியுறவு அமைச்சகம்

**ஆ) கலாச்சார அமைச்சகம் ☑**

இ) ஊரக வளர்ச்சி அமைச்சகம்

ஈ) மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம்

✓ ஆசாதி கா அம்ரித் மகோத்சவத்தின்கீழ் மூன்று போட்டிகளை கலாச்சார அமைச்சகம் அறிவித்துள்ளது. அவை தேசபக்தி கீதம் இயற்றுதல், இரங் –கோலி வரைதல் மற்றும் லோரி எழுதுதல் ஆகும். இந்தப் போட்டிகள் தாலுகா மட்டத்திலிருந்து தேசிய அளவில் தொடங்கப்பட்டுள்ளன. இந்த முயற்சியை பிரதமர் மோடி மான்கிபாத் நிகழ்ச்சியில் அறிவித்தார். இந்தப் போட்டி ஓரிரு மாதங்களுக்கு நடத்தப்பட்டு வெற்றியாளர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்.

---

**6. அண்மையில் தொடங்கப்பட்ட 'டையரி சகாகர்' திட்டத்தைச் செய –ல்படுத்துகிற நடுவண் அமைச்சகம் எது?**



அ) உழவு மற்றும் குடும்பநல அமைச்சகம்

ஆ) ஊரக வளர்ச்சி அமைச்சகம்

**இ) கூட்டுறவு அமைச்சகம் ☑**

ஈ) உணவு பதப்படுத்தும் தொழிற்துறை அமைச்சகம்

✓ அமுலின் 75ஆவது நிறுவன ஆண்டு கொண்டாட்டத்தின்போது, குஜராத் மாநிலம் ஆனந்த் என்ற இடத்தில், மத்திய அமைச்சர் அமித் ஷா, "டையரி சகாகர்" திட்டத்தை தொடங்கி வைத்தார். கூட்டுறவு அமைச்சகத்தின்கீழ், மொத்தம் ₹5000 கோடி முதலீட்டில், என்சிடிசியால் டையரி சகாகர் திட்டம் செயல்படுத்தப்படும்.

✓ இத்தத்திட்டத்தின்கீழ், பால் கொள்முதல், பதப்படுத்துதல், தர உத்தரவாதம், மதிப்புக்கூட்டல், பிராண்டிங், பேக்கேஜிங், சந்தைப்படுத்தல், பொருட்கள் மற்றும் ஏற்றுமதிகளின் போக்குவரத்து மற்றும் சேமிப்பு போன்ற பல்வேறு நடவடிக்கைகட்கு தகுதியுள்ள கூட்டுறவு நிறுவனங்களுக்கு நிதியுதவி வழங்கப்படும்.

---

**7. முதன்முறையாக தும்பியினங்களை ஆவணப்படுத்தியுள்ள மாநிலம் எது?**



அ) தமிழ்நாடு

**ஆ) கேரளா ☑**

இ) ஆந்திர பிரதேசம்

ஈ) கர்நாடகா

✓ பூச்சியியல் வல்லுநர்கள் குழு முதன்முறையாக கேரள மாநிலத்தில் தும்பியினங்களை ஆவணப்படுத்தியுள்ளது. கேரளாவில் 181 வகையான தும்பியினங்கள் உள்ளன. இது மேற்குத் தொடர்ச்சி மலைகளுக்குச் சொந்தமான 68 இனங்களையும் உள்ளடக்கிய எண்ணிக்கையாகும். இந்த ஆய்வின்படி, மேற்குத்தொடர்ச்சி மலையின் தும்பியினங்கள் 207 ஆக உள்ளன; அவற்றுள் 80 இனங்கள் உள்ளூர் இனங்களாம்.

---

**8. தேசிய நிறுவன சட்ட மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் (NCLAT) புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**



**அ) அசோக் பூஷன் ☑**

ஆ) AK சிக்ரி

இ) ரஞ்சன் கோகோய்

ஈ) J முகோபாதயா

✓ ஓய்வுபெற்ற உச்சநீதிமன்ற நீதியரசரான அசோக் பூஷன், தேசிய நிறுவன சட்ட மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் புதிய தலைவராக 4 ஆண்டுகள் / அவர் 70 வயது வரை எட்டும் வரை நியமிக்கப்பட்டுள்ளார்.

- ✓ 2020 மார்ச்சில் அப்போதைய தலைவராக இருந்த நீதியரசர் S J முகோபாதயா ஓய்வுபெற்றதால், அப்பதவி காலியாக இருந்தது. மணிப்பூர் உயர்நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற தலைமை நீதியரசர் இராமலிங்கம் சுதாகரை, தேசிய நிறுவன சட்டத்தீர்ப்பாயத்தின் (NCLT) தலைவராகவும் அரசாங்கம் நியமித்துள்ளது.

---

**9. 'சர்தார் படேல் தலைமைத்துவ மையம்' திறக்கப்பட்டுள்ள இடம் எது?**



அ) நைனிடால்

**ஆ) முசோரி ☑**

இ) வாரணாசி

ஈ) நாக்பூர்

- ✓ முசோரியில் உள்ள லால் பகதூர் சாஸ்திரி தேசிய நிர்வாக அகாடமியில் (LBSNAA) 'சர்தார் படேல் தலைமைத்துவ மையத்தை' நாட்டிற்கு அர்ப்ப–ணித்தார் மத்திய மாநில பணியாளர்கள், பொது குறைகள், ஓய்வூதியங்–கள், டாக்டர் ஜிதேந்திர சிங். சர்தார் வல்லபாய் படேலின் பிறந்தநாளைக் குறிக்கும் ராஷ்டிரிய ஏக்தா திவாஸ் விழாவில் இது திறக்கப்பட்டது.

**10. 2021 – தேசிய ஆயுர்வேத நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**



**அ) Ayurveda for Poshan ☑**

ஆ) Ayurveda for COVID

இ) Aatmanirbhar Ayurveda

ஈ) Amrut Ayurveda

- ✓ தேசிய ஆயுர்வேத நாளானது கடந்த 2016ஆம் ஆண்டு முதல் தன்வந்திரி ஜெயந்தி அன்று கொண்டாடப்படுகிறது. "Ayurveda for Poshan" என்பது இந்த ஆண்டு (2021), தேசிய ஆயுர்வேத நாளுக்கானக் கருப்பொருள் ஆகும். இமாச்சல பிரதேச மாநிலத்தில் உள்ள பஞ்சகுலாவில் உள்ள தேசிய ஆயுர்வேத நிறுவனத்தின் துணை மையத்தின் உட்கட்டமைப்–பை விரிவுபடுத்துவதற்காக மத்திய ஆயுஷ் அமைச்சர் சர்பானந்தா சோனோவால் ₹260 கோடி நிதியுதவி அறிவித்தார். நல்ல ஆரோக்கியம் மற்றும் செல்வத்திற்காக தன்வந்திரி பகவான் வழிபடப்படுகிறார்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. 2021ஆம் ஆண்டுக்கான பத்ம விருதுகள்: குடியரசுத்தலைவர் வழங்கினார்**

2021ஆம் ஆண்டுக்கான பத்ம விருதுகளை தில்லியில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற விழாவில் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் வழங்கினார்.

தமிழகத்திலிருந்து மறைந்த பாடகர் எஸ் பி பாலசுப்பிரமணியம் சார்பில் அவரின் மகன், பேராசிரியர் சாலமன் பாப்பையா, வடசென்னை மருத்துவர் மறைந்த திருவேங்கடம் சார்பில் அவரின் குடும்பத்தினர், 106 வயது பாப்பம்மாள் உள்ளிட்டோர் பத்ம விருதுகளைப் பெற்றுக் கொண்டனர்.

கரோனா நோய்த்தொற்றின் காரணமாக 2020ஆம் ஆண்டுக்கான பத்ம விருதுகள் காலதாமதமாக கடந்த திங்கள்கிழமை வழங்கப்பட்டது.

நிகழாண்டு குடியரசு தினத்தை முன்னிட்டு அறிவிக்கப்பட்ட 2021ஆம் ஆண்டுக்கான பத்ம விருதுகள் வழங்கும் விழா குடியரசுத் தலைவர் மாளிகை தர்பார் மண்டபத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

விருது பெற்றவர்கள் விவரம் வருமாறு:

**பத்ம விபூஷண்:** 15 மொழிகளில் 40,000 பாடல்களைப் பாடிய மறைந்த பின்னணிப் பாடகர் எஸ்.பி. பாலசுப்பிரமணியத்துக்கு அறிவிக்கப்பட்ட பத்மவிபூஷண் விருதை அவரின் மகன் எஸ்.பி.பி. சரண் குடியரசுத் தலைவரிடமிருந்து பெற்றுக்கொண்டார்.

பிரபல மருத்துவர் பி எம் ஹெக்டே, அகண்ட அலைவரிசையில் ஃபைபர் ஆப்டிகல் தொழில்நுட்பத்தின் தந்தை என்று அழைக்கப்படும் மறைந்த அமெரிக்கவாழ் இந்திய விஞ்ஞானி நரேந்திர சிங் கபானி, சர்வதேச அளவில் முன்னிலையில் இருக்கும் ஒடியா சிற்பக் கலைஞர் சுதர்சன் சாகு, மறைந்த இஸ்லாமிய அறிஞர் மௌலானா வஹிதுதீன் கான், தொல்லியல் வல்லுநர் பிபி லால் உள்ளிட்ட ஏழு பேருக்கு பத்ம விபூஷண் விருது வழங்கப்பட்டது.

**பத்ம பூஷண் விருது:** பத்ம பூஷண் விருது 10 பேருக்கு வழங்கப்பட்டது. பின்னணிப் பாடகி கே எஸ் சித்ரா, ஓய்வு பெற்ற ஐஏஎஸ் அதிகாரியும், பிரதமர் அலுவலக முதன்மைச் செயலாளராக இருந்தவருமான நிருபேந்தர மிஸ்ரா, முன்னாள் மக்களவைத் தலைவர் சுமித்ரா மகாஜன் உள்ளிட்டோர் பத்ம பூஷண் விருதைப் பெற்றனர்.

அரசியல், பொதுவாழ்க்கையில் சாதனை படைத்த மறைந்த தருண் கோகோய் (அஸ்ஸாம் முன்னாள் முதல்வர்), மறைந்த ராம்விலாஸ் பாஸ்வான் (முன்னாள் மத்திய அமைச்சர்) ஆகியோருக்கு வழங்கப்பட்ட பத்ம பூஷண் விருதை அவர்களின் குடும்பத்தினர் பெற்றனர்.

**பத்மஸ்ரீ:** 102 பேருக்கு பத்மஸ்ரீ வழங்கப்பட்டது. தமிழகத்தைச் சேர்ந்த தேசிய கூடைப்பந்து வீராங்கனை பி அனிதா, வில்லுப்பாட்டு கலைஞர் சுப்பு ஆறுமுகம், பேராசிரியர் சாலமன் பாப்பையா, இயற்கை விவசாயத்தில் புகழ்பெற்ற பாப்பம்மாள், கர்நாடக இசைப் பாடகி பாம்பே ஜெயஸ்ரீ ராம்நாத், லட்சக்கணக்கான மீனவக் குடும்பங்களுக்கு குறைந்த செலவில் கழிப்பறைகளை நிறுவி சுகாதாரத்தை நிலைநாட்டிய திருச்சியைச் சேர்ந்த சமூக சேவகர் மராச்சி சுப்புராமன், ஐடி துறை தொழில்முனைவோராகி, 5 கோடி பேர் பயன்படுத்தி வரும் மென்பொரு–ள்களைத் தயாரித்த ஸ்ரீதர் வேம்பு ஆகியோர் குடியரசுத் தலைவரிடம் பத்மஸ்ரீ விருதுகளைப் பெற்றனர்.

வடசென்னையில் ஐந்து ரூபாய்க்கு மருத்துவம் புரிந்து சாமானிய மக்களுக்கு தொண்டாற்றி மறைந்த மருத்துவர் திருவேங்கடம் வீரராகவன், 'சந்தமாமா' பத்திரிகையின் கார்ட்டூன் கலைஞரான மறைந்த கே சி சிவசங்கர், கியர் தயாரிப்பில் புகழ்பெற்று 'கியர்மேன்' என அழைக்கப்பட்ட கோவையைச் சேர்ந்த மறைந்த தொழிலதிபர் பி சுப்பிரமணியன் ஆகியோருக்கான பத்மஸ்ரீ விருதுகளை அவர்களின் குடும்பத்தினர் பெற்றனர்.

40 ஆண்டுகளாக சமூக, கல்வி நோக்கங்களுக்காக பொம்மலாட்ட நிகழ்ச்சிகளை நடத்திய புதுச்சேரி கேசவசாமியும் பத்மஸ்ரீ விருதைப் பெற்றார். பெங்களூரைச் சேர்ந்த பாரா தடகள வீரர் கே ஒய் வெங்கடேஷ் போன்றோர் பத்ம விருது பெற்றவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.

---

**2. தஞ்சாவூர் பெரிய கோயிலில் நவ.13–ல் ராஜராஜ சோழனின் 1036வது சதய விழா**

தஞ்சாவூர் பெரிய கோயிலில் ராஜராஜ சோழனின் 1036–வது சதய விழா நவ.13–ம் தேதி நடைபெற உள்ளது.

உலகமே வியக்கும் வகையில் தஞ்சாவூர் பெரிய கோயிலைக் கட்டி தமிழகத்துக்கு பெருமை சேர்த்த மாமன்னன் ராஜராஜ சோழனின் பிறந்த நாளான ஐப்பசி சதயநட்சத்திரம் அன்று, சதய விழாவாக ஆண்டுதோறும் கொண்டாடப்படுகிறது.

அதன்படி, மாமன்னன் ராஜராஜ சோழனின் 1036–வது சதய விழா நவ.13–ம் தேதி கொண்டாடப்பட உள்ளது.

---

**3. நம்பிக்கை தரும் கரோனா மாத்திரைகள்**

கரோனாவுக்கு எதிரான போரில், உலக நாடுகள் தடுப்பூசிகளைப் பேராயுதமாகப் பயன்படுத்திக்கொண்டிருக்கும் வேளையில், இரண்டு வகை மாத்திரைகள் புதிய ஆயுதங்களாக வந்திருப்பது கரோனா சிகிச்சையில் ஒரு முக்கிய மைல்கல்லாகக் கருதப்படுகிறது.

அமெரிக்காவைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் மெர்க் நிறுவனம், ரிட்ஜ்பேக் பயோதெரபியூடிக்ஸ் நிறுவனத்துடன் இணைந்து தயாரித்துள்ள 'EIDD 2801' மாத்திரைக்கு பிரிட்டன் அரசு அவசரகாலப் பயன்பாட்டுக்கு அனுமதி அளித்துள்ளது. இது அட்லாண்டாவில் உள்ள எமோரி பல்கலைக்கழக ஆய்வாளர்களால் உருவாக்கப்பட்டது.

தற்போது கரோனா தொற்றாளர்களுக்கு வழங்கப்படும் ரெம்டெசிவிர், டெக்சாமெத்தசோன், 'ஒற்றைப் படியாக்க எதிரணு மருந்து' (Monoclonal antibody) ஆகியவற்றின் வரிசையில் புதிதாக இந்த மாத்திரையும் சேர்ந்திருக்கிறது. 'மோல்னுபிரவிர்' (Molnupiravir) என்பது இதன் வணிகப் பெயர். பிரிட்டனில் இது 'லேகேவ்ரியோ' (Lagevrio) எனும் பெயரில் சந்தைப்படுத்தப்படுகிறது. முதன்முதலில் கரோனாவுக்கு எதிராக வழங்கப்படும் வாய்வழி வைரஸ் மாத்திரை என்பது இதன் தனித்துவம்.

கரோனா தடுப்பூசிக்கு முதன்முதலில் அனுமதி அளித்த நாடு பிரிட்டன். ஆனாலும், அங்கு கரோனா பெருந்தொற்றுப் பரவல் இன்னமும்

நீடிக்கிறது. அதைக் கட்டுப்படுத்த வேண்டிய அவசியம் அந்த நாட்டுக்கு இருக்கிறது. அதனால், இந்தப் புதிய மருந்துக்கு அனுமதி அளித்திருக்கிறது. இந்த வகையில் கரோனா தொற்றுப் பரவல் ஏறுமுகத்தில் இருக்கும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் உள்ளிட்ட உலக நாடுகளிடத்திலும் இது முக்கியத்துவம் பெற்றுவருகிறது. இந்தியாவில் இதைத் தயாரிக்கவும் ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின்றன.

மோல்னுபிரவிர் மாத்திரை கரோனா தொற்றைத் தொடக்கத்திலேயே கட்டுப்படுத்திவிடுவதால், தொற்றாளர்களை மருத்துவமனையில் அனுமதித்து சிகிச்சை அளிக்கப்பட வேண்டிய அவசியத்தைக் குறைப்பதிலும், அவர்களின் உயிரைக் காப்பதிலும் பெரும் பங்கு வகிக்கும் என்று வல்லுநர்கள் எதிர்பார்க்கின்றனர். இதன் மூன்று கட்ட ஆய்வுகளின்போது, மிதமான மற்றும் நடுத்தர பாதிப்பு ஏற்பட்ட கரோனா தொற்றாளர்களுக்கு இந்த மாத்திரை வழங்கப்பட்டது. 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும், உடற்பருமன், இதயநோய், நீரிழிவு போன்ற துணை நோய்களில் ஏதாவது ஒன்று காணப்பட்ட கரோனா தொற்றாளர்களிடமும் ஆய்வு செய்யப்பட்டதில், இந்த மாத்திரை தொற்றாளர்களின் இறப்பு விகிதத்தை 50% குறைத்திருக்கிறது. 29 நாட்கள் அவர்களைத் தொடர்ந்து கவனித்த அளவில் இந்த மாத்திரை வழங்கப்பட்டவர்களில் யாரும் மரணமடையவில்லை எனவும், பொய் மாத்திரை (Placebo) வழங்கப்பட்டவர்களில் 8 பேர் மரணமடைந்துள்ளனர் எனவும் தரவுகள் தெரிவிக்கின்றன. இந்த வகையில் மோல்னுபிரவிர் மாத்திரையின் பாதுகாப்புத் தன்மையும் உறுதிசெய்யப்பட்டுள்ளது. மேலும், கரோனா தடுப்பூசி செலுத்திக்கொள்ளாத தொற்றாளர்களிடம் இது ஆய்வு செய்யப்பட்டதால், இதன் நம்பகத்தன்மையும் உறுதியாகியுள்ளது. இது கர்ப்பிணிகளிடம் ஆய்வு செய்யப்படவில்லை என்பது மட்டுமே குறை.

எப்படி வேலை செய்கிறது?

வழக்கத்தில், தொற்றாளரின் செல்களில் கரோனா வைரஸ் வேகவேகமாக நகலெடுத்துப் பெருகி வளரும் குணமுடையது. மோல்னுபிரவிர் மாத்திரை கரோனா வைரஸின் மரபணு வரிசையில் நகலெடுக்க உதவுகிற முக்கியமான நொதிகளை மாற்றியமைத்துப் பல்வேறு பிழைகளை உண்டாக்கிவிடுவதால், எப்போதும்போல் நகலெடுப்பதில் கரோனா வைரஸுக்குத் தடுமாற்றம் ஏற்படுகிறது. இதன் நகலெடுப்பு வேகம் குறைந்துவிடுகிறது. உடலில் வைரஸ் எண்ணிக்கை கட்டுப்படுத்தப்படுகிறது. இப்படி, கரோனா தொற்று ஆரம்பத்திலேயே அடங்கிவிடுகிறது.

கரோனா வைரஸிடம் இதுவரை காணப்பட்ட காமா, டெல்டா, டெல்டா பிளஸ், மியூ, என எல்லா வகை வேற்றுருவங்களின் தொற்றையும் கட்டுப்படுத்தும் ஆற்றல் மோல்னுபிரவிர் மாத்திரைக்கு உள்ளது என்பது கூடுதல் நன்மை. உலக அளவில் 53 லட்சம் பேரை பலிவாங்கியிருக்கும் கரோனா தொற்றை முடிவுக்குக் கொண்டுவர இது ஓர் அருமருந்தாக அமையும் என்று வல்லுநர்கள் எதிர்பார்க்கின்றனர்.

18 வயதுக்கு மேற்பட்ட, ஏதேனும் ஒரு துணைநோயுள்ள கரோனா தொற்றாளருக்கு அறிகுறிகள் தொடங்கிய 5 நாட்களுக்குள் தொற்றை உறுதிசெய்து, இந்த மாத்திரையைக் கொடுத்துவிட வேண்டும். ஒரு வேளைக்கு 800 மி.கி. வீதம் தினமும் இரண்டு வேளைகளுக்கு மொத்தம் 5 நாட்களுக்கு இதை எடுத்துக்கொள்ள வேண்டும். மருத்துவரின் மேற்பார்வையில், வீட்டில் இருந்துகொண்டே இந்தச் சிகிச்சையை மேற்கொள்ளலாம் என்பது மற்றொரு நன்மை.

பைசர் மாத்திரை

மெர்க் நிறுவனத்தைப்போலவே பைசர் நிறுவனமும் 'PF-07321332/Ritonavir' எனும் கரோனா மாத்திரையைத் தயாரித்துள்ளது. அமெரிக்காவின் உணவு மற்றும் மருந்து ஒழுங்காற்றுக் கழகத்தின் (FDA) அனுமதிக்காக இந்த நிறுவனம் காத்திருக்கிறது. 'பேக்ஸ்லோவிட்' (Paxlovid) எனும் வணிகப் பெயரில் இது சந்தைக்கு வர இருக்கிறது; கரோனா தொற்றை ஆரம்பநிலையிலேயே தடுத்து, தொற்றாளருக்கு இறப்பு ஏற்படுவதை 89% தவிர்த்துவிடும் ஆற்றல் கொண்டது. இதைக் கர்ப்பிணிகளுக்கும் வழங்கலாம் என்பது கூடுதல் நன்மை.

இதுவும் கரோனா தொற்றின் அறிகுறிகள் தொடங்கிய 5 நாட்களுக்குள் எடுக்கப்பட வேண்டிய மாத்திரைதான். ஒரு வேளைக்கு 2 மாத்திரைகள் வீதம் தினமும் இரண்டு வேளைகளுக்கு மொத்தம் 5 நாட்களுக்கு எடுக்கப்பட வேண்டும். இது, கரோனா வைரஸ் நகலெடுக்கத் தேவையான 'புரோட்டியேஸ்' நொதியின் உற்பத்தியைத் தடுத்துவிடுவதால், தொற்றாளரிடம் இதன் எண்ணிக்கை கட்டுப்படுகிறது. தொற்று தீவிரமாவது மட்டுப்படுகிறது.

பக்கவிளைவுகள் அதிகம் இல்லாத இந்த இரண்டு வகை மாத்திரைகள் வழங்கப்படுவது நடைமுறைக்கு வரும்போது, தொற்றாளர்களுக்குச் சளிப் பரிசோதனைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டியதும், பரிசோதனைகளை அதிகப்படுத்த வேண்டியதும், அறிகுறிகளை அலட்சியம் செய்யாமல் உடனே சிகிச்சை பெறவேண்டியதும் முக்கியமாகின்றன. அதற்கு அரசுகளும் சமூகமும் தயாராக வேண்டும் என்கின்றனர் வல்லுநர்கள். இது எல்லா நாடுகளுக்கும் பொருந்தும்.

அடுத்ததாக, தடுப்பூசிகள் செலுத்திக்கொண்டவர்களுக்கும் கரோனா தொற்று ஏற்பட வாய்ப்புள்ளதால், பெருந்தொற்றைக் கட்டுப்படுத்த கரோனா மாத்திரைகளின் பயன்பாடு அவசரமாகத் தேவைப்படுகிறது எனவும், தடுப்பூசிகள் மிகக் குறைவான அளவில் செலுத்தப்பட்டுள்ள ஏழை மற்றும் நடுத்தர நாடுகளில் கரோனா தொற்றாளர்களுக்கு இந்த மாத்திரைகளைப் பயன்படுத்தித் தொற்றைக் கட்டுப்படுத்தலாம் எனவும் வல்லுநர்கள் யோசனை கூறியுள்ளனர். ஆக மொத்தத்தில், தடுப்பூசியுடன் இந்த மாத்திரைகளும் பயனுக்கு வந்துவிட்டால், அடுத்தடுத்த கரோனா அலைகள் எத்தனை வந்தாலும், உயிராபத்து இல்லாமல் அவற்றை எதிர்கொள்ள முடியும் எனும் நம்பிக்கை பிறந்துள்ளது.

---

### 4. அதிகரிக்கும் தனிநபர் கடன்கள்: பொருளாதார நிலை மோசமாவதன் அறிகுறி

வங்கிகளால் அளிக்கப்பட்டுவரும் பல்வேறு வகையான கடன்களில் தனிநபர் கடன்களின் அளவு மட்டும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது நாட்டின் பொருளாதார நிலைக்கு நல்ல அறிகுறியாகத் தோன்றவில்லை. நடப்பு நிதியாண்டின் இரண்டாம் காலாண்டில் (ஜூலை–செப்டம்பர்) மற்ற கடன்களைக் காட்டிலும் தனிநபர் கடன்களே அதிகமாக உள்ளன. இதற்கு முன் எப்போதும் இப்படி தனிநபர் கடன்களின் அளவு, தொழில் துறைக் கடன்கள் உள்ளிட்ட மற்ற கடன்களின் அளவைக் கடந்ததில்லை.

ரிசர்வ் வங்கி சமீபத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, இரண்டாம் காலாண்டு வரையிலும் வங்கிகளிடமிருந்து அளிக்கப்பட்ட மொத்தக் கடன் தொகை ரூ.109.5 லட்சம் கோடி எனத் தெரியவந்துள்ளது. கடந்த ஆண்டின் இதே காலாண்டுடன் ஒப்பிடுகையில், தொழில் துறைக்கு வழங்கப்பட்ட இதுவரையிலுமான மொத்தக் கடன் ரூ.28.3 லட்சம் கோடியாகக் குறைந்துள்ளது; விகிதாச்சாரக் கணக்கில், மொத்தக் கடனளவில் 27%–லிருந்து 26%– ஆகக் குறைந்துள்ளது. அதே நேரத்தில், மொத்தத் தனிநபர் கடன்கள் ரூ.29.2 லட்சம் கோடி உயர்ந்தும் 25%–லிருந்து 27%–ஆக அதிகரித்தும் உள்ளன.

தொழில் துறையினருக்கு அளிக்கப்பட்ட கடனளவு குறைந்திருப்பதற்கு, அடிப்படைத் தொழில்களை நடத்துவோர் தாம் வழக்கமாக வாங்கும் கடன்களின் அளவைக் குறைத்துக்கொண்டிருப்பது ஒரு முக்கியமான காரணம். இரும்பு மற்றும் எஃகு, உரங்கள் மற்றும் மருந்துப் பொருட்கள் உள்ளிட்ட ரசாயனங்கள் ஆகிய அடிப்படைத் தொழில் துறையினர் வாங்கும் கடன்களின் அளவு குறைந்துள்ளது. சாலைகள், துறைமுகங்கள், மின்சக்தி ஆகிய துறைகள் வாங்கும் கடனளவு அதிகரித்துள்ளது என்றாலுமேகூட அதுவும்கூட உள்கட்டமைப்புத் துறையில் நேர்மறையான கடன் வளர்ச்சியாக பார்க்கப்படவில்லை.

வழக்கமாக ஜூலை தொடங்கி செப்டம்பரில் முடியும் காலாண்டில் வங்கிகளின் கடன் வளர்ச்சி விகிதம் அதிகரிப்பது நேர்மறையாக மதிப்பிடப்படும். அடுத்த காலாண்டு, பண்டிகைக் காலம் என்பதால் தொழில் துறையில் செய்யப்படும் புதிய முதலீடுகள் வேலைவாய்ப்புகளை அதிகப்படுத்தும் என்ற அடிப்படையில் வரவேற்கப்படும். ஆனால், நடப்பு நிதியாண்டின் முதல் அரையாண்டில், பெருந்தொழில் துறையினர் வாங்கிய கடன்கள் வழக்கத்தைக் காட்டிலும் 5% குறைந்துள்ளது. தொழில் துறையின் கடன் வளர்ச்சி விகிதம் 2.3% குறைந்துள்ளது. அதற்கு மாறாக, இந்த ஆறு மாதங்களில் வீட்டுக் கடன்கள், வாகனக் கடன்கள், நகைக் கடன்கள் உள்ளிட்ட தனிநபர் கடன்களின் அளவு வழக்கத்தைக் காட்டிலும் ரூ.73,000 கோடி வரையில் அதிகரித்துள்ளது. வங்கிகளால் இதுவரை வழங்கப்பட்டுள்ள தனிநபர் கடன்கள் மொத்தம் ரூ.29.2 லட்சம் கோடியாக அதிகரித்திருப்பதற்கும் அதுவே காரணம்.

கடன் வளர்ச்சி, தொழில் துறை உற்பத்தியில் நேரடி விளைவை ஏற்படுத்துவது. கடன் வளர்ச்சி விகிதம் நிலையாக இருந்தால்தான் வட்டியும் நிலையாக இருக்கும். சேமிப்புக்கான சூழலையும் அது உருவாக்கும். தவிர, தனிநபர் கடனளவை அதிகரிப்பதால் குறுகிய கால அளவுக்குப் பணப் புழக்கத்தை ஏற்படுத்தலாமேயொழிய, அதனாலேயே பொருளாதார நிலையை மீட்டெடுத்துவிட இயலாது.

**5. சேதி தெரியுமா?**

அக்.29: ஃபேஸ்புக் நிறுவனத்தின் பெயர் 'மெட்டா' என்று மாற்றப்பட்டுள்ளதாக அந்நிறுவனத்தின் தலைமை நிர்வாகி மார்க் ஸகர்பர்க் அறிவித்துள்ளார்.

நவ.1: வன்னியர்களுக்கு 10.5% உள் இடஒதுக்கீடு வழங்கும் தமிழக அரசின் சட்டத்தை ரத்து செய்து சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளை உத்தரவிட்டது.

நவ.1: இந்தியாவின் கோவேக்சின் தடுப்பூசியை அங்கீகரித்து, அவசர பயன்பாட்டுப் பட்டியலில் உலக சுகாதார அமைப்பு சேர்த்தது.

நவ.3: தற்போது விதிக்கப்பட்டுவரும் கலால் வரியிலிருந்து ஒரு லிட்டர் பெட்ரோலுக்கு ரூ.5, டீசலுக்கு ரூ.10 குறைக்கப்படுவதாக மத்திய அரசு அறிவித்தது.

நவ.3: இந்திய கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்சியாளராக முன்னாள் கேப்டன் ராகுல் டிராவிட் நியமிக்கப்பட்டார். 2023 உலகக் கோப்பை வரை இப்பொறுப்பில் அவர் இருப்பார் என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் (பிசிசிஐ) அறிவித்தது.

நவ.4: விங் கமாண்டர் அபிநந்தன் வர்தமானுக்கு இந்திய விமானப் படை குரூப் கேப்டனாகப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

நவ.5: தாம்பரம் பகுதி மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டதற்கான அவசரச் சட்டத்தைத் தமிழக அரசு பிறப்பித்தது.

நவ.6: சர்வதேச ஒலிம்பிக் கமிட்டிக்கான (ஐஓசி) உறுப்பினர்கள் தேர்தல் ஆணையத்தின் தேர்வுக் குழுவில் இந்தியாவின் ஒலிம்பிக் சாம்பியன் அபினவ் பிந்த்ரா இடம்பெற்றார்.

---

**6. ஆப்கன் சூழல் குறித்து ஆலோசனை: 7 நாடுகளின் பாதுகாப்பு ஆலோசகர்கள் தில்லி வருகை**

ஆப்கானிஸ்தான் தலிபான்களின் கட்டுப்பாட்டில் சென்ற பின்னர் ஏற்பட்டுள்ள பாதுகாப்பு சூழல் குறித்து ஆலோசனை நடத்த இந்தியா ஏற்பாடு செய்துள்ள கூட்டத்தில் பங்கேற்க ரஷியா, ஈரான் மற்றும் ஐந்து மத்திய ஆசிய நாடுகளின் பாதுகாப்பு ஆலோசகா்கள் செவ்வாய்க்கிழமை தில்லி வருகின்றனர்.

அவர்கள் அனைவரும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் தலைமையில் நடைபெறும் மாநாட்டில் பங்கேற்று ஆப்கன் நிலவரம் குறித்து ஆலோசிக்க உள்ளனர். இந்த மாநாட்டில் பங்கேற்க சீனா, பாகிஸ்தானுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. ஆனால், முன்கூட்டியே திட்டமிட்ட கூட்டங்கள் உள்ளதால் இக்கூட்டத்தில் பங்கேற்க முடியவில்லை என சீனாவும், இந்தக்கூட்டத்தை புறக்கணிப்பதாக பாகிஸ்தானும் அறிவித்தன.

எனினும், இந்தக் கூட்டத்தில் கஜகஸ்தான், கிர்கிஸ்தான், தஜிகிஸ்தான், துர்க்மேனிஸ்தான், உஸ்பெகிஸ்தான் உள்பட மொத்தம் 8 நாடுகளின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர்கள் பங்கேற்க உள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆப்கனில் அண்மையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களால் உருவாகியுள்ள பாதுகாப்பு அச்சுறுத்தல், பாதுகாப்பு சவால்கள், ஆப்கன் மக்களுக்கு அமைதியும், ஸ்திரத்தன்மையும் ஏற்படுத்துதல் ஆகியவை குறித்து இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்படும் என இந்தியா தெரிவித்துள்ளது.

இந்தக் கூட்டத்தில் பங்கேற்கும் அனைத்து நாடுகளும் தலிபான்களை அங்கீகரிக்காத நாடுகள் என்றும், ஆப்கன் நிலைமையில் ஒருமித்த கருத்துகளை இந்த நாடுகள் கொண்டுள்ளன என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

---

**7. நவ.11–இல் தில்லியில் ஆளுநர்கள் மாநாடு**

குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் தலைமையில் நவ.11ஆம் தேதி ஆளுநர்கள் மற்றும் துணைநிலை ஆளுநர்களின் 51ஆவது மாநாடு தில்லியில் உள்ள அவரது மாளிகையில் நடைபெறுகிறது.

இதில், குடியரசு துணைத்தலைவர் M வெங்கையா, பிரதமர் மோடி, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா உள்பட அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் ஆளுநர்கள் மற்றும் துணைநிலை ஆளுநர்கள் கலந்துகொள்கின்றனர். ராம்நாத் கோவிந்த் தலைமையில் நடக்கும் நான்காவது மாநாடு இதுவாகும்.

---

**8. சர்வதேச டேபிள் டென்னிஸ்: இந்தியாவின் மனிகா–அர்ச்சனா ஜோடி 'சாம்பியன்'**

உலக டேபிள் டென்னிஸ் வாய்ப்புக்கான சர்வதேச போட்டி சுலோவெனியா நாட்டின் லாஸ்கோ நகரில் நடந்தது. இதில் பெண்கள் ஒற்றையர் அரைஇறுதி ஆட்டத்தில் இந்தியாவின் மனிகா பத்ரா, 11–ம் நிலை வீராங்கனையான சீனாவின் வாங் யிடியிடம் மோதினார். விறுவிறுப்பான இந்த மோதலில் வாங் யிடி 11–7, 7–11, 13–11, 10–12, 11–7, 11–5 என்ற செட் கணக்கில் மனிகாவை தோற்கடித்து இறுதிப்போட்டிக்கு முன்னேறினார். தோல்வி அடைந்த மனிகா வெண்கலப்பதக்கத்துடன் திருப்தி அடைய வேண்டியதாயிற்று.

இதைத் தொடர்ந்து நேற்று நடந்த பெண்கள் இரட்டையர் இறுதி ஆட்டத்தில் இந்தியாவின் மனிகா பத்ரா, அர்ச்சனா கமாத் ஜோடியினர் 11–3, 11–8, 12–10 என்ற நேர் செட் கணக்கில் சகோதரிகளான மெலானி டையாஸ்– அட்ரினா டையாஸ் (பியுர்டோ ரிகோ) இணையை வீழ்த்தி சாம்பியன் கோப்பையை தட்டிச் சென்றனர்.

---

**9. விண்வெளியில் நடந்த முதல் சீனப் பெண்!**

சீன விமானப் படை பெண் விமானியான வாங் யாபிங் (41), விண்வெளி நிலைய கட்டமைப்புப் பணிக்காக விண்வெளியில் நடந்து சாதனை புரிந்தாா். இதன்மூலம் விண்வெளியில் நடந்த முதல் சீனப் பெண் என்ற வரலாற்றை அவா் படைத்துள்ளாா்.

சீனா 'தியாங்காங்' என்ற விண்வெளி நிலையத்தைக் கட்டமைத்து வருகிறது. பூமியிலிருந்து 340 கி.மீ. முதல் 450 கி.மீ. உயரத்தில் இந்த விண்வெளி நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது. இதற்கான பாகங்களை விண்கலங்கள் மூலம் பலகட்டங்களாக சீனா கொண்டு சென்றுள்ளது. அதன் மையத் தொகுதியான 'தியான்ஹே' ஏற்கெனவே விண்வெளி நிலையத்தில் பொருத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், சென்ஷோ–13 என்ற விண்கலம் மூலம் வாங் யாபிங் உள்ளிட்ட மூன்று விண்வெளி வீரா்கள் கடந்த அக். 16–ஆம் தேதி விண்வெளி நிலையத்துக்கு அனுப்பப்பட்டனா். அவா்களில் வாங் யாபிங், ஷாய் ஷிகாங் ஆகியோா் விண்வெளி நிலையத்தின் மையத் தொகுதியான தியான்ஹேயிலிருந்து வெளியே வந்து கட்டமைப்புப் பணியில் ஈடுபட்டனா்.

பூமியின் வளிமண்டலத்துக்கு அப்பால் உள்ள விண்கலம் அல்லது விண்வெளி நிலையத்திலிருந்து அதன் பராமரிப்பு, கட்டமைப்புப் பணிக்காக வீரா்கள் வெளியே வருவது 'விண்வெளி நடை' எனப்படுகிறது.

'அந்த வகையில் இருவரும் திங்கள்கிழமை சுமாா் 6.30 மணி நேரம் விண்வெளியில் நடந்து தமது பணிகளை முடித்துவிட்டு மையத் தொகுதிக்குத் திரும்பியதாக' சீன அரசு செய்தி நிறுவனமான ஷின்ஹுவா தெரிவித்துள்ளது. அப்போது மூன்றாவது விண்வெளி வீரரான யீ குவாங்ஃபு மையத் தொகுதியின் உள்ளே இருந்து அவா்களுக்கு உதவி புரிந்ததாகவும் அச்செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதுவரை... இதற்கு முன்னதாக, 1984–ஆம் ஆண்டுமுதல் 2019, அக்டோபா் வரை மொத்தம் 15 பெண்கள் 42 முறை விண்வெளி நடையில் பங்கேற்றுள்ளனா். ரஷியாவை சோ்ந்த ஸ்வெட்லானா சாவிட்ஸ்கயா என்பவா்தான் விண்வெளியில் நடந்த முதல் பெண் ஆவாா்.

சாதனைப் பெண்: ஷான்டாங் மாகாணத்தைச் சோ்ந்த வாங் யாபிங், 5 வயது பெண் குழந்தைக்குத் தாய் ஆவாா். 1997–இல் சீன ராணுவத்தின் விமானப் படையில் விமானியாக சோ்ந்தாா். பின்னா், சீன ராணுவத்தின் விண்வெளிப் பிரிவில் 2010–இல் இணைந்தாா். இப்போதைய விண்வெளிப் பயணத்துக்காக அவா் 2019, டிசம்பரில் தோ்வு செய்யப்பட்டாா்.

சென்ஷோ விண்கலம் மூலம் விண்வெளி நிலையத்துக்குச் சென்ற அவா், ஏற்கெனவே மையத் தொகுதிக்குள் இருந்தவாறு மாணவா்களுக்கு விரிவுரை நிகழ்த்தினாா். இதை நாடு முழுவதும் உள்ள 80,000 பள்ளிகளைச் சோ்ந்த 6 கோடி மாணவா்கள் கண்டு பயனடைந்தனா் என்பது குறிப்பிடத்தக்கது.

'விண்வெளி நடையில் பெண்கள் பங்கேற்பது விண்வெளித் திட்டத்தின் ஒருங்கிணைந்த பகுதிதான் என்றாலும் வாங் யாபிங்கின் துணிச்சலுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்' என சா்வதேச விண்வெளி வீரா்கள் கூட்டமைப்புக்கான போக்குவரத்துக் குழுவின் துணைத் தலைவா் யாங்

யுகுவாங் குறிப்பிட்டுள்ளதாக குளோபல் டைம்ஸ் நாளிதழ் தெரிவித்துள்ளது.

---

**10. பாரிஸ் மாஸ்டர்ஸ் டென்னிஸ் 6வது முறையாக ஜோகோவிச் சாம்பியன்**

பிரான்சில் நடந்த பாரிஸ் மாஸ்டர்ஸ் ஓபன் டென்னிஸ் தொடரின் ஆண்கள் ஒற்றையர் பிரிவில், நம்பர் 1 வீரர் நோவாக் ஜோகோவிச் 6 முறையாக சாம்பியன் பட்டம் வென்று அசத்தினார். இறுதிப் போட்டியில் ரஷ்யாவின் நடப்பு சாம்பியன் டானியல் மெட்வதேவுடன் (25 வயது, 2வது ரேங்க்) மோதிய ஜோகோவிச் (34வயது) 4–6, 6–3, 6–3 என்ற செட் கணக்கில் 2 மணி, 15 நிமிடம் போராடி வென்று பாரிஸ் மாஸ்டர்ஸ் பட்டத்தை 6வது முறையாக கைப்பற்றினார். ஏற்கனவே 2009, 2013, 2014, 2015, 2019ல் அவர் இங்கு பட்டம் வென்றிருந்தார். சமீபத்தில் நடந்த யுஎஸ் ஓபன் பைனலில் தன்னை தோற்கடித்த மெட்வதேவுக்கு நேற்றைய ஆட்டத்தின் மூலம் பதிலடி கொடுத்தார்.

மேலும், ஏடிபி மாஸ்டர்ஸ் 1000 அந்தஸ்து தொடர்களில் இது ஜோகோவிச் வெல்லும் 37வது பட்டமாகும். இந்த வரிசையில் ஸ்பெயின் நட்சத்திரம் ரபேல் நடால் (36 பட்டம்) 2வது இடத்துக்கு தள்ளப்பட்டார். அடுத்ததாக, இத்தாலியின் டுரின் நகரில் வரும் 14ம் தேதி தொடங்கும் நிட்டோ ஏடிபி பைனல்ஸ் தொடரில் ஜோகோவிச் களமிறங்குகிறார். இந்த தொடரில் பங்கேற்க தகுதி பெற்றுள்ள, சீசன் முடிவு தரவரிசையில் டாப் 8 இடங்களைப் பிடித்த வீரர்கள்: 1. ஜோகோவிச், 2. மெட்வதேவ் (நடப்பு சாம்பியன்), 3. அலெக்சாண்டர் ஸ்வெரவ் (ஜெர்மனி), 4. ஸ்டெபனோஸ் சிட்சிபாஸ் (கிரீஸ்), 5. ஆந்த்ரே ருப்லேவ் (ரஷ்யா), 6. மேட்டியோ பெரட்டினி, 7. ஹூபர்ட் ஹர்காக்ஸ் (போலந்து), கேஸ்பர் ரூட் (நார்வே).

---

**1.** 'உலக நகரங்கள் நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?



அ) அக்டோபர் 29

**ஆ) அக்டோபர் 31 ☑**

இ) நவம்பர் 1

ஈ) நவம்பர் 3

✓ உலகளாவிய நகரமயமாக்கலில் பன்னாட்டுச் சமூகத்தின் ஆர்வத்தை ஊக்குவிப்பதற்காக ஒவ்வோர் ஆண்டும் அக்.31 அன்று உலக நகரங்கள் நாள் கடைபிடிக்கப்படுகிறது. கடந்த 2013ஆம் ஆண்டு, ஐநா பொதுச்சபை தீர்மானத்தில் இந்த நாள் நிறுவப்பட்டது. கடந்த 2014ஆம் ஆண்டில் முதன்முதலாக இந்நாள் கொண்டாடப்பட்டது.

✓ "Adapting Cities for Climate Resilience" என்பது நடப்பாண்டில் (2021) வரும் உலக நகரங்கள் நாளுக்கானக் கருப்பொருளாகும்.

---

**2.** 2020-21'க்கான ஊழியர்களின் வருங்கால வைப்பு நிதி (EPF) வைப்புத்தொகைக்கு நிர்ணயிக்கப்பட்ட வட்டி விகிதம் என்ன?

8.5%

அ) 7.0%

ஆ) 7.5%

இ) 8.0%

**ஈ) 8.5% ☑**

✓ 2020-21ஆம் ஆண்டிற்கான ஊழியர்களின் வருங்கால வைப்பு நிதி வைப்புத்தொகையில் 8.5% வருமானத்தை வழங்க நிதி அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது. இந்த நடவடிக்கை 6.4 கோடி சந்தாதாரர்களை சென்றடையும். 2019-20 இடைப்பட்ட காலத்திலும் இதே விகிதம்தான் இருந்தது. EPFO, தனிப்பட்ட கணக்குகளில் வட்டியை வரவு வைப்பதற்கு முன்னதாக, தொழிலாளர் அமைச்சகம் வட்டி விகிதத்தை அறிவிக்கும்.

---

**3.** சிறந்த பொதுப்போக்குவரத்து அமைப்புகொண்ட நகரத்திற்கான நகர்ப்புற விவகார அமைச்சகத்தின் விருதை வென்ற நகரம் எது?



அ) மும்பை

**ஆ) சூரத் ☑**

இ) காந்திநகர்

ஈ) லக்னோ

✓ மத்திய வீட்டுவசதி & நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகமானது 2021 ஆம் ஆண்டின் நகர்ப்புற நகர்வு இந்தியா மாநாட்டின் 14ஆவது பதிப்பை நடத்தியது. சிறந்த பொதுப்போக்குவரத்து அமைப்புகொண்ட நகரத்திற்கா -ன விருதை சூரத் நகரம் வென்றது. கொச்சி நகரம் மிகவும் நிலையான போக்குவரத்து அமைப்புகொண்ட நகரமாக மதிப்பிடப்பட்டது.

✓ அர்பன் மொபிலிட்டி இந்தியா மாநாட்டில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி விருதுகளை வழங்கினார். மெட்ரோ இரயிலுடன் கூடிய நாக்பூரின் பன்முகட்டு ஒருங்கிணைப்பு, தில்லியின் மெட்ரோ ஆகியவையும் விருதுகளை வென்றன.

---

**4.** மோட்டார் வாகன வரிகள் மற்றும் மின்சார வாகனங்கள் (EVகள்) மீதான பதிவுக்கட்டணங்களில் முழு விலக்களிப்பதாக அறிவித்துள்ள இந்திய மாநிலம் எது?



**அ) ஒடிஸா ☑**

ஆ) ஆந்திர பிரதேசம்

இ) தெலுங்கானா

ஈ) பஞ்சாப்

✓ ஒடிஸா மாநிலத்தில் மின்சார வாகனங்களுக்கான (EVகள்) மோட்டார் வாகன வரிகள் & பதிவுக்கட்டணங்களுக்கு முழு விலக்கு அளிப்பதாக ஒடிஸா மாநில அரசு அறிவித்துள்ளது. ஒடிசா மோட்டார் வாகனங்கள் வரி விதிப்புச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட விலக்கு, 2025 வரை பொருந்தும்.

✓ மின்சார வாகனங்களை வாங்குபவர்கள், உற்பத்தியாளர்கள், மின் கலங்கள் மற்றும் மின்னேற்ற நிலையங்கள் ஆகியவற்றுக்கான ஊக்க -த்தொகை ஒடிஸா மின் வாகனக் கொள்கையின் கீழ் நீட்டிக்கப்பட்டு உள்ளது.

---

**5.** ஐநா'இன் FAO மாநாட்டில் பங்கேற்க அழைக்கப்பட்ட இந்திய மாநிலம் எது?



அ) தமிழ்நாடு

**ஆ) தெலுங்கானா ☑**

இ) மகாராஷ்டிரா

ஈ) அஸ்ஸாம்

✓ ஐநா உணவு மற்றும் உழவு அமைப்பின் (FAO) மெய்நிகர் மாநாட்டில் பங்கேற்க FAO'ஆல் தெலுங்கானா அரசாங்கம் அழைக்கப்பட்டுள்ளது. இத்தாலியின் ரோம் நகரத்தில் இருந்து இந்த மாநாடு நடத்தப்படுகிறது. 'தரமான விதை உற்பத்தி முறை: இந்தியாவின் வெற்றிக்கதை: விதை மையமாக தெலுங்கானா' என்ற தலைப்பில் உரையாற்ற தெலுங்கானா மாநிலத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

---

**6.** தொழில்துறை உறவு விதிகள், 2021'ஐ அங்கீகரித்துள்ள மாநிலம் எது?



**அ) அஸ்ஸாம் ☑**

ஆ) கர்நாடகா

இ) மேற்கு வங்கம்

ஈ) கேரளா

✓ பணியமர்த்துநர் மற்றும் ஊழியர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதை நோக்கமாகக்கொண்ட தொழில்துறை உறவு விதிகள், 2021'க்கு அசாம் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. COVID-19 தொற்றுநோய்களின் போது துன்பங்களை எதிர்கொண்ட புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு ரேஷன் வழங்கும் திட்டத்திற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

✓ தொழில்துறை உறவுகள் தொடர்பான மூன்று மத்திய தொழிலாளர் குறியீடுகளின் விதிகளை எளிமைப்படுத்த விதிகள் உருவாக்கப்பட்டு உள்ளன.

---

**7.** இந்தியாவில் தேசிய டிரோன் தொழில்நுட்ப மாநாட்டைத் தொடங்க முன்மொழிந்துள்ள நடுவண் அமைச்சகம் எது?

அ) சிவில் விமான போக்குவரத்து அமைச்சகம்

ஆ) அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம்

**இ) மின்னணு & தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் ☑**

ஈ) கல்வி அமைச்சகம்

✓ இந்தியாவில் தேசிய அளவிலான டிரோன் தொழில்நுட்ப மாநாட்டை நடத்த மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் முன்மொழிந்துள்ளது. இது ஒரு வருடாந்திர நிகழ்வாக இருக்கும் என்று அவ்வமைச்சகம் தெரிவித்துள்ளது. இது பயனர்கள் மற்றும் தொழில்நுட்ப வழங்குநர்களுக்கு ஒரு தளத்தை உருவாக்கும். சமீபத்தில், இந்திய அரசு புதிய டிரோன் விதிகள், 2021'ஐ வெளியிட்டது.

---

**8.** 'Capricorn Energy PLC' எனத் தனது பெயரை மாற்றிக்கொண்ட உலகளாவிய நிறுவனம் எது?

அ) BP எண்ணெய் மற்றும் எரிவாயு

**ஆ) கெய்ர்ன் எனர்ஜி PLC ☑**

இ) ONGC விதேஷ்

ஈ) ரிலையன்ஸ் எனர்ஜி

✓ பிரித்தானியாவைச் சேர்ந்த எண்ணெய் மற்றும் எரிவாயு நிறுவனமான கெய்ர்ன் எனர்ஜி PLC தனது பெயரை 'Capricorn Energy PLC' என மாற்றியுள்ளதாகவும், 2021 டிசம்பர் முதல் இப்பெயர் நடைமுறைக்கு வரலாம் என்றும் கூறியுள்ளது. இந்நிறுவனம் இந்திய அரசாங்கத்துடன் $1 பில்லியன் டாலர் முன்தேதியிட்ட வரி தகராறில் ஈடுபட்டுள்ளது. இந்த வழக்கு முடியும் தருவாயில் உள்ளது.

---

**9. "பத்திரிகையாளர்களுக்கு எதிரான குற்றங்களுக்கு தண்டனை விதிக்கப்படுவதை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான பன்னாட்டு நாள்" அனுசரிக்கப்படுகிற தேதி எது?**




அ) நவம்பர் 1

**ஆ) நவம்பர் 2 ☑**

இ) நவம்பர் 10

ஈ) நவம்பர் 12

✓ ஒவ்வோர் ஆண்டும், ஐநா அவை நவ.2ஆம் தேதியை "பத்திரிகையாளர் –களுக்கு எதிரான குற்றங்களுக்கு தண்டனை விதிக்கப்படுவதை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான பன்னாட்டு நாள்" அனுசரிக்கிறது.

✓ விசாரணை மற்றும் வழக்குத்தொடுப்பதில் பத்திரிகையாளர்களின் பாத்திரத்தை இது எடுத்துக்கூறுகிறது. ஐநா சபையின் அறிக்கையின்படி, 2006 மற்றும் 2020'க்கு இடையில் 1,200'க்கும் மேற்பட்ட ஊடகவியலா –ளர்கள் செய்திகளைத் தந்தமைக்காகவும், பொதுமக்களுக்கு தகவல்க –ளைக் கொண்டு சென்றதற்காகவும் கொல்லப்பட்டுள்ளனர்.

---

**10. வாங் யாப்பிங் என்பவர் பின்வரும் எந்த நாட்டின் விண்வெளி வீராங்கனை ஆவார்?**



அ) இஸ்ரேல்

**ஆ) சீனா ☑**

இ) ஐக்கிய அரபு அமீரகம்

ஈ) ஜப்பான்

✓ வாங் யாப்பிங், விண்வெளியில் நடந்த முதல் சீனப் பெண்மணி ஆனார். அவரது குழு, தியாங்கோங் விண்வெளி நிலையத்திற்கு வெளியே ஆறு மணிநேரப்பயணத்தை நிறைவு செய்தது. "விண்ணுலக அரண்மனை" என்று பொருள்படும் தியாங்கோங், செவ்வாய் கிரகத்தில் ரோவரை தரையிறக்கியுள்ளதோடு, நிலவுக்கு ஆய்வுக்கலங்களையும் அனுப்பி உள்ளது. அதன் மையத்தொகுதியானது ஏற்கனவே விண்வெளி நிலையத்தில் பொருத்தப்பட்டுள்ளது. இவ்விண்வெளி நிலையம் 2022 ஆம் ஆண்டில் செயல்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. 200 பாரம்பரிய விதைகளை பாதுகாக்கும் விதைத் தாய்**

சுமார் 200–க்கும் மேற்பட்ட பாரம்பரிய விதைகளை மகாராஷ்டிராவை சேர்ந்த ரஹிபாய் சோமாபூபேரே பாதுகாத்து வருகிறார். விதைத் தாய் என்றழைக்கப்படும் அவருக்கு குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் பத்மஸ்ரீ விருதினை வழங்கி கவுரவித்துள்ளார்.

மகாராஷ்டிர மக்கள் அவரை 'விதைத்தாய்' என்று அழைக்கின்றனர்.

---

**2. ஆப்கன் விவகாரம் குறித்த ஆலோசனை – ரஷ்யா உள்ளிட்ட ஏழு நாடுகளின் தலைவர்கள் இந்தியா வருகை:**

ஆப்கானிஸ்தான் விவகாரம் குறித்து ஆலோசனை நடத்துவதற்காக ரஷ்யா, ஈரான் உள்ளிட்ட 7 நாடுகளின் தலைவர்கள் நேற்று இந்தியா வந்தனர்.

ஆப்கானிஸ்தானில் இருந்து கடந்த ஆகஸ்ட் மாதம் அமெரிக்கப் படைகள் வெளியேறின. இதையடுத்து, தலிபான்கள், அங்கு ஆட்சிப் பொறுப்பேற்று உள்ளனர். தலிபான் ஆட்சியாளர்களுக்கு சீனா, பாகிஸ்தான் உள்ளிட்ட ஒருசில நாடுகளே ஆதரவு தெரிவித்துள்ளன. இந்தியா, அமெரிக்கா உள்ளிட்ட பெரும்பாலான நாடுகள் தலிபான்களுக்கு ஆதரவு தரவில்லை.

இந்த சூழலில், ஆப்கானிஸ்தானில் ஆட்சி அமைத்துள்ள தலிபான்களால் ஆசிய கண்டத்தில் தீவிரவாத அச்சுறுத்தல் எழுந்துள்ளதாக பரவலாக கருத்து எழுந்துள்ளது. இந்நிலையில், இந்த விவகாரம் குறித்து இந்தியா தலைமையில் டெல்லியில் இன்றுஆலோசனைக் கூட்டம் நடைபெறவுள்ளது. தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் தலைமையில் நடைபெறும் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் ரஷ்யா, ஈரான், கஜகஸ்தான், தஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தான், கிர்கிஸ்தான், துர்க்மேனிஸ்தான் ஆகிய 7 நாடுகளின் பாதுகாப்புத் துறை தலைவர்கள் பங்கேற்கவுள்ளனர்.

---

**3. அருணாச்சல பிரதேச எல்லைக்குள் சீனா உருவாக்கிய கிராமம் 1959–ல் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதி: இந்திய ராணுவம் தகவல்**

அருணாச்சல பிரதேச எல்லைக்குள் சீன ராணுவம் ஊடுருவியதாக பென்டகன் அறிக்கை குறிப்பிட்ட நிலையில், சர்ச்சைக்குரிய கிராமத்தை 1959–ம் ஆண்டு சீனா ஆக்கிரமித்தது என்று இந்திய ராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அருணாச்சலபிரதேசத்துக்கு சீனா அடிக்கடி உரிமை கொண்டாடி வருகிறது. அதற்கு இந்தியா தகுந்த பதிலடி கொடுத்து வருகிறது. இதனிடையே, அமெரிக்க ராணுவ தலைமையகமான பென்டகன் கடந்த வாரம் அந்நாட்டு நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த ஆண்டு அறிக்கையில், அருணாச்சல பிரதேசத்தில் சர்ச்சைக்குரிய பகுதியில் சுமார் 100 வீடுகளைக் கொண்ட கிராமத்தை சீனா உருவாக்கி உள்ளதாகவும் இந்திய பகுதிக்குள் 4.5 கி.மீ. தூரம் வரை சீனா ஊடுருவியுள்ளதாகவும் தெரிவித்தது.

இதுகுறித்து இந்திய ராணுவஅதிகாரிகள் கூறும்போது, "அருணாச்சல பிரதேசத்தில் மேல்சுபன்சிரி மாவட்டத்தில் பென்டகன் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளசர்ச்சைக்குரிய பகுதி 1959–ம்ஆண்டு சீன ராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதியாகும். பல ஆண்டுகளாகவே அந்தப் பகுதியை ராணுவ முகாமாக சீனா பயன்படுத்தி வருவதோடு பல்வேறு கட்டுமானங்களையும் கட்டி வருகிறது. இவை குறுகிய காலத்தில் கட்டப்பட்ட கட்டிடங்கள் இல்லை" என்று தெரிவித்தனர்.

---

**4. திருப்பதியில் தென்மண்டல முதல்வர்கள் மாநாடு**

திருப்பதியில் வரும் 14–ம் தேதி மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தலைமையில் தென் மண்டல முதல்வர்கள் மாநாடு நடைபெற உள்ளது. திருப்பதியில் உள்ள தாஜ் நட்சத்திர ஒட்டலில் இம்மாதம் 14–ம் தேதி, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தலைமையில், தென் மண்டல வளர்ச்சிகுறித்து முதல்வர்கள் மாநாடு நடைபெறவுள்ளது. இதில், ஆந்திரா, தெலங்கானா, தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா மாநில முதல்வர்கள் மற்றும் புதுச்சேரி, அந்தமான், நிக்கோபார், லட்சத்தீவு போன்ற யூனியன் பிரதேசங்களின் ஆளுநர்களும் பங்கேற்கின்றனர்.

இதில் தென்னிந்தியாவின் வளர்ச்சி, பிரச்னைகள் குறித்து ஆலோசனை நடத்தப்படும்.

---

**5. சாலையில் பழம் விற்ற பணத்தில் பள்ளிக்கூடம் கட்டிய பெரியவர்: பத்மஸ்ரீ விருது பெற்றவருக்கு குவியும் பாராட்டுகள்**

கர்நாடகாவில் சாலையில் பழம்விற்ற பணத்தில் பள்ளிக்கூடம் கட்டிய ஹரேகலா ஹாஜப்பாவுக்கு பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டுள்ளது.

கர்நாடக மாநிலம் தக்ஷின கன்னட மாவட்டம் மங்களூரு அருகேயுள்ள நியூபடப்பு கிராமத்தைச் சேர்ந்தவர் ஹரேகலா ஹாஜப்பா (68). இவர் மங்களூரு பேருந்து நிலையத்தில் ஆரஞ்சு, கொய்யா உள்ளிட்ட பழங்களை விற்று வந்தார். இதன்மூலம் நாளொன்றுக்கு ₹150 வரை சம்பாதித்தார்.

சுமார் 40 ஆண்டுகளுக்கு முன் 2 வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் இவரிடம் ஆரஞ்சு பழத்தின் விலையைக்கேட்டனர். அவருக்கு ஆங்கிலம் தெரியாததால் அவர்களுடன் பேச முடியவில்லை. இதனால் வருத்தம் அடைந்த ஹாஜப்பா, தன்னைப் போன்று கல்வி கற்க முடியாமல் இருக்கும் தன் கிராம மக்களுக்காக பள்ளிக்கூடம் தொடங்க வேண்டும் என நினைத்தார். இது தொடர்பாக அரசு அதிகாரிகளிடம் பல முறை மனு அளித்தார். நீண்ட காலம் காத்திருந்தும் எவ்வித பலனும் கிடைக்கவில்லை. இதையடுத்து மத அமைப்புகள், தொழிலதிபர்கள் உள்ளிட்டோரிடம் பள்ளி தொடங்க உதவுமாறு ஹாஜப்பா கோரினார். ஆனால் யாரும் அவரது கோரிக்கையை நிறைவேற்றவில்லை.

இதனால், தான் பழம் விற்ற பணத்தை சிறிது சிறிதாக சேமித்து தனது கிராமத்தில் பள்ளிக்கூடம் கட்ட முடிவெடுத்தார். அதன்படி, 2001–ம் ஆண்டு தன் சேமிப்பு பணத்தில், பள்ளிக்கூடம் கட்ட நிலம் வாங்கினார். பின்னர் வங்கியில் கடன் வாங்கி நியூபடப்பு கிராமத்தில் தொடக்கப் பள்ளியை நிறுவினார். 27 மாணவர்களுடன் தொடங்கப்பட்ட அந்த பள்ளியில் தற்போது 178 மாணவர்கள் படிக்கின்றனர்.

ஹாஜப்பாவுக்கு பள்ளியைத் தொடர்ந்து நடத்துவதில் சிக்கல் ஏற்பட்டதால், 2014ஆம் ஆண்டு ஜும்மா மதராஸாவின் முஸ்லீம் கல்வி நிறுவனத்துடன் பள்ளி இணைக்கப்பட்டது. பின்னர் தொடக்கப்பள்ளி உயர்நிலை பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டது.

ஹரேகலா ஹாஜப்பாவின் இச்சேவையைப்பாராட்டி குடியரசுத்தலைவர் ராம்நாத் கோவிந்த் அவருக்கு பத்மஸ்ரீ விருது வழங்கி கவுரவித்தார்.

---

**6. முக்கிய வழக்குகளை சிபிஐ விசாரிக்க அனுமதி தர மறுக்கும் 8 மாநிலங்கள்: உச்ச நீதிமன்றம் அதிருப்தி**

வங்கி மோசடி உள்ளிட்ட முக்கியவழக்குகளை விசாரிக்க சிபிஐ–க்கு அனுமதி மறுக்கும் 8 மாநிலங்கள் குறித்து உச்சநீதிமன்றம் அதிருப்தி தெரிவித்துள்ளது.

தில்லி சிறப்பு போலீஸ் எஸ்டாபிளிஷ்மென்ட் சட்டத்தின் 6–வது பிரிவு, பல்வேறு மாநிலங்களில் நடைபெறும் ஊழல், வங்கி முறைகேடு உள்ளிட்ட முக்கிய வழக்குகளை விசாரிக்க சிபிஐ–க்கு அதிகாரம் வழங்கி உள்ளது. இதற்கு அனைத்து மாநிலங்களும் பொது ஒப்புதல் வழங்குவது வழக்கம். இந்நிலையில், மேற்கு வங்கம், மகாராஷ்டிரா, கேரளா, பஞ்சாப், ராஜஸ்தான், ஜார்க்கண்ட், சத்தீஸ்கர் மற்றும் மிசோரம் ஆகிய 8 மாநிலங்கள் இத்தகைய பொது ஒப்புதலை கடந்த 2018–ம் ஆண்டு திரும்பப் பெற்றன. இதனால் குறிப்பிட்ட வழக்கு தொடர்பாக சிபிஐ விசாரிக்க வேண்டுமானால் சம்பந்தப்பட்ட மாநில அரசின் ஒப்புதலை பெற வேண்டும்.

இது தொடர்பாக சிபிஐ தாக்கல் செய்த மனுவை உச்ச நீதிமன்றம் விசாரித்து வருகிறது. வழக்கு விசாரணையில் ஏற்படும் சிக்கல்கள் குறித்து பதில் அளிக்குமாறு சிபிஐ–க்கு உச்ச நீதிமன்றம் கடந்த மாதம் உத்தரவிட்டது. இது தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் சிபிஐ தாக்கல் செய்த பிரமாண பத்திரத்தில், "வழக்கு விசாரணைக்கான பொது ஒப்புதலை 8 மாநிலங்கள் திரும்பப் பெற்றுக் கொண்டதால், ஒவ்வொரு வழக்குக்கும் தனித் தனியாக அனுமதி கோர வேண்டி உள்ளது. இதன்படி, கடந்த 2018 முதல் 2021 ஜூன் மாதம் வரையிலான காலத்தில் 150–க்கும் மேற்பட்ட வழக்குகளை விசாரிக்க ஒப்புதல் வழங்குமாறு அம்மாநில அரசுகளிடம் கோரி உள்ளோம்.

இதில் மத்திய அரசு ஊழியர்கள் மீதான ஊழல் புகார் உள்ளிட்ட 18 சதவீத வழக்குகளை விசாரிக்க மட்டுமே அம்மாநிலங்கள் அனுமதி வழங்கி உள்ளன. மேலும் சிபிஐ நடத்தும் 12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வழக்குகளுக்கு விசாரணை, உயர் நீதிமன்றங்கள் இடைக்கால தடை விதித்துள்ளதால் காலதாமதம் ஏற்படுகிறது" எனக் கூறப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நீதிபதி சஞ்சய் கிஷண் கவுல் தலைமையிலான அமர்வு முன்பு நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது. அப்போது, "முக்கியமான வழக்குகளை விசாரிக்க சிபிஐ–க்கு ஒப்புதல் வழங்க மறுக்கும் மாநில அரசுகளின் செயல் அதிருப்தி அளிக்கிறது. சிபிஐ வழக்குகளில் நீதிமன்றங்கள் இடைக்கால தடை விதித்திருப்பதும் கவலை அளிப்பதாகஉள்ளது. இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டும்" என நீதிபதிகள் தெரிவித்தனர்.

---

**7. லடாக் கிராமத்தில் ஜல் ஜீவன் திட்டத்தின் கீழ் குழாய் மூலம் தண்ணீர் விநியோகம்**

லடாக் யூனியன் பிரதேசத்தில் அமைந்துள்ளது லே மாவட்டம். கடல் மட்டத்திலிருந்து 3,524 மீட்டர் (11,562 அடி) உயரத்தில் அமைந்துள்ள இந்த லே நகரமானது ஆண்டு முழுவதும் கடும் குளிரைச் சந்தித்து வருகிறது. இந்நிலையில் நாடு முழுவதும் உள்ள கிராமங்களில் உள்ள வீடுகளுக்கு தனித்தனி குடிநீர் குழாய் இணைப்பை வழங்கும் ஜல் ஜீவன் திட்டத்தை மத்திய அரசு செயல்படுத்தி வருகிறது.

அதன்படி லே மாவட்டத்திலுள்ள 60 கிராமங்களில் தற்போது 12 கிராமங்களில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் தனித்தனி குடிநீர் குழாய் இணைப்பை வழங்கி ஜல் ஜீவன் திட்டம் வெற்றி கண்டுள்ளது. இந்தப் பகுதியில் ஜீரோ டிகிரிக்கும் குறைவான வெப்பநிலை நிலவுகிறது. இந்த கடும் குளிரிலும் வீடுகளுக்கு வெற்றிகரமாக குடிநீர் விநியோகம் நடைபெற்று வருவதை ஜல் ஜீவன் திட்டம் உறுதி செய்துள்ளது.

இந்நிலையில், லே மாவட்டத்திலுள்ள உம்லா கிராமத்தில் ஒரு பாட்டியும், அவரது பேத்தியும் மிகுந்த மகிழ்ச்சியில் குடிநீரை குழாயிலிருந்து பிடிக்கும் புகைப்படத்தை மத்திய அரசு வெளியிட்டுள்ளது. தற்போது இந்த புகைப்படத்தை பலரும் பகிர்ந்து வருவதால் இது இணையத்தில் வைரலாகியுள்ளது.

இதுகுறித்து ஜல் ஜீவன் திட்டத்தின் கூடுதல் செயலரும், இயக்குநருமான பரத் லால் கூறும்போது, "மக்களின் வாழ்க் கையை மாற்றி வருகிறது ஜல் ஜீவன் திட்டம். தற்போது ஒவ்வொரு வீட்டுக்கும் தனித்தனியாக குடிநீர் இணைப்பை வழங்குவதே எங்களது திட்டம். லே மாவட்டத்தில் 12 கிராமங்களில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் இணைப்பைக் கொடுத்து வெற்றி கண்டுள்ளோம். ட்விட்டரில் வெளியிட்டுள்ள புகைப்படத்தில் குடிநீரைப் பிடிக்கும் அந்தபாட்டி, பேத்தியின் மகிழ்ச்சியை வார்த்தைகளால் சொல்ல முடியாது. இதுதான் உண்மையான திருப்தி.

இந்த உம்லா கிராமத்தில் முறையான சாலை வசதி இல்லை. குக்கிராமமான இந்த உம்லாவில் போதிய அடிப்படை வசதிகள் இல்லை. மிகுந்த சிரமத்துக்கு இடையே இந்தத் திட்டத்தில் வெற்றி கண்டுள்ளோம்" என்றார்.

---

**1.** COP26 **உச்சிமாநாட்டைக் குறிக்கும் வகையில், எந்தப் பகுதியில் அமைந்துள்ள பனிப்பாறைக்கு, 'கிளாஸ்கோ பனிப்பாறை' என்று பெயரிடப்பட்டுள்ளது?**



அ) கனடா

**ஆ) அண்டார்டிகா ☑**

இ) அலாஸ்கா

ஈ) ஐஸ்லாந்து

✓ அண்டார்டிகாவிலுள்ள ஒரு பனிப்பாறைக்கு 'கிளாஸ்கோ பனிப்பாறை' என்று பெயரிடப்பட்டுள்ளது. அது, ஐநா காலநிலை உச்சிமாநாட்டை (COP 26) நடத்தும் நகரத்தின் நினைவாக வைக்கப்பட்டுள்ளது. லீட்ஸ் பல்கலை ஆராய்ச்சியாளர்கள் குழுவினால், COP26 நினைவாக இந்தப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

---

**2. காசி, ஜைந்தியா மற்றும் கரோஸ் ஆகியவை எந்த மாநிலத்தின் பழங்குடியினமாகும்?**



அ) தமிழ்நாடு

ஆ) ஹிமாச்சல பிரதேசம்

இ) கேரளா

**ஈ) மேகாலயா ☑**

✓ காசி, ஜைந்தியா மற்றும் கரோஸ் ஆகியோர் மேகாலயா மாநிலத்தின் முதன்மையான பழங்குடியினங்களாகும். அவர்கள், குடும்பத்தில் உள்ள இளைய மகள் குடும்ப சொத்தின் பாதுகாவலராக மாறுகின்ற ஒரு தாய் வழி பரம்பரை முறையைப் பின்பற்றுகிறார்கள். சமீபத்தில் காசி ஹில்ஸ் தன்னாட்சி மாவட்ட கவுன்சில் ஒரு மசோதாவை முன்மொழிந்துள்ளது. அது, உடன்பிறப்புகளுக்கிடையே பெற்றோரின் பூர்வீக சொத்துக்களை சமமாக பங்கிடுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

**3. இங்கிலாந்தில் நடத்தப்பட்ட புதிய ஆராய்ச்சியின்படி, எத்தடுப்பூசி, புற்றுநோயை உருவாக்கும் அபாயத்தை 62% குறைத்துள்ளது?**




**அ) மனித பாப்பிலோமா வைரஸ் (HPV) தடுப்பூசி ☑**

ஆ) டெட்டனஸ், டிப்தீரியா, பெர்டுசிஸ் (Td/Tdap)

இ) வெரிசெல்லா

ஈ) தட்டம்மை, தாளம்மை, ரூபெல்லா (MMR)

✓ கேன்சர் ரிசர்ச் யுகேவால் நிதியுதவி செய்யப்பட்ட ஒரு புதிய ஆராய்ச்சி, மனித பாப்பிலோமா வைரஸ் தடுப்பூசி, 14-16 வயதுக்குட்பட்ட பெண்களி -ல் புற்றுநோயை உருவாகும் அபாயத்தை 62% குறைத்துள்ளதாக கண்டறிந்துள்ளது. பெண்களை கர்ப்பப்பை வாய்ப்புற்றுநோயிலிருந்து பாதுகாப்பதற்காக மனித பாப்லோமா வைரஸ் தடுப்பூசி வழங்கப்படுகிறது.

---

**4. இந்திய ரிசர்வ் வங்கியின் திருத்தப்பட்ட PCA கட்டமைப்பானது எந்தத் தேதியிலிருந்து நடைமுறைக்கு வரவுள்ளது?**

**அ) ஜனவரி 1, 2022 ☑**

ஆ) 1 மார்ச் 2022

இ) ஏப்ரல் 1, 2022

ஈ) ஜூன் 1, 2022

✓ திட்டமிடப்பட்ட வணிக வங்கிகளுக்கான திருத்தப்பட்ட உடனடி திருத்த நடவடிக்கை (PCA) கட்டமைப்பை ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ளது. இது ஜனவரி 1, 2022 முதல் நடைமுறைக்கு வரும். மூலதனம், சொத்து தரம் மற்றும் அந்நியச் செலாவணி ஆகிய மூன்று முக்கிய பகுதிகளை ரிசர்வ் வங்கி கண்காணிக்கும் எனக் கூறியுள்ளது.

---

**5. வெப்ப அலைகளால் பவளப்பாறைகள் அதிக வெப்பமுறும்போது அவை நிறத்தை இழக்கும் செயல்முறைக்கு பெயர் என்ன?**



அ) பவள அழுத்தம்

**ஆ) பவள வெளுப்பு ☑**

இ) பவள நிறமாற்றம்

ஈ) பவள அழுத்தம்

✓ பவள வெளுப்பு என்பது வெப்ப அலைகளின்போது அதிக வெப்பமுற்ற பவளப்பாறைகளில் ஏற்படும் ஓர் எதிர்வினையாகும். இதன்சமயம் அங்கு அவை அவற்றின் நிறத்தை இழந்து உயிர்வாழ போராடுகின்றன. ஒரு புதிய ஆய்வின்படி, 2016ஆம் ஆண்டிலிருந்து எண்பது சதவீத பவளப் பாறைகள் ஒருமுறையாவது கடுமையாக வெளுத்துள்ளன.

---

**6. ஆப்கானிஸ்தான் தொடர்பான பிராந்திய பாதுகாப்பு உரையாட -லை நடத்தவுள்ள இந்திய நகரம் எது?**



**அ) புது தில்லி ☑**

ஆ) மும்பை

இ) டேராடூன்

ஈ) சண்டிகர்

✓ நவ.10 அன்று ஆப்கானிஸ்தான் தொடர்பான தில்லி பிராந்திய பாதுகாப்பு உரையாடலை இந்தியா நடத்தவுள்ளது. இதில் 7 நாடுகள் பங்கேற்கின் -றன. இதற்கு தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் தலைமை தாங்குவார். தேசிய பாதுகாப்பு ஆலோசகர்கள் / பாதுகாப்பு கவுன்சில் செயலாளர்கள் மட்டத்தில் பேச்சுவார்த்தை நடத்தப்படும்.

✓ சமீபத்திய ஊடக அறிக்கையின்படி, சீனா மற்றும் பாகிஸ்தான் ஆகிய இரண்டும் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. ஈரான், கஜகஸ்தான், கிர்கிஸ்தான் குடியரசு, ரஷ்யா, தஜிகிஸ்தான், துர்க்மெனிஸ்தான் மற்றும் உஸ்பெகிஸ்தான் ஆகிய ஏழு நாடுகள் பங்கேற்பதை உறுதி செய்தன.

---

**7. சமீபத்தில் கருத்துக்கேட்புக்காக வைக்கப்பட்ட, 'வரைவு மத்திய -ஸ்த மசோதா, 2021' உடன் தொடர்புடைய அமைச்சகம் எது?**




அ) பாதுகாப்பு அமைச்சகம்

ஆ) வெளியுறவு அமைச்சகம்

**இ) சட்டம் மற்றும் நீதி அமைச்சகம் ☑**

ஈ) உள்துறை அமைச்சகம்

✓ சட்டம் மற்றும் நீதி அமைச்சகமானது வரைவு மத்தியஸ்த மசோதா – 2021'ஐ கருத்துக்கேட்புக்காக பொதுக்களத்தில் வைத்துள்ளது.

✓ உள்நாட்டு மற்றும் சர்வதேச மத்தியஸ்தம் தொடர்பான பிரச்சினைகளில் மத்தியஸ்தம் தொடர்பான ஒரு தனியான சட்டத்தை கொண்டுவர இம் மசோதா முன்மொழிகிறது. மத்தியஸ்தம் தொடர்பான சிங்கப்பூர் ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டுள்ளது. இந்த மசோதா 'சமரசம்' மற்றும் 'மத்தியஸ்தம்' ஆகிய சொற்களை ஒன்றுக்கொன்று மாற்றாகப் பயன்படுத்தவும் எண்ணுகிறது.

---

**8.** 2021'இல் **தனது ஆறாவது பாரிஸ் மாஸ்டர்ஸ் பட்டத்தை வென்ற டென்னிஸ் வீரர் யார்?**



**அ) நோவக் ஜோகோவிச் ☑**

ஆ) டேனியல் மெட்வெடேவ்

இ) ரோஜர் பெடரர்

ஈ) ரபேல் நடால்

✓ டென்னிஸ் வீரர் நோவக் ஜோகோவிச் 4-6 6-3 6-3 என்ற கணக்கில் ரஷ்ய வீரர் டேனியல் மெட்வெடேவை தோற்கடித்து தனது ஆறாவது பாரிஸ் மாஸ்டர்ஸ் பட்டத்தை வென்றார். செர்பிய வீரர் ஜோகோவிச், ஆண்டு இறுதியில் ஏழாவது முறையாக உலக நம்பர் ஒன் இடத்தைப் பெறுவது உறுதியாகி உள்ளது.

---

**9.** Dr **கமல் ரணதிவேவுடன் தொடர்புடைய துறை எது?**



அ) கதிரியக்க பொருட்கள்

ஆ) கனரக பொறியியல்

**இ) செல் உயிரியல் ☑**

ஈ) ஆயுர்வேதம்

✓ டாக்டர் கமல் ரணதிவே, ஓர் இந்திய செல் உயிரியலாளராவார். அவர் புற்றுநோய் துறையில் வியத்தகு ஆராய்ச்சியை மேற்கொண்டார்.

✓ இந்திய புற்றுநோய் ஆராய்ச்சி மையத்தில் நாட்டின் முதல் திசு வளர்ப்பு ஆய்வகத்தை நிறுவுவதில் முக்கிய பங்காற்றினார். இந்தியப் பெண் விஞ்ஞானிகள் சங்கத்தை நிறுவுவதில் முக்கியப் பங்காற்றினார்.

சமீபத்தில், Dr கமல் ரணதிவேவின் 104ஆவது பிறந்தநாளை நினைவு கூரும் வகையில், கூகுள் ஒரு டூடுலை அவருக்கு அர்ப்பணித்தது.

---

**10.** **உள்நாட்டு மத சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக IRCTCஆல் சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட சுற்றுலா இரயிலின் பெயர் என்ன?**



அ) ஸ்ரீ இராமாயண யாத்திரை இரயில்

**ஆ) மகாபாரத யாத்திரை இரயில் ☑**

இ) வேளாங்கண்ணி யாத்திரை இரயில்

ஈ) தர்கா யாத்திரை இரயில்

- ✓ இந்திய இரயில்வே கேட்டரிங் & டூரிசம் கார்ப்பரேஷன் (IRCTC) ஆனது தில்லியிலிருந்து 'ஸ்ரீ இராமாயண யாத்திரை' ரயிலை தொடங்கியுள்ளது. தில்லி சப்தர்ஜங் இரயில் நிலையத்திலிருந்து இந்த இரயில் புறப்பட்டது.
- ✓ IRCTC'இன் கூற்றுப்படி, மதச்சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக இது போன்ற பல இரயில்கள் இயக்கப்படும். இந்த ரயில் 17 நாட்களில் ராமரின் வாழ்க்கையுடன் தொடர்புடைய அனைத்து முக்கிய தலங்களையும் உள்ளடக்கும். சுமார் 7500 கிமீ நீளப்பயணமாகும் இது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. இன்று 'பீமா லோக்பால்' தினம் – காப்பீடு தொடர்பான 1,416 புகார்களுக்கு தீர்வு:**

சென்னை காப்பீட்டு குறைதீர்ப்பாளர் அலுவலகம் வெளியிட்டசெய்திக்குறிப்பு:

காப்பீடு தொடர்பான புகார்களை விரைந்து விசாரித்து தீர்வுகாண்பதற்காக, காப்பீட்டு குறைதீர்ப்பாளர் (இன்சூரன்ஸ் ஆம்புட்ஸ்மேன்) என்ற அமைப்பை மத்திய அரசு கடந்த 1998 நவ.11–ம் தேதி ஏற்படுத்தியது. இதையடுத்து, ஆண்டுதோறும் நவ.11–ல், பீமா லோக்பால் தினம் என்ற பெயரில் கொண்டாடப்பட்டு வரப்படுகிறது.

அதன்படி, பீமா லோக்பால் தினம் (நவ.11) இன்று கொண்டாடப் படுகிறது. சென்னை உட்பட நாடுமுழுவதும் 17 காப்பீட்டு குறைதீர்ப்பாளர் அலுவலகங்கள் உள்ளன.தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்காலின் ஒரு பகுதி ஆகியவை சென்னை அலுவலகத்தின்கீழ் வருகிறது.

ஆயுள், பொது மற்றும் மருத்துவக் காப்பீடு தொடர்பான புகார்களை இந்த அலுவலகம் விசாரித்துதீர்வு வழங்குகிறது. இங்கு புகார்களை அளிக்க எவ்விதக் கட்டணமும் வசூலிக்கப்படுவதில்லை.

கடந்த 2020–21 நிதியாண்டில் சென்னை அலுவலகம் மூலம், காப்பீடு தொடர்பாக 1,677 புகார்கள் பெறப்பட்டு, 1,416 புகார்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. இதில், 40% புகார்கள் ஆயுள் காப்பீடு, 14% பொதுக் காப்பீடு, 46% மருத்துவக் காப்பீடு தொடர்பானவை.

கரோனா காலத்திலும் காப்பீட்டுதாரர்களின் புகார்கள் காணொலி மூலம் விசாரித்து தீர்வு காணப்பட்டது. இதற்காக, கடந்த பிப்ரவரிமாதம் ஆன்லைன் மூலம் புகார்களை பதிவு செய்யும் வசதி அறிமுகப்படுத்தப்பட்டது.

---

**2. உச்சநீதிமன்றத்தில் மத்தியஸ்த மையம்: தலைமை நீதிபதி திறந்துவைத்தார்**

உச்சநீதிமன்ற வளாகத்தில் மத்தியஸ்த மையம், தேசிய சட்டப் பணிகள் ஆணைய அலுவலகம் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன. அவற்றை உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி என்.வி.ரமணா செவ்வாய்க்கிழமை திறந்துவைத்தார்.

உச்சநீதிமன்ற சட்டப் பணிகள் குழு (எஸ்சிஎல்எஸ்சி), மத்தியஸ்தம் மற்றும் சமரச திட்டக் குழு (எம்சிபிசி) ஆகியவற்றின் வழிகாட்டுதலில் உச்சநீதிமன்ற மத்தியஸ்த மையம் செயல்படுகிறது. உச்சநீதிமன்றம் பரிந்துரைக்கும் வழக்குகள் அந்த மையத்தில் விசாரிக்கப்படும். இதற்காக அந்த மையத்தில் பயிற்சி பெற்ற 79 மத்தியஸ்தர்கள் உள்ளனர்.

இந்நிலையில், உச்சநீதிமன்றத்தின் கூடுதல் கட்டட வளாகத்தில் புதிதாக மத்தியஸ்த மையம், தேசிய சட்டப் பணிகள் ஆணைய அலுவலகம் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன. அவற்றை உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி என்.வி.ரமணா திறந்துவைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் உச்சநீதிமன்ற நீதிபதிகள் ஏ.எம்.கான்வில்கர், சஞ்சய் கிஷண் கௌல், உதய் உமேஷ் லலித் உள்ளிட்டோர் பங்கேற்றனர். இவர்களில் ஏ.எம்.கான்வில்கர் எஸ்சிஎல்எஸ்சி தலைவராகவும், சஞ்சய் கிஷண் கௌல் எம்சிபிசி உறுப்பினராகவும் உள்ளனர். உதய் உமேஷ் லலித் தேசிய சட்டப் பணிகள் ஆணையத்தின் நிர்வாகத் தலைவராக பதவி வகிக்கிறார்.

---

**3. ஸ்கார்ப்பியன் நீர்மூழ்கிக் கப்பல் வேலா: கடற்படையிடம் ஒப்படைப்பு**

நான்காவது ஸ்கார்ப்பியன் நீர்மூழ்கிக் கப்பல் வேலா இந்திய கடற்படையிடம் ஒப்படைக்கப்பட்டது.

ப்ராஜக்ட்–75 திட்டத்தின் நான்காவது நீர்மூழ்கிக் கப்பலான யார்டு 11878 இந்திய கடற்படையிடம் இன்று (09.11.2021) ஒப்படைக்கப்பட்டது. ஸ்கார்ப்பியன் வகையைச் சேர்ந்த ஆறு நீர்மூழ்கிக் கப்பல்களை கட்டுவது ப்ராஜக்ட்–75 திட்டத்தில் அடங்கும். இந்த வகை நீர்மூழ்கிக் கப்பல்கள், பிரான்ஸ் நாட்டின், திருவாளர்கள் நேவல் குரூப் ஒத்துழைப்புடன், மும்பை மசகான் கப்பல் கட்டும் நிறுவனத்தில் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

'வேலா' என்று பெயரிடப்பட்டுள்ள நீர்மூழ்கிக் கப்பல், 6, மே 2019 அன்று தனது சேவையைத் தொடங்கி, கொவிட்–19 கட்டுப்பாடுகளுக்கு இடையேயும், அனைத்து பெரிய துறைமுகங்கள் மற்றும் ஆயுதம், சென்சார் ஒத்திகை உள்ளிட்ட அனைத்துக் கடல்வழி ஒத்திகைகளையும் நிறைவு செய்துள்ளது. இந்த வகையைச் சேர்ந்த மூன்று நீர்மூழ்கிக் கப்பல்கள் ஏற்கனவே இந்திய கடற்படைப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

நீர்மூழ்கிக் கப்பல் கட்டுமானம் மிகவும் சிக்கலானது என்பதோடு, அனைத்து சாதனங்களையும் சிறிய அளவுடையதாக மாற்றி கடுமையான தரப்பரிசோதனைகளுக்கு உட்படுத்த வேண்டியிருப்பதால், இது மிகவும் சிரமமான பணியாகும்.

இந்தியாவில் உள்ள கப்பல் கட்டும் தளத்தில் இத்தகைய நீர்மூழ்கிக் கப்பல்கள் கட்டப்பட்டிருப்பது 'தற்சார்பு இந்தியாவை' நோக்கிய மற்றொரு நடவடிக்கையாக கருதப்படுகிறது.

இந்த நீர்மூழ்கிக் கப்பல், இந்திய கடற்படையில் உடனடியாக பணியில் ஈடுபடுத்தப்படுவது, இந்தியக் கடற்படையின் திறனை மேம்படுத்தும் என பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

---

**4. இந்திய கடற்படை தளபதியாக ஆர்.ஹரிகுமார் நியமனம்!**

இந்திய கடற்படை தளபதியாக ஆர்.ஹரிகுமார் பதவியேற்கவுள்ளார். கரம்பீர் சிங் ஓய்வு பெறும் நிலையில் ஹரிகுமார் பதவியேற்கிறார்.

ஹரிகுமார் 1983 ஜனவரியில் கடற்படையில் சேர்ந்தார். மும்பை பல்கலைக்கழகம் மற்றும் யு.எஸ். அவர் கடற்படை போர் கல்லூரி மற்றும் லண்டன் கிங்ஸ் கல்லூரியில் படித்தார். இவர் தேசிய பாதுகாப்பு அகாடமியில் பட்டம் பெற்றவர்.

மேலும் ஐ.என்.எஸ் விராட் உட்பட 5 கப்பல்களுக்கு கேப்டனாக இருந்த ஹரிகுமார் பல்வேறு பதக்கங்களை பெற்றுள்ளார்.

---

**5. காரீப் பருவத்தில் 209 லட்சம் டன் நெல் கொள்முதல்: மத்திய அரசு**

நடப்பு காரீப் சந்தைப் பருவத்தில் 209 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்துள்ளதாக மத்திய அரசு செவ்வாய்க்கிழமை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நடப்பு காரீப் சந்தைப் பருவத்தில் நவம்பர் 8–ஆம் தேதி வரையிலுமாக, 209.52 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இதன் மதிப்பு ரூ.41,066.80 கோடியாகும். இதன் மூலம், 11.57 லட்சம் விவசாயிகள் பலனடைந்துள்ளனர்.

கடந்தாண்டைப் போலவே இந்தாண்டும் நெல் கொள்முதல் சீராக நடைபெற்று வருகிறது.

குறிப்பாக, சண்டிகர், குஜராத், ஹரியாணா, ஹிமாசல பிரதேசம், ஜம்மு–காஷ்மீர், பஞ்சாப், உத்தர பிரதேசம், உத்தரகண்ட், தெலங்கானா, ராஜஸ்தான், கேரளம், தமிழ்நாடு மற்றும் பிகார் மாநிலங்களிலிருந்து அதிக அளவில் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

காரீப் சந்தைப் பருவம் என்பது 2021–22 அக்டோபர் முதல் செப்டம்பர் வரையிலானதாகும்.

**6. இலங்கைக்கு சுற்றுலா செல்வதில் இந்தியா்கள் முதலிடம்**

இலங்கைக்கு சுற்றுலா செல்வதில் இந்தியா்கள் முதலிடத்தில் உள்ளனா். இலங்கை சுற்றுலா தொடா்பாக அந்நாட்டு அதிகாரிகள் வெளியிட்ட தகவலில் இந்த விவரம் தெரியவந்துள்ளது.

அதன்படி இலங்கைக்கு கடந்த அக்டோபா் மாதத்தில் 22,771 சா்வதேச சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளனா். இதன் மூலம் கரோனாவுக்குப் பிறகு இலங்கையின் சுற்றுலாத் துறையில் மேம்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்தியா, பிரிட்டன், பாகிஸ்தான், ரஷியா, ஜொ்மனி ஆகிய நாடுகளில் இருந்து அதிக சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனா். மொத்த சுற்றுலாப் பயணிகளில் 37 சதவீதம் போ் இந்தியாவைச் சோ்ந்தவா்கள். இதன் மூலம் இலங்கைக்கு சுற்றுலா வருபவா்களில் இந்தியா்கள் முதலிடம் பிடித்துள்ளனா். பிரிட்டன், பாகிஸ்தான் பயணிகள் முறையே 10 மற்றும் 9 சதவீதம் உள்ளனா்.

அமெரிக்கா, மேற்கு, கிழக்கு மற்றும் மத்திய ஐரோப்பிய நாடுகளில் இருந்து இலங்கைக்கு சுற்றுலாப் பயணிகள் வருவதும் இப்போது மேம்பட்டு வருகிறது.

இந்த ஆண்டில் அக்டோபா் மாதம் வரை 60,695 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனா். வழக்கமாக இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுடன் ஒப்பிடும்போது இது 88 சதவீதம் குறைவாகும்.

சுற்றுலா வருவாய் இலங்கையின் பொருளாதாரத்தில் முக்கியப் பங்கு வகித்து வருகிறது. கரோனா பிரச்னை காரணமாக சுற்றுலா வருவாய் அடியோடு சரிந்ததால் அந்நாடு மிகப்பெரிய பொருளாதாரச் சிக்கலை எதிா்கொண்டு வருகிறது.

---

**7. தேசிய அளவில் பள்ளிக் கல்வியில் சாதனைக்கான ஆய்வுகள் நாளை தொடக்கம்**

3, 5, 8 மற்றும் 10 ஆம் வகுப்புகளில் மேற்கொள்ளப்படும் தேசிய அளவில் பள்ளிக் கல்வியில் சாதனைக்கான ஆய்வுகள் திட்டம் வெள்ளிக்கிழமை (நவம்பா் –12 ஆம் தேதி) தொடங்குகிறது.

தேசிய சாதனைக்கான ஆய்வு மத்திய அரசின் கல்வித்துறை அமைச்சகத்தால் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை சுழற்சி முறையில் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. இது மாணவா்களின் கற்றல் குறித்த தேசிய அளவிலான மிகப் பெரிய கணக்கெடுப்பாகும். பள்ளிக் கல்வியின் நிலை, அமைப்பு, செயல்திறனுக்கான பிரதிபலிப்பை இந்த ஆய்வு வழங்குகிறது.

குறிப்பாக பள்ளிக்குழந்தைகளின் திறன்களை மதிப்பீடு செய்து அதில் மேம்பாடுகளுக்கான திசையைக் கண்டறிய இந்த ஆய்வுகள் உதவுகின்றன. கடைசியாக கடந்த 2017 ஆண்டில் 3, 5, 8 வகுப்புகளில் மட்டும் மத்திய அரசால் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

தற்போது கூடுதலாக 10 ஆம் வகுப்பும் இணைக்கப்பட்டு இந்த திட்டம் வெள்ளிக்கிழமை (நவம்பா் 12–ஆம் தேதி) நாடு முழுவதும் தொடங்கப்படுகிறது.

கொவைட்–19 நோய்த் தொற்றின்போது கற்றல்களின் பாதிப்பு மற்றும் புதிய கற்றல் மதிப்பிட்டு தீா்வு காணும் நடவடிக்கைகளுக்கு இந்த ஆய்வு உதவும் என மத்திய கல்வித்துறை புதன்கிழமை தெரிவித்துள்ளது.

கற்றல் மூலம் மாணவா்கள் அடையும் திறன்களை அளவிட்டு மதிப்பிட தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கவுன்சில் (என்சிஇஆா்டி) இதற்கான கட்டமைப்பை உருவாக்கியுள்ளது. இந்த ஆய்வுக்கான முறை, சோதனை, தோ்வுப் பொருட்கள் போன்ற மாதிரிகளை இதில் அடக்கம்.

இருப்பினும், மாதிரி பள்ளிகளில் சோதனை அந்தந்த மாநிலங்கள், யூனியன் பிரதேச அரசுகளின் கல்வித்துறைகளுடன் மத்திய இடைநிலைக் கல்வி வாரியம் இணைந்து செய்யப்படும் என்றும் மத்திய கல்வி அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2021–தேசிய சாதனைக்கான ஆய்வு, நாடு முழுவதும் உள்ள அரசுப் பள்ளிகள் (மத்திய அரசு மற்றும் மாநில அரசு), அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் தனியாா் பள்ளிகளின் ஆகியவைகளையும் உள்ளடக்கியுள்ளது.

36 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள 733 மாவட்டங்களில் கிட்டத்தட்ட 1.23 லட்சம் பள்ளிகள், 38 லட்சம் மாணவா்கள் இந்தத் திட்டத்தில் இடம்பெறுவா் என்று எதிா்பாா்க்கப்படுகிறது.

மொழி, கணிதம், சுற்றுச்சூழல் கல்வி, அறிவியல் மற்றும் ஆங்கிலம் பாடங்களில் வகுப்புகளுக்கு தகுந்தவாறு ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. தமிழ், வங்கம், கன்னடம், இந்தி உள்ளிட்ட 22 மொழிகளில் இந்த ஆய்வுத் தோ்வு நடத்தப்படும் என மத்திய கல்வி அமைச்சம் தெரிவித்துள்ளது.

---

**8. ஆசிய செயிலிங்: கணபதி/வருண் இணை சாம்பியன்**

ஓமனில் நடைபெற்ற ஆசிய 49 இஆா் செயிலிங் சாம்பியன்ஷிப் போட்டியில் ஆடவா் பிரிவில் இந்தியாவின் வருண் தக்கா்/கே.சி.கணபதி இணை சாம்பியன் ஆனது. ஆசிய போட்டியில் இது இந்த இணையின் 3–ஆவது பதக்கமாகும்.

4 நாள்கள் நடைபெற்ற இப்போட்டியின் முடிவில் வருண்/கணபதி இணை முதலிடம் பிடிக்க, ஓமனின் முசாப் அல் ஹாதி/வாலித் அல் கின்டி இணை வெள்ளியும், அதே நாட்டின் அகமது அல் ஹசானி/அப்துல்ரஹ்மான் அல் மஷாரி ஜோடி வெண்கலமும் வென்றது.

இதே பிரிவில் கலந்துகொண்ட மற்றொரு இந்திய ஜோடியான ஆனந்த் தாக்குா்/சத்யம் ரங்காட், 29–ஆவது இடம் பிடித்தனா்.

மகளிருக்கு 2–ஆம் இடம்: இதேபோட்டியில் மகளிா் பிரிவில் இந்தியாவின் ஹா்ஷிதா தோமா்/ஸ்வேதா ஷொ்வெகா் இணை வெள்ளிப் பதக்கம் வென்றது.

அடுத்தபடியாக, வருண்/கணபதி இணை அதே நகரில் வரும் 16–ஆம் தேதி முதல் நடைபெற இருக்கும் உலக சாம்பியன்ஷிப் போட்டியிலும் கலந்துகொள்கிறது.

---

**9. பகவான் பிர்சா முண்டா பிறந்த நவம்பர் 15ம் தேதியை, ஜன்ஜாதிய கௌரவ் தினமாக அறிவிக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல்:**

தீரமான பழங்குடியின சுதந்திர போராட்ட வீரர்களை நினைவு கூறவும், நாட்டுக்காக அவர்கள் செய்த தியாகங்களை வருங்கால தலைமுறையினர் அறியவும் நவம்பர் 15ம் தேதியை, ஜன்ஜாதிய கௌரவ் தினமாக அறிவிக்க பிரதமர் திரு நரேந்திரமோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இந்தியாவின் சுதந்திர போராட்டம் சந்தால்கர்கள், தமர்கள், கோல் இனத்தவர், பில், காசி இனத்தவர் மற்றும் மிசோ இனத்தவர் உட்பட இன்னும் பல பழங்குடியின சமுதாயத்தினரால் வலுப்படுத்தப்பட்டது.

இந்த பழங்குடி இனத்தவர்கள் நடத்திய புரட்சிகர இயக்கங்கள் மற்றும் போராட்டங்கள் அவர்களின் மகத்தான தைரியம் மற்றும் உன்னத தியாகத்தால் குறிக்கப்பட்டன. ஆங்கில ஆட்சிக்கு எதிரான, நாட்டின் பல பகுதிகளைச் சேர்ந்த பழங்குடியின இயக்கங்கள், நாட்டின் சுதந்திர போராட்டத்துடன் இணைப்பை ஏற்படுத்தி கொண்டு நாடு முழுவதும் இந்தியர்களை ஊக்குவித்தன. ஆனால், அந்த பழங்குடியின நாயகர்கள் பற்றி, பொது மக்கள் பலருக்கு தெரியாது. மாண்புமிகு பிரதமரின் 2016ம் ஆண்டு சுதந்திர தின உரையை தொடர்ந்து, நாடு முழுவதும் 10 பழங்குடியின சுதந்திர போராட்ட வீரர்களின் அருங்காட்சியகம் அமைக்க மத்திய அரசு ஒப்புதல் அளித்தது.

ஜன்ஜாதிய கௌரவ் தினம் அறிவிக்கப்பட்ட தேதி, திரு பிர்சா முண்டாவின் பிறந்த தினம். அவர் நாடு முழுவதும் உள்ள பழங்குடியின மக்களால் பகவான் என அழைக்கப்பட்டார். ஆங்கில காலனி முறையின் சுரண்டலுக்கு எதிராக பிர்சா முண்டா தைரியமாக போராடினார் மற்றும் ஆங்கிலேய அடக்குமுறைக்கு எதிராக புரட்சிக்கு அழைப்பு விடுத்தார். இந்த அறிவிப்பு, பழங்குடியின சமுதாயத்தின் பெருமையான வரலாறு மற்றும் கலாச்சார பாரம்பரியத்தை அங்கீகரிக்கிறது. இந்த நாள் ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடப்படும் மற்றும் பழங்குடியின கலாச்சார பாரம்பரியத்தை பாதுகாக்கும் முயற்சிகள் அங்கீகரிக்கப்படும்.

ராஞ்சியில் உள்ள பழங்குடியினர் சுதந்திர அருங்காட்சியகம் அமைக்கும் இடத்தில்தான் பிர்சா முண்டா இறந்தார். இந்த அருங்காட்சியகத்தை பிரதமர் திறந்து வைப்பார். பழங்குடியின மக்களில் 75 ஆண்டு வரலாறை நினைவு கூறும் வகையில் இந்தாண்டு நவம்பர் 15ம் தேதி முதல் 22ம் தேதி வரை ஒருவார கால கொண்டாட்டத்துக்கு மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. இந்த கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக, மாநில அரசுகளுடன் இணைந்து பல நடவடிக்கைகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சிகள், பழங்குடியினரின் தனித்துவமான கலாச்சார பாரம்பரியம், சுதந்திர போராட்டத்தில் அவர்களின் பங்களிப்பு ஆகியவற்றை வெளிப்படுத்தும்.

---

**10. குமரியைச் சேர்ந்த தேவசகாயத்துக்கு புனிதர் பட்டம் : வாடிகனில் மே 15-ம் தேதி வழங்கப்படுகிறது**

குமரி மாவட்டத்தைச் சேர்ந்த அருளாளர் மறை சாட்சி தேவசகாயத்துக்கு புனிதர் பட்டம், அடுத்த ஆண்டு மே 15-ம் தேதி வாடிகனில் வழங்கப்பட உள்ளது.

கன்னியாகுமரி மாவட்டம் நட்டாலத்தை சேர்ந்தவர் தேவசகாயம். கடந்த 1745-ம் ஆண்டு மே 14-ம் தேதி கிறிஸ்தவராக திருமுழுக்கு பெற்றார். ஆரல்வாய்மொழி காற்றாடிமலையில் 1752-ம் ஆண்டு ஜனவரி 14-ம் தேதி சுட்டுக் கொல்லப்பட்டார். கத்தோலிக்க கிறிஸ்தவ சபையின் மறைசாட்சியாக தேவசகாயம் போற்றப்படுகிறார்.

இவரை சிறப்பிக்கும் வகையில் 2012-ம் ஆண்டு டிசம்பர் 2-ம் தேதி, தேவசகாயத்தை ₹முக்திபேறு பெற்றவர்' என வாடிகன் பேராயம் அறிவித்தது. அன்றையதினம் இதற்கான விழா நாகர்கோவில் கார்மல் பள்ளியில் நடைபெற்றது. பின்னர், 2020 பிப்ரவரி 21-ம் தேதி, ₹தேவசகாயத்துக்கு புனிதர் பட்டம் வழங்கலாம்' என போப் ஆண்டவர் அறிவித்தார்.

கடந்த மே மாதம் வாடிகனில் நடந்த கர்தினால்கள் கூட்டத்தில், தேவசகாயத் துக்கு புனிதர் பட்டம் வழங்கும் இடமாக, வாடிகன் புனித பீட்டர் சதுக்கம் அறிவிக்கப்பட்டது. கரோனா பரவலால் இதற்கான நாள் அறிவிக்கப்படாமல் இருந்தது.

இந்நிலையில், அடுத்த ஆண்டு மே 15-ம் தேதி வாடிகனில் பீட்டர் சதுக்கத்தில் நடைபெறும் விழாவில், மறைசாட்சி தேவசகாயத்துக்கு புனிதர் பட்டம் வழங்கப்படுகிறது. இதற்கான உத்தரவு கடிதம், நாகர்கோவில் கோட்டாறு மறை மாவட்ட ஆயர் நசரேன் சூசை மற்றும் பொறுப்பாளர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

வழக்கமாக சர்ச்சுடன் தொடர்புடைய பாதிரியார்கள், பிஷப்கள், கார்டினல் களுக்குத்தான் அவர்களின் அற்புதங்களைப் பொறுத்து புனிதர் பட்டம் வழங்கப்படும். ஆனால், இந்தியாவில் தமிழகத்தில் பிறந்த சாதாரண மனிதர் ஒருவருக்கு புனிதர் பட்டம் வழங்குவது இதுவே முதல்முறை என்பது குறிப்பிடத்தக்கது.

---

**11. அங்கன்வாடி பணியிடங்கள்: விதவை-கணவனால் கைவிடப்பட்டோருக்கு 25 சதவீத இடங்கள்**

அங்கன்வாடி, அங்கன்வாடி உதவியாளா் காலிப் பணியிடங்களில் 25 சதவீத இடங்கள் விதவைகள், கணவனால் கைவிடப்பட்டோரைக் கொண்டு நிரப்பப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

இது தொடா்பாக சமூக நலன் மற்றும் மகளிா் உரிமைத் துறை முதன்மைச் செயலாளா் ஷம்பு கல்லோலிகா், செவ்வாய்க்கிழமை வெளியிட்ட உத்தரவு:

அங்கன்வாடி பணியாளா்கள், குறு அங்கன்வாடிப் பணியாளா் மற்றும் அங்கன்வாடி உதவியாளா் காலிப் பணியிடங்களை நிரம்பும் போது, இனசுழற்சி முறையிலான இடஒதுக்கீட்டு முறையைப் பின்பற்ற உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும், இந்தப் பணிகளுக்கு பெண்களை மட்டுமே பணியமா்த்த வேண்டுமென உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சத்துணவுத் துறை: புரட்சித் தலைவா் எம்.ஜி.ஆா். சத்துணவுத் திட்டத்தின் கீழ் சத்துணவு அமைப்பாளா், சமையலா் மற்றும் சமையல் உதவியாளா் காலிப் பணியிடங்களை நிரப்பும் போது 25 சதவீத இடங்கள் விதவைகள் மற்றும் கணவரால் கைவிடப்பட்டோருக்கு ஒதுக்கப்படுகிறது.

அங்கன்வாடி ஊழியா்கள் காலிப் பணியிடங்களில் ஆதரவற்ற விதவைகள், கணவனால் கைவிடப்பட்டோருக்கு 25 சதவீத இடஒதுக்கீடு வழங்க உரிய திருத்தங்களை வெளியிட வேண்டுமென ஒருங்கிணைந்த குழந்தை வளா்ச்சிப் பணிகள் இயக்குநா் அரசைக் கேட்டுக் கொண்டாா். அதன்படி, அங்கன்வாடிப் பணியாளா், குறு அங்கன்வாடி பணியாளா் மற்றும் அங்கன்வாடி உதவியாளா் பணியிடங்களுக்கான நேரடி நியமனங்களில் 25 சதவீத பணியிடங்கள், விதவைகள் அல்லது கணவரால் கைவிடப்பட்டோரைக் கொண்டு முன்னுரிமையின் அடிப்படையில் நிரப்பப்படும்.

---

**12. 5.5 கோடி வீடுகளுக்கு குடிநீர் குழாய் இணைப்பு: ஒன்றிய அமைச்சர் தகவல்**

டெல்லியில் 5வது ஐஎஸ்சி -ஐஎப்சிசிஐ துப்புரவு விருதுகள் மற்றும் இந்திய துப்புரவு மாநாடு நடைபெற்றது. இதில் ஒன்றிய ஜல் சக்தி துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் கலந்து கொண்டு பேசியதாவது: கடந்த 70 ஆண்டுகளில் 17 சதவீதம் வீடுகள் மட்டுமே குடிநீர் குழாய் இணைப்பை பெற்றன. ஆனால், கொரோனா தொற்று சூழல் காரணமாக சிக்கல்கள் இருந்த போதிலும் நாங்கள் கூடுதலாக 27 சதவீதம் வீடுகளுக்கு குடிநீர் குழாய் இணைப்பை வழங்கி இருக்கிறோம். தற்போது 8.5 கோடி பெண்கள் வீடுகளில் குடிநீர் குழாய் இணைப்பை பெற்றுள்ளனர். ஜல் ஜீவன் திட்டம் தொடங்கப்பட்டதில் இருந்து இதுவரை 5.5 கோடி வீடுகளுக்கு குடிநீர் குழாய் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது," என்றார்.

---

**1.** COVID தடுப்பூசிகளை வாங்குவதற்காக $2 பில்லியன் அமெரிக்க டாலர் கடனுக்கு, இந்தியா, எந்த நிறுவனங்களிடம் விண்ணப்பித்து உள்ளது?



அ) உலக வங்கி

**ஆ) ADB–AIIB ☑**

இ) BRICS வங்கி

ஈ) IMF

✓ COVID தடுப்பூசிகளை வாங்குவதற்காக, ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி (AIIB) மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கி ஆகியவற்றில் (ADB) இந்தியா $2 பில்லியன் அமெரிக்க டாலர் கடனைப் பெற்றுள்ளது.

✓ மணிலாவைச் சார்ந்த ADB $1.5 பில்லியனும் மற்றும் பெய்ஜிங்கைச் சார்ந்த AIIB $500 மில்லியனும் வழங்க பரிசீலித்து வருகின்றன. சுமார் 667 மில்லியன் டோஸ் கோவிட் தடுப்பூசிகள், கடன்மூலம் வாங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

**2. இந்தியாவும் எந்த நாடும் பசுமை ஹைட்ரஜனை ஆராயவும், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வழித்தடங்களை அமைக்கவும், இயற்கை எரிவாயு துறையில் திட்டங்களை அமைக்கவும் ஒப்புக்கொண்டன?**



அ) அமெரிக்கா

ஆ) ஜெர்மனி

**இ) இத்தாலி ☑**

ஈ) ரஷ்யா

✓ இந்தியாவும் இத்தாலியும் பசுமை ஹைட்ரஜனின் வளர்ச்சி, புதுப்பிக்கத்த–க்க எரிசக்தி வழித்தடங்கள் மற்றும் இயற்கை எரிவாயு துறையில் திட்டங்களை அமைக்க ஒப்புக்கொண்டுள்ளன. ரோமில் நடைபெற்ற ஜி 20 உச்சிமாநாட்டையொட்டி, பிரதமர் மோடி, இத்தாலிய பிரதமர் மரியோ டிராகியுடன் நேரில் சந்தித்துப் பேசிய பிறகு, அதுகுறித்த கூட்டறிக்கை வெளியிடப்பட்டது. இந்தியா மற்றும் இத்தாலி இடையே (2020–2024) மேம்படுத்தப்பட்ட கூட்டாண்மைக்கான செயல் திட்டம் கடந்த 2020'இல் கையெழுத்தானது.

---

**3.** 'Don't Choose Extinction' **என்பது சமீபத்தில் எந்த நிறுவனத்தால் தொடங்கப்பட்ட ஒரு பரப்புரையாகும்?**

**அ) UNDP ☑**

ஆ) UNEP

இ) FAO

ஈ) WWF

✓ ஐநா வளர்ச்சித்திட்டமானது (UNDP), சமீபத்தில் 'அழிவைத் தேர்ந்தெடுக்க வேண்டாம்' என்ற தலைப்பில் ஒரு காணொலிப் பரப்புரையை தொடங்கியது. பருவநிலை மாற்றத்திற்கு எதிரான உலகளாவிய நடவடிக்கைகளை எடுத்துரைக்க அனைவரையும் வலியுறுத்துவதற்காக, 'ஃபிரான்கி தி டைனோ' என்ற டைனோசரை அதன் சின்னமாக அறிவித்தது. காணொலிப் பரப்புரையுடன், இந்த முயற்சிக்கு ஆதரவாக 'Don't Choose Extinction' என்ற இணையதளத்தையும் அந்த நிறுவனம் அறிமுகப்படுத்தியது. மேலும், ஃபிரான்கிக்காக டுவிட்டர் கணக்கு ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது.

---

**4. பண்டைய பேரரசுகளான தாதன் மற்றும் லிஹ்யானை தற்போது அகழாய்வு செய்துவருகிற நாடு எது?**



**அ) சௌதி அரேபியா ☑**

ஆ) நேபாளம்

இ) வங்காளதேசம்

ஈ) இஸ்ரேல்

✓ சௌதி அரேபியாவில் உள்ள தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் பண்டையகால பேரரசுகளான தாதன் மற்றும் லிஹ்யான் குறித்த அகழ்வாராய்ச்சிகளை ஐந்து இடங்களில் மேற்கொண்டு வருகின்றனர். இந்தப் பேரரசுகள் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு செழித்து வளர்ந்த முக்கியமான பிராந்திய ஆற்றல்களாக இருந்தன. இந்தத் திட்டம் சௌதி–பிரெஞ்சு கூட்டாண்மைத் திட்டமாகும்.

---

**5.** 'பஞ்சாமிர்த கலவை'யுடன் தொடர்புடையது எது?



**அ) பருவநிலை மாற்றம் ☑**

ஆ) உட்கட்டமைப்பு மேம்பாடு

இ) துறைமுக கட்டுமானம்

ஈ) இந்தியா மற்றும் பூட்டான் இடையே இருதரப்பு உறவுகள்

✓ 'பஞ்சாமிர்த கலவை' என்பது கிளாஸ்கோவில் நடைபெற்ற CoP26 மாநாட்டின்போது இந்தியப் பிரதமரால் முன்மொழியப்பட்ட 5 மடி உத்தி ஆகும். இந்த உத்தி, 2030ஆம் ஆண்டளவில் உலகம் நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைய உதவுகிறது.

✓ பஞ்சாமிர்த கலவையில் 2030'க்குள் 500 GW புதைபடிவமற்ற ஆற்றல் திறன், 2030'க்குள் 50% புதுப்பிக்கத்தக்க ஆற்றல் திறன், 2030'க்குள் 1 பில்லியன் டன் கரியமில உமிழ்வைக் குறைத்தல், கார்பன் தீவிரத்தை 2030'இல் 45% ஆக குறைத்தல், 2030'இல் நிகர சுழியத்தை அடைதல் ஆகியவை உள்ளடங்கும்.

---

**6.** 3 முக்கியமான **இயற்கை பாதுகாப்பு பணிகளை நிர்வகிப்பதற்கு SPV'ஐ முதன்முதலில் அமைத்த இந்திய மாநிலம் எது?**



**அ) தமிழ்நாடு ☑**

ஆ) கேரளா

இ) ஒடிஸா

ஈ) குஜராத்

✓ மூன்று முக்கியமான இயற்கை பாதுகாப்பு பணிகளை தொழில்ரீதியாக நிர்வகிப்பதற்காக, 'தமிழ்நாடு பசுமை காலநிலை நிறுவனம்' என்ற பெயரில் முதன்முறையாக சிறப்பு நோக்கம் கொண்ட நிறுவனத்தை (SPV) தமிழ்நாடு அமைத்துள்ளது.

✓ இந்நிறுவனம் தமிழ்நாடு பருவநிலை மாற்றம், தமிழ்நாடு பசுமை மற்றும் தமிழ்நாடு ஈரநிலப்பணிகள் ஆகியவற்றை நிர்வகிக்கும். இதன் அங்கீகரி–க்கப்பட்ட மூலதனம் ₹5 கோடி ஆகும். மாநில சுற்றுச்சூழல் செயலாளர் இந்த நிறுவனத்தின் தலைவர் மற்றும் MDஆக உள்ளார்.

---

**7. சமீபத்தில் திறந்து வைக்கப்பட்ட கருட் சட்டி பாலம் அமைந்துள்ள மாநிலம் எது?**



அ) தமிழ்நாடு

**ஆ) உத்தரகாண்ட் ☑**

இ) மத்திய பிரதேசம்

ஈ) உத்தர பிரதேசம்

✓ இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி சமீபத்தில் ₹1 கோடி மதிப்பிலான பல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார். மந்தாகினி ஆற்றின் கருட் சட்டி பாலம் உட்பட கேதார்நாத்தில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை அவர் நாட்டுக்கு அர்ப்பணித்தார். அவர் ஸ்ரீ ஆதி சங்கராச்சாரியார் சமாதி மற்றும் சிலையை திறந்து வைத்தார்.

---

**8.** 'பொது விவகாரங்கள்' பிரிவின்கீழ், 2020ஆம் ஆண்டுக்கான 'பத்ம விபூஷன்' விருதை வென்றவர் யார்?



**அ) ஷின்சோ அபே ☑**

ஆ) கோத்தபய இராஜபக்ச

இ) ஷேக் ஹசீனா

ஈ) K P சர்மா ஒலி

✓ பத்ம விருதுகள், 2021'இல் 119 நபர்களுக்கு வழங்கப்பட்டன. COVID–19 தொற்று காரணமாக விருது பெற்றவர்களைக் கௌரவிக்கும் விழாவை 2020'இல் நடத்த முடியவில்லை. இந்தப் பட்டியலில் 7 'பத்ம விபூஷன்', 10 'பத்ம பூஷன்' மற்றும் 102 'பத்மஸ்ரீ' விருது பெற்றவர்கள் உள்ளனர்.

✓ இதில் 16 விருதுகள் மரணத்திற்குப்பின் வழங்கப்பட்டுள்ளன. இவ்விருது பெற்றவர்களின் பட்டியலில் 29 பெண்களும் 1 திருநங்கையும் அடங்குவ–ர். முன்னாள் ஜப்பானிய பிரதமர் ஷின்சோ அபேவ், 'பொது விவகாரங்கள்' பிரிவின்கீழ் இவ்விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார்.

---

**9.** PMJDY மற்றும் குறைக்கப்பட்ட குற்றங்கள் குறித்த மதிப்பீட்டை எந்த வங்கியின் ஆராய்ச்சித் துறை வெளியிட்டது?

அ) RBI

**ஆ) SBI ☑**

இ) PNB

ஈ) கனரா வங்கி




✓ பாரத ஸ்டேட் வங்கியின் பொருளாதார ஆராய்ச்சித் துறையின்படி, அதிக பிரதமர் ஜன் தன் யோஜனா (PMJDY) கணக்கு இருப்புகளைக் கொண்ட மாநிலங்களில் குற்றங்கள் குறிப்பிடத்தக்க அளவில் குறைந்துள்ளன. அத்தகைய மாநிலங்களில் மதுபானம் மற்றும் புகையிலைப் பொருட்கள் போன்ற போதைப்பொருட்களின் நுகர்வு புள்ளிவிவர ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைக் கண்டுள்ளன.

---

**10.** "திசுவளர்ப்பு அடிப்படையிலான விதை உருளை விதிகள்", எந்த இந்திய மாநிலத்தின் அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன?

அ) கேரளா

ஆ) அஸ்ஸாம்

இ) மத்திய பிரதேசம்

**ஈ) பஞ்சாப் ☑**



✓ பஞ்சாப் அமைச்சரவை 'பஞ்சாப் திசுவளர்ப்பு அடிப்படையிலான விதை உருளைக்கிழங்கு விதிகள்–2021'க்கு ஒப்புதல் அளித்துள்ளது. இவ்விதிகள் பஞ்சாப் மாநிலத்தை நிலையான உருளைக்கிழங்கு விதை மையமாக மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

✓ இதன்மூலம் பஞ்சாப் மாநிலத்தில் உருளைக்கிழங்கு சாகுபடி அதிகரிக்கு –ம் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த விதிகளின் மூலம், திசு வளர்ப்பு அடிப்படையிலான சான்றிதழ் வசதியைப் பெற்ற நாட்டின் முதல் மாநிலம் ஆக பஞ்சாப் மாநிலம் இருக்கும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. நிலநடுக்கத்தை துல்லியமாக அறிய சென்னை ஐஐடி.யில் புதிய தொழில்நுட்பம் கண்டுபிடிப்பு**

சென்னை ஐஐடியில் நிலநடுக்கங்களைத் துல்லியமாக கண்டறிவதற்கான புதிய தொழில் நுட்பத்தை உருவாக்கியுள்ளனா்.

நிலநடுக்க சமிக்ஞைகளில் முதல் அதிா்வலைகளை துல்லியமாகக் கண்டறிந்து, மிகக் குறைந்த நேரத்தில் உயிா்களைக் காப்பாற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுக்க இந்தத் தொழில்நுட்பம் பயன்படும் எனவும் கண்டறிந்த வல்லுநா்கள் கூறியுள்ளனா்.

சென்னை ஐஐடியின் புதிய தொழில் நுட்பம், நிலநடுக்க அதிா்வலைகளின் துல்லியமான நேரத்தை மதிப்பிடுவது, ஒரு வலுவான ஆரம்ப எச்சரிக்கை அமைப்பை உருவாக்குவதுடன், சுமாா் 30 விநாடிகள் முதல் 2 நிமிஷங்கள் வரை தற்காத்துக் கொள்வதற்குத் தயாா் செய்து கொள்ள நேரத்தையும் வழங்குகிறது.

பூமியின் மேற்பரப்பு வரை அலைகள் தாக்குவதற்கு முன் கிடைக்கும் இந்த நேரம் மிகவும் பயனளிக்கக்கூடியது. நிலநடுக்கத்தைக் கண்டறிந்து தெரிவிப்பதற்கான நேரம் குறைவானதாகத் தோன்றினாலும், அணு உலைகள், மெட்ரோ போன்ற போக்குவரத்து, உயா் கட்டடங்களில் உள்ள லிப்ட்கள் ஆகியவற்றை நிறுத்தவும் எண்ணற்ற உயிா்களைக் காப்பாற்றவும் இந்த காலம் போதுமானது.

சென்னை ஐஐடியின் கெமிக்கல் பொறியியல் துறை பேராசிரியா் அருண் கே தங்கிராலா வழிகாட்டுதலில், ஆராய்ச்சி மாணவி காஞ்சன் அகா்வால் இதற்கான ஆய்வுகளை மேற்கொண்டாா். இந்த ஆராய்ச்சியின் கண்டுபிடிப்புகள் புகழ்பெற்ற சக மதிப்பாய்வு செய்யப்பட்ட அறிவியல் இதழான 'பிளாஸ் ஒன்' –இல் வெளியிடப்பட்டுள்ளன. இதுகுறித்து சென்னை ஐஐடி ஆராய்ச்சி மாணவி காஞ்சன் அகா்வால் கூறியது: 'பி–அலை வருகை குறித்த தகவல், நிலநடுக்கத்தின் அளவு, ஆழம் மற்றும் மையப்புள்ளி, இடம் போன்ற பிற மூல அளவு உருக்களைத் தீா்மானிப்பதில் முக்கியமானது. எனவே, பி–அலை கண்டறிதல் சிக்கலுக்கு உறுதியான, துல்லியமான தீா்வாக அமையும். நிலநடுக்க விவரங்களைச் சரியாக மதிப்பிடுவதற்கும், நிலநடுக்கம் அல்லது பிற தூண்டப்பட்ட நிகழ்வுகளால் ஏற்படும் சேதங்களைக் குறைப்பதற்கும் அவசியம்' எனத் தெரிவித்துள்ளாா்.

நில அதிா்வு சமிக்ஞைகள்: முக்கியமாக கடலில் அலைகள், பூமியின் மேலோட்டத்தில் ஏற்படும் மாற்றங்கள், வளிமண்டல மாறுபாடுகள் மற்றும் மனிதச் செயல்பாடுகள் காரணமாக நிலம் தொடா்ந்து அதிா்வடைகிறது.நில அதிா்வு சமிக்ஞைகள் இயற்கையான (நிலநடுக்கங்கள், எரிமலை வெடிப்புகள், சுனாமி போன்றவை) அல்லது மனிதனால் உருவாக்கப்பட்ட (அதிக போக்குவரத்து, அணு வெடிப்புகள், சுரங்க நடவடிக்கைகள் போன்றவை) மூலங்களிலிருந்து உருவாக்கப்படலாம்.

அனைத்து நில அதிா்வு நிகழ்வுகளும் அவற்றின் அளவிற்கு விகிதாசாரமான ஆற்றலை வெளியிடுகின்றன. வெளியிடப்பட்ட இந்த ஆற்றல், ஒரு அலையாக அனைத்து திசைகளிலும் நகா்ந்து, ஒரு நில அதிா்வு அளவி மூலம் நில அதிா்வு சமிக்ஞையாகப் பதிவு செய்யப்படுகிறது. சீஸ்மோகிராம்கள் என்பது நில அதிா்வு இயக்கத்தினை பதிவு செய்யும் வரைபடங்களாகும்.

முக்கியப் பயன்கள்: இந்த நில அதிா்வு வரைபடங்களின் பகுப்பாய்வு, பூமியின் செயல்பாட்டைப் புரிந்துகொள்வதற்கும், நிலநடுக்கங்களுக்கான முன்கூட்டிய எச்சரிக்கை அமைப்புகளை அமைப்பதற்கும், மூல இடங்களைத் தீா்மானிப்பதற்கும் , பிற நில அதிா்வு நிகழ்வுகளின் மூலத்தைக் கண்டறிவதற்கும் இன்றியமையாதது. நிலநடுக்கத்தின் சேதப் பகுதியைக் கண்டறிவது அல்லது கணிப்பது உயிா்களைப் பாதுகாப்பதிலும் சொத்து இழப்பைத் தடுப்பதிலும் பெரும் பங்கு வகிக்கிறது.

---

**2. கோவா 52–ஆவது சா்வதேச திரைப்பட விழா: விருதுப் போட்டியில் 15 திரைப்படங்கள்**

கோவாவில் இந்தமாத இறுதியில் நடைபெற உள்ள 52–ஆவது இந்திய சா்வதேச திரைப்பட விழாவில் தங்க மயில் உள்ளிட்ட விருதுகளுக்கு இரு மராத்தி படங்கள் உள்பட 15 சா்வதேச படங்கள் போட்டிக்கு தோ்வு செய்யப்பட்டுள்ளது. இந்தப் பட்டியலை மத்திய தகவல், ஒலிபரப்புத் துறை அமைச்சகம் வியாழக்கிழமை வெளியிட்டுள்ளது.

அதன் விவரம் வருமாறு: தோ்வு செய்யப்பட்டுள்ள திரைப்படங்களில் பின்லாந்து நாட்டின் எனி டே நவ், அமெரிக்கா – நியூமெக்சிகோ படமான லேண்ட் ஆப் ட்ரிம்ஸ் , பராகுவேயின் சாா்லட், ரோமானியாவின் இன்ட்ரகோல்ட், போலந்து நாட்டின் லீடா், ரஷியாவின் மாஸ்கோ டஸ் நாட் ஹேபன் மற்றும் தி டாா்ம், வங்கதேசத்தின் நோ கிரவுண்ட் பினத் த ஃபீட் , ஜப்பானின் ரிங் வாண்ட ரிங், செக் குடியரசின் சேவிங் ஒன் ஹூ வாஸ் டெட், பிரேசிலின் தி பா்ஸ்ட் ஃபாலன் போன்ற வெளிநாட்டு படங்களும், இந்திய அளவில் கோதாவரி (மராத்தி), மே வசந்த்ராவ் (மராத்தி) ; செம்கோா் (டிமாசா–திபெத் மொழி) போன்ற படங்களும் போட்டிக்குத் தோ்வாகியுள்ளன.

தங்க மயில் விருது ரூ.40 லட்சம்: தோ்வு செய்யப்படும் சிறந்த திரைப்படத்துக்கான தங்க மயில் விருது ரூ.40,00,000 ரோக்கப் பரிசு, சான்றிதழ் அடங்கும். சிறந்த இயக்குநருக்கான படத்திற்கு வெள்ளி மயில் விருது ரூ.15,00,000 ரொக்கம், சான்றிதழ் அடங்கும். சிறந்த நடிகா், நடிகைகளுக்கான வெள்ளி மயில் விருது, தலா ரூ.10,00,000 லட்சம் ரொக்கம், சான்றிதழ் அடங்கும்.

சிறப்பு நடுவா் விருது: நடுவா் தோ்வு செய்யும் படத்துக்கு, அந்தப் படத்தின் இயக்குநருக்கு வெள்ளி மயில் விருதாக சான்றிதழ், ரூ.15,00,000 ரொக்கம் வழங்கப்படுகிறது. 52–ஆவது இந்திய சா்வதேச திரைப்பட விழா வரும் நவம்பா் 20 முதல் 28–ஆம் தேதி வரை நடைபெறுகிறது. இந்த விழாவில் உள்நாடு மற்றும் சா்வதேச பாா்வையாளா்களுக்கு 45 திரைபடங்கள் திரையிடப்பட உள்ளன.

---

**3. கிராம சுற்றுலா: மத்திய பிரதேசமாநிலத்துக்கு சா்வதேச விருது**

மத்திய பிரதேச சுற்றுலா வாரியத்தின் கிராமப்புற சுற்றுலாத் திட்டத்துக்கு 'வோ்ல்ட் டிராவல் மாா்ட்' அமைப்பின் சிறந்த சுற்றுலாத் திட்டத்துக்கான விருது கிடைத்துள்ளது.

கரோனாவுக்கு பின் சுற்றுலா மேம்படுத்தப்பட்ட இடங்களைக் கணக்கில்கொண்டு இந்த விருது அளிக்கப்பட்டது. இதே கிராம சுற்றுலா பிரிவில் பிராந்திய அளவிலான ஸ்வா்ண புரஸ்காா் விருதும் மத்திய பிரதேச சுற்றுலாத் துறைக்கு கிடைத்துள்ளது. இது தவிர பெண்களுக்கு பாதுகாப்பான சுற்றுலா தலங்கள் பிரிவிலும் மத்திய பிரதேசத்துக்கு விருது கிடைத்துள்ளது.

இது தொடா்பாக மத்திய பிரதேச மாநில சுற்றுலாத் துறை முதன்மைச் செயலாளா் சேகா் சுக்லா கூறுகையில், 'சா்வதேச அளவில் சுற்றுலாத் துறையில் மத்திய பிரதேசத்துக்கு விருதுகள் கிடைத்துள்ளது மாநிலத்துக்கு மட்டுமல்ல நமது தேசத்துக்கே பெருமை சோ்க்கும் விஷயமாகும். மத்திய பிரதேசத்தை சுற்றுலாத் துறையில் சிறப்பிடத்துக்கு கொண்டு செல்ல வேண்டும் என்று மாநில முதல்வா் சிவராஜ் சிங் சௌஹான் மேற்கொண்ட முயற்சியும் இதற்கு முக்கியக் காரணம். லண்டனில் கடந்த வாரம் நடைபெற்ற நிகழ்ச்சியில் இந்த விருதை மாநில சுற்றுலாத் துறை அதிகாரிகள் பெற்றுக் கொண்டனா்.

கிராம சுற்றுலாத் திட்டத்தின்கீழ் மத்திய பிரதேசத்தில் 100 கிராமங்கள் உள்ளூா் மக்களின் ஒத்துழைப்புடன் மேம்படுத்தப்பட்டுள்ளன. கிராமப்புற பாரம்பரிய உணவு, நாட்டுப் புற இசை, கிராமப்புற விளையாட்டு, உள்ளூா் கலைகள், கைவினைப் பொருள்கள், இளைஞா்களின் திறன் மேம்பாடு ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளித்ததன் மூலம் இந்த விருதுகள் சாத்தியமாகியுள்ளன' என்றாா்.

---

**4. ரிசர்வ் வங்கியின் இரு திட்டங்கள் இன்று துவக்குகிறார் பிரதமர் மோடி**

ரிசர்வ் வங்கியின் வாடிக்கையாளர் சார்ந்த இரு திட்டங்களை, பிரதமர் மோடி இன்று 'வீடியோ கான்பரன்ஸ்' வாயிலாக துவக்கி வைக்கிறார்.

இது குறித்து பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

'ஆர்.பி.ஐ., ரீடெய்ல் டைரக்ட் ஸ்கீம்' மற்றும் வங்கி வாடிக்கையாளர்களின் குறைகள் அனைத்தையும் ஒரே குடையின் கீழ் கொண்டு வரும், 'மத்தியஸ்த தீர்ப்பாயம்' என்ற இரு திட்டங்களை பிரதமர் மோடி இன்று துவக்கி வைக்கிறார்.

ஆர்.பி.ஐ., ரீடெய்ல் டைரக்ட் திட்டத்தில், சில்லரை முதலீட்டாளர்கள் ரிசர்வ் வங்கியின் வாயிலாக, மத்திய – மாநில அரசுகள் வெளியிடும் கடன் பத்திரங்களை தரகு கட்டணமுன்றி வாங்கலாம்.

இதனால், சிறு முதலீட்டாளர்களும் சுலபமாக அரசு கடன் பத்திரங்களில் முதலீடு செய்ய முடியும்.மத்திய அரசு, 'ஒரே தேசம் – ஒரே மத்தியஸ்த தீர்ப்பாயம்' என்ற கொள்கைப்படி ஒரே வலைதளம், ஒரே மின்னஞ்சல், ஒரே முகவரியில் வங்கி வாடிக்கையாளர்கள் புகார் தெரிவிக்கும் வசதியை ஏற்படுத்தியுள்ளது.

இதன்படி மத்தியஸ்த தீர்ப்பாயம் என்ற மேம்படுத்தப்பட்ட வாடிக்கையாளர் குறை தீர்க்கும் திட்டத்தையும் மோடி துவக்கி வைக்கிறார். இதனால், ரிசர்வ் வங்கியின் கீழ் உள்ள அனைத்து வங்கிகளைச் சேர்ந்த வாடிக்கையாளர்களும், தங்கள் குறைகளை ஒருங்கிணைந்த ஒரே வலைதளத்தில் தெரிவித்து, தீர்வு காணும் வசதி கிடைக்கும்.

மேலும், இரு மொழிகளில் புகார் தெரிவிப்பதற்கான உதவியும், குறை தீர்வு தொடர்பான அனைத்து விபரங்களையும் பெற, கட்டணமில்லா தொலைபேசி எண்ணையும் மோடி அறிமுகப்படுத்த உள்ளார். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

---

**5. மல்யுத்தம்: நிஷா சாம்பியன்**

தேசிய மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில் 65 கிலோ பிரிவில், ரயில்வே வீராங்கனை நிஷா தாஹியா சாம்பியன் ஆனாா்.

முன்னதாக, ஹரியாணா மாநில மல்யுத்த பயிற்சி மையத்தில் நிஷா தாஹியா சுட்டுக் கொல்லப்பட்டதாக புதன்கிழமை தகவல் வெளியாகி அனைவருக்கும் அதிா்ச்சி ஏற்படுத்தியது. எனினும், சிறிது நேரத்திலேயே அது தாம் இல்லை என்று கூறி நிஷா மறுப்பு விடியோ வெளியிட்டாா். பின்னா், கொல்லப்பட்ட நிஷா புதிதாக மல்யுத்தத்தில் இணைந்த வேறொரு வீராங்கனை எனத் தெரியவந்தது.

இத்தகைய நிகழ்வு புதன்கிழமை நிகழ்ந்த நிலையில், வியாழக்கிழமை நடைபெற்ற இறுதிச்சுற்றில் நிஷா 30 விநாடிகளில் தனது எதிராளியான பஞ்சாபைச் சோ்ந்த ஜஸ்பிரீத் கௌரை வீழ்த்தி சாம்பியன் ஆனாா்.

---

**6. செயிலிங்: நேத்ரா சாம்பியன்**

ஸ்பெயினில் நடைபெற்ற செயிலிங் சாம்பியன்ஷிப் போட்டியில் லேசா் ரேடியல் பிரிவில் இந்தியாவின் நேத்ரா குமணன் தங்கப் பதக்கம் வென்றாா்.

ஐரோப்பிய பிராந்திய ஓபன் போட்டியாக நடைபெற்ற இந்த கிரான் கேனாரியா சாம்பியன்ஷிப் போட்டியில் நேத்ரா, ஐஎல்சிஏ 6 பிரிவில் நடைபெற்ற 6 பந்தயங்களில் 3–இல் முதலாவதாக வந்து 10 நெட் புள்ளிகளுடன் தங்கப் பதக்கத்தை கைப்பற்றினாா். அதே பிரிவில் ஸ்பெயினைச் சோ்ந்த பெனிடோ லாஞ்சோ, மாா்டினா ரெய்னோ காச்சோ முறையே 2 மற்றும் 3–ஆம் இடங்களைப் பிடித்தனா். இந்தப் போட்டியில் 3 நாடுகளைச் சோ்ந்த 20 போட்டியாளா்கள் பங்கேற்றனா். அதில் நேத்ரா உள்பட 3 போ் டோக்கியோ ஒலிம்பிக்கில் பங்கேற்றவா்களாவா்.

விஷ்ணுவுக்கு வெண்கலம்: இதனிடையே, ஸ்பெயினின் பாா்சிலோனா நகரில் நடைபெற்ற ஐஎல்சிஏ உலக செயிலிங் சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவின் விஷ்ணு 25–ஆவது இடம் பிடித்தாா். மற்றொரு இந்தியரான மோகித் 106–ஆவதாக வந்தாா். இந்தப் போட்டியில் மொத்தம் 135 போ் பங்கேற்றனா். போட்டியாளா்களிலேயே மிக இளம் வயது வீரா், உலக சாம்பியன்ஷிப்பில் 25–ஆவது இடம் பிடித்த முதல் ஆசிய வீரா் என்ற பெருமைகளை விஷ்ணு பெற்றாா்.

---

**7. தமிழகத்தில் இயல்பை விட 54 சதவீதம் மழை அதிகம்**

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை காலம் தொடங்கியதில் இருந்து அனைத்து பகுதிகளிலும் மழை பெய்து வருகிறது. அந்த வகையில் பருவமழை தொடங்கிய அக்டோபர் மாதம் முதல் நேற்று வரை தமிழகத்தில் 26 செ.மீ. மழை பதிவாகி இருக்க வேண்டும். ஆனால் தொடர் மழை காரணமாக தற்போது 40 செ.மீ. வரை மழை பெய்து இருக்கிறது. இது இயல்பை விட 54 சதவீதம் அதிகம். இதில் அதிகபட்சமாக விழுப்புரம் மாவட்டத்தில் 122 சதவீதம் அதிகமாக மழை பதிவாகியுள்ளது.

அதற்கடுத்தபடியாக திருவாரூர் மாவட்டத்தில் 110 சதவீதமும், கோவையில் 103 சதவீதமும், அரியலூரில் 95 சதவீதமும் அதிகமாக மழை பெய்திருக்கிறது.

சென்னையை பொறுத்தவரையில் இந்த பருவமழை காலத்தில் 77 சதவீதம் அதிகமாக மழை பதிவாகியுள்ளது. மேலும், கிருஷ்ணகிரி, மதுரை, விருதுநகர் மாவட்டங்களை தவிர மற்ற அனைத்து மாவட்டங்களிலும் இயல்பை விட அதிகமாகவே மழை பெய்து இருக்கிறது என்று வானிலை ஆய்வு மையத்தின் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த மாதம் தொடக்கத்தில் இருந்து தமிழகத்தில் பரவலாக தொடர் மழை பெய்து வருவதால், கடந்த 10 நாட்களில் மட்டும் தமிழகத்தில் சராசரியாக 18 செ.மீ. மழை பதிவாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

---

**1. 'போர் மற்றும் ஆயுத மோதலில் சுற்றுச்சூழலைச் சுரண்டுவதைத் தடுப்பதற்கான பன்னாட்டு நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?**



அ) நவம்பர் 4

**ஆ) நவம்பர் 6 ☑**

இ) நவம்பர் 8

ஈ) நவம்பர் 10

✓ 2001ஆம் ஆண்டில், ஐநா பொதுச்சபை ஒவ்வோர் ஆண்டும் நவ.6ஆம் தேதியை 'போர் மற்றும் ஆயுதமோதலில் சுற்றுச்சூழலை சுரண்டுவதை தடுப்பதற்கான பன்னாட்டு நாளாக' அறிவித்தது. ஐநா சுற்றுச்சூழல் பேரவை, 2016'இல் ஒரு தீர்மானத்தை ஏற்றுக்கொண்டது; அது ஆயுத மோதலின் நிகழ்தகவைக் குறைப்பதில் ஆரோக்கியமான சூழல் முக்கிய பங்கு வகிக்கிறது என்று அறிவித்தது. சுற்றுச்சூழலில் மோதல்கள் மற்றும் போர்களின் விளைவுகளைக் குறைப்பதே இதன் நோக்கமாகும்.

---

**2. முதன்முதலில் 'ஸ்டார் காலேஜ் மென்டர்சிப் திட்டத்தை' அறிவித்த மத்திய அமைச்சகம் எது?**

அ) கல்வி அமைச்சகம்

ஆ) மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம்

**இ) அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம் ☑**

ஈ) திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் அமைச்சகம்

✓ இந்திய விடுதலையின் 75ஆவது ஆண்டை முன்னிட்டு இளம் கண்டுபிடிப்பாளர்களுக்கான முதல் வழிகாட்டல் திட்டத்தை மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம் தொடங்கியது.

✓ 'DBT–ஸ்டார் காலேஜ் மென்டர்ஷிப் புரோகிராம்' என்று பெயரிடப்பட்ட இது, அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின் கீழுள்ள உயிரித் தொழில்நுட்பத்துறையின் (DBT) ஆதரவுடன் நாட்டின் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு 'நட்சத்திரக்கல்லூரி'யை தேர்ந்தெடுப்பதை நோக்க –மாகக் கொண்டுள்ளது. இது ஒவ்வொரு மாதமும் பயிலரங்குகள் மற்றும் கூட்டங்களை ஏற்பாடு செய்வதையும், குறிப்பாக கிராமப்புறங்களில் கல்லூரிகளை நடத்துவது மற்றும் அரசுப் பள்ளிகளுடன் தொடர்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

**3. இந்தியாவின் 27ஆம் மாநிலமாக நவ.9 அன்று உருவாக்கப்பட்ட மாநிலம் எது?**



அ) ஜார்க்கண்ட்

**ஆ) உத்தரகாண்ட் ☑**

இ) சத்தீஸ்கர்

ஈ) தெலுங்கானா

✓ இந்தியாவின் 27ஆவது மாநிலம் உருவானதைக் கொண்டாடும் வகை –யில் ஆண்டுதோறும் நவ.9ஆம் தேதி உத்தரகாண்ட் நிறுவன நாள் அனுசரிக்கப்படுகிறது. உத்தரபிரதேச மாநிலத்தின் வடமேற்குப்பகுதியில் இருந்தும், இமயமலைத் தொடரின் ஒருபகுதியிலிருந்தும் பல மாவட்டங் –களை இணைத்து கடந்த 2000ஆம் ஆண்டு உத்தரகாண்ட் மாநிலம் உருவாக்கப்பட்டது. இது முன்னர் உத்தராஞ்சல் என்று அழைக்கப்பட்டது. 2007ஆம் ஆண்டில் உத்தரகாண்ட் என மறுபெயரிடப்பட்டது.

---

**4. எந்தத் தலைவரின் நினைவாக நவ.11ஆம் தேதி தேசிய கல்வி நாள் அனுசரிக்கப்படுகிறது?**




அ) APJ அப்துல் கலாம்

ஆ) வல்லபாய் படேல்

இ) அன்னை தெரசா

**ஈ) மௌலானா அபுல் கலாம் ஆசாத் ☑**

✓ ஒவ்வோர் ஆண்டும், மௌலானா அபுல் கலாம் ஆசாத்தின் பிறந்தநாளை நினைவுகூரும் வகையில், இந்தியாவில் நவம்பர்.11ஆம் தேதி தேசிய கல்வி நாளாக அனுசரிக்கப்படுகிறது. அவர் சுதந்திரப் போராட்ட வீரரும், சுதந்திர இந்தியாவின் முதல் கல்வி அமைச்சரும் ஆவார். அவர் கல்வி அமைச்சராக இருந்த காலத்தில்தான் UGC, AICTE, கரக்பூர் உயர்கல்வி நிறுவனம் போன்றவை நிறுவப்பட்டன.

---

**5. 'ஒனகே ஒபவ்வா ஜெயந்தி'யைக் கொண்டாடுகிற மாநிலம் எது?**



**அ) கர்நாடகா ☑**

ஆ) ஒடிஸா

இ) மேற்கு வங்கம்

ஈ) பஞ்சாப்

✓ இந்த ஆண்டு முதல் நவம்பர் 11ஆம் தேதி 'ஒனகே ஒபவ்வா ஜெயந்தி' கொண்டாட கர்நாடக அரசு ஒப்புதல் அளித்துள்ளது. 18ஆம் நூற்றாண்டில் சித்ரதுர்காவில் ஹைதர் அலியின் படைகளுக்கு எதிராகப் போரிட்ட புகழ்பெற்ற பெண்–சிப்பாய்தான் ஒனகே ஒபவ்வா. அவரின் பிறந்தநாளை ஆண்டுதோறும் கொண்டாட கன்னட கலாசாரத்துறை முன்மொழிந்தது.

---

**6. இந்தியாவில் உள்ள வானூர்தி நிலையங்கள் எந்தச் சட்டத்தின் விதிமுறைகளின்படி "முதன்மை வானூர்தி நிலையங்கள்" என்று அறிவிக்கப்படுகின்றன?**



அ) இந்திய வானூர்தி நிலைய ஆணையச் சட்டம்

ஆ) வானூர்தி நிலைய ஒழுங்குமுறை சட்டம்

இ) சிவில் வானூர்தி போக்குவரத்து சட்டம்

**ஈ) வானூர்தி நிலைய பொருளாதார ஒழுங்குமுறை ஆணைய சட்டம் ☑**

✓ வானூர்தி நிலைய பொருளாதார ஒழுங்குமுறை ஆணையச் சட்டம், 2008'இன்கீழ், மகராஷ்டிராவில் உள்ள ஷீரடி வானூர்தி நிலையத்தை ஒரு பெரிய வானூர்தி நிலையமாக இந்திய அரசு அறிவித்துள்ளது. சட்டத்தின் 13ஆவது பிரிவின்கீழ், வானூர்தி நிலையப் பொருளாதார ஒழுங்குமுறை ஆணையம் (AERA) வானூர்தி சேவைகள் தொடர்பான கட்டணத்தை நிர்ணயிக்கும்.

---

**7. எந்த விண்வெளி முகமையின் ஏவுகலம், விண்வெளிக்கு சென்ற 600ஆவது நபரைத் தாங்கி சென்றது?**




அ) ஜாக்ஸா

ஆ) ESA

இ) இஸ்ரோ

**ஈ) ஸ்பேஸ் எக்ஸ் ☑**

✓ அமெரிக்க தனியார் விண்வெளி நிறுவனமான ஸ்பேஸ் எக்ஸ் அதன் விண்கலமான குரு டிராகன் என்டூரன்ஸில் 4 விண்வெளி வீரர்களை பன்னாட்டு விண்வெளி நிலையத்திற்கு தாங்கிசென்றது. கடந்த 60 ஆண்டுகளில் விண்வெளியை அடைந்த 600ஆம் நபரும் இதிலடக்கம்.

✓ ஸ்பேஸ் எக்ஸ் ஃபால்கன் 9 ஏவுகலத்தைப் பயன்படுத்தி இவ்விண்கலம் ஏவப்பட்டது. ஸ்பேஸ் எக்ஸின் தலைமையகம் கலிபோர்னியாவின் ஹாவ்தோர்னில் அமைந்துள்ளது. கடந்த 2002ஆம் ஆண்டில் எலோன் மஸ்க் என்பவரால் இது நிறுவப்பட்டது.

---

**8. இராஜ்யசபாவின் பொதுச்செயலாளராக நியமிக்கப்பட்டவர் யார்?**



**அ) PC மோடி ☑**

ஆ) சஞ்சய் ஜெய்ஸ்வால்

இ) அமித் ஷா

ஈ) ராஜ்நாத் சிங்

✓ மத்திய நேரடி வரிகள் வாரியத்தின் முன்னாள் தலைவரும், இந்திய வருவாய் சேவை அதிகாரியுமான PC மோடி, மாநிலங்களவையின் பொதுச்செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். ஐ ஆர் எஸ் அதிகாரி ஒருவர் பொதுச்செயலாளராக நியமிக்கப்படுவதால், பாரம்பரியமாக ஐ ஏ எஸ் அதிகாரிகள் பதவி வகித்து வந்த இந்தப் பதவி அரிதான நியமனங்களில் ஒன்றாக பார்க்கப்படுகிறது.

---

**9. உயிரியல் ரீதியாக இறந்ததாக அறிவிக்கப்பட்ட உலகின் எந்தப் புகழ்பெற்ற ஆற்றில் கடல் குதிரைகள், விலாங்குகள், கடல் நாய்கள் மற்றும் சுறாக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன?**



அ) கங்கை ஆ) யமுனை

இ) நைல் **ஈ) தேம்ஸ் ☑**

- ✓ கடல் குதிரைகள், ஈல்கள், கடல் நாய்கள் மற்றும் சுறாக்கள் போன்ற எதுவும் இல்லாத காரணத்தால், இலண்டனில் உள்ள தேம்ஸ் ஆறு, ஒரு காலத்தில் "உயிரியல் ரீதியாக இறந்ததாக" அறிவிக்கப்பட்டது.
- ✓ இலண்டனின் விலங்கியல் சங்கம் நடத்திய ஆய்வில், மூவ்வகையான சுறாக்கள் காணப்பட்டதாகவும், 115 வகையான மீன்கள் மற்றும் வனவுயி –ரிகள் காணப்பட்டதாகவும் கூறியது.

---

**10. 'ரெசாங் லா' என்ற மலைப்பாதை அமைந்துள்ள இடம் எது?**

**அ) லடாக் ☑**

ஆ) ஜம்மு காஷ்மீர்

இ) உத்தரகாண்ட்

ஈ) அருணாச்சல பிரதேசம்



- ✓ ரெசாங் லா, கிழக்கு லடாக்கில் அமைந்துள்ள எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டில் உள்ள ஒரு மலைப்பாதையாகும். 1962ஆம் ஆண்டு நடந்த போரின் ஒருபகுதியாக, இந்திய இராணுவத்தின் குமாவோன் படைப் பிரிவின் 13 துருப்புக்கள் 16,000 அடி உயரத்தில் சீன இராணுவத்தை தோற்கடித்த ரெசாங் லா போருக்காக இது அறியப்படுகிறது. போரின் நினைவாக ரெசாங் லாவில் புதுப்பிக்கப்பட்ட போர் நினைவிடத்தை பாதுகாப்பு அமைச்சர் இராஜ்நாத் சிங் திறந்து வைக்கவுள்ளார்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. டாக்டர் சுதா சேஷய்யனுக்கு பிரிட்டனின் கவுரவ பட்டம்**

தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர்., மருத்துவ பல்கலை துணைவேந்தர் சுதா சேஷய்யனுக்கு, பிரிட்டனின், 'ராயல் காலேஜ் ஆப் சர்ஜன்ஸ் ஆப் எடின்பரோ' சார்பில் கவுரவ பட்டம் வழங்கப்பட்டது.

உலகிலேயே அறுவை சிகிச்சை மருத்துவ கல்லூரிகளில் தொன்மையானதாகவும், முதன்மையானதாகவும், ராயல் காலேஜ் ஆப் சர்ஜன்ஸ் கருதப்படுகிறது. 500 ஆண்டுகள் பழமையான அக்கல்லூரி, 'பெலோஷிப் ஆப் ராயல் காலேஜ் ஆப் சர்ஜன்ஸ்' என்ற எப்.ஆர்.சி.எஸ்., பட்டத்தை, தகுதியானவர்களுக்கு வழங்குகிறது.

இதில், மருத்துவ துறையில் ஆற்றிவரும் பணிகள், ஆராய்ச்சி நடவடிக்கைகள், புதிய பங்களிப்புகள் மற்றும் அனுபவம் ஆகியவற்றின் அடிப்படையில், 'பெலோஷில் அட் ஹொமினேம்' என்ற கவுரவ பட்டத்தை, ராயல் கல்லூரியே விருப்பப்பட்டு தகுதியானவர்களுக்கு அளிக்கும்.அந்த வகையில், இம்முறை கவுரவ பட்டத்துக்கு, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர்., மருத்துவ பல்கலை துணைவேந்தர் டாக்டர் சுதா சேஷய்யனின் பெயர் முன்மொழியப்பட்டது.

இதை ராயல் கல்லூரியின் எப்.ஆர்.சி.எஸ்., தேர்வு குழுவின் கவுன்சில் உறுப்பினர்கள் ஒருமனதாக ஏற்றனர்.இதற்கு முன், தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர்., மருத்துவ பல்கலை துணைவேந்தராக இருந்த கேப்டன் ராஜாவுக்கு இந்த கவுரவம் கிடைத்தது. அதன்பின், தற்போது சுதா சேஷய்யனுக்கு அப்பட்டம் கிடைத்துள்ளது.

இந்த கவுரவ பட்டம், பிரிட்டனில் அவருக்கு அளிக்கப்பட்டது. பட்டமளிப்பு விழாவில் சிறப்பு விருந்திராக பங்கேற்று, சுதாசேஷய்யன் தலைமை உரையாற்றினார். இந்தியாவில் இருந்து எந்த பெண்ணுக்கும் கிடைக்காத, இந்த கவுரவம் சுதா சேஷய்யனுக்கு கிடைத்துள்ளது.

---

**2. கோவேக்ஸின் தடுப்பூசியின் செயல்திறன் 77.8%**

கரோனா தொற்றுக்கு எதிராக கோவேக்ஸின் தடுப்பூசி 77.8 சதவீத செயல்திறன் கொண்டுள்ளதாக லான்செட் மருத்துவ இதழில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கரோனா தொற்றுக்கு எதிராக முழுவதும் இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட தடுப்பூசி கோவேக்ஸின். ஹைதராபாதைச் சோ்ந்த பாரத் பயோடெக் நிறுவனம் அத்தடுப்பூசியைத் தயாரித்தது. அத்தடுப்பூசியின் அவசரகால பயன்பாட்டுக்கு உலக சுகாதார அமைப்பு அண்மையில் ஒப்புதல் வழங்கியது.

இந்நிலையில், கோவேக்ஸின் தடுப்பூசியின் 3–ஆம் கட்ட ஆய்வு தொடா்பான இடைக்கால முடிவுகள் 'தி லான்செட்' மருத்துவ இதழில் வெளியிடப்பட்டன. அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

கரோனா தொற்றுக்கு எதிரான நோய்எதிா்பொருளை கோவேக்ஸின் தடுப்பூசி தீவிர பக்கவிளைவுகள் ஏதுமின்றி உருவாக்குகிறது. அத்தடுப்பூசியை செலுத்திக் கொண்டு பரிசோதனையில் பங்கேற்றவா்கள் எவருக்கும் தீவிர பக்கவிளைவுகள் ஏற்படவில்லை. தலைவலி, காய்ச்சல், தடுப்பூசி செலுத்திய இடத்தில் வலி உள்ளிட்ட சிறிய அளவிலான பக்கவிளைவுகள் மட்டுமே ஏற்பட்டன.

பரிசோதனையில் பங்கேற்ற எவரும் உயிரிழக்கவில்லை. கடந்த ஆண்டு நவம்பா் 16–ஆம் தேதி முதல் கடந்த மே 17–ஆம் தேதி வரை இந்த ஆய்வுகள் நடத்தப்பட்டன. கரோனா தொற்றுக்கு எதிராக கோவேக்ஸின் தடுப்பூசி 77.8 சதவீத செயல்திறன் கொண்டுள்ளது. அதாவது, நூற்றில் சுமாா் 78 பேருக்கு தடுப்பூசி செலுத்திக் கொண்ட பிறகு கரோனா தொற்று பாதிப்பு ஏற்படவில்லை.

தொடா் ஆய்வுகள்: இந்த ஆய்வு முடிவுகள் ஆரம்பநிலையைச் சோ்ந்தவை. கரோனா தொற்றின் தீவிர பாதிப்பு, மருத்துவமனையில் சிகிச்சை பெறத் தேவையில்லாத வகையிலான பாதுகாப்பு ஆகியவை குறித்து தொடா்ந்து ஆய்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

60 வயதைக் கடந்த 2,750 பேரிடமும், இதய நோய், நீரிழிவு, உடல் பருமன் உள்ளிட்ட இணைநோய் கொண்ட 5,724 பேரிடமும் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் உள்ள 25 மருத்துவமனைகளில் இந்த ஆய்வு நடத்தப்பட்டது.

பெரிய மாற்றமில்லை: தடுப்பூசியின் 2–ஆம் தவணை செலுத்திய ஒரு மாதத்துக்குப் பிறகு உடலில் வலுவான நோய்எதிா்பொருள் உருவாகிறது. ஆல்ஃபா வகை கரோனா தொற்றுக்கு எதிராக கோவேக்ஸின் தடுப்பூசியின் செயல்திறன் குறையவில்லை. டெல்டா, காமா வகை கரோனா தொற்றுக்கு எதிராக செயல்திறன் சற்று குறைவாக (65 சதவீதம்) உள்ளது.

வெவ்வேறு வயதினருக்கிடையே நோய்எதிா்பொருள் உருவாவதில் பெரிய அளவிலான மாற்றங்கள் காணப்படவில்லை என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உலகத் தரத்திலானது: ஆய்வு முடிவு தொடா்பாக பாரத் பயோடெக் தலைவா் கிருஷ்ணா எல்லா வெளியிட்ட அறிக்கையில், 'கோவேக்ஸின் தடுப்பூசி உலகத் தரம் வாய்ந்ததாக உள்ளதை லான்செட் ஆய்விதழ் உறுதி செய்துள்ளது. கோவேக்ஸின் தடுப்பூசியின் ஆய்வுகள், இதுவரை முக்கியத்துவம் வாய்ந்த 10 மருத்துவ இதழ்களில் வெளியாகியுள்ளன' என்று குறிப்பிட்டுள்ளாா்.

---

**3. இளைஞரை மீட்ட காவல் ஆய்வாளருக்கு முதல்வா், நீதிபதி பாராட்டு**

இளைஞரை தோளில் சுமந்து மருத்துவமனையில் அனுமதித்த பெண் காவல் ஆய்வாளா் ராஜேஸ்வரியை நேரில் அழைத்து முதல்வா் மு.க.ஸ்டாலின் பாராட்டி வெள்ளிக்கிழமை சான்றிதழ் வழங்கினாா்.

நீதிபதி பாராட்டு: காவல் ஆய்வாளா் ராஜேஸ்வரியை சென்னை உயா்நீதிமன்றத்துக்கு நீதிபதி என்.ஆனந்த் வெங்கடேஷ்

அழைத்து அவரின் செயலைப் பாராட்டினாா். மேலும், நீதிபதி தனது பாராட்டு கடிதத்தையும் ஆய்வாளரிடம் வழங்கினாா்.

முதல்வா் ஸ்டாலின் அளித்த சான்றிதழில் கூறியிருப்பதாவது: இது மக்களின் நலன் காக்கும் அரசு என்ற எண்ணத்தை மனதில் பதிய வைத்து, அரசு நிா்வாகத்தைச் சோ்ந்த ஒவ்வொருவரும் அா்ப்பணிப்புடன் செயலாற்றி வரும் நிலையில், அதற்கு மகுடம் சூட்டுவது போன்று பருவமழைக் காலத்துப் பேரிடா் நேரத்தில் மனித உயிா் காக்கச் செயல்பட்ட மகத்தான பணிக்கு எனது மனமாா்ந்த பாராட்டுகள்; வாழ்த்துகள். சென்னை கீழ்ப்பாக்கம் கல்லறையில் சுயநினைவின்றிக் கிடந்த உதயா என்ற இளைஞரை மீட்டு தோளில் சுமந்து பின்னா் ஆட்டோவில் ஏற்றி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளீா்கள். தங்களது அா்ப்பணிப்பு மிக்க கடமையுணா்வும், சீருடைப் பணியாளா்களுக்குரிய ஈர இதயத்தின் வெளிப்பாடும் போற்றுதலுக்கு உரியவை.

தடகளப் போட்டிகளில் சிறந்த வீராங்கனையாக சாதனைகள் பல புரிந்து, 1992 கும்பகோணம் மகாமகத்தில் ஏற்பட்ட நெரிசலின்போது தாங்கள் ஆற்றிய பணி எப்போதும் நினைவுகூரத்தக்கது. காவல் பணியில் எளிய மக்களின் துயா் துடைக்கும் கரங்களாக தங்களுடைய செயல்பாடு பலமுறை அமைந்துள்ளது. தங்களது மனிதாபிமான செயல்பாடு,

தங்களைப் போன்ற மனிதாபிமானம் கொண்ட தமிழ்நாடு காவல் துறையினா் அனைவருக்கும் பெருமை சோ்க்கும் வகையில் அமைந்துள்ளது.

காவல் துறைக்குப் பொறுப்பு வகிக்கும் முதல்வா் என்ற முறையிலும், மழைக்காலப் பேரிடா் நேரத்தில் தொடா்ச்சியாகப் பொதுமக்களை நேரில் சந்தித்து அவா்களின் தேவைகளைக் கேட்டறிந்தவன் என்ற முறையிலும் தங்களது மனிதாபிமானமிக்க உயிா்க் காப்புப் பணிக்கு எனது மனப்பூா்வமான வாழ்த்துகள்.

காவல் துறை உங்கள் நண்பன் என்பதற்கேற்ப கம்பீரமாகவும், கருணை உள்ளத்துடனும் தாங்கள் மேற்கொண்ட பணி, காவல் துறையில் உள்ள அனைவருக்கும் பெருமையையும் ஊக்கத்தையும் அளிக்கக் கூடியது. தங்களது சேவைக்கு வாழ்த்துகள். சட்டத்தையும், மக்களையும் காக்கின்ற பணி தொடரட்டும் என வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளாா்.

இளைஞா் சாவு: சென்னை டி.பி.சத்திரத்தில் பெண் காவல் ஆய்வாளா் தோளில் சுமந்து மீட்ட இளைஞா், மருத்துவமனையில் வெள்ளிக்கிழமை உயிரிழந்தாா்.

சென்னை டி.பி. சத்திரம் காவல் நிலைய ஆய்வாளா் ராஜேஸ்வரி. கீழ்ப்பாக்கம் கல்லறைத் தோட்டத்தில் இளைஞா் ஒருவா் மரக்கிளை ஒடிந்து விழுந்து சடலமாக கிடக்கிறாா் என ராஜேஸ்வரிக்குத் தகவல் கிடைத்தது. அங்கு சென்ற ராஜேஸ்வரி, கல்லறைகளுக்கு நடுவே அசைவற்றுக் கிடந்த இளைஞருக்கு முதலுதவி சிகிச்சை அளித்தபோது, அவருக்கு உயிா் இருப்பது தெரியவந்தது.

இதைப் பாா்த்த ராஜேஸ்வரி, சற்றும் தாமதிக்காமல் இளைஞரை தனது தோளில் தூக்கிச் சென்று அந்த வழியாக வந்த ஆட்டோவில் ஏற்றி கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தாா். போலீஸாரின் விசாரணையில், மயங்கிக் கிடந்தவா் சென்னை ஷெனாய் நகரைச் சோ்ந்த உதயா (25) என்பதும், அந்தக் கல்லறைத் தோட்டத்தில் தங்கியிருந்து வேலை செய்து வருவதும் தெரியவந்தது.

போலீஸாரால் மீட்கப்பட்ட உதயாவுக்கு கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. இந்த சூழ்நிலையில், மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பெற்று வந்த உதயா, வெள்ளிக்கிழமை உயிரிழந்தாா்.

நீதிபதி பாராட்டு: ஆய்வாளா் ராஜேஸ்வரியை சென்னை உயா்நீதிமன்றத்துக்கு அழைத்து நீதிபதி என்.ஆனந்த் வெங்கடேஷ், அவரது செயலைப் பாராட்டினாா். மேலும், நீதிபதி தனது பாராட்டு கடிதத்தையும் ஆய்வாளரிடம் வழங்கினாா்.

---

**4. திருப்பதியில் தலவிருட்சமாக சம்பங்கி மரம் தேர்வு: தேவஸ்தானம் அறிவிப்பு**

திருப்பதி ஏழுமலையான் கோயில் தல விருட்சமாக சம்பங்கி மரத்தை தேர்வு செய்து தேவஸ்தானம் அறிவித்துள்ளது. திருப்பதி தேவஸ்தானம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

ஏழுமலையானுக்கு நடத்தப்படும் அனைத்து விதமான பூஜைகளில் பயன்படுத்தப்படும் மலர்களின் அடிப்படையில் சம்பங்கி மரம் ஏழுமலையான் கோயில் தலவிருட்சமாக அறிவிக்கப்பட்டுள்ளது. தேவஸ்தான செயல் அதிகாரி ஜவகர் உத்தரவின்படி புராணங்களில் கூறப்பட்டுள்ள பல்வேறு வகையான மலர் செடிகளைக் கொண்ட பூந்தோட்டம் திருமலையில் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. அவற்றில் ஏழுமலையானுக்கு தினமும் நடத்தப்படும் பூஜைகளில் சம்பங்கி குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்று வருகிறது.

பவிஷ்யோத்ர புராணம் 13வது பாகம் 33 மற்றும் 34வது சுலோகங்களில் அப்போதைய அரசர் தொண்டமான் சக்கரவர்த்தியிடம் தனக்கான கோயிலை கட்டும்போது கட்டுமானத்திற்காக தேர்வு செய்யப்பட்ட பகுதியில் இருக்கும் சம்பங்கி தோட்டத்தை அகற்ற வேண்டாம் என்று கூறியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏழுமலையான் கோயலில் உள்ள ஒருபகுதி தற்போதும் சம்பங்கி பிரகாரம் என்று அழைக்கப்படுகிறது. இதுபோன்ற காரணங்களால் சம்பங்கி மரம் ஏழுமலையானின் தலவிருட்சமாக தற்போது தேர்வு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

---

**5. 'முதல்வரின் முகவரி' : தமிழக அரசு அரசாணை வெளியீடு**

முதல்–அமைச்சரின் குறைதீர்ப்பு துறைகள் ஒருங்கிணைக்கப்பட்டு, முதல்வரின் முகவரி என்ற புதிய துறை உருவாக்கப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. உங்கள் தொகுதியில் முதல்–அமைச்சர், முதல்–அமைச்சர் உதவி மையம், குறைதீர்ப்பு மேலாண்மை அமைப்பு ஒருங்கிணைப்பு ஆகிய துறைகள் ஒன்றிணைந்து 'முதல்வரின் முகவரி' என்ற புதிய துறை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் முதல்வரின் முகவரி என்ற புதிய துறை சிறப்பு அலுவலராக ஷில்பா பிரபாகர் சதீஷ் அவர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளதாகவும் தமிழக அரசு தெரிவித்துள்ளது. முதல்வரின் முகவரி துறையில் மனுக்கல் தீர்வுக்காண ஒற்றை இணையதள முகப்பு பயன்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடா்பாக தலைமைச் செயலாளா் இறையன்பு வெளியிட்ட அரசாணையில், முதல்–அமைச்சரின் தனிப்பிரிவு, முதல்–அமைச்சரின் உதவி மையம் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட குறைதீா்ப்பு மேலாண்மை அமைப்பு (ஐஜிஜிசிஎம்எஸ்), உங்கள் தொகுதியில் முதல்–அமைச்சர் துறை ஆகியவை ஒருங்கிணைக்கப்பட்டு, 'முதல்வரின் முகவரி' என்ற புதிய துறை உருவாக்கப்படுகிறது.

முதல்–அமைச்சர் முகவரி துறையின் மனுக்களுக்குத் தீா்வு காண முதல்வரின் உதவி மையம் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட குறைதீா்ப்பு மேலாண்மை அமைப்பின் உதவி எண் மாநிலம் முழுவதும் ஒற்றை இணையதள முகப்பாகப் பயன்படுத்தப்படும். இது முதல்வரின் முகவரி துறையின் கட்டுப்பாட்டில் இருக்கும். உங்கள் தொகுதியில் முதல்–அமைச்சர் துறையின் சிறப்பு அலுவலா் ஷில்பா பிரபாகா் சதிஷ், முதல்வரின் முகவரி துறையின் சிறப்பு அலுவலராக நியமிக்கப்படுகிறாா்'' என்று அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

---

**6. ஓய்வுபெற்ற ஐஏஎஸ் அதிகாரி திருப்புகழ் தலைமையில் பெருநகர வெள்ள இடர் தணிப்பு, மேலாண்மைக்கான குழு: தமிழக அரசு ஆணை பிறப்பித்தது**

சென்னை பெருநகர வெள்ள இடர் தணிப்பு மற்றும் மேலாண்மைக்கான அறிவுரைக் குழுவை, ஓய்வுபெற்ற ஐஏஎஸ் அதிகாரி வெ.திருப்புகழ் தலைமையில் அமைத்து தமிழக அரசு அரசாணை பிறப்பித்துள்ளது.

இந்த அரசாணையில் கூறியிருப்பதாவது: தமிழக சட்டப்பேரவையில் ஆளுநர் உரையாற்றும்போது, "சென்னையில் ஏற்படும் வெள்ள பாதிப்புகளைக் குறைக்கும் வகையில், வெள்ள கட்டுப்பாடு நடவடிக்கைகள் மற்றும் மழைநீர் கால்வாய்களை வடிவமைத்தல் ஆகிய பணிகளை மேற்கொள்வதற்காக சுற்றுச்சூழல், நகர்ப்புற திட்டமிடல், பேரிடர் மேலாண்மை வல்லுநர்கள் அடங்கிய சென்னை பெருநகர வெள்ள மேலாண்மை குழு அமைக்கப்படும்' ' என்று அறிவித்தார்.

இதையடுத்து, மாநகராட்சி ஆணையர் அரசுக்கு அனுப்பிய கடிதத்தில், '₹கடற்கரை நகரமான சென்னை, புயல் மற்றும் வெள்ளம் போன்ற இயற்கைப் பேரிடர்களால் அதிக அளவில் பாதிக்கப்படும் பகுதியாகவும், மிகுந்த ஈரம் மற்றும் வறட்சியான பருவநிலை கொண்ட பகுதியாகவும் உள்ளது. மேலும், சென்னையின் பெரும்பாலான பகுதிகள் கடல்மட்டத்தில் இருந்து 2 மீட்டர் உயரமாகவும், சில பகுதிகள் கடல் மட்டத்தைவிட தாழ்வானதாகவும் உள்ளன. சென்னையைச் சுற்றியுள்ள திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களில் 2,500 ஏரிகள், குளங்கள் உள்ளன.

இங்கிருந்து வெளியேறும் நீர் முழுவதும் அடையாறு, கூவம், கோவளம், கொசஸ்தலை ஆறுகள்வழியாகச் செல்கிறது. இதனால்,மழைக்காலங்களில் தண்ணீரால் ஏற்படும் பாதிப்புகள் அதிகரிக்கின்றன. எனவே, ஆளுநர் அறிவித்தபடி குழுவை அமைக்க வேண்டும்' ' என்று தெரிவித்திருந்தார்.

இதன் முதல்கட்டமாக கடந்த செப்.14–ம் தேதி ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டது. அதில். மாநகராட்சி ஆணையர், சென்னை குடிநீர் வாரிய மேலாண் இயக்குநர், சுற்றுச்சூழல் துறை இயக்குநர் மற்றும் தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் கொள்கை மற்றும்திட்டப் பிரிவு கூடுதல் செயலராக இருந்த, ஓய்வுபெற்ற ஐஏஎஸ் அதிகாரி வெ.திருப்புகழ் ஆகியோர் பங்கேற்றனர்.

இதில், சென்னை மாநகரில் வெள்ளப் பாதிப்பு தடுப்பு மற்றும் மேலாண்மை தொடர்பான பல்வேறு விஷயங்கள் ஆலோசிக்கப்பட்டன. கூட்டத்தைத் தொடர்ந்து, சென்னை மாநகராட்சி ஆணையர் அனுப்பிய பரிந்துரையின் அடிப்படையில் ₹சென்னை பெருநகர வெள்ள இடர் தணிப்பு மற்றும் மேலாண்மைக்கான அறிவுரைக் குழுவை' தமிழக அரசு அமைத்துள்ளது.

இடம்பெற்றுள்ள அதிகாரிகள்

ஓய்வுபெற்ற ஐஏஎஸ் அதிகாரி வெ.திருப்புகழ் தலைமையிலான இக்குழுவில், டெல்லி நகர் மற்றும் ஊரமைப்பு நிறுவன தலைமை திட்டஅலுவலர், காலநிலை பின்னடைவு பயிற்சி உலக வள நிறுவன

இயக்குநர் நம்பி அப்பாதுரை, சென்னை வளர்ச்சி கல்வி நிறுவனப் பேராசிரியர் ஜானகிராமன், மும்பை ஐஐடிகட்டுமானப் பொறியியல் துறை பேராசிரியர் கபில் குப்தா, சென்னை அண்ணா பல்கலைக்கழக மனித குடியமர்வு மைய இயக்குநர் பிரதீப்மோசஸ், ஐதராபாத்தில் உள்ள தேசிய ரிமோட் சென்சிங் துறையின் பிரதிநிதி, அண்ணா பல்கலைக்கழக ரிமேட் சென்சிங் நிறுவனப் பேராசிரியர் திருமலைவாசன், ஐஐடி கட்டுமானப் பொறியியல் துறை தலைவர் பாலாஜி நரசிம்மன், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும தலைமை திட்ட அதிகாரி, சென்னை மண்டல நீர்வளத் துறைதலைமைப் பொறியாளர், நெடுஞ்சாலைத் துறை தலைமைப் பொறியாளர், சுற்றுச்சூழல் துறை இயக்குநர் ஆகியோர் உறுப்பினர்களாக இருப்பார்கள்.

சென்னை மாநகராட்சியின் மழைநீர் வடிகால் துறை தலைமைப் பொறியாளர் இக்குழுவின் உறுப்பினர்–செயலராக இருப்பார். இந்த குழு, சென்னையில் வெள்ளப் பாதிப்பை குறைப்பதற்கான ஆலோசனைகளை வழங்கும்.

இவ்வாறு அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தலைமைச் செயலரின் சகோதரர்

குஜராத் மாநிலப் பிரிவு ஐஏஎஸ் அதிகாரியான வெ.திருப்புகழ், தமிழக தலைமைச் செயலர் வெ.இறையன்புவின் மூத்த சகோதரர். குஜராத் முதல்வராக நரேந்திர மோடி இருந்தபோதும், அவர் பிரதமரானபோதும் திருப்புகழ் அவரின் கீழ் பணியாற்றினார். மேலும், பேரிடர் மேலாண்மை ஆணையத்தில் இருந்தபோது, தமிழகத்தில் புயல் பாதிப்பு மற்றும் வறட்சிப் பாதிப்புகளை பார்வையிடும் குழுவின் தலைவராக தமிழகத்துக்கு வந்தவர் என்பது குறிப் பிடத்தக்கது.

### 7. 5 முக்கிய சேவைகளின் அடிப்படையில் உலக சாதனை புத்தகத்தில் இடம் பெற்றது திருப்பதி தேவஸ்தானம்

'வேர்ல்ட் புக் ஆஃப் ரெக்கார்ட்ஸ்' நிறுவனம் லண்டனை தலைமையகமாகக் கொண்டு செயல்படுகிறது. இந்தப் புத்தகத்தில் திருமலை திருப்பதி தேவஸ்தானம் இடம்பெற்றுள்ளது. இந்நிறுவனத்தின் இந்திய பிரிவு தலைவர்சந்தோஷ் சுக்லா சார்பில், அதன் துணைச் செயலாளர் உல்லா ஜிஇதற்கான சான்றிதழை திருமலையில் தேவஸ்தான அறங்காவலர் குழு தலைவர் ஒய்.வி.சுப்பா ரெட்டியிடம் நேற்று வழங்கினார்.

திருமலை திருப்பதியில் அதிகமானோர் தலை முடி காணிக்கை செலுத்துவது, அதிக லட்டு பிரசாதம் விநியோகம், தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்களுக்கு இலவசமாக அன்ன பிரசாதம் வழங்கல்,பக்தர்களுக்காக நெருக்கடி இல்லாத வரிசைகளை ஏற்பாடு செய்தது, திருப்பதியிலிருந்து திருமலைக்கு அமைக்கப்பட்டிருக்கும் நடைபாதை மற்றும் பக்தர்களுக்கு செய்யும் சேவை ஆகியவற்றால் தேவஸ்தானம், இந்த சாதனை புத்தகத்தில் இடம்பெற்றதாக துணைசெயலர் உல்லா ஜி தெரிவித் தார்.

இவையெல்லாம் தேவஸ்தான ஊழியர்களின் கடின உழைப்பால் சாத்தியமானது என அறங்காவலர் குழு தலைவர் ஒய்.வி. சுப்பாரெட்டி தெரிவித்தார்.

### 8. நீரஜ் சோப்ரா, ரவி குமாா், லவ்லினா, பி.ஆா். ஸ்ரீஜேஷ் உள்ளிட்டோருக்கு தேசிய விளையாட்டு விருதுகளை வழங்கினார் குடியரசுத் தலைவர்

குடியரசுத் தலைவர் மாளிகையில் நடைபெற்ற விழாவில் தேசிய விளையாட்டு விருதுகளை வீரர், வீராங்கனைகளுக்கு குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் வழங்கி கவுரவித்தார்.

தேசிய விளையாட்டு விருதுகள் ஒவ்வொருஆண்டும் விளையாட்டில் சிறந்து விளங்குபவர்களை அங்கீகரித்து வழங்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் இந்த ஆண்டுக்கான தேசிய விளையாட்டு விருதுகள் வழங்கும் விழா டெல்லியில் உள்ள குடியரசுத் தலைவர் மாளிகையில் நேற்று நடைபெற்றது.

இதில் நீரஜ் சோப்ரா (தடகளம்), ரவி குமார் (மல்யுத்தம்), லவ்லினா போர்கோஹெய்ன் (குத்துச்சண்டை), பி.ஆர்.ஸ்ரீஜேஷ் (ஹாக்கி), அவனி லெகாரா (பாரா துப்பாக்கி சுடுதல்), சுமித் அன்டில் (பாரா தடகளம்), பிரமோத் பகத் (பாரா பாட்மிண்டன்), கிருஷ்ணா நாகர் (பாரா பாட்மிண்டன்), மணீஷ் நர்வால் (பாரா துப்பாக்கி சுடுதல்), மிதாலி ராஜ் (கிரிக்கெட்), சுனில் சேத்ரி (கால்பந்து), மன்பிரீத் சிங் (ஹாக்கி)ஆகிய 12 பேருக்கு தயான்சந்த் கேல் ரத்னா விருதை குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த்வழங்கினார்.

விழாவில் அர்பிந்தர் சிங் (தடகளம்), சிம்ரன்ஜித் கவுர் (குத்துச்சண்டை), ஷிகர் தவன் (கிரிக்கெட்), சி.ஏ.பவானி தேவி (வாள்வீச்சு), மோனிகா(ஹாக்கி), வந்தனா கட்டாரியா (ஹாக்கி), சந்தீப் நர்வால் (கபடி), ஹிமானி உத்தம் (மல்லர் கம்பம்), அபிஷேக் வர்மா (துப்பாக்கி சுடுதல்), அங்கிதா ரெய்னா (டென்னிஸ்), தீபக்புனியா (மல்யுத்தம்), தில்பிரீத் சிங், ஹர்மன்பிரீத் சிங், ரூபிந்தர் பால் சிங், சுரேந்தர் குமார், அமித் ரோஹிதாஸ், வீரேந்திர லக்ரா, சுமித், நீலகண்ட சர்மா, ஹார்திக் சிங், விவேக் சாகா் பிரசாத், குர்ஜந்த் சிங், மன்தீப் சிங், ஷம்ஷேர் சிங், லலித் குமாா் உபாத்யாய் (ஹாக்கி), வருண் குமாா், சிம்ரன்ஜித் சிங் (ஹாக்கி), யோகேஷ் கதுனியா (பாரா தடகளம்), நிஷாத் குமார் (பாரா தடகளம்), பிரவீன் குமாா் (பாராதடகளம்), சுஹாஸ் யதிராஜ் (பாரா பாட்மிண்டன்), சிங்கராஜ் அதானா (பாரா துப்பாக்கி சுடுதல்), பவினா படேல் (பாரா டேபிள் டென்னிஸ்), ஹர்விந்தர் சிங் (பாரா வில்வித்தை), சரத் குமாா் (பாரா தடகளம்) உள்ளிட்ட 35 பேருக்கு அர்ஜூனா விருது வழங்கப்பட்டது.

வாழ்நாள் பிரிவில் துரோணாச்சார்யா விருது டி.பி.உஷப், சர்கார் தல்வார், சர்பால் சிங், அஷன் குமார், தபன் குமார் ஆகியோருக்கு வழங்கப்பட்டது.

வழக்கமான பிரிவில் துரோணாச்சார்யா விருது ராதாகிருஷ்ணன் நாயர் பி, சந்தியா குருங், ப்ரீதம் சிவாச், ஜெய் பிரகாஷ் நௌடியல் மற்றும் சுப்பிரமணியன் ராமன் ஆகியோருக்கு வழங்கப்பட்டது.

வாழ்நாள் சாதனைக்கான தயான் சந்த் விருது லேகா கே.சி., அபிஜீத் குந்த்தே, டேவிந்தர் சிங் கார்ச்சா, விகாஸ் குமார் மற்றும் சஜ்ஜன் சிங் ஆகியோருக்கு வழங்கப்பட்டது. பஞ்சாப் பல்கலைக்கழகம் (சண்டிகர்) 2021–ம்ஆண்டுக்கான மௌலானா அபுல் கலாம் ஆசாத் கோப்பையை பெற்றது.

### 9. 'டெலி–லா' செயலி: கிரண் ரிஜிஜு அறிமுகப்படுத்தினாா்

மக்களுக்கான 'டெலி–லா' கைப்பேசி செயலியை மத்திய சட்டம்– நீதித் துறை அமைச்சா் கிரண் ரிஜிஜு சனிக்கிழமை அறிமுகப்படுத்தினாா்.

தில்லியில் நடைபெற்ற அறிமுக நிகழ்ச்சியில் அவா் பேசியதாவது:

'எண்ம இந்தியா' என்ற பிரதமரின் தொலைநோக்குப் பாா்வை மூலம் புதிய இந்தியா உருவாகிறது. எண்ம இந்தியா திட்டத்தின் கீழ் டெலி–லா செயலி உருவாக்கப்பட்டுள்ளது.

இது வழக்கு விசாரணைக்கு முந்தைய செயல்முறையை வலுப்படுத்துவதற்கான தளமாகும். இந்திய விடுதலையின் 'அம்ருத் மஹோத்ஸவம்' கொண்டாடும் இவ்வேளையில், பொது மக்கள் சுயசாா்புடையவா்களாகவும், நீதியை எளிதில் அணுகக் கூடியவா்களாகவும் இருக்கும் வகையில் ஒன்றிணைய வேண்டும்.

இந்தியாவின் 75 ஆண்டுகால சுதந்திர கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக அனைத்து மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களை உள்ளடக்கிய 75,000 கிராம ஊராட்சிகளில் டெலி–லா செயலி விரிவாக்கம் செய்யப்படும்.

வழக்கறிஞா்கள் டெலி–லா இயக்கத்தில் சோ்ந்து சட்ட உதவி சேவைகளுக்கான சட்ட வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனைகளை வழங்க வேண்டும் என்றாா் அவா்.

நிகழ்ச்சியில் சட்டம் – நீதித்துறை இணை அமைச்சா் எஸ்.பி.சிங் பகேல் கலந்து கொண்டாா்.

### 10. பருவநிலை மாற்ற மாநாடு இறுதி அறிக்கை: நாடுகளிடையே தொடா் பேச்சுவாா்த்தை

பருவநிலை மாற்ற மாநாடு தொடா்பான இறுதி அறிக்கையைத் தயாரிக்கும் விவகாரத்தில் நாடுகளிடையே தொடா் பேச்சுவாா்த்தை நடைபெற்று வருகிறது.

ஸ்காட்லாந்தில் உள்ள கிளாஸ்கோ நகரில் 26–ஆவது பருவநிலை மாற்ற மாநாடு நடைபெற்றது. இரு வாரங்களாக நடைபெற்ற மாநாடு கடந்த 12–ஆம் தேதி நிறைவடைந்தது. எனினும், மாநாட்டின் இறுதி அறிக்கையைத் தயாரிப்பது தொடா்பான பேச்சுவாா்த்தை தொடா்ந்து நடைபெற்று வருகிறது.

ஐ.நா.வின் அனைத்து உறுப்பு நாடுகளும் வரைவு அறிக்கையில் இடம்பெற்றுள்ள அனைத்து விவகாரங்களுக்கும் ஒப்புதல் அளித்தால் மட்டுமே அந்த அறிக்கை இறுதி வடிவம் பெறும். அறிக்கையை இறுதி

செய்வது தொடா்பான பேச்சுவாா்த்தை கிளாஸ்கோ நகரில் சனிக்கிழமை நடைபெற்றது.

அமெரிக்கா, பிரிட்டன், சீனா உள்ளிட்ட நாடுகளின் பிரதிநிதிகள் அந்தப் பேச்சுவாா்த்தையில் கலந்து கொண்டனா். நிலக்கரி அடிப்படையிலான எரிசக்தி உற்பத்தியை நிரந்தரமாக நிறுத்துவதற்கான இலக்கை நிா்ணயிப்பது குறித்து பேச்சுவாா்த்தையில் விவாதிக்கப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மரபுசாா் எரிசக்திக்கு நாடுகள் படிப்படியாக முடிவுகட்ட வேண்டும் என்று வரைவு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்காக, வளா்ச்சியடைந்த நாடுகள் மற்ற நாடுகளுக்கு நிதியளித்து உதவ வேண்டும் என்று வரைவு அறிக்கையில் புதிதாக சோ்க்கப்பட்டுள்ளது. எனினும், இந்த விவகாரத்தில் அனைத்து நாடுகளிடையேயும் கருத்தொற்றுமை ஏற்படவில்லை.

பாரீஸ் ஒப்பந்தத்தின்படி வெப்பநிலை உயா்வை 2100–க்குள் 1.5 டிகிரி செல்சியஸுக்குக் கீழ் கட்டுப்படுத்த வேண்டுமெனில், கரியமில வாயு வெளியேற்றத்தை 2010–ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 45 சதவீதத்தை 2030–க்குள் குறைக்க வேண்டுமென அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பருவநிலை மாற்றத்தை எதிா்கொள்வதற்கான திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக ஏழை நாடுகளும், வளா்ந்து வரும் நாடுகளும் வளா்ச்சியடைந்த நாடுகளிடமிருந்து நிதியுதவியைக் கோரியுள்ளன. இந்த விவகாரத்தில் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் உடன்படாததால் ஒருமித்த கருத்து இன்னும் எட்டப்படவில்லை.

இறுதி அறிக்கையைத் தயாா்செய்வது தொடா்பான பேச்சுவாா்த்தைகள் தொடா்ந்து நடைபெற்று வரும் நிலையில், வரைவு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விவகாரங்கள் பருவநிலை மாற்றத்தை எதிா்கொள்வதற்குப் போதுமானதாக இல்லை என சுற்றுச்சூழல் ஆா்வலா்கள் குற்றஞ்சாட்டியுள்ளனா். இன்னும் உறுதியான நடவடிக்கைகளை அனைத்து நாடுகளும் மேற்கொள்ள வேண்டுமென அவா்கள் வலியுறுத்தியுள்ளனா்.

---

**11. குரூஸ் பர்னாந்தீஸ்க்கு மணிமண்டபம் :**

₹தூத்துக்குடி மாநகர மக்களின் தந்தை’ என்று அழைக்கப்படும் ராவ்பகதூர் குரூஸ் பர்னாந்தீஸ்க்கு மணிமண்டபம் அமைக்கப்படும்’ என்று, தமிழக அரசு அறிவித்துள்ளது.

இதுகுறித்து, அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பு: தூத்துக்குடி மாநகர மக்களின் நலன் காக்க தன்னையே அர்ப்பணித்துக் கொண்டவர் ராவ்பகதூர் குரூஸ் பர்னாந்தீஸ். ஏறத்தாழ 30 ஆண்டுகள் நகர்மன்ற உறுப்பினராகவும், 5 முறை நகர்மன்ற தலைவராகவும் இருந்த காலத்தில் ஜாதிமத பேதமின்றி தூத்துக்குடி மக்களின் அடிப்படைக்கல்வி மேம்பாடு, குடிசை வீடுகள் மேம்பாடு, தீண்டாமை எதிர்ப்பு, கூட்டுறவு வங்கிக்கடனுதவி, சுகாதார மையங்கள், சனிக்கிழமைச் சந்தை, அங்காடிகள், பொதுவான கல்லறைத் தோட்டம் என பல திட்டங்களை செயல்படுத்தி சாதனை படைத்தார். குறிப்பாக 1927–ம் ஆண்டு தூத்துக்குடி மாவட்டம் மிகக் கடுமையான குடிநீர் பஞ்சத்தில் சிக்கித் தவித்த போது, மிகுந்த தொலைநோக்குப் பார்வையுடன் நெல்லை தாமிரபரணி ஆற்றில் இருந்து குழாய் மூலம் நீர் கொண்டு வரும் திட்டத்தை செயல்படுத்தி வெற்றி கண்டார். தன்னலமற்ற தனது தியாகத்தால் அம்மாவட்ட மக்களின் மனங்களில் இன்றும் உயர்ந்து நிற்கும் ராவ்பகதூர் குரூஸ் பர்னாந்தீஸின் நினைவினை போற்றிடும் வகையில், அவரின் பிறந்த நாளை நவம்பர் 15–ம் தேதி அரசு விழாவாக கொண்டாடப்பட்டு வருகிறது.

திமுக அரசு பொறுப்பேற்றதும் ராவ் பகதூர் பர்னாந்தீஸ்க்கு நினைவு மண்டபம் கட்டப்படும் என்று தேர்தல் அறிக்கையில் அறிவிக்கப்பட்டது. அதற்கிணங்க, அவருடைய பிறந்த நாளில் அவரின் புகழுக்கு மென்மேலும் பெருமை சேர்க்கும் வகையில், தூத்துக்குடியில் மணிமண்டபம் அமைக்கப்படும் என்று தமிழக அரசின்சார்பில் அறிவிக்கப்படுகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

---

**12. 163 நாடுகள் ஆதரித்து ஓட்டு உலக சட்ட ஆணையம் உறுப்பினர் தேர்தலில் கொடி நாட்டிய இந்தியா: சீனாவை பின்னுக்கு தள்ளி வெற்றி**

ஐநா.வின் சர்வதேச சட்ட ஆணையம் 1947ம் ஆண்டு உருவாக்கப்பட்டது. சர்வதேச சட்டங்கள் மற்றும் அதன் விதி தொகுப்புகளை மேம்படுத்தி, பரிந்துரை வழங்குவதும், ஊக்குவிப்பதும் இதன் முக்கிய பணியாகும். இதன் உறுப்பினர் பதவிக்கு எப்போதும் கடும் போட்டி நிலவும். இந்நிலையில், இந்த ஆணையத்தின் உறுப்பினர் பதவிக்கு இந்தியாவின் ராஷ்டிரிய ரக்ஷா பல்கலைக் கழகத்தின் துணை வேந்தரும், இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசனை குழுவின் உறுப்பினருமான பிமல் படேல் தேர்வாகி உள்ளார். ஐநா.வின் மொத்தமுள்ள 192 உறுப்பினர் நாடுகள் வாக்களித்த இந்த தேர்தலில், சீனா, தென் கொரியா, ஜப்பான் உள்ளிட்ட ஆசியா–பசிபிக் குழுவில் இடம் பெற்றுள்ள 11 நாடுகள், 8 இடங்களை குறி வைத்து போட்டியிட்டன.

இதனால், கடும் போட்டிய நிலவிய நிலையில், பிமல் படேல் 163 வாக்குகளைப் பெற்று தேர்வு செய்யப்பட்டார். இவர் அடுத்தாண்டு ஜனவரி 1ம் தேதி பொறுப்பேற்பார். இவரது பதவிக்காலம் 5 ஆண்டுகளாகும். படேலை தொடர்ந்து தாய்லாந்து 162, ஜப்பான் 154, வியட்நாம் 145, சீனா 142 வாக்குகள் பெற்றன. இதற்கு முன்பு, பிமல் படேல் நெதர்லாந்தின் ஹேக் நகரில் செயல்படும் ஐநா.வின் இளைஞர்கள் மற்றும் ரசாயன ஆயுதங்கள் தடை அமைப்பில் 15 ஆண்டுகளாக பணியாற்றி உள்ளார். சர்வதேச சட்ட ஆணையத்தின் உறுப்பினராக பிமல் படேல் தேர்வானதற்கு ஐநா.வுக்கான இந்தியாவின் நிரந்தர தூதர் டிஎஸ். திருமூர்த்தி டிவிட்டரில் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

பலம் சேர்க்கும்

* ஆசியா–பசிபிக் பகுதியில் தென் சீன கடல் உள்ளிட்ட பகுதிகளில் சீனா சட்ட விரோதமாக ஆதிக்கம் செலுத்த முயற்சிக்கும் நிலையில், சர்வதேச சட்ட ஆணையத்துக்கு பிமல் படேல் தேர்வாகி இருப்பது, இந்தியாவுக்கு பலம் சேர்த்துள்ளது.

* சர்வதேச சட்ட ஆணையத்தின் மொத்த உறுப்பினர்கள் எண்ணிக்கை 34. இதற்கு தேர்வு செய்யப்படுபவர்கள், சர்வதேச சட்டத்தில் நிபுணத்துவம் பெற்றிருக்க வேண்டும்.

* ஒவ்வொரு நாட்டு அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நபர்களே, ஐநா.வில் நடக்கும் சர்வதேச சட்ட ஆணைய உறுப்பினர் தேர்தலில் போட்டியிட முடியும்.

---

**1. கர்நாடக மாநிலத்தில் உள்ள ஏழு மாவட்டங்களை உள்ளடக்கிய மும்பை–கர்நாடக பகுதியின் புதிய பெயர் என்ன?**

அ) கல்யாண–கர்நாடகா

**ஆ) கித்தூர்–கர்நாடகா ☑**

இ) பெலகாவி–கர்நாடகா

ஈ) ராணி–கர்நாடகா



- ✓ 7 மாவட்டங்களை உள்ளடக்கிய மும்பை–கர்நாடகா பகுதிக்கு 'கித்தூர் கர்நாடகா' எனப் பெயர் மாற்ற கர்நாடக மாநில அரசு முடிவு செய்துள்ளது.
- ✓ மும்பை–கர்நாடக பகுதி உத்தர கன்னடா, பெலகாவி, தார்வாட், விஜய புரா, பாகல்கோட், கடக் மற்றும் ஹாவேரி மாவட்டங்களைக்கொண்டுள் –ளது. கித்தூர் என்பது பெலகாவி மாவட்டத்தில் உள்ள ஒரு வரலாற்று சிறப்புமிக்க தாலுக்கா ஆகும். இது ராணி சென்னம்மாவால் ஆளப்பட்டது. கடந்த 2019ஆம் ஆண்டில், ஹைதராபாத்–கர்நாடகா பகுதி "கல்யாண்–கர்நாடகா" என மறுபெயரிடப்பட்டது.

---

**2. முதல் உலகளாவிய மருந்துக் கொள்கைக் குறியீடு – 2021'இல் இந்தியாவின் தரநிலை என்ன?**

அ) 10

**ஆ) 18 ☑**

இ) 25

ஈ) 30




- ✓ தீங்கு குறைப்பு கூட்டமைப்பினால் முதல் உலகளாவிய மருந்துக் கொள்கைக் குறியீடு சமீபத்தில் வெளியிடப்பட்டது. நார்வே, நியூசிலாந்து, போர்ச்சுகல், இங்கிலாந்து மற்றும் ஆஸ்திரேலியா ஆகியவை மனிதாபி –மான மற்றும் ஆரோக்கியம் சார்ந்த மருந்துக் கொள்கைகளில் முதல் 5 இடங்களில் உள்ளன. 74/100 மதிப்பெண்களுடன் 30 நாடுகளில் இந்தியா 18ஆவது இடத்தில் உள்ளது.
- ✓ பிரேசில், உகாண்டா, இந்தோனேசியா, கென்யா மற்றும் மெக்சிகோ ஆகியவை கடைசி ஐந்து இடங்களில் உள்ளன. இந்தக்குறியீடு மருந்துக் கொள்கையின் 75 குறிகாட்டிகளைக் கொண்டுள்ளது.

---

**3. ஒவ்வொரு நவம்பரிலும் நிகழும் புகழ்பெற்ற எரிகல் பொழிவின் பெயர் என்ன?**

**அ) லியோனிட்ஸ் விண்கல் மழை ☑**

ஆ) பெர்சீட் விண்கல் மழை

இ) ஓரியானிட்ஸ் விண்கல் மழை

ஈ) டெம்பல் விண்கல் மழை



- ✓ முதலில் 1833'இல் கண்டுபிடிக்கப்பட்ட லியோனிட்ஸ் எரிகல் பொழிவு, ஒவ்வொரு நவம்பர் மாதமும் நிகழ்கிறது. இந்த எரிகல் பொழிவு, இந்த ஆண்டு நவ.6ஆம் தேதி தொடங்கியது. நவ.30 வரை இது நிகழும். இதனை வெறுங்கண்ணால் பார்க்க முடியும்.
- ✓ பூமியின் வளிமண்டலத்தில் நுழையும் 55P/Tempel–Tuttle வால்மீன் விட்டுச்சென்ற குப்பைகளை இந்த எரிகல் பொழிவு கொண்டுள்ளது. இக் குப்பை பொருட்கள் விண்கற்கள் என்று அழைக்கப்படுகின்றன.

---

**4. COVID'க்கு சிகிச்சையளிப்பதற்கான உலகின் முதல் பிளாஸ்மிட் DNA தடுப்பூசியின் பெயர் என்ன?**

**அ) ZyCoV–D ☑**

ஆ) மாடர்னா

இ) ஸ்புட்னிக் வி

ஈ) கோவாக்சின்



- ✓ சைடஸ் கேடில்லாவின் ZyCoV–D என்பது உலகின் முதல் பிளாஸ்மிட் DNA தடுப்பூசியாகும். ஊசி இல்லாத அப்ளிகேட்டரைப் பயன்படுத்தி செலுத்தக்கூடிய முதல் COVID தடுப்பூசி இதுவாகும். 12 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட பெரியவர்கள் மற்றும் குழந்தைகளின் அவசரகால பயன்பாட்டிற்காக இந்திய தலைமை மருந்துக் கட்டுப்பாட்டாளரால் (DCGI) இதன் 3–டோஸ் ஷாட் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

---

**5. கனிமச்சலுகை விதிகள், 2021'இல் மேற்கொள்ளப்பட்ட சமீபத்திய திருத்தங்களின்படி, சொந்த சுரங்கங்களில் உற்பத்தி செய்யப்படும் கனிமத்தில் எவ்வளவு சதவீதம் வரை விற்க முடியும்?**

அ) 25

**ஆ) 50 ☑**

இ) 75

ஈ) 100




- ✓ கனிம விதிகளில் திருத்தம் செய்து புதிய விதிமுறைகளை மத்திய கனிமங்கள் அமைச்சகம் வெளியிட்டுள்ளது. சொந்த குத்தகையிலிருந்து உற்பத்தி செய்யப்படும் 50% கனிமத்தை விற்பனை செய்யும் நடை முறை புதிய விதிகளில் சேர்க்கப்பட்டுள்ளது. சுரங்கங்களை எந்தவித கட்டணமும் இன்றி இடமாற்றம் செய்வதற்கு இது உதவுகிறது. சுரங்க குத்தகை வழங்குவதற்கான குறைந்தபட்ச பகுதி 5 ஹெக்டேரில் இருந்து 4 ஹெக்டேராக திருத்தப்பட்டுள்ளது.

---

**6. எத்தனை ஆண்டுகளுக்கு ஒருமுறை தேசிய சாதனை ஆய்வு நடத்தப்படுகிறது?**

அ) இரண்டு ஆண்டுகள்

**ஆ) மூன்று ஆண்டுகள் ☑**

இ) ஐந்து ஆண்டுகள்

ஈ) ஆறு ஆண்டுகள்




- ✓ தேசிய சாதனை ஆய்வானது (NAS) மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படுகிறது. கடைசியாக 2017'இல் இது நடத்தப்பட்டது. 2020'இல் நடத்த திட்டமிடப்பட்டிருந்தது. COVID–19 நிலைமை காரணமாக, அது இந்த ஆண்டு வரை ஒத்திவைக்கப்பட்டது.
- ✓ 36 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள 1,23,000 பள்ளிகளைச் சேர்ந்த சுமார் 3.8 மில்லியன் மாணவர்கள் தேசிய சாதனை ஆய்வு – 2021'இல் பங்கேற்பார்கள். 3, 5 மற்றும் 8ஆம் வகுப்பு மாணவர்களின் திறன்களை இது மதிப்பிடுகிறது. தனியார் பள்ளிகள் இந்த ஆய்வில் சேர்க்கப்பட்டுள்ளது இதுவே முதல் முறையாகும்.

---

**7. 5 மாவட்டங்களில் மெட்ரோ வசதிகள்கொண்ட ஒரே மாநிலம் / யூனியன் பிரதேசம் எது?**

அ) மேற்கு வங்கம்

ஆ) புது தில்லி

**இ) உத்தர பிரதேசம் ☑**

ஈ) கேரளா

UPMRC

- ✓ உத்தர பிரதேச மாநில முதல்வர் யோகி ஆதித்யநாத் சமீபத்தில் கான்பூர் மெட்ரோ இரயிலின் சோதனை ஓட்டத்தை கொடியசைத்து தொடங்கி வைத்தார். கான்பூர் மெட்ரோவின் பணி நவம்பர் 15, 2019 அன்று தொடங்கியது. உத்தர பிரதேச மாநிலத்தில் தற்போது காசியாபாத், நொய்டா, கிரேட்டர் நொய்டா மற்றும் லக்னோவில் மெட்ரோ இரயில் சேவை செயல்பட்டு வருகிறது.
- ✓ கான்பூர் மெட்ரோ இரயில் தொடங்கப்பட்ட பிறகு, ஐந்து மாவட்டங்களில் மெட்ரோ வசதிகள் உள்ள ஒரே மாநிலமாக உத்தர பிரதேசம் இருக்கும்.

---

**8. சமீபத்தில் எந்த நாட்டின் இராணுவ தளபதிக்கு இந்திய இராணு –வத்தின் கௌரவ ஜெனரல் பதவி வழங்கப்பட்டது?**

**அ) நேபாளம் ☑**

ஆ) இலங்கை

இ) வங்காளதேசம்

ஈ) பூடான்



- ✓ நேபாள இராணுவ தளபதி ஜெனரல் பிரபு ராம் சர்மாவுக்கு குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் இந்திய ராணுவத்தின் கௌரவ ஜெனரல் பதவியை வழங்கினார். இருநாடுகளும் பரஸ்பர இராணுவ தளபதிகளு –க்கு ஜெனரல் பதவியை வழங்குவது வழக்கமாகும். ஜெனரல் ஷர்மா, 2021 செப்டம்பரில் இராணுவத் தளபதியாகப் பொறுப்பேற்றார். அவர் இந்தியாவில் உள்ள தேசிய பாதுகாப்புக் கல்லூரியில் பட்டம் பெற்றவர்.


**9.** **பின்வரும் எந்தத் திட்டத்தின் கீழ், 'தூய்மையான பசுமை கிராம வாரம்' அனுசரிக்கப்பட்டது?**

அ) DDU–GKY

**ஆ) MGNREGS ☑**

இ) DAY–NRLM

ஈ) DAY–NULM



✓ ஆசாதி கா அம்ரித் மகோத்சவின் ஒருபகுதியாக, மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்கள் MGNREG திட்டத்தின்கீழ், 2021 அக்.29 முதல் நவ.4 வரை ஒருவாரகால 'தூய்மை பசுமை கிராம' செயல்பாடுகளை மேற்கொண்டு உள்ளன. தூய்மை பசுமை கிராம வாரத்தின்போது, கழிவு நீர்ப்போக்குக் குழிகளை அடையாளங்கண்டு நிர்மாணிப்பதில் கவனஞ்செலுத்தப்பட்ட –து. மண்புழு உரம்/NADEP குழி மற்றும் புழு உரமாக்கல், கழிவுப்பொரு –ட்களின் மறுபயன்பாடு, மக்காத குப்பைகளை மறுசுழற்சி செய்தல் போன்ற முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

---

**10.** **"சில்லறை விற்பனை நேரடித்திட்டம்" மற்றும் "ஒருங்கிணைந்த குறைதீர்க்கும் திட்டம்" ஆகியவற்றை தொடங்கிய அமைப்பு எது?**

**அ) இந்திய ரிசர்வ் வங்கி ☑**

ஆ) ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை & மேம்பாட்டு ஆணையம்

இ) காப்பீட்டு ஒழுங்குமுறை & மேம்பாட்டு ஆணையம்

ஈ) பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை வாரியம்

✓ இந்திய ரிசர்வ் வங்கியின் "சில்லறை விற்பனை நேரடித்திட்டம்" மற்றும் "ஒருங்கிணைந்த குறைதீர்க்கும் திட்டம்" ஆகியவை பிரதமர் நரேந்திர மோடியால் தொடங்கப்பட்டு நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளன.

✓ சில்லறை நேரடித்திட்டத்தின்கீழ், சில்லறை முதலீட்டாளர்கள் அரசாங்கப் பத்திரங்களை இணையத்தில் வாங்கலாம் மற்றும் விற்கலாம். ஒருங்கி –ணைந்த ஒம்புட்ஸ்மேன் திட்டமானது வாடிக்கையாளர் புகார்களில் குறைதீர்க்கும் பொறிமுறையை மேம்படுத்த உதவுகிறது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

### 1. 'முதல்வரின் முகவரி': தமிழக அரசு அரசாணை வெளியீடு

முதல்–அமைச்சரின் குறைதீர்ப்பு துறைகள் ஒருங்கிணைக்கப்பட்டு, முதல்வரின் முகவரி என்ற புதிய துறை உருவாக்கப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. உங்கள் தொகுதியில் முதல்–அமைச்சர், முதல்–அமைச்சர் உதவி மையம், குறைதீர்ப்பு மேலாண்மை அமைப்பு ஒருங்கிணைப்பு ஆகிய துறைகள் ஒன்றிணைந்து 'முதல்வரின் முகவரி' என்ற புதிய துறை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் முதல்வரின் முகவரி என்ற புதிய துறை சிறப்பு அலுவலராக ஷில்பா பிரபாகர் சதீஷ் அவர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளதாகவும் தமிழக அரசு தெரிவித்துள்ளது. முதல்வரின் முகவரி துறையில் மனுக்கல் தீர்வுக்கான ஒற்றை இணையதள முகப்பு பயன்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடா்பாக தலைமைச் செயலாளா் இறையன்பு வெளியிட்ட அரசாணையில், முதல்–அமைச்சரின் தனிப்பிரிவு, முதல்–அமைச்சரின் உதவி மையம் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட குறைதீா்ப்பு மேலாண்மை அமைப்பு (ஐஜிஆா்எம்எஸ்), உங்கள் தொகுதியில் முதல்–அமைச்சர் துறை ஆகியவை ஒருங்கிணைக்கப்பட்டு, 'முதல்வரின் முகவரி' என்ற புதிய துறை உருவாக்கப்படுகிறது.

முதல்–அமைச்சர் முகவரி துறையின் மனுக்களுக்குத் தீா்வு காண முதல்வரின் உதவி மையம் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட குறைதீா்ப்பு மேலாண்மை அமைப்பின் உதவி எண் மாநிலம் முழுவதும் ஒற்றை இணையதள முகப்பாகப் பயன்படுத்தப்படும். இது முதல்வரின் முகவரி துறையின் கட்டுப்பாட்டில் இருக்கும். உங்கள் தொகுதியில் முதல்–அமைச்சர் துறையின் சிறப்பு அலுவலா் ஷில்பா பிரபாகா் சதிஷ், முதல்வரின் முகவரி துறையின் சிறப்பு அலுவலராக நியமிக்கப்படுகிறாா்'' என்று அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

---

### 2. கரோனா காலத்துக்கும் நேருவின் அறிவியல்

உலகப் பேரிடராக கரோனா தொற்று மாறியிருக்கும் சூழலில், ஜவாஹர்லால் நேருவின் அன்றைய அறிவியல்பூர்வமான பார்வையும் ஒரு அறிவியல் சமுதாயத்தை உருவாக்குவதில் அவர் மேற்கொண்ட முயற்சிகள் பெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் பொருத்தமாகவும் இருக்கின்றன. நேருவின் கூற்றுப்படி, அறிவியல் என்பது மனித மனதின் முக்கியமான வெற்றியாகும். இது, மனித குலத்தை நோய், தேவை, துயரம் போன்றவற்றிலிருந்து விடுவிக்கும்.

தேசத்தைக் கட்டியெழுப்புவதில் அறிவியலின் பங்களிப்பை நேரு புரிந்துகொண்டிருந்தார். இது குறித்து நேரு எழுதும்போது, உண்மையையும் புதிய அறிவையும் தேடுதல், சோதனையின்றி எதையும் ஏற்க மறுத்தல், புதிய சான்றுகளின் அடிப்படையில் முந்தைய முடிவுகளை மாற்றும் திறன், உண்மைகளை நம்புதல், முந்தைய கோட்பாட்டைத் தொடராமல் இருத்தல், கடினமான ஒழுக்கம் கொண்ட மனம் இருத்தல் அவசியம் என்கிறார். கேம்ப்ரிட்ஜ் சயின்ஸ் டிரிபோஸ், ஜேம்ஸ் ஜீன்ஸ், ஆர்தர் எடிங்டன் மற்றும் பிரிட்டனின் முன்னணி அறிவியலர்களுடன் தொடர்பில் இருந்ததன் மூலம் நேருவின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆர்வத்தை அறியலாம்.

இந்தியாவில் உயர் தரமான கல்வி நிறுவனங்களை அமைக்க வேண்டும் என்பதே நேருவின் திட்டமாக இருந்தது. அமெரிக்கப் பயணத்தின்போது, அமெரிக்கப் பல்கலைக்கழகங்கள் நாட்டுக்குத் தொழில்நுட்ப, அறிவியல் முன்னேற்றத்தை வழங்குவதைப் புரிந்துகொண்டார். 1949–ல் மாசசூசிட்ஸ் தொழில்நுட்பக் கழகத்துக்கு அவர் சென்றதுதான் 1950–ல் காரக்பூரிலும், 1958–ல் பம்பாயிலும், 1959–ல் சென்னை, டெல்லியிலும் ஐஐடி எனப்படும் இந்தியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களை உருவாக்க வழிவகுத்தது.

அறிவியல் கற்றலுக்கும் ஆராய்ச்சிக்குமான நிறுவனங்களை நடத்திய விக்ரம் சாராபாய், சர் சி.வி.ராமன், ஹோமி ஜே.பாபா, சதீஷ் தவான், எஸ்.எஸ்.பட்நாகர் போன்ற பல அறிவியலர்களைப் பயன்படுத்திக்கொள்ளும் திறமையை நேரு பெற்றிருந்தார்.

அறிவியலுக்குச் சமூகத்தின் ஏற்பும் அரசின் ஆதரவும் நிலைத்திருக்க வேண்டும் என்ற உண்மையை நேரு முழுமையாக அறிந்திருந்தார். இதனால்தான் 1954–ல் அணுசக்தித் துறை, பாபா அணு ஆராய்ச்சி மையம், 1949–ல் இயற்பியல் ஆராய்ச்சி ஆய்வகம், 1952–ல் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம், அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி கவுன்சில் ஆகியவற்றைத் தொடங்கி, அறிவியல் முன்னேற்றத்தின் அதிகாரத்துவ இயந்திரங்களாக மாற்றினார்.

நேருவுக்கு எதிரிகள் அன்றும் இருந்தார்கள், இன்றும் இருக்கிறார்கள். அவரது அறிவியல் பணியைத் தடுக்கப் போலி தேசியவாதம் தூண்டப்பட்டது. அறிவியலுக்கு எல்லைகள் இல்லை. ஆங்கில அறிவியல், பிரெஞ்சு அறிவியல் என்றெல்லாம் பேச முடியாது. தேசத்தைக் கட்டியெழுப்புவதில் அறிவியலின் பங்கு முக்கியமானது என்பதை நேரு புரிந்து வைத்திருந்தார்.

சுதந்திரத்துக்குப் பிறகு, நாட்டின் மக்கள்தொகையில் பாதிப் பேருக்கு மலேரியா பாதிப்பு ஏற்பட்டது. 1953–ல் மலேரியா பெரிய அளவில் கட்டுப்படுத்தப்பட்டது. 1951–ல் பெரியம்மை பாதிப்பால் இறந்தவர்கள் எண்ணிக்கை 1 லட்சத்து 48 ஆயிரமாக இருந்தது. அடுத்த 10 ஆண்டுகளில் இந்த எண்ணிக்கை 12 ஆயிரத்து 300 ஆகக் குறைக்கப்பட்டது. மக்களைப் பாதிக்கும் இது போன்ற நோய்களிடம் போராட ஒவ்வொரு 5 ஆண்டுக்கும் திட்டம் வகுக்கப்பட்டது.

1950–களில் பாலியல் நோய்கள், தொழுநோய், டைஃபாய்டு, கக்குவான் இருமல், நிமோனியா, மூளைக்காய்ச்சல் போன்றவற்றைக் கட்டுப்படுத்தத் தீவிர முயற்சிகள் எடுக்கப்பட்டன. மருத்துவம், பரவலான தடுப்பூசித் திட்டங்கள் மூலம் இந்த நோய்கள் கட்டுப்படுத்தப்பட்டன. 1940–களில் பரவிய பிளேக் நோயால், நாட்டு மக்கள்தொகையில் 3% பேர் இறந்துபோனார்கள். கடுமையாகப் போராடி 1950–களில் பிளேக் நோய் முற்றிலும் அழிக்கப்பட்டது.

தொற்றுநோய்களை எதிர்த்துப் போராடுவதற்குப் பெருமளவு நிதி ஒதுக்கீடுகளுடன், அதிக எண்ணிக்கையிலான மருத்துவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டன. அதற்காகப் புதிய மருத்துவக் கல்லூரிகள் கட்டும் பணியும், இருக்கும் மருத்துவக் கல்லூரிகளை மேம்படுத்தும் பணியும் நடைபெற்றன. 1946–ல் 15 மருத்துவக் கல்லூரிகள் இருந்தன. இந்த எண்ணிக்கை 1965–ல் 81 ஆக உயர்ந்தது. 1951–ல் மருத்துவக் கல்லூரிகளில் சேர்ந்த மாணவர்களின் எண்ணிக்கை 1,200. இது 1961–ல் 10 ஆயிரமாக உயர்ந்தது.

கரோனா என்ற கொடிய தொற்றுநோயை எதிர்த்துப் போராடும்போது, கடந்த கால நோய்களுக்கு எதிரான நேருவின் போராட்டத்தை நினைவில்கொள்வது அவசியம். சீனா, தைவான், வியட்நாம், சிங்கப்பூர், கியூபா போன்ற நாடுகளில் மலிவாக மருத்துவம் கிடைப்பதால்தான், மற்ற பெரிய பணக்கார நாடுகளைவிட கரோனா தொற்றை இந்த நாடுகள் எளிதாக எதிர்கொள்ள முடிந்தது.

பிளேக், காலரா நோய்களை அறிவியல்பூர்வமாக முறியடித்ததைக் குறிப்பிட்டு, மகள் இந்திராவுக்கு நேரு எழுதிய கடிதத்தில் சுகாதாரம், ஆரோக்கியம், சில நோய்களின் மீதான வெற்றி போன்றவை அறிவியலைப் பொறுத்தது என்று சுட்டிக்காட்டியிருந்தார்.

தான் கட்டமைத்த நிறுவனங்கள் மூலம் கரோனா பரவல் காலத்திலும் நேரு வாழ்ந்துகொண்டிருக்கிறார். 1952–லேயே பூனாவில் நிறுவப்பட்ட நேஷனல் இன்ஸ்டிட்யூட் ஆஃப் வைராலஜி நிறுவனம், கரோனா காலத்தில் பெருமளவில் பயன்படுவதை மறக்க முடியாது.

மனிதர்களின் அறிவியல் தேடல் குறித்த நேருவின் நம்பிக்கை, கரோனா பரவல் இருக்கும் இந்தக் காலத்திலும் பொருந்தும். அறிவியலின் மீது நேரு வைத்திருந்த இந்த நம்பிக்கையும், மனிதர்களின் திறமையுடன் அவர் உருவாக்கிய அறிவியல் நிறுவனங்களும்தான், இந்த அழிவுகரமான உலகப் பேரிடரிலிருந்து நம்மைப் பாதுகாத்துக்கொண்டிருக்கிறது.

---

**3. உரம் தயாரிக்க பசுவின் சாணம் வாங்க முடிவு: மத்திய பிரதேச முதல்வர் சவுகான் அறிவிப்பு**

மத்திய பிரதேச தலைநகர் போபாலில் நேற்று இந்திய கால்நடை மருத்துவ சங்கம் ஏற்பாடு செய்திருந்த பெண் கால் நடை மருத்துவர்கள் மாநாட்டில் முதல்வர் சிவ்ராஜ் சிங் சவுகான் கலந்துகொண்டார். விழாவில் அவர் பேசியதாவது:

பசுக்கள், மாடுகள் இல்லாமல் பல வேலைகள் நடப்பதில்லை. எனவே, அவை மிகவும் முக்கிய மானவை. முறையான அமைப்பை ஏற்படுத்தினால், பசுக்கள் மற்றும் அவற்றின் சாணம், சிறுநீர் ஆகியவை, மாநிலம் மற்றும் நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்த உதவும். இந்த துறையில் பெண்களின் பங்களிப் புடன் நாம் வெற்றி பெறுவோம் என்று நம்புகிறேன். பசுவின் சாணம் மற்றும் சிறுநீரில் இருந்து, பூச்சிக்கொல்லிகள் முதல் மருந் துகள் வரை பல முக்கிய பொருட் களை தயாரிக்கலாம்.

மத்தியபிரதேச மாநிலத்தில் பெருமளவில் உரம் தயாரிப்பதற்கு பசுவின் சாணம் தேவைப்படுகிறது. எனவே அந்த பசுவின் சாணத்தை விலை கொடுத்து வாங்க அரசு முடிவு செய்துள்ளது. இதுதொடர்பான பூர்வாங்க வேலைகளில் அரசு ஈடுபட்டுள் ளது. விரைவில் இதுதொடர்பான அறிவிப்பை வெளியிடுவோம்.

பொதுமக்களின் அவசர மருத்துவ உதவிக்காக 108 என்ற ஆம்புலன்ஸ் சேவை உள்ளது. அதைப் போலவே, கால்நடைகளைப் பாதுகாக்கவும், அவற்றுக்கு அவசர மருத்துவ சிகிச்சை அளிக்கவும் 109 என்ற ஹெல்ப்லைன் சேவையை தொடங்க அரசு பரிசீலித்து வருகிறது. அவசர சிகிச்சை தேவைப்படும் கால்நடைகள் தொடர்பாக 109 என்ற தொலை பேசி எண்ணுக்கு போன் செய் தால் கால்நடைகள் இருக்கும் இடத்துக்கே மருத்துவர்கள் வந்து சிகிச்சை வழங்குவர்.

இவ்வாறு அவர் பேசினார்.

பாஜக ஆளும் ம.பி.யில், பசுக்களின் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. பசுக்களைப் பாதுகாப்பதற்கும், பசுஉற்பத்தியை மேம்படுத்துவதற்கும் 6 துறைகளின் அமைச்சர்களைக் கொண்ட பசு அமைச்சரவை உருவாக்கப்பட்டது குறிப்பிடத் தக்கது.

---

**4. எஸ்.400 ஏவுகணை அமைப்புகளை இந்தியாவுக்கு விநியோகிக்க தொடங்கியது ரஷ்யா**

ரஷ்யாவிடம் இருந்து எஸ் 400 ஏவுகணைகள் வாங்க இந்தியா ஒப்பந்தம் மேற்கொண்டது. 5.5 பில்லியன் டாலர் மதிப்பில் 2019–ல் இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டது. இந்த எஸ் 400 ஏவுகணைகள், தரையிலிருந்து வானில் வரும் இலக்குகளைக்கூட மிகத் துல்லியமாகத் தாக்கி அழிக்கும் திறன் கொண்டது.

இதனால் முதல் கட்டமாக 800 –மில்லியன் டாலரை இந்தியா ரஷ்யாவிடம் 2019–லேயே கொடுத்துவிட்டது. ஆனால் இன்னும் ஏவுகணைகள் இந்தியாவிடம் ஒப்படைக்கப்படவில்லை. இந்த நிலையில், திட்டமிட்டபடி இந்தியாவுக்கு எஸ் 400– ஏவுகணை அமைப்புகளை விநியோகிக்கும் பணி தொடங்கியதாக ரஷ்ய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

---

**5. 2019–ம் ஆண்டுடன் ஒப்பிடும்போது – 2020–ல் சிறார்களுக்கு எதிரான இணையவழி குற்றம் 400% உயர்வு :**

கடந்த 2019–ம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, 2020–ல் சிறார்களுக்கு எதிரான இணையவழி குற்றங்கள் 400% அதிகரித்துள்ளது தெரியவந்துள்ளது.

இதுகுறித்து தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தில் உள்ள தரவுகளில் கூறியிருப்பதாவது:

நாட்டில் இதுவரை இல்லாத அளவுக்கு, கடந்த 2020–ம் ஆண்டுசிறார்களுக்கு எதிரான இணையவழி குற்றங்கள் பல மடங்கு அதிகரித்திருக்கிறது. சிறார்களை வைத்து எடுக்கப்படும் ஆபாசப் படங்களை வெளியிடுதல், ஆன்லைன் மூலம் பாலியல் தொல்லை கொடுத்தல் உள்ளிட்ட குற்றங்கள் இதில் அடங்கும்.

கடந்த 2019–ம் ஆண்டு சிறார்களுக்கு எதிரான இணையவழி குற்றங்கள் தொடர்பாக 164 வழக்குகள் பதிவாகின. இதுவே 2018, 2017–ம் ஆண்டுகளில் முறையே 117, 79 ஆக இருந்தது. ஆனால், 2020–ம் ஆண்டில் சிறார்களுக்கு எதிரான இணையவழி குற்றம் தொடர்பாக 842 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இது 2019–ம் ஆண்டில் பதிவான வழக்குகளை விட 400 சதவீதம் அதிகம் ஆகும். இவற்றில் 738 வழக்குகள் சிறார் ஆபாசப் படங்களை வெளியிடுதல் தொடர்பானவை.

கரோனா பரவல்..

இதுகுறித்து குழந்தைகள் உரிமை அமைப்பின் (க்ரை) தலைவர் பூஜா மர்வாஹா கூறும்போது, "கரோனா பரவலை தடுப்பதற்காக நாடு முழுவதும் பள்ளி, கல்லூரிகள் மூடப்பட்டன. ஆன்லைன் மூலமாக வகுப்புகள் நடைபெற்றன. இதனால் கிட்டத்தட்ட பெரும்பாலான சிறார்களுக்கு ஸ்மார்ட் போன்கள் கிடைத்துவிட்டன. அதிக நேரம் ஆன்லைனில் செலவிடுவதால், சில சமயங்களில் ஆபாச இணையதளங்களால் அவர்கள் கவரப்பட வாய்ப்பு உருவானது. இதுவே இதுதொடர்பான இணையவழி குற்றங்களுக்கு ஆரம்பப் புள்ளி ஆகும். இதனால்தான், 2020–ம் ஆண்டு சிறார்களுக்கு எதிராக அதிக அளவில் இணையவழி குற்றங்கள் அரங்கேறியுள்ளன" என்றார். – பிடிஐ

---

**6. சென்னையில் வெள்ள தடுப்புக்கு அறிவுரைக் குழு**

சென்னையில் வெள்ளத் தடுப்புக்கான அறிவுரைக் குழு ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி திருப்புகழ் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த குழுவில் தில்லி நகா் மற்றும் ஊரமைப்பு நிறுவன தலைமை திட்ட அலுவலா், காலநிலை பின்னடைவு பயிற்சி உலக வள நிறுவன இயக்குநா் நம்பி அப்பாதுரை, சென்னை வளா்ச்சி கல்வி நிறுவனப் பேராசிரியா் ஜானகிராமன், மும்பை ஐஐடி கட்டுமானப் பொறியியல் துறை பேராசிரியா் கபில் குப்தா, சென்னை அண்ணா பல்கலைக்கழக மனித குடியமா்வு மைய இயக்குநா் பிரதீப் மோசஸ், ஹைதராபாத் தேசிய ரிமோட் சென்சிங் துறையின் பிரதிநிதி , அண்ணா பல்கலைக்கழக ரிமோட் சென்சிங் நிறுவன பேராசிரியா் திருமலைவாசன், ஐஐடி கட்டுமானப் பொறியியல் துறை தலைவா் பாலாஜி நரசிம்மன், சென்னை பெருநகர வளா்ச்சிக் குழும தலைமை திட்ட அதிகாரி, சென்னை மண்டல நீா்வளத் துறை தலைமைப் பொறியாளா், நெடுஞ்சாலைத் துறை தலைமைப் பொறியாளா், சுற்றுச்சூழல் துறை இயக்குநா் ஆகியோா் உறுப்பினா்களாக இருப்பா். இந்தக் குழுவானது வெள்ளத்தை தடுக்கும் வழிமுறைகளையும், வெள்ளத்தின் பாதிப்பைக் குறைக்கும் வகையில் மழைநீா் வடிகால்களை அமைக்கவும் உரிய அறிவுறுத்தல்களை அரசுக்கு வழங்கும்.

---

**7. நிா்வாகத் திறனை மேம்படுத்த மத்திய அமைச்சரவை 8 குழுக்களாகப் பிரிப்பு**

மத்திய அரசின் நிா்வாகத் திறனை மேம்படுத்தும் வகையில் எடுக்கப்பட உள்ள நடவடிக்கைகளை கண்காணிக்க மத்திய அமைச்சரவை எட்டு குழுக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

பிரதமா் மோடி தலைமையிலான அமைச்சரவையில் 77 அமைச்சா்கள் இடம்பெற்றுள்ளனா். தொழில்நுட்பம் சாா்ந்த வளங்களை மேம்படுத்துவது, தொழில் நிபுணா்கள் அடங்கிய தொகுப்பை

உருவாக்குவது ஆகியவற்றுக்காக அமைச்சா்கள் எட்டு குழுக்களாக பிரிக்கப்பட்டுள்ளனா். நிா்வாகத்தில் வெளிப்படைத்தன்மையைக் கொண்டுவரவும், மத்திய அரசின் செயல்திறனை மேம்படுத்தவும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைக்கு முன்பாக பிரதமா் நரேந்திர மோடி தலைமையில் ஐந்து ஆலோசனைக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. ஒவ்வொரு கூட்டமும் சுமாா் 5 மணி நேரம் நடைபெற்றது.

தனிப்பட்ட திறன், கவனத்துடன் கூடிய அமலாக்கம், அமைச்சரவை செயல்பாடு, பணிகளில் ஒத்துழைப்பு மற்றும் திறன்வாய்ந்த தகவல் தொடா்பு, நாடாளுமன்ற நடவடிக்கைகள் ஆகிய 5 தலைப்புகளில் இந்தக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. நாடாளுமன்ற நடவடிக்கைகள் தொடா்பான ஆலோசனைக் கூட்டத்தில் மக்களவைத் தலைவா் ஓம் பிா்லாவும், மாநிலங்களவைத் தலைவா் எம்.வெங்கையா நாயுடுவும் பங்கேற்றனா்.

இந்தக் கூட்டங்கள் அனைத்தும் மத்திய அரசின் நிா்வாகத் திறனை மேம்படுத்தும் நோக்கில் நடத்தப்பட்டன. இந்த நோக்கில் அடுத்தகட்ட நடவடிக்கையாகவே அமைச்சரவைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தக் குழுக்கள் ஒவ்வொன்றிலும் 9 முதல் 10 அமைச்சா்கள் இருப்பாா்கள். ஓா் அமைச்சா் குழுவின் ஒருங்கிணைப்பாளராக இருப்பாா்.

ஒவ்வொரு அமைச்சரின் அலுவலகத்துக்கும் ஒரு இணையதளம் உருவாக்கப்படும். அதில் மத்திய அரசின் திட்டங்கள் மற்றும் கொள்கைகள் தொடா்பான அமலாக்கம் குறித்த தகவல்கள் இடம்பெறும். சம்பந்தப்பட்ட அமைச்சா்கள் எடுக்கும் முடிவுகள் தொடா்பாக தகவல் பலகை உருவாக்கப்படும். கூட்டங்களை நடத்துதல் கடிதத் தொடா்பை நிா்வகிப்பது ஆகியவையும் மேற்கொள்ளப்படும். இவற்றை இந்த எட்டு குழுக்களும் மேற்கொள்ள வேண்டியிருக்கும்.

நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்கள், மாநிலங்கள் மற்றும் மாநில அமைச்சகங்களுடன் இந்தக் குழுக்கள் இணைந்து செயல்படும்.

இந்தக் குழுக்களில் ஒரு குழுவானது, ஆராய்ச்சி, தகவல் தொடா்பு ஆகியவற்றில் நிபுணத்துவம் பெற்ற குறைந்தபட்சம் மூன்று தொழில் நிபுணா்களைக் கொண்ட குழுவை உருவாக்க வேண்டும்.

அதேபோல் ஓய்வு பெற்ற ஊழியா்களின் பின்னூட்டங்கள் மற்றும் அனுபவங்களை பராமரிக்க ஓா் இணையதளத்தை உருவாக்கும் பொறுப்பு ஒரு குழுவிடம் ஒப்படைக்கப்பட உள்ளது.

எட்டு குழுக்களின் ஒருங்கிணைப்பாளா்களாக மத்திய அமைச்சா்கள் ஹா்தீப் சிங் புரி, நரேந்திர சிங் தோமா், பியூஷ் கோயல், தா்மேந்திர பிரதான், ஸ்மிருதி இரானி, அனுராத் தாக்குா் உள்ளிட்டோா் இருப்பாா்கள்.

இந்த அமைச்சா்கள் தங்கள் அலுவலகங்களின் சிறந்த நடைமுறைகள் தொடா்பாக தங்கள் அமைச்சரவை சகாக்களுடன் பகிா்ந்து கொள்வாா்கள்.

---

**8. நெக்ஸ்ட் ஜென் ஏடிபி ஃபைனல்ஸ்: கோப்பை வென்றார் கார்லோஸ்**

இத்தாலியில் நடைபெற்ற நெக்ஸ்ட் ஜென் ஏடிபி ஃபைனல்ஸ் டென்னிஸ் போட்டியில் ஸ்பெயின் வீரர் கார்லோஸ் அல்கராஸ் கார்ஃபியா சாம்பியன் ஆனார்.

உலகின் 32–ஆம் நிலை வீரராக இருக்கும் கார்லோஸ் இறுதிச்சுற்றில் 4–3 (7/5), 4–2, 4–2 என்ற நேர் செட்களில் அமெரிக்கரும், உலகின் 39–ஆம் நிலை வீரருமான செபாஸ்டியன் கோர்டாவை தோற்கடித்தார். இந்த ஆட்டத்தில் முதல் இரு செட்களில் மட்டும் சற்று தடுமாற்றம் காட்டிய கார்லோஸ், அதன் பிறகு ஆட்டத்தை முற்றிலுமாக தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தார்.

---

9. நவ.15 – பழங்குடியினர் கௌரவ தினம்.

---

**10. மனிதர்களுக்கு 108 இருப்பதுபோல் கால்நடைகளுக்கு '109 ஆம்புலன்ஸ்' : மபி அரசு புதுமை திட்டம்**

நோய் பாதிப்புகள், விபத்தில் காயமடைவது போன்றவற்றால் பாதிக்கப்படும் மக்களுக்கு சிகிச்சை அளிக்க, '108 ஆம்புலன்ஸ்' சேவை நாடு முழுவதும் அமல்படுத்தப்பட்டு உள்ளது. ஒன்றிய அரசின் நிதியில், மாநில அரசுகள் இந்த சேவையை அமல்படுத்தி வருகின்றன. இந்நிலையில், மனிதர்களே போலவே நோய்களால் அவதிப்படும் கால்நடைகளுக்கும் உடனடியாக சிகிச்சை அளிப்பதற்காக, '109 ஆம்புலன்ஸ்' சேவை திட்டத்தை அமல்படுத்த, மத்திய பிரதேச அரசு திட்டமிட்டுள்ளது.

இம்மாநில தலைநகர் போபாலில், 'இந்திய கால்நடை சங்கம்' சார்பாக பெண் கால்நடை மருத்துவர்களுக்கான, 'சக்தி–2021' என்ற தலைப்பில் மாநாடு நடைபெற்றது.

இதில், இம்மாநில முதல்வர் சிவ்ராஜ் சிங் சவுகான் பங்கேற்று பேசுகையில், '109 என்ற உதவி மைய எண் மூலமாக கால்நடைகளுக்கு மருத்துவ சிகிச்சை வழங்குவதற்கான ஆம்புலன்ஸ் சேவை தொடங்குவது குறித்து அரசு ஆலோசித்து வருகிறது. இதன் மூலம், கால்நடைகளை மருத்துவமனைக்கு அழைத்து செல்ல வேண்டிய அவசியமில்லை. மாட்டு சாணம், கோமியத்தில் இருந்து உரங்கள், பூச்சிக்கொல்லி, மருந்துகள் உட்பட பல்வேறு பொருட்களை தயாரிக்கப்படுகிறது. எனவே, இந்த தயாரிப்புகளுக்காக மாட்டு சாணத்தை அரசே கொள்முதல் செய்யவும் திட்டமிட்டுள்ளது. மாட்டு சாணம், கோமியத்தால் நாட்டின் பொருளாதாரமே உயரும்," என்றார்.

---

**1. தேசிய புற்றுநோய் விழிப்புணர்வு நாள் அனுசரிக்கப்பட்ட தேதி எது?**

**அ) நவம்பர் 7 ☑**

ஆ) நவம்பர் 8

இ) நவம்பர் 10

ஈ) நவம்பர் 12




✓ இந்தியாவில், தேசிய புற்றுநோய் விழிப்புணர்வு நாளானது ஒவ்வோர் ஆண்டும் நவ.7 அன்று அனுசரிக்கப்படுகிறது. புற்றுநோயை முன்கூட்டி -யே கண்டறிந்து குணப்படுத்துவது குறித்து மக்களுக்குக் கற்பிப்பதே இச்சிறப்பு நாளின் முக்கிய குறிக்கோளாகும். நாட்டில் சுமார் 2.9 மில்லிய -ன் பேர் புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் 1.1 மில்லியன் புதிய பாதிப்புகள் பதிவாகின்றன.

---

**2. தேசிய சட்ட சேவைகள் நாள் அனுசரிக்கப்பட்ட தேதி எது?**

அ) நவம்பர் 7

**ஆ) நவம்பர் 9 ☑**

இ) நவம்பர் 11

ஈ) நவம்பர் 13




✓ 'தேசிய சட்ட சேவைகள் நாளானது' ஆண்டுதோறும் நவ.9 அன்று நாடு முழுவதும் அனுசரிக்கப்படுகிறது. இது சட்ட சேவைகள் ஆணையச்சட்டம் இயற்றப்பட்டதை நினைவுகூருவதோடு சட்டம் தொடர்பான விதிகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

✓ இந்தியாவில், 1987ஆம் ஆண்டில் சட்ட சேவைகள் ஆணையச் சட்டம் இயற்றப்பட்டது. இந்தச் சட்டம் 1995 நவ.9'இல் நடைமுறைக்கு வந்தது.

---


**3. உலக நிமோனியா நாள் அனுசரிக்கப்பட்ட தேதி எது?**

அ) நவம்பர் 10

**ஆ) நவம்பர் 12 ☑**

இ) நவம்பர் 14

ஈ) நவம்பர் 16




✓ உலக நிமோனியா நாளானது ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் 12 அன்று அனுசரிக்கப்படுகிறது. இந்நோய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவத -ற்காக, 2009ஆம் ஆண்டில் 'ஸ்டாப் நிமோனியா' முன்முயற்சியால் இந்த நாள் நிறுவப்பட்டது. உலகெங்கிலும், குழந்தைகளில் இறப்புகளை ஏற்படுத்தும் முக்கிய நோயாக நிமோனியா கருதப்படுகிறது.

✓ 'Stop Pneumonia' முயற்சி மற்றும் 'Every Breath Counts' கூட்டணி ஆகியவை இணைந்து இந்நோயைக் கையாள்வது குறித்து மக்களை அணிதிரட்டுகின்றன.

---

**4. உலக கருணை நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?**

**அ) நவம்பர் 13 ☑**

ஆ) நவம்பர் 14

இ) நவம்பர் 15

ஈ) நவம்பர் 16




✓ உலக கருணை நாளானது ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் 13 அன்று கொண்டாடப்படுகிறது. இது சமூகத்தில் நற்செயல்களை முன்னிலைப்ப -டுத்துகிறது. இது நேர்மறையான ஆற்றல் மற்றும் நம்மை பிணைக்கும் கருணையின் பொதுவான இழையில் கவனம் செலுத்துகிறது. இனம், அரசியல், பாலினம் உள்ளிட்ட பிளவுகளை இணைக்கும் மனிதத்தின் அடிப்படைப் பகுதியாக கருணை உள்ளது. கடந்த 1998ஆம் ஆண்டில், பல்வேறு நாடுகளின் கருணை தன்னார்வ தொண்டு நிறுவனங்களான உலக கருணை இயக்கத்தால் இந்த நாள் அறிமுகப்படுத்தப்பட்டது.

---

**5. உலக நீரழிவு நோய் நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

அ) நவம்பர் 10

ஆ) நவம்பர் 12

**இ) நவம்பர் 14 ☑**

ஈ) நவம்பர் 16




✓ நவ.14ஆம் தேதி உலக நீரழிவு நோய் நாளாக அனுசரிக்கப்படுகிறது. இது உலக சுகாதார அமைப்பு மற்றும் சர்வதேச நீரழிவு கூட்டமைப்பு ஆகியவற்றால் கூட்டாக ஏற்பாடு செய்யப்படுகிறது. உலக நீரழிவு நாளின் சின்னமானது ஒரு நீல வட்டத்தினால் குறிக்கப்படுகிறது. அது, வாழ்க்கை மற்றும் நலத்தைக் குறிக்கிறது. நவம்பர்.14, இன்சுலினைக் கண்டுபிடித்தவரான பிரடெரிக் பான்டிங்கின் பிறந்தநாளைக் குறிக்கிறது.

✓ "Access to Diabetes Care – If Not Now, When?" என்பது 2021-2023 வரையிலான உலக நீரிழிவு நாளிற்கான கருப்பொருளாகும்.

---

**6. தேசிய குழந்தைகள் நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?**

அ) நவம்பர் 12

ஆ) நவம்பர் 13

**இ) நவம்பர் 14 ☑**

ஈ) நவம்பர் 15




✓ இந்தியாவில் குழந்தைகள் நாள் நவ.14 அன்று கொண்டாடப்படுகிறது. இந்த நாள் குழந்தைகளின் உரிமைகள், பராமரிப்பு மற்றும் கல்விபற்றிய விழிப்புணர்வை மக்களிடையே அதிகரிக்கிறது. குழந்தைகள் நாட்டின் எதிர்காலம். இந்த நாள், இந்தியாவின் முதல் பிரதமர் ஜவஹர்லால் நேருவின் பிறந்தநாளைக் கொண்டாடும் விதமாக உள்ளது.

---

**7. உலக சகிப்புத்தன்மை நாள் கடைப்பிடிக்கப்படுகிற தேதி எது?**

**அ) நவம்பர் 16 ☑**

ஆ) நவம்பர் 14

இ) நவம்பர் 12

ஈ) நவம்பர் 10




✓ சமுதாயத்தில் சகிப்புத்தன்மையின் அவசியத்தைப்பற்றி மக்களுக்குக் கற்பிப்பதற்கும், சகிப்புத்தன்மையின் எதிர்மறையான விளைவுகளைப் புரிந்துகொள்ள அவர்களுக்கு உதவுவதற்குமாக ஐநா அவையின் உலக சகிப்புத்தன்மை நாள் ஆண்டுதோறும் நவ.16 அன்று கடைப்பிடிக்கப்படு -கிறது. இந்நாள் உலகளாவிய சகிப்புத்தன்மையின் முக்கியத்துவத்தை பற்றி மக்களுக்குக் கற்பிக்கிறது.

---


**8. தேசிய கால்-கை வலிப்பு நோய் நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

**அ) நவம்பர் 17 ☑**

ஆ) நவம்பர் 16

இ) நவம்பர் 13

ஈ) நவம்பர் 14




✓ இந்தியாவில், கால்-கை வலிப்பு நோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத் -துவதற்காக ஒவ்வோர் ஆண்டும் நவம்பர்.17ஆம் தேதி தேசிய கால்-கை வலிப்புநோய் நாள் அனுசரிக்கப்படுகிறது. கால்-கை வலிப்பு என்பது மூளையில் ஏற்படும் ஒரு நாள்பட்ட கோளாறு ஆகும்.

✓ வலிப்புகள் நியூரான்களில் (மூளை செல்கள்) திடீர், அதிகப்படியான மின் வெளியேற்றங்களின் விளைவாக ஏற்படுகின்றன. இந்த நிலை எந்த வயதினரையும் பாதிக்கலாம்.

---

**9. அண்மையில் பணிக்கு சேர்க்கப்பட்ட 'ICGS சர்தக்' என்ற புதிய உள்நாட்டுக்கப்பல், எந்த மாநிலத்தில் பணியமர்த்தப்படவுள்ளது?**

அ) தமிழ்நாடு

ஆ) கேரளா

**இ) குஜராத் ☑**

ஈ) மகாராஷ்டிரா



✓ கோவாவில் 'சர்தக்' என்ற பெயரிலான புதிய உள்நாட்டுக்கப்பல் அண்மையில் நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டது. 'ICGS சர்தக்', குஜராத்தில் உள்ள போர்பந்தரை மையமாகக் கொண்டு இந்தியாவின் மேற்குக் கடற்பரப்பில் பணியாற்றும். இது கடலோர காவல்படை பிராந்தியத்தின் (வடமேற்கு) தளபதியின் செயல்பாட்டு மற்றும் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் இயக்கப்படும்.

- ✓ இந்திய கடலோர காவல்படைக்காக கோவா ஷிப்யார்ட் லிமிடெட்மூலம் உள்நாட்டில் கட்டப்பட்டு வரும் ஐந்து கடற்புற ரோந்து கப்பல்களின் வரிசையில் 'ICGS சர்தக்' நான்காவதாக உள்ளது.

---


**10.** எதிர்வரும் 2022'இல் ஐநா காலநிலை மாற்ற மாநாடு–COP27'ஐ நடத்தவுள்ள நாடு எது?

அ) இந்தியா

ஆ) சீனா

இ) அமெரிக்கா

**ஈ) எகிப்து ☑**




- ✓ ஐநா காலநிலை மாற்ற மாநாடு – COP27'ஐ எகிப்து 2022'இல் நடத்தும் மற்றும் COP28'ஐ ஐக்கிய அரபு அமீரகம் (UAE) 2023'இல் நடத்தும். COP என்பது காலநிலை மாற்றம் தொடர்பான ஐநா கட்டமைப்பின் முடிவெடுக்–கும் அமைப்பாகும். இந்தக் கட்டமைப்பில் 197 நாடுகள் உள்ளன. கால நிலை மாற்றம் குறித்த 2015 பாரிஸ் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகளை அடைய அந்நாடுகள் பாடுபடுகின்றன.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி சஞ்ஜிப் பானர்ஜி மேகாலயாவுக்கு மாற்றம்: குடியரசுத் தலைவர் உத்தரவு**

கொல்கத்தா உயர் நீதிமன்றத்தில் மூத்த நீதிபதியாகப் பதவி வகித்த சஞ்ஜிப் பானர்ஜி, கடந்த ஜன.4–ம் தேதி சென்னை உயர் நீதிமன்றத்தின் 50–வது தலைமை நீதிபதியாகப் பொறுப்பேற்றார்.

இந்நிலையில், இவரை மேகாலயா உயர் நீதிமன்றத்துக்கு தலைமை நீதிபதியாக இடமாற்றம் செய்ய, உச்ச நீதிமன்ற தலைமைநீதிபதி அடங்கிய கொலீஜியம் மத்திய அரசுக்கு பரிந்துரை செய்தது. இதற்கிடையே, 75 நீதிபதிகள் கொண்ட சென்னை உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியான சஞ்ஜிப் பானர்ஜியை, 3 நீதிபதிகள் கொண்ட மேகாலயா உயர் நீதிமன்றத்துக்கு இடமாற்றம் செய்ய எதிர்ப்பு தெரிவித்தும், இடமாற்றத்தை மறுபரிசீலனை செய்யவும் கோரி, சென்னை உயர் நீதிமன்றமூத்த வழக்கறிஞர்கள், வழக்கறிஞர்கள் சங்கத்தினர், உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதிக்கும், உச்ச நீதிமன்ற கொலீஜியத்துக்கும் கடிதம் அனுப்பியிருந்தனர்.

இதே கோரிக்கையை வலியுறுத்தி சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள் நேற்று மவுன ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர். இந்நிலையில், உச்ச நீதிமன்ற கொலீஜியத்தின் பரிந்துரையை ஏற்று, தலைமை நீதிபதி சஞ்ஜிப் பானர்ஜியை மேகாலயா உயர் நீதிமன்றத்துக்கு இடமாற்றம் செய்து குடியரசுத் தலைவர் ராம்நாத்கோவிந்த், நேற்று உத்தரவிட்டார்.

---

**2. நவ.15 பழங்குடியினர் பெருமை தினம் – பிரதமருக்கு ஆளுநர் நன்றி :**

பகவான் பிர்சா முண்டாவின் பிறந்த தினமான நவ.15–ம் தேதியை பழங்குடியினர் பெருமை தினமாக அறிவித்தமைக்காக பிரதமர் நரேந்திர மோடிக்கு, தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி நன்றி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஆளுநர் மாளிகை வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

இந்திய விடுதலைப் போரில் அதிமான பங்களிப்பை பழங்குடியினர் வழங்கியுள்ளனர். நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் பரவி வாழும் அவர்கள், ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் கடும் துயரங்களை அனுபவித்தனர். பகவான் மிர்சா முண்டா, இந்திய சுதந்திரப் போராட்ட வீரர்களில் முக்கியமானவர். துணிச்சலுடன் போராடிய தலைவரான அவர், ஆங்கிலேயேருடன் ஏற்பட்ட போராட்டத்தில் இளம் வயதிலேயே மரணத்தைத் தழுவினார். இந்நிலையில், பகவான் மிர்சா முண்டாவின் பிறந்த தினமான நவம்பர் 15–ம் தேதியை பழங்குடியினர் பெருமை தினமாக பிரதமர் நரேந்திர மோடி அறிவித்துள்ளார்.

பழங்குடியினரின் தியாகங்களைப் போற்றும் வகையில் இந்த அறிவிப்பை வெளியிட்டமைக்காக, பிரதமர் மோடிக்கு தமிழகம் சார்பில் ஆளுநர் ஆர்.என்.ரவி நன்றி தெரிவித்துள்ளார். இவ்வாறு செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**3. வெளிநாடுகளில் படிக்க விரும்பும் இந்திய மாணவர்களின் முதல் தேர்வு அமெரிக்கா**

சென்னையில் உள்ள அமெரிக்க தூதரகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

இந்த ஆண்டு சர்வதேச கல்வி நிறுவனம் வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையின்படி, இந்தியா உட்பட 200–க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த 9 லட்சத்து 14 ஆயிரம் மாணவர்கள் அமெரிக்காவில் உயர் கல்வி பயில்கின்றனர். இதில் இந்திய மாணவர்களின் எண்ணிக்கை தோராயமாக 20 சதவீதம். 2020–2021–ம் கல்வி ஆண்டில் மட்டும் 1 லட்சத்து 67,582 இந்திய மாணவர்கள் அமெரிக்க கல்வி நிறுவனங்களில் படிக்கிறார்கள். வெளிநாடுகளில் மேற்படிப்பு படிக்க விரும்பும் இந்திய மாணவர்களின் முதல் தேர்வாக அமெரிக்கா இருக்கிறது.

கடந்த ஆண்டு கரோனா பெருந்தொற்று சூழலில் வெளிநாட்டு மாணவர்களின் கல்வி நலனை பாதுகாக்கும் பொருட்டு அமெரிக்க அரசும் அமெரிக்க உயர்கல்வி நிறுவனங்களும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டன. எந்த வகையிலும் படிப்பு பாதிக்காமல் இருக்க இணையவழி உள்ளிட்ட மாற்று ஏற்பாடுகள் மூலம் வகுப்புகள் நடத்தப்பட்டன.

அமெரிக்காவில் உயர்கல்வி பயில விரும்பும் வெளிநாட்டு மாணவர்கள் அதுதொடர்பான அனைத்து தகவல்களையும் உதவிகளையும் பெறுவதற்கு Education USA India என்ற மொபைல் செயலியை இலவசமாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். இந்த செயலி மூலம் அமெரிக்க கல்வி நிறுவனங்களின் மாணவர் சேர்க்கை நடைமுறை குறித்த அனைத்து தகவல்களையும் அறிந்துகொள்ளலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

---

**4. பணிக்காலத்தின்போது உயிரிழக்கும் பத்திரிகையாளர்களுக்கான குடும்ப நல நிதியை ரூ.5 லட்சமாக உயர்த்தி அரசாணை வெளியீடு: பணிபுரிந்த ஆண்டுகள் அடிப்படையில் நிதி வழங்கப்படும்**

பணிக் காலத்தின்போது உயிரிழக்கும் பத்திரிகையாளர் குடும்ப நலநிதியை ரூ.5 லட்சமாக உயர்த்தி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக தமிழக அரசு வெளியிட்ட அரசாணை:

தமிழகத்தில் உள்ள பத்திரிகைதுறையில் தொடர்ந்து பணியாற்றிய ஆசிரியர்கள், துணை ஆசிரியர்கள், செய்தியாளர்கள், புகைப்படக் கலைஞர்கள், பிழை திருத்துபவர்கள் ஆகியோர் பணியில் இருக்கும்போது இயற்கை எய்தினால், அவர்களது குடும்பத்துக்கு முதல்வர் பொது நிவாரண நிதியில் இருந்து கடந்த 2018–ம் ஆண்டுமுதல் குடும்ப நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

பத்திரிகையாளர் 20 ஆண்டுகள் பணியாற்றி வரும் நிலையில் இறந்தால் ரூ.3 லட்சம், 15 ஆண்டுகள் எனில்ரூ.2.25 லட்சம், 10 ஆண்டுகளுக்கு ரூ.1.50 லட்சம், 5 ஆண்டுகளுக்கு ரூ.75 ஆயிரம் வழங்கப்படுகிறது.

இந்நிலையில், சட்டப்பேரவையில் 2021–22 ஆண்டுக்கான மானியக் கோரிக்கையின்போது செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன்,''பத்திரிகை துறையில் ஆசிரியர்,உதவி ஆசிரியர், நிருபர், புகைப்படக் கலைஞர், பிழை திருத்துபவர் ஆகியோர் பணிக் காலத்தில் இயற்கை எய்தினால், அவர்களது குடும்பத்துக்கு முதல்வர் பொது நிவாரண நிதியில் இருந்து தற்போது ரூ.3 லட்சம் வரை வழங்கப்படும் குடும்ப நிதியுதவி ரூ.5 லட்சமாக உயர்த்தப்படும்' ' என்று அறிவித்தார்.

அரசின் கவனமான பரிசீலனைக்குப் பிறகு, பத்திரிகையாளர் 20 ஆண்டுகள் பணியாற்றி இறந்தால் ரூ.5 லட்சம், 15 ஆண்டுகள் எனில் ரூ.3.75 லட்சம், 10 ஆண்டுகளுக்கு ரூ.2.50 லட்சம், 5 ஆண்டுகளுக்கு ரூ.1.25 லட்சம்என, நடைமுறையில் உள்ள விதிகளின்படி குடும்ப நிதியுதவி உயர்த்தி வழங்கப்படும்.

இந்த உதவியை பெற, உரிய சான்றிதழ்களுடன் சம்பந்தப்பட்ட மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர் வாயிலாக மாவட்ட ஆட்சியரின் பரிந்துரை பெற்று, செய்தித் துறை இயக்குநருக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

ஓய்வூதிய பரிசீலனைக் குழு இந்தவிண்ணப்பங்களை பரிசீலித்து, பரிந்துரை அடிப்படையில் உத்தரவு வெளியிடப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

---

**5. இந்தியாவிலேயே முதன்முறையாக தஞ்சாவூரில் ரூ.1.1 கோடியில் உணவு அருங்காட்சியகம்: மத்திய அமைச்சர் பியூஷ்கோயல் காணொலி மூலம் திறந்து வைத்தார்**

இந்தியாவிலேயே முதன்முறையாக இந்திய உணவுக் கழகம்சார்பில் தஞ்சாவூரில் ரூ.1.1 கோடி மதிப்பீட்டில் உணவு அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது. இதை மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் காணொலி மூலம் நேற்று திறந்து வைத்தார்.

இந்திய உணவுக் கழகம் தஞ்சாவூரில் 1965–ம் ஆண்டு தொடங்கப்பட்டது. தஞ்சாவூர் நிர்மலா நகரில் உள்ள இந்நிறுவனத்தின் மண்டல அலுவலகத்தில் உணவு அருங்காட்சியகம் அமைக்க திட்டமிடப்பட்டது. அதன்படி, 2,500 சதுரஅடி பரப்பளவில் உணவு அருங்காட்சியகம் அமைக்கப்பட்டது.

பெங்களூருவில் உள்ளவிஸ்வேஸ்வரய்யா தொழில்நுட்பஅருங்காட்சியகத்தின் உதவியுடன், 13 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மனிதன் உணவுக்காக எப்படி வேட்டையாட தொடங்கினான் என்பதில் தொடங்கி, உழவு கருவிகள், விவசாயம், உலகில் உள்ள தானிய களஞ்சியங்கள், உலகளவில் உணவு உற்பத்தியின் சவால்கள், பருப்பு வகைகள், காய்கறிகள், பழங்கள், இந்தியாவில் உள்ள உணவு முறைகள், பொதுவிநியோகத் திட்டம், விவசாயத்தில் உழவுப்பணி, நாற்றங்கால், நடவு, களை எடுப்பு, அறுவடை, கொள்முதல், அரைவை, மக்களுக்கு அரிசிவிநியோகம் வரை உள்ள பணிகள் மெழுகு பொம்மைகளாகதத்ரூபமாக காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த அருங்காட்சியகத்தை நேற்று பொதுமக்கள் பார்வைக்காக மத்திய உணவு மற்றும் பொதுவிநியோகத் துறை அமைச்சர் பியூஸ்கோயல் மும்பையில் இருந்தவாறு காணொலிக் காட்சி மூலம் திறந்து வைத்தார்.

பின்னர் அவர் பேசும்போது, "இந்தியாவின் 75–வது ஆண்டு சுதந்திர தின கொண்டாட்டங்களின் ஒருபகுதியாக, இந்தியாவிலேயே முதன்முறையாக தஞ்சாவூரில் உணவு அருங்காட்சியகம் அமைக்கஏற்பாடுகளை செய்த இந்திய உணவுக் கழகத்தினருக்கு பாராட்டுகள். இறக்குமதியாளர் முதல் ஏற்றுமதியாளர் வரை உணவுப் பாதுகாப்பின் மூலம் தேசத்தில் விவசாயப் புரட்சியை இந்திய உணவு கழகம் ஏற்படுத்தி வருகிறது. சமூகத்தில் ஏழைகள் மற்றும் சலுகைகள் கிடைக்காத பிற பிரிவினருக்கு இந்திய உணவுக் கழகம் தொடர்ந்து சேவை செய்ய வேண்டும்" என தெரிவித்தார்.

இதையடுத்து, தஞ்சாவூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தென்மண்டல செயல் இயக்குநர் டல்ஜித்சிங், முதன்மைப் பொது மேலாளர் சஞ்சீவ்குமார் கவுதம், தமிழக பொது மேலாளர் பி.என்.சிங், தஞ்சாவூர் மண்டல மேலாளர் தேவேந்திர சிங் மார்டோலியா உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இந்த அருங்காட்சியகத்தை அலுவலக வேலை நாட்களில் காலை 11 மணி முதல் மாலை 5மணி வரை பொதுமக்கள் இலவசமாக பார்வையிடலாம். இந்த அருங்காட்சியகம் ப்ரொஜெக்ஷன் மேப்பிங், டச் ஸ்கிரீன் கியோஸ்க், ப்ராக்ஸிமிட்டி சென்சார்கள் போன்ற நவீன தொழில்நுட்பங்களை கொண்டுள்ளது. மேலும், இந்திய உணவுக் கழகத்தின் செயல்பாடுகள் குறித்தும் அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

---

**6. உ.பி.யில் மாடுகளுக்காக ஆம்புலன்ஸ், அழைப்பு மையங்கள்: மாநில அமைச்சர் அறிவிப்பு**

உத்தர பிரதேசத்தில் மாடுகளுக் காக ஆம்புலன்ஸ் சேவை மற்றும்உதவிகளுக்கான அழைப்பு மையங்களின் சேவை துவக்கப்பட உள்ளது.

பாஜக ஆளும் உ.பி.யின் முதல்வர் ஆதித்யநாத் ஆட்சியில் மாடுகளுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இதற்கு இந்துக்கள் இடையே பசுமாடுகள் புனிதமாகக் கருதப்படுவது காரணம். இதனால், மனிதர்களுக்கானதை போல், மாடுகளுக்கும் சிகிச்சை வசதிகள் அளிக்க ஆம்புலன்ஸ் மற்றும் அழைப்பு மையங்கள் சேவை உ.பி.யில் டிசம்பர் முதல் துவக்கப்படுகிறது.

இது குறித்து மதுராவில் செய்தியாளர்களிடம் தனது அறிவிப்பை வெளியிட்ட அமைச்சர் நாராயண் சவுத்ரி, "24 மணி நேரங்களுக்கான இந்த ஆம்புலன்ஸ் சேவைக்கானஎண் 115 மற்றும் உதவிகளுக்கான அழைப்பு மையங்கள் எண் 112ஆகும். மாநில அளவில் ஒருங்கிணைந்த அழைப்பு மையம் தலைநகர் லக்னோவில் அமைக்கப்படும். ஒவ்வொரு ஆம்புலன்ஸிலும் ஒரு கால்நடை மருத்துவரும், இரண்டு உதவியாளர்களும் இருப்பார்கள். அழைப்பு வந்த சுமார் 20 நிமிடங்களுக்குள் சேவை கிடைக்கும்’ ’ எனத் தெரிவித்தார்.

இதுபோன்ற கால்நடைகளுக்கான சேவை வேறு எந்த மாநிலங்களிலும் இல்லை எனக் கருதப்படுகிறது. இத்துடன் இலவசமாக உயரிய வகைப் பசு மாடுகளுக்கான இன உற்பத்தி நிலையமும், அனைத்து பசுக்களையும் அதிகபால் தருவதாக மாற்றும் தொழில்நுட்பமும் துவக்கப்படுவதாகவும் கூறப்பட்டுள்ளது.

இவை துவக்கக் கட்டமாகசோதனை அடிப்படையில் மதுரா உள்ளிட்ட உத்தர பிரதேச மாநிலத்தின் எட்டு மாவட் டங்களில் துவக்கப்படுவதாகவும் அமைச்சர் நாராயண் சவுத்ரி தெரிவித்துள்ளார்.

---

**7. சேதி தெரியுமா?**

நவ.7: இந்திய கடற்படை தளபதி அட்மிரல் கரம்பீர் சிங் நவம்பர் 30–ஆம் தேதியுடன் ஓய்வு பெறுவதையொட்டி, புதிய தளபதியாக ஆர்.ஹரிகுமார் நியமிக்கப்பட்டார்.

நவ.8: விண்வெளியில் நடந்த முதல் சீனப் பெண் என்ற வரலாற்றை வாங் யாபிங் (41) படைத்தார். விண்வெளி நிலைய கட்டமைப்புப் பணிக்காக விண்வெளியில் நடந்து இச்சாதனையைப் புரிந்தார்.

நவ.8: யுனெஸ்கோ அமைப்பின் படைப்பாற்றல் கொண்ட நகரங்களின் பட்டியலில் காஷ்மீரில் உள்ள ஸ்ரீ நகர் இணைந்தது. உலகம் முழுவதும் 49 நகரங்கள் இப்பட்டியலில் உள்ளன.

நவ.9: குளிர்பதன பெட்டியில் வைக்க அவசியமில்லாத புதிய கரோனா தடுப்பூசியை அமெரிக்காவின் பாஸ்டன் நகர் குழந்தைகள் மருத்துவமனை ஆராய்ச்சி குழுவினர் உருவாக்கியுள்ளனர். அறை வெப்பநிலையில் 7 நாட்கள் வரை வைத்து இதைப் பயன்படுத்தலாம்.

நவ.9: சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி சஞ்ஜிப் பானர்ஜியை மேகாலயாவுக்கு இடமாற்றம் செய்ய உச்ச நீதிமன்ற கொலிஜியம் பரிந்துரை செய்தது.

நவ.9: ஈஃபிள் கோபுரம் அளவிலான '4660 நெரியஸ்' என்று பெயரிடப்பட்ட குறுங்கோள் டிசம்பர் மாதத்தில் புவியை நோக்கி நகரும் என்று அமெரிக்காவின் நாசா அறிவித்தது.

நவ.10: இந்திய டி20 கிரிக்கெட் அணியின் தலைவராக ரோஹித் சர்மா நியமிக்கப்பட்டார். டி20 கேப்டன் பதவியிலிருந்து விராட் கோலி விலகியதை அடுத்து இப்பொறுப்புக்கு அவர் நியமிக்கப்பட்டார்.

நவ.10,11: ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெற்ற டி20 உலகக் கோப்பை அரையிறுதிப் போட்டியில் இங்கிலாந்தை வீழ்த்தி நியூசிலாந்தும், பாகிஸ்தானை வீழ்த்தி ஆஸ்திரேலியாவும் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றன. ஆஸ்திரேலியா கோப்பையை வென்றது.

நவ.11: வங்கக் கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் சென்னை அருகே கரையைக் கடந்தது. இதன் காரணமாக பெய்த மழையால் சென்னை மாநகரம் வெள்ளக்காடானது.

நவ. 12: சர்வதேச துப்பாக்கிச் சுடும் விளையாட்டு கூட்டமைப்பு சார்பில் போலந்தில் நடைபெற்ற பிரசிடென்ட்ஸ் கோப்பைக்கான போட்டியில் இந்திய அணி 2 தங்கம், 2 வெள்ளி, 1 வெண்கலம் என 5 பதக்கங்களை வென்றது.

---

**1.** **"மாநில பொது நிர்வாக நிறுவனங்களை வலுப்படுத்துதல்" என்ற தலைப்பில் 2 நாள் மண்டல மாநாடு நடைபெற்ற இடம் எது?**



அ) மும்பை

ஆ) தில்லி

இ) அகமதாபாத்

**ஈ) லக்னோ ☑**

✓ இந்திய அரசின் நிர்வாகச் சீர்திருத்தங்கள் மற்றும் பொதுமக்கள் குறை தீர்ப்பு துறையும், உத்தர பிரதேச மாநில அரசும் இணைந்து லக்னோவில் "மாநில பொது நிர்வாக நிறுவனங்களை வலுப்படுத்துதல்" என்ற தலைப்பில் இரண்டு நாள் மண்டல மாநாட்டை ஏற்பாடு செய்தது. நிர்வாக மற்றும் நிர்வாகப் பயிற்சியில் சிறந்த நடைமுறைகள் மற்றும் தேவைகளைப் பகிர்ந்து கொள்ள பல்வேறு பயிற்சி நிறுவனங்களை ஒரே தளத்தில் கொண்டு வருவது இம்மாநாட்டின் நோக்கமாகும்.

---

**2.** **அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற "வரலாற்றுத் தீர்மானம்" என்பதுடன் தொடர்புடைய நாடு எது?**



அ) அமெரிக்கா

ஆ) ஜப்பான்

**இ) சீனா ☑**

ஈ) நியூசிலாந்து

✓ சீனப் பொதுவுடைமை கட்சி பொதுவாக "வரலாற்றுத் தீர்மானம்" என்று அழைக்கப்படும் ஒரு முக்கிய தீர்மானத்தை ஏற்றுக்கொண்டது. இது, ஆளும் அதிபர் ஜி ஜின்பிங்கை அடுத்த ஆண்டில் முன்னெப்போதும் இல்லாத வகையில் மூன்றாவது முறையாக பதவியில் அமர்த்தவும் மற்றும் அவரது வாழ்நாள் முழுவதும் சீனாவை ஆட்சி செய்யவும் உதவும்.

✓ இந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொள்வதன் மூலம், அவர் மாவோ சேதுங் மற்றும் டெங் சியோபிங் ஆகியோருக்கு இணையாக வைக்கப்படுவார். மேலும், ஒரு வரலாற்றுத் தீர்மானத்தைக் கொண்ட மூன்றாவது சீனத் தலைவராகவும் ஆனார்.

---

**3.** **'டிஜிட்டல் 2021: அக்டோபர் குளோபல் ஸ்னாப்ஷாட்'படி, கைபேசி பயன்படுத்துவோரின் சதவீதம் எவ்வளவு?**



அ) 45

**ஆ) 65 ☑**

இ) 75

ஈ) 80

✓ 'We Are Social' என்ற ஆராய்ச்சி நிறுவனம் 'டிஜிட்டல் 2021: அக்டோபர் குளோபல் ஸ்னாப்ஷாட்' என்ற தலைப்பிலான ஓர் அறிக்கையை வெளியிட்டது. இவ்வறிக்கையின்படி, உலக மக்கள்தொகையில் 65%'க்கும் அதிகமானோர் கைபேசியைப் பயன்படுத்தி வருகின்றனர்.

✓ உலகளாவிய கைபேசி பயனர்கள் எண்ணிக்கை அக்டோபரில் 5.29 பில்லியனை எட்டியுள்ளது. 2022ஆம் ஆண்டின் முதல் பாதியில் உலக மக்கள்தொகையில் 60% பேர் சமூக ஊடக பயனர்களாக வாய்ப்புள்ளது என இவ்வறிக்கை கூறுகிறது.

---

**4.** **நியூயார்க்கில் நடைபெற்ற தகவல் மற்றும் ஜனநாயகத்திற்கான உச்சிமாநாட்டில் இந்தியாவை பிரதிநிதித்துவப்படுத்தியவர் யார்?**



அ) நரேந்திர மோடி

**ஆ) அனுராக் தாக்கூர் ☑**

இ) பியூஷ் கோயல்

ஈ) நிர்மலா சீதாராமன்

✓ ஐநா பொதுச்சபை கூட்டத்தையொட்டி நியூயார்க்கில் உள்ள பிரான்ஸ் தூதரகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட தகவல் மற்றும் ஜனநாயகத்திற்கான உச்சிமாநாட்டில் மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சர் அனுராக் தாக்கூர் உரையாற்றினார். 'தகவல் மற்றும் ஜனநாயகத்திற்கான சர்வதேச கூட்டணி' நியூயார்க்கில் கடந்த 2019ஆம் ஆண்டு செப்.26 அன்று தொடங்கப்பட்டது. இது கருத்து மற்றும் கருத்து சுதந்திரம் மற்றும் இலவச, பன்மை மற்றும் நம்பகமான தகவல்களுக்கான அணுகலை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இக்கூட்டாண்மையில் இன்றுவரை 43 நாடுகள் கையெழுத்திட்டுள்ளன.

---

**5.** **சர்வதேச அணுசக்தி முகமையின் வெளியக தணிக்கையாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட இந்தியர் யார்?**



அ) வினோத் ராய்

ஆ) சஷி காந்த் சர்மா

இ) ராஜீவ் மெஹ்ரிஷி

**ஈ) ஜி சி முர்மு ☑**

✓ இந்தியாவின் கன்ட்ரோலர் மற்றும் ஆடிட்டர் ஜெனரலான ஜி சி முர்மு பன்னாட்டு அணுசக்தி முகமையின் (IAEA) வெளியக தணிக்கையாளராக தெரிவு செய்யப்பட்டுள்ளார். IAEA என்பது ஒரு மதிப்புமிக்க பன்னாட்டு நிறுவனமாகும். இது அமைதியான அணுவாற்றல் பயன்பாட்டை ஊக்கு –விக்கிறது. மத்திய வெளியுறவு அமைச்சகத்தின்படி, அவரது வேட்புமனு IAEA பொது மாநாட்டின் பெரும்பான்மை ஆதரவைப் பெற்றது. அவரது பதவிக்காலம் 2022 முதல் 2027 வரை ஆறு ஆண்டுகள் இருக்கும்.

---

**6.** **சமீப செய்திகளில் இடம்பெற்ற டிஜிசக்ஷம் திட்டத்தைத் தொடங்கிய மத்திய அமைச்சகம் எது?**




அ) MSME அமைச்சகம்

ஆ) நிதி அமைச்சகம்

**இ) தொழிலாளர் & வேலைவாய்ப்பு அமைச்சகம் ☑**

ஈ) ஜவுளி அமைச்சகம்

✓ மத்திய தொழிலாளர் & வேலைவாய்ப்பு அமைச்சரான பூபேந்திர யாதவ், மைக்ரோசாப்ட் இந்தியாவுடன் இணைந்து 'டிஜிசக்ஷம்' திட்டத்தை அறிமுகப்படுத்தினார். 'டிஜிசக்ஷம்' திட்டத்தின்மூலம், பதிவுசெய்யப்பட்ட 10 மில்லியன் வேலைதேடுவோர், தேசிய தொழில் சேவை வலைதளத் –தில் கணினி மற்றும் கணினி அறிவியல் பயிற்சி உள்ளிட்ட பயிற்சியை பெறமுடியும். நிரலாக்க மொழிகள், தரவு பகுப்பாய்வு, மென்பொருள் வளர் –ச்சிபோன்ற பாடங்களில் பயிற்சி அளிப்பதன்மூலம் முதலாம் ஆண்டில் 3,00,000 வேலை தேடுவோரை இது பயிற்றுவிக்கும்.

---

**7.** **உலக சகிப்புத்தன்மை நாள் கடைப்பிடிக்கப்படுகிற தேதி எது?**




**அ) நவம்பர் 16 ☑**

ஆ) நவம்பர் 14

இ) நவம்பர் 12

ஈ) நவம்பர் 10

✓ சமுதாயத்தில் சகிப்புத்தன்மையின் அவசியத்தைப்பற்றி மக்களுக்குக் கற்பிப்பதற்கும், சகிப்புத்தன்மையின் எதிர்மறையான விளைவுகளைப் புரிந்துகொள்ள அவர்களுக்கு உதவுவதற்குமாக ஐநா அவையின் உலக சகிப்புத்தன்மை நாள் ஆண்டுதோறும் நவ.16 அன்று கடைப்பிடிக்கப்படு –கிறது. இந்நாள் உலகளாவிய சகிப்புத்தன்மையின் முக்கியத்துவத்தை பற்றி மக்களுக்குக் கற்பிக்கிறது.

---

**8.** **"ஊட்டச்சத்து ஸ்மார்ட் கிராமம்" திட்டத்தை தொடங்கவுள்ள மத்திய அமைச்சகம் எது?**

**அ) வேளாண்மை & விவசாயிகள் நல அமைச்சகம் ☑**

ஆ) ஊரக வளர்ச்சி அமைச்சகம்

இ) பெண்கள் & குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்

ஈ) உணவு பதப்படுத்தும் தொழில் அமைச்சகம்

✓ விவசாயம் மற்றும் விவசாயிகள் நல அமைச்சகம், போஷன் அபியானை வலுப்படுத்த, "ஊட்டச்சத்து ஸ்மார்ட் கிராமம்" என்ற திட்டத்தை தொடங்க உள்ளது. இந்த திட்டம் ஆசாதி கா அம்ரித் மகோத்சவின் ஒருபகுதியாகும். இந்த முயற்சி இந்தியா முழுவதும் உள்ள 75 கிராமங்களைச் சென்றடைவதை நோக்கமாகக் கொண்டது.

✓ கிராமப்புறங்களில் ஊட்டச்சத்து விழிப்புணர்வு, கல்வி மற்றும் நடத்தை மாற்றத்தை ஊக்குவித்தல், ஊட்டச்சத்து குறைபாட்டை சமாளிக்க உள்ளூர் செய்முறையைப் பயன்படுத்துதல் மற்றும் ஊட்டச்சத்து உணர் திறன்கொண்ட விவசாயத்தை செயல்படுத்துதல் ஆகியவற்றை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

**9. அண்மையில் எந்த நாடு, இந்தியாவுடன் நாடாளுமன்ற நட்புறவு சங்கத்தை உருவாக்கியது?**

**அ) இலங்கை ☑**



ஆ) நேபாளம்

இ) பங்களாதேஷ்

ஈ) ஜப்பான்

- ✓ இந்தியாவுடனான இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவதற்காக இலங்கை நாடாளுமன்றத்தின் மூத்த உறுப்பினர்களைக்கொண்ட இந்தியா–இலங்கை நாடாளுமன்ற நட்புறவுக் குழுவை இலங்கை உருவாக்கியது. சீனாவின் உரச் சரக்குகளை நிராகரித்ததையடுத்து, இந்தியாவிடமிருந்து உரத்தை வாங்குவதற்கு இலங்கை முன்னர் தீர்மானித்திருந்தது.
- ✓ இலங்கையின் 9ஆவது நாடாளுமன்றத்திற்கான இந்திய – இலங்கை நாடாளுமன்ற நட்புறவு சங்கம் அண்மையில் நிறுவப்பட்டது.

---

**10. பின்வரும் எக்கண்டத்தில் அமைந்துள்ள சகேல் பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடி குறித்து ஐநா அமைதி காக்கும் தலைவர் எச்சரித்துள்ளார்?**

**அ) ஆப்பிரிக்கா ☑**




ஆ) ஆசியா

இ) ஐரோப்பா

ஈ) ஆஸ்திரேலியா

- ✓ ஐநா அமைதிகாக்கும் தலைவரானவர் ஆப்பிரிக்க கண்டத்தின் சகேல் பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடி குறித்து எச்சரித்துள்ளார்.
- ✓ இலட்சக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டி உள்ளார். மேலும், குழந்தைகளுக்கு பள்ளி செல்ல முடியாத நிலை, மக்களுக்கு ஆரம்ப சுகாதார வசதி இல்லாதது குறித்தும் எச்சரித்தார். ஜி5 சகேல் படை தொடர்பான ஐநா பாதுகாப்பு கவுன்சில் கூட்டத்தில் அவர் பேசினார். சாட், மாலி, புர்கினா பாசோ, நைஜர் மற்றும் மொரிடானியா ஆகிய ஐந்து ஆப்பிரிக்க நாடுகளால் 2017'இல் சகேல் பிராந்தியத்தில் பயங்கரவாத அச்சுறுத்தலை எதிர்த்துப் போராடுவதற்காக இது அமைக்கப்பட்டது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. உயர்தர ஸ்டீல் அலாய் கண்டுபிடிப்பு: ஐஐடி மெட்ராஸ்**

வாகனங்களின் எடையை குறைக்க ஆட்டோமொபைல் தொழிற்சாலைகளில் பயன்படுத்தக் கூடிய உயர்தர ஸ்டீல் அலாயை, ஐஐடி மெட்ராஸ் கண்டுபிடித்துள்ளது.

வாகனங்களின் எரிபொருள் நுகர்வு, அதன் எடையை பொறுத்து அமைகிறது என்பதால், விஞ்ஞானிகள் இலகு ரக உலோகத்தை கண்டுபிடிக்கத் தொடர்ந்து முயற்சி செய்து வருகின்றனர். பொதுவாக கார் உள்ளிட்ட வாகனங்களை ஸ்டீலில் தயாரித்து வருகின்றனர். விபத்துச் ம்பவங்களில் அதிக பாதிப்பை ஏற்படுத்தாமல் இருப்பதற்காக, ஸ்டீலில் தயாரிக்கப்பட்டு வருகிறது. இதன் காரணமாக எரிபொருளும் அதிகமாகத் தேவைப்படுகிறது.

பெட்ரோல், டீசல் விலைகள் இப்போது அதிகரித்து வரும் நிலையில், எடைகுறைவான இலகு ரக உலோகம் கண்டுபிடிக்கப்பட்டால், மக்களுக்கு அது பணத்தை மிச்சப்படுத்த உதவும். இதையடுத்து கடந்த சில வருடங்களாக அதற்கான முயற்சிகளில் விஞ்ஞானிகள் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்,

இந்நிலையில், மெட்ராஸ் ஐஐடி–யின் உலோகவியல் துறை பேராசிரியர் சுப்பிரமணிய சர்மா வட்லமணி மற்றும் அவர் குழுவினர் ஆட்டோ மொபைல் தொழிற்சாலைகளில் பயன்படுத்தக் கூடிய உயர்தர ஸ்டீல் அலாயை கண்டுபிடித்துள்ளனர். மாங்கனீஸ், கார்பன், அலுமினியம், சிலிகான், நிக்கல், நியோபியம் ஆகியவற்றை ஒரு குறிப்பிட்ட விகிதத்தில் எஃகுடன் கலந்து இந்த ஸ்டீல் அலாயை கண்டுபிடித்துள்ளனர். தங்கள் ஆராய்ச்சி முடிவுகளின் படி, இதை வணிகப் பயன்பாட்டுக்கு கொண்டு வர இந்தக் குழு முடிவு செய்துள்ளது. இதற்காக எஃகு மற்றும் வாகனத் தொழில்துறையினருடன் பேசி வருவதாகக் கூறப்படுகிறது.

---

2. நவ.16 – தேசிய பத்திரிகையாளர் தினம்

---

**3. தமிழகத்தில் மாவட்டம்தோறும் – சூரியசக்தி மின்சார பூங்கா: இடம் தேர்வுப் பணியில் மின்வாரியம் தீவிரம்**

மாவட்டம்தோறும் சூரிய மின்சக்திபூங்கா அமைக்கப்படும். முதல்கட்டமாக 4 ஆயிரம் மெகாவாட் திறனுள்ள சூரியசக்தி மின்நிலையம் அமைக்கப்படும் என சட்டப் பேரவையில் மின்துறை அமைச்சர் செந்தில் பாலாஜி தெரிவித்திருந்தார்.

இதையடுத்து, மாவட்டம்தோறும் சூரியசக்தி மின்சார பூங்காஅமைப்பதற்கான இடங்களை தேர்வு செய்யும் பணியை மின்வாரியம் மேற்கொண்டுள்ளது.

ஒரு மெகாவாட் சூரியசக்தி மின்நிலையம் அமைக்க குறைந்தபட்சம் 5 ஏக்கர் நிலம் தேவை. மாநகராட்சி, நகராட்சி இல்லாத மாவட்டங்களில் 75 முதல் 100 மெகாவாட் திறனில் பூங்கா அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

எனவே, துணைமின் நிலையங்களுக்கு அருகில் உள்ள அரசு நிலங்களை கையப்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கான பணி விரைவில் தொடங்கும்.

முதலாவது பூங்கா திருவாரூர் மாவட்டத்தில் அமைக்கப்பட உள்ளது என மின்வாரிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

---

**3. இந்திய சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்த இரண்டரை வயது தமிழக சிறுவன்**

சென்னை எண்ணூரைச் சேர்ந்த திபின் – திவ்யா தம்பதியரின் இரண்டரை வயது மகன் ரித்தின்கலிகோட், 'இந்தியா புக் ஆஃப் ரெக்கார்ட்ஸ்' புத்தகத்தில் இடம் பிடித்துள்ளான்.

பெங்களூருவில் வசித்து வரும் இந்த தம்பதியரின் மகன் ரித்தின் கலிகோட், சிறுவர்களுக்கான கதைபுத்தகங்கள், கார்ட்டூன் திரைப்படங்களில் வரும் கதாபாத்திரங்களின் பெயர்கள், அவை செய்யும் தொழில்கள் ஆகியவற்றை மனப்பாடமாக கூறியிருக்கிறான்.

இதையடுத்து, பல்வேறு நாடுகளின் தேசியக் கொடிகள், கிரகங்கள், காட்டு விலங்குகள், வடிவங்கள், நிறங்கள் உள்ளிட்டவற்றை பெற்றோர் சொல்லிக் கொடுத்தனர்.

இந்த பயிற்சியின் காரணமாக தற்போது சிறுவன் ரித்தின், ஒன்று முதல் முப்பது வரையிலான எண்கள், 10 வகை நிறங்கள், 20 நாடுகளின் தேசியக் கொடிகள், 9 கிரகங்கள், 40 வீட்டு உபயோகப் பொருட்கள், 18 உடல் பாகங்கள், 20 வனவிலங்குகள், 10 வீட்டு விலங்குகள், 18 வடிவங்கள், 20 மலர்கள், 24 காய்கறிகள், 18 தொழில்கள், 20வாகனங்கள் ஆகியவற்றை துல்லியமாக அடையாளம் கண்டு சொல்கிறான். அதுமட்டுமின்றி, 4 குழந்தைப் பாடல்கள், ஆங்கில உயிர் எழுத்துகள் ஆகியவற்றையும் மனப்பாடமாக கூறுகிறான்.

இந்நிலையில், இதுகுறித்து அறிந்த 'இந்தியா புக் ஆஃப் ரெக்கார்ட்ஸ்' நிர்வாகிகள், ரித்தினின்இந்த திறமைகளை ஆய்வு செய்தனர். அப்போது, இந்தியாவிலேயே இரண்டரை வயதில் இவ்வளவு விஷயங்களை இதுவரை யாரும் கூறியதில்லை என்பதை அவர்கள் உறுதி செய்தனர். இதன்தொடர்ச்சியாக, இந்திய சாதனைப் புத்தகத்தில் சிறுவன் ரித்தினின் பெயர் இடம்பெற்றுள்ளது.

---

**4. டெல்லி வர்த்தக பொருட்காட்சியில் தமிழ்நாடு நாள் விழா: தமிழக செய்தித் துறை அமைச்சர் சாமிநாதன் தொடங்கி வைத்தார்**

டெல்லியில் நடைபெறும் இந்திய பன்னாட்டு வர்த்தக பொருட்காட்சியில் தமிழ்நாடு நாள் விழாவை செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தொடங்கி வைத்தார்.

டெல்லியில் உள்ள பிரகதி மைதானத்தில், ஆண்டுதோறும் இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சி நவ. 14முதல் 27–ம் தேதி வரை 14 நாட்கள் நடைபெறுகிறது. இந்த ஆண்டு 'சுயசார்புஇந்தியா' என்ற கருப்பொருளில் நடைபெறும் 40–வது இந்தியப் பன்னாட்டுவர்த்தகப் பொருட்காட்சியை மத்தியஅமைச்சர் பியூஷ்கோயல் கடந்த 14–ம்தேதி தொடங்கி வைத்தார்.

இதில், தமிழக அரசால் அமைக்கப்பட்டுள்ள அரங்கில், செய்தி, சுற்றுலா, வேளாண்மை, தோட்டக்கலை, தொழில்,மகளிர் மேம்பாட்டு நிறுவனம், தொழில்வளர்ச்சி நிறுவனம், கைத்தறி துறை, தொழில் முன்னேற்ற நிறுவனம், சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் உள்ளிட்ட அரசு, அரசு சார்பு துறைகள் பங்கேற்று,தங்கள் வளர்ச்சித் திட்டங்களை

காட்சிப்படுத்தியுள்ளன. செய்தித் துறை சார்பில்அரசின் வளர்ச்சித் திட்டங்கள், சாதனைகள் குறித்த புகைப்படங்கள், உற்பத்திப் பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. கீழடி அகழ்வாராய்ச்சி குறித்த மாதிரி வடிவம் மக்களை மிகவும் கவர்ந்தது.

இந்த வர்த்தகப் பொருட்காட்சியின் தமிழ்நாடு அரங்கில் விடுதலைப் போரில்ஈடுபட்ட தமிழக பெண் தியாகிகளின்புகைப்படங்கள், முக்கிய தியாக சீலர்களின் புகைப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

கண்காட்சியை பார்வையிட்ட அமைச்சர் சாமிநாதன், "தமிழக முதல்வரால் எடுக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கைகள் மூலம் தமிழ்நாட்டில் புதிய தொழில் தொடங்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கப்படுகிறது. இதன் மூலம் தமிழகம் பல்வேறு வகையில் முன்னேறிக் கொண்டிருக்கிறது. இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சி பொதுமக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு பெற்றுள்ளது" என்றார்.

இப்பொருட்காட்சியில் பங்கேற்கும் அனைத்து மாநிலங்களும் தங்கள் மாநில நாள் விழாவை கொண்டாடி வருகின்றன. அந்த வகையில், தமிழ்நாடு நாள் விழா நேற்று பிரகதி மைதானத்தில் உள்ள லால்சவுக் அரங்கத்தில் நடைபெற்றது. இவ்விழாவை அமைச்சர் சாமிநாதன் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், டெல்லி சிறப்புபிரதிநிதி ஏகேஎஸ் விஜயன், செய்தித் துறை செயலர் மகேசன் காசிராஜன், உள்ளுறை ஆணையர் ஆசிஷ் சட்டர்ஜி, செய்தித் துறை இயக்குனர் வீ.ப.ஜெயசீலன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### 5. மறைந்த கன்னட நடிகர் புனித் ராஜ்குமாருக்கு 'கர்நாடக ரத்னா' விருது அறிவிப்பு

கன்னட திரையுலகின் பவர் ஸ்டார் என்று ரசிகர்களால் அழைக்கப்பட்டவர் புனித் ராஜ்குமார். 46 வயதான இவர் கடந்த மாதம் (அக்டோபர்) 29–ந்தேதி மாரடைப்பால் உயிரிழந்தார். அவரது மறைவு குடும்பத்தினரை மட்டுமின்றி ரசிகர்கள் மற்றும் கன்னட மக்கள் மத்தியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

புனித் ராஜ்குமார் ஆதரவற்றோருக்கும், ஏழை–எளியோருக்கும் ஏராளமான உதவிகள் மற்றும் பல்வேறு நலத்திட்ட உதவிகளை செய்து வந்துள்ளார். இதனால் அவர் மறைந்தாலும் மக்கள் மனதில் நீங்கா இடம் பிடித்துள்ளார். அவரது நினைவிடம் அமைந்துள்ள கன்டீரவா ஸ்டூடியோவுக்கு கடந்த 16 நாட்களாக ரசிகர்கள் கூட்டம், கூட்டமாக வந்து அஞ்சலி செலுத்து வருகிறார்கள்.

இந்த நிலையில் கன்னட திரைப்பட வர்த்தக சபை சார்பில் மறைந்த நடிகர் புனித் ராஜ்குமாருக்கு புகழஞ்சலி கூட்டம் பெங்களூரு அரண்மனை மைதானத்தில் நேற்று நடைபெற்றது. இந்த விழாவில் முதல்–மந்திரி பசவராஜ் பொம்மை கலந்துகொண்டு புனித் ராஜ்குமாரின் உருவ படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். பின்னர் நிகழ்ச்சியில் பேசிய முதல்–மந்திரி பசவராஜ் பொம்மை புனித் ராஜ்குமாருக்கு கர்நாடக ரத்னா விருது வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக அறிவித்தார்.

### 6. 2025–இல் பாகிஸ்தானில் சாம்பியன்ஸ் கோப்பை போட்டி

2025–ஆம் ஆண்டு சாம்பியன்ஸ் கோப்பை போட்டியை நடத்தும் வாய்ப்பை பாகிஸ்தானுக்கு வழங்கியுள்ளது ஐசிசி. இதையடுத்து சுமாா் 20 ஆண்டுகளுக்குப் பிறகு அந்நாட்டில் ஐசிசியின் கிரிக்கெட் போட்டி நடைபெறவுள்ளது.

ஐசிசி செவ்வாய்க்கிழமை வெளியிட்ட அறிவிப்பின்படி, ஐசிசி போட்டிகளுக்கான அடுத்த சைக்கிளில் இந்தியாவுக்கு 3 போட்டிகளை நடத்துவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. 2026–இல் டி20 உலகக் கோப்பை போட்டியையும், 2029–இல் சாம்பியன்ஸ் கோப்பை போட்டியையும் நடத்த இருக்கும் இந்தியா, 2031–இல் 50 ஓவா் உலகக் கோப்பை போட்டியை இலங்கை மற்றும் வங்கதேசத்துடன் இணைந்து நடத்துகிறது.

2024–ஆம் ஆண்டு டி20 உலகக் கோப்பை போட்டியை அமெரிக்கா மற்றும் மேற்கிந்தியத் தீவுகள் இணைந்து நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. வட அமெரிக்காவில் நடத்தப்பட இருக்கும் முதல் சா்வதேச போட்டி இதுவாகும்.

பாகிஸ்தான் கடைசியாக 1996–இல் உலகக் கோப்பை போட்டியை இந்தியா மற்றும் இலங்கையுடன் இணைந்து நடத்தியிருந்தது. 2009–இல் பாகிஸ்தான் வந்த இலங்கை கிரிக்கெட் அணி மீது நிகழ்த்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பிறகு அந்த நாட்டில் ஐசிசியின் சா்வதேச போட்டிகள் நடைபெறவில்லை என்பது நினைவுகூரத்தக்கது.

சாம்பியன்ஸ் கோப்பை போட்டியானது கடைசியாக கடந்த 2017–இல் இங்கிலாந்தில் நடைபெற்றது. 8 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் நடத்தப்படும் இந்தப் போட்டி, முதல் முறையாக பாகிஸ்தானில் நடைபெறுகிறது.

ஐசிசியில் தற்போது இருக்கும் 14 உறுப்பு நாடுகள், வரும் 2023 முதல் 2031 வரை ஆடவருக்கான ஐசிசி போட்டிகளை நடத்தவுள்ளன. இதில் அமெரிக்கா மற்றும் நமீபியாவுக்கு ஐசிசி போட்டிகளை நடத்தும் வாய்ப்பு முதல் முறையாக வழங்கப்படுகிறது.

**1. உலக நிமோனியா நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

**அ) நவம்பர் 12 ☑**

ஆ) நவம்பர் 14

இ) நவம்பர் 16

ஈ) நவம்பர் 18




✓ உலக நிமோனியா நாளானது ஒவ்வோர் ஆண்டும் நவம்பர்.12 அன்று அனுசரிக்கப்படுகிறது. முதல் உலக நிமோனியா நாளை நடத்துதற்காக 100'க்கும் மேற்பட்ட குழந்தைகள் அமைப்புகள் குழந்தைகளில் ஏற்படும் நிமோனியாவுக்கு எதிரான உலகளாவிய கூட்டணியில் இணைந்தன.

✓ உலகளாவிய நோய்த்தடுப்புத் திட்டத்தின்கீழ், நிமோகாக்கல் காஞ்சுகேட் தடுப்பூசி (PCV) திட்டம் இந்தியாவில் தொடங்கப்பட்டது. நிமோனியாவால் குழந்தைகளிடையே ஏற்படும் இறப்பு மற்றும் நோயுற்ற தன்மையைக் குறைப்பது மற்றும் அந்நோய் குறித்த விழிப்புணர்வை பரப்புவது இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். இந்தியாவில், 5 ஆண்டுகளுக்கு முன் 1.2 மில்லியன் குழந்தைகள் இறந்ததாகவும், அதில் 15.9% இறப்புகள் நிமோனியாவால் ஏற்பட்டதாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

---

**2. 'பழங்குடியினர் பெருமைதின மகாசம்மேளனத்தை' நடத்தவுள்ள இந்திய மாநிலம் எது?**

அ) குஜராத்

**ஆ) மத்திய பிரதேசம் ☑**

இ) சிக்கிம்

ஈ) அருணாச்சல பிரதேசம்



✓ பழங்குடியினர் பெருமை தின மகாசம்மேளனமானது நவ.15ஆம் தேதி அன்று மத்தியபிரதேச மாநிலம் ஜம்பூரி மைதானம் போபாலில் நடந்தது. பிர்சா முண்டா பிரபுவின் பிறந்தநாளில் இம்மகாசம்மேளனுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த ஆண்டு (2021), பழங்குடியின பெருமை தின மகாசம்மேளனத்தில் பிரதமர் நரேந்திர மோடி உரையாற்றினார்.

---

**3.'HARBINGER–2021' என்பது பின்வரும் எந்த இந்திய அமைப்பால் அறிவிக்கப்பட்ட ஓர் உலகளாவிய ஹேக்கத்தான் ஆகும்?**

அ) NITI ஆயோக்

**ஆ) இந்திய ரிசர்வ் வங்கி ☑**

இ) இந்திய உச்ச நீதிமன்றம்

ஈ) இந்திய தேர்தல் ஆணையம்



✓ இந்திய ரிசர்வ் வங்கி (RBI) தனது முதல் 'HARBINGER 2021 – Innovation for Transformation' என்ற ஹேக்கத்தானை 'ஸ்மார்ட்டர் டிஜிட்டல் பேமெண்ட்ஸ்' என்ற கருப்பொருளின் கீழ் அறிவித்தது.

✓ ஹேக்கத்தானுக்கான பதிவு நவ.15 முதல் தொடங்குகிறது. அனைவரும் டிஜிட்டல் பேமெண்ட்டுகளை அணுகும் வகையிலான தீர்வுகளை உருவாக்குதற்கு பங்கேற்பாளர்களை இந்த ஹேகத்தான் அழைக்கிறது.

---

**4. வளரும் நாடுகளின் ஒத்த எண்ணம் கொண்ட குழுவில் (LMDCs) எத்தனை நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன?**

அ) 12

ஆ) 18

**இ) 24 ☑**

ஈ) 36




✓ 24 நாடுகள், ஒத்த எண்ணம் கொண்ட வளரும் நாடுகளின் குழுவில் (LMDCs) உறுப்பினர்களாக உள்ளன. அவர்கள் ஐக்கிய நாடுகள் சபை மற்றும் உலக வர்த்தக அமைப்பு போன்ற சர்வதேச நிறுவனங்களில் பேச்சுவார்த்தையாளர்களாக பணியாற்றுகின்றனர். இதில் சீனா, இந்தியா, இலங்கை மற்றும் மலேசியா உள்ளிட்டவை அடங்கும்.

✓ சமீபத்தில் LMDC'களும் ஆப்பிரிக்க நாடுகளும், 2030 – COP 26 உச்சி மாநாட்டில் தொடங்கி, காலநிலை நிதியாக உலக செல்வந்த நாடுகள் ஆண்டுக்கு குறைந்தபட்சம் $1.3 டிரில்லியன் டாலர்கள் தரவேண்டும் எனக் கோரியுள்ளன.

---

**5. 'Shuttler's Flick: Making every match count' என்பது யாரின் சுய சரிதை ஆகும்?**

**அ) கோபி சந்த் ☑**

ஆ) P V சிந்து

இ) கரோலினா மரின்

ஈ) சாய்னா நேவால்



✓ இந்திய தலைமை தேசிய பேட்மிண்டன் பயிற்சியாளரான பி கோபி சந்த் தனது சுயசரிதையான 'Shuttler's Flick: Making every match count'ஐ முறைப்படி வெளியிட்டார். இந்நூலை பிரியா குமாருடன் இணைந்து அவர் எழுதியுள்ளார். பேட்மிண்டனில் ஒரு வீரராக, பயிற்சியாளராக அவர் மேற்கொண்ட பயணத்தையும், ஒலிம்பிக் பதக்கம் வென்ற சாய்னா நேவால், P V சிந்து உட்பட சிறந்த வீரர்களை உருவாக்குவதில் அவர் எதிர்கொண்ட சவால்களையும் இந்நூல் விவரிக்கிறது.

---

**6. இறுதி கிளாஸ்கோ COP 26 ஒப்பந்தம் புவி வெப்பமடைதலை __டிகிரி செல்சியஸில் கட்டுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது.**

அ) 1

**ஆ) 1.5 ☑**

இ) 2.0

ஈ) 3.0



✓ ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோவில் நடைபெற்ற ஐநா காலநிலை உச்சி மாநாடு, புவி வெப்பமடைதலை 1.5° செல்சியஸாகக் கட்டுப்படுத்துவதை நோக்கமாகக்கொண்ட ஓர் உலகளாவிய ஒப்பந்தத்துடன் முடிவடைந்து உள்ளது. இந்த கிளாஸ்கோ ஒப்பந்தம், பைங்குடில் வாயுக்களை மிக மோசமான அளவில் வெளியிடும் புதைபடிவ எரிபொருளான நிலக்கரி பயன்பாட்டைக் குறைப்பதற்கு வெளிப்படையாகத் திட்டமிடும் முதல் காலநிலை ஒப்பந்தமாகும்.

---

**7.'ஆசாதிகா அம்ரித் மகோத்சவ்' நிகழ்வுகளுக்காக ஒருங்கிணைந்த திறன்பேசி செயலியை வெளியிட்டுள்ள மத்திய அமைச்சகம் எது?**

அ) வெளியுறவு அமைச்சகம்

**ஆ) கலாச்சார அமைச்சகம் ☑**

இ) உள்துறை அமைச்சகம்

ஈ) சுற்றுலா அமைச்சகம்

✓ கொண்டாட்டங்கள் தொடர்பான அனைத்து தகவல்களையும் அணுகும் வகையில், கலாச்சார அமைச்சகம் 'ஆசாதிகா அம்ரித் மகோத்சவ்' நிகழ்வுகளுக்காக ஓர் ஒருங்கிணைந்த திறன்பேசி செயலியை அறிமுகம் செய்துள்ளது. 'ஆசாதிகா அம்ரித் மகோத்சவ்' என்பது இந்தியா விடுதலை அடைந்த 75ஆவது ஆண்டாகும். இந்தச் செயலியில் 'டிஜிட்டல் மாவட்ட களஞ்சியம்' மற்றும் 'ஹிஸ்டரி கார்னர்' கீழ் 'பாடப்படாத நாயகர்கள்' போன்ற பிரிவுகளுக்கான இணைப்புகள் உள்ளன.

---

**8. 'DAVINCI' என்பது வெள்ளிக்கோளை ஆராய்வதற்கான எந்த விண்வெளி நிறுவனத்தின் திட்டமாகும்?**

**அ) NASA ☑**

ஆ) ISRO

இ) JAXA

ஈ) ESA



✓ 2030'களின் முற்பகுதியில் VERITAS, (கோளைச் சுற்றி வர) மற்றும் DAVINCI – Deep Atmosphere Venus Investigation of Noble gases, Chemistry, and Imaging ஆகிய இரண்டு திட்டங்களை தொடங்குவதன் மூலம் வெள்ளிக்கோளை ஆராய NASA திட்டமிட்டுள்ளது.

✓ NASA, வரும் 2029'இல் தொடங்கப்படவுள்ள 'DAVINCI' திட்டம் பற்றிய வீடியோவை அண்மையில் வெளியிட்டது. அது, நீர் உள்ளதா என்பது உட்பட பல்வேறு அளவுருக்களை கண்காணிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது வெள்ளிக் கோளின் தோற்றம், பரிணாமம் மற்றும் கலவை பற்றிய அடிப்படை கேள்விகளுக்கான பதில்களையும் கண்டறியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**9. 'கைசர்–இ–ஹிந்த்'ஐ மாநில பட்டாம்பூச்சியாக அங்கீகரித்துள்ள மாநிலம் எது?**

அ) அஸ்ஸாம்



ஆ) சிக்கிம்

**இ) அருணாச்சல பிரதேசம் ☑**

ஈ) ஒடிசா

- ✓ முதல்வர் பேமா கந்து தலைமையிலான அருணாச்சல பிரதேச மாநில அமைச்சரவை, பெரியதும், பிரகாசமான நிறமுள்ளதுமான 'கைசர்–இ–ஹிந்தை' மாநில வண்ணத்துப்பூச்சியாக அங்கீகரித்தது.
- ✓ முதல்முறையாக பாக்கே புலிகள் காப்பகத்தில் அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது. 'கைசர்–இ–ஹிந்த்' (*Teinopalpus imperialis*) என்றால் 'இந்தியாவின் பேரரசர்' என்று பொருள். 90–120 மிமீ இறக்கைகள் கொண்ட இந்த வண்ணத்துப்பூச்சி ஆறு மாநிலங்களில் காணப்படுகிறது.

---

**10. ஞாயிறு, புவி மற்றும் திங்கள் ஆகியவை ஒரு சரியான நேர்க் கோட்டில் நின்று, திங்கள் புவியின் நிழலில் நகரும் நிகழ்வுக்குப் பெயர் என்ன?**

அ) சூரிய கிரகணம்



**ஆ) சந்திர கிரகணம் ☑**

இ) கோடைகால சங்கிராந்தி

ஈ) குளிர்கால சங்கிராந்தி

- ✓ ஞாயிறு, புவி மற்றும் திங்கள் ஆகியவை ஒரு சரியான நேர்க்கோட்டில் நின்று, திங்கள் புவியின் நிழலில் நகரும் நிகழ்வு 'சந்திர கிரகணம்' என்று அழைக்கப்படுகிறது. NASA'இன் கூற்றுப்படி, 580 ஆண்டுகளில் மிகநீளமான பகுதி சந்திர கிரகணத்தை 2021 நவ.17 அன்று அமெரிக்கா காணும். இந்தக் கிரகணம் மூன்று மணி நேரம் 28 நிமிடங்கள் நீடிக்கும் என NASA தெரிவித்துள்ளது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. சாலை விபத்தில் பாதிப்பு: 48 மணி நேர உயர் சிகிச்சையை அரசே அளிக்கும்**

சாலை விபத்தில் பாதிக்கப்படுவோருக்கு முதல் 48 மணி நேரத்துக்கான உயர் சிகிச்சையை அரசே அளிக்கும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

சாலை பாதுகாப்பு குறித்து ஆய்வுக் கூட்டம் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் தலைமைச் செயலகத்தில் வியாழக்கிழமை நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து அரசு வெளியிட்ட செய்தி:–

ஒரு லட்சம் மக்கள் தொகையில் சாலை விபத்துகளின் இறப்பு விகிதம் 23.9 என்ற அளவில் உள்ளது. இது குறைக்கப்பட வேண்டும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தினார். மேலும் பல்துறை நிபுணர்களை உள்ளடக்கிய சாலைப் பாதுகாப்பு ஆணையம் என்ற ஒருங்கிணைந்த அமைப்பு உருவாக்கப்படும். சாலைப் பாதுகாப்பு திட்டங்களையும், வழிமுறைகளையும் நடைமுறைப்படுத்தத் தேவையான நிர்வாக, நிதி ஆதாரங்களுடன் அது செயல்படும்.

48 மணி நேர சிகிச்சை: சாலை விபத்தால் பாதிக்கப்பட்டோருக்கு முதல் 48 மணி நேரத்துக்கான அவசர மருத்துவ கவனிப்பை அரசே மேற்கொள்ளும். இதற்காக 'நம்மை காக்கும் 48' என்ற திட்டம் செயல்படுத்தப்படும். விபத்தில் பாதித்தோருக்கு முதல் 48 மணி நேர அவசர உயிர் காக்கும் உயர் சிகிச்சையை அரசே இலவசமாக அளிக்கும்.

சாலையோரங்களில் உள்ள தனியார் மருத்துவமனைகள், மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகள் என மொத்தம் 609 மருத்துவமனைகள் இதற்கென கண்டறியப்பட்டுள்ளன. முதல்வரின் மருத்துவக் காப்பீடு அட்டை இல்லாதோருக்கும் பிற மாநிலத்தவர், வேற்று நாட்டவருக்கும் இந்தத் திட்டத்தின் கீழ் மருத்துவம் செய்யப்படும். இந்தத் திட்டத்துக்கென ரூ.50 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. நபருக்கு ரூ.1 லட்சம் வரம்புக்குள் 81 தேர்ந்தெடுக்கப்பட்ட மருத்துவ முறைகள் செயல்படுத்தப்பட உள்ளன.

அவசர மருத்துவ சேவைகள் சட்டம்: விபத்து நேர்ந்தவுடன் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வதில் ஏற்படும் தாமதத்தைத் தவிர்க்கும் வகையில் தமிழ்நாடு அவசர மருத்துவ சேவைகள் சட்டம் இயற்றப்பட உள்ளது. அதன்படி, விரைவாக அணுகுதல், உயிர் மீட்பு சிகிச்சை, பாதிப்பை கட்டுப்படுத்தும் அறுவை சிகிச்சைகள், இயல்பு வாழ்க்கையை மீட்டெடுத்தல், மறுவாழ்வு சிகிச்சை ஆகிய கூறுகளை அந்தச் சட்டம் கொண்டிருக்கும்.

சாலைப் பாதுகாப்பு மக்கள் இயக்கமாக மாற பள்ளி, கல்லூரி மாணவர்கள், மக்கள் பிரதிநிதிகள் உள்ளிட்ட அனைவருக்கும் பயிற்சி மற்றும் விழிப்புணர்வு உருவாக்கப்படும். சீரான சாலைகள், நம்மைக் காக்கும் 48 மணி நேரம், அவசர மருத்துவ சேவைகள் சட்டம் ஆகியவற்றை உள்ளடக்கி 'இன்னுயிரை காப்போம்' என்ற திட்டம் வகுக்கப்படும். சாலை விபத்தில் சிக்கியோரை மீட்டு உயிரைக் காப்பதே இன்னுயிர் காப்போம் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும் என அரசின் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**2. அரசுப் பணியில் விளையாட்டு வீரர்களுக்கான 3% இட ஒதுக்கீட்டில் சிலம்பம் சேர்ப்பு**

தமிழக அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனப் பணியிடங்களில் சிறந்த விளையாட்டு வீரர்களுக்கான 3 சதவீத இட ஒதுக்கீட்டில் சிலம்பம் விளையாட்டைச் சேர்த்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

இதுகுறித்துத் தமிழக அரசு இன்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

"முதல்வரது ஆணையின்படி, தமிழக அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனப் பணியிடங்களில் சிறந்த விளையாட்டு வீரர்களுக்கான 3 சதவீத இட ஒதுக்கீட்டில் சிலம்பம் விளையாட்டைச் சேர்த்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளதாக சுற்றுச்சூழல் – காலநிலை மாற்றத்துறை மற்றும் இளைஞர் நலன் (ம) விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தெரிவித்துள்ளார்.

தமிழக அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் உள்ள பணியிடங்களில் சிறந்த விளையாட்டு வீரர்களுக்கான 3 சதவீத இட ஒதுக்கீடு தற்போது நடைமுறையில் உள்ளது. அதன்படி, சி.ஏ.பவானிதேவி (வாள் சண்டை), எ.தருண் (தடகளம்), லஷ்மண் ரோஹித் மரடாப்பா (படகோட்டுதல்), தனலட்சுமி, (தடகளம்), வி.சுபா (தடகளம்) மற்றும் டி.மாரியப்பன் ஆகியோருக்குத் தமிழக அரசின் பொதுத்துறை நிறுவனங்களில் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், மேற்படி திட்டத்தின் கீழ் ரோலர் ஸ்கேட்டிங், ஸ்குவாஷ், கபடி உள்ளிட்ட விளையாட்டுகளும் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன. அத்துடன், தமிழ்நாட்டின் பாரம்பரிய மற்றும் வரலாற்றுக்கு முந்தைய இந்திய தற்காப்புக் கலைகளில் ஒன்றான சிலம்பம் விளையாட்டு 3 விழுக்காடு விளையாட்டு இட ஒதுக்கீட்டின் கீழ் சேர்க்கப்பட்டு, அதற்கான அரசாணை (நிலை) எண்.46, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் (எஸ்1) துறை, நாள்.29.10.2021–ன் மூலம் ஆணையிட்டுள்ளது.

மேலும், முதல்வரது சீரிய முயற்சியின் கீழ், மத்திய அரசின் கேலோ இந்தியா திட்டத்தில் சிலம்பம் விளையாட்டு ஏற்கெனவே சேர்க்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இதன் மூலம் தமிழ்நாட்டில் உள்ள சிலம்ப விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பெருமளவில் பயன்பெறுவர். இதனால் தமிழினத்தின் பழங்காலத் தற்காப்புக் கலைகளில் சிறப்புமிக்க சிலம்பம் விளையாட்டிற்கு மாபெரும் அங்கீகாரம் கிடைத்துள்ளது".

இவ்வாறு தமிழக அரசு தெரிவித்துள்ளது.

---

**3. அமலாக்கத் துறை இயக்குநரின் பதவிக் காலம் ஓராண்டு நீட்டிப்பு**

அமலாக்கத் துறை இயக்குநர் சஞ்சய் குமார் மிஸ்ராவின் பதவிக் காலத்தை மேலும் ஓராண்டுக்கு மத்திய அரசு நீட்டித்துள்ளது.

சிபிஐ, அமலாக்கத் துறை இயக்குநர் ஆகியோரின் பதவிக் காலத்தை ஐந்து ஆண்டுகள் வரை நீட்டிக்க ஏதுவான அவசரச் சட்டத்தை மத்திய அரசு கடந்த ஞாயிற்றுக்கிழமை கொண்டு வந்தது.

1984– பிரிவைச் சேர்ந்த இந்திய வருவாய்ப் பணி அதிகாரியான சஞ்சய் குமார் மிஸ்ராவுக்கு ஏற்கெனவே நீட்டிக்கப்பட்ட அமலாக்கத் துறை இயக்குநருக்கான பதவிக் காலம் வியாழக்கிழமையுடன் முடிவடைகிறது. இந்நிலையில், மத்திய நிதி அமைச்சகம் புதன்கிழமை வெளியிட்ட அறிவிப்பில், 'சஞ்சய் குமார் மிஸ்ராவின் பதிவிக் காலத்தை 2022, நவம்பர் 11–ஆம் தேதி வரை நீட்டிக்க குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளித்துள்ளார்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

61 வயதாகும் சஞ்சய் குமாா் மிஸ்ரா, அமலாக்கத் துறை இயக்குநராக முதல் முறையாக 2018, நவம்பா் 19-ஆம் தேதி இரண்டு ஆண்டுகளுக்கு நியமிக்கப்பட்டாா். 2020-இல் அவரது முந்தைய இரண்டு ஆண்டுகள் பணி நியமன உத்தரவு மூன்று ஆண்டுகளாக நீட்டிக்கப்பட்டது.

இதற்கு எதிா்ப்பு தெரிவித்து தொடுக்கப்பட்ட வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றம், 'சஞ்சய் குமாா் மிஸ்ராவுக்கு மேலும் பணி நீட்டிப்பு செய்யக் கூடாது' என்று கூறியது.

இந்நிலையில், மத்திய அரசு கடந்த ஞாயிற்றுக்கிழமை கொண்டு வந்த இரண்டு அவசரச் சட்டங்களில், சிபிஐ மற்றும் அமலாக்கத் துறை இயக்குநா்களின் இரண்டு ஆண்டு பதவிக் காலம் நீட்டிப்புக்கு பிறகு மீண்டும் மூன்று ஆண்டுகள் வரை நீட்டிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு பணி நியமனக் குழுக்களின் ஒப்புதலைப் பெற வேண்டும் என்றும் அவசரச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மத்திய அரசு கொண்டு வந்த அவசரச் சட்டங்களுக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

---

**4. கையூட்டு அபாயம்: தரவரிசையில் 82-ஆவது இடத்தில் இந்தியா!**

நிறுவனங்கள் அரசு அதிகாரிகளுக்கு கையூட்டு அளிக்க வேண்டிய அபாயம் குறைவாக உள்ள நாடுகளின் பட்டியலில் இந்தியா 77-ஆவது இடத்திலிருந்து 82-ஆவது இடத்துக்குச் சென்றுள்ளது.

ஊழலுக்கு எதிரான தர நிர்ணய அமைப்பான டிரேஸ், இதுகுறித்து வெளியிட்டுள்ள இந்த ஆண்டுக்கான அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தொழில்முனைவோரும் நிறுவனங்களும் அரசு அதிகாரிகள் மற்றும் பிறருக்கு கையூட்டு அளிக்க வேண்டிய அபாயத்துக்கான தரவரிசைப் பட்டியலில், கடந்த ஆண்டு இந்தியா 77-ஆவது இடத்தில் இருந்தது.

இந்த நிலையில், நடப்பாண்டுக்கான இந்தப் பட்டியலில் 44 புள்ளிகளைப் பெற்று இந்தியா 82-ஆவது இடத்துக்குச் சென்றுள்ளது.

எனினும், அண்டை நாடுகளான பாகிஸ்தான், சீனா, நேபாளம், வங்கதேசம் ஆகிய நாடுகளைவிட இந்தியா அதிக புள்ளிகளைப் பெற்றுள்ளது.

மற்றோர் அண்டை நாடான பூடான் இந்தத் தரவரிசையில் 62-ஆவது இடத்தில் உள்ளது.

சர்வதேச அளவில் வடகொரியா, துருக்மெனிஸ்தான், வெனிசூலா, எரித்ரியா ஆகிய நாடுகளில் தொழிலுக்காக கையூட்டு செலுத்த வேண்டிய அபாயம் அதிக அளவில் உள்ளது.

ஆனால், டென்மார்க், நார்வே, ஃபின்லாந்து, ஸ்வீடன், நியூஸிலாந்து ஆகிய நாடுகளில் இந்த அபாயம் மிகக் குறைவாக உள்ளது என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நிறுவனங்களுக்கும் அரசுக்கும் இடையிலான தகவல் பரிமாற்றங்கள், ஊழல் தடுப்பு அமைப்புகள் செயலாற்றும் திறன், அரசு சேவைகளின் வெளிப்படைத்தன்மை, ஊடகம் உள்ளிட்ட சமூக அமைப்புகளின் செயலாற்றல் ஆகிய 4 அம்சங்களின் அடிப்படையில் இந்தப் பட்டியல் தயாரிக்கப்படுகிறது.

---

**5. சைபா் பாதுகாப்பு: பரஸ்பர ஒத்துழைப்பை வலுப்படுத்த இந்தியா-நியூஸிலாந்து முடிவு**

சைபா் பாதுகாப்பு, சைபா் குற்றம் மற்றும் திறன் கட்டமைப்பை மேம்படுத்துவதில் இந்தியாவும், நியூஸிலாந்தும் பரஸ்பர ஒத்துழைப்பை வலுப்படுத்தி, இணைந்து செயல்படுவது என முடிவு எடுத்திருப்பதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இணையவழியில் இரு நாடுகளுக்கு இடையிலான ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான முடிவு புதன்கிழமையுடன் நிறைவடைந்த 2 நாள்கள் காணொலி பேச்சுவாா்த்தையின்போது எடுக்கப்பட்டது.

இந்தியா- நியூஸிலாந்து இடையிலான 2-ஆம் கட்ட சைபா் பேச்சுவாா்த்தையின்போது, சைபா் வெளியில் நிலவும் ஒத்துழைப்பு குறித்தும், அதை மேற்கொண்டு நீட்டிப்பது குறித்தும் விரிவாக விவாதிக்கப்பட்டதாகவும், சைபா் பாதுகாப்பு, சைபா் குற்றம் மற்றும் திறன் கட்டமைப்பில் இரு நாடுகளும் பரஸ்பரம் நெருங்கி செயல்படுவது எனவும் முடிவு எடுக்கப்பட்டதாக மத்திய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

பேச்சுவாா்த்தைக்கு, இந்திய தரப்பில் வெளியுறவு அமைச்சக இணைச் செயலா் அடுல் மல்ஹரி தலைமை வகித்தாா். நியூஸிலாந்து பிரதிநிதிகள் குழுவுக்கு அந்நாட்டின் தேசிய பாதுகாப்புக் கொள்கை இயக்குநா் டேன் ஈட்டனும், பாதுகாப்பு விவகார தற்காலிக மேலாளா் ஜாா்ஜினியா சாா்கிஷனும் தலைமை வகித்தனா்.

இரு நாடுகளைச் சோ்ந்த பல்வேறு அமைச்சக, துறைகளின் மூத்த அதிகாரிகள் இந்தப் பேச்சுவாா்த்தையில் பங்கேற்றனா்.

---

**6. உருவாகிறது சென்னை ட்ரோன் காவல் பிரிவு**

சென்னையில் பொது மக்கள் அதிகமாகக் கூடும் கடற்கரை அல்லது சந்தைப் பகுதியில் மாநகரக் காவல் துறையின் ட்ரோன் காவல் பிரிவு அமைக்கப்பட உள்ளது. இதற்காக ரூ.3.60 கோடி நிதி ஒதுக்கி தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

சட்டப் பேரவையில் காவல் துறை மானியக் கோரிக்கை மீது நடந்த விவாதத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்ட அறிவிப்பில், சென்னை பெருநகர காவலில் கூட்டமான இடங்களையும், நீண்ட தூர சாலைகளையும் கண்காணிக்க ரூ.3.60 கோடி செலவில் நடமாடும் ட்ரோன் காவல் பிரிவு ஏற்படுத்தப்படும் என்று தெரிவித்தார். இந்த அறிவிப்பைச் செயல்படுத்தும் வகையிலான உத்தரவை மாநில அரசு பிறப்பித்துள்ளது.

ட்ரோன் காவல் பிரிவை உருவாக்குவதற்கான கடிதத்தை பெருநகர சென்னை காவல் ஆணையர் சார்பில் அரசுக்கு அனுப்பப்பட்டது. அதில், பொது மக்கள் அதிகமாகக் கூடும் இடங்களில் பணியாற்றக் கூடிய காவல் அதிகாரிகளுக்கு உதவிட ட்ரோன் காவல் பிரிவை ஏற்படுத்தலாம் எனத் தெரிவித்துள்ளார். மேலும், முக்கிய பிரமுகர்கள் செல்லும் சாலைகள், குற்றச் செயல்கள் அதிகம் நடைபெறும் இடங்கள், மக்களைக் காப்பாற்றக் கூடிய வகையில் கடற்கரைகள் போன்ற இடங்களில் நடமாடும் ட்ரோன் பிரிவை ஏற்படுத்தலாம் எனத் தெரிவித்துள்ளார். மேலும், இந்தத் திட்டத்துக்கென மூன்று வகையான ட்ரோன்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

முதல் கட்டமாக ட்ரோன் காவல் பிரிவானது, மெரீனா கடற்கரை அருகேயுள்ள காந்தி சிலை அல்லது எலியட்ஸ் கடற்கரை அல்லது பாண்டிபஜார் பகுதியில் அமைத்திட முடிவெடுக்கப்பட்டுள்ளது. நடமாடும் ட்ரோன் பிரிவானது தற்காலிக கன்டெய்னர் வடிவில் உருவாக்கப்படும். இது 40 அடி நீளமும், 10 அடி அகலமும் கொண்டிருக்கும். இது தரை மற்றும் முதல் தளம் என இரண்டு பிரிவாகப் பிரிக்கப்பட்டு இருக்கும். தரை தளம் கட்டுப்பாட்டு அறையாகப் பயன்படுத்தப்படும். மேலே உள்ள தளம் ட்ரோன் இயக்கத்துக்காக உபயோகப்படுத்தப்படும்.

மூன்று வகையான ட்ரோன்கள்: ஒவ்வொரு நடமாடும் ட்ரோன் காவல் பிரிவும் ஒன்பது ட்ரோன்களைக் கொண்டிருக்கும். எச்.டி. தரமுடைய கேமிரா, இரவிலும் படம் பிடிக்கும் வசதி, நேரலையாக ஒளிபரப்பு செய்வது, பொது அறிவிப்புக்கான ஸ்பீக்கர் வசதி, 2 கிலோமீட்டர் தூரம் பறக்கக் கூடிய திறன், 30 நிமிடங்கள் விடாமல் பறக்கும் திறன் என தனித்துவம் வாய்ந்த 6 ட்ரோன்கள் வாங்கப்பட உள்ளன.

நீண்ட தொலைவுக்குக் கண்காணிக்கும் திறனுடைய ட்ரோன்கள் 2 வாங்கப்பட உள்ளன. இது உயர் ரகமானது. 100 நிமிடங்கள் மற்றும் 30 கிலோமீட்டர் தூரத்துக்கு தொடர்ச்சியாகப் பறக்கும் திறன் படைத்தது. உயிர் காக்கும் ட்ரோன் என்ற பெயரிலான ட்ரோன் ஒன்று வாங்கப்பட உள்ளது. அதிக எடையுள்ள பொருள்களைத் தூக்கும் திறனை இந்த ட்ரோன் பெற்றுள்ளது. ஒரு கிலோமீட்டர் தூரத்துக்கு பறக்கும் திறனுடைய இந்த ட்ரோனின் மொத்த எடை 12 கிலோகிராம்.

இந்த ட்ரோன் பிரிவுகளை உருவாக்குவதற்குத் தேவையான நிதியான ரூ.3.60 கோடியை ஒதுக்கீடு செய்து உத்தரவிடப்படுகிறது.

---

**7. பெங்களூரு தொழில்நுட்ப மாநாட்டில் இன்று பிரதமர் நரேந்திர மோடி உரை:**

பெங்களூருவில் 24-வது தொழில்நுட்ப மாநாட்டை, குடியரசு துணைத் தலைவர் வெங்கையா நாயுடு நேற்று தொடங்கி வைத்தார். இதில் கர்நாடக ஆளுநர் தாவர்சந்த் கெலாட், முதல்வர் பசவராஜ் பொம்மை, தொழிலதிபர் கிரண் மஜூம்தர் ஷா உள்ளிட்டோர் பங்கேற்றனர். ஆஸ்திரேலிய பிரதமர் ஸ்காட் மாரிசன், இஸ்ரேல் பிரதமர் நஃப்தாலி பென்னட் உள்ளிட்டோர் இணைய வழியில் பங்கேற்று உரையாற்றினர்.

நாளை வரை 3 நாட்கள் நடக்கும் இந்த மாநாட்டில் 30–க்கும் மேற்பட்ட நாடுகளை சேர்ந்த 300–க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் பங்கேற்கின்றன. 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட புதிய தொழில் முனைவோர் பங்கேற்கும் அரங்க நிகழ்வுகளில், 300 தொழில்நுட்ப வல்லுநர்கள் உரையாற்றுகின்றனர்.

தொடக்க நிகழ்ச்சியில் வெங்கையா நாயுடு பேசுகையில், "நாட்டுக்கும் மக்களின் முன்னேற்றத்துக்கு பலன் தரும் பல புதிய திட்டங்கள் இந்த மாநாட்டின் மூலம் ஆரம்பமாக இருக்கிறது" என்றார்.

மாநாட்டின் 2–வது நாளான இன்று, சிட்னி மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடி ஆற்றும் உரை இணைய வழியாக ஒளிபரப்பாகிறது. இதே போல இந்திய – அமெரிக்க புத்தாக்க கூட்டணி மாநாட்டில் இடம்பெறும் மோடியின் உரையும் இந்த மாநாட்டிலும் ஒளிபரப்பாகிறது.

---

**8. ஹரியாணா மாநிலம் குருகிராமில் நாட்டிலேயே முதல் முறையாக மீன்வளத் தொழில் முனைவோர் பயிற்சி நிலையம்**

நாட்டில் முதல் முறையாக மீன்வளத் தொழில் முனைவோருக்கானப் பயிற்சி நிலையம், ஹரியாணா மாநிலம் குருகிராமில் தொடங்கப் பட்டுள்ளது.

'லினாக்–என்சிடிசி ஃபிஷ்ஷரிஸ் இன்குபேஷன் சென்டர் (எல்ஐஎப்ஐசி)' எனும் பெயரிலான இந்தப் பயிற்சி நிலையத்தை மத்திய மீன்வளம், கால்நடை மற்றும் பால்வளத்துறை அமைச்சர் புருஷோத்தம் ரூபாலா திறந்து வைத்தார். கடந்த ஆண்டு பிரதமர் மோடியால் தொடங்கி வைக்கப்பட்ட பிரதமர் மீன் வளத் திட்டத்தின் (பிஎம்எம்எஸ்ஒய்) கீழ் ரூ.3.23 கோடி செலவில் இது அமைக்கப்பட்டுள்ளது. மத்திய கூட்டுறவு அமைச்சகத்தின் கீழ் செயல்படும் தேசிய கூட்டுறவு வளர்ச்சி கழகம் (என்சிடிசி) இதனை நிர்வகிக்கிறது.

விழாவில் மத்திய அமைச்சர் ரூபாலா பேசும்போது, "மீன் வளர்ப்பு முதல் அதன் விற்பனை வரை பயிற்சி, ஆலோசனை, தொழில் முதலீட்டுக் கடன் உள்ளிட்ட அனைத்தும் எல்ஐஎப்ஐசி சார்பில் வழங்கப்படும்" என்றார்.

நிகழ்ச்சிக்கு மத்திய மீன்வளம், கால்நடை மற்றும் பால்வளத் துறை இணை அமைச்சர் எல்.முருகன் தலைமை வகித்தார். அவர் பேசும்போது, "மீன்வளத் துறை நம் நாட்டில் ஆண்டுக்கு 7 சதவீத வளர்ச்சி பெறுகிறது. நம் நாட்டின் மீன் உற்பத்தி தற்போது 130 லட்சம் டன்னாகவும் அதன் ஏற்றுமதி மதிப்பு ரூ.46,000 கோடியாகவும் உள்ளது. 2025–ம் ஆண்டில் மீன் உற்பத்தியை 22 மில்லியன் டன்களாகவும் ஏற்றுமதி மதிப்பை ரூ.1 லட்சம் கோடியாகவும் உயர்த்த பிரதமர் இலக்கு நிர்ணயித்துள்ளார்.

---

**9. உலகின் சுத்தமான ஆற்றில் ஒரு படகு பயணம்: ட்விட்டரில் வைரலாகும் புகைப்படம்**

ஆற்றில் படகு செல்வது போன்ற ஒரு புகைப்படத்தை மத்திய ஜல்சக்தி அமைச்சகம் ட்விட்டரில் பகிர்ந்துள்ளது. இது வேகமாக பகிரப்பட்டு வருகிறது. இதற்குக் காரணம் ஆற்றில் பயணிக்கும் படகு வானத்தில் மிதப்பது போல தோன்றுகிறது. அந்த அளவுக்கு அந்த ஆற்று நீர் அவ்வளவு சுத்தமாக உள்ளது. ஆற்றின் அடியில் உள்ள தாவரங்கள், கற்கள் ஆகியவை கண்ணாடி மூலம் பார்ப்பது போல தெள்ளத் தெளிவாக தெரிகின்றன.

இந்தப் படத்தை ட்விட்டரில் பகிர்ந்துள்ள மத்திய ஜல் சக்தி அமைச்சகம், "மேகாலயா மாநிலத்தில் ஓடும் உம்காட் ஆற்றில்தான் இந்தப் படகு செல்கிறது. தலைநகர் ஷில்லாங்கிலிருந்து 100 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள இந்த ஆறு, உலகிலேயே சுத்தமான ஆறுகளில் ஒன்றாக திகழ்கிறது. இதை சுத்தமாக வைத்திருக்கும் அம்மாநில மக்களுக்கு நன்றி. நாட்டில் உள்ள அனைத்துஆறுகளும் இதுபோல சுத்தமாகஇருக்க வேண்டும் என விரும்புகிறோம். மேகாலயா மக்களுக்கு தலை வணங்குகிறோம்" என பதிவிடப்பட்டுள்ளது.

இந்த புகைப்படத்தை 19 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் லைக் செய்துள்ளனர். 3 ஆயிரம் பேர் கருத்து தெரிவித்துள்ளனர்.

---

**10. தமிழக பெண் ஐபிஎஸ் அதிகாரி சிபிஐ இணை இயக்குநராக வித்யா ஜெயந்த் நியமனம்**

தமிழக பெண் ஐபிஎஸ் அதிகாரி வித்யா ஜெயந்த் குல்கர்னி உட்பட 3 ஐபிஎஸ் அதிகாரிகளை சிபிஐ இணை இயக்குநர்களாக நியமித்து ஒன்றிய பணியாளர் நல அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது. தமிழக காவல் துறையில் ஊழல் தடுப்பு மற்றும் லஞ்ச ஒழிப்புத் துறை இணை இயக்குநராக இருப்பவர் வித்யா ஜெயந்த் குல்கர்னி. இவரை சிபிஐ இணை இயக்குநராக நியமித்து ஒன்றிய பணியாளர் நலத்துறை அமைச்சகம் நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளது. 1998ம் ஆண்டு பிரிவு ஐபிஎஸ் அதிகாரியான வித்யா ஜெயந்த் 5 ஆண்டுகளுக்கு சிபிஐ இணை இயக்குநராக பணியாற்றுவார். அதன் பின் அவர் மீண்டும் தமிழக காவல் துறைக்கு திரும்புவார். ஒடிசா ஐபிஎஸ் அதிகாரி ஞான்ஷியாம், மகாராஷ்டிரா நாவல் பஜாஜ் ஆகியோரும் இணை இயக்குநர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

---

**11. யுனெஸ்கோ செயற்குழுவில் இந்தியாவுக்கு மீண்டும் இடம்**

ஐ.நா. கல்வி, அறிவியல், கலாசார அமைப்பு யுனெஸ்கோ ஆகும். இந்த அமைப்பின் செயற்குழுவில் இந்தியா மீண்டும் இணைந்து செயல்படுவதற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான ஓட்டெடுப்பில இந்தியாவுக்கு 164 ஓட்டுகள் கிடைத்தன. 2021–2025 ஆண்டுகள், பதவிக்காலம் ஆகும்.

---

**12. உலக பெண்கள் டென்னிஸ்: ஸ்பெயின் வீராங்கனை முகுருஜா 'சாம்பியன்'**

டாப்–8 வீராங்கனைகள் பங்கேற்ற டபிள்யூ.டி.ஏ. இறுதி சுற்று எனப்படும் உலக பெண்கள் டென்னிஸ் சாம்பியன்ஷிப் போட்டி மெக்சிகோவில் உள்ள குவாடலஜாரா நகரில் நடந்தது. இதில் நேற்று முன்தினம் இரவு நடந்த இறுதிஆட்டத்தில் 2 கிராண்ட்ஸ்லாம் வென்றவரும், முன்னாள் நம்பர் ஒன் வீராங்கனையுயான ஸ்பெயினின் கார்பின் முகுருஜா, 8–ம் நிலை வீராங்கனையான அனெட் கோன்டாவெய்ட்டை (எஸ்தோனியா) எதிர்கொண்டார்.

1 மணி 38 நிமிடம் நடந்த இந்த ஆட்டத்தில் முகுருஜா 6–3, 7–5 என்ற நேர்செட்டில் கோன்டாவெய்ட்டை சாய்த்து சாம்பியன் பட்டத்தை வசப்படுத்தினார். இதன் மூலம் 49 ஆண்டு கால பெண்கள் டென்னிஸ் சாம்பியன்ஷிப்பில் வரலாற்றில் மகுடம் சூடிய முதல் ஸ்பெயின் வீராங்கனை என்ற பெருமையை பெற்றார். ஒட்டுமொத்தத்தில் அவரது 10–வது சர்வதேச பட்டம் இதுவாகும்.

---

**13. லக்னோ: போலீஸ் டி.ஜி.பி.க்கள் மாநாட்டில் மோடி பங்கேற்பு**

மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரேதசங்களின் போலீஸ் டி.ஜி.பி.க்கள், மத்திய ஆயுதப்படைகளின் இயக்குனர்கள் மற்றும் உளவுத்துறை அதிகாரிகள் உள்ளிட்ட உயர் போலீஸ் அதிகாரிகளின் 3 நாள் மாநாடு உத்தரபிரதேச தலைநகர் லக்னோவில் நேற்று முன்தினம் தொடங்கியது. இதில் போலீஸ் டி.ஜி.பி.க்கள் மற்றும் மத்திய ஆயுதப்படைகளின் இயக்குனர்கள் நேரடியாகவும், உளவுத்துறை அதிகாரிகள் மற்றும் மூத்த போலீஸ் அதிகாரிகள் என 350–க்கும் மேற்பட்ட அதிகாரிகள் காணொலி முறையிலும் பங்கேற்றனர்.

இந்த மாநாட்டின் 2–வது நாளான நேற்று உள்நாட்டு பாதுகாப்பு குறித்து விவாதிக்கப்பட்டது. குறிப்பாக மாவோயிஸ்டு வன்முறை, பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள், சைபர் குற்றங்கள் உள்ளிட்ட பிரச்சினைகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

டி.ஜி.பி.க்கள் மாநாட்டின் நேற்றைய அமர்வில் பிரதமர் மோடி பங்கேற்றார். இதில் வெறும் அடையாள பங்கேற்பை வெளிப்படுத்தாமல், மொத்த அமர்விலும் பங்கேற்று நாட்டின் உள்நாட்டு பாதுகாப்பில் தனக்கு இருக்கும் அக்கறையை அவர் வெளிப்படுத்தினார்.

கடந்த 2014–ம் ஆண்டு முதலே போலீஸ் டி.ஜி.பி.க்களின் மாநாட்டில் முழுமையாக பங்கேற்பதை பிரதமர் வழக்கமாக கொண்டுள்ளார். வெறும் பங்கேற்புடன் நில்லாமல், போலீஸ் அதிகாரிகள் தன்னுடன் நேரடியாக கலந்துரையாடவும் வாய்ப்பு வழங்கி வருகிறார்.

வழக்கமாக டெல்லியில் நடைபெறும் இந்த மாநாடு, மோடியின் அறிவுறுத்தலின்பேரில் கடந்த 2014–ம் ஆண்டுக்குப்பிறகு டெல்லிக்கு வெளியே நடத்தப்பட்டு வருகிறது. கொரோனா பரவல் காரணமாக கடந்த ஆண்டு மட்டுமே டெல்லியில் இருந்து காணொலி முறையில் நடத்தப்பட்டது. இதைப்போல 2014–ம் ஆண்டு முதல் மாநாட்டின் வடிவம், அமர்வுகளுக்கான தலைப்புகள் உள்ளிட்டவற்றிலும் அதிகமான மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

---

**14. ஆசிய வில்வித்தையில் தங்கம் வென்றார் ஜோதி சுரேகா**

ஆசிய வில்வித்தை சாம்பியன்ஷிப்பில் இந்தியாவின் ஜோதி சுரேகா தங்கப் பதக்கம் வென்றார்.

வங்கதேசத்தின் டாக்கா நகரில்ஆசிய வில்வித்தை சாம்பியன்ஷிப் நடைபெற்று வருகிறது. இதில் மகளிருக்கான காம்பவுண்ட் பிரிவு இறுதி சுற்றில் இந்தியாவின் ஜோதிசுரேகா, முன்னாள் உலக சாம்பியனான கொரியாவின் ஓ யூஹ்யூனை எதிர்த்து விளையாடினார். இதில் ஜோதி சுரேகா 146–145 என்ற கணக்கில் வெற்றி பெற்று தங்கப் பதக்கம் வென்றார்.

முன்னதாக நடைபெற்ற காம்பவுண்ட் கலப்பு அணிகள் பிரிவில் ரிஷப் யாதவுடன் இணைந்து வெள்ளிப் பதக்கம் கைப்பற்றினார் ஜோதி சுரேகா. இறுதி சுற்றில் இந்திய ஜோடி 154–155 என்ற கணக்கில் கொரியாவின் கிம் யுன்ஹீ, சோய் யோங்கி ஜோடியிடம் தோல்வி கண்டது.

15. நவம்பர்.19 – உலக கழிவறை நாள்

**1. 'வறட்சிக்குத் தகவமைப்பதற்கான பிராந்திய நடவடிக்கைத் திட்டம்' என்பதுடன் தொடர்புடைய நிறுவனம் எது?**

அ) ஜி–20

ஆ) பிரிக்ஸ்

**இ) ஆசியான் ☑**

ஈ) பிம்ஸ்டெக்

✓ ஆசியா மற்றும் பசிபிக் பகுதிக்கான ஐநா பொருளாதாரம் மற்றும் சமூக ஆணையம் (ESCAP) வறட்சியை தழுவுவதற்கான ஆசியான் பிராந்திய நடவடிக்கை திட்டத்தை (ARPA–AD) அறிமுகப்படுத்தியது. செயல்கள் 26 துணைச் செயல்களாகவும், 2021–2025'ஐ உள்ளடக்கிய செயல்படு –த்தல் திட்டமாகவும் பிரிக்கப்பட்டுள்ளன. வறட்சிக்கு ஏற்ப தொழில்நுட்ப பணிக்குழுவை உருவாக்குவது முக்கிய பரிந்துரைகளுள் ஒன்றாகும்.

✓ வறட்சி மேலாண்மை சுழற்சி மற்றும் பிராந்திய மற்றும் தேசிய அளவில் ஒருங்கிணைப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய ஒன்பது குழுக்களின் செயல்திட்டம் இத்திட்டத்தில் உள்ளது.

---

**2.** 2021 உலக நீரழிவு நாளுக்கானக் கருப்பொருள் என்ன?

**அ) Access to Diabetes Care ☑**

ஆ) Leaving None behind

இ) Importance of Insulin sensitisers

ஈ) Respect to Sir Frederick Banting

✓ கடந்த 1922'இல் சார்லஸ் ஹெர்பர்ட் பெஸ்டுடன் இணைந்து இன்சுலின் ஹார்மோனைக் கண்டுபிடித்த சர் ஃபிரடெரிக் பான்டிங்கின் பிறந்த நாளைக் குறிக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர்.14 அன்று உலக நீரழிவு நாள் கொண்டாடப்படுகிறது.

✓ நிபுணர்களின் கூற்றுப்படி, உலகளவில் 463 மில்லியன் மக்கள் நீரழிவு நோயால் பாதிக்கப்பட்டு உள்ளனர்; 90 சதவீதத்தினர் டைப்–2 நீரிழிவு நோயால் (இன்சுலின்கொண்டு சிகிச்சையளிக்கப்பட வேண்டும்) பாதிக் –கப்பட்டுள்ளனர். 2021–23 உலக நீரழிவு நாளுக்கானக் கருப்பொருள் "Access to Diabetes Care – If Not Now, When?" என்பதாகும்.

---

**3.சாவ் பாலோ (பிரேசிலியன்) கிராண்ட் பிரிக்ஸ் போட்டியில் வென்ற பந்தய ஓட்டுநர் யார்?**

**அ) லூயிஸ் ஹாமில்டன் ☑**



ஆ) மேக்ஸ் வெர்ஸ்டாப்பன்

இ) சார்லஸ் லெக்லெர்க்

ஈ) வால்டேரி போட்டாஸ்

✓ ஏழு முறை உலக சாம்பியனான லூயிஸ் ஹாமில்டன், பிரேசிலிய சாவ் பாலோ கிராண்ட் பிரிக்ஸ் போட்டியில் மேக்ஸ் வெர்ஸ்டாப்பனை வீழ்த்தி அசத்தலான வெற்றியைப் பெற்றார். ஹாமில்டன் பெனால்டி காரணமாக 10ஆவது இடத்திலிருந்து தொடங்கினாலும், அவர் பந்தயத்தில் முதலிடம் பிடித்தார். இப்போட்டியில் வால்டேரி போட்டாஸ் மூன்றாவது இடத்தைப் பிடித்தார்.

---

**4. 'பகவான் பிர்சா முண்டா ஸ்மிருதி உத்யன் மற்றும் சுதந்திரப் போராளிகள் அருங்காட்சியகம்' சமீபத்தில் எந்த இந்திய மாநிலத்தில் திறக்கப்பட்டது?**

அ) ஒடிசா



**ஆ) ஜார்கண்ட் ☑**

இ) மேற்கு வங்கம்

ஈ) சத்தீஸ்கர்

✓ இராஞ்சியில் உள்ள பகவான் பிர்சா முண்டா ஸ்மிருதி உத்யன் மற்றும் சுதந்திரப் போராளிகள் அருங்காட்சியகத்தை பிரதமர் நரேந்திர மோடி காணொளிக் காட்சிமூலம் திறந்து வைத்தார்., 2000 நவம்பர்.15 அன்று 19ஆம் நூற்றாண்டின் விடுதலைப் போராட்ட வீரரும் பழங்குடியினத் தலைவருமான பிர்சா முண்டாவின் பிறந்தநாளில் ஜார்கண்ட் மாநிலம் பீகாரிலிருந்து பிரிக்கப்பட்டது. அம்மாநிலத்தின் நிறுவன நாளைக் குறிக்கும் வகையில், மாநிலத்தின் முதலமைச்சர் ஹேமந்த் சோரன், விளிம்புநிலை மக்களுக்கான உலகளாவிய ஓய்வூதியத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

---

**5. சமீபத்தில் காலமான பாபாசாகேப் புரந்தரேவுடன் தொடர்புடைய தொழில் எது?**

அ) விளையாட்டு வீரர்



**ஆ) வரலாற்றாசிரியர் ☑**

இ) தொழிலதிபர்

ஈ) அரசியல்வாதி

✓ புகழ்பெற்ற வரலாற்றாசிரியரும் எழுத்தாளருமான பாபாசாகேப் புரந்தரே முதுமை மற்றும் நிமோனியிஸ் தொடர்பான நோய்களால் தனது 99ஆம் வயதில் காலமானார். புகழ்பெற்ற எழுத்தாளரும் நாடக ஆளுமையுமான புரந்தரே, சத்ரபதி சிவாஜி மகாராஜின் வரலாறு குறித்த தனது பணிக்காக அறியப்பட்டவர். அவர் சிவாஜி, அவரது நிர்வாக பாணி, அத்துடன் அந்தக் காலகட்டத்தின் கோட்டைகள் குறித்தும் பல நூல்களை எழுதியுள்ளார்.

---

**6.** 2021 T20 உலகக்கோப்பையை வென்ற நாடு எது?

அ) நியூசிலாந்து



**ஆ) ஆஸ்திரேலியா ☑**

இ) இங்கிலாந்து

ஈ) தென்னாப்பிரிக்கா

✓ 14 ஆண்டு காத்திருப்புக்குப் பிறகு, ஆஸ்திரேலியா தனது முதல் T20 உலகக்கோப்பை கோப்பையை அண்மையில் வென்றது. நியூசிலாந்து நிர்ணயித்த 173 இரன்கள் இலக்கை கேன் வில்லியம்சனின் 85 இரன்களால் ஆஸ்திரேலியா துரத்தியது.

✓ ஆஸ்திரேலியா, 2010'இல் இறுதிப்போட்டியை எட்டியது; ஆனால் அதன் பிறகு அந்த அணி இறுதிப்போட்டியை எட்டவில்லை. ஆஸ்திரேலியா 7 பந்துகள் மீதமிருந்த நிலையில் 173 ரன்களை எட்டியதால், அதிகபட்ச வெற்றிகரமான 'ரன் சேஸ்' என்ற புதிய சாதனையையும் படைத்தது.

---

**7.** 2016'க்குப் பிறகு முதல் பழங்குடி நாடுகளின் உச்சிமாநாட்டை நடத்தவுள்ள நாடு எது?

அ) இந்தியா



**ஆ) அமெரிக்கா ☑**

இ) ஜப்பான்

ஈ) ரஷ்யா

✓ கடந்த 2016ஆம் ஆண்டுக்குப் பிறகு முதல் பழங்குடி நாடுகளின் உச்சி மாநாட்டை அமெரிக்கா நடத்தவுள்ளது. இவ்வுச்சிமாநாட்டின்போது பூர்வீக அமெரிக்கர்களுக்கான பொது பாதுகாப்பு மற்றும் நீதியை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அதிபர் ஜோபிடன் அறிவிப்பார்.

✓ அமெரிக்காவில் உள்ள 570'க்கும் மேற்பட்ட பழங்குடியினத்தைச்சேர்ந்த தலைவர்கள் இந்த இரண்டு நாள் நிகழ்ச்சியில் பங்கேற்கவுள்ளனர். பூர்வீக அமெரிக்கர்கள் மற்றும் பூர்வீக அலாஸ்கா மக்களை பெரிதும் பாதித்துள்ள COVID–19 தொற்றுநோய் காரணமாக இந்த உச்சிமாநாடு மெய்நிகராக நடத்தப்படுகிறது.

---

**8. அண்மைச்செய்திகளில் இடம்பெற்ற செக்மேட் என்ற புதிய ரகசிய போர் விமானம் உருவாக்கப்பட்டு வருகிற நாடு எது?**

அ) அமெரிக்கா



**ஆ) ரஷ்யா ☑**

இ) சீனா

ஈ) இஸ்ரேல்

✓ இரட்டை எஞ்சின்கொண்ட Su–57 ஃபெலோனுக்குப்பிறகு ரஷ்யா தனது இரண்டாவது இரகசிய போர் விமானத்தை உருவாக்கி வருகிறது. 'Su–75 Checkmate', என்ற பெயரிலான இப்புதிய இரகசிய விமானம் இலகு இரக உத்திசார் விமானம் என்றும் அழைக்கப்படுகிறது.

✓ இவ்விமானத்தை யுனைடெட் ஏர்கிராப்ட் நிறுவனம் உருவாக்கியுள்ளது. இது, மாநில பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்ப நிறுவனமான ரோஸ்டெக் நிறுவனத்தின் ஒருபகுதியாகும். செக்மேட் என்பது ஐந்தாம் தலைமுறை

இலகுரக போர்விமானமாகும். அது 2023ஆம் ஆண்டில் தனது முதல் பணியைத் தொடங்கும்.

---

**9. 2023ஆம் ஆண்டிற்குள் படிக்கவும், பணியாற்றவும் மற்றும் துளிர் நிறுவனங்களை நிறுவவும் உலகளவில் 30000 திறமையாளர்க-ளை ஈர்க்கும் திட்டத்தைத் தொடங்கியுள்ள நாடு எது?**

அ) ஜெர்மனி

**ஆ) பின்லாந்து ☑**

இ) ஆஸ்திரேலியா

ஈ) நார்வே

✓ பின்லாந்து அண்மையில் 'ஃபியூச்சர் இஸ் மேட் இன் பின்லாந்து' என்ற திட்டத்தைத் தொடங்கியுள்ளது. இதன்கீழ் வரும் 2023ஆம் ஆண்டுக்குள் படிக்கவும், பணி செய்யவும் மற்றும் நாட்டில் துளிர் நிறுவனங்களை நிறுவவும் இந்தியா உட்பட உலகளவில் 30,000 திறமையாளர்களை ஈர்க்க அந்நாடு திட்டமிட்டுள்ளது.

✓ நான்காவது ஆண்டாக உலகின் மகிழ்ச்சியான நாடாக பின்லாந்து இடம் பிடித்துள்ளது. 2019-2023 பின்லாந்து அரசாங்கத் திட்டத்தின் அடிப்ப-டையில், ஆண்டுதோறும் 10,000 திறமையாளர்களை பின்லாந்துக்கு ஈர்ப்பதை அந்நாடு இலக்காகக் கொண்டுள்ளது.

---

**10. 'ஸ்வவலம்பன் சவால் நிதியத்தைத்' தொடங்கியுள்ள நிறுவனம் எது?**

அ) நபார்டு

**ஆ) SIDBI ☑**

இ) செபி

ஈ) ஆர்பிஐ

✓ இந்திய சிறு தொழில்கள் மேம்பாட்டு வங்கியானது (SIDBI) ஸ்வவலம்பன் சவால் நிதியத்தின் இரண்டாவது சாளரத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த நிதியத்தின் கருப்பொருள் 'பசுமை பாரதம்' ஆகும். பசுமை மற்றும் தூய்மையான காலநிலை மாற்றத்தை பூர்த்தி செய்யும் புதுமையான திட்டங்களில் இந்த நிதியத்தின் கவனம் உள்ளது.

✓ நிலையான வாழ்வாதாரம், நிதி உள்ளடக்கம் மற்றும் நிதி சேவைகளுக்-கான அணுகல் மற்றும் தொழில்முனைவோர் கலாசாரத்தை மேம்படுத்தல் ஆகியன இதன் பிற கருப்பொருள்களாம். ஒரு சவால் நிதி என்பது நிறுவனங்களுக்கிடையிலான போட்டியைப் பயன்படுத்தி குறிப்பிட்ட நோக்கங்களுக்காக நிதிகளை ஒதுக்குவதற்கான ஒரு நிதியியல் பொறி முறையாகும். ஸ்வவலம்பன் சவால் நிதியத்தின் முதல் சாளரம் இந்த ஆண்டு (2021) ஆகஸ்ட் மாதம் தொடங்கப்பட்டது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. ஆதிச்சநல்லூரில் திறக்கப்பட்ட - முதுமக்கள் தாழிக்குள் மனித மண்டை ஓடு, எலும்பு:**

தூத்துக்குடி மாவட்டம் ஆதிச்சநல்லூரில் கனிமொழி முன்னிலையில் திறக்கப்பட்ட முதுமக்கள் தாழியில், மனிதனின் மண்டை ஓடு மற்றும் எலும்புகள் இருந்தன.

ஆதிச்சநல்லூரில் மத்திய தொல்லியல் துறை சார்பில் 17 ஆண்டுகளுக்குப் பின்னர் கடந்த அக்.10-ம் தேதி மீண்டும் அகழாய்வுப் பணிகள் தொடங்கின. இந்த அகழாய்வில் ஏற்கெனவே 12 முதுமக்கள் தாழிகள் கண்டெடுக்கப்பட்டன. சுமார் 2,500 ஆண்டுகள் பழமையான முதுமக்கள் தாழி ஒன்று கண்டெடுக்கப்பட்டதைத் தொடர்ந்து, இந்த தாழியைத் திறந்து, உள்ளிருக்கும் பொருட்களை ஆய்வு செய்ய தொல்லியல் துறையினர் ஏற்பாடு செய்தனர்.

நேற்று அந்தத் தாழி திறக்கப்பட்டது. அதற்குள் மனிதமண்டை ஓடு, கால் எலும்பு, சிறுபானைகள் இருந்தன. தாழிக்குள் இருந்த பானைகளில் தானியங்களும், ஆயுதங்களும் இருப்பதற்கான வாய்ப்புகள் இருப்பதாக மத்திய தொல்லியல் துறை திருச்சி மண்டல இயக்குநர் தெரிவித்தார்.

---

**2. மோசமான காவல் துறையில் முன்னிலை வகிக்கும் பிஹார், உ.பி. மாநிலங்கள்; தென் மாநில போலீஸார் சிறப்பான செயல்பாடு: இந்தியன் போலீஸ் பவுண்டேஷன் ஆய்வில் தகவல்**

மோசமான காவல்துறையில் பிஹார், உத்தரபிரதேச மாநிலங்கள் முன்னிலை வகிப்பதாகவும், தென் மாநிலங்கள் சிறப்பாக செயல்படுவதாகவும் ஆய்வில் தெரியவந்துள்ளது.

நாடு முழுவதும் காவல் துறை யினரின் செயல்பாடுகள் எவ்வாறு உள்ளது என்பதை இந்தியன் போலீஸ் பவுண்டேஷன் (ஐபிஎஃப்) அமைப்பு ஆய்வு செய்துள்ளது. இதற்காக நாடு முழுவதும் உள்ள மாநிலங்களின் காவல் துறை குறித்து ஒரு ஆய்வை அந்த அமைப்பு நடத்தியுள்ளது. பொதுமக்களின் பிரச்சினைகளை அணுகுவது, குற்றங் களை கையாளும் முறை உட்பட பல அம்சங்கள் ஆய்வில் இடம் பெறுகின்றன.

அந்த வகையில் பிஹார், உத்தர பிரதேச மாநில காவல்துறை யின் செயல்பாடுகள் மோசமாக உள்ளதாகத் தெரியவந்துள்ளது.

நாடு முழுவதும் உள்ள ஒட்டுமொத்த காவல்துறையின் செயல்பாடு 69 சதவீதம் திருப்தி கரமாக உள்ளதாக அந்த ஆய்வுகள் முடிவுகள் தெரிவிக்கின்றன.

மோசமான காவல்துறை செயல் பாடுகள் உள்ள மாநிலங்களாக பிஹார், உத்தரபிரதேசம், சத்தீஸ் கர், ஜார்க்கண்ட், பஞ்சாப் ஆகியமாநிலங்கள் உள்ளன. இந்த மாநிலங்கள் மோசமான காவல்துறை பட்டியலில் கடைசி இடங்களில் உள்ளன.

அதே நேரத்தில் சிறப்பாக செயல்படும் மாநிலங்களில் தென்இந்தியாவைச் சேர்ந்த 3 மாநிலங்கள் இடம்பெற்றுள்ளன. இந்த வரிசையில் முதலிடத்தில் ஆந்திராவும், 2-ம் இடத்தில் தெலங்கானாவும், 3-ம் இடத்தில் அசாமும், 4-ம் இடத்தில் கேரளாவும், 5-ம் இடத்தில் ஒடிஷாவும் உள்ளன.

இதுகுறித்து இந்தியன் போலீஸ் பவுண்டேஷன் அமைப்பின் சேர்மனும், முன்னாள் உ.பி. போலீஸ் டிஜிபியுமான பிரகாஷ் சிங் கூறும்போது, "பிரதமரின் நவீன போலீஸ் முன்னெடுப்பு திட்டத்தின் அடிப்படையில் பல்வேறு மாநில போலீஸாரின் செயல்பாட்டை ஆய்வு செய்தோம். நாட்டில் ஒட்டுமொத்த போலீஸாரின் செயல்பாடு 69 சதவீதம் திருப்தி அளிப்பதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பட்டியலில் கடைசியில்உள்ள மாநிலங்கள் சிறப்பாக செயல்படுவதற்கான முயற்சிகளை நாங்கள் முன்னெடுத்து வருகிறோம். அதற்குத் தேவையான பயிற்சிகள் அந்த மாநில போலீஸாருக்கு வழங்கப்படும்" என்றார்.

ஐபிஎஃப் தலைவரும், ஓய்வு பெற்ற ஐபிஎஸ் அதிகாரியுமான என்.ராமச்சந்திரன் கூறும்போது, "நாடு முழுவதும் 1.61 லட்சம் பேரிடம் இந்த ஆய்வை நடத்தினோம். ஆன்-லைன் மூலமாகவும், நேரடியாகச் சென்றும் கடந்த 5 மாதங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன" என்றார். -பிடிஐ

நாட்டில் ஒட்டுமொத்த போலீஸாரின் செயல்பாடு 69 சதவீதம் திருப்தி அளிப்பதாக மக்கள் தெரிவித்துள்ளனர்,

---

**3. ரேடாரை செயலிழக்க செய்யும் நவீன கருவி கடற்படையிடம் பிரதமர் மோடி ஒப்படைப்பு:**

எதிரி நாட்டு ரேடார்களை துல்லியமாக கண்காணித்து அவற்றை செயலிழக்க செய்யும் வகையிலான 'சக்தி' என்ற பெயரிலான எலக்ட்ரானிக் போர்முறைக் கருவியை (எலக்ட்ரானிக் வார்ஃபேர் சிஸ்டம்) டிஆர்டிஓ நிறுவனம் அண்மையில் வடிவமைத்தது. இந்தக் கருவிகளை பாரத் எலக்ட்ரானிக்ஸ் நிறுவனம் தயாரித்து வருகிறது. ரூ.1,805 கோடி செலவில் 12 கருவிகள் தயாரிக்கப்பட்டு வந்த சூழலில், சமீபத்தில் 2 கருவிகளின் வடிவமைப்பு முழுவதுமாக நிறைவடைந்துள்ளது.

இதையடுத்து, இந்தக் கருவிகளை இந்தியக் கடற்படையிடம் பிரதமர் நரேந்திர மோடி நேற்று ஒப்படைத்தார். உத்தரபிரதேச மாநிலம் ஜான்சியில் உள்ள கடற்படை தளத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், இந்தக் கருவியை பிரதமர் மோடி நாட்டுக்கு அர்ப்பணித்தார்.

---

**4. வேளாண் சட்டங்கள் போராட்டம்: ஒரு கண்ணோட்டம்**

மத்திய அரசு கொண்டுவந்துள்ள 3 புதிய வேளாண் சட்டங்களை வாபஸ் பெற முடிவு செய்துள்ள தாகவும், இது தொடர்பாக வரும்நாடாளுமன்ற கூட்டத்தொடரில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படும் என்றும் பிரதமர் மோடி நேற்று அறிவித்துள்ளார்.

வேளாண் சட்டங்கள் போராட்டம் தொடர்பான கண்ணோட்டம் வருமாறு:

ஜூன் 5, 2020: 3 புதிய வேளாண் சட்டங்களைக் கொண்டு வருவ தற்கான அவசரச் சட்டங்களை மத்திய அரசு பிறப்பித்தது.

ஜூன் 6, 2020: அவசரச் சட்டங்களைஎதிர்த்து பஞ்சாபில் விவசாயிகள் ஆர்ப்பாட்டம் தொடக்கம்.

செப். 14, 2020: நாடாளுமன்றத்தில் 3 புதிய வேளாண் அவசரச் சட்டங்கள் தாக்கல்.

செப். 17, 2020: அவசரச் சட்டங்கள் மக்களவையில் நிறைவேற்றம்.

செப். 20, 2020: குரல் வாக்கெடுப்பு மூலம் மாநிலங்களவையில் அவசரச் சட்டங்கள் நிறை வேற்றம்.

செப். 23, 2020: சட்டங்களுக்கு எதிராக ஒன்றாக இணைந்து போராட 31 விவசாய அமைப்பு கள் முடிவு.

செப். 27, 2020: 3 விவசாய மசோதாக்களுக்கு குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் ஒப்புதல்.

அக். 8, 2020: விவசாயிகளுடன் பேச்சு நடத்த 8 உறுப்பினர்கள் கொண்ட குழுவை மத்திய அரசு அறிவித்தது.

நவ. 23, 2020: டெல்லி சலோ போராட்டத்தை அறிவித்தது விவசாயிகள் சங்கம்.

டிச. 3, 2020: விவசாய அமைப்புகள், மத்திய அரசுடன் முதல் சுற்று பேச்சுவார்த்தை.

டிச. 8, 2020: நாடு தழுவிய பந்த் நடத்த விவசாயிகள் அமைப்பு அழைப்பு.

டிச. 9, 2020: மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவுடன் விவசாயத் தலைவர்கள் சந்திப்பு.

டிச. 16, 2020: பிரச்சினையைத் தீர்க்க குழு அமைக்கலாம் என உச்ச நீதிமன்றம் யோசனை.

டிச. 21, 2020: 24 மணி நேர தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தை விவசாயிகள் அறிவித்தனர்.

ஜன. 7, 2021: குடியரசு தினத்தில் டெல்லியில் டிராக்டர் பேரணி நடத்தப் போவதாக விவசாயிகள் அறிவிப்பு.

ஜன. 11, 2021: விவசாயிகள் போராட்டத்தைத் தவறாக கையாள்வதாக மத்திய அரசுக்கு உச்ச நீதிமன்றம் கண்டனம்.

ஜன. 12, 2021: வேளாண் சட்டங்களுக்கு காலவரையற்ற தடையை உச்ச நீதிமன்றம் அறிவித்தது. மேலும் 4 பேர் கொண்ட உச்ச நீதிமன்றக் குழுவை அமைப்பதாகவும் அறிவித்தது.

ஜன. 22, 2021: தோல்வியில் முடிந்தது விவசாயிகள், மத்திய அரசு இடையிலான 11-வது சுற்று பேச்சுவார்த்தை.

ஜன. 26, 2021: டெல்லியில் நுழைந்த விவசாயிகள் போலீஸாருடன் மோதல், செங்கோட்டையில் கொடியேற்றி ஆர்ப்பாட்டம்.

ஜன. 28, 2021: காஸிப்பூர் போராட்டத்தின்போது பாரதீயகிஸான் யூனியன் தலைவர் ராக்கேஷ் டிகைத் உணர்ச்சி கரமான வகையில் பேச்சு.

ஜன. 29, 2021: முஸாபர்நகரில் நடைபெற்ற மகாபஞ்சாயத்தில் ஆயிரக்கணக்கான விவசாயி கள் பங்கேற்பு.

பிப். 3, 2021: விவசாயிகள் போராட்டத்துக்கு பருவநிலை மாறுபாட்டு ஆர்வலர் கிரேட்டா தன்பர்க் ஆதரவு, டூல் கிட்டையும் வெளியிட்டார்.

பிப். 13, 2021: டூல்கிட் விவகாரத்தில் பெங்களூருவைச் சேர்ந்த திஷா ரவியை டெல்லி போலீஸார் கைது செய்தனர்.

பிப். 18, 2021: நாடு தழுவிய ரயில் மறியல் போராட்டத்தை அறிவித்தது சம்யுக்தா கிஸான் மோர்ச்சா (எஸ்கேஎம்).

பிப். 23, 2021: திஷா ரவிக்கு டெல்லி செஷன்ஸ் நீதிமன்றம் ஜாமீன்.

மார்ச் 5, 2021: நிபந்தனையற்ற முறையில் சட்டங்களை மத்திய அரசு வாபஸ் பெறவேண்டும் என பஞ்சாப் சட்டப் பேரவையில் தீர்மானம்.

மார்ச் 6, 2021: டெல்லி எல்லையில் விவசாயிகள் போராட்டம் 100-வது நாளை எட்டியது.

மே 27, 2021: போராட்டம் தொடங்கி 6 மாதங்கள் நிறை வடைந்ததையொட்டி கருப்பு தினத்தை அனுஷ்டித்த விவசாயிகள்.

ஆக. 7, 2021: டெல்லி ஜந்தர் மந்தரில் நடைபெறும் கிஸான்சன்சத் (விவசாயிகள் நாடாளு மன்றம்) நிகழ்ச்சியில் பங்கேற்க 14 எதிர்க்கட்சித் தலைவர்கள் முடிவு.

நவ. 19, 2021: விவசாய சட்டங்களை வாபஸ் பெறுவதாக பிரதமர் மோடி அறிவிப்பு.

---

**5. ஆசிய வில்வித்தை: இறுதி நாளில் இந்தியாவுக்கு 3 பதக்கம்**

ஆசிய வில்வித்தை சாம்பியன்ஷிப் போட்டியின் இறுதி நாளான வெள்ளிக்கிழமை இந்தியா 2 வெள்ளி, 1 வெண்கலம் என 3 பதக்கங்களை வென்றது.

வங்கதேச தலைநகா் டாக்காவில் ஆசிய வில்வித்தை சாம்பியன் போட்டிகள் நடைபெற்று வந்தன. இறுதி நாளான வெள்ளிக்கிழமை மகளிா், ஆடவா் ரெக்கா்வ் பிரிவில் பலம் வாய்ந்த கொரிய அணியை எதிா்கொண்டது இந்தியா.

இறுதிச் சுற்றில் இந்திய அணிகள் தோல்வி கண்டன. ஆடவா் பிரிவில் ஒலிம்பியன் பிரவீன் ஜாதவ், தேசிய சாம்பியன் பரத் சலுன்கே, கபில் ஆகியோா் இடங்கிய இந்திய அணி 2-6 என்ற புள்ளிக் கணக்கில் கொரிய ஆடவரிடம் தோல்வி கண்டு வெள்ளியை வென்றது.

மகளிா் பிரிவில் அங்கிதா பகத், மதுவேத்வான், ரிதி ஆகியோா் கொண்ட இந்திய அணி 0-6 என்ற புள்ளிக் கணக்கில் கொரியாவிடம் தோற்று வெள்ளி வென்றனா்.

மேலும் கலப்பு ரெக்கா்வ் பிரிவில் மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் உஸ்பெகிஸ்தான் அணியை 6-0 என்ற புள்ளிக் கணக்கில் அங்கிதா பகத்-கபில் இணை வீழ்த்தி வெண்கலம் வென்றது.

இப்போட்டியில் ஜோதி சுரேகா தங்கம் வென்றாா். 1 தங்கம், 4 வெள்ளி, 2 வெண்கலப் பதக்கங்களை வென்றது இந்தியா.

---

**6. 'பாடப் புத்தகங்களில் பள்ளிக் குழந்தைகள் பாதுகாப்பு விழிப்புணா்வு'**

பாடப் புத்தகங்களிலும் பள்ளிக் குழந்தைகளின் பாதுகாப்பு குறித்த விழிப்புணா்வு தகவல், தொடா்பு எண் உள்ளிட்டவை இடம்பெறும் என்றாா் பள்ளிக் கல்வித் துறை அமைச்சா் அன்பில் மகேஷ் பொய்யாமொழி.

சா்வதேச குழந்தைகளுக்கு எதிரான வன்முறை தடுப்பு தினத்தை முன்னிட்டு திருச்சி பிஷப் ஹீபா் பள்ளியில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற குழந்தைகளின் பாதுகாப்பு விழிப்புணா்வுப் பயிற்சி பணிமனையை தொடங்கி வைத்த அமைச்சா் மேலும் கூறியது:

தமிழகத்தில் முதல்கட்டமாக திருச்சியில் இந்தப் பயிற்சி 316 பேருக்கு அளிக்கப்படுகிறது. தொடா்ந்து சென்னையில் நாளொன்றுக்கு 400 போ் பயன்பெறும் வகையில் பயிலரங்கு நடைபெறும். பின்னா், அனைத்து மாவட்டங்களிலும் பயிற்சிகள் அளிக்கப்பட்டு ஆசிரியா்கள், தலைமையாசிரியா்கள், ஆசிரியரல்லாத பணியாளா்கள், பள்ளி நிா்வாகக் குழுவினா் முன்மாதிரி அலுவலா்களாகச் செயல்பட்டு விழிப்புணா்வு ஏற்படுத்துவா்.

தமிழகம் முழுவதும் உள்ள 2.87 லட்சம் வகுப்பறைகளிலும் குழந்தைகள் பாதுகாப்பு குறித்து விழிப்புணா்வு சுவரொட்டி இடம்பெறச் செய்யப்படும். மேலும், போக்சோ சட்டம் குறித்த விழிப்புணா்வு, குழந்தைகள் உதவி பெற 14417 என்ற கட்டணமில்லா தொலைபேசி குறித்தும் பாடப்புத்தகங்களில் முதல் பக்கத்திலேயே வெளியிட்டு விழிப்புணா்வு ஏற்படுத்தப்படும்.

மாணவா்கள் அளிக்கும் புகாா்களின் உண்மை தன்மை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும். நிலுவையில் உள்ள புகாா்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும்.

பள்ளிகளில் மாணவா்கள் புகாா் அளிப்பது வெளியே தெரிந்தால் பள்ளிக்கு அவப்பெயா் ஏற்படுகிறது எனக் கருதி அதை மூடி மறைக்க தனியாா் பள்ளி நிா்வாகங்கள் முயற்சிக்கின்றன. அதற்காக பிரச்னைகளை விசாரிக்காமல் விட்டு விடக் கூடாது. மாணவா்களின் நலன் கருதி கண்டிப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பணம் செலுத்தவில்லை என்பதற்காக தனியாா் பள்ளி ஆன்லைன் வகுப்புகளில் மாணவா்களைப் புறக்கணிப்பதோ, பள்ளித் தோ்வு வினாத்தாள், விடைத்தாள் வழங்காமலோ, இதர கல்விச் சேவை அளிக்காமலோ புறக்கணித்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

அரசு பள்ளிகளுக்கு வரும் மாணவா்களின் எண்ணிக்கை விகிதம் தொடா்ந்து அதிகரித்து வருகிறது. 2021–2022 ஆம் கல்வியாண்டில் 5 லட்சம் மாணவா்கள் புதிதாக அரசுப் பள்ளிகளில் சோ்ந்துள்ளனா். இதன்மூலம் தற்போது ஏறத்தாழ 71 லட்சம் மாணவா்கள் அரசுப் பள்ளிகளில் பயில்கின்றனா் என்றாா்.

ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி மாநிலத் திட்ட இயக்குநா் ஆா். சுதன் பேசுகையில், பள்ளி ஆசிரியா்கள், தலைமையாசிரியா்கள், முதல்வா்கள், பள்ளி நிா்வாகத்தினா், பள்ளி மேலாண்மைக் குழுவினா், ஆசிரியரல்லாத பணியாளா்கள், பெற்றோா் என அனைத்துத் தரப்பும் ஒன்றிணைந்து குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்றாா்.

---

**7. நிதி தொழில்நுட்ப ஆட்சிமன்றக் குழு அமைப்பு: தமிழக அரசு உத்தரவு**

வா்த்தக மேம்பாடு, சந்தைப்படுத்துதல் போன்ற பணிகளை மேற்கொள்ளக் கூடிய நிதி தொழில்நுட்பப் பணிகளுக்கென தனி ஆட்சிமன்றக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இதன் தலைவராக தொழில் துறை அமைச்சா் இருப்பாா் என அரசின் உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து, தொழில் துறை கூடுதல் தலைமைச் செயலாளா் எஸ்.கிருஷ்ணன் வெளியிட்ட உத்தரவு:–

நிதிதொழில்நுட்பத்துக்கான ஆட்சிமன்றக் குழுவின் தலைவராக தொழில் துறை அமைச்சரும், துணைத் தலைவராக தலைமைச் செயலாளரும் செயல்படுவா். மேலும் தொழில் துறை கூடுதல் தலைமைச் செயலாளா், நிதித் துறை முதன்மைச் செயலாளா், தகவல் தொழில்நுட்பவியல் முதன்மைச் செயலாளா், சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் துறை செயலாளா், தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் நிா்வாக இயக்குநா் உள்ளிட்டோா் உறுப்பினா்களாக இருப்பா். அவா்களுடன் நிதி சாா்ந்த துறைகளில் வல்லுநா்களான பாலாஜி நூதலபாடி, சுந்தா் கண்ணன், ராம்குமாா் ராமமூா்த்தி ஆகியோரும் உறுப்பினா்களாகச் செயல்படுவா்.

நிதிதொழில்நுட்பம் மற்றும் அதுசாா்ந்த துறைகளில் ஏற்படும் முன்னேற்றங்கள், முன்னெடுப்புகள் ஆகியவற்றை இந்த ஆட்சிமன்றக் குழு தீவிரமாக கண்காணிக்கும். சந்தைப்படுத்துதல் மற்றும் முத்திரைப்படுத்துதல், வணிக மேம்பாடு, கூட்டாண்மைகள், கல்வி, முதலீடுகள் போன்ற துறைகளில் கொள்கைகளை வகுக்க துணைக் குழுக்களை ஏற்படுத்தும் பணிகளை ஆட்சிமன்றக் குழு செய்யும். மேலும், துறைகளில் நிபுணத்துவம் பெற்றோா்களின் ஆலோசனைகளும் ஆட்சிமன்றக் குழுவால் கோரப்படும். இந்தக் குழுவானது ஆறு மாதங்களுக்கு ஒரு முறை கூடி விவாதிக்கும் என அரசின் உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**8. 'தமிழ்நாடு குழந்தைகளுக்கான கொள்கை 2021': முதல்வர் ஸ்டாலின் வெளியிட்டார்**

தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின், "தமிழ்நாடு மாநில குழந்தைகளுக்கான கொள்கை 2021"–ஐ இன்று வெளியிட்டார்.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று (20.11.2021) தலைமைச் செயலகத்தில், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில் தமிழகத்தில் குழந்தைகள் பாதுகாப்புடன் வாழவும், ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் உரிமைகள் பெறவும் தனித்துவம் வாய்ந்த "தமிழ்நாடு மாநில குழந்தைகளுக்கான கொள்கை 2021" வெளியிட்டார். மேலும், நிதி ஆதரவு திட்டத்தின் கீழ் 1,148 குழந்தைகளுக்கு நிதியுதவியும், கருணை அடிப்படையில் 15 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளையும் வழங்கினார்.

தமிழகத்தில் குழந்தைகள் பாதுகாப்புடன் வாழவும், அவர்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றி ஒருங்கிணைந்த வளர்ச்சியை பெறவும், குழந்தைகளின் உரிமைகள் எவ்வித தடையுமின்றி கிடைக்கப் பெறுவதை உறுதி செய்யவும் மாநில அளவில் குழந்தைகளுக்கான கொள்கையை வடிவமைத்தல் இன்றியமையாதது ஆகும்.

இதனைக் கருத்தில் கொண்டு அவர்களின் வளர்ச்சிப் படிநிலைகளுக்கான இலக்கினை அடைந்திடவும், குழந்தைகளின் ஊட்டச்சத்து, கல்வி, மருத்துவம், பாலியல் பாகுபாடின்மை, பாதுகாப்பு இவை அனைத்திற்குமான தனித்துவம் வாய்ந்த கொள்கையாக "தமிழ்நாடு மாநில குழந்தைகளுக்கான கொள்கை 2021" வடிவமைக்கப்பட்டுள்ளது.

குழந்தைகளின் மேல் மாறாத அன்பும் அவர்களின் நலனில் மிகுந்த அக்கறையும் கொண்டுள்ள தமிழக முதல்வர், கோவிட்–19 நோய் பெருந்தொற்றால் பாதிக்கப்பட்டு, பெற்றோர்களை இழந்த குழந்தைகளுக்கு பல்வேறு உதவி திட்டங்களையும் நிவாரண நிதி உதவிகளையும் வழங்குவதற்கு 29.05.2021 அன்று பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டார்கள்.

அவ்வறிப்பினை தொடர்ந்து, இத்திட்டத்தின் கீழ் இதுநாள்வரையில் கோவிட்–19 நோய் பெருந்தொற்றால் பாதிக்கப்பட்டு பெற்றோர்களை இழந்த 256 குழந்தைகளுக்கு ரூ.12.80 கோடி மற்றும் ஒரு பெற்றோரை இழந்த 6,493 குழந்தைகளுக்கு ரூ.194.79 கோடி, என மொத்தம் 6,749 குழந்தைகளுக்கு ரூ.207.59 கோடி தமிழ்நாடு அரசால் இதுவரை வழங்கப்பட்டுள்ளது.

சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் 2021–22ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையில், பெற்றோர் இருந்தும் வறுமை நிலை காரணமாக, பராமரிக்க இயலாது குழந்தைகளை நிறுவனங்களில் வைத்து பராமரிப்பதற்கு மாற்றாக குடும்பங்களில் வைத்து பராமரிப்பதை ஊக்குவிக்கும் வண்ணம், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகுகள் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் நிதி ஆதரவுத் திட்டத்தின் காத்திருப்பு பட்டியலில் உள்ள 1,148 குழந்தைகளுக்கு மாதந்தோறும் ரூ.2,000 வீதம் 3 ஆண்டுகளுக்கு மாநில அரசின் முழு பங்களிப்புடன் நிதியுதவி வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி, இத்திட்டத்திற்காக நடப்பு நிதி ஆண்டில் ரூ.1,37,76,000/– நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு, நிதி ஆதரவு திட்டத்தின் கீழ் 10 குழந்தைகளுக்கு தமிழக முதல்வர் ஸ்டாலின், நிதியுதவிக்கான காசோலைகளை வழங்கினார்.

சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் சமூகநல இயக்குநரக கட்டுப்பாட்டின் கீழ் உள்ள அலுவலகங்களில் பணிபுரிந்து பணிக்காலத்தில் உயிரிழந்த 15 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு இளநிலை உதவியாளர், அலுவலக உதவியாளர், இரவுக் காவலர் ஆகிய பணியிடங்களுக்கு கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக ஸ்டாலின், 7 வாரிசுதாரர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

---

**8. தூய்மை நகரங்கள் பட்டியலில் சென்னை மாநகராட்சிக்கு 43–வது இடம்**

தூய்மை நகரங்கள் பட்டியலில் இந்த ஆண்டு சென்னை மாநகராட்சிக்கு 43–வது இடம் கிடைத்துள்ளது. மாணவர்களுக்கு 'சுகாதார தூதர்' அட்டை வழங்கியதை பாராட்டி, மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் விருது வழங்கி கவுரவித்துள்ளது.

மத்திய அரசின் வீட்டுவசதி மற்றும்நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் சார்பில், தூய்மை இந்தியா இயக்கம்கடந்த 2014–ம் ஆண்டு தொடங்கப்பட்டது. இதன்கீழ் கடந்த 2016–ம் ஆண்டுமுதல் தேசிய அளவில் தூய்மை நகர கணக்கெடுப்பு நடத்தி, தரவரிசைப் பட்டியல் வெளியிடப்படுகிறது. தூய்மைப் பணியில் சிறந்து விளங்கும் நகர்ப்புற உள்ளாட்சிக்கு விருதுகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

2021–ம் ஆண்டுக்கான விருதுகள் வழங்கும் விழா டெல்லியில் நேற்று நடைபெற்றது. குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் பங்கேற்று தரவரிசைப் பட்டியலை வெளியிட்டு, நாட்டிலேயே தூய்மையான நகரங்கள் பட்டியலில் முதலிடம் பிடித்த இந்தூர், 2–ம் இடம் பிடித்த சூரத், 3–ம் இடம் பிடித்த விஜயவாடா ஆகிய நகரங்களுக்கு விருதுகளை வழங்கினார்.

தூய்மை நகரங்கள் பட்டியலில் சென்னை மாநகராட்சி 43–வது இடத்தைப் பிடித்துள்ளது. கடந்த ஆண்டில், சென்னை 45–வது இடத்தில் இருந்தது குறிப்பிடத்தக்கது. இப்போட்டியில், 10 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள்தொகை கொண்ட 48 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் பங்கேற்றிருந்தன. இதில் சென்னை மாநகராட்சிக்கு 43–வது இடம் கிடைத்துள்ளது. இத்தரவரிசையில் தமிழ்நாட்டில் இருந்து பங்கு பெற்ற சென்னை, மதுரை, கோவை ஆகிய நகரங்களில், சென்னை முதலிடத்தில் உள்ளது.

இந்த ஆண்டுக்கான 'திடக்கழிவு மேலாண்மையில் புதுமை படைத்தல் மற்றும் சிறந்த நடைமுறைகளை பின்பற்றுதல்' என்ற பிரிவின்கீழ் சென்னைமாநகராட்சிக்கு விருது கிடைத்துள்ளது. இந்த விருதை மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை செயலர் துர்கா சங்கர் மிஸ்ரா வழங்க, சென்னை மாநகராட்சி துணை ஆணையர் (சுகாதாரம்) எஸ்.மனீஷ் பெற்றுக்கொண்டார்.

சென்னை மாநகராட்சியின் சுகாதாரக் கல்வித்துறை சார்பில் திடக்கழிவுமேலாண்மை, மக்கும் குப்பைகள் மூலம் வீட்டிலேயே இயற்கை உரம் தயாரித்தல் உள்ளிட்டவை குறித்து பள்ளி மாணவ,

மாணவியர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு மாணவ, மாணவியும் மாநகராட்சியின் சுகாதாரத் தூதராக செயல்பட்டு, மாநகர தூய்மையை உறுதிப்படுத்த வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்து, உறுதிமொழி எடுத்தல் மற்றும் "சுகாதார தூதர்" அடையாள அட்டைகளை மாணவ, மாணவிகளுக்கு வழங்கி கவுரவிக்கும் பணிகளையும் மாநகராட்சி சுகாதாரக் கல்வித்துறை மேற்கொண்டு வருகிறது.

இப்பணியை பாராட்டியே இந்த ஆண்டு, மத்திய அரசு சார்பில் திடக்கழிவு மேலாண்மையில் "புதுமை படைத்தல் மற்றும் சிறந்த நடைமுறைகளை பின்பற்றுதல்" என்ற விருது சென்னை மாநகராட்சிக்கு வழங்கப்பட்டுள்ளது.

---

**9. இந்திய தொழில் கூட்டமைப்பின் 'கனெக்ட் 2021' மாநாடு– நவ.26–ல் முதல்வர் தொடங்கி வைக்கிறார்**

தமிழக அரசுடன் இணைந்து இந்திய தொழில் கூட்டமைப்பு (சிஐஐ)நடத்தும், தகவல் தொடர்புத் துறை குறித்த 'கனெக்ட் 2021' சர்வதேச மாநாடு மற்றும் கண்காட்சியை வரும் நவம்பர் 26–ம் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார். இம்மாநாடு, ஒரு நிலையான ஆழமான தொழில்நுட்ப சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்குவதை கருப்பொருளாக கொண்டு நடத்தப்படுகிறது.

மாநாட்டை தொடங்கிவைக்கும் முதல்வர் மு.க.ஸ்டாலின், கனெக்ட்2021 விருதுகளை வழங்கி, தமிழகஅரசின் தகவல் தொழில்நுட்பத்துறையின் பல்வேறு கொள்கைகளை அறிமுகப்படுத்துகிறார். இந்த மாநாடு தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலி வாயிலாக பேசும்போது, "தமிழக அரசும்இந்திய தொழில் கூட்டமைப்பும் இணைந்து கடந்த 2000–ம் ஆண்டுமுதல் நடத்தும் கனெக்ட் மாநாடு மூலம் தகவல் தொழில்நுட்பத் துறையில் தமிழகம் முன்னணி மாநிலமாக மாறி வருகிறது. இந்தமாநாடு மூலம் தகவல் தொழில்நுட்பத்துறையில் புதிய முதலீடுகள் தமிழகத்துக்கு வரவேண்டும். 2030–க்குள் தமிழகம் ஒரு ட்ரில்லியன் டாலர் அளவில் பொருளாதார உற்பத்தியை அடைவதற்கு இந்தமாநாடு உதவுவதாக அமையவேண்டும்'' என்றார்.

சிஐஐ தமிழ்நாடு தலைவர் டாக்டர் எஸ். சந்திரகுமார் கூறும்போது, "கடந்த 20 ஆண்டுகளில் கனெக்ட் மாநாடு தொழில்நுட்ப தளங்கள் உருவாக்கம், ஐசிடி அகாடமி, சிறப்பு தொழில்நுட்ப பூங்காக்கள், விண்வெளி தொழில் பூங்காவில் புதிய மேம்பாடுகள், திறன் மேம்பாட்டிற்கான தகவல் தொழில்நுட்ப கூட்டமைப்பு உள்ளிட்டவற்றில் பல்வேறு சாதனை முயற்சிகளை உருவாக்கி உள்ளது'' என்றார்.

சிஐஐ கனெக்ட் 2021 தலைவர் ஜோஷ் பவுல்கர் பேசும்போது, "இந்த மாநாடு தற்போது அனைத்துதொழில்நுட்ப வழங்குநர்களையும் தொழில்நுட்ப நுகர்வு தொழில்களையும் இணைத்து, எலக்ட்ரானிக்ஸ் உற்பத்தி மற்றும் ஒட்டுமொத்த சேவைகள் துறையில் சிறப்பு கவனம் செலுத்தும் விதமாக மாறி உள்ளது'' என்றார்.

---

**10. ரூ.44.30 கோடியில் காவல்துறை கட்டிடம் திறப்பு – தடய அறிவியல் துறைக்காக 'மரபணு தேடல் மென்பொருள்' : முதல்வர் ஸ்டாலின் வெளியிட்டார்**

தமிழ்நாடு தடய அறிவியல் துறையால் நாட்டில் முதல் முறையாக உருவாக்கப்பட்டுள்ள 'தடய மரபணு தேடல் மென்பொருளை' முதல்வர் ஸ்டாலின் வெளியிட்டு, காவல்துறை கட்டிடங்களையும் திறந்துவைத்தார்.

இதுகுறித்து தமிழக அரசு நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பு:

தமிழ்நாடு தடய அறிவியல் துறையின் டிஎன்ஏ பிரிவில் தடய மரபணுதேடல் மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது.

நாட்டிலேயே முதல் மாநிலம்

இதன்மூலம் இத்தொழில்நுட்பத்தை நாட்டில் அறிமுகப்படுத்துவதில் முதல் மாநிலமாக தமிழகம்திகழ்கிறது. இந்த தேடல் மென்பொருளை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று தலைமைச் செயலகத்தில் பயன்பாட்டுக்கு கொண்டு வந்தார்.

இப்புதிய தடய மரபணு தேடல் மென்பொருள் மூலமாக, கடத்தப்பட்ட குழந்தைகள் மற்றும் காணாமல் போன குழந்தைகளை மரபணு ஒப்பீடு ஆய்வு மூலம் உரிய பெற்றோருடன் ஒப்படைத்தல், மாநிலங்களுக்கு இடையில் செயல்படும் குற்றவாளிகளின் தொடர்பை கண்டறிதல், கரையோரம் ஒதுங்கும் அடையாளம் தெரியாத உடல்கள் மற்றும் மனித எலும்புகளை மரபணு ஆய்வு மூலம் அடையாளம் காணுதல், தொடர் குற்றச் செயல்களில் ஈடுபடுவோரை கண்டறிதல், இயற்கை பேரிடர்களால் உயிரிழந்தவர்களை கண்டறிதல் போன்ற பணிகளை எளிதாகவும், துரிதமாகவும் மேற்கொள்ள முடியும்.

---

**11. தமிழகத்தில் முதல்முறையாக கரூரில் – கருத்தடை செய்யும் ஆண்களுக்கு 'தங்கத் தந்தை' விருது : மாவட்ட ஆட்சியர் தொடங்கி வைத்தார்**

தமிழகத்திலேயே முதல்முறையாக, கரூர் மாவட்டத்தில் கருத்தடை செய்துகொள்ளும் ஆண்களுக்கு ரூ.5,000 ஊக்கத் தொகையுடன் 'தங்கத் தந்தை' விருது அல்லது இலவச வீட்டுமனைப் பட்டா போன்ற ஏதேனும் ஒருஅரசுத் திட்டங்களில் முன்னுரிமை வழங்கப்படும் என மாவட்ட ஆட்சியர் த.பிரபுசங்கர் தெரிவித்தார்.

கருத்தடை அறுவை சிகிச்சை செய்து கொள்ளும் ஆண்களுக்கு அரசு சார்பில் ரூ.1,100 ஊக்கத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில், தமிழகத்திலேயே முதன்முறையாக, கரூர் மாவட்டத்தில் கருத்தடை அறுவை சிகிச்சை செய்து கொள்ள முன்வரும் ஆண்களை ஊக்குவித்து கவுரவிக்கும் வகையில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் ரூ.5,000 ஊக்கத் தொகையுடன் தங்கத் தந்தை விருது வழங்கும் திட்ட தொடக்க விழா அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நேற்று நடைபெற்றது.

மாவட்ட ஆட்சியர் த.பிரபு சங்கர் திட்டத்தை தொடங்கி வைத்து, கருத்தடை அறுவை சிகிச்சை செய்துகொண்ட ஆண்களுக்கு தங்கத் தந்தை விருது வழங்கினார்.

பின்னர் ஆட்சியர் த.பிரபுசங்கர் பேசியது: ஆண்கள் கருத்தடை செய்து கொள்வதை ஊக்குவிக்கும் வகையில் ரூ.5,000 ஊக்கத் தொகையுடன் தங்கத் தந்தை விருது வழங்கப்படும். அல்லது இலவச வீட்டு மனைப்பட்டா, வீட்டில் உள்ள முதியவர் ஒருவருக்கு மாதாந்திர உதவித் தொகை, விலையில்லா கறவை மாடு, சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் தொடங்கரூ.10 லட்சம் வரை பிணையில்லா வங்கிக் கடனுதவி, சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியத்தில் நுண்ணீர் பாசனம் அமைத்து தருதல், தோட்டக்கலைத் துறைமூலமாக தென்னையில் பல அடுக்கு பயிர் திட்டத்தின் மூலம்ஒரு ஹெக்டேருக்கு ரூ.40,000 வரைமானியம் வழங்குதல் போன்ற ஏதேனும் ஒரு அரசுத் திட்டத்தில் முன்னுரிமை அளித்து நலத்திட்ட உதவிகள் வழங்கப்படும் என்றார்.

முதல்நாளில் 21 பேர்

நேற்று நடந்த முகாமில் 21க்கும் மேற்பட்ட ஆண்கள் பங்கேற்று கருத்தடை அறுவை சிகிச்சை செய்துகொண்டனர். அவர்களுக்கு ஊக்கத் தொகையுடன், தங்கத் தந்தை விருது வழங்கப்பட்டது.

---

**12. கரோனா அறிகுறி உள்ளவர்களுக்கான ஆயுஷ்–64 மாத்திரை தயாரிப்பு 46 நிறுவனங்களுக்கு அனுமதி: மத்திய ஆயுஷ் அமைச்சகம் ஒப்புதல்**

கரோனா அறிகுறி உள்ளவர்களை குணப்படுத்த உதவும் ஆயுஷ்–64 மாத்திரை தயாரிப்புக்கான தொழில்நுட்பத்தை 46 நிறுவனங்களுக்கு அளிக்க மத்திய ஆயுஷ்அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது.

கரோனா வைரஸ் தடுப்பில் அதாவது ஏ சிம்டம் மற்றும் குறைந்த அளவு நோய் தொற்றுஅறிகுறி உள்ளவர்களை குணப்படுத்துவதற்கு ஆயுஷ்–64 மாத்திரை மிகவும் உதவியாக உள்ளது. இதுவரை 7 நிறுவனங்கள் மட்டுமே இந்த மாத்திரையைத் தயாரிப்பதற்கான உரிமத்தைப் பெற்றிருந்தன. தற்போதுஇந்த மாத்திரையின் தேவையைக் கருத்தில் கொண்டு அதிகஅளவிலான நிறுவனங்களுக்கு அனுமதி அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

தொடக்கத்தில் மலேரியா நோய்க்கான மாத்திரையாக ஆயுஷ்–64 பரிந்துரைக்கப்பட்டு வந்தது. நாட்டில் கரோனா வைரஸ்பரவியபோது குறைந்த அளவிலான பாதிப்பு உள்ளவர்களுக்கு இது மிகச் சிறந்த தீர்வாக இருந்தது. கரோனா வைரஸ் தொற்றில் பாதிக்கப்பட்டு வீட்டில் சிகிச்சை பெற்றுவந்த 63 ஆயிரம் பேர் இந்த மாத்திரையை சாப்பிட்டு விரைவாக குணமடைந் துள்ளனர்.

இதைத் தொடர்ந்து ஆயுஷ்–64 மாத்திரைக்கான தேவை அதிகரித்தது. இது உடலில் நோய் எதிர்ப்புத் திறனை அதிகரிக்க உதவியதோடு, காய்ச்சலின் தீவிரத்தை குறைக்க உதவியது. கரோனா முதல் அலை தீவிரமடைந்தபோது பலருக்கும் இது மிகவும் உதவியாக இருந்தது.

இந்த மாத்திரையின் செயல் பாடு குறித்து 8 தனித்தனி மருத்துவ சோதனைகள் நடத்தப்பட்டன. இது மிகச் சிறந்த பலனை அளித்துள்ளது.

மேலும் எவ்வித பக்க விளைவுகளையும் இந்த மாத்திரை ஏற்படுத்தவில்லை என்பதும் இதன் தனிச் சிறப்பாகும். – பிடிஐ

---

**13. உள்நாட்டில் தயாரான போர்க்கப்பல் – ஐஎன்எஸ் விசாகப்பட்டினம் இன்று நாட்டுக்கு அர்ப்பணிப்பு:**

உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட போர்க்கப்பலான ஐஎன்எஸ்விசாகப்பட்டினம், இன்று நாட்டுக்கு அர்ப்பணிக்கப்படுகிறது.

இந்திய கடற்படையில் போர்க்கப்பல்கள், நீர்மூழ்கிகள், ரோந்துகப்பல்கள் என 130 கப்பல்கள் உள்ளன. வரும் 2027–ம் ஆண்டுக்குள் கடற்படை கப்பல்களின் எண்ணிக்கையை 170 ஆக உயர்த்ததிட்டமிடப்பட்டுள்ளது.

இந்த வரிசையில் ஐஎன்எஸ்விசாகப்பட்டினம் போர்க்கப்பல் இன்று நாட்டுக்கு அர்ப்பணிக்கப் படுகிறது. மும்பையில் நடைபெறும் விழாவில் இந்த போர்க்கப்பல் கடற்படையில் சேர்க்கப்படுகிறது. மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் விழாவுக்கு தலைமை வகிக்கிறார்.

மத்திய பாதுகாப்புத் துறையின் 15 பி திட்டத்தின் கீழ் 4 அதிநவீன போர்க்கப்பல்கள் உள்நாட்டில் தயாரிக்கப்படுகின்றன. இதில் முதல் போர்க்கப்பலான ஐஎன்எஸ்விசாகப்பட்டினம் மும்பை கட்டுமான தளத்தில் தயாரிக்கப்பட்டு அனைத்து சோதனைகளையும் வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது.

7,400 டன் எடை கொண்டது

இதைத் தொடர்ந்தே அந்த போர்க்கப்பல் கடற்படையில் இணைகிறது. இது 7,400 டன் எடை கொண்டது. நிர்பய், பிரம்மோஸ், பாரக் உள்ளிட்ட அதிநவீனஏவுகணைகள், அதிநவீன ரேடார்கள் கப்பலில் பொருத்தப்பட் டுள்ளன. இதில் 2 ஹெலிகாப் டர்களை நிறுத்தி வைக்கும் வசதியும் உள்ளது. 50 அதிகாரி களும் 250 வீரர்களும் கப்பலில் பணியாற்ற உள்ளனர்.

உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட ஐஎன்எஸ் வேலா நீர்மூழ்கி கப்பல் வரும் 28–ம் தேதி நாட்டுக்கு அர்ப்பணிக்கப்படுகிறது. இதுபிரான்ஸ் தொழில்நுட்பத்தில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்டுள் எது. 1,775 டன் எடை கொண்டஇந்த நீர்மூழ்கியில், போர்க்கப் பல்களை தாக்கி அழிக்கும் அதிநவீன ஏவுகணைகள் பொருத்தப்பட்டுள்ளன.

---

**14. உலகின் முதல் மின்சார தானியங்கி கார்கோ கப்பல்: நார்வேயின் யாரா இன்டர்நேஷனல் அறிமுகம்**

நார்வேயின் பிரபல உரத் தயாரிப்பு நிறுவனமான யாரா இன்டர்நேஷனல் உலகின் முதல் மின்சார தானியங்கி சரக்கு கப்பலை அறிமுகம் செய்துள்ளது.

யாரா பிர்க்லேண்ட் என்று பெயரிடப்பட்டுள்ள 80 மீட்டர் நீளமுள்ள இந்த எலெக்ட்ரிக் தானியங்கி சரக்கு கப்பல் தெற்கு நார்வேயின் போர்ஸ்கிரன்னில் உள்ள உற்பத்தி ஆலையிலிருந்து 14 கிமீ தொலைவில் பிரெவிக்கில் உள்ள ஏற்றுமதி துறைமுக முனையம் வரையிலான சரக்கு போக்குவரத்துக்குப் பயன்படுத்தப்பட உள்ளது.

முழுமையாக மின்சாரத்தில் இயங்கும் இந்தக் கப்பல் இந்நிறுவனத்தின் 40,000 டீசல் லாரி போக்குவரத்துக்கு மாற்றாக விளங்கும். இதனால் ஆண்டுக்கு 1000 டன் கார்பன் வெளியேற்றம் குறையும். இதன்மூலம் நாட்டின் கரியமில வாயு வெளியேற்றத்தைக் குறைக்கும் முயற்சியில் யாரா நிறுவனத்தின் இக்கப்பல் பெரும்பங்கு வகிக்கும் என்று அந்நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி ஸ்வெய்ன் தோர் ஹோல்ஸ்தர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறும்போது, "மின்சார மற்றும் தானியங்கி தொழில்நுட்பம் மூலம் இயங்கும் கப்பலை உலகிலேயே முதன்முறையாக அறிமுகம் செய்வதன்மூலம் மிகப்பெரிய மாற்றத்தின் முதல் அடியை எடுத்து வைத்துள்ளோம். இங்கு மட்டுமல்லாமல் உலகின் பல நீர்வழித்தடங்களில் இந்த தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் சாத்தியங்கள் உள்ளன. அவற்றை முழுமையாக பயன்படுத்தினால் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தலாம்" என்றார்.

இந்த கப்பல் முழுமையாகமின்சாரத்தில் இயங்குவது மட்டுமல்லாமல் கண்டெய்னர்களை ஏற்றுவது இறக்குவது, ரிசார்ஜ் செய்வது, சரியான வழித்தடத்தில் பாதுகாப்பாக கப்பலை செலுத்து வது என அனைத்தையும் தானி யங்கி தொழில்நுட்பம் மூலம் செயல்படுத்தக்கூடிய வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

---

**15. நாட்டின் தூய்மையான நகரமாக 5–வது முறையாக இந்தூர் தேர்வு :**

மத்திய அரசின் வருடாந்திர தூய்மையான நகரங்கள் கணக்கெடுப்பில் 5–வது முறையாக மத்தியபிரதேசத்தைச் சேர்ந்த இந்தூர் முதலிடம் பிடித்துள்ளது.

நாட்டில் தூய்மையை பராமரிக்கும் நோக்கத்தில் தூய்மை இந்தியா திட்டத்தை மத்திய அரசு தீவிரமாக செயல்படுத்தி வருகிறது. தூய்மைப் பணியை சிறப்பாக மேற்கொள்ளும் நகரங்களுக்கு மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை சார்பில் ஆண்டுதோறும் விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் இந்த ஆண்டு விருதுக்கான நகரங்கள் அறிவிக்கப்பட்டுஉள்ளன.

இதில் நாட்டில் மிகவும் தூய்மையான நகரமாக மத்தியபிரதேசத்தை சேர்ந்த இந்தூர், தொடர்ந்து 5–வது முறையாக தேர்வு செய்யப்பட்டுள்ளது. குஜராத் மாநிலத்தின் சூரத், ஆந்திர மாநிலத்தின் விஜயவாடா ஆகியவை முறையே இரண்டாவது மற்றும் மூன்றாவது இடத்தை பிடித்துள்ளன.

கங்கைக் கரையில் அமைந்துள்ள மிகவும் தூய்மையான நகரமாக (தூய்மையான கங்கை நகர்) வாரணாசி தேர்வு செய்யப்பட்டுள்ளது. நாட்டில் மிகவும் தூய்மையான மாநிலமாக சத்தீஸ்கர் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான அறிவிப்புகளை மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை நேற்று அறிவித்தது. விருதுகளை குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் இன்று (நவ. 21) வழங்குகிறார்.

---

**16. நாட்டின் சிறந்த காவல் நிலையங்களில் தொட்டியம் காவல் நிலையம் 8 ஆம் இடம்**

இந்தியாவின் சிறந்த 10 காவல் நிலையங்களில் தொட்டியம் காவல் நிலையம் 8 ஆம் இடத்தைப் பெற்றுள்ளது.

நாட்டிலுள்ள காவல் நிலையங்களில் தரவுப் பகுப்பாய்வு, நேரடிக் கண்காணிப்பு, பொதுமக்களின் பின்னோட்டத்தைக் கருத்தில் கொண்டு ஆண்டுதோறும் இந்தியாவிலுள்ள காவல் நிலையங்களில் 10 சிறந்த காவல் நிலையங்கள் தோ்ந்தெடுக்கப்படுகின்றன.

அதன்படி உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள இந்திய அளவிலான 10 சிறந்த காவல் நிலையங்களின் பட்டியலில் தமிழகத்தில் உள்ள தொட்டியம் காவல் நிலையம் 8 ஆம் இடத்தைப் பெற்றுள்ளது.

இந்தக் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளா் மோகன்ராஜ், 2 காவல் உதவி ஆய்வாளா்கள், ஒரு சிறப்பு காவல் உதவி ஆய்வாளா், 3 தலைமைக் காவலா்கள், 7 பெண் காவலா்கள் உள்ளிட்ட 30 போ் பணிபுரிகின்றனா்.

மாவட்ட எஸ்பி ஆய்வு: இந்நிலையில், திருச்சி மாவட்டக் காவல் கண்காணிப்பாளராகப் பொறுப்பேற்ற சுஜித்குமாா், காட்டுப்புத்தூா், தொட்டியம் காவல் நிலையங்களை ஆய்வு செய்து தொட்டியம் காவல் நிலையம் பெற்ற சிறப்பைத் தக்க வைக்க அறிவுறுத்தி, வாழ்த்தினாா். தொட்டியம் காவல் நிலையமானது மாவட்டக் காவல் கண்காணிப்பாளா் தலைமையில் முசிறி கோட்டக் காவல் துணைக் கண்காணிப்பாளா் மேற்பாா்வையில் செயல்படுகிறது.

---

**1. அண்மையில் காலமான மன்னு பண்டாரியுடன் தொடர்புடைய துறை எது?**



அ) விளையாட்டு

**ஆ) இலக்கியம் ☑**

இ) அரசியல்

ஈ) வணிகம்

✓ ஹிந்தி இலக்கியத்தில் புகழ்பெற்ற எழுத்தாளரான மன்னு பண்டாரி, அண்மையில் தனது 90ஆவது வயதில் காலமானார். அவர் 'மகாபோஜ்' மற்றும் 'ஆப்கா பூந்தி' போன்ற உன்னதமான படைப்புகளை எழுதியவர். அவர் தனது சுயசரிதையை – 'ஏக் கஹானி யே' என்ற தலைப்பில் வெளியிட்டார். வியாஸ் சம்மன் உட்பட பல்வேறு இலக்கிய விருதுகளை அவர் பெற்றுள்ளார்.

---

**2. இ–ஷ்ரம் இணையதளத்தில் உள்ள தரவுகளின்படி, முறைசாரா தொழிலாளர்களிடமிருந்து எந்தத் தொழில்துறைக்கு அதிக பதிவுகள் பெறப்பட்டுள்ளன?**



அ) கட்டுமானம்

**ஆ) வேளாண்மை ☑**

இ) வீட்டுப்பணியாட்கள்

ஈ) மேற்கூறிய எதுவும் இல்லை

✓ இ–ஷ்ரம் இணையதளம் என்பது ஆதாருடன் இணைக்கப்பட்ட அமைப்பு சாரா தொழிலாளர்களின் நாட்டின் முதல் மையப்படுத்தப்பட்ட தரவுத்தளம் ஆகும். தொழில்வாரியான பதிவுத்தரவுகளில், உழவுத்துறையில் (53.6%) அதிகப்பட்சப் பதிவுகள் காணப்பட்டுள்ளன.

✓ அதைத்தொடர்ந்து கட்டுமானப்பிரிவும் (12.2%) வீட்டுப் பணியாளர்கள் (8.71%) பிரிவும் உள்ளன. இந்தத் தரவுத்தளத்தில் உள்ள 7.86 கோடி பதிவுகளில், 40.5 சதவீதம் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினரும், 27.4 சதவீதம் பொதுப்பிரிவினரும், 23.7 சதவீதம் பட்டியல் சாதியினரும், 8.3 சதவீதம் பழங்குடியினரும் உள்ளனர்.

---

**3. இந்தியப்பெருங்கடல் விளிம்பில் உள்ள நாடுகளின் சங்கத்தின் (IORA) வருடாந்திர அமைச்சர்கள் கூட்டம் சமீபத்தில் எந்த நகரத்தில் நடைபெற்றது?**

அ) புது தில்லி

**ஆ) டாக்கா ☑**

இ) கொழும்பு

ஈ) மாலே

✓ இந்தியப்பெருங்கடல் விளிம்பில் உள்ள நாடுகளின் சங்கத்தின் (IORA) 21ஆவது வருடாந்திர அமைச்சர்கள் கூட்டம் டாக்காவில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் இந்தியா மெய்நிகராக பங்கேற்றது. இக்கூட்டத்தின் முடிவில் டாக்கா அறிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

✓ IORA'இன் தலைமைப் பொறுப்பை ஏற்றதற்காக வங்காளதேசத்துக்கு இந்தியா வாழ்த்து தெரிவித்ததோடு, IORA'இன் புதிய பேச்சுவார்த்தை கூட்டாளராக ரஷ்ய கூட்டமைப்பையும் வரவேற்றது. IORA'இன் அடுத்த பொதுச்செயலராக தூதர் சல்மான் அல்–பாரிசி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

---

**4. பிரதமர் கிராம் சதக் யோஜனா திட்டத்தைச் செயல்படுத்துகிற மத்திய அமைச்சகம் எது?**

அ) வீட்டுவசதி & நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம்

**ஆ) ஊரக வளர்ச்சி அமைச்சகம் ☑**

இ) வேளாண்மை & விவசாயிகள் நல அமைச்சகம்

ஈ) பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம்

✓ ₹33,822 கோடி செலவில் பிரதமர் கிராம் சதக் யோஜனா–I மற்றும் II'ஐ 2022 செப்டம்பர் வரை தொடர பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக்குழு ஒப்புதல் அளித்துள்ளது. ஊரக வளர்ச்சி அமைச்சகம் PMGSY திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இடதுசாரி தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகள் உட்பட பழங்குடியினர் மற்றும் பின்தங்கிய பகுதிகளில் 32,152 கிமீ சாலைகள் அமைக்க அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

✓ இடதுசாரி தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கான சாலை இணைப்புத் திட்டத்தை 2023 மார்ச் வரை தொடரவும் பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக்குழு ஒப்புதல் அளித்துள்ளது.

---

**5. சமீப செய்திகளில் இடம்பெற்ற Universal Service Obligation Fund உடன் தொடர்புடைய துறை எது?**




அ) நிலக்கரிச்சுரங்கம்

**ஆ) தொலைத்தொடர்பு ☑**

இ) ஆட்டோமொபைல்

ஈ) ஜவுளி

✓ இந்திய தந்தி (திருத்தம்) சட்டம், 2003 யுனிவர்சல் சர்வீஸ் ஒப்லிகேஷன் ஃபண்டுக்கு சட்டபூர்வமான தகுதியை வழங்கியுள்ளது. இது அனைத்து தொலைத்தொடர்பு நிதி ஆபரேட்டர்களிடமிருந்து அவர்களின் சரிசெய்யப் –பட்ட மொத்த வருவாயில் வசூலிக்கப்படும் வரியால் உருவாக்கப்பட்ட நிதிகளின் தொகுப்பாகும்.

✓ யுனிவர்சல் சர்வீஸ் ஒப்லிகேஷன் ஃபண்ட் மூலம் 5 மாநிலங்களின் 44 முன்னேற விரும்பும் மாவட்டங்களில் உள்ள 7,287 உள்ளடக்கப்படாத கிராமங்களில் மொபைல் சேவை வழங்குவதற்கான முன்மொழிவுக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. ஆந்திரம், சத்தீஸ்கர், ஜார்கண்ட், மகாராஷ்டிரா மற்றும் ஒடிசா ஆகியவை அவ்வைந்து மாநிலங்களாம்.

---

**6. எந்த மத்திய அமைச்சகத்தின்கீழ் கால்நடை வளர்ப்பு மற்றும் பால் வளத்துறை செயல்படுகிறது?**



அ) உழவு மற்றும் உழவர்கள் நல அமைச்சகம்

**ஆ) மீன்பிடி, கால்நடை பராமரிப்பு & பால்வள அமைச்சகம் ☑**

இ) உணவு பதப்படுத்தும் தொழிலகங்கள் அமைச்சகம்

ஈ) ஊரக வளர்ச்சி அமைச்சகம்

✓ கால்நடை வளர்ப்பு மற்றும் பால்வளத்துறை (DAHD) மற்றும் உணவு பதப்படுத்தும் தொழிலகங்கள் அமைச்சகம் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கையெழுத்தானது. DAHD மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை அமைச்சகத்தின்கீழ் செயல்படுகிறது.

✓ இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத் துறையின் பல்வேறு திட்டங்களை ஒன்றிணைப்பதன்மூலம் பால் உற்பத்தியாளர்களுக்கு நன்மைகளை நீட்டிக்க உதவும்.

---

**7. உலக அளவில் காலணி மற்றும் தோல் ஆடைகள் உற்பத்தியில் இந்தியாவின் தரநிலை என்ன?**



அ) முதலாவது

**ஆ) இரண்டாவது ☑**

இ) நான்காவது

ஈ) பத்தாவது

✓ உலக அளவில் காலணி மற்றும் தோல் ஆடை உற்பத்தியில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது. 2020–21'இல் (ஏப்ரல் முதல் பிப்ரவரி வரை) தோல், காலணி மற்றும் தோல் பொருட்கள் ஏற்றுமதி $3.67 பில்லியன் டாலர்களை எட்டியது. தோல் ஏற்றுமதி கவுன்சிலின் தேசிய ஏற்றுமதி சிறப்பு விருதுகள் வழங்கும் விழாவில் வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் பியூஷ் கோயல் உரையாற்றினார்.

---

**8. ஐநா பொதுச்சபையானது 2021ஆம் ஆண்டை எந்த ஆண்டாக அறிவித்துள்ளது?**

அ) பயங்கரவாதத்திற்கு எதிரான சர்வதேச ஆண்டு

ஆ) சர்வதேச சுகாதார ஆண்டு

இ) கோவிட்க்கு எதிரான சர்வதேச ஆண்டு

**ஈ) பழங்கள் மற்றும் காய்கறிகளின் சர்வதேச ஆண்டு ☑**

✓ ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை 2021ஆம் ஆண்டை பழங்கள் மற்றும் காய்கறிகளின் சர்வதேச ஆண்டாக அறிவித்துள்ளது. உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (FAO) இந்த ஆண்டைக் கொண்டாடுவதற்கான முன்னணி நிறுவனமாக உள்ளது.

- ✓ இந்த ஆண்டு மனித ஊட்டச்சத்திலும், உணவுப் பாதுகாப்பிலும் பழங்கள் மற்றும் காய்கறிகளின் பங்கு பற்றிய விழிப்புணர்வை பரப்ப முயல்கிறது.

---

**9. "Mission 2070: A Green New Deal for a Net Zero India" என்ற தலைப்பிலான அறிக்கையை வெளியிட்ட நிறுவனம் எது?**

அ) FAO

**ஆ) WEF ☑**

இ) IMF

ஈ) NITI ஆயோக்

- ✓ உலகப்பொருளாதார மன்றம் "Mission 2070: A Green New Deal for a Net Zero India" என்ற தலைப்பில் ஓர் ஆய்வு அறிக்கையை Kearney மற்றும் Observer Research Foundation உடன் இணைந்து வெளியிட்டது.
- ✓ ஓர் அண்மைய ஆராய்ச்சி அறிக்கையில், உலகப் பொருளாதார மன்றம், இந்தியாவுக்கான பசுமை புதிய ஒப்பந்தம் 2070'க்குள் $15 டிரில்லியன் பொருளாதார வாய்ப்பைக் கொண்டு வரக்கூடும் எனக் காட்டியுள்ளது.

---

**10. இந்தியாவில் 'தேசிய சட்ட சேவைகள் நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

**அ) 9 நவம்பர் ☑**

ஆ) 11 நவம்பர்

இ) 13 நவம்பர்

ஈ) 15 நவம்பர்




- ✓ 'தேசிய சட்ட சேவைகள் நாள்' ஆண்டுதோறும் நவம்பர் 9 அன்று நாடு முழுவதும் அனுசரிக்கப்படுகிறது. இது சட்ட சேவைகள் ஆணைய சட்டம் இயற்றப்பட்டதை நினைவுகூருவதோடு சட்டம் தொடர்பான விதிகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ✓ இந்தியாவில் ஒரே மாதிரியான முறையில், "சட்ட உதவி திட்டங்களுக்கு சட்டப்பூர்வ அடிப்படையை" வழங்குவதற்காக 1987ஆம் ஆண்டு சட்ட சேவைகள் ஆணைய சட்டம் இயற்றப்பட்டது. இந்தச் சட்டம் 1995 நவ.9 அன்று நடைமுறைக்கு வந்தது. இந்தச் சட்டத்தின் நோக்கம், நாட்டில் விளிம்புநிலை சமூக-பொருளாதார சமூகங்களைச் சேர்ந்த மக்களுக்கு தகுதியான மற்றும் இலவச சட்ட உதவிகளை வழங்குவதாகும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. மாற்றுத்திறனாளி வீரர்களின் மறுவாழ்வுக்காக நிதி திரட்ட 4,500 கிலோ மீட்டர் ஓடும் 61 வயதான மாரத்தான் வீரர்**

மகாராஷ்டிராவில் உள்ள பழங்குடியினர் பள்ளிகளை தரம் உயர்த்துவதற்கும் மாற்றுத் திறனாளி ராணுவ வீரர்களின் மறுவாழ்வுக்கு ஆதரவளிப்பதற்கும் நிதி திரட்டுவதற்காக 61 வயதான அஜ்வானி குமார் மாரத்தான் ஓட்டத்தை தொடங்கியுள்ளார்.

கடந்த 19-ம் தேதி காஷ்மீரின் பாட்னிடாப்பில் இருந்து ஓட்டத்தை தொடங்கிய அஜ்வானி குமார், அடுத்த ஆண்டு பிப்ரவரி 3-ம் தேதி கன்னியாகுமரியில் நிறைவு செய்கிறார். 4,444 கி.மீ. தூரத்தை 77 நாட்களில் முடிக்க திட்டமிட்டுள்ளார். அஜ்வானி குமார், ஓட்டப்பந்தய வீரர்களின் குழுவால் தொடங்கப்பட்ட எ.ஃப்ஏபி அறக்கட்டளையின் நிறுவனர்-இயக்குநர் ஆவார். இந்தக் குழுவினர் ஓடுவதில் உள்ள ஆர்வத்தையும் சமூகத்திற்கு உதவ வேண்டும் என்ற விருப்பத்தையும் ஒருங்கிணைப்பதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். அஜ்வானி குமார் சமூக காரணங்களுக்காக பல நகரங்களுக்கு இடையேயான மற்றும் மாநிலங்களுக்கு இடையேயான மராத்தான்களை நடத்தியுள்ளார். இதன்மூலம் திரட்டப்பட்ட நிதியை ஏழைகளுக்கு வழங்கி வருகிறார்.

இதுகுறித்து அஜ்வானி குமார் கூறும்போது, "நாங்கள் சில காரணங்களுக்காக ஓடுகிறோம். 100 சதவீத பணத்தை பெறவேண்டும் என்பதே எங்கள் முக்கிய நோக்கம். இப்போது நாங்கள் பழங்குடியினர் பள்ளிகளை மேம்படுத்த முயற்சிக்கிறோம். ஒரு குடிமகனாக, எங்கள் குழு ராணுவத்திற்கு ஏதாவது செய்ய விரும்புகிறது" என்றார்.

மாரத்தான் ஓட்டத்தை தொடங்கிய அஜ்வானி குமாரை, கார்கில் போர் நினைவுச்சின்னமான உதம்பூரில் முன்னாள் ராணுவ வீரர்கள் வரவேற்றனர்.

**2. பாரா பாட்மிண்டனில் தங்கம் வென்றார் சுகந்த்**

உகாண்டாவின் கம்பலா நகரில் பாரா பாட்மிண்டன் சர்வதேச போட்டி நடைபெற்று வந்தது. இந்தத் தொடரின் கடைசி நாளான நேற்று, ஆடவருக்கான எஸ்எல் 4 பிரிவு இறுதிச் சுற்றில் உலகத் தரவரிசையில் 5-வது இடத்தில் உள்ள இந்தியாவின் சுகந்த் கதம் சகநாட்டைச் சேர்ந்த நிலேஷ் பாலுவை எதிர்த்து விளையாடினார். இதில் சுகந்த் 21-16, 17-21, 21-10 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று தங்கப் பதக்கம் வென்றார்.

எஸ்எல் 3 பிரிவு இறுதிச் சுற்றில் டோக்கியோ பாராலிம்பிக்கில் தங்கப் பதக்கம் வென்ற இந்தியாவின் பிரமோத் பகத், சகநாட்டின் மனோஜ் சர்காரை எதிர்கொண்டார். இதில் பிரமோத் 19-21, 16-21 என்ற நேர் செட்டில் தோல்வியடைந்து வெள்ளிப் பதக்கம் பெற்றார்.

இரட்டையர் பிரிவில் இந்தியாவின் பிரமோத் பகத், மனோஜ் சர்கார் ஜோடி 21-10, 20-22, 15-21 என்ற செட் கணக்கில் சகாட்டின் மொகமது அர்வாஸ் அன்சாரி, தீப் ரன்ஜன் பிஸோயி ஜோடியிடம் தோல்வி கண்டு வெள்ளிப் பதக்கம் பெற்றது. எஸ்எல் 3, எஸ்யு 5 கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் பிரமோத் பகத், பாலக் ஜோஷி ஜோடி இறுதிச் சுற்றில் 19-21, 16-21 என்ற செட் கணக்கில் மற்றொரு இந்திய ஜோடியான ருத்திக் ரகுபதி, மானஷி கிரிசந்திரா ஜோஷியிடம் வீழ்ந்தது.

இந்தத் தொடரில் இந்தியா 16 தங்கம், 14 வெள்ளி, 17 வெண்கலம் என மொத்தம் 47 பதக்கங்களை குவித்தது.

---

**3. விவசாயிகள் ஸ்மார்ட்போன் வாங்க ரூ.1,500 நிதியுதவி: குஜராத் அரசு அறிவிப்பு**

குஜராத்தில் உள்ள விவசாயிகள் ஸ்மார்ட்போன் வாங்குவதற்காக அம்மாநில அரசு ரூ.1,500 வரை நிதியுதவி அளிப்பதாக அறிவித்துள்ளது.

இதன்படி, ஸ்மார்ட்போன் விலையில் 10 சதவீதம் அல்லது ரூ.1,500 இவற்றில் எது குறைவோ அந்த தொகை நிதியுதவியாக வழங்கப்படும். இதற்கான பிரத்யேக இணையதளத்தில் விண்ணப்பிக்க வேண்டும்.

நிலம் வைத்துள்ள அனைத்து விவசாயிகளும் இதில் பலனடையலாம். ஆனால், கூட்டாக விவசாயம் செய்பவர்களில், தலா ஒருவருக்கு மட்டுமே நிதியுதவி அளிக்கப்படும். ஸ்மார்ட்போனை தவிர, இயர்போன், பவர் பேங்க், சார்ஜர் போன்ற சாதனங்கள் வாங்க இத்திட்டம் பொருந்தாது.

விவசாயிகளின் விண்ணப்பத்துக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டவுடன், ஸ்மார்ட்போன் வாங்கிய ரசீதின் நகல், போனின் ஐ.எம்.இ.ஐ. எண், ரத்து செய்யப்பட்ட காசோலை ஆகியவற்றை விவசாயிகள் சமர்ப்பிக்க வேண்டும். அதன்பிறகு நிதியுதவி அளிக்கப்படும்.

விவசாயிகளுக்கான நலத்திட்டங்களுக்கு விண்ணப்பித்தல், வானிலை தகவல்கள், பூச்சி மருந்து விவரங்கள், நவீன பண்ணை தொழில்நுட்பம் உள்ளிட்டவற்றை அறிந்துகொள்ள விவசாயிகள் ஸ்மார்ட்போன் வாங்குவது நல்லது என்று மாநில வேளாண்துறை தெரிவித்துள்ளது.

---

**4. மீன்வளத்துறை ஏற்றுமதி இலக்கு ₹1 லட்சம் கோடி: மத்திய அமைச்சர் தகவல்**

வளா்ச்சிக்கான சாத்தியக்கூறுகள் மீன் வளத் துறையில் ஏராளமாக உள்ளதாகவும் 2024-25-ம் ஆண்டுக்குள் ரூ.1 லட்சம் கோடி ஏற்றுமதி இலக்கை இத்துறை எட்டுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டு வருவதாகவும் மத்திய மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளம் அமைச்சா் பா்ஷோத்தம் ரூபாலா கூறினாா்.

ஒடிஸா மாநிலம், புவனேசுவரத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற உலக மீன்வள தின கொண்டாட்ட நிகழ்ச்சியில் பேசிய அமைச்சா் ரூபாலா, 'மாநிலங்கள் ஒன்றுக்கொன்று ஊக்கம் பெற்று கடல்சாா் துறையின் வளா்ச்சிக்கான வாய்ப்புகளை ஆராய வேண்டும். விவசாயிகள் கடன் அட்டை குறித்த விழிப்புணா்வு பெரிய அளவில் உருவாக வேண்டும். கடல்சாா் துறைக்கான அனைத்து ஆதரவையும் பிரதமா் நரேந்திர மோடி வழங்கி வருகிறாா். விவசாய கடன் அட்டை மீனவா்களுக்காக ஏற்கனவே நீட்டிக்கப்பட்டுள்ளது. இது குறித்த விழிப்புணா்வை பெரிய அளவில் உருவாக்குவதற்கான மாபெரும் பிரசாரம் ஒன்றை அரசு விரைவில் தொடங்கும்' என்றாா்.

இந்த நிகழ்ச்சியில் மத்திய மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளம் இணை அமைச்சா் எல்.முருகன் பேசியதாவது: மீன்வளத் துறைக்காக ஒரு தனி அமைச்சகத்தை பிரதமா் நரேந்திர மோடி உருவாக்கியதிலிருந்து குறுகிய காலத்திற்குள் இத்துறை மேம்படுத்தப்பட்டு, ஒரு லட்சம் கோடி ரூபாய் ஏற்றுமதி இலக்கு நிா்ணயிக்கப்பட்டுள்ளது.

மத்ஸ்ய சம்பதா யோஜனா எனும் திட்டத்தின் வாயிலாக மீன்வளத் துறைக்கு ரூ.20,000 கோடி வழங்கப்பட்டுள்ளது. கடற்பாசி விவசாயத்தின் மீதும் அரசு கவனம் செலுத்தி வருகிறது. மீனவ சமுதாயத்தை சோ்ந்த பெண்களுக்கு அதிகாரமளித்து இத்துறையில் தொழில்முனைதலை ஊக்குவிப்பதிலும் மத்திய அரசு தீவிர கவனம் செலுத்தி வருகிறது என்றாா்.

---

**5. சா்வதேச பாரா பாட்மின்டன்: இந்தியாவுக்கு 47 பதக்கங்கள்**

உகாண்டாவில் நடைபெற்ற சா்வதேச பாரா பாட்மின்டன் போட்டியில் இந்தியா 16 தங்கம், 14 வெள்ளி, 17 வெண்கலம் என 47 பதக்கங்கள் வென்று அசத்தியுள்ளது.

கடந்த 16-ஆம் தேதி தொடங்கி ஞாயிற்றுக்கிழமை நிறைவடைந்த இந்தப் போட்டியில் இந்திய போட்டியாளா்களே பிரதானமாக இருந்தனா்.

இதில், டோக்கியோ பாராலிம்பிக்கில் தங்கம் வென்றவரும், உலகின் முதல்நிலை வீரருமான பிரமோத் பகத் 3 வெள்ளிப் பதக்கங்கள் வென்றாா். அவா் தனிநபா் பிரிவிலும், ஆடவா் இரட்டையா் மற்றும் கலப்பு இரட்டையா் ஆகிய பிரிவுகளிலும் பதக்கம் வென்றுள்ளாா்.

ஆடவா் ஒற்றையா் எஸ்எல்3 பிரிவு இறுதிச் சுற்றில் பிரமோத் 19-21, 16-21 என்ற செட்களில் சக இந்தியரான மனோஜ் சா்காரிடம் தோல்வி கண்டாா். ஆடவா் இரட்டையா் பிரிவில் மனோஜுடன் இணைந்தே பிரமோத் வெள்ளிப் பதக்கம் வென்றிருந்தாா்.

அந்தப் பிரிவில் பிரமோத்/மனோஜ் இணை 21-10, 20-22, 15-21 என்ற செட்களில் சக இந்திய ஜோடியான முகமது அா்வாஸ் அன்சாரி/தீப் ரஞ்சன் பிசோயீ இணையிடம் தங்கத்தை இழந்தது. பின்னா் கலப்பு இரட்டையா் எஸ்எல்3-எஸ்யு5 பிரிவில் பிரமோத்/பாலக் கோலி இணை 19-21, 16-21 என்ற செட்களில் மற்றொரு இந்திய ஜோடியான ருதிக் ரகுபதி/மானசி கிரிஷ் சந்திர ஜோஷி ஜோடியிடம் தோற்று வெள்ளிப் பதக்கம் பெற்றது.

வீராங்கனைகளில் பிரதானமானவரான பாலக் கோலி தனி நபா் மற்றும் மகளிா் இரட்டையா் பிரிவில் தங்கமும், கலப்பு இரட்டையரில் வெள்ளியும் வென்றாா். உலகின் 5-ஆம் நிலை வீரராக இருக்கும் சுகந்த் கடம் எஸ்எல்4 பிரிவில் 21-16, 17-21, 21-10 என்ற செட்களில் 38 நிமிஷங்களில் சக இந்தியரான நிலேஷ் பாலு கெய்க்வாட்டை வீழ்த்தி தங்கம் வென்றாா். சுகந்த் 2 ஆண்டுகளுக்குப் பிறகு சா்வதேச போட்டியில் தங்கம் வென்றிருக்கிறாா்.

---

**1. இந்தியாவின் முதல் 'Laser Interferometer Gravitational–Wave Observatory (LIGO)' திட்டம் வரவுள்ள மாநிலம் எது?**

அ) குஜராத்

ஆ) தமிழ்நாடு

**இ) மகாராஷ்டிரா ☑**

ஈ) மத்திய பிரதேசம்



✓ 2016ஆம் ஆண்டில், ஈர்ப்பு அலைகள் பற்றிய ஆராய்ச்சிக்கான LIGO – இந்திய மெகா அறிவியல் திட்டத்திற்கு இந்திய அரசாங்கம் 'கொள்கை அளவில்' ஒப்புதல் அளித்தது. இந்தியாவின் லேசர் இன்டர்ஃபெரோமீட்டர் கிராவிடேஷனல்–வேவ் அப்சர்வேட்டரி திட்ட வசதி மகாராஷ்டிராவில் வரவுள்ளது. சமீபத்தில், ஹிங்கோலி வருவாய் துறை இத்திட்டத்திற்காக 225 ஹெக்டேர் நிலத்தை ஒப்படைத்துள்ளது.

---

**2. இந்தியாவின் முதல் மீன்வள வணிக காப்பகமான – 'LINAC–NCDC மீன்வள வணிக அடைவு மையம்' திறக்கப்பட்டுள்ள நகரம் எது?**

அ) விசாகப்பட்டினம்

ஆ) கொச்சின்

**இ) குருகிராம் ☑**

ஈ) காந்திநகர்



✓ மத்திய மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை அமைச்சர் பர்ஷோத்தம் ரூபாலா, குருகிராமில் LINAC–NCDC மீன்வள வணிக அடைவு மையம் (LIFIC) எனப்படும் இந்தியாவின் முதல் மீன்வள வணிக காப்பகத்தை திறந்து வைத்தார்.

✓ தன்னம்பிக்கையை நோக்கி நகர்வதற்கு மீன்பிடித் துறையில் அவர்களு–க்கு ஆதரவளிக்கும் முயற்சிகளை தொழில்முனைவோர் மத்தியில் ஊக்குவிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த அடைவின் விலை ₹3.23 கோடி. மீன்வளத்துறையில் மொத்தம் 30,000 கூட்டுறவு சங்கங்கள் உள்ளன.

---

**3. 2021 – உலக ஆண்டிமைக்ரோபியல் விழிப்புணர்வு வாரத்தின் போது மேற்கொள்ளப்பட்ட பிரச்சாரத்தின் கருப்பொருள் என்ன?**

அ) Infection control

**ஆ) Go Blue ☑**

இ) Overusing antimicrobials

ஈ) Antimicrobial surveillance




✓ உலக சுகாதார அமைப்பு நுண்ணுயிர்க்கொல்லி தடுப்பாற்றலை முதல் 10 உலகளாவிய சுகாதார அச்சுறுத்தல்களுள் ஒன்றாக அறிவித்துள்ளது. இந்த ஆண்டு உலக நுண்ணுயிர்க்கொல்லி விழிப்புணர்வு வாரத்தில் (நவம்பர் 18–24), 'Go Blue' பிரச்சாரம் இது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

✓ பாக்டீரியா, வைரஸ்கள், பூஞ்சைகள் மற்றும் ஒட்டுண்ணிகள் போன்ற நுண்ணுயிரிகள் மருந்துகளுக்கு பதிலளிக்காதபோது நுண்ணுயிர்க் கொல்லி தடுப்பாற்றல் ஏற்படுகிறது. இது நோய்த்தொற்றுகளுக்கு சிகிச்–சையளிப்பதை கடினமாக்குகிறது.

---

**4. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற "Stop Soros" சட்டத்தை நிறைவேற்றிய நாடு எது?**

அ) இத்தாலி

**ஆ) ஹங்கேரி ☑**

இ) ஆஸ்திரேலியா

ஈ) அமெரிக்கா



✓ "ஸ்டாப் சொரோஸ்" சட்டமானது கடந்த 2018 ஜூனில் ஹங்கேரிய நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட ஒரு சட்டமாகும்.

✓ சட்டவிரோதமாக குடியேறியவர்களுக்கு நாட்டிற்குள் வசிப்பிடத்திற்காக விண்ணப்பிக்க உதவுவது ஓராண்டு வரை சிறைத்தண்டனையுடன் கூடிய குற்றம் என இந்தச்சட்டம் கூறுகிறது. இந்தச் சட்டத்தை பிரதமர் விக்டர் ஓர்பன் மற்றும் அவரது ஆளும் கட்சியான ஃபிடெஸ் ஆதரித்தது.

✓ அண்மையில் ஐரோப்பிய ஒன்றியத்தின் உயர்நீதிமன்றம், புகலிட வேண்டுவோர்க்கு ஆதரவளிப்பதைக் குற்றமாக்கும் ஹங்கேரியின் சட்டம் ஐரோப்பிய ஒன்றியத்தின் சட்டத்தை மீறுவதாக தீர்ப்பளித்தது.

---

**5. மாணவர்களின் கல்வித்திறனை மேம்படுத்துவதற்காக, 'Mother on Campus' என்ற முன்னெடுப்பைத் தொடங்கியுள்ள மாநிலம் எது?**

அ) அஸ்ஸாம்

**ஆ) திரிபுரா ☑**

இ) குஜராத்

ஈ) ஒடிஸா



✓ மாணவர்களின் கல்வித்திறனை மேம்படுத்துவதற்காக, திரிபுரா கல்வித் துறை, 'வளாகத்தில் தாய்' என்ற முயற்சியைத் தொடங்கியுள்ளது. இங்கு, சொந்த அல்லது சட்டப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுடன் கல்வி வளாகத்தில் தங்கலாம். குழந்தைகளிடையே பாதுகாப்புணர்வை இது தூண்டலாம் மற்றும் குழந்தைகளின் கல்வித் திறனுக்கு இது பயனளிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. திரிபுராவில் அரசு நடத்தும் விடுதிகள் மற்றும் உறைவிடப் பள்ளிகளில் தங்கும் குழந்தைகளின் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுடன் தங்கலாம்.

---

**6. மத்திய ப்ளீஸ்டோசீன் காலத்தில் ஆப்பிரிக்காவில் வாழ்ந்த மனித மூதாதைய இனங்களுக்கு வழங்கப்பட்ட புதிய பெயரென்ன?**

**அ) ஹோமோ போடோயென்சிஸ் ☑**

ஆ) ஹோமோ ஆப்பிரிக்கன்

இ) ஹோமோ சிபானியன்

ஈ) ஹோமோ நியாண்டர்தால்கள்



✓ சுமார் அரை மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு, தற்போது சிபானியன் என்றழைக்கப்படும் மத்திய ப்ளீஸ்டோசீன் காலத்தில் ஆப்பிரிக்காவில் வாழ்ந்த 'ஹோமோ போடோயென்சிஸ்' என்ற மனித மூதாதையர்களை அறிவியலாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். எத்தியோப்பியாவின் போடோ டி'ஆரில் கண்டுபிடிக்கப்பட்ட மண்டையோட்டினால் 'போடோயென்சிஸ்' என அழைக்கப்படுகிறது

---

**7. பிரதமரின் பொருளாதார ஆலோசனைக்குழுவின் தலைவர் யார்?**

**அ) பிபேக் டெப்ராய் ☑**

ஆ) ராகேஷ் மோகன்

இ) பூனம் குப்தா

ஈ) டி டி ராம் மோகன்



✓ பிரதமர் மோடி தனது பொருளாதார ஆலோசனைக் குழுவை (EAC–PM) மறுசீரமைக்க ஒப்புதலளித்துள்ளார். இந்திய புள்ளியியல் நிறுவனத்தின் தலைவர் பிபேக் டெப்ராய் அக்கவுன்சிலின் தலைவராக உள்ளார். ரிசர்வ் வங்கியின் முன்னாள் துணை ஆளுநர் இராகேஷ் மோகன், ஐஐஎம் அகமதாபாத் பேராசிரியர் டி டி ராம் மோகன் மற்றும் என்சிஏஇஆர்–ன் டைரக்டர் ஜெனரல் பூனம் குப்தா ஆகியோர் ஏழு உறுப்பினர்களைக் கொண்ட குழுவில் இணைந்த மூன்று புதிய உறுப்பினர்கள் ஆவார்.

✓ ஈராண்டு காலத்திற்கு இப்புதிய ஆலோசனைக்குழு நியமிக்கப்பட்டுள்ள–து. இந்த அவையின் தலைவர் மற்றும் மூன்று உறுப்பினர்கள் அவ்வாறே தக்கவைக்கப்பட்டுள்ளனர்.

---

**8. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற வில்வாத்ரி கால்நடைகள், எந்த மாநிலத்தில், 'மரபணு ரீதியாக வேறுபட்டவை – Genetically Divergent' என அறிவிக்கப்பட்டன?**

அ) தமிழ்நாடு

**ஆ) கேரளா ☑**

இ) ஆந்திர பிரதேசம்

ஈ) ஒடிஸா



✓ கேரளாவின் திருச்சூர் மாவட்டத்தின் பூர்வீக வில்வாத்ரி கால்நடைகள், மாநிலத்தில் உள்ள மற்ற கால்நடைகளிலிருந்து 'மரபணு ரீதியாக வேறுபட்டவை' ஆகும். விலங்கு மரபியல் மற்றும் இனப்பெருக்கத்தில் மேம்பட்ட ஆய்வுகளுக்கான மையத்தின் அறிவியலாளர்கள் குழுவால் அதன் மரபணு வேறுபாடு ஆய்வுசெய்யப்பட்டது.

✓ பாலக்காடு–திருச்சூர் எல்லையில் காணப்படும் வில்வாத்ரி கால்நடைக –ள், மாநிலத்தின் பிற பூர்வீகக்கால்நடைகளைப்போலவே திமிலுடைய –வை, ஆனால் அவை நீளமான கொம்புகளுடன் பெரியதாக இருக்கும். உள்நாட்டு இனங்கள் நோயெதிர்ப்பு சக்தி கொண்டவை மற்றும் அதிக வெப்பநிலையை தாங்கும் திறன்கொண்டவை.

---

**9. அறிகுறியுடைய COVID சிகிச்சைக்காக 'மோல்னுபிராவிர்' என்ற வாய்வழி உட்கொள்ளும் மாத்திரையை அங்கீகரித்துள்ள உலகின் முதல் நாடு எது?**



அ) அமெரிக்கா

**ஆ) UK ☑**

இ) ஆஸ்திரேலியா

ஈ) சீனா

✓ அறிகுறியுடைய COVID–19 சிகிச்சைக்காக வடிவமைக்கப்பட்ட முதல் வைரஸ் தடுப்பு மாத்திரையை UK மருந்து கட்டுப்பாட்டாளர் சமீபத்தில் அங்கீகரித்துள்ளார். 'மோல்னுபிராவிர்' என்ற அம்மாத்திரையானது, சமீபத்தில் நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு ஒரு நாளைக்கு இருமுறை வழங்கப்படுகிறது.

✓ காய்ச்சலுக்கு சிகிச்சையளிப்பதற்காக முதலில் உருவாக்கப்பட்ட இந்த மாத்திரை, மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவது அல்லது இறப்பு அபாயத்தை பாதியாகக் குறைப்பதாகக் கூறப்படுகிறது.

---

**10. "பெகபெகா–டு–ரோவா" என்ற நீண்டவால்கொண்ட வௌவால் சார்ந்த நாடு எது?**



அ) ஆஸ்திரேலியா

**ஆ) நியூசிலாந்து ☑**

இ) ஜப்பான்

ஈ) சீனா

✓ நியூசிலாந்தைச்சார் பெகபெகா–டு–ரோவா என்ற நீண்டவால்கொண்ட வௌவால் 2021 ஆம் ஆண்டின் 'சிறந்த பறவை' விருதை பெற்றுள்ளது/ இது அந்த நாட்டின் தன்னாட்சிமிக்க அமைப்பான "ஃபாரஸ்ட் அண்ட் பேர்ட்" ஆல் வழங்கப்பட்டது. இவ்விருது ஒரு வகையான போட்டியாகும், இதன்கீழ் நியூசிலாந்தர்கள் தங்களுக்கு பிடித்த பறவைகளை நாட்டின் பூர்வீக இனங்கள் வாரியாக தரவரிசைப்படுத்துகிறார்கள், இது அவர்களி –ன் சுற்றுச்சூழல் அவலநிலைபற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. 'துல்லிய தாக்குதல் ஹீரோ' – அபிநந்தனுக்கு வீர் சக்ரா விருது:**

பாகிஸ்தானுக்கு எதிரான துல்லிய தாக்குதலின்போது தீரத்துடன் போராடிய தமிழகத்தைச் சேர்ந்த கமாண்டர் அபிநந்தனுக்கு இன்று வீர் சக்ரா விருது வழங்கி குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் கவுரவிக்கிறார்.

தமிழகத்தைச் சேர்ந்த அபிநந்தன், இந்திய விமானப்படையில் விங் கமாண்டராக பணியாற்றி வருகிறார். கடந்த 2019–ம் ஆண்டு ஆரம்பத்தில் காஷ்மீரில் புல்வாமா மாவட்டத்தில் தீவிரவாதிகள் தற்கொலைப்படை தாக்குதல் நடத்தினர். இதற்கு பதிலடியாக இந்திய போர் விமானங்கள் பாகிஸ்தான் பகுதிக்குள் ஊடுருவி தீவிரவாத முகாம்களை அழித்தன. 2019–ம் ஆண்டு பிப்ரவரி 27– தேதி இந்தியாவுக்குள் ஊடுருவ முயன்ற பாகிஸ்தான் போர் விமானத்தை வீரர் அபிநந்தன் மிக் 21 ரக விமானத்தில் விரட்டிச் சென்று சுட்டு வீழ்த்தினார்.

இந்த தாக்குதலின்போது பாகிஸ்தான் பகுதிக்குள் அபிநந்தன் சென்ற விமானம் விழுந்தது. பாகிஸ்தானில் கைது செய்யப்பட்ட அபிநந்தன் பின்னர், மத்திய அரசின் முயற்சியால் உலக நாடுகள் பாகிஸ்தானுக்கு கொடுத்த அழுத்தம் காரணமாக விடுவிக்கப்பட்டார். பாகிஸ்தான் தாக்குதலை முறியடித்து அந்நாட்டின் போர் விமானத்தை சுட்டு வீழ்த்தியதற்காக அபிநந்தன் இடம்பெற்றுள்ள விமானப்படையின் 51–வது படைப்பிரிவை பாராட்டி குழு விருது வழங்கப்பட்டது.

இதையடுத்து அபிநந்தனுக்கு அவரது வீரத்தை பாராட்டி வீர் சக்ரா விருது வழங்குவதாக அறிவிக்கப்பட்டது. மேலும் ராணுவ கமாண்டர் அபிநந்தன், குழு கேப்டனாக பதவி உயர்வு வழங்கப்பட்டது.

இந்தநிலையில் அவருக்கு குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் அபிநந்தனுக்கு இன்று வீர் சக்ரா விருது வழங்கி கவுரவிக்கிறார்.

இதுமட்டுமின்றி ஜம்மு காஷ்மீரில் தீவிரவாதிகளை முறியடித்ததற்காக, இந்திய விமானப்படையின் மூத்த அதிகாரி பிரகாஷ் ஜாதவுக்கு, இரண்டாவது மிக உயர்ந்த வீர விருதான கீர்த்தி சக்ரா (மரணத்திற்குப் பின்) வழங்கப்படுகிறது.

---

**2. பிஎம்சி வங்கியை கையகப்படுத்துவதற்கான வரைவு திட்டம்: ரிசா்வ் வங்கி வெளியீடு**

பஞ்சாப் & மகராஷ்டிரா கூட்டுறவு (பிஎம்சி) வங்கியை தில்லியைச் சோ்ந்த யுனிட்டி ஸ்மால் ஃபைனான்ஸ் வங்கி (யுஎஸ்எஃப்பி) கையகப்படுத்துவதற்கான வரைவு திட்டத்தை ரிசா்வ் வங்கி திங்கள்கிழமை அறிவித்தது.

இதுகுறித்து ரிசா்வ் வங்கி மேலும் கூறியுள்ளதாவது:

இந்த வரைவுத் திட்டம் பிஎம்சி வங்கியின் சொத்துகள், டெபாசிட் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்புகளையும் யுஎஸ்எஃப்பி எடுத்துக் கொள்ள வகை செய்கிறது. இதனால், டெபாசிட்தாரா்களுக்கு கூடுதல் அளவிலான பாதுகாப்பு கிடைக்கும் என ரிசா்வ் வங்கி தெரிவித்துள்ளது.

ரியல் எஸ்டேட் துறையைச் சோ்ந்த ஹெச்டிஐஎல் நிறுவனத்துக்கு அதிக அளவிலான கடன் கொடுத்து அதனை மறைக்க முற்பட்டதையடுத்து பிஎம்பிசி வங்கி நிதி நெருக்கடியில் சிக்கியது.

பிஎம்சி வங்கி நிதி மோசடியில் ஈடுபட்டது உறுதியானதையடுத்து கடந்த 2019 செப்டம்பரில் அந்த வங்கியை ரிசா்வ் வங்கி தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது. இதையடுத்து, அதன் வாடிக்கையாளா்கள் பணத்தை திரும்பப் பெறுவது உள்ளிட்ட பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டது.

இந்த நிலையில், யுஎஸ்எஃப்பி நிறுவனம் வங்கியாக செயல்படுவதற்கான உரிமம் 2021 அக்டோபரில் வழங்கப்பட்டது. நவம்பா் 1–ஆம் தேதியிலிருந்து யுஎஸ்எஃப்பி தனது செயல்பாடுகளை தொடங்கிய நிலையில், தற்போது பிஎம்சி வங்கியை இணைத்துக் கொள்வதற்கான வரைவு திட்டத்தை ரிசா்வ் வங்கி வெளியிட்டுள்ளது.

---

**3. இன்று தொடங்குகிறது உலக டேபிள் டென்னிஸ்**

உலக டேபிள் டென்னிஸ் சாம்பியன்ஷிப் போட்டி அமெரிக்காவின் டெக்ஸாஸ் மாகானத்தில் செவ்வாய்க்கிழமை தொடங்குகிறது.

வரும் 29–ஆம் தேதி வரை நடைபெறும் இந்தப் போட்டியில் இந்தியாவிலிருந்து 4 வீரா்கள், 5 வீராங்கனைகள் என 9 போ் அணி பங்கேற்கிறது. இவா்கள் தனிநபா், இரட்டையா் மற்றும் கலப்பு அணிகள் பிரிவுகளில் விளையாடவுள்ளனா்.

ஆடவா் பிரிவில் அந்தோணி அமல்ராஜ், ஹா்மீத் தேசாய், சத்தியன் ஞானசேகரன், சரத் கமல் ஆகியோரும், மகளிா் பிரிவில் அா்ச்சனா காமத், அஹிகா முகா்ஜி, மதுரிகா பட்கா், மணிகா பத்ரா, சுதிா்தா முகா்ஜி ஆகியோரும் களம் காண்கின்றனா்.

---

4. 23 நவம்பர் 2021 – 'உவமைக் கவிஞர்' சுரதா அவர்களின் 101ஆவது பிறந்தநாள்.

---

**5. சேதி தெரியுமா?**

நவ.14: ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெற்ற எட்டாவது டி20 உலகக் கோப்பை கிரிக்கெட் இறுதிப் போட்டியில் நியூசிலாந்தை வீழ்த்தி ஆஸ்திரேலியா முதன்முறையாகக் கோப்பையை வென்றது.

நவ.15: உலகில் 60 சதவீத வருவாய் உள்ள 10 நாடுகளின் பட்டியலில் அமெரிக்காவைப் பின்னுக்குத் தள்ளி சீனா முதலிடம் பிடித்தது.

நவ.16: 2024ஆம் ஆண்டு டி20 உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியை முதன்முறையாக மேற்கிந்திய தீவுகளுடன் இணைந்து அமெரிக்கா நடத்துகிறது. 29 ஆண்டுகளுக்குப் பிறகு 2025இல் பாகிஸ்தானில் ஐசிசி சாம்பியன்ஸ் டிராபி போட்டி நடைபெறுகிறது. 2024

– 2031 காலகட்டத்தில் இந்தியா மூன்று ஐசிசி தொடர்களை நடத்த உள்ளது.

நவ.17: சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியாக முனீஸ்வர்நாத் பண்டாரி நியமிக்கப்பட்டார். அவர் பொறுப்பேற்கும் வரை அப்பொறுப்பை மூத்த நீதிபதி துரைசாமி வகிப்பார் என்று குடியரசுத் தலைவர் உத்தரவிட்டார்.

நவ.17–18: இமாச்சல பிரதேச மாநிலம் சிம்லாவில் அனைத்திந்திய சட்டப்பேரவைத் தலைவர்கள் மாநாடு நடைபெற்றது. அனைத்திந்திய சட்டப்பேரவைத் தலைவர்கள் மாநாட்டின் நூற்றாண்டைக் கொண்டாடும்விதமாக இம்மாநாடு நடைபெற்றது.

நவ.18: தமிழகத்தில் விளையாட்டு வீரர்களுக்கான மூன்று சதவீத இட ஒதுக்கீட்டில் சிலம்பாட்டம் விளையாட்டைச் சேர்த்து தமிழக அரசு அரசாணை வெளியிட்டது.

நவ.18: மயானங்களில் பணிபுரியும் ஊழியர்களை முன்களப் பணியாளர்களாக அறிவித்து தமிழக அரசு அரசாணை வெளியிட்டது.

நவ.19: மத்திய அரசு கொண்டு வந்த மூன்று வேளாண் சட்டங்களைத் திரும்பப் பெறுவதாகப் பிரதமர் மோடி அறிவித்தார்.

நவ.19: அமெரிக்க அதிபர் ஜோ பைடனுக்கு முழு உடல் பரிசோதனையில் மயக்க மருந்து கொடுக்கப்பட்டதால், சில மணி நேரங்களுக்குத் தற்காலிக அதிபர் பொறுப்பை கமலா ஹாரிஸ் ஏற்றார். அமெரிக்க வரலாற்றில் பெண் ஒருவர் அதிபர் அதிகாரங்களை ஏற்றது இதுவே முதன்முறை.

நவ.19: 580 ஆண்டுகளுக்குப் பின்பு வானில் நீண்ட சந்திர கிரகணம் நிகழ்ந்தது. இதற்கு முன்பு நீண்ட சந்திர கிரகணம் 1440ஆம் ஆண்டு பிப்ரவரி 18 அன்று நிகழ்ந்தது.

---

**6. சையது முஷ்டாக் அலி கோப்பையை – 3–வது முறையாக வென்றது தமிழக அணி:**

சையது முஷ்டாக் அலி டி 20 தொடரின் இறுதிப் போட்டியில் கர்நாடகாவுக்கு எதிராக கடைசி பந்தில் ஷாருக்கான் சிக்ஸர் விளாச தமிழக அணி 4 விக்கெட்கள் வித்தியாசத்தில் சாம்பியன் பட்டம் வென்றது.

டெல்லி பெரோஷா கோட்லா மைதானத்தில் நேற்று நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் பேட்செய்த கர்நாடகா 7 விக்கெட்கள் இழப்புக்கு 151 ரன்கள்குவித்தது. 152 ரன்கள் இலக்குடன் பேட் செய்த தமிழக அணிக்கு பிரதீக் ஜெயின் வீசிய கடைசி ஓவரில் 16 ரன்கள் தேவைப்பட்டது. ஷாருக்கான், ஷாய் கிஷோர் களத்தில் இருந்தனர். முதல் பந்தில் ஷாய் கிஷோர் பவுண்டரி அடித்தார். அடுத்த 4 பந்துகளில் மேற்கொண்டு 7 ரன்கள் சேர்க்கப்பட்டது. இதில் 2 உதிரிகளும் அடங்கும்.

கடைசி பந்தில் 5 ரன்கள்தேவைப்பட்ட நிலையில்ஷாருக்கான், டீப் பந்தை ஸ்கொயர் லெக் திசையில் சிக்ஸருக்கு விளாச தமிழக அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 153 ரன்கள் எடுத்து வெற்றி பெற்றது. ஷாருக்கான் 15 பந்துகளில், 3 சிக்ஸர்கள், ஒரு பவுண்டரியுடன் 33 ரன்கள் விளாசினார். ஷாய் கிஷோர் 6 ரன்கள் சேர்த்தார். முன்னதாக நாராணயன் ஜெகதீசன் 41, ஹரி நிஷாந்த் 23, விஜய் சங்கர்18 ரன்கள் சேர்த்து ஆட்டமிழந்தனர்.

சையது முஷ்டாக் அலிகோப்பையை தமிழக அணி வெல்வது இது 3–வது முறையாகும். இதற்கு முன்னர் 2006 மற்றும் 2020–ம் ஆண்டும் தமிழக அணி கோப்பையை வென்றிருந்தது.

---

**7. கோவையில் தமிழ்நாடு முதலீட்டாளர்கள் மாநாடு தொடங்கியது**

கோவையில் முதல்வர் மு க ஸ்டாலின் தலைமையில் தமிழ்நாடு முதலீட்டாளர்கள் மாநாடு 2021 தொடங்கியது.

திமுக அரசு, ஆட்சிக்கு வந்த முதல் மாதத்திலேயே சென்னை கிண்டியில் முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்தியது. தொடர்ந்து 2–வதாக சென்னை கலைவாணர் அரங்கில் முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெற்றது. இவ்விரு மாநாடுகளிலும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலமாக ரூ.21 ஆயிரம் கோடிக்கும் அதிகமான முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சூழலில், அடுத்த கட்டமாக 3–வது முதலீட்டாளர்கள் மாநாடு கோவையில் இன்று தொடங்கியுள்ளது. கோவை கொடீசியா வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள தொழித்துறை கண்காட்சியை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பார்வையிட்டார். முதல்வர் தலைமையில் நடைபெறும் இம் மாநாட்டில், 40 முதல் 45 வெளிநாடு மற்றும் உள்நாட்டின் முன்னணி நிறுவனங்கள் முதலீட்டுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட உள்ளன.

---

**1. எந்த ஆண்டுக்குள் யமுனையை முழுமையாக தூய்மைப்படுத்த ஆறு அம்ச செயல் திட்டத்தை தில்லி அரசு அறிவித்துள்ளது?**

அ) 2022

**ஆ) 2025 ☑**

இ) 2030

ஈ) 2035

2025

✓ தில்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால், 2025ஆம் ஆண்டுக்குள் யமுனையை முழுவதுமாக தூய்மைப்படுத்துவதற்கான ஆறு அம்ச செயல்திட்டத்தை அறிவித்தார். புதிய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள், ஏற்கனவே உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் திறனை அதிகரிப்பது மற்றும் யமுனைக்குள் மாசுக்கள் வெளியேறாமல் இருக்க புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துதல் ஆகியவை இந்தச் செயல் திட்டத்தில் அடங்கும்.

---

**2. 2022 ஜனவரி முதல் துணிகள், ஆடைகள் மற்றும் பாதணிகள் மீதான சீரான சரக்கு மற்றும் சேவை வரி (GST) விகிதம் என்ன?**

அ) 5

ஆ) 8

**இ) 12 ☑**

ஈ) 18

12%

✓ மத்திய மறைமுக வரிகள் மற்றும் சுங்க வாரியம் துணிகள், ஆடைகள் மற்றும் பாதணிகளுக்கு ஒரே மாதிரியான சீரான சரக்கு மற்றும் சேவை வரி விகிதத்தை (12 சதவீதமாக) அறிவித்துள்ளது. இப்புதிய விகிதமானது தலைகீழ் வரி கட்டமைப்பை சரிசெய்வதை நோக்கமாகக்கொண்டு உள்ளது. இந்தச் சரி செய்யப்பட்ட விகிதங்கள் 2022 ஜனவரி 1 முதல் நடைமுறைக்கு வரும். முன்னதாக, ஆடைகளுக்கு ₹1000 வரையிலான விற்பனை மதிப்புக்கு 5 சதவீதமாகவும், பாதணிகளில் ஒரு ஜோடிக்கான GST விகிதம் 5 சதவீதமாகவும் இருந்தது.

---

**3. இந்திய காவல் அறக்கட்டளையின் ஸ்மார்ட் போலிசிங் குறியீட்டில் முதல் இடத்தைப் பிடித்துள்ள இந்திய மாநிலம் எது?**

அ) தமிழ்நாடு

ஆ) தெலுங்கானா

**இ) ஆந்திர பிரதேசம் ☑**

ஈ) குஜராத்

INDIAN POLICE FOUNDATION

✓ இந்திய காவல் அறக்கட்டளையானது 2021ஆம் ஆண்டுக்கான ஸ்மார்ட் போலிசிங் குறியீட்டை வெளியிட்டுள்ளது. ஆறு திறன் அடிப்படையிலான பரிமாணங்களையும் 3 மதிப்புகள் அடிப்படையிலான நம்பிக்கையையும் இக்குறியீடு பயன்படுத்தியது. இது பொதுமக்களின் கருத்துக்கள் மற்றும் குடிமக்களின் திருப்தியை அளவிடுகிறது.

✓ ஆந்திர பிரதேசம் (8.11), தெலுங்கானா (8.10), அஸ்ஸாம் (7.89) ஆகிய மாநிலங்களிலுள்ள காவல்துறையின் தரம் திருப்தியளிக்கும் அளவுக்கு உள்ளது. அம்மாநிலங்களைத் தொடர்ந்து கேரளா, சிக்கிம், மிசோரம் ஆகிய மாநிலங்கள் உள்ளன.

---

**4. COVID தொற்றை கையாள்வதற்காக சமீபத்தில் $490 பில்லியன் மதிப்பிலான ஊக்கப்பொதிக்கு ஒப்புதல் அளித்த ஆசிய நாடு எது?**

அ) சீனா

**ஆ) ஜப்பான் ☑**

இ) இந்தியா

ஈ) பாகிஸ்தான்



✓ COVID தொற்றால் பொருளாதாரம் மோசமடைந்ததற்கு உதவ ஜப்பானின் அமைச்சரவை சாதனை அளவாக ¥56 டிரில்லியன் ($490 பில்லியன்) மதிப்பிலான ஊக்கப்பொதிக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

✓ இந்தத் திட்டத்தில் 18 வயது அல்லது அதற்கு மேற்பட்டவர்களுக்கு பண உதவியாக தலா $880 வழங்குவது COVID-19 நடவடிக்கைகளால் விற்பனை மந்தமான வணிகங்களுக்கு நிதியுதவி வழங்குவது ஆகியன அடங்கும். பிரதம மந்திரி புமியோ கிஷிடா இந்தத் திட்டத்தை அறிவித்தார்.

---

**5. 2021 – உலக கழிப்பறை நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**

**அ) Valuing Toilets ☑**

ஆ) Importance of Sanitation

இ) Global Sanitation Crisis

ஈ) Collective Action

19 November WORLD TOILET DAY

✓ ஐநா அவையால் ஆண்டுதோறும் நவம்பர்.19ஆம் தேதி அன்று 'உலக கழிப்பறை நாள்' கடைப்பிடிக்கப்படுகிறது. தூய்மையின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், உலகளாவிய சுகாதார நெருக்க –டியைச் சமாளிக்க கூட்டு நடவடிக்கையை உறுதிப்படுத்தவும் இந்த நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. "Valuing Toilets" என்பது நடப்பாண்டு (2021) வரும் இந்நாளுக்கானக் கருப்பொருளாகும்.

---

**6. டிஜிட்டல் வர்த்தகத்திற்காக முன்மொழியப்பட்ட திறந்த வலை–அமைப்பு திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக ஒரு நிபுணர் குழுவை அமைத்த நிறுவனம் எது?**

**அ) இந்திய தர கவுன்சில் ☑**

ஆ) இந்திய தேசிய கொடுப்பனவு கழகம்

இ) இந்திய ரிசர்வ் வங்கி

ஈ) நாஸ்காம்

QUALITY COUNCIL OF INDIA QCI Creating an Ecosystem for Quality

✓ இந்தியத் தர கவுன்சிலானது (QCI) டிஜிட்டல் வர்த்தகத்திற்கான திறந்த வலையமைப்பு என்றவொரு (Open Network for Digital Commerce) முன் மொழியப்பட்ட திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக ஒரு நிபுணர் குழுவை நிறுவியுள்ளது. வணிகம் & தொழிற்துறை அமைச்சகத்தின்படி, பல சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் ஒரு திட்டத்தைச் செயல்படுத்த தன்னார்வத் தொண்டர்களாக உள்வாங்கப்பட்டுள்ளன.

✓ தொழிற்துறை மற்றும் உள்நாட்டு வர்த்தகத்தை மேம்படுத்துவதற்கான துறை மின்னணு வர்த்தகத்தை பொதுமைப்படுத்துவதற்காக, தளம் ஒன்றை மையமாகக்கொண்ட மாதிரியிலிருந்து திறந்த வலையமைப்பி –ற்கு நகர்த்தி இந்தத் திட்டத்தைத் தொடங்கியுள்ளது.

---


**7. COVID-19 தடுப்பூசிகளை வாங்குவதற்காக $2 பில்லியன் கடன் வேண்டி, இந்தியா, எந்த நிறுவனத்திடம் விண்ணப்பித்துள்ளது?**

அ) உலக வங்கி

**ஆ) ADB-AIIB ☑**

இ) BRICS வங்கி

ஈ) IMF



✓ COVID-19 தடுப்பூசிகளை வாங்குவதற்காக, ஆசிய உட்கட்டமைப்பு & முதலீட்டு வங்கி (AIIB) மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கி (ADB) ஆகிய இரு வங்கிகளிடமிருந்து $2 பில்லியன் கடனைப்பெற இந்தியா விண்ணப்பம் செய்துள்ளது. மணிலாவைச் சார்ந்த ADB $1.5 பில்லியனும் பீஜிங்கைச் சார்ந்த AIIB $500 மில்லியனும் வழங்க பரிசீலித்து வருகின்றன. சுமார் 667 மில்லியன் டோஸ் COVID தடுப்பூசிகள் கடன்மூலம் வாங்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டது.

---

**8. COP26 உச்சிமாநாட்டில் தீவுகளின் நிலையை மீட்டெடுப்பது (IRIS) குறித்த முன்முயற்சியைத் தொடங்கிய நாடு எது?**

அ) UK

ஆ) அமெரிக்கா

**இ) இந்தியா ☑**

ஈ) ஆஸ்திரேலியா



✓ இந்தியப்பிரதமர் நரேந்திர மோடி, சிறு தீவுநாடுகளின் உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான முன்முயற்சியை (Initiative for the Resilient Island States (IRIS)) தொடங்கினார். சிறிய வளரும் தீவு நாடுகள் காலநிலை மாற்றத்தால் மிகப்பெரிய அச்சுறுத்தலை எதிர்கொள்வதாக பிரதமர் கூறினார். இந்திய விண்வெளி நிறுவனமான ISRO அவற்றுக்கு புயல்கள், பவளப்பாறை கண்காணிப்பு, கடலோர கண்காணிப்பு பற்றிய தகவல்களை செயற்கைக்கோள்மூலம் வழங்குவதற்காக ஒரு சிறப்பு தரவு சாளரத்தை உருவாக்கவுள்ளது.

---

**9.** 2021 – ஜெய் பீம் முதலமைச்சர் பிரதிபா விகாஸ் யோஜனாவைத் தொடங்கியுள்ள மாநிலம் / யூனியன் பிரதேசம் எது?




அ) தமிழ்நாடு

ஆ) மகாராஷ்டிரா

இ) ஆந்திர பிரதேசம்

**ஈ) தில்லி ☑**

- ✓ தில்லி அரசு 2021 – ஜெய் பீம் முதலமைச்சர் பிரதிபா விகாஸ் யோஜனா என்ற திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- ✓ இது பட்டியலினத்தவர், பழங்குடியினர் & பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்களின் நலனுக்காக தில்லி அரசால் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் UPSC, CDS, NEET, JEE முதன்மைத் தேர்வுகளுக்குத் தயாராகும் ஏழை எளிய மாணவர்களுக்கு இலவசப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படும்.

---

**10.** Inti tanager (*Heliothraupis oneilli*) **என்பது அண்மையில் கண்டுபி–டிக்கப்பட்ட எவ்வகை உயிரினமாகும்?**



**அ) பறவை ☑**

ஆ) மீன்

இ) பாம்பு

ஈ) சிலந்தி

- ✓ Inti tanager (*Heliothraupis oneilli*) எனப் பெயர் சூட்டப்பட்டுள்ள புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு பறவையினம், 370க்கும் மேற்பட்ட பாடும் பற–வையினங்களை உள்ளடக்கிய Thraupidae'இன் பெருங்குடும்பத்தைச் சேர்ந்தவையாகும். அப்பறவைகள் அமெரிக்க வெப்பமண்டலங்களைச் சார்ந்தவையாகும். இந்தக் குறிப்பிட்ட பறவையினம் பொலிவியா மற்றும் பெருவின் யுங்காஸ் பயோரிஜியனில் வாழ்கின்றது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. வீரமரணமடைந்த ஹவில்தார் பழனிக்கு வீர் சக்ரா விருது; மனைவி பெற்றுக்கொண்டார்**

கல்வான் பள்ளத்தாக்கில் சீன வீரர்கள் அத்துமீறி தாக்குதல் நடத்திய போது மோதலில் உயிரிழந்த தமிழகத்தை சேர்ந்த ஹவில்தார் பழனிக்கு வீர் சக்ரா விருதினை அவரது மனைவியிடம் குடியரசுத்தலைவர் ராம்நாத் கோவிந்த் வழங்கினார்.

கடந்த ஆண்டு ஜூன் மாதம் 15–ம் தேதி லடாக் எல்லையில் இந்தியாவுக்கு உட்பட்ட கல்வான் பகுதியில் சீனப் படையினர் அத்துமீறி நுழைந்தனர். அவர்களை இந்திய வீரர்கள் தடுத்து நிறுத்தினர். அப்போது இருதரப்புக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது. இதில் இந்திய தரப்பில் 20 வீரர்கள் வீரமரணம் அடைந்தனர். இவர்களில் தெலங்கானா–வைச் சேர்ந்த கர்னல் சந்தோஷ் பாபுவும் ஒருவர்.

கர்னல் சந்தோஷ் பாபு

உயிரிழந்த 20 பேரில் ராமநாதபுரம் மாவட்டம் கடுக்கலூரைச் சேர்ந்த ஹவில்தார் பழனியும் ஒருவர். வீரர் பழனியின் உடல் சொந்த கிராமத்திற்குக் கொண்டுவரப்பட்டு மத்திய, மாநில அரசுகள் சார்பில் ராணுவ மரியாதையுடன் அடக்கம் செய்யப்பட்டது.

ஹவில்தார் பழனி

உயிரிழந்த வீரர்களுக்கு ராணுவ விருதுகள் அறிவிக்கப்பட்டன. கர்னல் சந்தோஷ் பாபுவுக்கு மகாவீர் சக்ரா விருது அறிவிக்கப்பட்டது. தமிழகத்தை சேர்ந்த ஹவில்தார் பழனிக்கான வீர் சக்ரா விருத அறிவிக்கப்பட்டது.

---

**2. சுற்றுலாவை ஊக்குவிக்க 'பாரத் கௌரவ்' தனியார் ரயில் திட்டம்**

சரக்கு, பயணிகள் ரயில்களுக்கு அடுத்தபடியாக சுற்றுலாத் துறையை ஊக்குவிக்கவும் இந்தியாவின் கலாசார பாரம்பரியத்தை பறைசாற்றவும், கௌரவ் ரயில்கள் என்ற பெயரில் 190 ரயில்கள் இயக்கப்படும் என்றும் இதை தனியாரும் நிர்வகிப்பர் என்றும் மத்திய ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

---

**3. கரோனா ஊரடங்கு காலத்தில் புத்தகம் எழுதி வெளியிட்ட 11 வயது காஷ்மீர் சிறுமி**

கரோனா ஊரடங்கு காலத்தில் புத்தகம் எழுதி இளம் எழுத்தாளராக உருவெடுத்துள்ளார் 11 வயது காஷ்மீர் சிறுமி.

கரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்துவதற்காக கடந்தஆண்டு மார்ச் மாதம் நாடு முழுவதும் ஊரடங்கு அமல்படுத்தப்பட்டது. இதனால் கல்வி நிறுவனங்கள் மூடப்பட்டன. இணையவழியில் பாடங்கள் நடத்தப்பட்டன.

இந்த ஊரடங்கு காலத்தை சில மாணவர்கள் பயனுள்ள வகையில் மாற்றிக் கொண்டனர். அந்த வகையில், தெற்கு காஷ்மீரின் அனந்த்நாக் மாவட்டம் பாட்டெங்கூ கிராமத்தைச் சேர்ந்த11 வயது சிறுமி அதீபா ரியாஸ், இளம் எழுத்தாளராக உருவெடுத்துள்ளார்.

தனியார் பள்ளியில் 7ஆம் வகுப்பு படிக்கும் அவர், ஊரடங்கின்போது தனிமைப்படுத்தப்பட்ட நிலையில் இருந்தபோது ஏற்பட்ட எண்ணங்கள், கருத்துகள், உணர்வுகளை எழுதியுள்ளார். இது 'ஜீல் ஆப் பென்' என்ற தலைப்பில் ஒரு புத்தகமாக கடந்த செப்டம்பர் மாதம் வெளியிடப்பட்டது. 96 பக்கங்களைக் கொண்டுள்ள இந்தப் புத்தகம் அமேசானில் கிடைக்கிறது.

---

**4. தனியார் கிரிப்டோகரன்சிக்கு தடை விதிக்கும் மசோதா வரும் நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் தாக்கல் செய்யப்பட உள்ளதாக தகவல்**

தனியார் கிரிப்டோகரன்சிக்கு தடை விதிக்கும் மசோதா, வரும் நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் தாக்கல் செய்யப்பட உள்ளது. ரிசர்வ் வங்கியின் மூலம் இந்தியாவின் பிரத்தியேக டிஜிட்டல் பணம் பகிர்வதற்கும் சட்டமசோதா வழி வகுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கிரிப்டோகரன்சி எனப்படும் மெய்நிகர் நாணயம் பல நாடுகளில் பிரபலமடைந்து வருகிறது. பிட்காயின், எத்தீரியம், லைட்காயின், டீத்தர், சொலானா போன்ற கிரிப்டோகரன்சிகளில் அதிகளவில் பரிவர்த்தனை செய்கின்றனர். ஒரு பிட்காயின் மதிப்பு தற்போதைய நிலவரப்படி 42 லட்சத்து 83 ஆயிரம் ரூபாயாகும்.

டிஜிட்டல் நாணயங்களில் முதலீடு தொடர்பான விளம்பரங்களால் ஈர்க்கப்பட்டு ஏராளமானோர் முதலீடு செய்வதால், கிரிப்டோகரன்சி பொருளாதார ரீதியாக புதிய சவாலை ஏற்படுத்தி வருகிறது.

பிரதமர் மோடி தலைமையில் அண்மையில் நடைபெற்ற கூட்டத்தில், தனியார் கிரிப்டோகரன்சியால் நிதிமோசடிகள் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதி செல்லும் அபாயம் உள்ளதாக அச்சம் தெரிவிக்கப்பட்டது.

இந்தியாவில் 2 கோடி கிரிப்டோ முதலீட்டாளர்கள் இருப்பதாகவும், 40 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு முதலீடு செய்யப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது. தனியார் டிஜிட்டல் கரன்சிக்குத் தடை விதிக்கப்பட்டால் இந்நிறுவனங்கள் பேரிழப்பை சந்திக்க நேரிடும் என்றும் கூறப்படுகிறது.

கிரிப்டோ கரன்சியை ஒழுங்குபடுத்த வேண்டும் என்று பொருளாதார நிபுணர்கள் மத்திய அரசை வலியுறுத்தி வருகின்றனர். ரிசர்வ் வங்கி மத்திய அரசுக்கு அளித்த பரிந்துரையில், கிரிப்டோகரன்சி நாட்டின் பொருளாதாரத்துக்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாக விளங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், கிரிப்டோ கரன்சியை முறைப்படுத்தும் மசோதாவை மத்திய அரசு நாடாளுமன்றத்தின் குளிர்கால கூட்டத் தொடரில் தாக்கல் செய்ய திட்டமிட்டுள்ளது. தனியார் கிரிப்டோகரன்சிக்கள் அனைத்தையும் தடை செய்ய கிரிப்டோகரன்சி மற்றும் அதிகாரப்பூர்வ டிஜிட்டல் நாணய கட்டுபாடு மசோதா–2021 வகை செய்கிறது. அதேநேரம் ரிசர்வ் வங்கியால் அதிகாரப்பூர்வமான மின்னணு கரன்சியை அறிமுகம் செய்யவும் வழிவகை செய்யப்படும் எனத் தகவல் வெளியாகி உள்ளது.

---

**5. போட்டித்தேர்வு, வேலைவாய்ப்பு தகவல்களை அறிய செயலி: அமைச்சர் தொடக்கிவைத்தார்**

போட்டித்தேர்வு மற்றும் வேலைவாய்ப்புக்குரிய தகவல்களை அறிந்து கொள்வதற்கான இணையதளம் மற்றும் கைப்பேசி செயலி ஆகியவற்றை, பள்ளிக் கல்வித்துறை அன்பில் மகேஷ் பொய்யாமொழி தொடக்கிவைத்தார்.

இதற்கான நிகழ்ச்சி, சென்னை, கோட்டூர்புரத்தில் உள்ள அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற்றது. இதில், மாவட்ட நூலக ஆணைக் குழுக்கள் மற்றும் கன்னிமாரா பொது நூலகத்தில் பணியாற்றி திறம்பட செயல்பட்டு வரும் 33 நூலகர்களுக்கு 'Dr SR அரங்கநாதன் விருது' வழங்கி, அமைச்சர் பாராட்டினார்.

தொடர்ந்து, போட்டித்தேர்வுக்குத் தயாராகும் மாணவர்கள் மற்றும் இளைஞர்கள், மத்திய, மாநில அரசுகளின் போட்டித்தேர்வுகள் மற்றும் வேலைவாய்ப்புபற்றிய தகவல்களை அறிய 'உங்கள் நூலகம் உள்ளங்கையில்' (TN Employment News) என்ற திறன்பேசி செயலியை –யும், www.tnemployment.in இணையதளத்தையும், 19,684 நூல்கள் மற்றும் 2 லட்சத்து 54,694 ஓலைச்சுவடி பக்கங்களை மின்னுருவாக்கம் செய்து, வடிவமைக்கப்பட்ட மின்நூலகத்தையும் அமைச்சர் தொடக்கி வைத்தார். இதனை www.tamilnadupubliclibraries.org என்ற இணைய தளம் வழியாகப் பயன்படுத்தலாம்.

---

### 6. நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளை செயல்படுத்துவதில் சிம்லாவுக்கு முதலிடம்

ஐநா'இன் நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளை சிறப்பாகச்செயல்படுத்தும் நகரங்களில் ஹிமாசல் தலைநகர் சிம்லா முதலிடம் பிடித்துள்ளது.

இந்தப் பட்டியலில் தமிழகத்தின் கோவை நகரம் இரண்டாமிடத்தையும், திருச்சி நகரம் 8ஆம் இடத்தையும் பிடித்துள்ளது.

நீடித்த வளர்ச்சியை உறுதிசெய்வதற்காக 17 இலக்குகளை ஐநா நிர்ண –யித்துள்ளது. வறுமை ஒழிப்பு, பசி ஒழிப்பு, சிறந்த சுகாதாரம், சிறந்த கல்வி, பாலின சமத்துவம், சுத்தமான குடிநீர், மலிவான–தூய்மை எரிசக்தி, ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தல், பருவநிலை மாற்றத்தைத் தடுத்தல் உள்ளிட்ட இலக்குகள் அதில் இடம்பெற்றுள்ளன. அந்த இலக்குகளை 2030ஆம் ஆண்டுக்குள் எட்ட வேண்டுமென நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஐநா நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளை அடைவதில் இந்திய நகரங்கள் எவ்வாறு செயல்படுகின்றன என்பது குறித்து NITI ஆயோக், ஜெர்மனியின் ஜிஐஇசட் நிறுவனம் ஆகியவை இணைந்து ஆய்வு நடத்தின. நாட்டில் உள்ள 56 நகரங்களில் அந்த ஆய்வு நடத்தப்பட்டது.

ஆய்வுக்குறியீட்டையும், அதுசார்ந்த தகவல் தளத்தையும் NITI ஆயோக் துணைத்தலைவர் இராஜீவ் குமார் வெளியிட்டார். ஆய்வுக்குறியீட்டில் சிம்லா, கோவை, சண்டீகர் ஆகிய நகரங்கள் முதல் மூவிடங்களைப் பிடித்துள்ளன. தன்பாத், மீரட், இடாநகர் ஆகியவை கடைசி இடங்களைப் பிடித்துள்ளன. இதுதொடர்பாக இராஜீவ் குமார் கூறுகையில், "வளர்ச்சியின் இயந்திரமாக நகரங்கள் வேகமாக உருவெடுத்து வருகின்றன. இந்தியா–ஜெர்மனி ஒத்துழைப்புடன் தற்போது வெளியிடப் –பட்டுள்ள ஆய்வுக்குறியீடும், தகவல் தளமும் நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளை அடைவதில் நகரங்களின் செயல்பாடுகளைக் கண்காணிக்க உதவும்" என்றார்.

இந்த ஆய்வுக் குறியீட்டில் மதிப்பெண்களின் அடிப்படையில் நகரங்கள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. 100 மதிப்பெண் என்பது அனைத்து இலக்குகளையும் அடைந்துவிட்டதைக் குறிக்கும். ஆனால், எந்த நகரமும் 80 மதிப்பெண்களுக்கு அதிகமாகப் பெறவில்லை.

---

### 7. ஜூனியர் உலக கோப்பை ஆக்கி போட்டி இன்று தொடக்கம்

12ஆம் ஜூனியர் உலக கோப்பை ஆக்கி போட்டி (21 வயதுக்குட்பட்டோர்) ஒடிஸா மாநில தலைநகரம் புவனேஸ்வரத்தில் உள்ள கலிங்கா அரங்க –த்தில் ஸ்டேடியத்தில் இன்று முதல் வருகிற 5–ந்தேதி வரை நடக்கிறது. இதில் பங்கேற்கும் 16 அணிகள் 4 பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளன.

இதன்படி 'ஏ' பிரிவில் பெல்ஜியம், சிலி, மலேசியா, தென்ஆப்பிரிக்கா, 'பி' ரிவில் நடப்பு சாம்பியன் இந்தியா, பிரான்ஸ், போலந்து, கனடா, 'சி' பிரிவில் ஸ்பெயின், நெதர்லாந்து, தென் கொரியா, அமெரிக்கா, 'டி' பிரிவில் ஜெர்மனி, அர்ஜென்டினா, பாகிஸ்தான், எகிப்து ஆகிய அணிகள் இடம் பெற்றுள்ளன. ஒவ்வொரு அணியும் தங்கள் பிரிவிலுள்ள மற்ற அணிகளுடன் தலா ஒருமுறை மோத வேண்டும்.

லீக் முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் டாப்–2 இடங்களைப் பிடிக்கும் அணிகள் காலிறுதிக்கு தகுதிபெறும். கொரோனா பயணக்கட்டுப்பாடுக –ளை காரணம் காட்டி ஆஸ்திரேலியா, இங்கிலாந்து அணிகள் விலகி விட்டன. ஆறு முறை சாம்பியனான ஜெர்மனி, இருமுறை சாம்பியனான இந்தியா மற்றும் பெல்ஜியம், நெதர்லாந்து அணிகள் கோப்பையை வெல்லும் வாய்ப்பில் முன்னணியில் உள்ளன.

இந்திய அணி விவேக் சாகர் பிரசாத் தலைமையில் களம் இறங்குகிறது. இவர் டோக்கியோ ஒலிம்பிக்கில் வெண்கலம் வென்று வரலாறு படைத்த இந்திய சீனியர் அணியில் இடம்பிடித்தவராவார். 2016ஆம் ஆண்டு பெல்ஜியத்தை தோற்கடித்து வாகை சூடிய இந்திய அணி பட்டத்தை தக்க வைக்கும் முனைப்புடன் ஆயத்தமாகி வருகிறது. உள்ளூர் சூழல் இந்திய அணிக்கு சாதகமான அம்சமாகும். ஆனால் கொரோனா தடுப்பு பாதுகாப்பு நடைமுறை காரணமாக ரசிகர்களுக்கு அனுமதி இல்லை.

---

### 8. தமிழகத்துக்கான மத்திய தணிக்கை குழு; ஆலோசகர்களாக அசோக்வரதன் ஷெட்டி, ஜாங்கிட் நியமனம்: நிதி அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் தலைமையில் முதல் கூட்டம்

தமிழகத்துக்கான மத்திய தணிக்கை குழுவின் ஆலோசகர்களாக முன்னாள் அதிகாரிகள் அசோக்வரதன் ஷெட்டி, ஜாங்கிட் ஆகியோர் நியமிக்கப்பட்டனர். இந்த குழுவின் முதல் கூட்டம் சென்னையில் நேற்று நடந்தது. மத்திய, மாநில அரசுகளின் செலவுகள், திட்டங்கள் குறித்து மத்திய தணிக்கை குழு ஆய்வு செய்யும். இந்தக் குழு அனைத்து துறைகளிலும் உள்ள திட்டங்களை ஆய்வு செய்து, அரசுக்கு அறிக்கை அளிக்கும். இந்த அறிக்கையில்தான் எந்தெந்த துறையில் வீணாக செலவு செய்யப்பட்டுள்ளது. முறைகேடுகள் எந்த துறைகளில், எந்த திட்டங்களில் நடந்துள்ளது என்பதை விரிவாக தெரிவிப்பார்கள்.

கடந்த அதிமுக ஆட்சியில் மின்சார துறையில் பல நூறு கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாக சமீபத்தில் தகவல்கள் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியது. அதில் மத்திய அரசின் திட்டங்களை ஆய்வு செய்ய மத்தியில் தனியாக தணிக்கை குழுவும், மாநில அரசின் திட்டங்களை ஆய்வு தனியாக மாநிலக் குழுவும் உள்ளது.

தற்போது தமிழகத்தில் தணிக்கை குழு அதிகாரியாக அம்பலவாணன் உள்ளார். இந்தநிலையில், தற்போது இந்த குழுவில் எந்தெந்த துறைகளில் எப்படி திட்டங்களை ஆய்வு செய்வது, எந்த திட்டங்களை ஆய்வு செய்வது என்பது குறித்து ஆலோசனை வழங்க, தற்போது புதிதாக 7 பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த குழுவில் முன்னாள் ஐஏஎஸ் அதிகாரி அசோக் வரதன் ஷெட்டி, முன்னாள் டிஜிபி ஜாங்கிட், வருமான வரித்துறை முன்னாள் தலைமை ஆணையர் ராஜேந்திரன், மேற்கு வங்க முன்னாள் ஐஏஎஸ் அதிகாரி பாலச்சந்திரன், இஸ்ரோவின் முன்னாள் தலைவர் மயில்சாமி அண்ணாதுரை உள்ளிட்ட 7 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த குழுவின் முதல் கூட்டம் சென்னையில் நேற்று நடந்தது. கூட்டத்துக்கு தமிழக நிதி அமைச்சர் PTR பழனிவேல் தியாகராஜன், தணிக்கை குழுவின் அதிகாரி அம்பல வாணன் மற்றும் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

---

### 9. நகர முன்னேற்றத்தை மதிப்பிடும் 'NITI ஆயோக்' திட்ட மதிப்பீட்டில் இந்திய அளவில் கோவைக்கு 2ஆம் இடம்

நிதி ஆயோக்கின் நீடித்த வளர்ச்சி இலக்குகள் திட்டத்தில் 2021–ம் ஆண்டுக்கான மதிப்பீடுகள் குறித்தஅறிக்கையில் நாட்டில் உள்ள முக்கிய நகரங்களில் கோவை 2ஆம் இடம்பெற்றுள்ளது.

நாட்டில் நிலையான வளர்ச்சி இலக்குகள் பின்பற்றப்படுவதைக் கண்காணிப்பது, மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் இடையே ஒத்துழைப்பு மற்றும் கூட்டு நடவடிக்கைகளை ஊக்குவிப்பது ஆகிய முக்கியப் பணிகளை மத்திய அரசின் 'நிதி ஆயோக்' மேற்கொள்கிறது. அந்த வகையில் முக்கிய நகரங்களின் முன்னேற்றத்தை மதிப்பிடும் நீடித்த வளர்ச்சி இலக்குகள் திட்டத்தில், 2021ஆம் ஆண்டுக்கான மதிப்பீடுகளை ஜெர்மனியைச் சேர்ந்த வளர்ச்சி நிறுவனம் ஒன்றுடன் இணைந்து நிதி ஆயோக் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ளது.

சுகாதாரம், கல்வி, பாலினம், பொருளாதார வளர்ச்சி, நிறுவனங்கள், பருவநிலை மாற்றம் மற்றும் சுற்றுச்சூழல் உள்ளிட்ட பல்வேறு இலக்குகளில் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் வளர்ச்சியை அளவிடும் அளவுகோலாக இந்த மதிப்பீடு பார்க்கப்படுகிறது.

இவ்வாறு வெளியிடப்பட்ட மதிப்பீட்டில் ஒட்டுமொத்த அடிப்படையில் கோவை நகரம் 73.29 மதிப்பெண் பெற்று நாட்டில் 2–ம் இடம் பெற்றுள்ளது. முதலிடத்தை 75.50 மதிப்பெண்கள் பெற்று சிம்லா பிடித்துள்ளது. திருச்சி நகரம் 70 மதிப்பெண்களுடன் 8–வது இடத்தையும், சென்னை நகரம் 69.36 மதிப்பெண்களுடன் 11–வது இடத்தையும், மதுரை 65.86 மதிப்பெண்களுடன் 26–வது இடத்தையும் பெற்றுள்ளன. மொத்தமாக 56 இந்திய நகரங்கள் இந்த மதிப்பீட்டுக்கான பட்டியலில் தேர்வு செய்யப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

வறுமை ஒழிப்பில் முதலிடம்

அதே நேரத்தில், 'வறுமை ஒழிப்பு' என்ற பிரிவில் 87 மதிப்பெண்கள் பெற்று கோவை முதலிடத்தில் உள்ளது. 80 மதிப்பெண்களுடன் திருச்சி,

மதுரை நகரங்கள் 2–வது இடங்களில் உள்ளன. சென்னை 65 மதிப்பெண்களுடன் 10–வது இடத்தில் உள்ளது.

'உடல் நலம் பேணுதல்' என்ற பிரிவில் 71 மதிப்பெண்களுடன் கோவை 5ஆவது இடத்தில் உள்ளது. தரமான கல்வி என்ற பிரிவில் 88 மதிப்பெண்களுடன் கோவை 3ஆம் இடத்தைப் பிடித்துள்ளது. முதல் இரு இடங்களைக் கேரள மாநிலம் திருவனந்தபுரம், கொச்சி நகரங்கள் பிடித்துள்ளன. பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்கள், பெண்களுக்கு எதிராக கணவர் அல்லது உறவினர்களால் ஏற்படுத்தப்படும் துன்புறுத்தல்கள் மற்றும் கொடுமைகள், பெண் கல்வி, பாலின பிறப்பு உள்ளிட்டவற்றை அடிப்படையாகக் கொண்டு அடையாளப்படுத்தப்படும் 'பாலின சமன்பாடு' பிரிவில் 87 மதிப்பெண்க –ளுடன் சென்னை 9ஆவது இடத்திலும், 86 மதிப்பெண்களுடன் திருச்சி 11ஆவது இடத்திலும், 82 மதிப்பெண்களுடன் கோவை 16ஆவது இடத்தி –லும், 71 மதிப்பெண்களுடன் மதுரை 41ஆவது இடத்திலும் உள்ளன.

இயற்கை பேரிடர் பாதிப்புகளால் ஏற்படும் உயிரிழப்புகள், காற்றின் தரம், மத்திய அரசின் திட்டத்தின்கீழ் LED மின் விளக்குகளை விநியோகித்தல் ஆகியவற்றை உள்ளடக்கிய சுற்றுச்சூழல் நடவடிக்கைகளில் சென்னை, கோவை, மதுரை ஆகிய 3 நகரங்களும் 67 மதிப்பெண்களுடன் 18–வது இடத்தில் உள்ளன.

தொழில், உள்கட்டமைப்பு

தொழில், கண்டுபிடிப்புகள் மற்றும் உள்கட்டமைப்புப் பிரிவில் 70 மதிப்பெண்களுடன் கோவை நகரம் 4ஆம் இடத்தில் உள்ளது. இவ்வாறு பல்வேறு பிரிவுகளில் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் நகரங்களின் 'ரேங்க்' பட்டியலிடப்பட்டுள்ளது.

---

**10. கிரிப்டோ கரன்சியை அறிமுகம் செய்கிறது ஆர்பிஐ: தனியார் கரன்சியை தடை செய்ய புதிய மசோதா தயார்**

புதிய கிரிப்டோ கரன்சியை ரிசர்வ் வங்கி (ஆர்பிஐ) அறிமுகம் செய்யவும் தனியார் கரன்சியை தடை செய்யவும் திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இது தொடர்பான மசோதா மத்திய அமைச்சரவை ஒப்புதலுக்குத் தயாராக உள்ளது.

மெய்நிகர் கரன்சி எனப்படும் கிரிப்டோ கரன்சி வர்த்தகத்துக்கு மத்திய அரசு அங்கீகாரம் அளிக்கவில்லை. ஆனால் இதை முறைப்படுத்துமாறு உச்ச நீதிமன்றம் அறிவுறுத்தியது. இதைத்தொடர்ந்து இது தொடர்பான புதிய மசோதாவை தயார் செய்துள்ளது.

கிரிப்டோ கரன்சி மற்றும் முறைப்படுத்தல் மற்றும் அதிகாரப்பூர்வ டிஜிட்டல் கரன்சி மசோதா 2021, என பெயரிடப்பட்டுள்ள இந்தமசோதா மத்திய அமைச்சரவையின் ஒப்புதலுக்கு தயாராக உள்ளது. இதற்கு ஒப்புதல் கிடைத்தால் வரும் நாடாளுமன்ற கூட்டத் தொடரில் தாக்கல் செய்யப்படும் எனத் தெரிகிறது.

இதன்படி, ரிசர்வ் வங்கி பிரத்யேகமாக கிரிப்டோ கரன்சியை அறிமுகம் செய்யும் எனத் தெரிகிறது. இது தொடர்பாக சோதனை ரீதியில்டிஜிட்டல் கரன்சியை ரிசர்வ் வங்கிவிரைவில் அறிமுகம் செய்யும் என தெரிகிறது. அத்துடன் அனைத்துதனியார் கிரிப்டோ கரன்சி பரிவர்த்தனையும் தடை செய்யப்படலாம் என்றும் கூறப்படுகிறது.

அதே சமயம் கிரிப்டோ கரன்சி வர்த்தகம் மற்றும் அதன் தொழில்நுட்பத்தின் அடிப்படையில் சில நிபந்தனைகளுடன் குறிப்பிட்டவர்த்தகத்துக்கு அனுமதிப்பதுஎன்றும் முடிவு செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதுகுறித்து மக்களவை செய்திக்குறிப்பில் இம்மசோதா தாக்கலாகலாம் என்று கூறப்பட்டுள்ளது. அதேபோல மாநிலங்களவையின் அலுவல் நேரத்திலும் இது இடம்பெற்றுள்ளது.

இந்த மசோதா குறித்த விவரம் எதுவும் பொது தளத்தில் வெளியிடப்படவில்லை. அத்துடன் இது தொடர்பாக பொது மக்களிடம் கருத்துகளும் கேட்கப்படவில்லை.

கிரிப்டோ கரன்சி முதலீடு குறித்து விரிவான விளம்பரங்கள் வெளியாகின்றன. இதில் பலரும் முதலீடு செய்து அதிக நஷ்டத்தை எதிர்கொண்டுள்ளனர். இதற்கு யாரை பொறுப்பாக்குவது என்ற கேள்விக்கு இதுவரை பதில் கிடைக்கவில்லை.

இம்மாதம் 13–ம் தேதி பிரதமர் மோடி தலைமையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் கிரிப்டோ கரன்சி வர்த்தகம் குறித்து விரிவாக ஆலோசிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் நிதி அமைச்சகம் மற்றும் உள்துறை அமைச்சகத்தின் உயர் அதிகாரிகள் பங்கேற்றனர். முறையற்ற கிரிப்டோ கரன்சி வர்த்தகம் அந்நியச் செலாவணி மோசடிக்கும், தீவிரவாத குழுக்களுக்கு நிதி உதவி அளிப்பதற்கும் பயன்படும் என்று கூட்டத்தில் கருத்து தெரிவிக்கப்பட்டது. இருப்பினும் இது குறித்து தீவிரமான உறுதியான நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியம் என்ற கருத்தும் வெளியிடப்பட்டது.

கடந்த வாரம் நாடாளுமன்ற நிதித்துறை நிலைக்குழு, கிரிப்டோ கரன்சி குறித்து இத்துறை வல்லுநர்களுடன் ஆலோசனை நடத்தியது. அப்போது கிரிப்டோ வர்த்தகம் தொடர்பாக கருத்துகள் கேட்கப்பட்டது. அத்துடன் இந்த வர்த்தகத்தை முறைப்படுத்துவது அவசியம் என்று வலியுறுத்தப்பட்டது. – பிடிஐ

---

**11. முகேஷ் அம்பானியை பின்னுக்கு தள்ளி ஆசிய பணக்காரர் பட்டியலில் அதானி முதலிடம்**

ஆசிய பணக்காரர்கள் பட்டியலில் 2015–ம் ஆண்டிலிருந்து முதலிடத்தில் இருந்து வந்த ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் தலைவர் முகேஷ் அம்பானி தற்போது இரண்டாவது இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளார். அதானி குழுமத்தின் தலைவர் கவுதம் அதானி தற்போது முதலிடத்துக்கு முன்னேறியுள்ளார்.

அதானி குழுமத்தின் சொத்து மதிப்பு, அதன் பங்கு விலை உயர்ந்ததைத் தொடர்ந்து கவுதம் அதானிமுதலிடத்துக்கு முன்னேறியுள்ளார். புளூம்பர்க் கோடீஸ்வரர்கள் பட்டியலில் நவம்பர் 23–ம் தேதி நிலவரப்படி முகேஷ் அம்பானி சொத்து மதிப்பு 9,100 கோடி டாலராக இருந்தது. அதானியின் சொத்து மதிப்பு 8,880 கோடி டாலராக இருந்தது. நேற்று ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் பங்கு விலைகள் 1.72 சதவீதம் சரிந்தன. இதனால் கவுதம் அதானியின் சொத்து மதிப்பு உயர்ந்து முதலிடத்துக்கு முன்னேற வழியேற்படுத்தியது.

அதானி என்டர்பிரைஸஸ் பங்கு விலை 2.34% உயர்ந்தன. அதானி துறைமுகம் மற்றும் சிறப்பு பொருளாதார மண்டல பங்கு விலை 4 % அதிகரித்தது. இதனால் சந்தை மதிப்பு ரூ.3.5 லட்சம் கோடி லாபம் ஈட்டியது. அதேநேரம் அதானி டிரான்ஸ்மிஷன் சந்தை மதிப்பு ரூ.2.13 லட்சம் கோடி சரிந்தது. அதேபோல அதானி பவர் சந்தை மதிப்பு ரூ.41 ஆயிரம் கோடி நஷ்டத்தை சந்தித்தது. இதேபோல அதானி கிரீன் மற்றும் அதானி டோட்டல் கேஸ் பங்கு விலைகள் 1 % சரிந்தன.

செவ்வாய்க்கிழமை நிலவரப்படி கவுதம் அதானியின் சொத்துமதிப்பு இந்த ஆண்டில் மட்டும்5,500 கோடி டாலர் அதிகரித்துள்ளது. அதேநேரம் முகேஷ் அம்பானியின் சொத்து மதிப்பு இந்த ஆண்டில் 1,430 கோடி டாலர் அதிகரித்துள்ளது. 2021–ம் ஆண்டில் அதானியின் சொத்து மதிப்பு உலகின் மற்ற 10 முன்னணி கோடீஸ்வரர்களை விட அதிகமாகும். கூகுள் நிறுவனர்களான லாரி பேஜ் சொத்து மதிப்பு 4,720 கோடி டாலரும் செர்கி பிரினின் சொத்து மதிப்பு 4,490 கோடி டாலரும் உயர்ந்தது.

---

**12. காஞ்சிபுரத்தில் தகவல் மையம் – லார்சன் அண்ட் டூப்ரோ தமிழக அரசுடன் ஒப்பந்தம்:**

லார்சன் அண்ட் டூப்ரோ நிறுவனம் காஞ்சிபுரத்தில் மிகப் பெரிய தகவல் மையத்தை (டேட்டா சென்டர்) உருவாக்க தமிழக அரசுடன் ஒப்பந்தம் செய்துள்ளது. இது 90 மெகாவாட் திறன் கொண்டதாகும். இது சார்ந்த பிற யூனிட்டுகளும் இங்கு அடுத்த 5 ஆண்டுகளில் ஏற்படுத்தப்படும். இதனால் 1,100 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். இதில் 600 பேர் நேரடி வேலைவாய்ப்பையும், 500 பேர் மறைமுகவேலைவாய்ப்பையும் பெறுவ –ர் என நிறுவனம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழக அரசுடன் ஒப்பந்தம் செய்தது தொடர்பான அறிக்கையை மும்பை பங்குச் சந்தைக்கு தாக்கல் செய்த கடிதத்தில் அந்நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இந்த மையம் அமைப்பதற்குத் தேவையான தடையற்ற மின்சாரத்தை தமிழக அரசு வழங்கும். அத்துடன் மையம் அமைப்பதற்குத் தேவையான கட்டமைப்பு வசதிகளையும் செய்து தரும்.

---

**13. தில்லி அரசின் சுற்றுலாத் திட்டத்தில் விரைவில் 'வேளாங்கண்ணி தேவாலயம்' கேஜரிவால் அறிவிப்பு**

தில்லி அரசின் மூத்த குடிமக்களுக்கான இலவச புனித யாத்திரை திட்டத்தின்கீழ் இடம்பெற்றுள்ள புனித யாத்திரை இடங்கள் பட்டியலில் தமிழகத்தில் உள்ள வேளாங்கண்ணி தேவாலயமும் விரைவில் சேர்க்கப்பட உள்ளதாக முதல்வர் அரவிந்த் கேஜரிவால் அறிவித்துள்ளார்.

கரோனா நோய்த்தொற்று காரணமாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த 'முக்கிய மந்திரி தீர்த்த யாத்திரை திட்ட'த்தை தில்லி அரசு டிசம்பர் 3ஆம் தேதி மீண்டும் தொடங்க உள்ளதாகவும், அப்போது மூத்த குடிமக்கள் யாத்ரீகர்கள் பயணம் செய்வார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தில்லி அரசின் மூத்த குடிமக்களுக்கான புனித யாத்திரை திட்டத்தில் உத்தர பிரதேசத்தில் உள்ள அயோத்தி நகரத்தையும் சேர்ப்பதற்கு தில்லி அமைச்சரவை கடந்த மாதம் ஒப்புதல் அளித்திருந்தது. இந்தத் திட்டத்தின் கீழ் 1,000 மூத்த யாத்ரீகர்கள் அயோத்திக்கு ரயிலில் டிசம்பர் 3ஆம் தேதி தில்லியில் இருந்து புறப்பட்ட உள்ளனர் என்று தில்லி அரசின் தீர்த்த யாத்ரா விகாஷ் சமிதியின் தலைவர் கமல் பன்சல் தெரிவித்தார்.

**14. சுகாதார உள்கட்டமைப்பு மேம்பாடு: இந்தியாவுக்கு ரூ.2,236 கோடி கடன்**

இந்தியாவில் 13 மாநிலங்களில் சுகாதார உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக ஆசிய வளர்ச்சி வங்கியிடமிருந்து ரூ.2,236 கோடி கடன் பெறுவதற்கான ஒப்பந்தத்தை மத்திய அரசு மேற்கொண்டது.

இதன்மூலம் நகர்ப்புறங்களில் குடிசைப்பகுதிகளில் வசிக்கும் 5.1 கோடி பேர் உள்பட மொத்தம் 25.6 கோடி பேர் பயன்பெறுவர் என மத்திய சுகாதார அமைச்சகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளது. மத்திய அரசின் சார்பில், நிதி அமைச்சகத்தின் பொருளாதார விவகாரங்கள் பிரிவு கூடுதல் செயலர் ரஜத் குமார் மிஷ்ராவும், ஆசிய வளர்ச்சி வங்கி சார்பில், அதன் பிராந்திய இயக்குநர் தெகியோ கோனிஷியும் இந்த ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டனர்.

மத்திய அரசின் முக்கியத் திட்டங்களை நகர்ப்புறங்களில் விரிவுபடுத்தி, எளிதில் பாதிக்கப்படக்கூடிய மக்கள் தரமான ஆரம்ப சுகாதார சேவைகளைப் பெறுவதற்கு இந்த ஒப்பந்தம் உதவும் என ரஜத் குமார் மிஷ்ரா தெரிவித்தார். மேலும், இந்தியாவின் சுகாதாரக் கட்டமைப்பில் பெருந்தொற்று ஏற்படுத்திய சவால்களுக்கு மத்தியில், ஆரம்ப சுகாதார வசதிகளை உறுதிப்படுத்துவது அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த ஒப்பந்தத்தின் மூலம் மத்திய அரசின் பிரதமர் ஆரோக்கிய தற்சார்பு இந்தியா திட்டத்துக்கு கூடுதல் நிதியுதவி கிடைக்கவுள்ளது. கரோனா தொற்றுப்பரவலுக்கு இடையே, எதிர்காலத்தில் பெருந்தொற்று பரவல் உள்ளிட்ட சவால்களை எதிர்கொள்ளும் வகையில், சுகாதார உள்கட்டமைப்பு வசதியை வலுப்படுத்தும் வகையில், மத்திய அரசு கடந்த அக்டோபரில் இத்திட்டத்தை தொடங்கியது. இத்திட்டம் தமிழகம், தெலங்கானா, மேற்கு வங்கம், ஆந்திரம், அஸ்ஸாம், சத்தீஸ்கர், ஹரியாணா, ஜார்க்கண்ட், கர்நாடகம், மத்திய பிரதேசம், மகாராஷ்டிரம், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

**15. 50 சதவீதத்துக்கு மேற்பட்ட பெண்கள், குழந்தைகளுக்கு ரத்தசோகை பாதிப்பு**

நாட்டில் 50 சதவீதத்துக்கு மேற்பட்ட பெண்கள், குழந்தைகள் ரத்தசோகை குறைபாட்டால் பாதிக்கப்பட்டிருப்பது அண்மையில் நடத்தப்பட்ட தேசிய குடும்ப சுகாதார ஆய்வில் தெரியவந்துள்ளது. இந்த விகிதாசாரம் கடந்த முறையைவிட அதிகம் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் மக்கள்தொகை, இனப்பெருக்கம், குழந்தைகள் நலன், குடும்ப நலன்கள், ஊட்டச்சத்து மற்றும் பிற ஆரோக்கியம் சார்ந்த ஆய்வுகளை, 'தேசிய குடும்ப சுகாதார ஆய்வு (NFH சர்வே)' என்ற பெயரில் மத்திய குடும்ப நல அமைச்சகம் ஒவ்வொரு முறையும் மேற்கொண்டு வருகிறது.

அதன்படி NFH சர்வே–5'இன் முதல் கட்ட ஆய்வு முடிவுகள் கடந்த 2020, டிசம்பரில் வெளியிடப்பட்டன. அதில் 22 மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இரண்டாம் கட்ட (NFH சர்வே–5) ஆய்வு முடிவுகளை குடும்பநல அமைச்சகம் வெளியிட்டது.

அதன் விவரம் வருமாறு: அருணாசல பிரதேசம், சண்டீகர், சத்தீஸ்கர், ஹரியாணா, ஜார்க்கண்ட், மத்திய பிரதேசம், தில்லி, ஒடிஸா, புதுச்சேரி, பஞ்சாப், ராஜஸ்தான், தமிழகம், உத்தர பிரதேசம், உத்தரகண்ட் ஆகிய 14 மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களில் இரண்டாம் கட்ட ஆய்வுகள் நடத்தப்பட்டன.

இந்த முடிவுகளை முதல் கட்ட ஆய்வுடன் ஒப்பிடுகையில் குழந்தைகளுக்கு ஊட்டச்சத்தில் சற்று முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. ஊட்டச்சத்து விகித குறைபாடு 38–இலிருந்து 36 சதவீதமாகவும், உணவை வீணாக்குவது 21–சதவீதத்திலிருந்து 19 சதவீதமாகவும் குறைந்துள்ளது. குறைந்த எடை கொண்ட குழந்தைகளின் விகிதம் 36–இலிருந்து 32 சதவீதமாகக் குறைந்துள்ளது.

14 மாநிலங்களில் பாதிக்கும் மேற்பட்ட கர்ப்பிணிகள் உள்பட பெண்கள், குழந்தைகள் ரத்தசோகை குறைபாட்டால் பாதிக்கப்பட்டிருப்பது தெரியவந்துள்ளது. கர்ப்பிணிகளுக்கு 180 நாள்களுக்கும் மேலாக இரும்புச்சத்து மாத்திரைகள் (அயர்ன் ஃபோலிக் ஆசிட் மாத்திரைகள்) வழங்கப்பட்டபோதும் இந்தப் பாதிப்பு குறையவில்லை. இந்திய அளவிலும் இது பாதியாகும்.

6 மாதங்களுக்கு உள்பட்ட குழந்தைகளுக்கு தாய்ப்பால் வழங்குவது 2015–16–இல் 55 சதவீதமாக இருந்தது. அந்த விகிதம் 2019–21–இல் 64 சதவீதமாக உயர்ந்துள்ளது. இந்த முன்னேற்றம் இரண்டு கட்டங்களில் நடத்தப்பட்ட ஆய்விலும் தெரியவந்துள்ளது.

குழந்தை பிறப்பு விகிதம்: மருத்துவமனைகளில் குழந்தைகள் பிறப்பு விகிதம் 79 சதவீதத்திலிருந்து 89 சதவீதமாக உயர்ந்துள்ளது. புதுச்சேரியிலும், தமிழகத்திலும் மருத்துவமனைகளில் குழந்தைகள் பிறப்பு 100 சதவீதத்தைத் தொட்டுள்ளது. 7 மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களில் இந்த விகிதாசாரம் 90 சதவீதத்தை எட்டியுள்ளது.

மருத்துவமனைகளில் குழந்தைகள் பிறப்பு விகிதத்தில் அறுவை சிகிச்சை மூலம் குழந்தைகள் பிறப்பு விகிதம் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளது. குறிப்பாக தனியார் மருத்துவமனைகளில் இந்த விகிதாசாரம் அதிகம்.

குடும்ப நல அறுவை சிகிச்சைகள் 13 சதவீதத்திலிருந்து 9 சதவீதமாக குறைந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

ஆய்வு நடத்தப்பட்ட அனைத்து மாநிலங்களிலும் 12 முதல் 23 மாதங்களுக்கு உள்பட்ட குழந்தைகளுக்கு நோய் எதிர்ப்பு சக்தி விகிதம் 62 சதவீதத்திலிருந்து 76–ஆக அதிகரித்துள்ளது. 11 மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களில் இந்த விகிதாசாரம் அதிகம் உள்ளது. குறிப்பாக, ஒடிஸாவில் குழந்தைகள் நோய் எதிர்ப்பு சக்தியை 90 சதவீதம் பெற்றுள்ளன. குழந்தைகளின் நோய் எதிர்ப்பு சக்தி கடந்த நான்கு ஆண்டுகளில் அதிகரித்துள்ளதற்கு மத்திய அரசின் "இந்திர தனுஷ் மிஷன்' திட்டம் தொடங்கப்பட்டது முக்கியக் காரணமாகும்.

ஒரு பெண்ணின் சராசரி கருத்தரிப்பு எண்ணிக்கையின் அடிப்படையில் பெண்களின் கருத்தரிப்பு விகிதாசாரம் மொத்தமாக 2.2 சதவீதத்திலிருந்து 2.0 ஆக குறைந்துள்ளது. இதில் மத்திய பிரதேசம், ராஜஸ்தான், ஜார்க்கண்ட், உத்தரபிரதேசம் மாநிலங்களைத் தவிர ஏனைய மாநிலங்களில் இந்த விகிதம் 2.1 சதவீதம் என்ற இலக்கை அடைந்துள்ளது.

கருத்தடை செய்வதில் பஞ்சாப் மாநிலத்தைத் தவிர ஏனைய மாநிலங்களில் ஒட்டுமொத்த கருத்தடை செய்யப்படும் விகிதம் 54 சதவீதத்திலிருந்து 67 சதவீதமாக உயர்ந்துள்ளது. கருத்தடை செய்வதற்கு நவீன முறைகளைக் கையாள்வதும் அதிகரித்துள்ளது.

NFHS–4 மற்றும் NFHS–5 உடன் ஒப்பிடுகையில் பெண்களுக்கு அதிகாரம் அளித்தல் மற்றும் வங்கிக்கணக்குகளை பெண்கள் கையாளு –தல் ஆகியவை 53 சதவீதத்திலிருந்து 79 சதவீதமாக அதிகரித்துள்ளன.

மத்திய பிரதேசத்தில் இந்த விகிதாசாரம் 37 சதவீதத்திலிருந்து 75 சதவீதமாக அதிகரித்துள்ள நிலையில் ஏனைய மாநிலங்களில் ஏற்கெனவே 70% பெண்கள் வங்கிக்கணக்குகளை கையாளுகின்றன –ர் என்பது குறிப்பிடத்தக்கது.

மத்திய குடும்ப நலத் துறை அமைச்சகத்தால் நடத்தப்படும் இந்த ஆய்வுகள் நாட்டில் ஆரோக்கியம் மற்றும் குடும்பநலம்சார்ந்த உண்மைக –ளைத் தெரிந்துகொள்ளவும், தரவுகளை ஒப்பிடவும் உதவுகிறது.

**16. முதல்முதலாக அன்டார்டிகாவில் தரையிறங்கியது ஏ340 விமானம்**

அமெரிக்காவின் ஏர்பஸ் நிறுவனத்தால் தயாரிக்கப்படும் ஏ340 வகை விமானமொன்று அன்டார்டிகாவில் முதல்முறையாகத் தரையிறங்கியது.

இதுகுறித்து சிஎன்என் தொலைக்காட்சி தெரிவித்துள்ளதாவது:

அன்டார்டிகா கண்டத்தில் ஏர்பஸ் ஏ340 விமானம் முதல்முறையாக தரையிறங்கியுள்ளது. போர்சுகலில் தலைமையகத்தைக் கொண்டுள்ள ஹை ஃபிளை நிறுவனத்துக்குச் சொந்தமான அந்த விமானம், தென் ஆப்பிரிக்காவின் கேப்டவுன் நகரிலிருந்து புறப்பட்டு அன்டார்டிகா வந்தது.

இந்தப் பனி கண்டத்துக்கு முதல்முறையாக லாகீட் வேகா–1 வகை விமானம் கடந்த 1928–ஆம் ஆண்டில் தரையிறங்கியது. அதனைத் தொடர்ந்து அங்கு பல்வேறு விமானங்கள் தரையிறங்கினாலும்,

அன்டார்டிகா செல்வதற்கு பெரும்பாலும் கப்பல்களே பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்தச் சூழலில், அங்கு ஏ340 விமானம் முதல்முறையாகத் தரையிறங்கியிருப்பது, இதே போன்ற பயணங்கள் இனி அதிகம் நிகழும் என்ற எதிர்பாா்ப்பை ஏற்படுத்தியுள்ளது என்று CNN தெரிவித்துள்ளது.

---

**17. அமெரிக்கா தலைமையில் நடக்கும் ஜனநாயக உச்சி மாநாட்டுக்கு சீனா, ரஷியாவுக்கு அழைப்பு இல்லை**

உலகின் இருபெரும் பொருளாதார நாடுகளான அமெரிக்காவுக்கும், சீனாவுக்கும் இடையே கடந்த சில ஆண்டுகளாக மோதல் போக்கு நிலவுகிறது. முன்னெப்போதும் இல்லாத வகையில் இருநாடுகளின் உறவு மோசமடைந்துள்ளது.

இது தொடர்பாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனும், சீன அதிபர் ஜின்பிங்கும் முதல் முறையாக காணொலி காட்சி வாயிலாக அண்மையில் சந்தித்து பேசினர். இதன் மூலம் இருநாடுகளின் உறவில் இணக்கமான சூழல் உருவாகும் என எதிர்பார்க்கப்பட்டது.

இதே போல் அமெரிக்க அரசு துறைகள் மீது நடத்தப்பட்ட சைபர் தாக்குதல், உக்ரைனை ஆக்கிரமிக்கும் முயற்சி போன்ற விவகாரங்களில் ரஷியா மற்றும் அமெரிக்கா இடையே உரசல் போக்கு நீடித்து வருகிறது.

இந்த பிரச்சினைகளுக்கு தீர்வுகாண அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனும், ரஷியா அதிபர் புதினும் விரைவில் நேரில் சந்தித்து பேச முடிவு செய்து, அதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

அமெரிக்கா கொடி

இந்த நிலையில் ஜனநாயகம் தொடர்பாக அமெரிக்கா தலைமையில் நடக்கும் சர்வதேச உச்சி மாநாட்டில் சீனா மற்றும் ரஷியாவுக்கு அழைப்பு விடுக்கப்படாதது சர்ச்சையை கிளப்பியுள்ளது.

'ஜனநாயக உச்சி மாநாடு' என்கிற பெயரில் அடுத்த மாதம் (டிசம்பர்) 9,10 ஆகிய தேதிகளில் காணொலி காட்சி வாயிலாக அமெரிக்கா இந்த மாநாட்டை நடத்துகிறது. முதல் முறையாக நடைபெறும் இந்த மாநாட்டில் பங்கேற்க இந்தியா, பாகிஸ்தான் உள்பட 110 நாடுகளுக்கு அமெரிக்கா அழைப்பு விடுத்துள்ளது. அதன்படி ஜனாதிபதி ஜோ பைடனின் தலைமையில் நடக்கும் இந்த 2 நாள் மாநாட்டில் பல்வேறு நாடுகளின் தலைவர்கள் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பல்வேறு ஜனநாயக நாடுகள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் அவற்றின் வாய்ப்புகள் குறித்து இந்த உச்சிமாநாடு கவனம் செலுத்தும்.

மாநாட்டில் பங்கேற்கும் நாடுகளின் தலைவர்கள் தங்கள் நாட்டில் ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளை வலுப்படுத்த தனிப்பட்ட மற்றும் கூட்டு அர்ப்பணிப்புகள், சீர்திருத்தங்கள் மற்றும் முன்முயற்சிகளை அறிவிக்க வாய்ப்புள்ளது.

இதனிடையே ஜனநாயகம் தொடர்பாக நடக்கும் இந்த முதல் உச்சி மாநாட்டில் பங்கேற்க சீனாவையும், ரஷியாவையும் அமெரிக்கா அழைக்கவில்லை. அந்த இரு நாடுகளிலும் ஜனநாயக அச்சுறுத்தல்கள் இருப்பதாக அமெரிக்க தொடர்ந்து குற்றம் சாட்டி வரும் நிலையில், அந்த நாடுகளை அமெரிக்கா புறக்கணித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இது ஒரு புறம் இருக்க மாநாட்டில் பங்கேற்க சீனாவை அழைக்காத அமெரிக்கா, தைவானுக்கு அழைப்பு விடுத்துள்ளது. தீவு நாடான தைவானை தனது நாட்டின் ஒரு பகுதி என சீனா கூறி வரும் நிலையில், அமெரிக்கா அதற்கு எதிர்ப்பு தெரிவித்து தைவானை ஆதரித்து வருகிறது.

இந்த சூழலில் ஜனநாயக மாநாட்டில் சீனாவை புறக்கணித்து விட்டு, தைவானை அமெரிக்கா அழைத்திருப்பது சீனாவுக்கு கடும் கோபத்தை ஏற்படுத்தியுள்ளது.

---

**18. தமிழகத்தில் நெல் கொள்முதல் ஈரப்பதத்தை 19% ஆக உயர்த்த மத்திய அமைச்சர் ஒப்புதல்: அமைச்சர் சக்கரபாணி**

தமிழகத்தில் நெல் கொள்முதல் ஈரப்பதத்தை 19% ஆக உயர்த்த மத்திய அமைச்சர் ஒப்புதல் அளித்துள்ளதாக உணவுத்துறை அமைச்சர் சக்கர பாணி பேட்டியளித்தார். 17%லிருந்து 20%ஆக உயர்த்த வேண்டும் என கோரிக்கை வைத்த நிலையில் 19%ஆக உயர்த்த ஒப்பதல் வழங்கப்பட்டு உள்ளது எனக் கூறினார்.

---

**1.** **பிரேசிலின் ஆண்டறிக்கையின்படி, அமேசான் மழைக்காடுகளில், காடழிப்பு, ஓராண்டில் எத்தனை சதவீதத்திற்கு அதிகரித்துள்ளது?**

அ) 2

**ஆ) 22 ☑**

இ) 42

ஈ) 62



✓ பிரேசில் அரசாங்கத்தின் ஆண்டறிக்கையின்படி, அமேசான் மழைக் காடுகளில் காடழிப்பு ஓராண்டில் 22% அதிகரித்துள்ளது. இது 2006ஆம் ஆண்டிற்குப் பிறகு மிகவுயர்ந்த அதிகரிப்பாகும். தேசிய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் 'PRODES' கண்காணிப்பு அமைப்பு, அமேசான் 13,235 சகிமீட்டர் மழைக்காடுகளை இழந்ததாகச் சுட்டிக்காட்டுகிறது.

✓ கிளாஸ்கோவில் நடந்த ஐநா காலநிலை உச்சிமாநாட்டின்போது பிரேசில் அரசு 2028'க்குள் சட்டவிரோத காடழிப்பைத்தடுப்பதாக அறிவித்தது.

---

**2.** **"Ex–சக்தி 2021" என்ற இந்தோ–பிரான்ஸ் கூட்டு இராணுவப் பயிற்சி தொடங்கிய இடம் எது?**

அ) அந்தமான் & நிக்கோபார் தீவுகள்

ஆ) டிஃபென்ஸ் இன்ஸ்டிடியூட் ஆஃப் அட்வான்ஸ்டு டெக்னாலஜி, புனே

**இ) டிராகுய்னனின் இராணுவப் பள்ளி, பிரான்ஸ் ☑**

ஈ) விசாகப்பட்டினம்

✓ இந்தோ–பிரான்ஸ் கூட்டு இராணுவப் பயிற்சியின் ஆறாவது பதிப்பு "Ex–சக்தி–2021" என்ற பெயரில் பிரான்சின் டிராகுய்னனின் இராணுவப் பள்ளியில் தொடங்கியது. இந்தப் பயிற்சியில் செயல்பாடுகளின் நடத்தை பற்றிய பரஸ்பர புரிதல் மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு சூழலில் கூட்டாக செயல்பட தேவையான ஒருங்கிணைப்பு அம்சங்களை அடையாளம் காணுதல் ஆகியவை அடங்கும்.

---

**3.** **சர்வதேச உத்திசார் ஆய்வுகள் நிறுவனமானது ஆண்டுதோறும் எந்த நாட்டில் சர்வதேச உரையாடலை நடத்துகிறது?**

**அ) பஹ்ரைன் ☑**

ஆ) ஐக்கிய அரபு அமீரகம்

இ) ரஷ்யா

ஈ) UK

✓ சர்வதேச உத்திசார் ஆய்வுகள் நிறுவனம் (IISS) மனமா உரையாடலை பஹ்ரைனில் உள்ள மனமாவில் நடத்துகிறது. 2021ஆம் ஆண்டின் உச்சி மாநாடு நவம்பர்.19–21'க்கு இடையில் நடைபெற்றது. மத்திய கிழக்கில் நிலவும் முக்கியமான பாதுகாப்பு சவால்களைப் பற்றி விவாதிக்கும் IISS மனமா உரையாடல் என்பது அரசாங்க அமைச்சர்கள், வல்லுநர்கள் மற்றும் வணிக சமூகங்களுக்கான ஒரு தனித்துவமான மன்றமாகும்.

✓ 2002ஆம் ஆண்டு முதல் இந்நிறுவனம் சிங்கப்பூரில் ஆண்டுதோறும் IISS ஷாங்ரி–லா உரையாடலை நடத்துகிறது. IISS 'தி மிலிட்டரி பேலன்ஸை' வெளியிடுகிறது. இது நாடுகளின் இராணுவ திறன்களின் வருடாந்திர மதிப்பீடாகும்.

---

**4.** **எந்த நாட்டின் தேசிய இளையோர் மற்றும் குழந்தைகள் இசைக் குழுவான "El Sistema", உலகின் மிகப்பெரிய இசைக்குழுவிற்கான கின்னஸ் சாதனையை படைத்துள்ளது?**

அ) ரஷ்யா

**ஆ) வெனிசுலா ☑**

இ) இஸ்ரேல்

ஈ) பிரான்ஸ்



✓ வெனிசுலாவின் "எல் சிஸ்டெமா" என அழைக்கப்படும் தேசிய இளை–யோர் மற்றும் குழந்தைகள் இசைக்குழுவானது உலகின் மிகப்பெரிய இசைக்குழுவிற்கான புதிய கின்னஸ் சாதனையை படைத்துள்ளது.

✓ 8,573 இசைக்கலைஞர்கள் பியோட்ர் சாய்கோவ்ஸ்கியின் லா மார்ச்சே ஸ்லேவை ஐந்து நிமிடங்களுக்கும் மேலாக வாசித்தனர். இதற்குமுன் ரஷ்யாவின் செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கில், 8097 இசைக்கலைஞர்கள் இணைந்து இசைத்ததே சாதனையாக இருந்தது.

---

**5.** 2021 – உலக கழிப்பறை நாளுக்கான கருப்பொருள் என்ன?

**அ) Valuing Toilets ☑**

ஆ) Importance of Sanitation

இ) Global Sanitation Crisis

ஈ) Collective Action

✓ ஐநா அவையால் ஆண்டுதோறும் நவம்பர்.19ஆம் தேதி அன்று 'உலக கழிப்பறை நாள்' கடைப்பிடிக்கப்படுகிறது. தூய்மையின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், உலகளாவிய சுகாதார நெருக்க–டியைச் சமாளிக்க கூட்டு நடவடிக்கையை உறுதிப்படுத்தவும் இந்த நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. "Valuing Toilets" என்பது நடப்பாண்டு (2021) வரும் இந்நாளுக்கானக் கருப்பொருளாகும்.

---

**6.** **CAATSA என்பது எந்த நாட்டுடன் தொடர்புடைய செயலாகும்?**

**அ) அமெரிக்கா ☑**

ஆ) ரஷ்யா

இ) சீனா

ஈ) UK



✓ CAATSA–Countering America's Adversaries Through Sanctions Act (அமெரிக்க எதிரிகளை பொருளாதாரத்தடைச்சட்டம்மூலம் எதிர்கொள்வ–து என்பது 2017ஆம் ஆண்டின் சட்டமாகும். இது ரஷ்யா உட்பட சில நாடுகளுடன் வணிகம் மேற்கொண்ட நாடுகளைத் தண்டிப்பதை நோக்கமாகக்கொண்டது.

✓ ரஷ்யாவின் S400 ஏவுகணை பாதுகாப்பு அமைப்பை வாங்குவதற்கான தடைகளிலிருந்து இந்தியாவிற்கு விலக்கு அளிக்கும் சட்டத்தை மூன்று குடியரசுக் கட்சி அமெரிக்க செனட்டர்கள் தாக்கல் செய்தனர். இது CAATSA விதித்த பொருளாதாரத் தடைகளிலிருந்து QUADஇன் உறுப்பு நாடுகளான ஆஸ்திரேலியா, ஜப்பான் மற்றும் இந்தியாவுக்கு 10 ஆண்டு வரை விலக்கு அளிக்கும்.

---

**7.** **தேசிய நிறுவன சட்ட மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் (NCLAT) புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**

**அ) அசோக் பூஷன் ☑**

ஆ) A K சிக்ரி

இ) ரஞ்சன் கோகோய்

ஈ) J முகோபாதயா



✓ ஓய்வுபெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி அசோக் பூசன், தேசிய நிறுவன சட்ட மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் (NCLAT) புதிய தலைவராக நான்கு ஆண்டுகள் அல்லது அவர் 70 வயது எய்தும்வரை நியமிக்கப்பட்டுள்ளார்.

✓ 2020 மார்ச்சில் அப்போதைய தலைவரான S J முகோபாதயா ஓய்வு பெற்றதிலிருந்து அந்தப்பதவி காலியாகவே இருந்தது. மணிப்பூர் உயர் நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற தலைமை நீதிபதி ராமலிங்கம் சுதாகரையும் தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயத்தின் தலைவராக அரசாங்கம் நியமித்தது.

---

**8.** **சமீப செய்திகளில் இடம்பெற்ற லேண்ட்சாட் 9'ஐ ஏவிய அமைப்பு எது?**

அ) இஸ்ரோ

**ஆ) NASA ☑**

இ) ஸ்பேஸ் X

ஈ) புளூ ஆர்ஜின்



✓ NASA'இன் புவியைக் கண்காணிக்கும் செயற்கைக்கோள் லேண்ட்சாட் 9 செப்.27 அன்று ஏவப்பட்டது. இது NASA மற்றும் அமெரிக்க புவியியல் ஆய்வுமையம் ஆகியவற்றின் கூட்டுப்பணியாகும். இச்செயற்கைக்கோள் புவியின் முதல் ஒளிப்படங்களைச்சேகரித்தது. காலநிலை நெருக்கடியை புரிந்துகொள்ளவும், வேளாண்மை நடைமுறைகளை நிர்வகிக்கவும், வளங்களைப் பாதுகாக்கவும் மற்றும் இயற்கைப் பேரிடர்களுக்கு பதிலளிக்கவும் இந்தப் படங்கள் உதவும்.

---

**9.** பந்தி சோர் திவாஸுடன் (விடுதலை நாள்) தொடர்புடைய மதம் எது?



அ) இந்து மதம்

ஆ) இஸ்லாம்

**இ) சீக்கியம் ☑**

ஈ) சமணம்

- ✓ தீபாவளி நாளோடு ஒத்துப்போகும் பந்தி சோர் திவாஸ் (விடுதலை நாள்) சீக்கியர்களின் கொண்டாட்ட நாளாகும். குவாலியர் கோட்டையிலுள்ள முகலாய சிறையிலிருந்து குரு ஹர்கோவிந்த்ஜி விடுவிக்கப்பட்ட நாளை இது நினைவுபடுத்துகிறது. முகலாய பேரரசர் ஜஹாங்கீர், இஸ்லாம் மதத்திற்கு மாறமறுத்ததற்காக ஹர்கோவிந்த்ஜியின் தந்தை குரு அர்ஜன் தேவ்ஜியைக் கொன்று ஆறாவது குரு ஹர்கோவிந்த்ஜியை சிறையில் அடைத்தார்.
- ✓ தீபாவளி நாளன்று, குரு ஹர்கோவிந்த்ஜி விடுவிக்கப்படுவார் என்று முடிவெடுக்கப்பட்டபோது, அவரைப் போல் தவறாக நடத்தப்பட்ட 52 மன்னர்களும் விடுதலையாக வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். "பந்தி" என்றால் அரசியல் காரணங்களுக்காக சிறையிலடைக்கப்பட்ட "கைதி" என்று பொருள்.

---

**10.** சமீப செய்திகளில் இடம்பெற்ற பார்க்கர் சோலார் ஆய்வூர்தியை ஏவிய நாடு எது?



அ) இந்தியா

**ஆ) அமெரிக்கா ☑**

இ) சீனா

ஈ) ரஷ்யா

- ✓ சூரியனை ஆய்வு செய்வதற்காக கடந்த 2018ஆம் ஆண்டில் NASA'இன் அதிவேக விண்கலமான பார்க்கர் சோலார் ஆய்வூர்தி ஏவப்பட்டது. இந்த விண்கலம் மற்ற விண்கலங்களைக் காட்டிலும் சூரியனுக்கு மிக அண்மையில் சென்றுள்ளது. மிக அதிவேகத்தில் நகரும் வகையிலும், அதிக வெப்பநிலையைத் தாங்கும் வகையிலும் இந்த விண்கலம் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- ✓ சமீபத்தில், அதிவேக தூசி தாக்கங்கள் பார்க்கர் சோலார் ஆய்வூர்தியில் பிளாஸ்மா வெடிப்புகளுக்கு வழிவகுத்தது எனக் கண்டறியப்பட்டது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. ஆசியாவின் மிகப்பெரிய விமான நிலையத்துக்கு பிரதமர் மோடி அடிக்கல்: உத்தர பிரதேசத்தில் அமைக்கப்படுகிறது**

ஆசியாவின் மிகப்பெரிய விமான நிலையங்களில் ஒன்றாக அமையவுள்ள நொய்டா சர்வதேச விமான நிலையத்துக்கு பிரதமர் நரேந்திர மோடி அடிக்கல் நாட்டினார்.

**3 ஆண்டுகளில்:** 1330 ஏக்கருக்கும் அதிகமான பரப்பில் அமைக்கப்படும் நொய்டா சர்வதேச விமான நிலையம் 2024ஆம் ஆண்டு செப்டம்பரில் கட்டி முடிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆரம்ப நிலையில் ஆண்டுக்கு 1.2 கோடி பயணிகளைக் கையாளும் வகையில் விமான நிலையம் அமைக்கப்படவுள்ளது.

---

**2. கொரோனா தடுப்பூசி கொள்முதலுக்கு ADB ₹11,000 கோடி கடனுதவி**

கொரோனா தடுப்பூசி மருந்தை கொள்முதல் செய்வதற்காக, இந்தியாவுக்கு 11 ஆயிரத்து 185 கோடி ரூபாய் கடன் வழங்க ஆசிய வளர்ச்சி வங்கியான, ADB ஒப்புதல் வழங்கியுள்ளது.

பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் இயங்கி வரும் ஆசிய வளர்ச்சி வங்கி, ஆசிய நாடுகளின் வளர்ச்சித் திட்டங்களுக்கு கடன் வழங்குகிறது. கடந்த ஆண்டு இந்த வங்கி இந்திய நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களை மேம்படுத்தவும், எதிர்கால தொற்று நோய் தாக்குதல்களை தடுக்கவும் 2,250 கோடி ரூபாய் கடன் வழங்கியது.

இதைத் தொடர்ந்து இந்தியாவுக்கு கொரோனா தடுப்பூசி மருந்தை கொள்முதல் செய்வதற்காக 11 ஆயிரத்து 185 கோடி ரூபாய் கடன் வழங்க ADB ஒப்புதல் அளித்துள்ளது.

---

**3. யுனெஸ்கோ உலக பாரம்பரிய குழுவின் உறுப்பினரானது இந்தியா**

யுனெஸ்கோ உலக பாரம்பரிய குழுவின் உறுப்பினராக நான்கு ஆண்டுகளுக்கு இந்தியா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட இடத்தை உலக பாரம்பரிய சின்னமாக அறிவிப்பது தொடர்பாக பாரம்பரிய குழுவே இறுதி முடிவெடுக்கும். ஏற்கனவே பாரம்பரிய சின்னமாக அறிவிக்கப்பட்ட இடம் முறையாகப் பராமரிக்கப்படுவதை ஆராய்வது, அதுதொடர்பான நிதியை ஒதுக்குவது, சம்பந்தப்பட்ட நாடுகளு –க்கு வலியுறுத்தல்களை வழங்குவது உள்ளிட்டவற்றையும் அந்தக் குழு மேற்கொள்ளும். ஆண்டுக்கு ஒருமுறை கூடி முக்கிய முடிவுகளை யுனெஸ்கோ பாரம்பரிய குழு மேற்கொள்ளும். 2025ஆம் ஆண்டு வரை அக்குழுவின் உறுப்பினராக இந்தியா செயல்படவுள்ளது.

யுனெஸ்கோ நிர்வாகக் குழுவின் உறுப்பினராகக் கடந்த 17ஆம் தேதி இந்தியா மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

---

**4. இந்தியாவில் ஆண்களைவிட பெண்கள் எண்ணிக்கை அதிகரிப்பு; தேசிய குடும்பநல சர்வேயில் தகவல்: பெரும்பாலான மாநிலங்களில் பெண்கள் எண்ணிக்கை அதிகம்**

இந்தியாவில் ஆண்கள் எண்ணிக்கையைவிட பெண்கள் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக 5–வது தேசிய குடும்ப நல சர்வே (NFHS) தெரிவித்துள்ளது.

கடந்த 1992ம் ஆண்டு சர்வே தொடங்கப்பட்டதிலிருந்து முதல்முறையாக ஆண்கள் எண்ணிக்கைவிட பெண்கள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அதாவது 1,000 ஆண்களுக்கு, 1,020 பெண்கள் உள்ளனர். கடைசியாக 2015–16ம் ஆண்டு நடத்தப்பட்ட ஆய்வில் 1,000 ஆண்களுக்கு 991 பெண்கள் என்ற ரீதியில் இருந்தனர்.

இந்தியாவில் மக்கள் தொகை எவ்வாறு இருக்கிறது, எந்த வீதத்தில் இருக்கிறது என்பதை பரவலாக அறிந்து கொள்ள தேசிய குடும்ப நல சர்வே பயன்படுகிறது. நாடுமுழுவதும் 707 மாவட்டங்களில் இருந்து 6.1 லட்சம் வீடுகளில் இருந்துமாதிரிகள் திரட்டப்பட்டன.

ஆனால், இந்த சர்வே பரந்த அளவில் நடத்தப்படாமல் மாவட்ட அளவில் நடத்தப்பட்டும். ஆனால், எதிர்காலசூழலை அறிய காரணியாக இருக்கும்.

கடந்த 5 ஆண்டுகளில் அதாவது கடந்த 2015–16ம் ஆண்டில் பாலின விகிதத்தில் ஆண் குழந்தைகள் பிறப்பு என்பது ஆயிரத்தில் 919 என்ற விகிதத்திலிருந்து 929 ஆக அதிகரித்துள்ளது.

பிறக்கும் குழந்தைகளில் நோய் உள்ளிட்ட பிற சிக்கல்களில் இருந்து மீண்டும் உயிர்பிழைத்திருப்பதில் பெண் குழந்தைகளைவிட ஆண் குழந்தைகள் சிறப்பாக இருக்கிறார்கள்.

பெரும்பாலான மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களில் ஆண்கள் எண்ணிக்கையைவிட பெண்கள் எண்ணிக்கையே அதிகரித்துள்ளது என்று தேசிய குடும்ப நல சர்வே–5 தெரிவிக்கிறது. குஜராத், மகாராஷ்டிரா, அருணாச்சலப் பிரதேசம், ஹரியானா, மத்தியப் பிரதேசம், பஞ்சாப், ஜம்மு காஷ்மீர், சண்டிகர், டெல்லி, அந்தமான் நிகோபர் தீவுகள், தாத்ரா நாகர் ஹவேலி, லடாக் போன்ற யூனியன் பிரதேசங்களில் ஆண்களைவிட பெண்கள் எண்ணிக்கை சற்று அதிகரித்துள்ளது. ஒட்டு மொத்தமாகப்பார்க்கும்போது, பெண்கள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

மாநிலங்கள் அடிப்படையில் மொத்த கருவுறுதல் விகிதம் (டிஎப்ஆர்) என்பது 2க்கும் குறைவாக இருக்கிறது. இதன்மூலம் இந்தியா மக்கள் தொகையை நிலைப்படுத்தி வருகிறது. அதாவது மொத்த கருவுறுதல் விகிதம் 2.1'க்கு குறைவாக இருந்தாலே பெண்கள் சராசரியாக தங்கள் வாழ்நாளில் குறைந்தபட்சம் இரு குழந்தைகளைப் பெற்றெடுப்பார்கள் என்பது கணக்காகும்.

அதேநேரம் 2 க்கும் குறைவாகச் சரியும்போது, மக்கள் தொகையும் சரியத் தொடங்கும். ஆனால், இந்தியாவில் பிஹார், மேகாலயா, மணிப்பூர், ஜார்க்கண்ட், உத்தரப்பிரதேசம் ஆகியவற்றில் மட்டும்தான் மொத்த கருவுருதல் 2 க்கும் அதிகமாக இருக்கிறது.

உலகிலேயே அதிகமான மக்கள் தொகை கொண்ட நாடுகளில் ஒன்றாக இந்தியா இருந்து வருகிறது. 2040 முதல் 2050ம் ஆண்டுகளுக்கு இடையே இந்தியாவின் மக்கள் தொகை 160 கோடி முதல் 180 கோடியை எட்டும் எனக்கணிக்கப்பட்டுள்ளது. வரும் 2031ஆம் ஆண்டில் இந்தியாவின் மக்கள்தொகை சீனாவை முந்தும் எனவும் கணிக்கப்பட்டுள்ளது.

இதில் கேரளா மட்டுமே விதிவிலக்காக இருக்கிறது. கேரளாவில் கடந்த 4–வது சர்வேயில் ஆயிரம் ஆண்களுக்கு 1,049 பெண் குழந்தைகள் என இருந்த நிலையில் தற்போது 1,121 பெண்கள் என அதிகரித்துள்ளது.

கேரளாவில் மொத்த கருவுருதல் விகிதமும் 1.6 லிருந்து 1.8 ஆக அதிகரித்துள்ளது.

கடந்த 5 ஆண்டுகளில் பிறந்த குழந்தைகளின் பாலின விகிதத்தைப் பொறுத்தவரை பெண் குழந்தைகள் பிறப்பு குறைந்துள்ளது. அதாவது, 2015-16ல் 1,000 ஆண்களுக்கு 1,047 பெண்கள் இருந்த நிலையில் தற்போது 1,000 ஆண்களுக்கு 951 ஆக குறைந்துள்ளது.

---

**5. துறைமுக இணைப்புக்கு 101 புதிய திட்டங்கள்**

டெல்லியில் தொழில்துறை கூட்டமைப்புகள் சங்கம் ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட ஒன்றிய துறைமுகங்கள், கப்பல் மற்றும் நீர்வழித்துறை அமைச்சரான சர்பானந்தா சோனோவால் பேசுகையில், "நாட்டில் 24 மாநிலங்களில் பரவியுள்ள 111 நீர்வழிகள் தேசிய நீர்வழிப் பாதைகளாக அறிவிக்கப்பட்டுள்ளன. தளவாட செலவுகளை குறைப்பது இந்தியாவுக்கு மிகவும் முக்கியமானது. நாடு முழுவதும் தளவாட சூழலை வலுப்படுத்த கதி சக்தி தேசிய மாஸ்டர் திட்டத்தை பிரதமர் மோடி அறிமுகம் செய்துவைத்தார். எனவே, இத்திட்டத்தின் கீழ் நுகர்வு மற்றும் உற்பத்தி மையங்களுடன் துறைமுக இணைப்பை மேம்படுத்த 101 திட்டங்களை அடையாளம் கண்டுள்ளோம். ஒன்றிய அரசின் உள்கட்டமைப்பு திட்டங்கள் பல்வேறு கட்டங்களில் உள்ளன" என்றார்.

---

**6. 100% முதல் தவணை தடுப்பூசி செலுத்தப்பட்ட மாவட்டம் காஞ்சிபுரம்**

தமிழகத்தில் 100 சதவீதம் முதல் தவணை கரோனா தடுப்பூசி செலுத்திய மாவட்டமாக காஞ்சிபுரம் உருவெடுத்துள்ளதாக மக்கள் நல்வாழ்வுத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அதற்கு அடுத்தபடியாக கோவையில் 90 சதவீதம் பேருக்கு முதல் தவணை தடுப்பூசி செலுத்தப்பட்டிருப்பதாக அவர்கள் கூறியுள்ளனர். அதுபோன்ற நிலையை மாநிலம் முழுவதும் உருவாக்க நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோவிஷீல்ட் மற்றும் கோவேக்ஸின் தடுப்பூசிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து தமிழகத்தில் 18 வயதைக் கடந்த அனைவருக்கும் கரோனா தடுப்பூசிகள் செலுத்தப்பட்டு வருகின்றன. அந்த வகையில் இதுவரை 76 சதவீதத்துக்கும் மேற்பட்டோருக்கு முதல் தவணை தடுப்பூசியும், 40% பேருக்கு இரண்டு தவணை தடுப்பூசிகளும் செலுத்தப்பட்டுள்ளன. சுகாதாரத் துறை தகவல்படி மொத்தம் 6.47 கோடி பேருக்கு தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், மாவட்ட வாரியாக தடுப்பூசி செலுத்தப்பட்ட விகிதத்தை பொது சுகாதாரத் துறை வெளியிட்டுள்ளது. அதில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் 72 லட்சத்து 61 ஆயிரம் பேருக்கு முதல் தவணை தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாகவும், அதன் வாயிலாக 100 சதவீதம் முதல் தவணை செலுத்திய மாவட்டமாக அது உருவெடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கு அடுத்தபடியாக கோவையில் 90.81 சதவீதம் பேரும், சென்னையில் 82 சதவீதம் பேரும், கரூா் 82.50 சதவீதம் பேரும், நீலகிரி 85.53 சதவீதம் பேரும், திருப்பூா் 85.65 சதவீதம் பேரும், கடலூா் 86.06 சதவீதம் பேரும் முதல் தவணை செலுத்தியிருப்பதாக மக்கள் நல்வாழ்வுத் துறை தெரிவித்துள்ளது.

அரியலூரில் 88.70 சதவீதம், திருப்பத்தூரில் 60.33 சதவீதம், ராணிப்பேட்டை 60.69 சதவீதம் என மாநிலம் முழுவதும் 76.03 சதவீதம் பேருக்கு முதல் தவணை தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

இரண்டு தவணையும் செலுத்தப்பட்ட மாவட்டங்களில் முதன்மையாக நீலகிரி உள்ளது. அங்கு மொத்தம் 71.32 சதவீதம் பேருக்கு இரு தவணை கரோனா தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன. அதற்கு அடுத்தபடியாக கோவையில் 54.95 சதவீதமும், சென்னையில் 54.29 சதவீதமும் இரு தவணை தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளன.

---

**7. ஐஎன்எஸ் வேலா நீர்மூழ்கிக் கப்பல் கடற்படையில் இணைப்பு**

கடல்சார் பாதுகாப்பை மேலும் வலுப்படுத்தும் வகையில், ஐஎன்எஸ் வேலா நீர்மூழ்கிக் கப்பல் இந்திய கடற்படையில் இணைக்கப்பட்டது.

ஐஎன்எஸ் விசாகப்பட்டினம் போர்க்கப்பல் கடந்த 21-ஆம் தேதி இந்தியக் கடற்படையுடன் இணைக்கப்பட்ட நிலையில், தற்போது ஒரே வாரத்துக்குள் INS வேலா நீர்மூழ்கிக் கப்பல் இணைக்கப்பட்டுள்ளது.

'புராஜெக்ட் 75' திட்டத்தின் கீழ் ஸ்கார்பீன் இரக நீர்மூழ்கிக் கப்பல் வடிவமைப்பில், முற்றிலும் இந்தியாவிலேயே உருவாக்கப்பட்ட நான்காவது நீர்மூழ்கிக் கப்பல் INS வேலா. பிரான்ஸ் நிறுவனத்துடன் இணைந்து மஸகான் டாக் கப்பல்கட்டும் நிறுவனம் வேலா நீா்மூழ்கிக் கப்பலை உருவாக்கியது.

அக்கப்பலை கடற்படையில் இணைப்பதற்கான நிகழ்ச்சி மும்பையில் வியாழக்கிழமை நடைபெற்றது. அந்நிகழ்ச்சியில் பங்கேற்ற இந்திய கடற்படை தலைமைத் தளபதி கரம்வீர் சிங் பேசியதாவது:

'புராஜெக்ட் 75' திட்டத்தின் வாயிலாக இந்திய கடற்படையின் தாக்குதல் திறன் வரும் காலங்களில் அதிக அளவில் அதிகரிக்கும். நீர்மூழ்கிக் கப்பல் கட்டுமானத்தில் தன்னிறைவு அடைவதற்கான நடவடிக்கைகள் அத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நாட்டின் கப்பல்கட்டும் திறன்: கடலுக்கடியில் அனைத்துவிதமான பாதுகாப்புசார் நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் திறன் ஐஎன்எஸ் வேலாவுக்கு உள்ளது. நாட்டின் தற்போதைய பாதுகாப்புச் சூழலை ஆராயும்போது, வேலாவின் தாக்குதல் திறன், நாடு எதிர்கொள்ளும் கடல்சார் அச்சுறுத்தலைத் திறம்பட எதிர்கொள்ள உதவும்.

இந்திய பெருங்கடல் பகுதியின் பாதுகாப்பை உறுதிசெய்வதில் ஐஎன்எஸ் வேலா முக்கியப் பங்கு வகிக்கும். இந்தியாவின் நீர்மூழ்கிக் கப்பல்கட்டும் திறனை INS வேலா உலகுக்கு எடுத்துக்காட்டியுள்ளது. நீர்மூழ்கிக் கப்பலை இறக்குமதி செய்யும் நாடு என்ற நிலையில் இருந்து அவற்றைக் கட்டும் நாடு என்ற நிலைக்கு இந்தியா உயர்ந்துள்ளது என்றார் அவர்.

ஏவுகணைகளும் கருவிகளும்: ஐஎன்எஸ் வேலா குறித்து இந்திய கடற்படை வெளியிட்ட அறிக்கையில், 'இந்திய கடற்படையின் மேற்குப் பிரிவில் இணைந்து ஐஎன்எஸ் வேலா செயல்படும். நீண்ட தொலைவு சென்று தாக்கக் கூடிய ஏவுகணைகளும், போா்க் கப்பல்களைத் தாக்கி அழிக்கக் கூடிய ஏவுகணைகளும் ஐஎன்எஸ் வேலாவில் இணைக்கப்பட்டுள்ளன.

ஒலியின் மூலமாக கடலுக்கடியில் உள்ள பொருள்களின் தொலைவைக் கண்டறிவதற்காகப் பொருத்தப்பட்டுள்ள 'சோனாா்' கருவி, முற்றிலும் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டது. மேலும், பல நவீன கருவிகளும் உணா்விகளும் (சென்சாா்) வேலாவில் பொருத்தப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த அமைப்பு: கப்பலில் பொருத்தப்பட்டுள்ள அனைத்துக் கருவிகளும் 'சப்டிக்ஸ்' என்ற அமைப்புடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. எதிரிகளின் இலக்குகளைக் கண்டறிந்த பிறகு, அவற்றின் மீது எவ்வாறு தாக்குதல் நடத்துவது என்பதை அந்த அமைப்பு முடிவு செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

'புராஜெக்ட் 75' திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட ஐஎன்எஸ் கல்வரி, ஐஎன்எஸ் கண்டேரி, ஐஎன்எஸ் கரஞ்ஜ் ஆகிய மூன்று நீா்மூழ்கிக் கப்பல்கள் ஏற்கெனவே இந்தியக் கடற்படையில் இணைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

---

**8. இந்தியாவில் முதன் முறையாக பெண்கள் கருவுறுதல் 2.1க்கும் கீழ் குறைவு: ஆண்- பெண் விகிதம் பாதிக்கும் அபாயம்**

கடந்த 2019-2020ம் ஆண்டுக்கான தேசிய குடும்ப நல சுகாதார கணக்கெடுப்பு குறித்த 2வது கட்ட தரவுகள் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது.

பெண்களின் மொத்த கருவுறுதல் விகிதம் தற்போது 2.1 என்ற சராசரிக்கும் கீழ் சரிந்துள்ளது. இந்தியாவில் 3 மாநிலங்கள் மட்டுமே கருவுறுதல் வீதம் அதிகம் கொண்டவையாக காணப்படுகின்றன. பீகார் (3.0), உத்தர பிரதேசம் (2.4), ஜார்க்கண்ட் (2.3) என்ற அளவில் உள்ளன.

கடந்த 2005-2006ம் ஆண்டு எடுக்கப்பட்ட 3வது தேசிய குடும்ப நல சுகாதார கணக்கெடுப்பின்படி மொத்த கருவுறுதல் சதவீதம் 2.7 ஆக இருந்தது. இது, 2015-2016ம் ஆண்டில் 2.2 ஆக குறைந்தது. தற்போது, 2.1 என்ற சராசரி அடிப்படையில் உள்ளது. 3வது தேசிய குடும்பநல சுகாதார கணக்கெடுப்பு மற்றும் தற்போது எடுக்கப்பட்ட 5வது சுகாதார கணக்கெடுப்பின்படி பல மாநிலங்களில் பெண்களின் கருவுறும் விகிதம் கணிசமாக குறைந்துள்ளது. இதற்கு, கருத்தடை மருந்துகள், சாதனங்களை பயன்படுத்தும் விகிதம் அதிகமாகி இருப்பதே முக்கிய காரணம். 2.1 என்ற விகிதத்துக்கு கீழ் மக்கள் தொகை மாற்று கருவுறுதல் விகிதம் குறைந்தால், இந்த நிலையில், பெண்கள் கருவுறும் விகிதம் குறைந்து இருப்பதால், இந்த பாலின சமன்பாட்டில் பாதிப்பு ஏற்படும் அபாயம் உள்ளதாக" கூறப்பட்டுள்ளது.

---

**1.** **உலக தொலைக்காட்சி நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?**




அ) நவம்பர் 18

**ஆ) நவம்பர் 21 ☑**

இ) நவம்பர் 23

ஈ) நவம்பர் 25

✓ சமகால உலகில் தொலைக்காட்சியின் தாக்கத்தைக்குறிக்கும் வகையில் நவம்பர்.21ஆம் தேதி உலக தொலைக்காட்சி நாள் உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது. 1996ஆம் ஆண்டு நவம்பர் 21–22 தேதிகளில் முதல் உலக தொலைக்காட்சி மன்றம் நடத்தப்பட்டதிலிருந்து நவ.21ஆம் தேதியை உலகத் தொலைக்காட்சி நாளாகக் கொண்டாட ஐநா பொதுச் சபை முடிவு செய்தது.

---

**2.** **ABU – UNESCO அமைதி ஊடக விருதுகள் – 2021'ஐ வென்ற 'DEAFinitely Leading the Way' என்பது எவ்வூடகத்தின் திட்டமாகும்?**

**அ) தூர்தர்ஷன் ☑**

ஆ) என்டிடிவி

இ) டைம்ஸ் நெள

ஈ) ஜீ டிவி

✓ ஆசிய பசிபிக் பிராட்காஸ்டிங் யூனியன் (ABU) – UNESCO Peace Media Awards 2021'இல், தூர்தர்ஷனின் 'DEAFinitely Leading the Way' 'Living Well with Super Diversity' பிரிவில் விருதை வென்றது. அகில இந்திய வானொலியின் 'Living on the edge – The coastal lives' என்ற நிகழ்ச்சியானது 'Ethical & Sustainable Relationship with Nature' பிரிவில் விருதைவென்றது. மலேசியாவில் உள்ள கோலாலம்பூரில் இதன் விருது வழங்கும் விழா நடைபெற்றது.

---

**3.** **அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற 'ஜிக்யாசா நிகழ்ச்சி', எந்தத் துறையுடன் தொடர்புடையதாகும்?**

**அ) அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் ☑**

ஆ) பொருளாதாரம்

இ) விளையாட்டு

ஈ) ஊட்டச்சத்து

✓ 'CSIR ஜிக்யாசா' திட்டத்தின்கீழ் குழந்தைகளுக்கான இந்தியாவின் முதல் மெய்நிகர் அறிவியல் ஆய்வகம் சமீபத்தில் மத்திய அறிவியல் & தொழில்நுட்பத்துறை அமைச்சர் ஜிதேந்திர சிங்கால் தொடங்கப்பட்டது.

✓ பள்ளி மாணவர்களுக்கான ஆய்வக ஆராய்ச்சியுடன் கூடிய வகுப்பறை கற்றலை செயல்படுத்தும் 'CSIR ஜிக்யாசா' திட்டத்தின்கீழ் மெய்நிகர் ஆய்வகத்தை உருவாக்க CSIR, ஐஐடி பாம்பேயுடன் கூட்டு சேர்ந்துள்ளது. மெய்நிகர் ஆய்வகத்திற்கான இலக்கு 6–12 வகுப்பு மாணவர்கள் ஆகும்.

---

**4.** **தனிநபர் தரவுப்பாதுகாப்பு மசோதா–2019'க்கான நாடாளுமன்றக் கூட்டுக்குழுவின் தலைவர் யார்?**



அ) V முரளீதரன்

ஆ) N இரவி

**இ) P P சௌத்ரி ☑**

ஈ) S ஜெய்சங்கர்

✓ தனிநபர் தரவுப்பாதுகாப்பு மசோதா–2019'க்கான நாடாளுமன்றக் கூட்டு குழுவானது, அரசாங்கத்தின் எந்தவொரு நிறுவனத்தையும் சட்டத்தின் எல்லைக்கு வெளியே வைத்திருக்க அனுமதிக்கும் சர்ச்சைக்குரிய விலக்கு விதியை ஆதரித்துள்ளது. P P சௌத்ரி தலைமையிலான குழு, சிறிய மாற்றத்துடன் இந்தச் சரத்தை தக்கவைத்துள்ளது. அந்த அறிக்கை இப்போது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

---

**5.** **கனக தாசா என்பவர் எந்த மாநிலத்தைச் சார்ந்த பதினைந்தாம் நூற்றாண்டின் கவி, துறவி மற்றும் சமூக சீர்திருத்தவாதியாவார்?**



அ) தமிழ்நாடு

**ஆ) கர்நாடகா ☑**

இ) ஆந்திர பிரதேசம்

ஈ) ஒடிஷா

✓ 15ஆம் நூற்றாண்டின் கவிஞர், துறவி மற்றும் சமூக சீர்திருத்தவாதி கனகதாசருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் 'கனகதாச ஜெயந்தி' கர்நாடகாவில் கொண்டாடப்படுகிறது.

✓ புனித கனக தாசரின் பிறந்த இடமான காகினேலே, பொதுமக்களின் வருகைக்காக அரசாங்கத்தால் புதுப்பிக்கப்பட்டுள்ளது. கனகதாசா மற்றும் புராணதாசா, விஜயதாசா & கோபாலதாசா உள்ளிட்ட பக்தி இயக்கத்தின் பிற தாசர்கள் பாடிய கீர்த்தனைகள் கன்னட இலக்கியத்தில் 'தாச சாகித்தியம்' மற்றும் 'தேவரநாமங்கள்' என்று அழைக்கப்படுகின்றன.

---

**6.** **அமெரிக்கா & இங்கிலாந்துடனான அணுசக்தி நீர்மூழ்கிக்கப்பல் கூட்டணியில், முக்கிய ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ள நாடு எது?**



அ) பிரான்ஸ்

**ஆ) ஆஸ்திரேலியா ☑**

இ) இத்தாலி

ஈ) இஸ்ரேல்

✓ அமெரிக்கா & இங்கிலாந்துடன் ஆஸ்திரேலியா ஒப்பந்தம் புரிந்துள்ளது. இம்முத்தரப்பு ஒப்பந்தம் ஆஸ்திரேலியாவுக்கு அணுசக்தியால் இயங்கும் நீர்மூழ்கிக்கப்பல் தொழில்நுட்பத்தை வழங்குகிறது. மூன்று நாடுகளும் AUKUS என்ற பாதுகாப்புக் கூட்டணியை உருவாக்குவதாக அறிவித்த பிறகு, தொழில்நுட்பத்தில் வெளிப்படையாக கையெழுத்திடப்பட்ட முதல் ஒப்பந்தம் இதுவாகும்.

---

**7.** **'கர்நாடகா ராஜ்யோத்சவா' மற்றும் 'கேரள பிறவி நாள்' ஆகியன ஒவ்வோர் ஆண்டும் எந்த நாளில் கொண்டாடப்படுகின்றன?**



அ) அக்டோபர் 3

**ஆ) நவம்பர் 1 ☑**

இ) நவம்பர் 3

ஈ) நவம்பர் 5

✓ கேரளா, கர்நாடகா மத்திய பிரதேசம், ஹரியானா, சத்தீஸ்கர் மற்றும் ஆந்திர பிரதேசம் ஆகிய மாநிலங்கள் நவ.1 அன்று மாநில நாளைக் கொண்டாடுகின்றன. கேரளாவில் இந்நாள் 'கேரள பிறவி நாள்' என்றும், கர்நாடக மாநிலத்தில் இந்த நாள் 'கர்நாடக இராஜ்யோத்சவா' என்றும் கொண்டாடப்படுகிறது.

---

**8.** **COP26 மாநாட்டில் 'சோலார் காம்பஸ்' இதழைத் தொடங்கிய பன்னாட்டு அமைப்பு எது?**

**அ) பன்னாட்டு சூரிய ஆற்றல் கூட்டணி ☑**

ஆ) பன்னாட்டு ஆற்றல் நிறுவனம்

இ) பன்னாட்டு அணுசக்தி நிறுவனம்

ஈ) பன்னாட்டு புதுப்பிக்கத்தக்க ஆற்றல் நிறுவனம்

✓ பன்னாட்டு சூரிய ஆற்றல் கூட்டணி (ISA) மற்றும் நெதர்லாந்தைச் சார்ந்த வெளியீட்டு நிறுவனமான 'எல்செவியர்' COP26 காலநிலை மாநாட்டில் தூதர் ஸ்டீபன் குருஸுடன் இணைந்து 'சோலார் காம்பஸ்' என்ற இதழைத்தொடங்கின. ISA என்பது இந்தியாவால் தொடங்கப்பட்ட பன்னாட்டு அரசுகளுக்கிடையேயான ஒப்பந்த அடிப்படையிலான ஒரு பன்னாட்டு அமைப்பாகும். பன்னாட்டு சூரிய ஆற்றல் கூட்டணியின் தலைமை இயக்குநர் அஜய் மாத்தூர், உலகெகுமுள்ள ஆசிரியர்களுக்கு ஆவணங்களுக்கான முதல் அதிகாரப்பூர்வ அழைப்பை வெளியிட்டார்.

---

**9.** **சட்ட ஆலோசனைகள் வழங்குவதற்காக மத்திய சட்டம் & நீதித் துறை அமைச்சரால் அறிமுகப்படுத்தப்பட்ட திறன்பேசிச் செயலியின் பெயர் என்ன?**




**அ) Citizen's Tele–Law ☑**

ஆ) Bharat Tele–Law

இ) Atmanirbhar Nyayalay

ஈ) Nyay For All

✓ மத்திய சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு 'சிட்டிசன் டெலி–லா' திறன்பேசிச் செயலியை வெளியிட்டார். இந்தச் செயலி அதன்

பயனாளிகளை நேரடியாக சட்ட ஆலோசனை வழங்கும் வழக்கறிஞர்க–ளுடன் இணைக்கும். அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களை உள்ளடக்கிய 75,000 கிராமப் பஞ்சாயத்துகளில் டெலி–லாவை விரிவுபடுத்தவுள்ளதாகவும் கிரண் ரிஜிஜு அறிவித்துள்ளார்.

---

**10. இந்தியாவின் முதல் உணவு அருங்காட்சியகம் தொடங்கப்பட்ட இடம் எது?**



அ) வாரணாசி

ஆ) காசியாபாத்

இ) புனே

**ஈ) தஞ்சாவூர் ☑**

✓ மத்திய வணிகம், தொழிற்துறை, உணவு மற்றும் பொதுவழங்கல் துறை அமைச்சர் பியூஷ் கோயல், இந்தியாவின் முதல் உணவு அருங்காட்சியக–த்தை தமிழ்நாட்டின் தஞ்சாவூரில் திறந்து வைத்தார். இந்திய உணவுக் கழகமும் விஸ்வேஸ்வரய்யா தொழில் மற்றும் தொழில்நுட்ப அருங்காட்சி–யகங்களும் இணைந்து ₹1.10 கோடி திட்ட மதிப்பீட்டில் இந்த அருங்காட்–சியகத்தை உருவாக்கியுள்ளன.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. வெண்மைப் புரட்சியின் தந்தை என்று போற்றப்படும் வர்கீஸ் குரியன் பிறந்தநாள் நூற்றாண்டு விழா**

'இந்தியாவின் பால் மனிதர்' என்றுபோற்றப்படும் Dr வர்கீஸ் குரியனின் பிறந்தநாள் நூற்றாண்டைக் கொண்டாடும் விதமாக ஆவின் நிறுவனம் தனது பால் பாக்கெட்களில் அவரது படத்தை அச்சிட்டு, பெருமைப்படுத்தி உள்ளது.

வர்கீஸ் குரியன் கேரள மாநிலம் கோழிக்கோட்டில் 1926ஆம் ஆண்டு நவ.26ஆம் தேதி பிறந்தார். சென்னை லயோலா கல்லூரியில் இயற்பியல் துறையில் பட்டம் பெற்ற பிறகு, கிண்டி பொறியியல் கல்லூரியில் எந்திரவியல் துறையில் பட்டம் பெற்றார். பின்னர், அரசு உதவித் தொகையில் அமெரிக்காவின் மிச்சிகன் மாநிலப் பல்கலைக்கழகத்தில் எந்திரவியல் பொறியியலில் எம் எஸ் பட்டம் பெற்றார்.

இதையடுத்து, இந்தியா திரும்பிய குரியன், 1949ஆம் ஆண்டு குஜராத் மாநிலத்தின் ஆனந்த் அரசு பால்பண்ணையில் பொறியாளராக பணியில் சேர்ந்தார். அந்தச் சமயத்தில், புதிதாக தொடங்கப்பட்ட கூட்டுறவு பால் பண்ணைகள், குஜராத் மாநில கைரா மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கம் பெரும் வீழ்ச்சியை சந்தித்து வந்தன. அப்போது, கைராபால் சங்கத்தலைவர் திரிபுவன்தாஸ் படேலுக்கு, பால் பதப்படுத்தும் ஆலையை நிறுவத் தேவையான உதவிகளை செய்ய முன்வந்தார் குரியன். இதுதான் இந்தியாவில் புகழ்பெற்ற அமுல் பால் மற்றும் பால் பொருட்கள் தயாரிப்பு நிறுவனம் உருவாக காரணமாக அமைந்தது.

நவீன பால் உற்பத்தி குறித்து விவசாயிகளிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தினார் குரியன். பன்னாட்டு நிறுவனங்களால் நிராகரிக்கப்பட்ட ஏழை பால் கூட்டுறவு சங்கத்தை, ஆசியாவிலேயே மிகப்பெரிய, வெற்றிக–ரமான நிறுவனமாக உயர்திய பெருமை வர்கீஸ் குரியனையே சாரும்.

அமுலின் வெற்றி திட்டத்தை நாடு முழுவதும் கொண்டு செல்லும் விதமாக, 'Operation Flood' என்ற பெயரிலான திட்டத்தை 3 கட்டங்களில் செயல்படுத்த மத்தியஅரசு முன்வந்தது. அதுவே புகழ்மிக்க வெண்மைப் புரட்சியானது. தமிழக அரசு நிறுவனமான ஆவினும் வெண்மைப் புரட்சியின் வழித் தோன்றல்தான். வெண்மைப் புரட்சியின் தந்தையான வர்கீஸ் குரியன் பிறந்தநாளை ஆண்டுதோறும் நவம்பர் 26ஆம் தேதி தேசிய பால் நாளாக மத்திய கால்நடை பராமரிப்பு, பால்வளத்துறை சிறப்பாக கொண்டாடி வருகிறது. அந்த வகையில், அவரது நூற்றாண்டு பிறந்தநாள் நேற்று கொண்டாடப்பட்டது. இதையொட்டி, அவரை பெருமைப்படுத்தும் விதமாக ஆவின் பால் நிறுவனம் தனது பால் பாக்கெட்களில் 'சேவையே வாழ்க்கை' என்ற வரிகளுடன் Dr வர்கீஸ் குரியனின் புகைப்படத்தையும் வெளியிட்டு பெருமைப்படுத்தியுள்ளது.

வர்கீஸ் குரியனின் வெண்மைப்புரட்சி, நாட்டு மாடுகளின் அழிவுக்குக் காரணம் என்று ஒரு தரப்பில் கூறப்பட்டு வந்தாலும், இந்தியாவில் பால் உற்பத்தி குறைவாக இருந்ததால், பால் பவுடர்கள் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டது. பால், பவுடர் ரேஷன் முறையில் வழங்கப்பட்ட முறையை மாற்றி, இன்று எங்கும், எப்போதும் பால் வாங்கும் நிலைக்கு நாம் முன்னேறியுள்ளதற்கு வர்கீஸ் குரியனின் புரட்சிதான் காரணம் என்பதை யாராலும் மறுக்க முடியாது.

---

**2. அரசின் கொள்கைகளால் சர்வதேச தகவல் தொழில்நுட்ப மையமாக தமிழகம் மாறும்: 'கனெக்ட் 2021' கருத்தரங்கை தொடங்கிவைத்து முதல்வர் மு க ஸ்டாலின் உறுதி**

மத்திய மின்னணு, தகவல் தொழில்நுட்பத் துறை, தமிழக அரசின் எல்காட் நிறுவனம், இந்திய தொழில் கூட்டமைப்பு (சிஐஐ) இணைந்து நடத்தும் தகவல் மற்றும் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான 'கனெக்ட் 2021' என்ற இரண்டு நாள் கருத்தரங்கம் மற்றும் கண்காட்சி சென்னை கிண்டியில் உள்ள ஐடிசி சோழா ஓட்டலில் நேற்று தொடங்கியது. இதை முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைத்து பேசியதாவது:

1996'க்கு முன்பு தமிழகத்தில் 34 மென்பொருள் நிறுவனங்கள் இருந்த நிலையில், அந்த எண்ணிக்கையை திமுக அரசுதான் 666 ஆக மாற்றியது. ஒரு மாநிலத்துக்கு மிகப்பெரிய முன்னேற்றம், முதலீடுகளை கொண்டு வருவதில் தகவல் தொழில்நுட்பத் துறை முன்னணி வகிக்கிறது. தகவல் தொழில்நுட்பத் துறையில் நாட்டின் முன்னணி மாநிலமாக, உலக அளவில் கவனம் ஈர்க்கக்கூடிய மாநிலமாக தமிழகம் உள்ளது. நாட்டிலேயே மின்னணுப் பொருட்கள் ஏற்றுமதி செய்யும் முக்கிய மாநிலங்களில் தமிழகமும் ஒன்று.

கணினி, மின்னணுவியல், ஆப்டிகல் தயாரிப்புகள் தயாரிப்பில் நாட்டில் 2ஆம் இடத்திலும், எலெக்ட்ரானிக்ஸ் ஏற்றுமதியில் 3ஆம் இடத்திலும் உள்ளோம். தகவல் தொழில்நுட்பத் துறையில் வளர்ச்சிக்கான புதிய வாய்ப்புகளை பயன்படுத்தி, முதல் இடத்தை தக்கவைக்க தமிழக அரசு முயற்சித்து வருகிறது.

தரவு மையங்களை அமைப்பதில் தமிழகம் சிறந்து விளங்கும்நிலையில், அதில் முதலீடுகளை ஈர்க்க ஒரு கொள்கை வெளியிடப்பட்டுள்ளது. அதேபோல, தரவுகளை அடிப்படையாக கொண்ட கொள்கை வடிவமைத்தலில், மாநிலத்தின் திறனை மேம்படுத்தும் நோக்கில், சென்னை கணிதவியல் கழகத்துடன் தமிழ்நாடு மின் ஆளுமை முகமை ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது.

தொழிற்துறை, நகர்ப்புற வளர்ச்சிக்கு ஏற்ப மாநிலத்தின் உட்கட்டமைப்–பை மேம்படுத்த, புறவழிச் சாலைகள், சென்னை மெட்ரோ இரயில் விரிவாக்கம், புதிய விமான நிலையம் போன்ற குறிப்பிடத்தக்க உட்கட்டமைப்பு திட்டங்களை அரசு முன்னெடுத்து வருகிறது.

தகவல் தொழில்நுட்பத்துறைகளில் வளர்ந்துவரும் தொழில்நுட்பங்களை தமிழகத்தில் உள்ள தொழில் நிறுவனங்கள் பின்பற்ற வேண்டும். தொழில்களுக்கு தேவையான முழு ஆதரவை தமிழக அரசு வழங்கும் என்று உறுதி அளிக்கிறேன். நவீன ஒற்றைச் சாளர முறை மூலம், எளிதாக வணிகம் செய்வதை மேம்படுத்த அரசு பல சீர்திருத்தங்களை செய்து வருகிறது.

எங்களது புதிய கொள்கைகள், முன்முயற்சிகள் தமிழகத்தை சர்வதேச தகவல் தொழில்நுட்ப மையமாக மாற்றும். மாநிலத்தின் பொருளாதாரம், தொழில் துறை வளர்ச்சிக்கு தடையாக உள்ள அனைத்து பிரச்சினைக–ளுக்கும் தீர்வு காண்பதில் தொழில் துறையுடன் இணைந்து செயல்படு–வோம். தகவல் தொழில்நுட்பத் துறை நமது லட்சியமான 1 லட்சம் கோடி டாலர் இலக்கை அடைய உதவும். இவ்வாறு முதல்வர் கூறினார்.

---

**3. ராம்கோ சிமென்ட்ஸ் நிறுவனத்தின் – 2 சுரங்கங்களுக்கு 5 நட்சத்திர அந்தஸ்து:**

ராம்கோ சிமென்ட்ஸ் நிறுவனத்தின் இரண்டு சுண்ணாம்புக்கல் சுரங்கங்களுக்கு மத்திய அரசின் 5 நட்சத்திர அந்தஸ்து கிடைத்துள்ளது.

இதுகுறித்து ராம்கோ சிமென்ட்ஸ் நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

நாடு முழுவதுமுள்ள 1,029 சுரங்கங்கள் ஆன்லைனில் சுயமதிப்பீட்டை தாக்கல் செய்தன. பின்னர் அவை இந்திய சுரங்க பணியகத்தால் 2019–20–ம் ஆண்டுக்கான 5 நட்சத்திர விருதுக்கு பரிசீலிக்கப்பட்டன. இதில் 40 சுரங்கங்கள் (பல்வேறு உலோகங்கள் மற்றும் கனிமங்கள்) 5 நட்சத்திர விருதுக்கு தேர்வு செய்யப்பட்டன.

ராம்கோ சிமென்ட்ஸ் நிறுவனத்தின் மேலவெங்கடேஸ்வரபுரம், புதுப் பாளையம் & பெரியங்களூர் சுண்ணாம்புக்கல் சுரங்கங்களுக்கு மத்திய அரசின் 5 நட்சத்திர அந்தஸ்து கிடைத்துள்ளது.

---

**4. 2070'க்குள் ஆலைக் கழிவு வெளியேற்றம் பூஜ்ய நிலையை அடைய அரசு இலக்கு:**

சர்வதேச பருவநிலை கவுன்சில் கூட்டத்தில் காணொலி வாயிலாக நடத்திய ஆலோசனையின் போது மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் பூபேந்தர் யாதவ் பேசியதாவது:

நாடு முழுவதும் 2070ஆம் ஆண்டுக்குள் வளிமண்டலத்தை பாதிக்காத கழிவுகளை வெளியேற்றாத ஆலைகள் உள்ள நாடாக உருவாக வேண்டும். அந்த இலக்கை எட்டுவதற்கான நடவடிக்கைகளை தொழில் நிறுவனங்கள் மேற்கொள்ள வேண்டும். வளிமண்டல பாதிப்பு என்பது யூகத்தின் அடிப்படையிலானது அல்ல என்பதை தற்போது கால நிலைகளில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் நமக்கு உணர்த்தி வருகின்றன.

எதிர்பாரா வறட்சி, பெரு வெள்ளம், புயல், நீடித்திருக்கும் அனல் காற்று, மாறிவரும் பருவ சூழல் ஆகிய பாதிப்புகளை நாம் சந்தித்து வருகிறோம். பருவ நிலை மாறுபாட்டில் கரியமில வாயு வெளியேற்றத்தைக் குறைப்பதில் தொழில் நிறுவனங்களுக்கு மிக முக்கிய பங்குண்டு. அதை உணர்ந்து செயல்பட வேண்டும். இந்தியத்தொழில்நிறுவனங்கள் மிகவும் இக்கட்டான தருணங்களில் பல சாதனைகளைப் புரிந்துள்ளது.

அதேபோல நமது புவியைக் காப்பதிலும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். பருவமழை மாறுபாடு, காடுகளில் தீ, அதிக அளவிலான வெள்ளப்பெருக்கு, சூறாவளி உள்ளிட்ட பருவ நிலை மாறுபாடுகள் நம்மைச் சுற்றி நிகழ்வதை நாம் புறந்தள்ளிவிட முடியாது. இவ்வாறு பூபேந்தர் யாதவ் கூறினார். – பிடிஐ

---

**5. பிஹார், உ.பி., ஜார்க்கண்ட் ஏழை மாநிலமாக அறிவிப்பு: நிதி ஆயோக் ஆய்வில் தகவல்**

நிதி ஆயோக் அமைப்பு இந்திய மாநிலங்களின் பொருளாதார நிலையை பன்முக ஏழ்மை குறியீட்டெண் அடிப்படையில் ஆய்வு செய்துள்ளது. சுகாதாரம், ஊட்டச்சத்து, கல்வி மற்றும் வாழ்க்கை தரம் உள்ளிட்ட 12 காரணிகளைக் கணக்கில் கொண்டு நிதி ஆயோக் தயாரித் துள்ள மாநிலங்களின் ஏழ்மை குறியீட்டெண் அறிக்கையில் கூறியிருப்பதாவது:

பிஹார், ஜார்க்கண்ட், உத்தர பிரதேசம் ஆகிய மாநிலங்கள் முதல் 3 ஏழை மாநிலங்களாக உள்ளன. பிஹார் மக்கள் தொகையில் 51.91 சதவீதத்தினரும், ஜார்க்கண்டில் 42.16 சதவீதத்தினரும், உபியில் 37.79 சதவீதத்தினரும் ஏழ்மையில் உள்ளனர். மபியில் 36.65, மேகாலயாவில் 32.67 சதவீதம் ஏழை மக்கள் உள்ளனர். பட்டியலில் கடைசி ஐந்து இடங்களில் கேரளா (0.71%), கோவா (3.76%), சிக்கிம் (3.82%), தமிழ்நாடு (4.89%), பஞ்சாப் (5.59%) மாநிலங்கள் உள்ளன.

NITI ஆயோக்கின் இந்த ஏழ்மை குறியீட்டெண் அறிக்கை சர்வதேச அளவில் அங்கீகரிக் கப்பட்ட ஆக்ஸ்போர்ட் ஏழ்மை மற்றும் மனிதவள மேம்பாட்டு திட்டம் மற்றும் ஐநா வளர்ச்சித் திட்டம் ஆகியன இணைந்து உருவாக்கிய ஆய்வுமுறையின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளது.

---

**6. 'இன்டர்போல்' நிர்வாக குழுவுக்கு சிபிஐ சிறப்பு இயக்குநர் தேர்வு**

'இன்டர்போல்' எனப்படும் சர்வேதேச போலீஸ் அமைப்பின் நிர்வாகக் குழுவுக்கு இந்தியாவின் சார்பில் போட்டியிட்ட சிபிஐ சிறப்பு இயக்குநர் பிரவீன் சின்கா தேர்வு செய்யப்பட்டார்.

சர்வதேச போலீஸ் அமைப்பான 'இன்டர்போல்' சர்வதேச அளவில் தீவிரவாதம், போதை கடத்தல், இணையதள குற்றங்களுக்கு எதிராக செயல்படுகிறது. 'இன்டர்போல்' அமைப்பின் 89ஆவது பொதுச்சபை கூட்டம் துருக்கியின் இஸ்தான்புல்லில் நடந்து வருகிறது.

'இன்டர்போல்' அமைப்பின் நிர்வாகக் குழுவுக்கு ஆசியாவில் இருந்து தேர்ந் தெடுக்கப்படும் 2 உறுப்பினர்கள் இடங்களுக்கு தேர்தல் நடந்தது. இதில் இந்தியா, சிங்கப்பூர், சீனா, கொரியா, ஜோர்டான் நாடுகளிடையே போட்டி நிலவி யது. இந்தியாவின் சார்பில் போட்டியிட்ட சிபிஐ சிறப்பு இயக்குநர் பிரவீன் சின்கா நிர்வாக குழு உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டார்.

பிரவீன் சின்காவுக்கு பல்வேறு நாடுகள் ஆதரவு அளித்தன. இதற்காக பல்வேறு நாடுகளின் தூதரகங்களை இந்திய அதிகாரிகள் தொடர்பு கொண்டு ஆதரவு திரட்டினர். உலக அளவில் ஒருங்கிணைந்த இந்தியாவின் தீவிர பிரச்சாரத்துக்கு வெற்றி கிடைத்துள்ளதாக வெளியுறவு அதிகாரிகள் தெரிவித்தனர். குஜராத் ஐபிஎஸ் அதிகாரியான பிரவீன் சின்கா தற்போது சிபிஐ சிறப்பு இயக்குநராக பணியாற்றி வருகிறார். பிரவீன் சின்கா தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதன் மூலம் சர்வதேச அளவிலான குற்றங்களைத் தடுக்கும் 'இன்டர்போல்' அமைப்பின் முயற்சியில் இந்தியா மேலும் தீவிர பங்காற்றும் என்று வெளியுறவு அதிகாரிகள் தெரிவித்தனர்.

---

**6. அவசர அவசியம்! | இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்குவது குறித்த தலையங்கம்**

அசீம் பிரேம்ஜி பல்கலைக்கழகம் நடத்திய கொவைட் கால இந்தியாவின் நிலை குறித்த ஆய்வின்படி, 23 கோடி இந்தியர்கள் அந்த காலகட்டத்தில் வறுமைக்கோட்டுக்கு கீழே தள்ளப்பட்டிருக்கிறார்கள். அக்டோபர் 2021 நிலவரப்படி, வேலைவாய்ப்பின்மை 7.7% அளவுக்கு அதிகரித்திருக்கிறது. தானியங்கி இயந்திரங்களின் உதவியுடன் நிறுவப்படும் பிரம்மாண்டமான தொழிற்சாலைகள், வேலைவாய்ப்பின்மை அதிகரிப்பதற்கான இன்னொரு காரணம்.

இந்திய தொழில்துறையினரின் கூட்டமைப்பு (சிஐஐ) வெளியிட்டிருக்கும் புள்ளிவிவரப்படி, இந்தியாவில் 6.34 கோடி குறு, சிறு நடுத்தர தொழிற்சாலைகள் இருக்கின்றன. ஏறத்தாழ 12 கோடி தொழிலாளர்கள் அவற்றில் பணியாற்றுகிறார்கள். மொத்த உற்பத்திப் பொருள்களில் 33.4% அங்குதான் தயாரிக்கப்படுகின்றன. இந்திய உற்பத்தியாளர்கள் சங்கத்தின் ஆய்வின்படி, அவற்றில் மூன்றில் ஒரு பங்கு தொழிற்சாலைகளும், சுயதொழில் செய்பவர்களும் பொதுமுடக்கத்தைத் தொடர்ந்து பாதிக்கப்பட்டு தொழில் இழந்திருக்கிறார்கள். அரசின் பல்வேறு திட்டங்களாலும், நிதியுதவிகளாலும்கூட அவர்களால் மீண்டெழ முடியவில்லை.

உற்பத்தித் துறைக்கு அரசு பல்வேறு சலுகைகளை அறிவித்தும்கூட கடந்த ஐந்து ஆண்டுகளில் ஜிடிபியில் உற்பத்தித் துறையின் பங்கு 17% என்பதைத் தாண்டி உயரவில்லை. அதுமட்டுமல்லாமல், 2016–17– இல் உற்பத்தித் துறையில் வேலைவாய்ப்பு பெற்றிருந்தோரின் எண்ணிக்கை 5.1 கோடி என்றால், 2020–21–இல் அது 2.73 கோடியாகக் குறைந்திருக்கிறது. இந்தப் பின்னணியில் பார்க்கும்போது நமது பொருளாதார அணுகுமுறையை மாற்ற வேண்டிய அவசியம் தெரிகிறது.

அதிநவீன தொழிற்சாலைகளையும், மிகப்பெரிய இயந்திரமய அமைப்புகளையும் ஊக்குவிப்பதற்குப் பதிலாக, நம்முடைய கவனம் குறு, சிறு நடுத்தரத் தொழிற்சாலைகளையும், சுய தொழில்களையும் ஊக்குவிப்பதில்தான் இருக்க வேண்டும். தொழில்நுட்ப உதவி, போதுமான முதலீடு ஆகியவற்றை வழங்கி வேலையில்லா பொறியியல் பட்டதாரிகள் சுய தொழில் செய்வதற்கும், பலருக்கு வேலைவாய்ப்பை வழங்குவதற்கும் வழிவகை செய்வது இப்போதைய அவசியத் தேவை.

அதிகரித்து வரும் வேலைவாய்ப்பின்மைக்கு தொழில்நுட்ப மாற்றங்கள் காரணமாக இருக்கும் என்பதை வரலாறு பலமுறை உணர்த்தியிருக்கிறது. மோட்டார் வாகனங்கள் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து குதிரை வண்டி, மாட்டு வண்டி ஓட்டியவர்கள் வேலைவாய்ப்பிழந்தார்கள். மோட்டார் வாகனங்கள் ஓடுவதற்காக சாலைகள் போடப்பட்டபோது அதன்மூலம் புதிய வேலைவாய்ப்புகள் உருவாயின. மோட்டார் வாகன பழுது பார்த்தல் தொழில் பலருக்கு வேலைவாய்ப்பை வழங்கியது. அவை அதிகரித்த வளர்ச்சியையும் வேலைவாய்ப்பையும் உருவாக்கியதுபோல, எல்லா தொழில்நுட்ப அறிமுகமும் முதலில் வேலைவாய்ப்பிழப்பையும், பிறகு புதிய வகையிலான அதிகரித்த வேலைவாய்ப்பையும் உருவாக்குவதை நாம் பார்க்கிறோம்.

அதிகரித்த வளர்ச்சி விகிதம், குறைந்த அளவு வேலைவாய்ப்பு உருவாக்கத்துக்கு வழிகோலுகிறது என்கிற கருத்தை முற்றிலுமாக ஏற்றுக்கொள்ள முடியாது. கடந்த இருபது ஆண்டுகளில் கைப்பேசி பழுதுபார்த்தல், வாடகை கார் ஓட்டுதல், ஹோட்டல் தொழில், சுற்றுலா தொழில், சுய தொழில்கள் உள்ளிட்டவை பெரிய அளவில் வேலைவாய்ப்பை உருவாக்கியிருக்கின்றன. வேலைவாய்ப்பு இழத்தலைவிட அதிக அளவில் வேலைவாய்ப்பு உருவாக்கம் ஏற்படுமேயானால் அது வளர்ச்சியின் அடையாளம்.

மத்திய அரசின் ஆய்வறிக்கை ஒன்றின்படி, 2012–2018–க்கு இடையே நகர்ப்புற வேலைவாய்ப்பின்மை மூன்று மடங்கு அதிகரித்திருக்கிறது. 2018–இல் 15 வயதுக்கும் 24 வயதுக்கும் இடையேயானவர்களில் வேலையில்லாதவர்களின் எண்ணிக்கை 28.5%. அதே காலகட்டத்தில் 'ஊதிய விகிதம்' குறைந்திருக்கிறது.

ஊதியத்தைவிட விலைவாசி கூடுதலாக அதிகரிக்கும்போது அதனால் தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிறார்களே தவிர பயனடைவதில்லை.

இப்போதைய நிலையில், ஆண்டுதோறும் 1.2 கோடி பேர் வேலைவாய்ப்பு தேடுபவர்கள் பட்டியலில் இணைகிறார்கள். அவர்களில் சுமார் 70 லட்சம் பேருக்குத்தான் வேலைவாய்ப்பு உருவாகிறது. இது

ஆபத்தான போக்கு. உடனடியாக நாம் வேலைவாய்ப்பு குறித்து சிந்தித்தாக வேண்டும்.

அதற்கு நமது கல்வி முறையில் சீர்திருத்தம் அவசியத் தேவை. இப்போது பெரும்பாலான இளைஞர்களும் அரசுப் பணி கிடைப்பதற்காக படிப்பவர்களாகத்தான் இருக்கிறார்கள். அரசுப் பணியாளர்களுக்குக் கிடைக்கும் ஊதியம், தனியார் துறையில் திறன் சார்ந்த செவிலியர்களுக்கோ கணினி தொழில்நுட்பம் தெரிந்தவர்களுக்கோ தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கோ கிடைப்பதில்லை. நமது கல்வி முறை அரசுப் பணியை ஊக்குவிப்பதாக இருக்கும் நிலை மாற வேண்டும்.

அடுத்ததாக, தொழிலாளர் நலச் சட்டங்களில் மாற்றம் அவசியம். தொழிலாளர் நலச் சட்டங்கள் கடுமையாக இருப்பதால், ஒருவர் திறன் குறைந்தவராக இருந்தாலும், முறையாகச் செயல்படாமல் இருந்தாலும் அவரை எளிதில் பணி நீக்கம் செய்ய முடிவதில்லை. அதனால் எல்லா நிறுவனங்களும் மனித சக்தியைக் குறைத்து தானியங்கி இயந்திரங்களுக்கு முன்னுரிமை வழங்குகின்றன. கூடுதல் மக்கள்தொகையுள்ள இந்தியா போன்ற நாடுகளில், வேலைவாய்ப்பை அதிகரித்தாக வேண்டும். அதேநேரத்தில், உற்பத்தித் துறையும் பலவீனப்பட்டுவிடக் கூடாது.

ஆண்டொன்றுக்கு 12 கோடி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்குவதுதான் மத்திய – மாநில அரசுகளின் இலக்காக இருக்க வேண்டும். அதற்கு நமது கல்வி முறையிலும், தொழிலாளர் நலச் சட்டங்களிலும் மாற்றம் அவசியம்!

---

**7. தேசிய பாதுகாப்பு நலனின் அடிப்படையிலேயே ராணுவ கொள்முதல்: வெளியுறவு அமைச்சகம்**

ரஷியாவிடமிருந்து எஸ்–400 ரக ஏவுகணை தொகுப்புகளை கொள்முதல் செய்யும் விவகாரத்தில் அமெரிக்காவின் ஒப்புதல் குறித்து ஐயப்பாடு நிலவி வரும் நிலையில், 'இந்தியா சுதந்திரமான வெளியுறவு கொள்கையைக் கொண்டுள்ளது. மேலும், தேசிய பாதுகாப்பு நலனின் அடிப்படையிலேயே ராணுவ கொள்முதலை மேற்கொள்கிறது' என்று மத்திய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

காணொலி வழியில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ரஷியா – இந்தியா – சீனா ஆகிய 3 நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் பங்கேற்ற ஆர்ஐசி மாநாட்டில், எஸ்–400 ஏவுகணை தொகுப்பு கொள்முதல் விவகாரம் குறித்து விவாதிக்கப்பட்டதா என்ற செய்தியாளர்களின் கேள்விக்கு வெளியுறவு அமைச்சக செய்தித்தொடர்பாளர் அரிந்தம் பாக்சி இப்பதிலை தெரிவித்தார். மேலும், 'இந்தியாவும் அமெரிக்காவும் விரிவான சர்வதேச பாதுகாப்பு துறை சார்ந்த கூட்டுறவை கொண்டுள்ளன.

அதுபோல, ரஷியாவுடன் சிறப்புவாய்ந்த சுதந்திரமான ராணுவ கூட்டுறவை இந்தியா கொண்டுள்ளது. மேலும், இந்தியா சுதந்திரமான வெளியுறவு கொள்கையைக் கொண்டுள்ளது. அந்த வகையில், தேசிய பாதுகாப்பு நலனின் அடிப்படையிலேயே பாதுகாப்புத்துறைசார் கொள் முதல்களை இந்தியா மேற்கொள்கிறது' என்றும் அவர் பதிலளித்தார்.

ரஷியாவிடம் இருந்து 5 பில்லியன் டாலர்கள் (சுமார் ₹37,172 கோடி) மதிப்பில் அதிநவீன எஸ்–400 ரக ஏவுகணைத் தொகுப்புகளைக் கொள்முதல் செய்வதற்கு அந்நாட்டுடன் இந்தியா கடந்த 2018ஆம் ஆண்டு ஒப்பந்தம் செய்தது. இதற்கிடையே ரஷியாவுடனான ஆயுதக் கொள்முதலைக் கைவிடுமாறு அனைத்து நட்பு நாடுகளுக்கும் அமெரிக்கா தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

ரஷியாவிடமிருந்து பாதுகாப்புத் தளவாடங்களைக் கொள்முதல் செய்வதில் இந்தியாவுக்கு விலக்கு அளிப்பது குறித்து அமெரிக்கா இன்னும் முடிவெடுக்கவில்லை. இருந்தபோதிலும், இந்தியாவுக்கு எஸ்–400 ரக ஏவுகணைத் தொகுப்புகளை விநியோகிக்கும் பணிகள் தொடங்கியுள்ளதாக, ரஷிய ராணுவ தொழில்நுட்ப ஒத்துழைப்பு சேவை அமைப்பின் இயக்குநர் கடந்த வாரம் கூறினார் என்பது குறிப்பிடத்தக்கது.

வெளியுறவு அமைச்சர் S ஜெய்சங்கர், சீன வெளியுறவு அமைச்சர் வாங் யி மற்றும் ரஷிய வெளியுறவு அமைச்சர் செர்கேய் லாவ்ரோவ் ஆகியோர் பங்கேற்ற ஆர்ஐசி மாநாட்டில், 'ஐநா பாதுகாப்புகவுன்சில் வரையறையை மீறி ஒருதலைபட்சமான ஒப்புதல்களை அளிப்பதும், அதிகார வரம்பை நீட்டிக்க முயற்சிப்பதும் சர்வதேச சட்ட கொள்கைகளுக்கு முரணான –வை' என்று மூன்று நாடுகள் சார்பிலும் ஏற்றுக்கொள்ளப்படதாகவும் அவர் தெரிவித்தார்.

---

**8. இந்தியா–பிரான்ஸ் கூட்டு ராணுவப் பயிற்சி நிறைவு**

இந்தியா–பிரான்ஸ் ராணுவம் இணைந்து நடத்திய 12 நாள் கூட்டுப் பயிற்சி நிறைவடைந்தது.

பிரான்ஸில் நடைபெற்ற இந்தப் பயிற்சியில் கூட்டுத் திட்டமிடல், செயல்பாடுகளின் பரஸ்பர புரிதல், ஐநா சபையின் சாசனத்தின் கீழ் பயங்கரவாத எதிர்ப்புச் சூழலில் கூட்டாகச் செயல்படுவதற்குத் தேவையான ஒருங்கிணைப்பு அம்சங்களை அடையாளம் காண்பது ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

களப்பயிற்சி, கடினப்பணிச்சூழல்கள், எதிர்ப்பு நடவடிக்கைகள் உள்ளிட்டவற்றில் வீரர்கள் ஈடுபட்டனர். இரண்டு கட்டங்களாக நடத்தப்பட்ட பயிற்சியின் போது இருதரப்பு வீரர்களும் தங்களது சிறந்த செயல்முறைகள் மற்றும் அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர். இரு நாட்டு படைகளின் பயிற்சிகளில் ஈடுபட்டதோடு மட்டுமல்லாமல் விளை –யாட்டு மற்றும் கலாசார நடவடிக்கைகளிலும் இணைந்து ஈடுபட்டு நட்புறவை வளர்த்தனர். பயிற்சி குறித்து நாட்டு ராணுவப் பிரிவுகளும் திருப்தியை வெளிப்படுத்தின. பயங்கரவாதம் இல்லாத உலகத்தை உறுதி செய்யும் பயணத்தின் மற்றொரு குறிப்பிடத்தக்க மைல்கல்லாக இந்தப் பயிற்சி விளங்கியது என்று மத்திய செய்தி தகவல் பிரிவு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**9. தில்லி திகார் சிறையில் திருவள்ளுவர் சிலை திறப்பு**

தில்லி திகார் சிறையின் தமிழ்நாடு சிறப்புக் காவல்படையின் எட்டாவது பட்டாலியன் கமாண்டட் அலுவலக வளாகத்தில் அமைக்கப்பட்ட திருவள்ளுவர் சிலையை சிறப்பு ஆயுதப்படை காவல்துறை கூடுதல் இயக்குநர் ஜெனரல் அபய்குமார்சிங் வெள்ளிக்கிழமை திறந்து வைத்தார்.

மேலும், அரசியலமைப்பு சட்ட நாளையொட்டி கமாண்டன்ட் டி செந்தில் குமார் முன்னிலையில் அதிகாரிகள், காவலர்கள் இந்திய அரசியலமைப்பு முகப்புரையை வாசித்து உறுதிமொழி எடுத்துக்கொண்டனர். இந்தத் திருவள்ளுவர் சிலையை வடிவமைத்த காவலர் சி விஷ்ணு சங்கர்.

---

**10. ₹1302 கோடியில் 15.60 லட்சம் தணிக்கை மறுப்புகள் தீர்வு செய்யப்படாமல் நிலுவையில் உள்ளதால் அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் இருந்த தணிக்கை பிரிவு நிதித்துறையின் கட்டுப்பாட்டில் தனித்துறையாக இயங்கும்: தமிழக அரசு உத்தரவு**

அறநிலையத்துறை கட்டுபாட்டில் இருந்த தணிக்கை பிரிவு நிதித் துறையின் கட்டுபாட்டில் தனித்துறையாக செயல்படும் என்று தமிழக அரசு உத்தரவிட்டு அரசாணை வெளியிட்டுள்ளது. இது குறித்து தமிழக அரசின் அறநிலையத்துறை முதன்மை செயலாளர் சந்தரமோகன் வெளியிட்டுள்ள அரசாணையில் கூறியிருப்பதாவது:

கோயில்களின் தணிக்கைக்கென இந்து சமய அறநிலையத்துறை ஆணையரது கட்டுப்பாட்டின் கீழ் இந்து சமய அறநிலையத்துறையின் தணிக்கைப் பிரிவானது உள்ளாட்சி நிதி தணிக்கை துறையிலிருந்து பிரித்து, ஏற்படுத்தப்பட்டது. தற்போது சமய அறநிறுவனங்களின் தணிக்கையினை மேற்கொள்ள தணிக்கைப் பிரிவானது 19 மண்டலங் –களாக பிரிக்கப்பட்டு 4 துணைத் தலைமை தணிக்கை அலுவலர் அலுவலகங்களும், 15 மண்டல தணிக்கை அலுவலர் அலுவலகங்களும் இவர்களுக்கு உதவியாக 27 உதவி தணிக்கை அலுவலர் அலுவலகங்களும் செயல்பட்டு வருகிறது.

தணிக்கை மற்றும் மேலாய்வு பணிகளை மேற்கொள்ள 295 தணிக்கை பணியிடங்களில் தணிக்கை பிரிவின் அலுவலக பணிகள் மேற்கொள்ளும் பணியாளர்களை தவிர்த்து உள்ள 274 தணிக்கை பணியிடங்களில் காலி பணியிடங்கள் போக 235 தணிக்கை பணியாளர்கள் தணிக்கை பணியினை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்து சமய அறநிலையத்துறையின் தணிக்கையாளர்களைக் கொண்டு கோயில்களின் தணிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வெளியிடப்பட்ட தணிக்கை அறிக்கைகள் மீது நடவடிக்கைகள் மேற்கொண்டு தீர்வு செய்யப்பட வேண்டிய தணிக்கை தடைகள் கடந்த 31.3.2021 அன்று நிலவரப்படி ரூ.1302 கோடி உள்ளடக்கிய 15,60,574 தணிக்கை மறுப்புகள் தீர்வு செய்யப்படாமல் நிலுவையாக உள்ளது.

இந்து சமய அறநிலையத் துறை ஆணையரது கட்டுப்பாட்டின் கீழ் நிர்வாகப் பிரிவு மற்றும் தணிக்கைப் பிரிவுகள் செயல்பட்டு வருவதால், தணிக்கைப் பணி தனித்துவமாக நடைபெறவில்லை. இந்து சமய அறநிலையத்துறை தணிக்கைப்பிரிவினை இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டிலிருந்து விடுவித்து, தணிக்கைப் பணி

மேற்கொள்வதுடன் தணிக்கைத் தடைகள் மீது அளிக்கப்படும் பதிலறிக்கைகள் பரிசீலித்து, இந்து சமய அறநிலையத்துறை தணிக்கை பிரிவினை விடுவித்து தனியாக அறநிலையங்களின் தணிக்கைத் துறை ஒன்றினை நிதித்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் வகையில் ஏற்படுத்த இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்து சமய அறநிலையத்துறையில் உள்ள தணிக்கை பிரிவினை நிதித்துறையின் கீழ் செயல்படும் தனித்துறையாக்கும் பட்சத்தில் மேற்கண்ட சட்ட விதிகளுக்கு திருத்தம் மேற்கொள்ள தனியாக அரசுக்கு கருத்துருக்கள் அனுப்பப்படவுள்ளது. இந்து சமய அறநிறுவனங்களில் தணிக்கை மேற்கொள்வதற்கு அறநிலையய கொடைகள் சட்டம் 1959, சட்டப்பிரிவு 92(2)' இன்படி உரிய விகிதத்தில் தணிக்கை கட்டணங்கள் சம்பந்தப்பட்ட அறநிறுவனங்களால் அரசுக்கு ஈடுசெய்யப்படும் என்ற விவரமும் இதனால், அரசுக்கு கூடுதல் செலவினங்கள் எதுவும் ஏற்பட வாய்ப்பு இல்லை என்று ஆணையர் தெரிவித்துள்ளார்.

இந்து சமய அறநிலையத்துறை ஆணையரது செயல்குறிப்பினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்தது. பரிசீலனைக்குப் பின்னர், கோயில்களின் தணிக்கைக்கென இந்து சமய உள்ளாட்சி தணிக்கை துறையிலிருந்து பிரித்து தோற்றுவிக்கப்பட்ட இந்து சமய அறநிலையத் துறைக்கான தணிக்கை பிரிவினை அறநிலையத்துறையின் கட்டுபாட்டி –லிருந்து விடுவித்து, அறநிலையங்களின் தணிக்கை துறை ஒன்றினை நிதித்துறையின் கட்டுபாட்டின்கீழ் தனித்துறையாக செயல்படும் வகையில் அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**1. "குளோபல் ஸ்டேட் ஆப் டெமாக்ரசி 2021" அறிக்கையின்படி, எந்த நாடு முதன்முறையாக "பின்சறுக்கும்" மக்களாட்சி நாடுகளின் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது?**

அ) இந்தியா

**ஆ) அமெரிக்கா ☑**

இ) பிரேசில்

ஈ) UK



- ✓ மக்களாட்சி மற்றும் தேர்தல் உதவிக்கான சர்வதேச நிறுவனம் (IDEA) தனது அறிக்கையை "குளோபல் ஸ்டேட் ஆப் டெமாக்ரசி 2021" என்ற தலைப்பில் வெளியிட்டது. அது முதன்முறையாக அமெரிக்காவை அதன் ஆண்டுப்பட்டியலில் "பின்சறுக்கிச்செல்லும்" மக்களாட்சி நாடுகளின் பட்டியலில் சேர்த்துள்ளது. இந்தப் பின்னடைவு, 2019'இல் தொடங்கியது என்று தரவு தெரிவிக்கிறது.
- ✓ 2021ஆம் ஆண்டு நிலவரப்படி, உலகில் 98 மக்களாட்சிக் குடியரசுகள் உள்ளன. இந்தியா, பிலிப்பைன்ஸ் மற்றும் அமெரிக்கா போன்ற சில நாடுகள் மக்களாட்சிக்கு எதிரான வன்முறைகளுக்கு எதிராக பல்வேறு நடவடிக்கைகளை விதித்தன.

---

**2. சமீப செய்திகளில் இடம்பெற்ற 'மடோசின்கோஸ் மேனிபெஸ்டோ', எந்த விண்வெளி நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது?**

அ) ISRO

ஆ) NASA

**இ) ESA ☑**

ஈ) JAXA

- ✓ ஐரோப்பிய விண்வெளி முகமை (ESA) கவுன்சில், ஐரோப்பாவில் விண்வெளிப் பயன்பாட்டை விரைவுபடுத்துவதற்காக 'Matosinhos Manifesto'க்கு ஒப்புதல் அளித்தது. ESA'இன் 22 உறுப்பு நாடுகளைச் சேர்ந்த அமைச்சர்கள் கையொப்பமிட்ட புதிய ஆவணம் "முடுக்கிகள்" என்ற மூன்று அவசர முயற்சிகளை கோடிட்டுக் காட்டுகிறது.
- ✓ விண்வெளி வீரர்களை விண்வெளிக்கு அனுப்புவதற்கும், வியாழனின் உறைந்த நிலவு என்செலடஸை ஆய்வு செய்வதற்கும் ESA'இன் சொந்த அமைப்பை நிறுவுவதை நோக்கமாகக் கொண்ட இரு திட்டங்களிலும் அவர்கள் கையெழுத்திட்டனர்.

---

**3. கங்கை–பிரம்மபுத்ரா–மேக்னா ஆற்றுப்படுகைகள் குறித்த WMO கூட்டம் நடைபெறுகிற இடம் எது?**

அ) வாரணாசி

**ஆ) புது தில்லி ☑**

இ) பாட்னா

ஈ) லக்னோ



- ✓ உலக வானிலை அமைப்பு (WMO), புவி அறிவியல் அமைச்சகம் மற்றும் இந்திய வானிலை ஆய்வுத்துறை ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்த கங்கை–பிரம்மபுத்ரா–மேக்னா (GBM) ஆற்றுப்படுகைகள்குறித்த கூட்டம் சமீபத்தில் புது தில்லியில் தொடங்கியது. நேபாளம், வங்கதேசம், பூடான், சீனா ஆகிய நாடுகளைச் சேர்ந்த அறிவியலாளர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்கின்றனர்.
- ✓ இந்தியாவும் அதன் அண்டை நாடுகளும் எல்லைக்குட்பட்ட GBM ஆற்றுப் படுகைகளைப் பகிர்ந்துகொள்வது, நீர்த்தேக்கங்கள், ஆறுகள் மற்றும் அணைநீர்பற்றிய தரவுகளைப் பகிர்ந்துகொள்ளும் ஓர் அமைப்பான ஹைட்ராலஜிக்கல் SOS அமைப்பை உருவாக்கத்திட்டமிட்டுள்ளன.

---

**4. சமீப செய்திகளில் இடம்பெற்ற தாந்தியா மாமா, எந்த மாநிலத்தின் பழங்குடியினத் தலைவராவார்?**

அ) கர்நாடகா

ஆ) மகாராஷ்டிரா

**இ) மத்திய பிரதேசம் ☑**

ஈ) ஜார்கண்ட்



- ✓ மத்திய பிரதேச மாநில முதலமைச்சர் சிவராஜ் சிங் சௌகான், இந்தூரில் உள்ள பதல்பானி ரயில் நிலையம், 'தாந்தியா மாமா இரயில் நிலையம்' எனப் பெயர் மாற்றம் செய்யப்படும் என்று அறிவித்தார். தாந்தியா, மத்திய பிரதேச மாநிலத்தில் பிறந்த பழங்குடி ஆதிவாசி சமூகமான பில் பழங்குடி இனத்தைச்சேர்ந்தவர். பில்லின் மாமா தாந்தியா, டிச.4ஆம் தேதி அன்று ஆங்கிலேயர்களால் தூக்கிலிடப்பட்டார்.

---

**5. 12 மணி நேரத்திற்குள் பதவியை ராஜினாமா செய்த "மக்டலேனா ஆண்டர்சன்", எந்த நாட்டின் முதல் பெண் பிரதமராவார்?**

அ) டென்மார்க்

ஆ) ஆஸ்திரேலியா

**இ) சுவீடன் ☑**

ஈ) அயர்லாந்து



- ✓ சமூக மக்களாட்சிக் கட்சியைச் சேர்ந்த மக்டலேனா ஆண்டர்சன் சுவீடனின் முதல் பெண் பிரதமராவார். அவர் சமீபத்தில் பன்னிரண்டு மணிநேரத்திற்குள் அந்தப் பதவியில் இருந்து விலகினார். கூட்டணியில் சிறுபான்மையாக இருந்த பசுமைக்கட்சி விலகியதை அடுத்து, கூட்டணி –யின் பலம் குறைந்ததால் அவர் பிரதமர் பதவியை இராஜினாமா செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

---

**6. அனைத்து NFSA பயனாளிகளுக்கும் நபர் ஒன்றுக்கு மாதம் 5 கிகி தானியத்தை இலவசமாக வழங்கும் திட்டத்தின் பெயரென்ன?**

அ) PM – KVY

ஆ) PM – JDY

இ) PM – FBY

**ஈ) PM – GKAY ☑**



- ✓ COVID தொடர்பான இடையூறுகள் மற்றும் பொதுமுடக்கங்களை அடுத்து இந்திய அரசாங்கத்தால் "பிரதமர் கரிப் கல்யாண் அன்ன யோஜனா" தொடங்கப்பட்டது. இந்தத் திட்டம் அனைத்து NFSA பயனாளிகளுக்கும் நபர் ஒன்றுக்கு மாதம் ஐந்து கிலோ தானியங்களை இலவசமாக வழங்க முற்படுகிறது. சமீபத்தில், இந்தத் திட்டத்தை 2021 டிசம்பர் முதல் 2022 மார்ச் வரை நீட்டிப்பதாக இந்திய அரசு அறிவித்தது.

---

**7. தேசிய குடும்பம் மற்றும் சுகாதார ஆய்வின்படி (NFHS–5), 2019–2021'இல் நாட்டில் 1000 ஆண்களுக்கு எத்தனை பெண்கள் உள்ளனர்?**

அ) 1000

ஆ) 941

**இ) 1020 ☑**

ஈ) 916

1020

- ✓ இந்திய அரசின் மத்திய சுகாதார அமைச்சகம், 2019 மற்றும் 2021'க்கு இடையில் இரண்டு கட்டங்களாக நடத்தப்பட்ட தேசிய குடும்பம் மற்றும் சுகாதார ஆய்வின் (NFHS–5) ஐந்தாவது சுற்று முடிவுகளை சமீபத்தில் வெளியிட்டது. இந்த ஆய்வின்படி, 2019–2021'இல், நாட்டில் ஆயிரம் ஆண்களுக்கு ஆயிரத்து இருபது பெண்கள் உள்ளனர். மேலும், மொத்த கருவுறுதல் விகிதம் இரண்டு சதவீதமாக குறைந்துள்ளது.

---

**8. புராஜெக்ட் 75'இன்கீழ், அண்மையில் இந்தியக் கடற்படையில் இணைக்கப்பட்ட நான்காவது மறைந்திருந்து தாக்கும் ஸ்கார்பீன் வகுப்பு நீர்மூழ்கிக்கப்பல் எது?**

அ) INS சக்ரா

ஆ) INS ஹம்சா

இ) INS ஹம்லா

**ஈ) INS வேலா ☑**



- ✓ புராஜெக்ட் 75'இன்கீழ் கட்டப்பட்ட இந்தியாவின் 4ஆவது மறைந்திருந்து தாக்கும் ஸ்கார்பீன் வகுப்பு நீர்மூழ்கிக்கப்பலான INS வேலா இந்தியக் கடற்படையில் இணைக்கப்பட்டுள்ளது. இந்தக் கப்பலை பிரான்ஸின் கடற்படைக் குழுவுடன் இணைந்து மசகான் கப்பல்கட்டும் நிறுவனம் உருவாக்கியுள்ளது. ஐஎன்எஸ் கல்வாரி, கந்தேரி, கரஞ்ச் ஆகிய மூன்று ஸ்கார்பீன் வகை நீர்மூழ்கிக் கப்பல்கள் உருவாக்கப்பட்டு கடற்படையில் ஏற்கனவே சேர்க்கப்பட்டுள்ளன.

---

**9. 50,000 டன் கோதுமை மற்றும் உயிர்க்காக்கும் மருந்துகளை எந்த நாட்டுக்கு கொண்டுசெல்வதற்கு பாகிஸ்தான் இந்தியாவை அனுமதித்துள்ளது?**



அ) துர்க்மெனிஸ்தான்

ஆ) ஈரான்

**இ) ஆப்கானிஸ்தான் ☑**

ஈ) தஜிகிஸ்தான்

- ✓ இந்தியாவிலிருந்து 50,000 டன் கோதுமை மற்றும் உயிர்க்காக்கும் மருந்துகளை வாகா எல்லை வழியாக ஆப்கானிஸ்தானுக்கு கொண்டு செல்ல பாகிஸ்தான் அரசு அதிகாரப்பூர்வமாக அனுமதி அளித்துள்ளது.
- ✓ இந்த அனுமதி ஆப்கானிஸ்தானுக்கு ஒரு நல்லெண்ண முறையாக அளிக்கப்பட்டுள்ளது. ஆப்கானிஸ்தானுக்கு மனிதாபிமான அடிப்படையில் கோதுமை மற்றும் பிற அத்தியாவசிய பொருட்களை வழங்க இந்தியா முன்வந்துள்ளது. ஆனால், ஆப்கானிஸ்தானுக்கு எந்த விமானப் போக்கு வரத்துமில்லாத காரணத்தாலும், பாகிஸ்தானின் அனுமதி நிலுவையில் இருந்த காரணத்தாலும் விநியோகம் செய்யப்படாமல் இருந்தது.

---

**10. ஐநா பொது அவையின் சமீபத்திய தீர்மானத்தின்படி, வங்காள தேசமும் நேபாளமும் எப்புதிய வகையின்கீழ் வைக்கப்பட்டுள்ளன?**



அ) குறைந்த வளர்ச்சியடைந்த நாடு

**ஆ) வளரும் நாடு ☑**

இ) ஏழை நாடு

ஈ) நடுத்தர வருமானம் கொண்ட நாடு

- ✓ வங்காளதேசம், நேபாளம் உள்ளிட்ட மூன்று நாடுகளை, "குறைந்த வளர்ச்சியடைந்த நாடு'கள் என்ற வகையிலிருந்து 'வளரும் நாடு' என்ற வகையில் வைப்பதற்கான தீர்மானத்தை ஐநா பொது அவை ஏற்றுக் கொண்டது. வங்காளதேசம், நேபாளம் மற்றும் லாவோ மக்களாட்சிக் குடியரசு உள்ளிட்ட 3 நாடுகளுக்கு இந்தத் தகுதியை வழங்கிய UNGA 76ஆவது அமர்வில் இத்தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. அமைச்சர் மா சுப்பிரமணியனுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது**

உலக தமிழ் நிறுவனம் சார்பில் லண்டன் 4ஆவது சர்வதேச மருத்துவ சிறப்பு விருதுகள் வழங்கும் விழா, பிரிட்டன் நாடாளுமன்றத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில், தமிழக மருத்துவம் மற்றும் மக்கள் நல வாழ்வுத்துறை அமைச்சர் மா சுப்பிரமணியனுக்கு கொரோனா பேரிடர் பெருந்தொற்று காலத்தில் திறம்பட செயல்பட்டதற்காக வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது.

---

**2. கங்கை நதி புனரமைப்புத் திட்டம்: பிரிட்டனில் 4 குழுக்கள் தொடக்கம்**

கங்கை நதி புனரமைப்புத் திட்டத்தின் பகுதியாக தேசிய கங்கை நதி தூய்மை அமைப்பும், பிரிட்டனில் உள்ள இந்திய தூதரகமும் இணைந்து அந்நாட்டில் 4 குழுக்களை தொடங்கியுள்ளன. லண்டன், மிட்லேண்ட்ஸ், ஸ்காட்லாந்து மற்றும் வேல்ஸ் பகுதிகளில் நான்கு கங்கை இணைப்பு குழுக்கள் தொடங்கப்பட்டன.

ஒவ்வொரு குழுவிலும் ஒருங்கிணைப்பாளர்கள் இருப்பர். அவர்கள் கங்கை நதியை தூய்மைப்படுத்தும் திட்டத்தில் ஆர்வமுள்ள விஞ்ஞானி –கள், தொழில்நுட்ப நிறுவனங்கள், முதலீட்டாளர்கள் உள்பட பல்வேறு தரப்பினரை ஒருங்கிணைப்பர். அவர்கள்மூலம் கங்கை நதியை புனர –மைக்கும் முயற்சிகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள் நடத்தப்படும்.

---

**3. சென்னையில் நவம்பரில் அதிகபட்ச மழை: 200 ஆண்டுகளில் 3ஆவது முறையாக பதிவு**

வடகிழக்குப் பருவமழை தமிழகத்தில் தீவிரமடைந்துள்ளநிலையில், 200 ஆண்டுகளில் 3ஆவது முறையாக சென்னையில் நவம்பர் மாதத்தில் அதிகபட்ச மழைஅளவு (1000 மிமீ மழை அளவு தாண்டி) பதிவாகியுள்ளது.

வடகிழக்குப் பருவமழை தமிழகத்தில் தற்போது மிகத் தீவிரமாகியுள்ளது. பெரும்பாலான மாவட்டங்களில் கடந்த ஒருவாரமாக பரவலாக மழை பெய்துவருகிறது. அதிலும், சென்னையில் கடந்த சில நாள்களாக மிதமானது முதல் பலத்தமழை வரை பெய்து வருகிறது. ஓரிரு இடங்களில் மிகப்பலத்தமழையும் பெய்து வருகிறது.

இந்நிலையில், சென்னையில் நவம்பர் மாதத்தில், 200 ஆண்டுகளில் 3ஆவது முறையாக அதிகபட்ச மழை அளவு (1000 மிமீ) தற்போது பதிவாகியுள்ளது. வடகிழக்கு பருவமழை காலத்தில் (அக்.1 முதல் நவ.27) சென்னையில் சராசரி மழை அளவு 600.2 மிமீ ஆகும். தற்போது வரை 1064.2 மிமீ பெய்துள்ளது. இது 77% அதிகம். மேலும், சென்னையில் 200 ஆண்டுகளில் நவம்பரில் அதிகபட்ச மழை அளவு பொருத்தவரை, 3ஆம் முறையாக, நிகழாண்டில் 1000 மிமீ மழை அளவைத் தாண்டியுள்ளது.

கடந்த 1918ஆம் ஆண்டு நவம்பரில் 1088 மிமீ மழை அளவும், 2005ஆம் ஆண்டு அக்டோபரில் 1078 மிமீ மழை அளவும், 2015ஆம் ஆண்டு நவம்பரில் 1049 மிமீ மழை அளவும் பதிவாகியது. 2021ஆம் ஆண்டு நவ.27'இல் 1064 மிமீ மழையும் பதிவாகியுள்ளது. 200 ஆண்டுகளில் நவம்பரில் 3ஆவது முறையாகவும், மற்ற மாதங்களைப் பொருத்தவரை 4ஆவது முறையாகவும் ஆயிரம் மிமீ மழை அளவைத் தாண்டியுள்ளது.

---

**4. பிளாஸ்டிக் பயன்பாட்டை தடுக்கும் வகையில் 'மீண்டும் மஞ்சப்பை' என்ற இயக்கத்தை முன்னெடுக்க முடிவு**

மக்கள் பிளாஸ்டிக் பயன்படுத்துவதை தடுத்து துணிப்பைகளை உபயோகிக்கும் வகையில் 'மீண்டும் மஞ்சப்பை' என்ற இயக்கத்தை தமிழக அரசு முன்னெடுக்க இருக்கிறது.

இதுகுறித்து சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை முதன்மை செயலாளர் சுப்ரியா சாகு வெளியிட்ட அரசாணையில் கூறப்பட்டிருப்பதாவது:

பிளாஸ்டிக் தீங்கு

பிளாஸ்டிக்கால் இந்த உலகம் மிகப்பெரிய பிரச்சினையை சந்தித்து வருகிறது. ஒருமுறை உபயோகித்து வீசப்படும் பிளாஸ்டிக்குகள் 40 சதவீதம் உலகளவில் தயார் செய்யப்படுகின்றன. மக்களின் அன்றாட வாழ்க்கையில் அவை பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஆனால் அவை தூக்கி வீசப்பட்ட பிறகு சுற்றுச்சூழலில் பல ஆயிரம் ஆண்டுகள் தங்கி விடுகின்றன. இவற்றால் மண், ஆறுகள், கடல்களில் மிகப்பெரிய பிரச்சினைகள் உருவாகின்றன. குறிப்பிட்ட அளவு பிளாஸ்டிக்குகள் எரிக்கப்படும்போது, அவற்றில் இருந்து வரும் புகை கடுமையான பின்விளைவுகளை ஏற்படுத்துகின்றது. இந்த பிளாஸ்டிக்கினால் ஒவ்வொரு ஆண்டும் ஏராளமான மிருகங்கள் பலியாகின்றன.

பிளாஸ்டிக் கழிவுகள்

சர்வதேச இயற்கை பாதுகாப்பு அமைப்பு, ஆண்டுதோறும் உலகளவில் 14 மில்லியன் டன் பிளாஸ்டிக்குகள் கடலில் சென்று சேருவதாக ஒரு புள்ளி விவரத்தை கூறுகிறது.

மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் தகவலின்படி 2019–20–ம் ஆண்டில் 34 லட்சத்து 69 ஆயிரத்து 780 டன் பிளாஸ்டிக் கழிவுகள் இந்தியாவில் தேக்கமடைந்தன. தமிழ்நாட்டில் மட்டும் 4 லட்சத்து 31 ஆயிரத்து 472 டன் பிளாஸ்டிக் கழிவுகள் அந்த ஆண்டில் தேங்கியிருந்தன.

பிளாஸ்டிக்குக்கு எதிரான மக்கள் இயக்கம்

எனவே ஒரு முறை பயன்படுத்தி வீசப்படும் பிளாஸ்டிக்குகளை தயாரிப்பது, சேமித்து வைப்பது, வினியோகம் செய்வது, போக்குவரத்துக்கு கொண்டுசெல்வது, விற்பனை செய்வது போன்றவற்றை 25.6.2018–ல் இருந்து தடை செய்தது. ஒருமுறை உபயோகித்து வீசப்படும் பிளாஸ்டிக்குகளான உணவை பொட்டலம் போடும் பிளாஸ்டிக், சாப்பாடு மேஜையில் விரிக்கும் பிளாஸ்டிக், பிளாஸ்டிக் பிளேட்டுகள், டீ கப்புகள், டம்ளர்கள், தண்ணீர் ஊற்றி வைக்கும் பிளாஸ்டிக்குகள், ஸ்டிரா, கேரி பேக், பிளாஸ்டிக் கொடிகள் போன்றவை இதில் அடங்குகின்றன. இந்த தடை உத்தரவு 1.1.2019–ல் இருந்து நடைமுறைக்கு வந்தது. இந்த தடை உத்தரவு அமல்படுத்துவதை கண்காணிப்பதற்கு மாநில அளவிலான குழு ஒன்றையும் அரசு அமைத்திருந்தது.

இந்தநிலையில் சட்டசபையில் கடந்த பட்ஜெட் கூட்டத்தொடரில் 3.9.2021 அன்று தூக்கி வீசப்படும் பிளாஸ்டிக்குகளுக்கு எதிரான மக்கள் இயக்கத்தை தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் மூலம் அமல்படுத்துவது என்று அறிவிக்கப்பட்டது. இந்த இயக்கத்தில் வர்த்தக சங்கங்கள், சமூக நல அமைப்புகள், வியாபாரிகள் சங்கங்கள், உள்ளாட்சி

அமைப்புகளின் தலைவர்கள் ஆகியோரை இணைத்து அமல்படுத்தும் என்று அறிவிக்கப்பட்டது. அதன்படி மாவட்ட கலெக்டர்களின் வழிகாட்டுதலின்படி பிளாஸ்டிக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளது. இதை 4 வகைகளாக பிரித்து அரசு அமல்படுத்தும்.

'மீண்டும் மஞ்சப்பை'

இந்த பிளாஸ்டிக்குகளுக்கு எதிரான மக்கள் இயக்கத்தை அரசு ஆதரிக்கும். மாநிலம் முழுவதும் பிளாஸ்டிக் தடை உத்தரவு அமல்படுத்துவதை கண்காணிப்பதற்கான வழிமுறைகள் வகுக்கப்படும்.

இந்த பிளாஸ்டிக்குகளுக்கு மாற்றாக மிகப்பெரிய அளவில் சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருட்களை தயாரிப்பதற்கு குறு–சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுடன் அரசு இணைந்து செயல்படும். அதன்படி 'மீண்டும் மஞ்சப்பை' என்ற தலைப்பில் மாநில அளவில் பிரசாரம் மேற்கொள்ளப்படும். மஞ்சப்பை என்பது தமிழக கலாசாரத்தில் இணைந்த ஒன்றாகும்.

ஜெர்மன் நாட்டின் அமைப்புடன் இணைந்து...

இந்த மஞ்சப்பை பிரசாரத்தின் மூலம் மக்கள் பிளாஸ்டிக் பைகளை புறக்கணித்து துணிப்பைகளை மீண்டும் பயன்படுத்துவதற்கான விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். இந்த திட்டத்தை தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம், ஜெர்மன் நாட்டின் அமைப்புடன் இணைந்து செயல்படுத்தும். பொட்டலம் போடுவதற்கான சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருட்கள் அடையாளம் காணப்படும்.

பள்ளி–கல்லூரிகளில் இந்த பிரசாரம் முன்னெடுக்கப்படும். இளைஞர்கள் இந்த பிரசாரத்துக்காக பயன்படுத்தப்படுவார்கள். இதற்காக மாநில மற்றும் மாவட்ட அளவிலான பணிக்குழுக்கள் அமைக்கப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**1.** **காலின்ஸ் அகராதியின்படி '2021ஆம் ஆண்டின் சொல்' என்ன?**

அ) கிரிப்டோ–கரன்ஸி

ஆ) பிட்காயின்

**இ) NFT ☑**

ஈ) டி–ஃபை

✓ காலின்ஸ் அகராதி 'NFT' (Non–fungible Token என்பதன் சுருக்கம்) என்ற சொல்லை 2021ஆம் ஆண்டின் சொல்லாகத் தேர்ந்தெடுத்துள்ளது. காலின்ஸின் கூற்றுப்படி, இந்தச்சொல்லின் பயன்பாடு 11,000 சதவீதம் அதிகரித்துள்ளது. மில்லியன் கணக்கான டாலர்களுக்கு விற்கக்கூடிய டிஜிட்டல் டோக்கன்களில் ஆர்வம் உயர்ந்து வருவதை இது காட்டுகிறது.

---

**2.** **வாகனங்களுக்கு பசுமை வரி விதிப்பதற்காக, 'மோட்டார் வாகன வரி (திருத்த) மசோதா–2021'ஐ நிறைவேற்றியுள்ள மாநிலம் எது?**

அ) தமிழ்நாடு



**ஆ) ஆந்திர பிரதேசம் ☑**

இ) தெலுங்கானா

ஈ) ஒடிஸா

✓ ஆந்திர பிரதேச மாநில சட்டமன்றம், வாகனங்களுக்கு பசுமை வரி விதிப்பதற்காக AP மோட்டார் வாகன வரி (திருத்தம்) மசோதா – 2021'ஐ நிறைவேற்றியுள்ளது. மோட்டார் சைக்கிள் மற்றும் ஆட்டோ ரிக்ஷாக்கள் தவிர அனைத்து வாகனங்களுக்கும் பசுமை வரி விதிக்கப்படவுள்ளது.

---

**3.** **காலநிலை மாற்றத்திற்கு எதிரான இந்தியாவின் நடவடிக்கைக –ளுக்கு உதவுவதற்காக €1.2 பில்லியன் நிதியுதவியை அறிவித்து உள்ள நாடு எது?**

அ) பிரான்ஸ்



**ஆ) ஜெர்மனி ☑**

இ) இத்தாலி

ஈ) UK

✓ காலநிலை மாற்றத்திற்கு எதிரான இந்தியாவின் நடவடிக்கைகளுக்கு உதவுவதற்கும் தூய எரிசக்தியில் ஒத்துழைப்பு நல்குவதற்கும் ஜெர்மனி €1.2 பில்லியனுக்கும் அதிகமான (சுமார் ₹10,025 கோடி) புதிய வாக்குறு –திகளை அறிவித்துள்ளது. 1990ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2045 ஆம் ஆண்டிற்குள் காலநிலை நடுநிலையை எய்தவும், எரிசக்தி மற்றும் தொழிற்துறைகளில் உமிழ்வுகளை 77 & 58% குறைக்கவும் ஜெர்மனி தனது இலக்கை அறிவித்துள்ளது. உலகளாவிய பைங்குடில் வாயுவில் இந்தியாவும் ஜெர்மனியும் கிட்டத்தட்ட 9% பங்கைக் கொண்டுள்ளன.

---

**4.** **தலைமை தகவல் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு சைபர் கிரைம் பற்றிய விழிப்புணர்வை உறுதிசெய்வதற்கான மின்னணு & தகவல் தொழினுட்ப அமைச்சகத்தின் முதல் PPP முயற்சியின் பெயரென்ன?**

**அ) சைபர் சுரக்ஷித் பாரத் முன்னெடுப்பு ☑**

Cyber Surakshit Bharat Programme

ஆ) சுரக்ஷித் பாரத்; ஸ்வஸ்த் பாரத்

இ) சுரக்ஷித் CISO'க்கள்

ஈ) பாதுகாப்பான CISOகள்

✓ 'சைபர் சுரக்ஷித் பாரத் முன்னெடுப்பு' என்பது மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் முதல் PPP முயற்சியாகும். இது 2018 ஜனவரியில் தொடங்கப்பட்டது. இது தலைமை தகவல் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு சைபர் கிரைம் பற்றிய விழிப்புணர்வை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

✓ MeITY'இன் கீழுள்ள தேசிய மின்–ஆளுகைப் பிரிவு, தலைமை தகவல் பாதுகாப்பு அதிகாரிகள் (CISO'க்கள்) மற்றும் பல்வேறு அமைச்சகங்கள் மற்றும் துறைகள், மத்திய மற்றும் மாநில அரசுகள், பொதுத்துறை நிறுவனங்கள், வங்கிகள் போன்றவற்றின் முன்னணி தகவல் தொழில் நுட்ப அதிகாரிகளுக்கு 6 நாள் பயிற்சித் திட்டத்தை நடத்துகிறது.

---

**5.** **எந்தத் தலைவரின் நினைவு நாள், 'மகாபரிநிர்வான் திவாஸ்' என அனுசரிக்கப்படுகிறது?**

**அ) Dr B R அம்பேத்கர் ☑**



ஆ) சர்தார் வல்லபாய் படேல்

இ) ஜோதிராவ் பூலே


ஈ) தயானந்த சரஸ்வதி

✓ பாபாசாகேப் டாக்டர் பி ஆர் அம்பேத்கரின் நினைவு நாள் ஒவ்வோர் ஆண்டும் டிச.6 அன்று 'மகாபரிநிர்வான் திவாஸ்' என அனுசரிக்கப்படுகி –றது. மும்பையில் அமைந்துள்ள அவரது நினைவிடமான சைத்ய பூமியில் அவரது ஆதரவாளர்கள் அஞ்சலி செலுத்துவதற்காக கூடினர். இந்த ஆண்டு, இந்திய பிரதமர் மோடி காணொளிக்காட்சிமூலம் சைத்ய பூமிக்கு வந்திருந்த ஆதரவாளர்களோடு உரையாடுகிறார்.

---

**6.** **Lunar Polar Exploration Mission (LUPEX) என்பது நிலவிற்கான ஒரு கூட்டுத் திட்டமாகும். இதில் எந்த இரு நாடுகள் உள்ளன?**

அ) இந்தியா–இஸ்ரேல்



ஆ) இந்தியா–பிரான்ஸ்

**இ) இந்தியா–ஜப்பான் ☑**

ஈ) இந்தியா–ரஷ்யா

✓ நிலவின் துருவப்பகுதியை ஆராய்வதற்காக, இந்திய மற்றும் ஜப்பானிய விண்வெளி முகமைகள் இணைந்து நிலவுக்கான ஒரு திட்டத்தைத் தொடங்க திட்டமிட்டுள்ளன. Lunar Polar Exploration Mission (LUPEX) என அழைக்கப்படும் இந்தத் திட்டம், இந்திய நிலவு தரையிறங்கி மற்றும் ஜப்பானிய ஆய்வூர்தி ஆகியவற்றைக் கொண்டிருக்கும்.

✓ ஜப்பானிய விண்வெளி ஆய்வுநிறுவனம் (JAXA) சிட்னி உரையாடலின் போது இந்தத் திட்டம் குறித்து வெளிப்படுத்தியது.

---

**7.** **நகர்ப்புற விவகார அமைச்சகத்தின் 'சிறந்த பொது போக்குவரத்து அமைப்புகொண்ட நகரத்திற்கான' விருதை வென்ற நகரம் எது?**

அ) மும்பை



**ஆ) சூரத் ☑**

இ) காந்திநகர்

ஈ) லக்னோ

✓ மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் 2021ஆம் ஆண்டின் நகர்ப்புற போக்குவரவு இந்தியா (UMI) மாநாட்டின் 14ஆவது பதிப்பை நடத்தியது. 'சிறந்த பொது போக்குவரத்து அமைப்புகொண்ட நகரத்திற்கான' விருதை சூரத் நகரம் வென்றது.

✓ மேலும், 'கொச்சி' மிகவும் நிலையான போக்குவரத்து அமைப்புகொண்ட நகரமாக மதிப்பிடப்பட்டது. UMI மாநாட்டில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி விருதுகளை வழங்கினார். நாக்பூரின் மெட்ரோ இரயிலுடன் கூடிய பன்முறை ஒருங்கிணைப்பும் தில்லியின் மெட்ரோவும் விருதுகளை வென்றன.

---

**8.** **சமீப செய்திகளில் இடம்பெற்ற சங்கப் குப்தாவுடன் தொடர்புடைய விளையாட்டு எது?**

**அ) சதுரங்கம் ☑**



ஆ) கால்பந்து

இ) டேபிள் டென்னிஸ்

ஈ) நீச்சல்

✓ நாக்பூரைச் சேர்ந்த 18 வயதான சங்கல்ப் குப்தா, இந்தியாவின் 71ஆவது கிராண்ட்மாஸ்டர் ஆனார். அரண்ஞ்செலோவாக்கில் நடந்த GM Ask 3 ரவுண்ட்–ராபின் நிகழ்வில் மூன்றாவது மற்றும் இறுதி விதிமுறையை நிறைவுசெய்த பிறகு அவர் இச்சாதனையை அடைந்தார். தேவைப்பட்ட மூன்று GM நெறிமுறைகளையும் 24 நாட்களில் தொடர்ந்து விளையாடி சங்கல்ப் குப்தா வாங்கினார்.

---

**9. சட்ட அளவியல் (அடைக்கப்பட்ட பொருட்கள்) விதிகள் – 2011'இல் திருத்தங்களை அறிவித்த மத்திய அமைச்சகம் எது?**

அ) உள்துறை அமைச்சகம்

**ஆ) நுகர்வோர் விவகாரங்கள் அமைச்சகம் ☑**

இ) உழவு மற்றும் உழவர்கள் நல அமைச்சகம்

ஈ) உணவு பதப்படுத்தும் தொழிலகங்கள் அமைச்சகம்

- ✓ நடுவண் நுகர்வோர் விவகாரங்கள் அமைச்சகமானது சட்ட அளவியல் (அடைக்கப்பட்ட பொருட்கள்) விதிகள் – 2011'இல் திருத்தம் செய்துள்ளது. இத்திருத்தங்கள் 2022 ஏப்ரல்.1 முதல் நடைமுறைக்கு வரும்.
- ✓ அடைக்கப்பட்ட பொருட்களின் அலகு விற்பனை விலையைக் குறிக்கும் புதிய விதிமுறை சேர்க்கப்பட்டுள்ளது. விளக்கப்படம் ஏதுமின்றி MRP குறித்த தகவலை வழங்குவது, அனைத்து வரிகளையும் உள்ளடக்கி இந்திய நாணய மதிப்பில் (₹) MRP'ஐ தெரிவிப்பது உள்ளிட்டவை இந்தத் திருத்தங்களுள் அடங்கும்.

**10. UNESCO கிரியேட்டிவ் சிட்டிஸ் நெட்வொர்க்கின் (UCCN) ஒரு பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ள நகரம் எது?**

அ) புனே

ஆ) கொச்சின்

**இ) ஸ்ரீநகர் ☑**

ஈ) கொல்கத்தா



- ✓ ஐநா கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பு (UNESCO) ஸ்ரீநகரை UNESCO கிரியேட்டிவ் சிட்டிஸ் நெட்வொர்க்கின் (UCCN) ஒருபகுதியாக அறிவித்துள்ளது. மும்பை, சென்னை, ஹைதராபாத், வாரணாசி மற்றும் ஜெய்ப்பூர் ஆகிய நகரங்களுக்குப் பிறகு, இந்த பெருமையைப் பெறும் ஆறாவது இந்திய நகரமாக ஸ்ரீநகர் உள்ளது. ஜம்மு மற்றும் காஷ்மீரின் தலைநகரமான இந்த நகரம், உலகெங்கிலும் உள்ள 295 கிரியேட்டிவ் சிட்டிஸ் வலையமைப்பிற்குள் நுழைந்துள்ளது.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. இந்தியா–இலங்கை–மாலத்தீவுகள் கூட்டு போர் பயிற்சி**

இந்தியா – இலங்கை – மாலத்தீவுகள் ஆகிய மூன்று நாடுகளும் இரண்டு நாள் கூட்டு கடற்படை போர் பயிற்சியை மாலத்தீவுகள் கடல் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை தொடங்கியதாக இந்திய தூதரகம் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்திய பெருங்கடல் பகுதியில் பாதுகாப்பை வலுப்படுத்துவது மற்றும் பரஸ்பர செயல்பாட்டுத் திறன் மேம்படுத்துவது உள்ளிட்ட நோக்கங்களின் அடிப்படையில் இந்த 15–ஆவது முத்தரப்பு போர் பயிற்சியை 'தோஸ்தி' என்ற பெயரில் மூன்று நாடுகளும் மேற்கொண்டு வருகின்றன.

இதுகுறித்து கொழும்புவில் உள்ள இந்திய தூதரகம் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:

கொழும்பு பாதுகாப்பு மாநாடு (சிஎஸ்சி) தலைமையின் கீழ் நடைபெறும் இந்த இரண்டு நாள் போர் பயிற்சி, கடல்சார் பாதுகாப்புக்கு ஒருங்கிணைந்த முயற்சியை உறுதிப்படுத்தவும், 3 நாடுகளின் கடற்படைகளின் செயல்திறனை மேம்படுத்துதல் மற்றும் நிலையான வழிகாட்டு நடைமுறையை (எஸ்ஓபி) பின்பற்றுவதை உறுதிப்படுத்தும் நோக்கத்தில் மேற்கொள்ளப்படுகிறது.

இந்திய கடற்படை சார்பில் கடலோர ரோந்து கப்பலான ஐஎன்எஸ் சுபத்ரா, கடல் பகுதியில் நீண்டதூரம் பறந்து சென்று ரோந்துப் பணியில் ஈடுபடுத்தப்படும் பி8ஐ போர் விமானம் ஆகியவை இந்த கூட்டு பயிற்சியில் பங்கேற்றுள்ளன. இலங்கை கடற்படை சார்பில் எஸ்எல்என்எஸ் சமுதுரா, எம்என்டிஎஃப் டிரோனியர் போர் விமானம் ஆகியவை பங்கேற்றுள்ளன. அதுபோல மாலத்தீவுகளின் போர் கப்பலும் இந்தப் பயிற்சியில் ஈடுபட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.இதுகுறித்து மாலத்தீவுகளில் உள்ள இந்திய தூதரகம் வெளியிட்ட செய்தியில், 'மூன்று நாடுகளிடையேயான நட்புறவு, கடல் பாதுகாப்பில் பரஸ்பர செயல்பாட்டுத் திறனை மேம்படுத்தவும், மூன்று நாடுகளின் கடலோர காவல்படைகள் இடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்தவும் இந்த முத்தரப்பு போர் பயிற்சி உதவும்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த போர் பயிற்சி இந்தியா – மாலத்தீவுகள் இடையேயான இரு தரப்பு போர் பயிற்சியாகவே முதலில் அறிமுகப்படுத்தப்பட்டது. அதன்படி, இந்த கூட்டு போர் பயிற்சி தொடங்கப்பட்டு 30–ஆம் ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளது. கடந்த 2012–ஆம் ஆண்டில் இலங்கையும் இணைந்ததால், இது முத்தரப்பு போர் பயிற்சியாக மாறியது.

**2. உலக பாரா பவர் லிஃப்டிங் சாம்பியன்ஷிப்பில் இந்திய வீரர் பரம்ஜீத் குமாருக்கு வெண்கலம்**

ஜார்ஜியாவில் நடைபெறும் உலக பாரா பவர் லிஃப்டிங் சாம்பியன்ஷிப்பில் ஆடவருக்கான 49 கிலோ பிரிவில் இந்திய வீரர் பரம்ஜீத் குமார் வெண்கலம் வென்றார். இதன்மூலம், உலக சாம்பியன்ஷிப்பில் பதக்கம் வென்ற முதல் இந்தியர் என்ற பெருமையை அவர் பெற்றுள்ளார்.

**3. ஒமைக்ரான் பெயர் காரணம்**

கொரோனா வைரசின் மரபணு மாறிய வகைகளுக்கு, கிரேக்க எழுத்துகளின் வரிசையில் பெயர்கள் சூட்டப்பட்டு வருகின்றன. இதன் அடிப்படையில், 'ஆல்பா, பீட்டா, காமா, டெல்டா' என பெயரிடப்பட்டது. இந்நிலையில் தற்போது உருவாகி உள்ள புதிய வகை வைரசுக்கு, கிரேக்க எழுத்து வரிசையில் உள்ள, 'நு மற்றும் ஷீ' என பெயரிட வேண்டும். ஆனால், இந்த எழுத்துகளை விட்டுவிட்டு, அதற்கு அடுத்த ஒமைக்ரான் என்ற எழுத்தை வைத்து பெயர் சூட்டப்பட்டுள்ளது. அதற்கான காரணம் தற்போது தெரிய வந்துள்ளது.

நு என்ற எழுத்து, ஆங்கில எழுத்தான 'நியூ'வைப் போல் இருக்கும் என்பதால், அந்த எழுத்து புறக்கணிக்கப்பட்டுள்ளது. இதேபோல், ஷீ எழுத்தை வைரசுக்கு பெயராக சூட்டினால், அது, சீன அதிபர் ஷீ ஜின்பிங்கை தவறாக குறிப்பிடுவதுபோல் இருக்கும் என கருதி, அந்த எழுத்தையும் உலக சுகாதார அமைப்பு தவிர்த்துள்ளது தெரிய வந்துள்ளது.

**4. ஸ்டார்ட்–அப் துறையில் முன்னணியில் இந்தியா: பிரதமர் மோடி**

'ஸ்டார்ட்–அப் நிறுவனங்கள் தொடங்குவதில் உலக அளவில் இந்தியா முன்னணியில் உள்ளது; நாடு முழுவதும் தலா ரூ.7,500 கோடி மதிப்புள்ள 70–க்கும் மேற்பட்ட ஸ்டார்ட்–அப் நிறுவனங்கள் உள்ளன' என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

'மனதின் குரல்' மாதாந்திர வானொலி உரையில் ஞாயிற்றுக்கிழமை அவர் பேசியதாவது:

நான் ஆட்சி அதிகாரத்தை விரும்பவில்லை; எதிர்காலத்திலும் அதை விரும்பவில்லை; மக்களுக்கு சேவை செய்வதையே விரும்புகிறேன். பிரதமர் பதவி உள்ளிட்ட அனைத்துப் பொறுப்புகளையும் மக்களுக்கு சேவை செய்வதற்காகவே ஏற்றுக்கொண்டுள்ளேன்.

அரசின் பல்வேறு திட்டப் பணிகள், பல வளர்ச்சித் திட்டங்கள் மனிதர்களின் உணர்வு சார்ந்ததாக உள்ளது. அது, வெவ்வேறு அனுபவத்தையும் மகிழ்ச்சியையும் கொடுக்கிறது. அதுபோலவே, மத்திய அரசின் ஆயுஷ்மான் பாரத் சுகாதாரக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பலர் மருத்துவ சிகிச்சை பெற்று பயனடைந்தனர். அவர்களில் இருவருடன் உரையாடினேன். மருத்துவ சிகிச்சைக்குப் பிறகு அவர்களின் வாழ்க்கை முறையே மாறிவிட்டது.

இளைய சமுதாயத்தினரை அதிகம் கொண்டிருக்கும் எந்தவொரு நாடும் புதிய சிந்தனை, புத்தாக்கம், எதையும் சாதிக்கும் ஆற்றல், இடர்ப்பாடுகளை எதிர்கொள்ளும் திறன் ஆகியவற்றை இயல்பாகவே கொண்டிருக்கும். இந்த அனைத்து அம்சங்களும் ஓரிடத்தில் ஒருங்கிணையும்போது எதிர்பாராத அளவில் வெற்றிகள் கிடைக்கும். பல அற்புதங்கள் நிகழும்.

இது, ஸ்டார்ட்–அப் நிறுவனங்களுக்கான யுகம். ஸ்டார்ட்–அப் நிறுவன வளர்ச்சியில் உலக அளவில் இந்தியா முன்னணியில் உள்ளது. கடந்த 2015–ஆம் ஆண்டு வரை தலா ரூ.7,500 கோடி மதிப்புள்ள (யுனிகார்ன் வகை) ஸ்டார்ட்–அப் நிறுவனங்கள் 10 மட்டுமே இருந்தன. ஆனால், தற்போது 70–க்கும் மேற்பட்ட யுனிகார்ன் வகை ஸ்டார்ட்–அப் நிறுவனங்கள் உள்ளன.

கரோனா பெருந்தொற்றுக்கு மத்தியிலும் இந்திய இளைஞர்கள் சாதித்துள்ளனர். அவர்களுக்கு நாட்டின் பல பகுதிகளில்

முதலீட்டாளா்களிடம் இருந்து ஆதரவு கிடைக்கிறது. வெளிநாடுகளில் இருந்துகூட ஆதரவு கிடைக்கிறது. இந்திய இளைஞா்கள் சா்வதேச பிரச்னைகளுக்குகூட ஸ்டாா்ட்–அப் நிறுவனம் மூலம் தீா்வுகண்டுள்ளனா்.

இளைஞா் ஒருவா் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி காற்று மாசைக் கட்டுப்படுத்த முயன்றாா். பேருந்துகளில் 40 சதவீத கரியமில வாயு வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்தி அவா் வெற்றியும் கண்டுள்ளாா்.

டிசம்பா் மாதத்தில் கடற்படை தினம், ராணுவப் படைகளின் கொடி நாளை தேசம் கொண்டாடுகிறது. 1971–ஆம் ஆண்டு டிசம்பா் மாதம் பாகிஸ்தானுடன் நடந்த போரில் இந்தியா வெற்றி பெற்ற் பொன் விழாவை இந்த ஆண்டு தேசம் கொண்டாடுகிறது. இந்த அனைத்து சந்தா்ப்பங்களிலும் நான் தேசத்தின் பாதுகாப்புப் படைகளை நினைவுகூா்கிறேன். அவா்களைப் பெற்றெடுத்த அன்னையரை நினைவுகூா்கிறேன் என்றாா் பிரதமா் மோடி.

தூத்துக்குடி மக்களுக்குப் பாராட்டு

‘நாம் இயற்கையைப் பாதுகாக்கும்போது, அதற்குப் பதிலாக இயற்கையும் நம்மைப் பாதுகாக்கிறது. தமிழ்நாட்டின் தூத்துக்குடி மாவட்டத்தில் கடற்கரையோரப் பகுதிகள், பல வேளைகளில் நீரில் மூழ்கும் அபாயம் ஏற்படுகின்றன. தூத்துக்குடியில் பல சிறிய தீவுகளும் திட்டுக்களும் இருக்கின்றன.

அவை கடலில் மூழ்கும் அபாயம் வலுத்து வருகிறது. அங்குள்ள மக்களும் வல்லுநா்களும் இந்த இயற்கை அபாயத்திலிருந்து பாதுகாக்க மணல் திட்டுக்களில் பனைமரங்களை நட்டுக் கொண்டிருக்கிறாா்கள். அந்த மரங்கள் புயல்கள் மற்றும் சூறாவளியில் நிமிா்ந்து நிற்பவை. நிலத்துக்குப் பாதுகாப்பு அளிப்பவை. இவற்றால் இந்தப் பகுதியைப் பாதுகாக்க ஒரு புதிய நம்பிக்கைக் கீற்று உதயமாகி இருக்கிறது.

நதியை மீட்டெடுத்த மக்கள்: உத்தர பிரதேச மாநிலம், ஜாலௌனில் பாரம்பரியமாகவே பெருகியோடிய நூன் நதி, அங்குள்ள விவசாயிகளுக்கு முக்கிய நீராதாரமாக இருந்து வந்துள்ளது. ஆனால், அந்த நதி மெல்ல மெல்ல வடு இறுதியில் ஓடையாக மாறிவிட்டது. இதனால் விவசாயிகளுக்கு பெரும் பிரச்சனை ஏற்பட்டது.

இதையடுத்து, ஜாலௌனை சோ்ந்த ஆயிரக்கணக்கான கிராமவாசிகளும், அந்தப் பகுதி மக்களும் தாங்களாகவே முன்வந்து, ஊராட்சி அமைப்புகளுடன் இணைந்து நதியில் பராமரிப்புப் பணிகளை மேற்கொண்டனா். மிகக் குறைவான காலத்திலேயே மிகக் குறைந்த செலவிலேயே அந்த நதி மீண்டும் உயிா்த்துள்ளது. இதனால் எத்தனையோ விவசாயிகளுக்குப் பயன் கிடைத்து வருகிறது.

இயற்கையின் சீா்தன்மையைச் சீா்குலைக்கும்போதும், அதன் தூய்மைத்தன்மையை அழிக்கும்போதும்தான் அது, நமக்கு அபாயத்தை ஏற்படுத்தும். மேகாலயாவில் ஒரு படகு காற்றில் மிதப்பது போன்ற படம் சமூக ஊடகங்களில் வேகமாகப் பரவி வருகிறது. நதி நீரின் தூய்மையால் அதன் அடிப்பகுதி வரை பளிங்கு போலத் தெரிகிறது.

நம் நாட்டில் பல மாநிலங்களில் உள்ள பல பகுதிகளைச் சோ்ந்த மக்கள், இயற்கையின் பாரம்பரியங்களைச் சிறப்பாகப் பாதுகாத்து வருகிறாா்கள். அவா்களிடம் இயற்கையோடு இயைந்த வாழ்க்கை முறை இன்னும் உயிா்ப்புடன் இருக்கிறது. இவை நமக்கெல்லாம் உத்வேகம் அளிக்கக் கூடியவை.

மறந்துவிடாதீா்கள், கரோனா இன்னும் முற்றிலுமாக அகன்றுவிடவில்லை. எச்சரிக்கையைக் கடைப்பிடிப்பது நம் அனைவரின் கடமை’ என்றாா் பிரதமா் மோடி.

---

**5. சுற்றுலாவை மேம்படுத்த எடுத்த நடவடிக்கையால் பிரதமருக்கு இசையால் நன்றி கூறிய மேகாலயா 'விசில் கிராம' மக்கள்**

மேகாலயாவில் உள்ள ஒரு கிராமத்தை சுற்றுலாத் தலமாக மேம்படுத்தும் முயற்சிக்காக பிரதமர் மோடியை வாழ்த்தியும் நன்றி தெரிவித்தும் இயற்றப்பட்ட பாடலுக்கு மோடி நன்றி தெரிவித்துள்ளார்.

மேகாலயாவில் இயற்கை எழில் சூழ்ந்த காங்தாங் என்ற கிராமத்தை ஐ.நா.சபையின் உலகசுற்றுலா அமைப்பின் போட்டிக்காக மத்திய அரசு சமீபத்தில் முன்மொழிந்தது. தங்கள் கிராமத்தை சுற்றுலாத் தலமாக மேம்படுத்தும் முயற்சிக்காக காங்தாங் கிராமமக்கள் வித்தியாசமான முறையில்பிரதமர் மோடிக்கு நன்றி தெரிவித் துள்ளனர். அந்த கிராமத்தில் மரபுப்படி பாரம்பரியமாக கிராமத் தில் பிறக்கும் குழந்தைக்கு அக் குழந்தையின் தாய் பெயரோடு ஒரு தனி இசைக் கோர்வையையும் சூட்டுவார். இந்த இசைக் குறிப்பே அந்தக் குழந்தையின் வாழ்க்கை முழுவதும் அடையாளமாகக் கருதப்படுகிறது. அந்தக் குறிப்பிட்ட இசைக் கோர்வை வேறு எவருக்கும் பெயராக சூட்டப்படுவதில்லை.

இந்த இசை தூரத்தில் இருந்து கேட்கும்போதும் விசில் ஒலி போன்று கேட்பதால் காங்தாங் கிராமம் விசில் கிராமம் என்று அழைக்கப்படுகிறது.

தங்கள் கிராமத்தை சுற்றுலாத் தலமாக மேம்படுத்தும் நடவடிக் கைக்காக பிரதமர் மோடியின் பெயரால் காங்தாங் கிராமத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் மோடியை பாராட்டி நன்றி தெரிவிக்கும் வகையில் இசைக்கோர்வையை பாடி உள்ளார். அந்தப் பெண் பாடும் வீடியோ காட்சியை மேகாலயா முதல்வர் கான்ராட் சங்மா ட்விட் டரில் பதிவிட்டு வாழ்த்துகளை ஏற்குமாறு மோடியை கேட்டுக் கொண்டுள்ளார்.

அந்த வீடியோவை தனது ட்விட்டர் பக்கத்தில் பிரதமர் மோடி பகிர்ந்துள்ளார். "இந்த அன்பான செயலுக்காக காங்தாங் கிராம மக்களுக்கு நன்றி. மேகாலயாவின் சுற்றுலா வளத்தை மேம்படுத்தும் முயற்சியில் மத்திய அரசு முழுமையாக ஈடுபட்டுள்ளது’ ’ என்று ட்விட்டரில் மோடி தெரிவித்துள்ளார்.

---

**6. இந்தோனேஷிய ஓபன் பேட்மிண்டனில் டென்மார்க் வீரர் ஆக்சல்சென் 'சாம்பியன்’**

இந்தோனேஷிய ஓபன் சூப்பர் சீரிஸ் பேட்மிண்டன் போட்டி பாலி நகரில் நடந்தது. இதில் நேற்று நடந்த ஆண்கள் ஒற்றையர் பிரிவின் இறுதி ஆட்டத்தில் ஒலிம்பிக் சாம்பியனும், 2–ம் நிலை வீரருமான விக்டர் ஆக்சல்சென் (டென்மார்க்) 21–13, 9–21, 21–13 என்ற செட் கணக்கில் லோ கியான் யேவை (சிங்கப்பூர்) தோற்கடித்து மகுடம் சூடினார். அவருக்கு ரூ.45 லட்சம் பரிசுத்தொகையாக கிடைத்தது.

இதன் பெண்கள் பிரிவில் தென்கொரியாவின் அன் செ யங் 21–17, 22–20 என்ற நேர் செட் கணக்கில் முன்னாள் உலக சாம்பியனான ராட்சனோக் இன்டானோனுக்கு (தாய்லாந்து) அதிர்ச்சி அளித்து பட்டத்தை தட்டிச் சென்றார். 19 வயதான அன் செ யங் கடந்த வாரம் இந்தோனேஷிய மாஸ்டர்ஸ் போட்டியிலும் கோப்பையை வென்றிருந்தார். இந்த தொடரில், இந்தியர்கள் யாரும் அரைஇறுதியை தாண்டவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்து இதே இடத்தில் உலக டூர் இறுதிசுற்று பேட்மிண்டன் போட்டி வருகிற 1–ந்தேதி முதல் 5–ந்தேதி வரை நடக்கிறது. இதில் டாப்–8 வீரர், வீராங்கனைகள் பங்கேற்க உள்ளனர். இந்தியாவின் பி.வி.சிந்து, ஸ்ரீகாந்த், லக்‌ஷயா சென் ஆகியோர் கவுரவமிக்க இந்த போட்டியில் களம் காண உள்ளனர்.

---

**7. 'பபாசி’ தலைவராக வயிரவன் தேர்வு நிர்வாகிகள் பொறுப்பேற்பு**

தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கத்தின் (பபாசி) தலைவராக எஸ்.வயிரவன் தேர்வு செய்யப்பட்டுள்ளார். 'பபாசி’ என்று அழைக்கப்படும் தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கத்தின் தேர்தல் கடந்த 26–ம் தேதி நடைபெற்றது.

இதில் 'குமரன் பதிப்பகம்’ எஸ்.வயிரவன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 'நாதம் கீதம்’ எஸ்.கே.முருகன் மீண்டும் செயலாளராகவும், 'லியோ புக்ஸ்’ ஏ.குமரன் பொருளாளராகவும், 'வனிதா பதிப்பகம்’ பெ.மயில வேலன் துணைத் தலைவராகவும் (தமிழ்), 'மதுரை, சர்வோதய இலக்கியப்பண்ணை’ வி.புருஷோத்தமன் துணைத் தலைவராகவும் (ஆங்கிலம்), 'முல்லை பதிப்பகம்’ மு.பழநி இணைச் செயலாளராகவும், 'உணவு உலகம் பப்ளிகேஷன்ஸ்’ இராம.மெய்யப்பன் துணை இணைச் செயலாளராகவும் (தமிழ்), 'டைகர் புக்ஸ்’ எஸ்.சுப்பிரமணியன் துணை இணைச் செயலாளராகவும் (ஆங்கிலம்) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

அதேபோல், நிர்வாகக் குழு (தமிழ்) உறுப்பினர்களாக 'நக்கீரன்’ ஆர்.தனுஷ், 'ஐஃபிட்’ ஐ.ஜலாலுதீன், 'புலம்’ லோகநாதன், 'தமிழ்ச் சோலை பதிப்பகம்’ எஸ்.பிரபாகரன் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். மேலும், நிர்வாகக் குழு (ஆங்கிலம்) உறுப்பினர்களாக 'மயூரா புக்ஸ்’ ஏ.கேளியப்பன், 'ஸ்பைடர் புக்ஸ்’ ஐ.முபாரக், 'டெக்னோ புக்ஸ்’ நந்த் கிஷோர், 'ஜெய்கோ’ கே.ஸ்ரீராம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். நிரந்தரப் புத்தகக் காட்சி உறுப்பினர்களாக ஜே.ஹரி பிரசாத், ஏ.எஸ்.மகேந்திரன், எஸ்.ராம்குமார், ஆர்.சங்கர் ஆகியோர் தேர்வாகியுள்ளனர். தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகள் அனைவரும் நேற்று பொறுப் பேற்றுக் கொண்டனர். இவர்கள் 2023–ம் ஆண்டு வரை இப்பதவிகளை வகிப்பார்கள்.

---

**8. கதைப்போமா அறிவியல் 11: சிறுகோளே இதோ வர்றோம்!**

உலக பெரும் பணக்காரர்களான எலான் மஸ்க், ஜெஃப் பேசோஸ் பூமியில் தாங்கள் உருவாக்கிய நிறுவனங்களில் இருந்து ஈட்டிய பணத்தை விண்வெளி தொழில்நுட்ப முயற்சிகளுக்கு செலவிடுவது ஒருபுறம் போற்றப்படுகிறது. மறுபுறம் தூற்றப்படுவதையும் பார்க்கமுடிகிறது. போற்றுபவர்கள் பொதுவாகத் தொழில்நுட்ப வளர்ச்சியை எதுவாக இருந்தாலும் அதை கண்மூடி வரவேற்பவர்கள். ' Early adopter' என்றழைக்கப்படும் இவர்களை புத்தாக்கப் பயணத்தில் (Innovation Lifecycle) முதல் இடத்தில் வைக்கலாம். தூற்றுபவர்களின் முக்கிய குற்றச்சாட்டு – நாம் வாழும் பூமியில் பசிப்பிணியில் இருந்து பருவநிலை மாற்றங்கள் வரை தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் அதிகம். அவற்றை விட்டுவிட்டு ராக்கெட்டில் ஏறி விண்வெளிக்கு செல்லும் ஆராய்ச்சிகளுக்காகப் பணத்தை செலவிடுவது முறையல்ல.

மேலோட்டமாகப் பார்த்தால், அந்தக் குற்றச்சாட்டில் உண்மை இருப்பதாகவே தெரியலாம். காரணம், மீடியாக்களில் சுமீபத்தில் வெளிவந்தபடி இருக்கும் விண்வெளி நிகழ்வுகள் கேளிக்கை சார்ந்ததாக இருப்பதால் வெளியில் இருந்து பார்க்கையில் அப்படி தோன்றக் கூடும். உதாரணத்திற்கு, ஜெஃப் பேசோஸின் ப்ளூ ஆரிஜின் நிறுவனம் தங்களது ராக்கெட்டுகளில் ஆட்களை ஏற்றிக் கொண்டு நூறு கிலோமீட்டருக்கு சற்று அதிகம் பயணித்து திரும்பி வரும் நேரம் – பத்து நிமிடங்கள். மூன்று நிமிடங்கள் மட்டுமே புவியீர்ப்பு விசையில் எல்லையைத்தாண்டிய அனுபவம் கிடைக்கும் அந்தப் பயணத்திற்கு கோடிக்கணக்கில் டிக்கெட் வசூலிக்கப்படுகிறது. ரிச்சர்ட் பிரான்சனின் விர்ஜின் நிறுவனமும் இதுபோலவே விண்வெளி பயணத்திற்கு ஒத்திகைகள் பார்த்துக் கொண்டிருப்பதாகவே தெரிகிறது. எலான் மஸ்க்கின் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் இணைய இணைப்புகளை பூமியில் கொடுக்க உதவும் துணைக்கோள் உபகரணங்களை விண்ணில் தூவிவிடும் ராக்கெட்டுகளையும், நானூறு கிலோமீட்டர் தூரத்தில் மிதந்து கொண்டிருக்கும் சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு (International Space Station) ஆராய்ச்சியாளர்களை கொண்டு சென்று விட்டு விட்டு, பணி முடித்தவர்களை மீண்டும் பூமிக்கு திருப்பி கொண்டு வரும் ராக்கெட்டுகளையும் இயக்குகிறது.

நிற்க!

விண்வெளி ஆராய்ச்சிகளால் பல்வேறு நீண்டகால பயன்கள் உண்டு என்ற அணியின் ஆதரவாளன் நான். அதற்கு பல காரணங்கள் உண்டு. அதில் ஒன்றை இந்த வார கட்டுரையில் கதைக்கலாம். கதையைப் புரிந்துகொள்வதற்குத் தேவையான அடிப்படைகளை பார்த்துவிடலாம். சூரியனைச் சுற்றி வரும் மூன்றாம் கல்லாக இருக்கும் பூமியை கோள் என அழைக்கிறோம். பூமியுடன் சேர்த்து எட்டு கோள்கள் சூரியனைச் சுற்றிவருகின்றன (2006–இல் கோள் அந்தஸ்தை இழந்த ப்ளூட்டோ பற்றி மற்றொரு வாரத்தில் பார்க்கலாம்). கோள்களுக்கு அப்பால், இன்னும் இரண்டு வகையான விண் பொருட்கள் சூரியனைச் சுற்றி வருகின்றன. ஒன்று Asteroids எனப்படும் சிறுகோள்கள். மற்றது Comets எனப்படும் வால் நட்சத்திரங்கள். சிறுகோள்கள் பொதுவாக உலோகங்கள் நிறைந்த வறட்டுப் பாறைகளால் ஆனவை; வால் நட்சத்திரங்கள் பனியால் மூடப்பட்ட பாறைகள். அவற்றிற்குப் பின்னிருக்கும் தூசுபடலமே 'வால்" என அறியப்படுகிறது.

துணைக்கோள்களில் இருந்து வரும் சிறு துண்டுகள் பூமியின் வளிமண்டலத்திற்குக்குள் நுழைகையில் அங்கிருக்கும் ஆக்சிஜன் காரணமாக எரிந்து போய்விடுவதுண்டு. நம் கண்ணுக்கு பார்க்க முடிகிற தொலைவில் நடக்கிற இந்த நிகழ்வை எரிகல் பொழிவு (Meteor Shower) என அழைக்கிறார்கள். முழுமையாக எரியாமல், சில தருணங்களில் பூமியை வந்தடைகிற விண்கற்கள் பொதுவாக பெரிய பாதிப்பை ஏற்படுத்துவதில்லை. சுமீபத்திய வரலாற்றில் சொல்லக்கூடிய அளவிற்கு பாதிப்பை ஏற்படுத்திய விண்கல் நிகழ்வு சென்ற நூற்றாண்டின் தொடக்கத்தில் ரஷ்யாவின் டன்ஸ்க்கா நதிக்கரையில் நடந்தது. நேரடியாக இறப்பு என்பது மிகக்குறைவு என்றாலும், விண்கல் பூமியின் மோதிய வேகத்தில் நூறு கிலோமீட்டருக்கும் அதிகமான தூரம் வரை ஏற்பட்ட அதிர்வுகளால் பலத்த சேதம் ஏற்பட்டது.

இதுவரை எண்ணப்பட்டிருக்கும் கிட்டத்தட்ட நான்காயிரம் வால்நட்சத்திரங்களின் சுற்றளவு பத்து கிலோமீட்டர்கள். சிறுகோள்களின் அளவுகளில் பெருத்த வித்தியாசம் உண்டு.பத்து மீட்டரில் இருந்து ஐநூறு கிலோமீட்டருக்கும் அதிகமாக சுற்றளவு கொண்ட சிறுகோள்கள் எண்ணிக்கையில் மிக அதிகம். இதுவரை பதினோறு லட்சத்திற்கும் மேலான சிறுகோள்கள் கண்டறியப்பட்டுள்ளன. கோள்கள் போலல்லாமல் வால்நட்சத்திரங்களும், சிறுகோள்களும் சூரியனை சீராக சுற்றுவதில்லை. இதன் காரணமாக, இவற்றில் ஏதாவது ஒன்று நேரடியாக பாதை மாறி பூமியின் மீது வந்து இடித்துவிடுமோ என்ற அச்சம் விண் ஆராய்ச்சியாளர்களுக்கு உண்டு. எண்ணிக்கையில் அதிகம் என்பதால், சிறுகோள் ஒன்றினால் நிகழும் இடிப்பின் சாத்தியமே அதிகம் என்பதால், ஆராய்ச்சி முயற்சிகள் அதன் மீது அதிக அளவு இருப்பதில் ஆச்சரியமில்லை.

2021 மே மாதத்தில் சிறுகோள் ஆராய்ச்சியில் ஒரு மைல்கல் நிகழ்வு நடந்தது. இருபத்தியெட்டு கோடி கிலோமீட்டர்கள் தொலைவில் இருக்கும் பென்னு (Bennu) என்ற துணைக்கோளில் மேற்பரப்பில் இருக்கும் மண்/கல் மாதிரிகளை எடுத்துக் கொண்டு புறப்பட்டிருக்கிறது நாசாவின் விண்கலம். 'Osiris–Rex' எனப் பெயரிடப்பட்ட இந்த விண்கலம் பூமிக்கு வந்து சேர இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகும். தான் சேகரித்திருக்கும் மணல் இத்யாதியைக் கொண்ட பொட்டலத்தை பூமிக்கருகில் வந்து போட்டுவிட, அந்தப் பொட்டலம் 2023 செப்டம்பர் 23 அன்று பூமியில் வந்துவிழும் என எதிர்பார்க்கப்படுகிறது. அந்தப் பொட்டலத்தில் இருக்கும் பொருட்கள் சிறுகோள்களைப் பற்றி தெரிந்து கொள்ள பெரிதும் உதவும் என்பதால், உற்சாக எதிர்ப்பார்ப்பில் இருக்கிறார்கள் நாசாவின் விண் ஆராய்ச்சியாளர்கள்.

சிறுகோள்களைப் பற்றி இவ்வளவு மெனெக்கிட வேண்டுமா என்ற கேள்வி மனதில் தோன்றலாம். பதில் – ஆம். மேற்கண்ட பென்னு, பூமிக்கருகில் இருக்கும் சிறுகோள்கள் (Near–Earth Asteroids–NEA) என வரையறுக்கப்படும் சிறுகோள் பிரிவைச் சார்ந்தது. பென்னு இலேசாக தனது சுற்றுப்பாதையில் இருந்து விலகினால், 2175ல் இருந்து 2199 வருடத்திற்குள் அது பூமியில் வந்து இடிக்கும் பேராபத்து இருக்கிறது எனக் கணக்கிடுகிறார்கள். இதன் சாத்தியக்கூறு மூன்றாயிரத்தில் ஒன்று என்று இருப்பதால், இது போன்ற நிகழ்வுகளுக்கு இப்போதிருந்தே திட்டமிடுவது அவசியம்.

சரி, தனது சுற்றுப்பாதையில் இருந்து சிறுகோள் விலகி பூமியின் சுற்றுப் பாதையில் வந்து இடிக்கப்போகிறது என தெளிவாகிவிட்டால் என்ன செய்வது? நம் விதி அவ்வளவுதான் என அமைதியாக இருந்துவிட வேண்டுமா? இந்தக் கேள்விகளுக்கான நம்பிக்கை ஊட்டும் பதில்களில் விண் ஆராய்ச்சியாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர். அந்த முயற்சிகளில் ஒன்று சென்ற வாரம் நடந்திருக்கிறது.

"டிமோர்போஸ் சிறுகோளே – இதோ நாங்கள் வருகிறோம்" (Asteroid Dimorphos: we're coming for you!) என சென்ற வாரத்தில் நாசா நிறுவனம் இட்டிருந்த ட்வீட் கவனத்தை ஈர்த்தது. என்ன நடக்கிறது என்பதை துருவிப் பார்த்தேன். தனது சுற்றுப்பாதையில் இருக்கும் சிறுகோள் ஒன்றின்மீது வேகமாக ராக்கெட் கொண்டு இடித்து அதன் பாதையை சற்றே மாற்றிவிட முடியுமா என்பதை கண்டறியும் "சிறுகோள் திசை திருப்பும் தொழில்நுட்பம்" (Asteroid Deflecting Technology) தியரி என்ற அளவில் மட்டுமே இதுவரை இருந்து வந்தது. அதை நேரடியாக முயற்சித்து செயல்வடிவம் கொடுக்கப் போகிறார்கள்.

'DART' எனப் பெயரிடப்பட்ட விண்கலம் ஒரு கோடி கிலோமீட்டர் தூரத்தில் இருக்கும் டிமோர்போஸ் சிறுகோளை நோக்கிச் செலுத்தப்படும். 160 மீட்டர் மட்டுமே சுற்றளவு கொண்ட இந்தச் சிறுகோளுக்கு 35 கிலோமீட்டர் தூரத்தில் இருக்கும் போது, இரண்டு சாட்டிலைட்டுகளை ஏவி விட்டு விண்கலம் பலமாக சிறுகோளை இடித்து அதன் சுற்றுப்பாதையை மாற்ற முயற்சிக்கும். ஏவப்பட்ட சாட்டிலைட்டுகள் விண்கலத்தின் முயற்சியை படமெடுத்து பூமிக்கு அனுப்பிவிடும்.

இந்த முயற்சி வெற்றியடைந்தால், சிறுகோள்கள் பூமியைத் தாக்கும் முயற்சி என்பது ஹாலிவுட் படங்களில் மட்டுமல்ல, நிஜ வாழ்விலும் சாத்தியமாகும். இந்த முயற்சியை பற்றிய அதிக விபரங்களை DARTMission ஹேஷ்டேக் மூலம் டிவிட்டரில் தொடர்ந்து பாருங்கள்.

---

**9. சேதி தெரியுமா?**

நவ.20: அண்ணாமலை பல்கலைக் கழகத்தின் புதிய துணைவேந்தராக ஆர்.எம்.கதிரேசன் நியமிக்கப்பட்டார். அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு இப்பொறுப்பில் அவர் இருப்பார்.

நவ.21: இந்தியாவில் பத்து லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் தொகை உள்ள தூய்மை நகரங்களின் பட்டியலில் ஐந்தாவது முறையாக இந்தூர் முதலிடம் பிடித்தது.

நவ.22: டெல்லியில் நடைபெற்ற சையது முஷ்டாக் அலி டிராபி இறுதிப் போட்டியில் கர்நாடகத்தைத் தோற்கடித்து தமிழ்நாடு சாம்பியன் ஆனது. தொடர்ச்சியாக இரு முறை இந்தக் கோப்பையை தமிழ்நாடு வென்றுள்ளது.

நவ.23: கூட்டுறவுச் சங்கங்கள் தங்கள் பெயரில் 'வங்கி' என்கிற சொல்லைப் பயன்படுத்தக் கூடாது என்று இந்திய ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது. திருத்தப்பட்ட வங்கி ஒழுங்குமுறைச் சட்டம்-2020 செயல்பாட்டுக்கு வந்ததையடுத்து இந்த அறிவிப்பு வெளியானது.

நவ.24: வேற்றுருவம் அடைந்த பி.1.1.529 என்கிற கரோனா வைரஸ் தொற்று தென் ஆப்பிரிகாவில் முதன்முறையாகக் கண்டறியப்பட்டுள்ளது.

நவ.25: யுனெஸ்கோ உலகப் பாரம்பரியக் குழுவின் உறுப்பினராக ஆசியா-பசிபிக் பிராந்தியத்திலிருந்து இந்தியா தேர்வானது. இப்பொறுப்பில் நான்கு ஆண்டுகளுக்கு இந்தியா இருக்கும்.

நவ.26: சர்வதேசக் காவல் அமைப்பான 'இன்டர்போலி' ல் ஆசிய நாடுகளின் பிரதிநிதியாக இந்தியாவின் சார்பில் சிபிஐ சிறப்பு இயக்குநர் பிரவீண் சின்ஹா தேர்வானார்.

நவ.26: கரோனா வைரஸ் தடுப்புக்கு மூக்கு வழியாக மருந்தைச் செலுத்தும் ஸ்பிரேயை இந்தியாவின் ஐ.டி.சி. நிறுவனம் தயாரித்துள்ளது.

நவ.27: நிதி ஆயோக் வெளியிட்டுள்ள தேசிய பலபரிமாண குறியீட்டு அறிக்கையில், 51.91 சதவீத ஏழை மக்களுடன் பிஹார் மாநிலம் முதலிடத்தைப் பிடித்துள்ளது.

---

**10. சிறுவர்களிடையே அதிகரிக்கும் உடல் பருமன் பிரச்சினை: தேசிய குடும்ப நல ஆய்வில் தகவல்**

பல்வேறு மாநிலங்கள், யூனியன்பிரதேசங்களில் தேசிய குடும்பநல ஆய்வு-5 (என்எஃப்எச்எஸ்) நடத்தப்பட்டது. சிறார், பெரியவர்களிடையே உடல் பருமன் பிரச்சினை அதிகரித்துள்ளதாக அந்தஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன.

கடந்த முறை நடைபெற்ற என்எஃப்எச்எஸ்-4 ஆய்வில் 2.1% சிறுவர்கள் உடல் பருமனாக இருந்தனர். தற்போது நடைபெற்ற ஆய்வில் அது 3.4% ஆக அதிகரித்துள்ளது. சிறுவர்கள் மட்டுமல்லாமல் பெரியவர்களிடத்திலும் இந்த உடல் பருமன் பிரச்சினை உள்ளது. கடந்த ஆய்வில் 20.6%ஆக இருந்த உடல் பருமனான பெண்களின் எண்ணிக்கை தற்போது 24% ஆக உயர்ந்துள்ளது. இதுபோல ஆண்களின் எண்ணிக்கை 18.9 சதவீதத்தில் இருந்து 22.9% ஆக அதிகரித்துள்ளது.

மகாராஷ்டிரா, குஜராத், மிசோரம், திரிபுரா, லட்சத்தீவுகள், ஜம்மு-காஷ்மீர், உத்தரபிரதேசம், டெல்லி, மேற்கு வங்கம், ஆந்திரா, லடாக் ஆகிய மாநிங்கள், யூனியன் பிரதேசங்களில் 5 வயதுக்குக் குறைவான சிறுவர்களில் உடல்பருமன் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

கோவா, தமிழ்நாடு, தாத்ரா அன்ட் நாகர் ஹவேலி, டாமன் அன்ட் டையூ ஆகிய மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களில் மட்டுமே 5 வயதுக்குள்பட்ட உடல் பருமன் பிரச்சினையுள்ள குழந்தைகள் குறைவாக உள்ளனர்.

30 மாநிலங்களில் பெண்களுக்கும், 33 மாநிலங்களில் ஆண்களுக்கும் உடல் பருமன் பிரச்சினை உள்ளது. மேலும் அங்கு உடல் பருமன்பிரச்சினையால் பாதிக்கப்பட்டவர் களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது என ஆய்வில் தெரியவந்துள்ளது. சுகாதாரமற்ற உணவைத் தேர்ந்தெடுத்தல், போதுமானஉடல் உழைப்பு இல்லாததால் இந்த பிரச்சினை ஏற்படுவதாக இந்திய மக்கள் தொகை பவுண்டேஷன் செயல் இயக்குநர் பூனம் முட்ரேஜா தெரிவித்துள்ளார்.

---

**11. ஓய்வூதியதாரா்களுக்கு பிரத்யேக முக அங்கீகார தொழில்நுட்பம் அறிமுகம்**

ஓய்வூதியதாரா்கள் 'ஆயுள் சான்றிதழ்' அளிக்கும் நடைமுறையை மேலும் எளிதாக்கும் வகையில், அவா்களுக்கான பிரத்யேக முக அங்கீகார தொழில்நுட்பத்தை மத்திய பணியாளா் துறை இணையமைச்சா் ஜிதேந்திர சிங் திங்கள்கிழமை அறிமுகம் செய்துவைத்தா்.

அதன்படி, அவா்களின் முக அங்கீகாரமே அவா்களின் ஆயுள் சான்றுக்கான ஆதாரமாக இனி எடுத்துக்கொள்ளப்படும்.

அனைத்து ஓய்வூதியதாரா்களும் தொடா்ச்சியாக ஓய்வூதியம் பெறுவதற்கு, ஒவ்வோா் ஆண்டும் 'ஆயுள் சான்றிதழ்' (உயிருடன் இருப்பதற்கான அத்தாட்சி) சமா்ப்பிப்பது கட்டாயமாகும். ஆனால், முதிய வயதில் இந்தச் சான்றிதழைப் பெறுவது மற்றும் சமா்ப்பிப்பதில் நீண்ட வரிசையில் காத்திருப்பது உள்ளிட்ட பல்வேறு சிரமங்களை ஓய்வூதியதாரா்கள் சந்தித்து வந்தனா். இதனை எளிதாக்கும் வகையில் புதிய முக அங்கீகார தொழில்நுட்பத்தை மத்திய அரசு அறிமுகம் செய்துள்ளது.

இதுகுறித்து மத்திய பணியாளா், பொதுமக்கள் குறைதீா்ப்பு மற்றும் ஓய்வூதியதாரா்கள் துறை அமைச்சகம் திங்கள்கிழமை வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:

ஓய்வூதியதாரா்களுக்கு புதிய முக அங்கீகார தொழில்நுட்பத்தை மத்திய அமைச்சா் அறிமுகம் செய்துவைத்து பேசும்போது, 'ஓய்வூதியதாரா்களின் தேவைகளைப் பூா்த்தி செய்வதிலும், அவா்களின் வாழ்வை எளிமைப்படுத்துதிலும் மத்திய அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. கடந்த 2014-ஆம் ஆண்டு பாஜக அரசு ஆட்சிக்கு வந்த உடனேயே, ஓய்வூதியதாரா்களுக்கு எண்ம (டிஜிட்டல்) ஆயுள் சான்றிதழ் நடைமுறையை அறிமுகம் செய்ய தீா்மானித்தது. தற்போது, பிரத்யேக முக அங்கீகார தொழில்நுட்பம் அறிமுகம் செய்திருப்பது, ஓய்வூதியதாரா்களுக்கு மேலும் உதவியாக இருக்கும்.

இந்தப் புதிய தொழில்நுட்பத்தின் முலமாக மத்திய அரசுத் துறைகளைச் சோ்ந்த 68 லட்சம் ஓய்வூதியதாரா்கள் மட்டுமின்றி, தொழிலாளா் வருங்கால வைப்புநிதி (இபிஎஃப்ஓ) சந்தாதாரா்கள் மற்றும் மாநில அரசு துறைகளைச் சோ்ந்த ஓய்வூதியதாரா்களும் பலனடைய முடியும்.

மேலும், ஓய்வூதியதாரா்களிடையே விழிப்புணா்வை ஏற்படுத்த எண்ம (டிஜிட்டல்) கையேடுகளை (இ-புக்லெட்) அறிமுகப்படுத்தவும், ட்விட்டா், முகநூல் மற்றும் யு-டியூப் உள்ளிட்ட சமூக ஊடகங்கள் மூலமாக விழிப்புணா்வை ஏற்படுத்துவதற்கும் மத்திய ஓய்வூதியத் துறை நடவடிக்கை எடுத்து வருகிறது' என்று மத்திய அமைச்சா் பேசியதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**12. புலி வேட்டை குறைவு; யானை வேட்டை அதிகரிப்பு: மக்களவையில் அரசு தகவல்**

கடந்த 3 ஆண்டுகளில் புலிகள் வேட்டையாடப்படுவது வெகுவாகக் குறைந்துவிட்டது; அதே காலகட்டத்தில் யானைகள் வேட்டையாடப்படுவது அதிகரித்துவிட்டது என்று மக்களவையில் அரசுத் தரப்பில் திங்கள்கிழமை தெரிவிக்கப்பட்டது.

இது தொடா்பான கேள்விக்கு மத்திய சுகாதாரத் துறை இணையமைச்சா் அஸ்வின் குமாா் சௌபே எழுத்து மூலம் அளித்த பதிலில் மேலும் கூறியதாவது:

கடந்த 3 ஆண்டுகளில் 58 புலிகள் வேட்டையாடப்பட்டுள்ளன. இதில் 7 புலிகள் 2020-ஆம் ஆண்டிலும், 17 புலிகள் 2019-ஆம் ஆண்டிலும், 34 புலிகள் 2018-ஆம் ஆண்டிலும் கொல்லப்பட்டன. அதே நேரத்தில் 2018-19-இல் 9 யானைகளும், 2019-20-இல் 6 யானைகளும், 2020-21-இல் 14 யானைகளும் வேட்டையாடப்பட்டுள்ளன. எனினும், ஒட்டுமொத்தத்தில் சட்டவிரோதமாக விலங்குகள் வேட்டையாடப்படுவது தீவிர நடவடிக்கைகள் மூலம் குறைக்கப்பட்டுள்ளன.

2018-இல் சட்டவிரோத வேட்டைகள் தொடா்பாக 648 வழக்குகளும், 2019-இல் 805 வழக்குகளும், 2020-இல் 601 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. இது தொடா்பாக 2018-இல் 1,099 பேரும், 2019-இல் 1,505 பேரும், 2020-இல் 1,231 பேரும் கைது செய்யப்பட்டனா்.

2020-21-இல் வேட்டை, மின்சாரம் பாய்வது, விஷம் வைத்து கொல்லப்படுவது, ரயிலில் அடிபட்டு உயிரிழப்பது என 93 யானைகள் உயிரிழந்துவிட்டன. இந்த எண்ணிக்கை 2019-20-இல் 99 ஆகவும், 2018-19-இல் 115 ஆகவும் இருந்தது.

கடந்த 3 ஆண்டுகளில் 222 யானைகள் மின்சாரம் பாய்ந்து உயிரிழந்தன. 45 யானைகள் ரயிலில் அடிபட்டு இறந்தன. 2 யானைகள் விஷம் வைத்து கொல்லப்பட்டன.

இறுதியாக நடத்தப்பட்ட கணக்கெடுப்புகளின்படி இந்தியாவில் சுமாா் 27,000 யானைகளும், 2,967 புலிகளும் உள்ளன.

---

**13. ட்விட்டர் புதிய சிஇஓவின் வயது 37: உலகின் டாப் 500 நிறுவன தலைமைச் செயல் அதிகாரிகளில் மிகவும் இளமையானவர்**

ட்விட்டர் நிறுவனத்தின் புதிய சிஇஓவாக அறிவிக்கப்பட்டுள்ள இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பராக் அகர்வாலுக்கு 37 வயதுதான் ஆகிறது. இதனால், உலகளவில் டாப் 500 நிறுவனங்களின் சிஇஓக்களிலேயே மிகவும் இளைமையானவர் என்ற அந்தஸ்தைப் பராக் அகர்வால் பெற்றுள்ளார்.

சமூக வலைதளங்களில் ஒன்றான ட்விட்டரை பிரபலங்கள் பலரும் உலகளவில் பயன்படுத்தி வருகின்றனர். முக்கிய தகவல் பரிமாற்ற தளமாகவும் ட்விட்டர் செயல்பட்டு வருகிறது. இந்நிலையில் ட்விட்டர் சிஇஓ பதவியை ஜேக் டார்ஸி நேற்று ராஜினாமா செய்தார்.

இதனைத் தொடர்ந்து ட்விட்டர் நிறுவனத்தில் தலைமை தொழில்நுட்ப அதிகாரியாக (சிடிஓ) இருந்த பராக் அகர்வால் ட்விட்டரின் புதிய சிஇஓவாக அறிவிக்கப்பட்டுள்ளார்.

பராக் அகர்வால் 1984ல் பிறந்துள்ளார். பாதுகாப்பு காரணங்களுக்காக ட்விட்டர் நிறுவனம் பராக் அகர்வாலின் பிறந்த தேதியை வெளியிட மறுத்துள்ளது. ஆனால் அவர் 1984ல் பிறந்தார் என்று மட்டும் உறுதிப்படுத்தியுள்ளது. 1984 மே 14 ஆம் தேதி, மெட்டா இன்க் நிறுவனர் மார்க் ஜுக்கர்பர்க் பிறந்தார். இப்போது, பராக் அகர்வாலும் 1984ல் பிறந்துள்ளதால். உலகின் டாப் 500 நிறுவனங்களின் சிஇஓக்களில் பராக் அகர்வாலும், மார்க் ஜுக்கர்பர்கும் மிகவும் இளமையானவர்கள். வால் மார்ட் சிஇஓ வாரன் பஃப்பட் தான் வயது அதிகமான சிஇஓ என அறியப்படுகிறார். அவருக்கு வயது 91.

யார் இந்த பராக் அகர்வால்?

இந்தியாவில் பிறந்த பராக் அக்ரவால், மும்பை ஐஐடியில் பயின்றார். பின்னர் ஸ்டான்ஃபோர்டு பல்கலைக்கழகத்தில் பயின்றார். கடந்த 2011ஆம் ஆண்டு ட்விட்டர் நிறுவனத்தில் மென்பொறியாளராக வேலையில் இணைந்தார். அந்நிறுவனத்தின் தலைமை தொழில்நுட்பத் தலைவர் ஆக இருந்த ஆடம் அப்பதவியில் இருந்து விலகியதை அடுத்து மார்ச் 8, 2018ல் பராக் அக்ரவால் ட்விட்டரின் தலைமை தொழில்நுட்ப அதிகாரியாக (CTO) பொறுப்பேற்றார். இப்போது 2021 நவம்பரில் பராக் அகர்வால், ட்விட்டரின் சிஇஓவாக பதவி ஏற்றுள்ளார்.

---

**14. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மத்திய அரசின் சுகாதார செலவினம் அதிகரிப்பு: தேசிய சுகாதார கணக்கீட்டு அறிக்கையில் தகவல்**

இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மத்திய அரசு சுகாதாரத்துக்காக செலவிட்டுள்ளதன் பங்கு 1.15 சதவீதத்திலிருந்து 1.35 சதவீதமாக அதிகரித்துள்ளது.

இதுதொடா்பாக 2017–18–ஆம் ஆண்டுக்கான தேசிய சுகாதார கணக்கீட்டு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மத்திய அரசு சுகாதாரத்துக்காக செலவிட்டதன் பங்கு கடந்த 2013–14–ஆம் ஆண்டில் 1.15 சதவீதமாக இருந்தது. இது கடந்த 2017–18–ஆம் ஆண்டில் 1.35 சதவீதமாக அதிகரித்தது.

கடந்த 2013–14–ஆம் ஆண்டில் சுகாதாரத்துக்கான தனிநபரின் செலவினம் ரூ.2,336–ஆக இருந்தது. இது 2017–18–ஆம் ஆண்டில் ரூ.2,097–ஆக குறைந்துள்ளது.

தனிநபா் ஒருவருக்கான அரசின் சுகாதார செலவினம் 2013–14–இல் ரூ.1,042–ஆக இருந்தது. இது 2017–18–ஆம் ஆண்டுகளில் ரூ.1,753–ஆக உயா்ந்துள்ளது.

2017–18–ஆம் ஆண்டு சுகாதாரத்துக்கான மொத்த செலவினத்தில் மத்திய அரசின் பங்கு 40.8 சதவீதமாக அதிகரித்துள்ளது. இது 2013–14–ஆம் ஆண்டு 28.6 சதவீதமாக இருந்தது.

அரசின் தற்போதைய சுகாதார செலவினத்தில் ஆரம்பகட்ட சிகிச்சைகளுக்கான பங்கு 2013–14–ஆம் ஆண்டில் 51.1 சதவீதமாக இருந்தது. அந்தச் சிகிச்சைகளுக்கான செலவினம் 2017–18–ஆம் ஆண்டில் 54.7 சதவீதமாக அதிகரித்துள்ளது.

அரசின் தற்போதைய சுகாதார செலவினத்தில் ஆரம்ப மற்றும் உயா்நிலை சிகிச்சைகளுக்கான செலவினத்தின் பங்கு 80 சதவீதத்துக்கும் அதிகமாக உள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இதுகுறித்து மத்திய சுகாதாரச் செயலா் ராஜேஷ் பூஷண் கூறுகையில், ''நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுகாதாரத்துக்கான அரசு செலவினத்தின் பங்கு தொடா்ந்து அதிகரித்து வருவதை தேசிய சுகாதார கணக்கீட்டு அறிக்கை எடுத்துரைக்கிறது'' என்று தெரிவித்தாா்.

---

**15. ராம்குமாருக்கு முதல் சேலஞ்ஜா் பட்டம்**

பஹ்ரைனில் நடைபெற்ற ஏடிபி சேலஞ்ஜா் டூா் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ராம்குமாா் ராமநாதன் பட்டம் வென்றாா்.

தமிழக வீரரான அவா், சேலஞ்ஜா் போட்டியில் ஒற்றையா் பட்டம் வென்றது இது முதல் முறையாகும். இறுதிச் சுற்றில் ராம்குமாா் 6–1, 6–4 என்ற செட்களில் ரஷியாவின் ஈவ்ஜினி கா்லோவ்ஸ்கியை வீழ்த்தினாா். இந்த ஆட்டம் 1 மணி நேரம் 8 நிமிஷங்களில் முடிவுக்கு வந்தது.

இந்த ஆட்டத்தில் ஆரம்பத்திலிருந்தே ராமநாதன் அபாரம் காட்ட, ஈவ்ஜினியின் பேக்ஹேண்ட் ஷாட் ஒன்று பேஸ் லைனை தாண்டிச் சென்ற தருணத்தில் முதல் செட் ராம்குமாா் வசமானது. அதற்கு முன்புதான் ஒரு பிரேக் பாய்ண்ட்டை சேவ் செய்திருந்தாா் ராம்குமாா். மொத்த ஆட்டத்திலுமே அந்த ஒரு முறை தான் அவா் பிரேக் பாய்ண்ட்டை சந்தித்திருந்தாா். இந்த ஆட்டத்தில் அவரது சா்வ்களும் அபாரமாக இருந்தன.

கா்மான் ரன்னா் அப்: இதனிடையே, இத்தாலியில் நடைபெற்ற ஐடிஎஃப் டபிள்யூ 25 மகளிா் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் கா்மான் தண்டி இறுதிச் சுற்றில் தோற்று ரன்னா் அப்–ஆக வந்தாா். அதில் அவா் ஸ்விட்சா்லாந்தின் சூசன் பெண்டெச்சியிடம் 4–6, 4–6 என்ற செட்களில் வீழ்ந்தாா்.

பாம்ப்ரி/மைனேனி ஜோடிக்கு கோப்பை: ஹரியாணாவில் நடைபெற்ற ஐடிஎஃப் எம்15 ஆடவா் டென்னிஸ் போட்டியில் இரட்டையா் பிரிவில் இந்தியாவின் யூகி பாம்ப்ரி/சாகேத் மைனேனி ஜோடி 6–4 , 7–6 (7/4) என்ற செட்களில் சக இந்திய ஜோடியான பிரஜ்வாய் தேவ்/ரிஷி ரெட்டியை வீழ்த்தி சாம்பியன் ஆகினா்.

தரவரிசையில் முன்னேற்றம்: சாம்பியனாகி 80 ரேங்கிங் புள்ளிகள் பெற்ற ராம்குமாா், சா்வதேச தரவரிசையில் மீண்டும் 200 இடங்களுக்குள்ளாக வந்து 186–ஆவது இடத்தைப் பிடித்து ஏடிபி தரவரிசையில் இந்தியா்களில் முதல் வீரராக இருக்கிறாா். பிரஜனேஷ் குணேஸ்வரன் (215), சுமித் நாகல் (218), முகுந்த் சசிகுமாா் (417), சாகேத் மைனேனி (559) ஆகியோா் இதர இந்தியா்களாவா்.

இரட்டையா்கள் பிரிவிலும் 6 இடங்கள் ஏற்றம் கண்டிருக்கும் ராம்குமாா், 146–ஆவது இடத்தில் இருக்கிறாா். அந்தப் பட்டியலில் இந்தியா்களில் முதல் வீரராக ரோஹன் போபண்ணா (46–ஆவது இடம்) இருக்க, திவிஜ் சரண் (120), பூரவ் ராஜா (150), ஸ்ரீராம் பாலாஜி (170) ஆகியோா் பின் தொடா்கின்றனா். மகளிா் ஒற்றையா் பிரிவில் இந்தியா்களில் அங்கிதா ரெய்னா (188) முதலிடத்தில் இருக்க, ரியா பாட்டியா (426), ருதுஜா போசலே (534), கா்மான் தண்டி (578), ஜீல் தேசாய் (586) ஆகியோரும் உள்ளனா்.

இரட்டையா் பிரிவில் சானியா மிா்ஸா (63) முதலிடத்தில் இருக்கிறாா். அங்கிதா ரெய்னா (101), ருதுஜா போசலே (266), பிராா்த்தனா தோம்ப்ரே (414), ரியா பாட்டியா (434) ஆகியோா் உள்ளனா்.

---

**16. 2015–ம் ஆண்டு மழை அளவை சென்னை முந்தியதா?**

வடகிழக்கு பருவமழை காலத்தில் தமிழகம் மற்றும் புதுச்சேரியில் அக்டோபர் 1–ந்தேதி முதல் நவம்பர் 29–ந்தேதி (நேற்று) வரையிலான காலக்கட்டத்தில் இயல்பான மழை அளவு 353.7 மி.மீ. ஆகும். தற்போது வடகிழக்கு பருவமழை தனது தாராளத்தை காட்டியதால் இந்த ஆண்டு இந்த காலக்கட்டத்தில் 634.9 மி.மீ. மழை பதிவாகி உள்ளது. இது இயல்பான அளவை காட்டிலும் 80 சதவீதம் அதிகம் ஆகும்.

இதே காலக்கட்டத்தில் சென்னையில் 615.5 மி.மீ. மழை பெய்திருக்க வேண்டும். ஆனால் சென்னைவாசிகள் போதும்.., போதும்.., என்று சொல்லும் அளவுக்கு 1,125.9 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. இது இயல்பான அளவை விடவும் 83 சதவீதம் அதிகம் ஆகும். எனவே சென்னையில் வரலாறு காணாத வகையில் இந்த ஆண்டு மழைப்பொழிவு இருப்பதாக அனைவரும் பேசிக்கொள்கின்றனர்.

வானிலை ஆய்வு மையம்

இதுதொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையத்தின் இயக்குனர் நா.புவியரசன் விளக்கம் அளித்துள்ளார். அவர் கூறியதாவது:–

இந்த ஆண்டு நவம்பர் மாதத்தில் வடகிழக்கு பருவமழை அதிகபட்சமாக புதுச்சேரியில் 104 செ.மீ. பதிவாகி உள்ளது. அடுத்து காரைக்காலில் 102 செ.மீ. மழை பெய்து இருக்கிறது. சென்னையில் 91 செ.மீ., செங்கல்பட்டு மாவட்டத்தில் 86 செ.மீ., கடலூர் மாவட்டத்தில் 84 செ.மீ. மழை பதிவாகி இருக்கிறது.

கடந்த 2015–ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், அப்போது வடகிழக்கு பருவமழை காலத்தில் சென்னையில் 161 செ.மீ. மழை பெய்திருந்தது. நவம்பர் மாதத்தில் மட்டும் 102 செ.மீ. மழை பதிவாகி இருந்தது. எனவே 2015–ம் ஆண்டுதான் மழைப்பொழிவு அதிகம். அப்போது காஞ்சிபுரம்

மாவட்டத்தில் 106 செ.மீ. மழையும், கடலூர் மாவட்டத்தில் 72 செ.மீ., புதுச்சேரியில் 81 செ.மீ. அளவு மழைப்பொழிவு இருந்தது.

இவ்வாறு அவர் கூறினார்.

---

**17. தமிழ்நாடு சுற்றுலாத் துறைக்கு இந்தியா டுடே வழங்கிய மூன்று விருதுகளை முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் காண்பித்து வாழ்த்து பெற்றார் அமைச்சர் மதிவேந்தன்**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை இன்று (29.11.2021) தலைமைச் செயலகத்தில், சுற்றுலாத் துறை அமைச்சர் டாக்டர் மா. மதிவேந்தன் சந்தித்து, டெல்லியில் 12.11.2021 அன்று நடைபெற்ற இந்தியா டுடே சுற்றுலா மாநாடு மற்றும் விருது வழங்கும் விழாவில், தமிழ்நாடு சுற்றுலாத் துறைக்கு சிறந்த மலைகளுக்கான வகைப்பாடு பிரிவில் குன்னூருக்கு வழங்கப்பட்ட முதலிடத்திற்கான விருது, சிறந்த விழாவிற்காக தமிழ்நாட்டின் பொங்கல் பண்டிகைக்கு வழங்கப்பட்ட முதலிடத்திற்கான விருது, இயற்கை எழில்கொஞ்சும் காட்சிகள் அமையப்பெற்ற சாலைக்காக கொல்லிமலைக்கு வழங்கப்பட்ட இரண்டாம் இடத்திற்கான விருது, ஆகிய மூன்று விருதுகளை காண்பித்து வாழ்த்து பெற்றார்.

இந்தியா டுடே சுற்றுலா கருத்துக்கணிப்பு மற்றும் விருதுகள் 2021–க்காக இந்தியாவின் பிரபல சுற்றுலாத்தலங்களை தேர்வு செய்ய இந்தியா டுடே குழுமம் நாடு தழுவிய வாக்கெடுப்பை நடத்தியது. பல்வேறு மாநிலங்கள் பல்வேறு சுற்றுலாத் தலங்கள் இதற்குப் பரிந்துரைத்தன. பின்னர் அவை பல் ஊடகம் (Multi Media) வாயிலாக வெளியிடப்பட்டன. இறுதி முடிவுகள் கணக்கெடுப்பின் அடிப்படையில் முடிவுகள் வெளியிடப்பட்டன.

அதன் அடிப்படையில், டெல்லியில் 12.11.2021 அன்று நடைபெற்ற இந்தியா டுடே சுற்றுலா மாநாடு மற்றும் விருது வழங்கும் விழாவில், ஒன்றிய பண்பாடு, சுற்றுலா மற்றும் வடகிழக்கு மாநிலங்கள் மேம்பாட்டுத் துறை அமைச்சர் ஜி. கிஷன் ரெட்டி அவர்கள், தமிழ்நாடு சுற்றுலாத்துறைக்கு சிறந்த மலைகளுக்கான வகைப்பாடு பிரிவில், நீலகிரி மாவட்டத்தின் குன்னூருக்கு முதலிடத்திற்கான விருதினையும், விழாப் பிரிவில், சிறந்த விழாவாக தமிழ்நாட்டின் பொங்கல் பண்டிகைக்கு முதலிடத்திற்கான விருதினையும், இயற்கை எழில்கொஞ்சும் காட்சிகள் அமையப்பெற்ற சாலைக்காக, நாமக்கல் மாவட்டத்தில் உள்ள கொல்லிமலைக்கு இரண்டாம் இடத்திற்கான விருதினையும் வழங்கினார்.

இந்த நிகழ்வின்போது, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தர மோகன், சுற்றுலாத்துறை இயக்குநர் சந்தீப் நந்தூரி, ஆகியோர் உடனிருந்தனர்.

---

**18. ஏ.ஆர்.ரகுமானுக்கு சர்வதேச விருது**

மணிரத்தினம் இயக்கத்தில் வெளியான ரோஜா படத்தின் மூலம் அறிமுகமான ஏ.ஆர்.ரகுமான் தொடர்ந்து பெரிய நடிகர்கள் படங்களுக்கு இசையமைத்து முன்னணி இசையமைப்பாளராக உயர்ந்தார். ரஜினியின் முத்து, சிவாஜி, எந்திரன், 2.0 படங்களுக்கு இசையமைத்துள்ளார். இந்தி, தெலுங்கு, ஆங்கிலம் உள்ளிட்ட பல்வேறு மொழித் திரைப்படங்களுக்கும் இசையமைத்து இருக்கிறார். தேசிய விருது, கோல்டன் குளோப் விருது, பாப்டா விருது உள்ளிட்ட பல விருதுகள் பெற்றுள்ள அவர் "ஸ்லம் டாக் மில்லியனியர்" என்ற ஆங்கிலத் திரைப்படத்திற்கு இசையமைத்து உலக சினிமா துறையின் உயரிய விருதான ஆஸ்கார் விருதை வென்றார்.

2010–ஆம் ஆண்டில் இந்திய அரசின் "பத்ம பூஷன்" விருது பெற்றார். இந்த நிலையில் இன்னொரு சர்வதேச அங்கீகாரமாக எகிப்தில் நடைபெற்று வரும் 43–வது கெய்ரோ சர்வதேச திரைப்பட விழாவில் ஏ.ஆர்.ரகுமானுக்கு சர்வதேச அளவில் புகழ் பெற்ற இந்திய இசையமைப்பாளர் என்ற விருது வழங்கப்பட்டு உள்ளது. இதையடுத்து திரையுலகினரும் ரசிகர்களும் அவருக்கு வாழ்த்து தெரிவித்து வருகிறார்கள்.

---

**19. இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களின் ஒட்டுமொத்த செயல்திறனுடன் சிறந்து விளங்கும் பெரிய மாநிலமாக தமிழ்நாடு தேர்வு: முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு விருது வழங்கப்பட்டது**

இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களின் ஒட்டுமொத்த செயல்திறனுடன் சிறந்து விளங்கும் பெரிய மாநிலமாக தமிழ்நாடு தேர்வு செய்யப்பட்டு, முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு விருது வழங்கப்பட்டது. ஒட்டுமொத்த செயல்திறனில் சிறந்து விளங்கும் பெரிய மாநிலமாக தமிழ்நாடு தேர்வு செய்யப்பட்டு இந்தியா டுடே நிறுவனத்தால் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு விருது வழங்கப்பட்டுள்ளது. விருதை பெற்றுக்கொண்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது: இந்தியாவின் சமூக, அரசியல், பொருளாதார, கலை மற்றும் பண்பாட்டு தட்ப வெப்பங்களை சொல்கின்ற தலைசிறந்த இதழான இந்தியா டுடேவின் சார்பில் வழங்கப்படும் விருதினை பெறுவதில் மகிழ்ச்சி அடைகிறேன். ஆசிரியர் குழுவுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியா டுடே இதழின் இயக்குநர் எனக்கு ஒரு கடிதம் அனுப்பி இருந்தார். அந்த கடிதத்தில் இந்தியா முழுவதும் உள்ள அனைத்து மாநிலங்களின் செயல்பாட்டை கணித்ததாகவும், அதில் ஒட்டுமொத்த செயல்திறனிலும் சிறந்து விளங்கும் பெரிய மாநிலமாக தமிழ்நாடு தேர்வு செய்யப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்து இருந்தார். இதை படித்தபோது நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. இது தனிப்பட்ட எனக்கு கிடைத்த பெருமை அல்ல, ஒட்டுமொத்தமாக தமிழ்நாட்டு மக்களுக்கு கிடைத்த பெருமை ஆகும். தமிழ்நாட்டுக்கு கிடைத்த சிறப்பு ஆகும். இந்த விருதை, தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் சொந்தமாக்க விரும்புகிறேன்.

நான் முதலமைச்சராக பொறுப்பேற்றபோது கொரோனா பெருந்தொற்றின் காரணமான மாபெரும் நெருக்கடி காலமாக அது இருந்தது. நிதி நெருக்கடியும், மருத்துவ நெருக்கடியும் சேர்ந்து வதைத்தது. 5 லட்சம் கோடி ரூபாய் கடனில் இருக்கும் நிர்வாகமாகவும் இருந்தது. அத்தகைய சூழலில் அரசின் துரிதமான நடவடிக்கையாலும், மக்களின் தியாக உணர்வாலும் கொரோனாவை வென்றோம். ஊரடங்கு மூலமாக வாழ்வாதாரம் இழந்த மத்தியதர வர்க்கத்தினருக்கும் உதவிகள் செய்துகொண்டே கொரோனாவுக்கும் முற்றுப்புள்ளி வைத்தோம்.

அப்போது, இந்தியாவின் முன்னணி ஊடக நிறுவனங்கள் என்னை பாராட்டி எழுதினார்கள். இந்தியாவின் தலைசிறந்த முதலமைச்சர் – நம்பர் 1 முதலமைச்சர் என்றும் கருத்துக்கணிப்புகளை வெளியிட்டார்கள். அது தொடர்பாக என்னை ஊடகத்தினர் கேட்டபோது, நான் நம்பர் 1 என்று சொல்வதை விட, தமிழ்நாடு நம்பர் 1 ஆக வேண்டும், அதுதான் என்னுடைய விருப்பம் என்று நான் சொன்னேன். அந்த அடிப்படையில் பார்த்தால் இந்தியா டுடே இதழானது தமிழ்நாடு நம்பர் ஒன் என்று அறிவித்துள்ளது மிகமிக மகிழ்ச்சிக்குரியதாக அமைந்துள்ளது. நம்பர் 1 என்று சொன்னபிறகு தான் எனக்கு பயமே வருகிறது. இதனை தக்க வைப்பதற்காக முன்பை விட கூடுதலாக நான் உழைத்தாக வேண்டும் என்று நான் உறுதி எடுத்துக் கொள்கிறேன்.

பத்து ஆண்டுகளாக மிகமிக மோசமான நிலையில், அனைத்து துறைகளிலும் பாழ்பட்டு கிடந்த தமிழ்நாட்டை மீட்டெடுப்பது என்பது சாதாரணமானது அல்ல. நாளைக்கே நடந்து விடும் என்று நம்பும் கற்பனைவாதி அல்ல நான். சரியான இலக்கை வைத்து, தொடர்ச்சியாக உழைத்தால், தமிழ்நாடு இழந்த பெருமையை மீண்டும் அடையும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. அதனை நோக்கித்தான் உழைத்துக் கொண்டு இருக்கிறோம்; ஓடிக் கொண்டு இருக்கிறோம். சமூகம் – கல்வி – பொருளாதாரம் – தொழில் வளர்ச்சி – தொழில்நுட்ப வளர்ச்சி ஆகிய அனைத்திலும் ஒருசேர வளர வேண்டும் என்பதுதான் எங்களது ஆட்சியின் இலக்கணம் ஆகும். அனைத்து துறையும் வளர வேண்டும். அனைத்து சமூகமும் மேம்பாடு அடைய வேண்டும். அனைத்து தொழில்களும் சிறக்க வேண்டும். அனைத்து மாவட்டங்களும் செழிக்க வேண்டும் என்பதுதான் எங்களது இலக்கு.

இந்த இலக்கை அடைவதற்காக எங்களை நாங்களே ஒப்படைத்துக் கொண்டுள்ளோம். இந்த இலக்கு என்பது தனிப்பட்ட ஒரு முதலமைச்சரின் இலக்காக இல்லாமல், ஒரு அமைச்சரவையின் இலக்காக மட்டும் இல்லாமல், அனைத்து அரசு அதிகாரிகளின் இலக்காக மாறி உள்ளது. இத்தகைய சிந்தனையை மக்கள் மனதிலும் விதைத்துள்ளோம். முதலமைச்சரான என்னில் தொடங்கி கடைக்கோடி மனிதர் வரைக்கும் தலைசிறந்த தமிழ்நாட்டை உருவாக்குவதற்கு உறுதி பூண்டுள்ளோம். தொழில் துறையிலும், கல்வியிலும், வேலைவாய்ப்பிலும், பொருளாதார வளர்ச்சி குறியீடுகளிலும், சமூக குறியீடுகளிலும், இந்தியாவில் தலைசிறந்த முதன்மை மாநிலமாக தமிழ்நாடு விரைவில் முன்னெடுக்கப்படும்.

அதற்கான ஊக்க சக்தியாக இந்த விருது அமைந்துள்ளது. மாநிலங்களின் நிலை குறித்து நாங்கள் எந்த மாதிரியான ஆய்வை செய்கிறோம் என்பதை நீங்கள் விளக்கி உள்ளீர்கள். அத்தகைய அனைத்து ஆய்வுகளிலும் தமிழ்நாடு முந்திச் செல்வதை நீங்கள்

கணித்துள்ளீர்கள். இத்தகைய கணிப்புகளின்போது உங்களுக்கு பல்வேறு தகவல்கள் கிடைத்திருக்கும். அதில் நாங்கள் திருத்திக் கொள்ள வேண்டியவைகளும் இருந்திருக்கும். அவற்றையும் தமிழ்நாடு அரசுக்கு நீங்கள் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எத்தகைய ஆலோசனைகளையும் – திறந்த மனத்துடன் பரிசீலிக்க தமிழ்நாடு அரசு தயாராக இருக்கிறது. இவ்வாறு அவர் கூறினார்.

### 20. 'பிரிக்ஸ்' திரைப்பட விழாவில் தனுஷுக்குக் கிடைத்த கவுரவம்

தேசிய விருதைத் தொடர்ந்து 'பிரிக்ஸ்' திரைப்பட விழாவில் தனுஷுக்குச் சிறந்த நடிகருக்கான விருது வழங்கப்பட்டுள்ளது.

வெற்றிமாறன் இயக்கத்தில் தனுஷ், மஞ்சு வாரியர், பிரகாஷ்ராஜ், பசுபதி, கென் கருணாஸ் உள்ளிட்ட பலர் நடிப்பில் வெளியான படம் 'அசுரன்'. விமர்சன ரீதியாகவும், வசூல் ரீதியாகவும் இந்தப் படத்துக்கு மாபெரும் வரவேற்பு கிடைத்தது.

சமீபத்தில் டெல்லியில் நடந்த 67–வது தேசிய திரைப்பட விருது வழங்கும் விழாவில் 'அசுரன்' படத்துக்காகச் சிறந்த நடிகருக்கான தேசிய விருதைப் பெற்றார் தனுஷ். இப்படம் தெலுங்கில் 'நாரப்பா' என்ற பெயரில் ரீமேக் செய்யப்பட்டு அங்கும் நல்ல வரவேற்பைப் பெற்றது.

இந்நிலையில் கோவாவில் நடைபெற்று வரும் சர்வதேசத் திரைப்பட விழாவில் நிறைவு நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது. கோவா சர்வதேசத் திரைப்பட விழாவுடன் முதன்முறையாக 'பிரிக்ஸ்' 6–வது திரைப்பட விழாவும் நடைபெற்றது. இதில் பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென் ஆப்பிரிக்கா உள்ளிட்ட நாடுகளின் படங்கள் திரையிடப்பட்டன.

இந்த விழாவில் இந்தியா சார்பில் போட்டியிட்ட 'அசுரன்' படத்துக்காக தனுஷுக்குச் சிறந்த நடிகருக்கான விருது வழங்கப்பட்டது. இதனை தனுஷ் தனது ட்விட்டர் பக்கத்தில் பகிர்ந்துள்ளார்.

### 21. சென்னையில் 1,000 மி.மீ. மேல் மழை பொழிவு: 206 ஆண்டுகளில் 3–ஆவது முறை

சென்னையில் 1815–ஆம் ஆண்டு முதல் 2021–ஆம் ஆண்டு வரையிலான 206 ஆண்டுகளில் நவம்பா் மாதத்தில் மட்டும் 3–ஆம் முறையாக 1,000 மில்லி மீட்டருக்கு மேல் மழை பதிவாகி உள்ளது.

வடகிழக்குப் பருவமழையைப் பொறுத்தவரை ஆண்டுதோறும் அக்டோபரில் தொடங்கி டிசம்பா் வரை தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் மழை பெய்யும். குறிப்பாக சென்னை உள்ளிட்ட கடலோர மாவட்டங்களில் அதிக மழை பொழிவு இருக்கும். சில ஆண்டுகள் வடகிழக்குப் பருவமழை சரிவர பெய்யாமல் போனாலும், பெரும்பாலான ஆண்டுகளில் வடகிழக்குப் பருவமழை காலகட்டத்தில் பலத்த மழை பெய்துள்ளது. இதில், குறிப்பாக கடந்த 1918, 2015 மற்றும் 2021–ஆம் ஆண்டுகளில் நவம்பா் மாதத்தில் மட்டும் 1,000 மில்லி மீட்டருக்கு மேல் மழை பொழிந்துள்ளது.

206 ஆண்டுகளில்...: வடகிழக்குப் பருவமழை தற்போது தீவிரமடைந்துள்ளதால் சென்னை, திருவள்ளூா், காஞ்சிபுரம், கடலூா், வேலூா் உள்ளிட்ட வட மாவட்டங்களிலும், திருநெல்வேலி, கன்னியாகுமரி உள்ளிட்ட பிற மாவட்டங்களிலும் மிக பலத்த மழை பெய்து வருகிறது.

இந்த ஆண்டு சென்னையில் நவம்பா் 1–ஆம் தேதி முதல் நவம்பா் 30–ஆம் தேதி வரையிலான 30 நாள்களில் மட்டும் 1,076 மில்லி மீட்டா் மழை பெய்துள்ளது. சென்னையில் 1815–ஆம் ஆண்டு முதல் பெய்த மழை அளவு குறித்த தகவல்களின் அடிப்படையில், 1815–ஆம் ஆண்டு நவம்பா் மாதத்தில் 842 மி.மீட்டா் மழை பொழிந்துள்ளது. இதையடுத்து, 1918–ஆம் ஆண்டு நவம்பா் மாதத்தில் 1,088 மில்லி மீட்டரும், 2015–ஆம் ஆண்டு நவம்பா் மாதத்தில் 1,049 மில்லி மீட்டரும், 2021–ஆம் ஆண்டில் நவம்பா் 30–ஆம் தேதி வரை 1,055 மில்லி மீட்டா் மழை பொழிந்துள்ளது. குறைவாக 1896–ஆம் ஆண்டும், 1997–ஆம் ஆண்டும் நவம்பா் மாதத்தில் 831 மில்லி மீட்டா் மழை பொழிந்துள்ளது.

### 22. இந்தியாவில் கடந்த 3 ஆண்டுகளில் 17,299 விவசாயிகள் தற்கொலை..!

தலைநகர் டில்லியில் நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் நடைபெற்று வருகிறது. அதன் ஒருபகுதியாக, கடந்த 3 ஆண்டுகளில் நடந்த விவசாயிகள் தற்கொலை குறித்தும், அதற்கான காரணங்கள் குறித்தும் உறுப்பினர்கள் சார்பில் கேள்வி கேட்கப்பட்டது.

இதற்கு, வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சகம் சார்பில் எழுத்துப்பூர்வமாக பதிலளிக்கப்பட்டுள்ளது. அதில், கடந்த 2018ம் ஆண்டு முதல் 2020ம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் தற்கொலை செய்துகொண்ட விவசாயிகளின் எண்ணிக்கை குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, 2018ம் ஆண்டு நாடு முழுவதும் 5,763 விவசாயிகள் தற்கொலை செய்துகொண்டுள்ளனர். 2019ம் ஆண்டு 5,957 பேரும், 2020ம் ஆண்டு 5579 பேரும் தற்கொலை செய்துகொண்டுள்ளனர். இந்த 3 ஆண்டுகளிலும் மகாராஷ்டிராவில் தான் விவசாயிகள் தற்கொலை அதிகமாக காணப்படுகிறது.

2018ம் ஆண்டு 2239 பேரும், 2019ம் ஆண்டு 2680 பேரும், 2020ம் ஆண்டு 2567 பேரும் தற்கொலை செய்துகொண்டுள்ளனர். தமிழகத்தை பொறுத்தவரை 2018ம் ஆண்டு 6 பேரும், 2019ம் ஆண்டு 6 பேரும், 2020ம் 79 பேரும் தற்கொலை செய்துகொண்டுள்ளனர்.

பருவமழை சரியான நேரத்தில் பெய்யாதது, பயிர்கள் வீணாகி நஷ்டம் விளைவிப்பது, உறுதியான நீர் ஆதாரங்கள் இல்லாதது, பயிர்கள் மீதான பூச்சி மற்றும் நோய்களின் தாக்குதல் ஆகியவையே விவசாயிகளின் தற்கொலைக்கு காரணங்களாக மத்திய அரசு நாடாளுமன்றத்தில் கூறியுள்ள பதிலில் தெரிவித்துள்ளது.

### 23. அட்மிரல் கரம்பீர் சிங் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்: கடற்படை புதிய தளபதி ஹரி குமார் பொறுப்பேற்பு

இந்திய கடற்படையின் புதிய தளபதியாக அட்மிரல் ஆர். ஹரி குமார் நேற்று பொறுப்பேற்றுக் கொண்டார்.

கடற்படை தளபதியாக இருந்த அட்மிரல் கரம்பீர் சிங் பதவிக்காலம் முடிவுறுவதை அடுத்து துணை அட்மிரல் ஹரிகுமார் புதிய தளபதியாக நியமனம் செய்யப்பட்டார்.

41 வருடங்களாக கடற்படை சேவையில் இருந்த அட்மிரல் கரம்பீர் சிங் நேற்று பணியிலிருந்து ஓய்வு பெற்றார். இதையடுத்து அவரிடமிருந்து புதிய பொறுப்பை ஹரி குமார் ஏற்றுக் கொண்டார். டெல்லியில் உள்ள தெற்கு பிளாக்கில் நடைபெற்ற எளிய விழாவில் நாட்டின் கடற்படை புதிய தளபதியாக ஹரிகுமார் பொறுப்பேற்றுக் கொண்டார். அப்போது அவரை கடற்படையின் மூத்த அதிகாரிகள் வரவேற்றனர். தொடர்ந்து வீரர்கள் நினைவிடத்தில் அவர் மரியாதை செலுத்தினார்.

கடற்படை தளபதியாக பொறுப்பேற்கும் முன்பு மேற்கு கடற்படைப் பிராந்திய தளபதியாக ஹரி குமார் பணியாற்றி வந்தார்.

1962–ம் ஆண்டு ஏப்ரல் 12–ம் தேதி பிறந்த ஹரி குமார், 1983–ம் ஆண்டு ஜனவரி 1–ம் தேதி இந்திய கடற்படை பணியில் சேர்ந்தார். தனது 39 வருட அனுபவத்தில் இந்திய கடலோர காவல் படையின் சி–01 கப்பல், இந்திய கடற்படைக்கு சொந்தமான நிஷாங்க், கோரா, ரன்வீர், விமானம் தாங்கி போர்க் கப்பலான ஐஎன்எஸ் விராட் ஆகியவற்றில் கமாண்டராக பதவி வகித்துள்ளார்.

இவர் இந்திய கடற்படையின் 25–வது தளபதி ஆவார். அமெரிக்காவில் உள்ள நேவல் வார் கல்லூரி, மத்தியபிரதேசத்தில் உள்ள ஆர்மி வார் கல்லூரி, பிரிட்டனில் உள்ள ராயல் காலேஜ் ஆஃப் டிபன்ஸ் ஸ்டடீஸ் ஆகியவற்றில் பல்வேறு படிப்புகளை முடித்துள்ளார் ஹரி குமார்.